தயவு

# அன்பு ஒளி

## எனும்

# இறைமனிதன்

**அன்பே சிவம்!!!**

**அன்பே கடவுள்!!!**

**அன்பே அருட்பெருஞ்ஜோதி!!!**

தொகுப்பு :

வள்ளலார் திருவருட்பா, மற்றும்
திண்டுக்கல் தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்கள்
தயவு உரை விளக்க கருத்துக்களை உள்ளடக்கிய
தொகுப்பு நூல்.

# நூல் விவர அட்டவணை

**நூலின் தலைப்பு :** **"அன்பு ஒளி எனும் இறைமனிதன்"**

**நூல் ஆசிரியர் :** இது ஒரு தொகுப்பு நூல்

**உள்ளிருந்து உதவி:** **திருவருட் பிரகாச வள்ளலார், தயாநிதி சுவாமி சரவணானந்தா**

**முதற்பதிப்பு :** மார்ச் 2022

**பிரதிகள் :** 1000

**நூல் வெளியிடுவோர் :**

தயவுத்திரு. கலியுக வரதன்,
59, கிப்சன்புரம்,
(பொதிகை ஸ்வீட்ஸ் ஸ்டால்),
தூத்துக்குடி - 628 002,
Cell : 94429 13101

**நூல் ஆக்கம் :**

வள்ளலார் தயவு ஒளி தெய்வீக சிந்தனை மன்றம்,
Plot No : 6, தயவு இல்லம்,
நேரு தெரு,
89 வேப்பம்பட்டு,
திருவள்ளூர் மாவட்டம்,
Pin : 602 024,
Cell : 90439 61544

**அச்சிட்டோர் :**

KSN பிராஸஸ், சிவகாசி,
Cell : 94421 22269

**விலை :** **ரூ. 200/-**

தயவு

திருச்சிற்றம்பலம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !!

# பதிப்புரை

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படு பரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே - வள்ளலார்

**அன்பே அருட்பெருஞ்ஜோதி !!**
**தயவே தனிப்பெருங்கருணை !!**

**"அகிலமாம் அன்பாம்"** என்பதுதான் முடிவாக வள்ளல் பெருமான் தன் சீடர்களுக்கு உபதேசித்ததாகும். அந்த **"அன்பு இருப்பு"** ஆகிய கடவுள் தான் தன் முழுத் தன்மையோடு **"அருள் உணர்வாய்"**, அகநிலையில், நம் தலை நடு ஆன்மாகாசத்தில் விளங்க, தன் புறநிலை பெருஞ்ஜோதியை அகண்ட பிரபஞ்சமாய், உலகு-உயிர்-பொருள்கள் எல்லாமாய் விரித்து விளக்கிக்கொண்டும், தானே அதுவதுவாயும் விளங்கிக் கொண்டும் உள்ளார் என்பதுதான் சுத்த சன்மார்க்க சத்திய ஞானி, வள்ளல் வழித் தோன்றல் **தயாநிதி சுவாமி சரவணானந்தா** அவர்களின் தயா அமுத மொழியாகும்.

வள்ளல் வழங்கிய சுத்த சன்மார்க்க உண்மைகளை எல்லாம் அகண்டமாய் வெளிப்படுத்தியுள்ள தயாநிதி சுவாமிகளின் உள்ள கருத்துக்களை சற்று எளிமைப்படுத்தி இந்த தொகுப்பு நூல் சில

தலைப்புகளில் வெளிவருகின்றது. யாவும் தானாய் விளங்கிக் கொண்டிருக்கும் வள்ளல் பெருமானே, நம் ஒவ்வொருவருமாய் உள்ளிருந்து விரிந்து, அனகமாய் வெளிப்பட்டு, யாவரையும் நித்தியானந்த வாழ்வில் நிலவச் செய்ய உள்ளார். இதுவே எல்லோருக்கும் மரணமில்லாப் பெருவாழ்வை கூட்டி வைக்கும் அவரது (ஐந்தொழிலுக்கு மேல்) ஆறாவது தொழிலாக உள்ளது. நாமும் ஒவ்வொருவரும் அருள் நன் முயற்சியில் இருந்து அழியா நித்திய வாழ்வை பெற்றுக்கொள்ள சதா முயன்று கொண்டு இருப்போமாக !!

இந்நூலை வெளிக்கொணர நன் முயற்சி எடுத்தும், தானே முழுப் பொருளுதவி அளித்தும் உள்ள தயவு வடிவம், அருட்செல்வர், திரு.கலியுக வரதன் ஐயா அவர்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நூலை நன் முறையில் வடிவமைத்து உதவிய சன்மார்க்க அன்பர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் நூலை அழகான முறையில் அச்சிட்டு வெளிக்கொணர்ந்த சிவகாசி **KSN Printers** க்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

இந்நூலை **"அன்பு ஒளி எனும் இறை மனிதன்"**........ திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான் தெய்வ பொற்கமல திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

இவண்

பதிப்பகத்தார்

# தயாநிதி சுவாமிகளின் முன்னுரை:

அன்பு ஆதாரமாய் இருக்க, அதில் இருந்து செயல்பட்டு பிறர்க்கு உதவும் போது சுகம் விளைகிறது. இவ் **"அன்பு மயமாய் அகத்தே பொருந்தி நின்று கொண்டு"**, பிறருக்கு இரங்கி **"உயிர் விளக்க அறிவு விளக்கப் பணி"** செய்வதே அன்பு செய்தல் ஆகும்.

இச்செயலால் நம் உள்ளத்தே திருவருள் உணர்விலே இன்பம் தோன்றி அனுபவப்படும். இவ் இன்பானுபவமே உண்மையான சுகம் ஆகும்.

சுத்த சன்மார்க்க உயர்நிலை அனுபவத்தில் சிரநடு சிற்ஜோதியில் கலவாது கலந்து இருந்துகொண்டு, சிந்தனை கடந்து, அதுவாகி நின்று, ஐந்தியற் பிரபஞ்சத்தில் அன்பு இன்பச் செயலோடு என்றென்றும் அழியாது வாழ முடிகின்றது. இதுவே சுத்த சன்மார்க்கம் தரும் மரணமில்லாப் பெருவாழ்வு நிலையாகும்.

தயவு வள்ளல் மலரடி வாழ்க வாழ்க !!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !!

கொல்லா நெறியே குவலயமெல்லாம் ஓங்குக !!

சுத்த சன்மார்க்க தயவுப் பெருநெறி உலகெங்கும் பரவுக !!

**தயவு**

# தலை நடுவே ஒரு தனிப்பெருந்தலைவன்



0. புருவநடு சபாத் துவாரம்

**(The Lower point of the forehead in between two eye brows)**

1. பெருமூளை **CEREBRUM ( The Main Brain )**

2. சிறு மூளை **CEREBELLUM**

**(The lower part of the Brain)**

3. முகுள மூளை **MEDULLA OBLONGATA (The lowest part of the Brain)**

4. பிட்யூட்டரி சுரப்பி **PITUITARY GLAND**

5. தண்டு வடம் **SPINAL CORD**

6. "நான்" என்ற உணர்வு அனுபவ மையம் / உள்ளம் / சிற்சபை / மனம் - உயிர் -அறிவு முச்சந்தி / ஆன்ம அணு - சிற்றம்பலம் / பகர வடிவக் குழியில் **(Cerebrospinal Cavity - Contains Cerebrospinal fluid)** தயவு ஒளி விளக்கு / அக உணர்வில் ஆன்ம பீடத்தில் நிராதாரத்தே அருட்பெருஞ்ஜோதியாக இறைவன் **(The Boundless Benevolent Jyothi )** / சத்திய ஞான சபையில் இயற்கை உண்மை ஒளி

மனிதனின் உண்மையுரு ஆகிய இந்த அழியாத நித்திய ஆன்ம சிற்றணுவில்தான் அகண்ட வான்வெளி முற்றும் நிரம்பியுள்ள கடவுள் உண்மை வெளிப்படுகின்றது, அருள் விளக்கமாக !! சத்து சித்து ஆனந்தமாக !!!

தலை நடுவில் விளங்கும் **"ப"**கர வடிவக் குழிதான் **"மிடா"** எனப்படுவது. அந்த காலத்தில் தண்ணீர் ஊற்றி வைக்க **"மிடா"** ஆகிய (பிறை வடிவ குழி போன்ற) மண்பாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டது **("U" Shape Cavity).** தலை நடுவில் இருக்கும் இக் குழியிடத்துதான் ஆன்மாகாசம் என்ற திருச்சிற்றம்பலம் அல்லது உத்தர ஞான சிதம்பரம் உள்ளது.

திருஅருட்பா அச்சேறிய பிறகும், மக்கள் அது கொண்டு உய்ய மாட்டாத நிலை கண்டு வள்ளலார் இரங்குகிறார். மக்களைப் பார்த்து **"அஞ்சவேண்டாம்; திருத்தி விடுவோம் !!"** என்றார்.

மேலும், **"ஆனால் அச்சில் வார்ப்போம்; ஆகாவிட்டால் மிடாவில் வார்ப்போம்"** என்றார்.

தயவு

# அன்பு ஒளி எனும் இறைமனிதன்

**அன்பே சிவம்!!!**

**அன்பே கடவுள்!!!**

**அன்பே அருட்பெருஞ்ஜோதி!!!**

# முன்னுரை

வேறுவேறு கொள்கைகளையும், வேறு வேறு லட்சியங்களையும், வேறுவேறு வழிபாட்டு வழக்கங்களையும், வேறு வேறு சாதனா முறைகளையும் கொண்ட, பலவான சமய, மத, மார்க்கங்கள் கூட, ஒரு பொதுவான கருத்தை ஒப்புக் கொள்கின்றன. அது **"அன்பே கடவுள்"** என்பதாம்!

**"அன்பு"** என்கின்ற **"இருப்பு"** தான் கடவுளாக இருக்கின்றது!!

**"அது ஒன்றான ஓர் தனி இருப்பு"!!!**

அது மட்டுமே, **"தான் ஒரே ஒருவராய்"** அனாதி காலமாக இருந்து வருகிறது!!

அதையே, **"கடவுள்"** என்றும், **"சத்துப்பொருள்"** என்றும், **"மெய்ப்பொருள்"** என்றும், கூறுகின்றனர் மெய்ஞ்ஞானிகள்.

நம் வள்ளல் பெருமான், அதை, **"இயற்கை உண்மை"** என்றும், **"அருட்பெருஞ்ஜோதி"** என்றும், **"தயவு"** என்றும் குறித்துள்ளார்!!

அந்த அன்புக் கடவுள் எங்கே இருக்கிறார்?!

இது குறித்து சற்று சத்விசாரம் செய்வோம்;

நாம் கண்ணால் காணும் ஆகாயம் (வானம்), மிகப்பெரியதாய் தோன்றுகின்றது!

என்றாலும் அது முழுமையானது அல்ல!! அகண்டமான வான் பெருவெளியின் ஒரு சிறு கூறே நம் கண்ணால் காண்பது! உண்மையில்

ஆகாயம் எல்லையற்றது; எங்கெங்கும் பரந்து விரிந்து இருப்பது!! எத்தனை கோடி கோடி மைல்கள் எப்பக்கம் சென்றாலும் ஆகாயம் முடியவே முடியாது!! எங்கேயாவது ஓர் எல்லையில் அது முடிந்துவிடும் எனில், அதற்கு அப்பால் என்ன இருக்கின்றது?! என்ற கேள்வி எழும்! ஆகவே ஆகாயம் எங்கேயாவது முடிந்துவிடுமா?! என்றால், முடியாது!!

அப்படி யுள்ள அந்த அகண்ட வான் பெருவெளிக்கு உள்ளீடாய் இருப்பது "**சூன்ய வெளி**" என்ற "**வெட்டவெளி**"!!

இந்த ஆகாயம் என்கின்ற முதல் பூதம் உண்டாவதற்கு முன் இருந்தது, எங்கெங்கும் நிறைந்த "**சூன்யவெளி**" (வெட்டவெளி)!

அந்த சூன்யவெளியாகிய "**வெற்றிடம்**" ஒளி இன்றி, இருள் மயமாய், "**அருவமாய்**" இருந்து வந்தது!!

அந்த சூன்ய வெளியில் என்ன இருந்தது?! என்றால், அதுதான் அற்புதத்தில் அற்புதமான ஓர் உண்மை!!! ஆம்! அந்த சூன்யவெளியில்

"**அன்பு என்கின்ற ஓர் இயற்கை இருப்பு**" அனாதி காலமாய், ஆரம்பமும் முடிவும் இல்லாததாய், நித்திய - சத்திய வஸ்துவாய் இருந்து வந்ததாம்!!

அது, "**தன்னந்தனியதாய்**", தனக்கு அயல் வேறொன்றும் இல்லாததாய் இருந்ததாம்!!!

இதையே "**இயற்கை உண்மை**" என்கிறார் வள்ளலார்! இந்த இயற்கை உண்மையாகிய கடவுள் "**மூவிதமாய்**" (ஒன்றே மூன்றான உண்மையாய்) விளங்குவது அதன் இயல்பாம்!!!

அதாவது "**இயற்கை உண்மை**" (சத்து), "**இயற்கை விளக்கம்**" (சித்து), "**இயற்கை இன்பம்**" (ஆனந்தம்) என விளங்குவதாம்!!!

என்றாலும் இயற்கை விளக்கமும், இயற்கை இன்பமும் அனாதியாகவே கடவுளுக்கு அனுபவப்படாமல், உள்ளே ஒடுங்கியே கிடந்ததாம்!!

அதாவது வேறு வகையில் சொல்வதென்றால், "**அருள் உணர்வு**" (இயற்கை விளக்கம்), "**ஆனந்த அனுபவம்**" (இயற்கை இன்பம்) விளக்கமின்றி அந்த அன்பு இருப்புக்குள்ளே (இயற்கை உண்மைக்கு உள்ளே) ஒடுங்கியே கிடந்ததாம்!!

இப்படியான அந்த நிலை இருந்த காலம், எத்தனை எத்தனை கோடி கோடி யுகம் என்று சொல்வது?!! அவர் அப்படி இருந்த காலம், மனோ கற்பனையால் கணித்தறிய முடியாது!! அப்படி அந்த அன்பு இருப்புக்கு **"அருள் உணர்வும், ஆனந்த அனுபவமும்"** விளக்கமின்றி இருந்ததால், கடவுள் **"இருந்தும் இல்லாததுபோல்"** (பயன் இல்லாதது போல்) இருந்தாராம்!!!

இதை ஒரு சிறு கதை மூலம் விளக்கலாம்;-

அதாவது ஓர் இடத்தில், மிகப்பெரிய சர்க்கரை மலை ஒன்று நெடுங்காலமாய் இருந்து வந்ததாம்! சர்க்கரையின் தன்மை இனிப்பு!! எனினும், அந்த இனிப்பை சர்க்கரை தானே அறிவதற்கில்லை!! எனவே அது பயனின்றி, பிரயோஜனம் இன்றி இருந்ததாம்! நெடுங்காலத்திற்கு பிறகு, அங்கே ஒரு சிற்றெறும்பு தோன்றியதாம்!! அந்த சிற்றெறும்பு, சர்க்கரை மலையின் அருகில் சென்று சர்க்கரையை தின்றதாம்! அப்போது அந்த எறும்பின் உணர்வில், இனிப்பு என்கின்ற **"ஆனந்தம்"** அனுபவமானதாம்! இப்போதுதான் அந்த சர்க்கரை மலையின் இருப்பு, பிரயோஜனத்திற்கு வந்ததாம்!!

அதுபோல் தான் கடவுளுடைய **"உண்மை விளக்க இன்பமும்"**!!!

அந்த சர்க்கரை மலையை, **"சத்துப் பொருள்"** எனலாம்!! சிற்றெறும்பை, **"சித்து விளக்கம்"** எனலாம்!! அந்த சிற்றெறும்பின் உணர்வில் அனுபவமாகும் இன்பத்தை **"ஆனந்த அனுபவம்"** எனலாம்!! இது ஒரு உதாரணமே!

இப்போது விஷயத்திற்கு வருவோம்!!

அந்த **"அன்பு இருப்பாகிய"** கடவுள், **"தன்னைத்தானே அனுபவிக்க வேண்டி"**, தானே, அனந்தம் கோடி ஆன்ம அணுக்களாக (அறிவு எனும் அணு) அந்த சூன்ய வெளி முற்றும் நிரம்பி விட்டதாம்!!!

அவ்வண்ணம் தோன்றிய அணுக்களும் அருவ ஆன்ம அணுக்களே! அந்த தனித்தனி ஒவ்வொரு ஆன்ம அணுவுக்குள்ளும், அகண்ட வெளி முற்றும் நிறைந்த **"அன்பு இருப்பு"** ஆகிய கடவுள் உண்மை, முழு தன்மையோடு **"அருள் உணர்வு"** அல்லது **"அருள் ஒளியாக"** நிலை கொண்டதாம்!!

இதுவே **உள்ளொளி** எனவும் குறிக்கப்படுகிறது!!

அப்படி எங்கும் நிறைந்த ஆன்ம அணுக்கள், **தன்னை உணராது** கிடக்கின்றதாம்!

இந்த நிலையே **அஞ்ஞான இருள் எனும் பாசாந்தகார** நிலையாகும்.

இதுவே **ஆணவ மலம்** என அழைக்கப்படுகின்றது!!

ஆன்மாக்கள் **அறிவு விளக்கம் பெற, தன்னை உணர** ஆணவ அறியாமை இருள் நீக்கப்பட வேண்டியிருந்தது!!

எனவே, அது ஓர் பௌதிக உடலில் செலுத்தி, புற நிலையிலிருந்து, சிறிதுசிறிதாக படிப்படியாக, **அறிவு விளக்கம்** பெற வேண்டி இருந்தது!! எனவே, ஆன்மாவிற்கு உள்ளிருக்கும் **"கடவுள் அருள்"**, பஞ்ச பூத உலகத்தை தோற்றுவிக்கின்றார்!

அதாவது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களால் ஆன மாபிரபஞ்சத்தை தோற்றுவிக்கிறார்!! அதை எப்படி தோற்றுவிக்கிறார்?!

தன் ஐந்து சக்தி-ஐந்து செயலால், உலகத்தை தோற்றுவிக்கின்றார்! அந்த ஐஞ்சக்தியாவன;- பொருட் சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி, யோகசக்தி, அருட்சக்தி!!!

இந்த ஐந்து சக்தியைக் கொண்டு ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் அருள் ஞானத் திருநடனத்தால் இவ்வுலகம் தோன்றி விளங்கிக் கொண்டிருக்கின்றது!!

இப்போது, பஞ்ச பூதங்களால் ஆன, ஓர் பௌதிக உடலில் அந்த ஆன்மாவை செலுத்துகின்றார்!! முதன் முதலில் புல், பூண்டு, செடி, கொடி, மரம் எனும் ஓர் அறிவு (தொடு அறிவு) தாவர வர்க்கத்தில் செலுத்தி, **ஸ்பரிச அறிவை** புறமிருந்து விளங்க செய்கின்றார்!

இப்படி ஸ்பரிச அறிவு, சுவை அறிவு, வாசனை அறிவு, பார்வை அறிவு, கேட்கும் அறிவு என ஐம்புலன் அறிவுகள், பௌதிக உடல் மூலம் ஆன்மாவுக்கு அனுபவம் ஆகிறது!!

இதற்காக ஓர் ஆன்மா 86 இலட்சம் வகை உயிரின வடிவங்களில் எல்லாம் சென்று சென்று கோடிக்கணக்கான வருடங்கள் உயிர் வாழ்க்கை அனுபவம் பெறுகின்றது!!

ஐந்து புலன் அறிவுகள் வளர்ந்து, முற்று பெற்ற பின், **ஆறாவது மனம்** விளங்குகின்ற இந்த மனித தேகம் ஆன்மாவை சூழ்கின்றது. இந்த ஆறாம் மன அறிவு வளர, பலவேறு மனித தேகத்தில் செலுத்தப்படுகின்றது ஓர் ஆன்மா!

ஓரறிவு தாவர வர்க்கத்திலிருந்து, ஆறறிவு மனித தேகம் வரையிலும் அந்த ஓர் ஆன்மா பெற்ற இன்ப துன்ப அவஸ்தைகள் சொல்லில் அடங்காதவை!! எல்லையற்ற இன்ப துன்ப அனுபவங்களுக்குப் பிறகே ஆன்மாவுக்கு சிறிது சிறிதாக **அக அறிவு உதயமாகிறது**!!! அதற்காக அவ்வான்மா பல்வேறு சமய, மத, மார்க்கங்களை பல்வேறுபிறவிகளில் அனுஷ்டித்து அனுஷ்டித்து **ஆன்ம அறிவை** வளர்த்துக் கொள்கின்றது!!

இப்போது விஷயத்திற்கு வருவோம்!!

"**அன்பு**" என்ற சொல்லில் உள்ள, **கடவுள் - ஆன்ம உண்மையை** அறிந்து பேரின்ப நிலை எய்த முயற்சி செய்வோம்! "**ஆன்ம இன்ப லாபத்தை**" பெற்றுக்கொண்டு, **எக்காலும் அழியாத சத்திய சுகபூரண நித்திய வாழ்வில் தழைத்திடவே**, திருவருளால் நமக்கு இந்த அரிதில் பெறுவதற்கரிய இம் மனிதப் பிறப்பு வழங்கப்பட்டுள்ளது!!!. எனவே நாளும் சுத்த சன்மார்க்கப் பயிற்சியை மேற்கொண்டு, தீவிர முயற்சியில் ஈடுபடவேண்டும்.

இவ்வுலகில் உயிரினங்கள் தோன்றிய பிறகு நெடும் கோடி ஆண்டுகளுக்கு பின்னரே, மனித இனம் தோன்றியதாக விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். மனித இனம் தோன்றிய சமயம், மனிதன் மொழி அறியாது இருந்தான். பின்னரே பேச ஆரம்பித்தான்!

முதன் முதலில் இவ்வுலகில் தோன்றிய மொழி **தமிழ் மொழி**! தமிழ் மொழியை தோற்றுவித்தது, நம் ஆதி தமிழ் ஞான சித்தர்கள்! தமிழ் மொழியில் ஒவ்வொரு எழுத்தும் **கடவுள்-ஆன்ம** உண்மையை கொண்டே உருவாக்கப்பட்டன. எழுத்துக்கள் இணைந்த சொற்கள் **இறை உண்மையை** தெளிவாக விளக்குகின்றன!! அப்படி விளைந்த தமிழ் சொல்லிலே "**அன்பு**" என்கின்ற அற்புத சொல்லில், நம் ஞான

சித்தர்கள், **அன்பு ஒளியான இறை மனித உண்மையை** தெளிவாக எடுத்து சொல்கின்ற அற்புதத்தை இனி விசாரித்து அறிவோம்;-

**"அன்பு"** என்ற சொல்லில் **"அ"** என்ற உயிர் எழுத்து 247 தமிழ் எழுத்துகளில் முதல் எழுத்தாகும்!!

**"ன்"** என்ற மெய்யெழுத்து கடைசி எழுத்தாகும்!!

"**பு**" என்ற உயிர் மெய் எழுத்து **"ப் + உ"** என பிரியும். இதில் **"ப்"** என்ற மெய்யெழுத்து, பதினெட்டு மெய் எழுத்துகளில் நடுவாக ஒன்பதாவது வரிசையில் அமைந்துள்ளது!!!

**"அன்"** முதல் - கடை எழுத்துக்கள் இறைவனின் **"அடி முடியைக்"** குறிக்கின்றன!!

இறைவனின் அடிமுடியை ஓர் ஆன்மா தனக்குள் கண்டுகொண்டு **"சச்சிதானந்தப் பேரின்ப பெருவாழ்வில்"** தழைக்க உள்ளது!!!

**"அன்பு"** என்ற சொல்லில்

**"அ"** என்ற உயிர் எழுத்து எதை குறிக்கிறது**?**

அகண்டாகாச வான்பெருவெளி முற்றும் நிறைந்துள்ள **"அன்பு இருப்பு - ஆகிய இயற்கை உண்மை கடவுளை"** குறிக்கின்றது! இதுவே கடவுளின் ஆதி மூல முதற் பொருளாய் உள்ளதாம்!!

**"ன்"** என்ற கடை மெய்யெழுத்து எதைக் குறிக்கின்றது**?** இது **"அகண்டாகாச நிறைவிலேயே சிற்றணுவான ஆன்மாவைக்"** குறிக்கிறது!

ஓர் ஆன்மாவில் அகண்ட வான் பெரு வெளி முற்றும் நிறைந்த கடவுள் உண்மை **"அருள் ஒளியாக"** வெளிப்பட்டு விளங்குகின்றதாம்!

எனவே **"ன்"** என்ற எழுத்து**,** நம் தலை நடு விளங்கும் **"கடவுள் ஆன்மாவை"** குறிக்கின்றது!! இதுவே **"அருள்ஜோதி ஆன்மா"** ஆகும்!!

"**பு**" எந்த உயிர்மெய் எழுத்து எதை குறிக்கிறது**?**

"**பு**" என்பது **"ப் + உ"** என பிரியும்!!

"**ப்**" என்பது எதைக் குறிக்கின்றது**?**

“**ப்**” என்ற எழுத்து நமது தலை நடுவில், அதாவது அண்ணாக்கு மேல் உள்ள, முகுள மூளைக்கு மேல் அமைந்துள்ள பகர வடிவ குழியை குறிக்கின்றது!! **(“U” shape cavity, Cerebrospinal cavity)**

**அதாவது உச்சிக்கு கீழே, உண்ணாக்கு மேலே, புருவ மத்திக்கு நேர் உட்பாகத்தில்**, இந்த சிறு “உரல்” போன்ற குழி அமைந்துள்ளது! இந்த குழிக்கு மேல் ஓர் சிறு வெற்றிடம் உள்ளது அந்த வெற்றிடத்தில் தான் “**அருட்ஜோதி கடவுள் ஆன்மா**”, கோடி சூரிய பிரகாசத்துடன் “**அன்பு ஒளியாக**” சதா பிரகாசித்துக் கொண்டு உள்ளது!!

பகர எழுத்துக்கு மேல் உள்ள புள்ளி (ப்) தான் இந்த அருள் ஜோதியை குறிக்கின்றது!

இந்த கடவுள் ஆன்மா இந்த தேகத்தில் இருந்தாலும், “**நிராதார நிலையில்தான்**” அனுபவப்பட உள்ளது. அகண்ட பெருவெளியின் நடுவே ஓர் புள்ளி போல் திகழ்கின்றதாம். இந்த கடவுளான்மப் புள்ளியை “**பெருஞ்ஜோதி**” சூழ்ந்துள்ளதாம். அதாவது எல்லையற்ற பெருஞ்ஜோதி சூழலுக்கு நடுவே இது “**தன்னந்தனி அனுபவத்தில்**” விளங்கிக் கொண்டிருக்கின்றது!! இந்த “**அருட்ஜோதி கடவுள் ஆன்மா**” ஐஞ் சக்தி கொண்டு ஐந்தொழில் புரிவதையே, ஐந்தாவதாக வரும் “**உ**” என்ற உயிரெழுத்து குறிக்கின்றது!!

இறைவனின் ஐந்தொழில் திருநடனத்தை குறிப்பதே இந்த ஐந்தாவது “**உகர உயிர் எழுத்து**”!! இந்த ஐந்தொழில் அருள் ஞான திருநடனம் புரியும் அருட்ஜோதி கடவுள் ஆன்மாவையே “**ஆட்டுக்கு வால்**” என்றனர் மெய்ஞானிகள்!!

**அருட் ஜோதி தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம், அம்பலத்தில் ஆடுகின்ற ஆனந்த தெய்வம்** - என்பார் வள்ளலார்!!

இந்த அருட்ஜோதி ஆடல் அரசின் நிலையை குறிப்பது “**ஆட்டுக்கு வால் அளந்து வைத்திருக்கின்றது**” என்பர்!!

இந்த பழமொழி திரிந்துபோய் தவறாக வழக்கத்தில் வந்து விட்டிருக்கிறது! அதாவது,

“**ஆட்டுக்குவால் அளந்து வைத்திருக்கின்றது**” என்பது உண்மையான வாசகம்!!

அகண்ட வெளி முற்றும் நிறைந்த "**அகர ஆகாச கடவுள் உண்மையே**" நம் தலை நடுவில் "**னகர**" மெய் (ன்) சுட்டும் "**அருட்ஜோதி கடவுள் ஆன்மாவாய்**" "**பகர**" நடு பீடத்தில் விளங்கிக்கொண்டு, "**உகர**" ஐந்தொழில் நடம் புரிகின்றதை சுட்டுவது இந்த "**அன்பு** எனும் அற்புத தெய்வீக சொல்!!

மனிதன் உண்மையில், இந்த

**"அன்பு ஒளியாய், அகத்தில் இறை மனிதனாய் விளங்கிக் கொண்டு இருக்கின்றான்"!!!**

**"கடவுள் உண்மை விளக்கம் ஆகிய அருளும், மனிதனின் அக உண்மையும் ஒன்றேதான்!இரண்டல்ல!!"**

இந்த உண்மை நிலையை உணர்ந்தே வள்ளலார், "**அருட்ஜோதியானேன் என்று அறையப்பா முரசு**" என்றார்!!

மேலும் அருட்பெருஞ்ஜோதி அகவலில்,

"**தன்கையில் பிடித்த தனி அருட்ஜோதியை, என் கையில் கொடுத்த என் தனித்தந்தையே**"!!! என்று போற்றுகின்றார் - "**கையில்**" என்பது "**அனுபவத்தில்**" என்று பொருள்படும்!!

"**தேகமே நான்**" என்ற மாயா மயக்க அஞ்ஞான இருளில் எத்தனை கோடி காலம் கழிந்ததோ!? இதுகாறும் அந்த "**அருட்ஜோதி கடவுள் ஆன்மா**" நமக்கு அனுபவப்படாமல் இருந்தது! அது கடவுளுக்கு மட்டுமே அனுபவத்தில் இருந்தது - இருக்கின்றது!

ஒரு மனிதன் தேக நிலை, கரண நிலை, ஜீவ நிலை கடந்து நினைப்பு மறப்பு அற்று "**உள் நிலைக்கும்**" போது, அந்த ஆட்டியல் அருட்பெருஞ்ஜோதி நமக்கு நம் சொந்த உரிமை வடிவமாக ஆகிவிடுகிறது!! இதனால் ஊன் உடலும் ஒளி உடம்பாக என்றும் அழியாது விளங்க வல்லதாகி விடுகின்றது!!!!

**அன்பே அருட்பெருஞ்ஜோதி!!!**

**தயவே தனிப்பெரும் கருணை!!!**

மனித வாழ்வின் குறிக்கோள்; உண்மையான அருட்ஜோதியிலே, அருட்பெரும் பதியோடு இரண்டற உள்ள "**அன்பு வடிவினர் நாம்**" என அறிந்து, அங்கிருந்து மங்காது, மறையாது, நீங்காது "**நிறை**

**தயவு செயல்"** ஓங்க வாழ்வதுவே நம் வாழ்வின் குறிக்கோளாக உள்ளதாம்!!!

**"இறை ஒளியை"** தன் சிரநடு கண்டு, கலந்து, அதுவாகி நிற்கும் ஒருவன் தன் நிலையை தெய்வ **"அன்பு ஒளி மயமாய்"** விளங்க காண்கின்றான்!! தான் **"தயவு வண்ணமாக"** உள்ளிருந்து உயிர், அறிவு, உடல் கொண்டு விளங்குவது உண்மை!!!

திருவருளாலே **"அகநிலை நின்று"** கடவுள். இன்பானுபவம் பெருகப் பெருக **"அனக வாழ்வு"** வாழ்வது தான் முறையாகும்! இதனால் சூழுடலும் அருள் அமுத சேர்ப்பால் அழிவில்லாத ஒளியுடம்பாகிட, நித்தியமாக கடவுள் இன்ப வாழ்வை இந்த உடலோடு கொண்டு வாழலாகின்றதாம்!!!

**அருட்பெருஞ்ஜோதி**
**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**
**அருட்பெருஞ்ஜோதி**

**தயவு**



# பகுதி - 1

## 1 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**ஆன்ம அகம் அறிந்தால் அல்லல் அகலும்; அருள் உதயமானால் ஆனந்தம் அனுபவமாகும் !**

**நித்திய நிலையான ஆன்ம அகம் பற்றி நில் !**

**சத்திய பதியான அருட்ஜோதியோடு உறு !**

**சுத்த தயவு செயலாக எதையுமே செய் !**

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

**“கையறவு இலாது நடுக்கண் புருவப் பூட்டு**

**கண்டு களி கொண்டு திறந்து உண்டு நடு நாட்டு”**

என்பது வள்ளலார் உபதேசம்!

இதன் பொருள் என்ன?

நமது இரண்டு கண்களுக்கு இடையில் புருவ மத்திக்கு உள்ளே ஒரு கண் இருக்கின்றது; **அது மாமிசத்தால் ஆன கண் அல்ல! அருள் ஞான உணர்வினால் ஆனது அந்தக் கண்:**

அதாவது **“கடவுளே அருள் ஞான உணர்வினால் விளங்கிக் கொண்டு இருக்கின்றார்!”** அப்படி விளங்கும் கடவுளை எப்படி அறிவது?

இதயஸ்தானத்தில் உலக விஷயங்களில் சிந்தித்துக் கொண்டிருக்கும் மனதை மேலேற்றி, புருவமத்திக்கு உட்புறமாக செலுத்தி, நினைப்பு மறப்பு அற்று, ஓர்மையில் நிலைக்கச் செய்ய வேண்டும்! மனம் ஓர்மைப்படபட அங்கு ஓர் நித்தியமான ஆன்ம இருப்புணர்வு விளங்குவது தெரியும்!

**“அது நித்தியமான இருப்புணர்வு கொண்ட ஆகாசமாக அனுபவமாகும்!”**

அந்த உணர்வு ஆகாசமே **"சிற்சபை"** என்பர் : **"சிற்றம்பலம்"** என்பதுவும் இதுவே! அதாவது சிறிய அம்பலம்;

மேலும் சித்து என்றால் அறிவு என்று பொருள்; அதாவது அறிவு ஆகிய ஆலயம் ஆகும் : இந்த அறிவுத் திருக்கோயிலில் தான் ஆண்டவர் அனாதி காலமாக, அருள் உணர்வாக,

அருட்பெருஞ்ஜோதியாக விளங்கிக்கொண்டு இருக்கின்றார்!

அங்கு அவர் தானாகவும் நானாகவும் இயற்கையாக விளங்குகின்றார் : **"நானானான் தானானான்; நானும் தானும் ஆனான்"** என்பார் வள்ளற்பெருமான்.

அப்படி விளங்குகின்ற அவர் சத்தியமானவர் : நித்தியமானவர்; எல்லாம் செய்ய வல்லவர்; நம் தலைநடுவே சுடர்விட்டு பிரகாசிக்கும் அவர் இந்த மகா பிரபஞ்சம் முழுவதும் தானாகி எங்கெங்கும் நீக்கமற நிறைந்துள்ளார்!

வரம்பில்லாத பேரின்பமே வடிவமான அவரை அறிந்து, சார்ந்து, கலந்து நாமும் பேரின்ப அனுபவத்தோடு வாழவேண்டும் என்பதே அவருடைய திருவுள்ளமும் ஆணையுமாகும்!

இறைவனை அறிந்து அடையாவிட்டால் பிறவிப் பெருங்கடலை கடக்க முடியாது.

**"தன்னை அறிந்து இன்பமுற வேண்டும்"** என்பதே மனிதப்பிறவியின் இலட்சியம்!

எனவே, **"தேகமே நான்"** என்கின்ற பொய்யான, தவறான எண்ணத்தை விட்டுவிட்டு, **"நமது சொந்த சுய சொரூபமாகிய, அருட்ஜோதி ஆன்ம அக வடிவத்தை"** கண்டு அடையவேண்டும் என்பதே மனிதனின் முயற்சியாக இருக்கவேண்டும் :

ஒருவன் துன்பத்திலிருந்து நிரந்தரமாக விடுதலைப் பெற ஒரே வழி **"தனது அருட்ஜோதி அக ஆன்ம வடிவத்தை அறிந்து அதுவாகி நிற்பதுவே!"**

நம் தலைநடு விளங்கும் ஆன்ம ஜோதி நிலையிலிருந்தே இந்த உயிரும், மனமும், உடலும் விரிந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது:

இதில் எதுவுமே நாம் என்று சொல்வதற்கில்லை! **"இறைவனே எல்லாமாகி விளங்கிக் கொண்டிருக்கின்றார்;"** அவர் மயமாகி

வாழ்வதுவே நாம் செய்ய வேண்டிய சாதனம், பின் முடிவான இன்பானுபவத்திற்கு தடையேதுமில்லை!

**வாழ்க தயவுடன்!**

## 2 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### கடவுள் இருக்கும் இடம் எங்கே? துன்பத்தைப் போக்கும் வழி என்ன?

"உச்சிக்கு கீழே உண்ணாவுக்கு மேலே நிதம் வச்ச விளக்கு எரியுதடி வாலைப்பெண்ணே அவியாமல் எரியுதடி வாலைப்பெண்ணே". என்பது ஒரு சித்தர் பாடல்!

அதாவது நமது மண்டையில் பெருமூளைக்கு கீழே, அண்ணாக்குக்கு மேலே உள்ள முகுளநடு மூளைக்கு மேலே, நெற்றிக்கு நேர் உட்பாகத்தில், அதாவது தலைநடு ஸ்தானத்தில் தான் எல்லாம் வல்ல **கடவுள் ஒளி, அருட்பெருஞ்ஜோதியாக** பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது; அந்த ஒளி தான் இந்த மனிதனின் உடலாயும், உயிராயும், மனமாயும், அறிவாயும் எல்லாம் தானேயாகி விளங்கிக் கொண்டிருக்கின்றது! மொத்தத்தில் இறைவனே நாமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றார்; இப்படி விளங்குவது ஏன்? இதற்கு என்ன பதில்? என்றென்றும் எங்கெங்கும் நிறைந்துள்ள அனாதி நித்திய கடவுளை **இயற்கைஉண்மை** என்கின்றார் வள்ளலார்; அந்த இயற்கைஉண்மையாகிய கடவுள் தன்னைத்தானே **இயற்கை விளக்கமாக** விளக்கிக்கொண்டிருத்தல் அவரது இயல்பு ஆகும்!

மனிதன் என்றாலே மன்னி நிதமும் இதமாய் பேரின்பில் வாழ வந்துள்ளவன்; அழியாமல் என்றென்றும் சச்சிதானந்த இன்பத்தில் தழைக்க வந்துள்ளவன் ஆவான்!

இதற்காக நாம் பல கோடிக்கணக்கான பிறவிகளை கடந்து வந்துள்ளோம்; பல வேறு அவஸ்தைகளையும் எல்லையில்லாத துன்பங்களையும் அனுபவித்து அனுபவித்து, பின்பு மனிதப்பிறப்பிலும் ஆயிரக்கணக்கான வருடங்களாக மனமானது பக்குவப்பட்டு இப்பொழுதுதான் **நமது உண்மையையும் கடவுள் உண்மையையும்**

கண்டு பேரின்ப சுகம் அடைவதற்கான நல்ல ஒரு சந்தர்ப்பம் வாய்க்கப் பெற்றுள்ளோம்!

இந்த நல்ல சந்தர்பத்தை நழுவவிட்டுவிடக்கூடாது.

**“உண்மையை ஆராய வேண்டும்; உள் நோக்கி பிரயாணம் செய்யவேண்டும்; உள்ளிருந்து வாழவேண்டும்! ஆன்மாவை அறிந்து கொள்வதையே முக்கிய லட்சியமாக கருத வேண்டும்**

அதற்கு மனதை புருவமத்தியில் நிலைக்கச் செய்ய வேண்டும்!

**உள்ளொளியாக உள்ள இறைவனை** - போற்றி துதித்து வாழ்த்தி வணங்கிட வேண்டும்!

ஆன்மாவுக்கு உள்ளிருக்கும் **அருள் ஒளி ஆகிய அருட்ஜோதி** இறைவனைச் சார்ந்து வாழ நம்மை பழக்கப்படுத்திக் கொண்டால், நமது சூழ்நிலை எல்லாம் சரியாகும்; எல்லா நன்மையும் சூழும்; தீமைகள் எல்லாம் விலகும்; வறுமை, பயம், கவலை, தீராத நோய்கள் மறையும்!

ஒரு ஞானி சொல்கிறார்; **ஆன்ம அக உலகில் நிலைத்திருங்கள்; உங்கள் எதிர்காலத்தை கடவுள் தீர்மானித்து வேலையை முடிப்பார்; தொடர்ந்து உள்ளே செல்லுங்கள்; மற்றவற்றை அகச்சக்தி பார்த்துக்கொள்ளும்; கவலைப்படாதீர்கள்!** என்கின்றார்;

**உள்ளும் புறமும் ஒரு வள்ளல் இருப்பதால் வாட்டம் ஏன்?** - என்பது வள்ளலாரின் அருள் வாக்கு;

எனவே தைரியமாக **மெய்ப்பொருளை** நம்பி, புருவமத்தியில் மனதை நிலை நிறுத்தி, உள் புகுந்து, **நமது உண்மையான நிலையான இன்பமான ஆன்ம அக வடிவத்தை பொருந்தி நிற்க வேண்டும்** - என்பதே கடவுள் ஆணையும் இப் பிறப்பின் நோக்கமும் ஆகும்!

**தயவே கடவுள்! தயவுடன் வாழ்க!!**

## 3-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### உண்மையை உணர்ந்துக் கொள்ள தவறிவிட்டோமா?

நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எப்படி வந்தேன்? எதற்காக வந்தேன்? என்ன இலட்சியத்தோடு இவ் உலகில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றேன்?

இவ்வுலக வாழ்வும் அனுபவங்களும் என்ன பாடத்தைக் கற்றுத் தருகிறது? வேண்டும் என்றாலும் வேண்டாம் என்றாலும், வேறு வழியின்றி, சில பல அனுபவங்களையும் சுக துக்கங்களையும் தினசரி வாழ்வில் அனுபவித்துக்கொண்டுதான் இருக்கின்றோம்! ஒரு சிறுவனை கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருக்கின்றது இவ் உலகப் பிழைப்பு! வழிதுறை ஒன்றும் தெரியவில்லை!

**உடல் வரு வகை அறியீர்; உயிர் வரு வகை அறியீர்; உடல் பருக்க நிதம் உண்டு உறங்குதற்கே அறிவீர்!** என்கின்றார் வள்ளலார்;

மேலும் ஒரு பாடலில் சொல்கின்றார்;

**கண்டதெல்லாம் அநித்தியமே! கேட்டதெல்லாம் பழுதே! கற்றதெல்லாம் பொய்யே! நீர் களித்ததெல்லாம் வீணே! உண்டதெல்லாம் மலமே! உட்கொண்டதெல்லாம் குறையே! உலகியலீர் இதுவரையும் "உண்மை" அறிந்திலீரே! -**

விண்டு அதனால் என்? இனி நீர் சமரச சன்மார்க்க **மெய்நெறியை** கடைப்பிடித்து **மெய்ப்பொருள்** நன்கு உணர்ந்தே எண்தகு **சிற்றம்பலத்தே** எந்தை **அருள்** அடைமின்! **இறவாத வரம் பெறலாம், இன்பம் உறலாமே!** என்கிறார்.

முக்கிய குறிப்பு;

**எல்லாம் வல்ல கடவுள் அனாதி நித்திய இயற்கை உண்மை என்கின்ற "அன்பு" இருப்பாக, சத்துப் பொருளாக, அகண்டாகாசப்பெருவெளி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார்! அவரே நம் தலைநடுவில் பேரருட் பெருங்கருணை கொண்டு "அருள் உணர்வு" எனும் "அருட்பெருஞ்ஜோதியாய்" சதா விளங்கிக் கொண்டிருக்கின்றார்!"**

**வள்ளலார் வாக்கு;**

உண்மை சொல்ல வந்தனனே என்று **உண்மை** சொல்லப் புகுந்தாலும் **உண்மையை** தெரிந்துக் கொள்வார் இல்லை!

நீங்கள் **உண்மை அறிவாய் விசாரம் செய்து வாருங்கள் !**

இங்குள்ள நீங்கள் எல்லோரும் இதுவரை இருந்தது போல் இனியும் **வீண் காலம் கழித்துத் கொண்டிருக்காதீர்கள்!** - நாம் யார்? நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தின் நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது - என்கிறார்;

மனிதன் தனது **உண்மையை** அறிந்து கொள்ளவே **மனம் என்கின்ற அற்புதக் கருவி** - கடவுள் திருவருளால் வழங்கப்பட்டுள்ளது!

இந்த மனதை **புருவ மத்தியில் நிலைக்கச் செய்து உள்முகமாக செலுத்தி நினைப்பு மறப்பற்று ஆழ்ந்து, அகம் நோக்கிப் பார்த்தால் நமது ஆன்ம உண்மையும் ஆன்மாவிற்கு உள்ளிருந்து நம்மை ஆட்டிவைக்கின்ற உள்ளொளி ஆகிய கடவுள் உண்மையையும் உணர்ந்துக்கொள்ளலாம்.**

உண்மையும், அமைதியும், ஆனந்தமும் நிறைந்த **அழியாத, நிலையான, நித்திய வாழ்வு** - பெறலாம்!

**புருவ மத்திக்கு வருவோம்! சிரநடு அக மையத்தை ஆராய்ந்து ஆழ்ந்து நோக்குவோம்! நித்திய நிலையான நமது அகவடிவமான ஆன்ம சொரூபத்தை அறிவோம்! ஆனந்தமுறுவோம்!**

வள்ளலார் வாக்கு;-

இந்த பௌதிக உடம்பில் **இருக்கின்ற நீ** - யாரெனில், **நான் ஆன்மா** - நான் சிற்றணு வடிவின்; இந்த ஆன்மா இருக்குமிடம் **புருவமத்தி** ஆகிய லலாடஸ்தானம்; மேற்படி

**ஆன்மா, கோடி சூரியப் பிரகாசம் உடையது** என்கின்றார்!

**ஆன்மாவை அறிந்து கொள்வோம்! ஆனந்தமாக வாழ்வோம்!**

**உள்ளதை உணர்ந்து கொள்வோம்! உள்ளிருந்து வாழத் தொடங்குவோம்!**

**தயவே விழி ! தயவே வழி ! தயவே வாழ்வு !**

**முக்கிய குறிப்பு;-**

எல்லா உயிர்களும் கடவுள் விளங்குகின்ற

**உண்மையான திருக்கோயில்களாகும்!! எல்லா உயிர்களிலும் கடவுள் வியாபித்து இருப்பதை உணர்வதே உண்மையான ஈஸ்வர பக்தி ஆகும்.**

**இன்று முதல் புலால் என்னும் மாமிச உணவு உண்ணாதீர்கள் !!**

**ஆருயிர்கட்கு எல்லாம் அன்புத் தொண்டு செய்வதே உண்மையான கடவுள் வழிபாடு ஆகும் !!.**

## 4-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## சிதம்பர இரகசியம் அறிவோம்!!!

சிதம்பரம் நடராஜர் கோயிலிலே, மூலவர் சந்நிதிக்கு பக்கத்திலே, ஒரு அறைக்கு அழைத்துப் போய், மேலே வெட்டவெளியை காட்டி, **இதுதான் சிதம்பர இரகசியம்** என்பார்கள்! அதன் உண்மையைக் காண்போம்!

நாம் புறத்தே பார்க்கின்ற ஆகாசம் எல்லையற்ற பெருவெளி ஆகும்! வானம் எங்கேயும் முடியாது! அதை **அகண்ட ஆகாச வான் பெருவெளி** - என்பர்; அந்த எல்லையற்ற வான் பெருவெளியில் அனாதி காலமாக இருந்து வருபவர்தான் **கடவுள்**; அங்கு அவர் **அன்பு என்கின்ற இருப்பு** ஆக உள்ளவர்!

அந்த கடவுள் எப்பொழுதோ ஒருகால் தோன்றியவர் அல்லர்! அவருக்கு தோற்றமும் அழிவும் இல்லை; ஆதியும் அந்தமும் அதாவது ஆரம்பமும் முடிவும் இல்லாதவர்! அவரையே **சத்துப் பொருள்** என்றும் **மெய்ப்பொருள்** என்றும் **இயற்கை உண்மை** என்றும் அழைக்கின்றார் வள்ளலார்!

அங்கு அவர் **தான் மட்டும், தன்னந்தனியாக, ஒருவராகவே** என்றென்றும் எங்கெங்குமாய் இருந்து வருபவர்! **இயற்கையான**

**இந்த கடவுள் இருப்பு உண்மைதான்** அற்புதத்திலும் அற்புதம்! வியப்பிலும் ஒரு பெரு வியப்பு!

அந்த அகண்டாகாச வான் பெருவெளி முற்றும் அனாதி காலமாய் நித்தியமாய் உள்ள கடவுளே, தனது முழு உண்மையை வெளிப்படுத்திக் கொண்டு **அருள் அனுபவ இயற்கை விளக்க வாழ்வு** கொள்ளவே மனிதனின் தலைநடுவில் **அருள் உணர்வு** - என்கின்ற **அருள் விளக்காக** எழுந்தருளியுள்ளார்!

அந்த கடவுளையே வள்ளலார் **அருட்பெருஞ்ஜோதி** என்கின்றார்!

அந்த அருள் ஒளியே உள்ளிருந்து விரிந்து மனிதனின் **உடலாய், உயிராய், மனமாய், ஆன்ம அறிவாய்** விரிந்து இவனது சூழ்நிலையாய், வாழ்வாய், அனுபவங்கள் யாவுமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றது!

**அருட்ஜோதி தியானம்;-** நமது புருவ நடுவே (ஒன்றரை அங்குலத்திற்கு உள்ளே) ஒரு **அருள் ஞான தீபமாக** கடவுளை பாவித்து வழிபடவேண்டும்; அந்த அருள் ஞான தீபமாகிய **உள்ளொளியை** நேரடியாக தொடர்பு கொண்டு வழிபட்டு வந்தால் நமது வாழ்க்கையில் சகல நன்மைகளும் பெறலாம்!

இங்குதான் அவர் சதா **அருள் ஞானத் திருநடனம் புரியும் நடராஜப் பெருமானாக** விளங்குகின்றார்! **தனிப்பெரும் கருணை** என்கின்ற பேரருட் பெருங்கருணை உணர்வுதான் அவரது திருமேனியாக உள்ளது!

அங்கிருந்தே அவர் இந்த பஞ்ச பூதத்தாலான (நிலம் - நீர் - நெருப்பு - காற்று - ஆகாயம்) எல்லையற்ற **மகா பிரபஞ்சத்தை** (உலகத்தை) விரித்து ஐந்தொழிலால் ஆட்சி புரிந்துக் கொண்டுள்ளார்!

**சிதம்பரம்** என்றால் என்ன? **சித்து + அம்பரம் = சிதம்பரம் !** சித்து என்றால் **அறிவு**; அம்பரம் என்றால் **ஆகாசம்**! அதாவது **அறிவு ஆகாயமாகிய ஆன்மாவைக்** குறிக்கும்! இதுவே சிதம்பரம் ஆகும்!

இதை **சிற்றம்பலம்** எனவும் **சிற்சபை** எனவும் கூறுவர்! அதாவது சிறிய அம்பலம் - சிறிய கோயில் - அணுத்துவமான ஆலயம் ஆகும்; இது மனிதனின் கபால நடு - தலைநடு உள்ளது; இங்குதான் **உள்ளொளியாக - நடராஜப் பெருமான் - ஐஞ்சக்தி, ஐந்தொழில் திருநடனம் புரிகின்றார்!**

ஐஞ்சக்தி என்பது **பொருட் சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, யோக சக்தி, அருட் சக்தி** ஆகும்!

ஐந்தொழில் என்பது **ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளால்** ஆகும்!

இந்த பிரபஞ்சம் முழுவதும் அணுக்களால் நிறைந்தது; நாம் காணும் எல்லா பொருள்களும், வடிவங்களும், உருவங்களும், நமது உடலும் அணுக்களால் ஆனது; நமது உடல் சராசரி 37 லட்சம் கோடி திசுக்களால் (செல்கள் - **cells**) ஆனது! ஒவ்வொரு தனித் திசுவும் **(single cell)** 100 லட்சம் கோடி அணுக்களால் ஆனது என்கின்றனர் விஞ்ஞானிகள்! எவ்வளவு பெரிய அதிசயம் இது! நினைத்தே பார்க்க முடியாத அற்புதம்!

ஒவ்வொரு அணுவும் புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் என்கின்ற மூன்று வகை துகள்களால் ஆனது; புரோட்டானும் நியூட்ரானும் நடுவில் இருக்க எலக்ட்ரான் துகள்கள் அந்த அணுவை நீள் வட்டப் பாதையில் ஒரு விநாடிக்கு 2200 கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றிக் கொண்டே இருக்கின்றதாம்! இதற்கு ஓய்வு ஒழிவு என்பதே கிடையாது!

இதுதான் **அருள் ஆற்றலின் அற்புதம்.**

இதைத்தான் வள்ளலார், **போற்றி நின் பேரருள்! போற்றி நின் பெருஞ்சீர்! ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி!** என்று போற்றுகின்றார் வள்ளலார்!

இது மட்டுமா? அண்டத்திலும் இதேபோல் அதிசயம் நிகழ்ந்துக்கொண்டிருக்கின்றது! சூரியனைச் சுற்றி ஒன்பது கோள்கள் வலம் வந்துக் கொண்டிருக்கின்றன; அதில் நமது பூமி தன்னைத் தானே மணிக்கு 1670 கிலோ மீட்டர் வேகத்தில் சுழன்றுக்கொண்டு, அதே நேரத்தில் சூரியனை மணிக்கு ஒரு லட்சத்து ஏழாயிரம் கிலோமீட்டர் வேகத்தில் நீள்வட்டப் பாதையில் கோடிக்கணக்கான வருடங்களாக சுற்றிக்கொண்டே இருக்கின்றது! இது என்னே அற்புதம்! அற்புதம் அற்புதமே **அருள் அற்புதம் அற்புதமே!** இதை எல்லாம் இயக்குவது யார்? அவர் எங்கிருந்துக் கொண்டு இயக்குகின்றார்? என்றால் நம் தலைநடு விளங்கும் **ஆன்மாவாகிய**

**சிதம்பரத்தில் "அருட்பெருஞ்ஜோதி - தனிப்பெருங் கருணையராக"** இருந்துக்கொண்டு **அணுவிலும் -அண்டத்திலும் பேரியக்கத்தினை** செயல்படுத்திக் கொண்டே உள்ளார்! அவருக்கு ஒய்வு என்பதே இல்லை! **ஆன்ம சிதம்பரத்தே** - நடிக்கும் அருள் ஆண்டவரின் **அற்புத ஞானத் திருக்கூத்தினை** நம் புருவநடு நினைந்து நினைந்து துதிப்போம்! போற்றுவோம்! வாழ்த்தி வணங்குவோம்! சகல நன்மைகளும் பெறுவோம்!

## 5-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## மனிதன் எங்கிருந்து வாழ வேண்டும்? எப்படி வாழ வேண்டும்?

மனிதன் **அகமிருந்து அருட்ஜோதியாய்** வாழ வேண்டும் என்கின்றார் வள்ளலார்!

நமது **ஆதிமூல நிலை நடுத்தலை உள்ளிருக்கும் "அருட்ஜோதி ஆன்ம அணுவாய்"** இருக்கின்றது!

அங்கிருந்து விரிந்து இந்த தேகம் முழுதும் வியாபித்துள்ளோம்; ஆகையால், அந்த **அருட் ஜோதி ஆன்ம அணுவை** மனதினால் உறுதியாய்ப் பற்றி அதுவாகி நிலைத்தல் வேண்டும்!

அங்கிருந்துதான் **அருள் இன்ப வாழ்வு** வாழ்தல் வேண்டும்;

எனவே முதலில் **அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தான் நம்முடைய உண்மையான "அக வடிவம்"** என்பதை தெளிவு செய்துக் கொள்ளல் வேண்டும்;

அந்த **அக உணர்வு - கெடாமல் சிந்தனையும், சொல்லும், செயலும்** வெளிப்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டும் -என்கின்றார் வள்ளலார்!

நம் **அருட்ஜோதி ஆன்ம அணு** ஆகிய **அக வடிவம்** என்றால் என்ன?

ஒரு மனிதனுக்கு மூன்று உடல் உள்ளது!

அதாவது **ஸ்தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம்** ஆகிய மூன்று உடல்;

இதுவே **உடல், உயிர், உள்ளம்** எனப்படும்!

உடல் ஆகிய தூல சரீரம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூத பௌதிக அணுக்களால் ஆனது;

இது ரோமம், தோல், இரத்தம், தசை, எலும்பு, நரம்பு, விந்து அல்லது கருமுட்டை ஆகிய ஏழு தாதுக்களால் ஆனது; இது வியர்வை, அழுக்கு, மலம், சிறுநீர் முதலிய அசுத்தங்கள் நிறைந்தது! முதலில் நம் கண்ணுக்குத் தெரிவது இந்த பூத உடலே!

எனவே, இந்த **தேகமே நான்** என் நினைத்து பிழைத்துக் கொண்டிருக்கின்றோம்! இது முற்றிலும் தவறு; அறியாமை!

பல கோடி பிறவிகளில் பல கோடி காலமாக **உடலே நான்** என நினைத்து பிழைத்துக் வந்திருக்கின்றோம்! எனவேதான் இந்த அஞ்ஞான இருள் நிலையை **பிழைத்தல்** எனப்படுகிறது! பிழை என்றால் தவறு என்பதாம்! இனியும் அந்த பிழை செய்தல் கூடாது; இது ஆபத்தானதும் கூட!

**நான் யார்? என்ற உண்மையை உணர்ந்துக் கொள்ள முற்பட வேண்டும்; முயற்சி செய்ய வேண்டும் -**

அடுத்து இந்த ஸ்தூல சரீரத்துக்கு உள்ளிருக்கும் **சூக்கும சரீரம்** பற்றி ஆராய்வோம்;

**உயிர் ஆற்றல் உணர்வு வடிவமே** சூக்கும தேகமாகும்;

இதில் உயிர்வுணர்வும், ஆற்றலும், இதற்கு ஓர் வடிவமும் உண்டு; இதை **நுண்ணுடல்** என்றும் **ஆவிவடிவம்** என்றும் குறிக்கப்படும்; தூல உடம்பில் உள்ள கோடிக்கணக்கான திசுக்களின் **(cells)** உள்ளும் புறமும் ஊடுருவி இருப்பது இந்த **சூக்கும சரீரம்** ஆகிய **உயிர் வடிவம்.** இது உள்ளே இருப்பதால், உணர முடியுமே தவிர கண்ணால் காணமுடிவதில்லை!

அடுத்து **காரண சரீரத்தை** பற்றி ஆராய்வோம்;

**ஆன்மாவே காரணசரீரமாகும்.** இது ஒரு மிகச் சிறிய அணு வடிவு கொண்டதாகும்; இதை கண்ணால் பார்க்க முடியாது; அருவமானது!

இது **தலை நடுவில் உள்ளது.**

இது **அறிவு வடிவமானது; இருப்பு உணர்வு மயமானது.**

**இந்த அறிவே வடிவான ஆன்மாவிற்கு உள்ளே தான் எல்லாம் வல்ல கடவுள் அருட்ஜோதியாய் எழுந்தருளி விளங்கிக் கொண்டிருக்கின்றார்.**

அவரே தன் அருளால் நமது **அறிவு, உயிர், மனம், உடல்** எல்லாமாய்த் தானே அனகமாக விரிந்து விளங்கிக் கொண்டுள்ளார்!

**நாம் இப்பொழுது செய்ய வேண்டியது என்ன?**

கடவுள்தான் எல்லாமாய் விளங்கிக் கொண்டுள்ளார் என்பதை உணர்ந்துக்கொண்டு, **கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் வேண்டும்**என்பதே கடவுள் திருவுள்ளமும் ஆணையும் ஆகும்!

இதற்காக நாம் தினமும் **அகநிலை பயிற்சி** செய்ய வேண்டும்! இதற்காக விடியற்காலையில் ஒரு 45 நிமிடமும் இரவு தூங்குவதற்கு முன் ஒரு 45 நிமிடமும் ஒதுக்கவேண்டும் அவசியமாக!

## தியான பயிற்சி முறை;-

மனதை புருவ மத்தியில் வேறு சிந்தனையின்றி நிலை நிறுத்தி, உள்ளே ஒரு வெண்மையான, பிரகாசமான, சிறிய தாமரை மலர் இருப்பதாகவும், அதன் நடுவிலே **அருட் ஜோதியாக** எல்லாம் வல்ல கடவுள் **அருள் ஞான தீபமாக** விளங்குவதாக பாவிக்க வேண்டும்!

**பேரருள் பெருங்கருணையே** அவரது திருமேனியாக விளங்குவதாக பாவித்து, அவருடைய **தனிப்பெருங்கருணை** இருந்த வண்ணம் எவ்வண்ணமோ என ஏங்கி, நினைந்து நினைந்து, நினைத்த நினைப்பும் அற்று நிற்றல் வேண்டும்!

இதை ஒரு 15 நிமிடம் செய்யலாம்! அடுத்து இரண்டாவது படிக்கு, அதாவது, **அகநிலையை** அறிய வந்துவிட வேண்டும்;

## 2 ம் படி தியானம்;-

புருவமத்தியில் உட்புறமாக, ஒரு ஒன்றரை அங்குலத்திற்கு உள்ளே நமது கவனத்தை குவிக்க வேண்டும்!

**நான் யார்? நான் எதுவாக இருக்கின்றேன்?** - என உள்நோக்கி, ஓர்மையுடன் உணர்வை கவனிக்க வேண்டும்!

30 நிமிடம் தன் இருப்புணர்வு குறித்து கவனமாக விசாரம் செய்ய வேண்டும்;

அப்போது அங்கு நாம் (நான்) ஒரு

**நித்திய இருப்புணர்வு ஆகாசமாக** அனுபவப்படும்;

இந்த உணர்வு, உள்ளிருக்கும் **அருட் ஜோதி** - இடத்திருந்து வெளிப்பட்டுக் கொண்டே இருப்பதை உணர்வோமாக!

அடுத்து, **உள்ளிருக்கும் மெய்ப்பொருளாகிய அருட் ஜோதியின் தனிப்பெருங்கருணை இருந்த வண்ணம் எங்ஙனமோ-!?** இறைவா! தெரிவித்து அருளல் வேண்டுமென விண்ணப்பிக்க வேண்டும்; முறையிட வேண்டும்; பிரார்த்திக்க வேண்டும்; துதித்து வாழ்த்தி வணங்கிட வேண்டும்! இதை ஒரு 30 நிமிடம் செய்யவேண்டும்;

தியானம் வாழ்க்கையில் ஒரு மிக மிக முக்கியமான அங்கம்!

இவ் வண்ணம் செய்து வந்தால் ஒவ்வொரு நாளும் திருவருளே உணர்த்த வேண்டியதை அவ்வப்போது உணர்த்திக் கொண்டுவரும்!

**அருட்ஜோதி தியானத்தை** இடைவிடாது பயின்று வந்தால் பெறலரிய சகல நன்மையும் பெறலாம்! இது வள்ளலார் ஆணை!

## அருட்ஜோதி ஆன்ம அக உலகம்;-

ஆன்மா என்பது அழிவற்ற நித்திய பரம்பொருளின் சிறு வடிவம், சிற்றம்பலமாகும்!

இது அனாதி காலமாக உள்ள ஓர் நித்திய சத்திய அருள் இயற்கை இருப்பு!

இது உண்மையில் பிறப்பு இறப்பு அற்றது;

ஆன்ம அக உலகில் இன்ப துன்பம் இல்லை; நினைப்பு மறப்பு இல்லை; இரவு பகல் இல்லை; இறந்தகாலம் எதிர்காலம் இல்லை; நித்திய நிகழ்காலத்தில் பேரின்ப அனுபவத்தோடு, சச்சிதானந்தமாய், நித்தியானந்தமாய், என்றென்றும், எங்கெங்கும் நிறைந்த அனுபவத்தோடு, தான் ஒரு தானாய், தன்னந்தனியதாய் திகழ்கின்றதாகும்! இயற்கை உண்மையும், இயற்கை விளக்கமும், இயற்கை இன்பமும் நிறைவான மெய்ப்பொருளே ஆன்மா!

அது நாமோ, பிறரோ ஆகாது; அது கடவுளே! எனவே, நான் என்பது கூட கடவுளின் வெளிப்பாடே!

**நான் என நிற்பது கடவுளே!**

**தயவே கடவுள்! தயவுடன் வாழ்க!**

## 6-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### மனிதன் உடனே, இப்பொழுதே செய்ய வேண்டியது என்ன?

சந்தேகமே இல்லை! மாயா மயக்க **உடலே நான்** என்கின்ற **தேக உணர்வை** கடந்துவிடுவதுதான் இங்கே இப்பொழுதே அவசரமாக, அவசியமாக செய்ய வேண்டிய மிக முக்கிய கடமையாகும்!

**இங்குள்ள (இவ் உலகத்திலுள்ள) நீங்கள் எல்லோரும் இதுவரையில் இருந்தது போல் இனியும் வீண் காலம் கழித்துத் கொண்டிருக்காதீர்கள்!** என்பதே வள்ளலார் வாக்கு!

உடல் உணர்வினராய் இவ் உலகில் பிழைத்துக் கொண்டிருந்ததையே "வீண் காலம்" என்கின்றார்! இந்த பரிதாப நிலையையே **அஞ்ஞான வாசம்** என்பர் ஞானிகள்;

அதாவது **மருள் நிலை!**

மனிதனுடைய **"உண்மை நிலை" அறிவு சொரூபமாக** "இருக்கின்றது!

இது மனிதனின் தலைநடுவே **உள்ளொளியாக** சதா பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது! இது ஆவதுமில்லை அழிவதுமில்லை! அங்கு **ஆனந்தமே** அன்றி, துன்பத்திற்கு சிறிதும் இடம் இல்லையாம்!

ஆனால், நாம் இவ்வுலகில் காண்பதென்ன?

எங்கும் அல்லலும், தொல்லையும், துன்பமும், பாடும் தான்! முற்றிலும் மாறுபாடான சூழ்நிலையே!

முன் ஜென்மங்களில் செய்த கர்மநிலைக்கு ஏற்றவாறு சுகதுக்க சூழ்நிலை உண்டாகின்றது!

இதை மாற்றிக்கொள்ள முடியுமா? **விதியை மதியால் வெல்லலாம்!** என்பது சத்திய ஞானிகளின் வாசகம்!

**மதி என்பது அருள் ஞானமே!** அருள் ஞானமே **மெய்யறிவு அல்லது மெய்ஞ்ஞானம்** எனப்படும்;

ஞானம் அடைந்தவனே ஞானியாவான்; இது யாரோ ஒருவர் மட்டும் பெற்றுக்கொள்வது அல்ல!

மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் ஞானம் அடைந்தே ஆகவேண்டும் என்பதே இயற்கை விதி!

ஆனால், அதற்கு மாறாக நாம் உடல் மற்றும் மனம் சார்ந்த, நிலை இல்லாத சுகத்தை தேடியே விரைந்து விரைந்து இவ்வுலகில் அயராது ஓடிக்கொண்டிருக்கின்றோம்! கானல் நீரை பருக விழைகிறோம்! மேல் திசை நோக்கி சென்றுக் கொண்டிருக்கின்றோம் என நினைத்துக் கொண்டிருக்கின்றோம்; அது தவறு! அதள பாதாளத்தை நோக்கி நம் பயணம் அமைகின்றது;

**நம் மனம் திருந்த வேண்டும்! அகம் நோக்கி திரும்ப வேண்டும்!!**

நம் முயற்சி உலகியல் கடமைகளை செய்கின்ற அதே நேரத்தில், **உள்ளிருக்கின்ற உண்மையை மெய்ப்பொருளை** உணர்ந்துக் கொள்ள வேண்டும்!

**அக உலகில் மெய்ப்பொருளாகிய கடவுளை பற்றி இருந்துக்கொண்டு புற உலகில் கடமையை செய்து வரல் வேண்டும்** என்பதே சன்மார்க்க நெறி;

**உள்ளிருந்து வாழ்வதுவே உண்மை வாழ்வாகும்; மற்று புறம் இருந்து புரிவதெல்லாம் பொய்ப்பிழைப்பே ஆகும்** என்பது திண்டுக்கல் சுவாமி, தயாநிதி சரவணானந்தா அவர்களின் தயவு வாசகமாகும்!

எனவே, **உடல் உணர்வையும், சதா நம்மை அலைக்கழிக்கின்ற மன உணர்வையும் கடந்து உள் நிலைக்கு வந்துவிட வேண்டும்** என்பதே மெய்யுணர்ந்த மெய்ஞ்ஞானிகளின் உபதேசமாகும்!

இதை வள்ளலார், அருட்பெருஞ்ஜோதி அகவலில், **தனு கரணாதிகள் தாம் கடந்து அறியும் ஓர் அனுபவமாகிய அருட்பெருஞ்ஜோதி** என குறிப்பிடுகின்றார்

**தனு என்றால் உடல், கரணம் என்பது மனம்.**

**(**மனம், புத்தி, சித்தம், அகங்காரம்**) !** அதாவது, தேக உணர்வையும், மன உணர்வையும் கடந்து மேல்நிலைக்கு ஏறி வந்து, சிரநடுவே உள்ள

**கடவுள் ஆன்ம நிலையை** உணரவேண்டும்!

இது கபால நடுவே **அருள் ஒளி அணுவாய்** சதா பிரகாசித்துக்கொணடு இருக்கின்றது;

இந்த "அருள் ஒளி அணுவே உண்மை மனிதனாக" இருக்கின்றது!

**கடவுளும் மனிதனும் இயல்பாகவே இருநிலையற்று, இயற்கையாகவே இரண்டற்று, கலவாமல் கலந்து, ஒன்றென விளங்குகின்ற நிலையே உண்மை நிலையாகும். இதுவே ஆன்ம அக நிலை** ஆகும்!

இந்த ஆன்ம அகநிலையை அறிவால் பற்றிக்கொண்டு வாழ்பவனே உண்மை மனிதன் ஆவான்! என்கின்றார் வள்ளலார்!

ஆன்ம அறிவைக் கொண்டு கடவுளை அறிந்து, சார்ந்து, கலந்து வாழ்பவனே பெறலறிய பேறு பெற்றவன் ஆவான்!

**அறிவால் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைவோனே**! - என்பார் அருணகிரிநாதர்;

சிவஞான சித்தியார் எனும் நூலில் ஒரு குறிப்பு;

**அறியாமை அறிவு அகற்றி, அறிவினுள்ளே அறிவு தனை, அருளினால் அறியாதே அறிந்து, குறியாதே குறித்து, அந்தகரணங்களொடும் கூடாதே, வாடாதே குழைந்து இரு! -** என்பார்!

எனவே, நாம் உள் நோக்கி பயணிக்க, நேரம் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கூடாது;

"சூழ்நிலை சரியில்லை" என குறை சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது; அப்படி இருந்தால் அது **முயலை விட்டு காக்கை பிடித்த கதையாகும்!** "முயல்" என்றால் சதா முயற்சி செய்து கொண்டிருத்தலாகும்; "காக்கை" என்றால் நேரம் காலம் வரும் என வறிதே சோம்பிக்கிடந்து காத்துக்கொண்டிருத்தலைக் குறிக்கும்!

**கையறவு இலாது நடுக்கண் புருவப்பூட்டு, கண்டு களி கொண்டு திறந்துண்டு நடு நாட்டு** என்பார் வள்ளலார்!

கையறவு என்றால், சோம்பல், தூக்கம் முதலான தாமச குணங்களாகும்; "பிறகு பார்த்துக் கொள்ளலாம்", என தாமதிக்காது இப்பொழுதே, இந்த நொடியிலிருந்தே தீவிர முயற்சி செய்ய வேண்டும்!

**அக உண்மையை - மெய்ப்பொருளை** - காண புருவமத்திய ஸ்தானத்திற்கு, உற்சாகத்தோடு வந்து நிற்கவேண்டும்!

புருவ மத்திக்கு உள்ளே கவனத்தை நிலைநாட்ட வேண்டும்;

வேறு சிந்தனை ஏதுமின்றி **உள் நிலை** எனும் அகநிலையைப் பற்றி தீவிரமாக விசாரணை செய்ய வேண்டும்! இப்படி தொடர்ந்து அதிகாலையிலும் இரவிலும் **அகப்பயிற்சி** செய்துவந்தால், சிரநடுவே, ஓர் **உண்மை அறிவுணர்வு** அனுப்பப்படும்!

இந்த அறிவு உணர்வின் இருப்புக்குள்ளே விளங்குபவர் தான் **அறிவுக்கு அறிவாகிய கடவுள்; அவர் ஒப்பற்ற தயவுடைய பேரறிவாக விளங்குகின்றார் -**

அந்த அவருடைய நிலையே **அருள் உணர்வு நிலை** ஆகும்!

அருள் நிலை ஒன்றே அனைத்தும் பெறுநிலை! என்பார் வள்ளலார்; **அருட் சுகம் ஒன்றே நித்திய நிலையான நீங்காத பேரின்பப் பெருஞ்சுகம்** என்பார் வள்ளலார்;

## சுவாமி சரவணானந்தாவின் தயவு வாசகம்;

**பகுத்தறிவு உடைய மனிதன் தன்னை தேக நிலையிலிருந்து விடுவித்துக்கொண்டு கடவுள் நிலையில் இருத்திக் கொள்ளவேண்டியவனாய் இருக்கின்றான்** என்பார்!

**உண்மையில் உள்ளது ஒரு பொருள் அதுவே, உள்ளிருந்து ஓங்குவது அறிமின்!** என்கின்றார்!

எனவே, நாம், சத்விசார வசத்தராய் இருந்துக்கொண்டு, தேகம், மனம், உயிர் ஆகிய ஜடமான தத்துவ நிலைகளை கடந்து - **ஆன்ம அக நிலையில் பொருந்தி நிற்க வேண்டும்**

## முக்கிய குறிப்பு;-

உண்மையில் நாம் தலைநடுவில் விளங்கும்,

**அக ஆன்மாவாகத்தான் அனாதி காலமாக இறைவனோடு இறைவனாக இருந்து வருகின்றோம்; இந்த அருட் ஜோதி அக ஆன்ம வடிவம்தான், நமது அழியாத தனி வடிவம்!** - என்கின்றார் வள்ளலார்!

**அருட்ஜோதியானேன் என்று அறையப்பா முரசு;**
**அருளாட்சி பெற்றேன் என்று அறையப்பா முரசு;**
**மருட் சார்பு தீர்ந்தேன் என்றறையப்பா முரசு;**
**மரணம் தவிர்த்தேன் என்று அறையப்பா முரசு**

என பாடுகின்றார்!

ஒரு ஞானி பாடுகின்றார்;

**உள்ளம் எனும் ஆனந்த ஓங்கல் மிசை ஏறி,**
**வெள்ள வெளிக்குள்ளே விளையாடும் பிள்ளை,**
**உலகம் எனும் சேரிக்கு ஒரு காலும் வாரான்,**
**கலகம் விளையும் எனக் கண்டு!** என்கின்றார்!

ஆன்ம சாதகன் ஒருவன், இவ்வுலகிடை ஒழுகுங்கால், **கழிநடை கண்பார்வை போல் இருக்கவேண்டும்** என்கின்றார் வள்ளலார்!

(கழிநடை = மல ஜலம் கழிக்கப்பட்டுள்ள பாதை)

சுத்த சன்மார்க்க குறிக்கோள்;- உலகத்தில் வாழ்கின்ற எல்லா ஜீவர்களிடத்தும் இடைவிடாது இரக்கம் வைத்தும், நம் உள்ளம் **சத்திய ஞான சபையில், திருப்பள்ளி எழுந்தருளியுள்ள அருட்பெருஞ்ஜோதி** ஆண்டவரிடத்து மாறாத அன்பும் செலுத்தி வந்தால், ஒப்பற்ற சத்திய சுகபூரண, நித்திய வாழ்வைப் பெறுவோம் என்பது வள்ளலார் அருள் வாக்கு!

**புருவமத்தியிலிருந்து புண்ணியனையே நினைந்து நினைந்து துதிப்போம்! புவிமிசை நீடூழி வாழ்வோம்! -**

**தயவே கடவுள்! தயவுடன் வாழ்க!!**

தயவு

# 7 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**அவாமாசு உடைய என் மனமே, இதோ தயாநிதியின் உபதேசம் உனக்கே!**

**உட்கொண்டு கடைத்தேறுவாய்! சுத்த மனம் பெறுவாய்!**

தயவு நிறை அன்பர்க்கு அனேக வந்தனம்! நமது மனம் இதய ஸ்தானத்தில் இருந்து செயல்படுகின்றது; இதய ஸ்தானத்தில் இருக்கும் வரை இது அவா, வெகுளி, மயக்கத்தால் நம்மை பலவாற்றானும் அலைக்கழிக்கின்றது; மாயா மயக்கத்தால், ஐம்புலன்கள் வழியே சென்று சென்று சிற்றின்பத்தை பற்பல காலும் துய்த்து துய்த்து, அதனால் பெருந்துன்பத்தை நிரந்தரமாக கொடுத்துவிடுகின்றது;

அப்பொழுதாவது நமக்கு தெளிவு உண்டாகின்றதா என்றால், அதுதான் இல்லை!

மேலும் மேலும் உடல் மற்றும் மனம், ஜீவன் வழியே புற உலக இன்பத்தை துய்க்கவே விழைகின்றோம்!

இதற்கு காரணம் "**அவா**" என்கின்ற, நம்மைவிட்டு நீங்காத கொடிய விலங்கு! இது கோடிக்கணக்கான பிறவிகள் தோறும், விடாது நம்மை துரத்துகின்றது;

நாம் என்னத்தான் முயற்சி செய்தாலும், சந்தர்ப்பம் பார்த்து அதலபாதாளத்திலே தள்ளிவிடுகின்றது!

இதிலிருந்து மீளத்தான் என்ன வழி? ஆசை அறுமின்! ஆசை அறுமின்! என ஞானிகள் உபதேசிக்கின்றனர்!

புத்தர் சொல்கிறார்;- "**ஆசையே துன்பத்திற்கு காரணம், ஆசையை ஒழித்தால் துன்பமின்றி வாழலாம்!**" என்கின்றார்;

அவருக்கு பக்குவம் வந்துவிட்டது, அவர் லேசிலே உபதேசித்துவிட்டார்! எனக்கு பக்குவம் எப்போது வரும்? அதுவரையில் இந்த அவா மனத்தோடு போராடிக் கொண்டே இருக்க வேண்டியதுதானா? இதற்கு விடிவு இல்லையா?

உண்டு உண்டு! அஞ்ச வேண்டாம்! நமக்கு அபயம் அளித்து ஆறுதலும் தேறுதலும் தர அருட்பெருஞ்ஜோதி அப்பன் நம்முள்ளே சத்தியமாக உள்ளான்!

**அவா என்பதின் உண்மை என்ன?**

அவா என்பது இறையருளுக்கு அன்னியமல்ல!

இதை கிறிஸ்துவ மதத்தில் **சைத்தான் அல்லது பிசாசு** என்பர்!

உண்மை வேறுவிதமாக இருக்கின்றது; திருவருளே நம் உயிர்வுணர்வில் அவாவினை தூண்டிவிடுகின்றார்!

அந்த அவாவினால் ஒரு பொருளை, ஒரு வடிவத்தை அனுபவித்தே ஆகவேண்டும் என்ற தணிக்க முடியாத ஆசையாக அது மாறி நம்மை அந்த போகத்தை அனுபவிக்கும் படி செய்துவிடுகின்றது!

பின், "என்ன ஐயோ தவறு செய்துவிட்டோமே!!" என்று வருத்தப்படுகின்றோம்! செய்த தவற்றால் பெருந்துன்பத்தை அனுபவிக்கின்றோம்! இது இப்படியே திரும்பத்திரும்ப நம்மை ஆசைப்பட வைத்து, போகத்தை வலுக்கட்டாயமாக அனுபவிக்கச் செய்து, அதனால் பெருந்துன்பத்தை தந்துவிடுவதே அவாவின் வேலை!

**இது யாவுமே திருவருளின் செயலன்றி வேறெதுவுமில்லை!**

ஆண்டவருடைய நோக்கம்தான் என்ன? நான் ஏன் இவ்வுலகத்தில் பிறந்தேன்? எதற்காக என்னை இவ்வுலகத்திற்கு வரவழைத்துள்ளாய்? ஆசைப்பட்டு, போகம் துய்த்து, அதனால் பெருந்துன்பமுற்று, முடிவில் அழிந்து, ஒழிந்திடவோதான் என்னை இவ்வுலகில் வரவழைத்தனையோ இறைவா! என உளமுருகி வேண்டும்போது, அவர் உண்மையெல்லாம் உணர்த்துகின்றார்!

அது என்னவெனில், **இருப்பது ஒன்றே! அதுவே எல்லாமாய், எல்லோருமாய் இருக்கின்றது!** என்பதுதான்!

ஆகவே, உள்ளும் புறமும் ஓர் வள்ளல் இருப்பதால் வாட்டமடையத் தேவையேயில்லை!

**மனம் சுத்தமடைய, சுத்த மனமாக மாறி, நம்மை சுத்த ஆனந்த, சுகபூரண நல் வாழ்வில் வாழ வைக்க ஆண்டவர் திருவுள்ளம் கொண்டுள்ளார்!** என்பதை திடம்பட உணர்வோமாக;

இப்பொழுது, நாம் செய்ய வேண்டியது என்னவெனில், இதயத்தானத்தில் இருக்கும் மனத்தை **புருவ மத்தியில் நிலைநிறுத்த வேண்டும்.** அங்கிருந்து உட்சென்று, அகம் நோக்கி, ஆழ்ந்து **உண்மையை ஆராய வேண்டும்!** -

உண்மை என்றாலே அது கடவுளைத் தான் குறிக்கும்!

**"உண்மை"** என்ற சொல் **உள் + மெய்** என் பிரிந்து பொருள் தரும்; மெய் என்றால் மெய்ப்பொருளாகிய இறைவனைக் குறிக்கும்! சத்தியமாகிய அந்த மெய்ப்பொருள் உள்ளுக்கு உள்ளாய், யாவற்றிற்கும் **அகத்தில்** உள்ளது!

அந்த **அகநிலையை** அறிந்துக் கொள்ளாதவரைக்கும், நாம் புறவாழ்விலே விருப்பு வெறுப்புகளினால் **பக்குவப்படுத்தப்பட்டுக்** கொண்டிருக்கின்றோம் என்பதுதான் உண்மை!

நமது, **ஆன்ம அக நிலையை** உணராதவரைக்கும், உலக வாழ்விலே, அமைதியைக் காணமுடியாது!

**உண்மையும், அமைதியும், ஆனந்தமும்** வேண்டுமெனில், முதலில், **"நான் யார்"?** என்ற விசாரணையில் மூழ்க வேண்டும்!

**தன்னை அறிய தனக்கு ஒரு கேடில்லை;தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்** என்பது திருமூலர் வாக்கு!

நம் வள்ளலாரும், **தன்னை அறிந்தால் இன்பம் உறலாம்** என்கின்றார்!

இந்த பொய்யுடலையே நான் என எண்ணி பிழைத்துக் கொண்டிருத்தல் சரியல்ல! **உடலே நான்** என்கின்ற தவறான அபிப்ராயத்தைக் கைவிட வேண்டியது மிக மிக அவசியம்!

அடுத்து, நம்மை, தொல்லைப்படுத்தும் இழி மனத்தை கடந்து செல்ல வேண்டியது அதைவிட முக்கியம்!

அதற்குத்தான், நம் வள்ளற்பெருமான் ஒரு வழி சொல்கின்றார்;-

**மனதை எப்போதும் சிற்சபைக் கண்ணே செலுத்த வேண்டும்** என்பதே அந்த மகா உபதேச மொழியாகும்;

**"சிற்சபை என்பது நமது ஆன்மாவே ஆகும்!"** இந்த சிற்சபைக்குள் அனாதி காலமாக இருந்துக்கொண்டு, நம்மையும் உடன் கொண்டு, ஆனந்த அருள்ஞானத் திருநடனம் புரிந்துக்கொண்டிருக்கின்றார், நமது அருட்ஜோதி தந்தையார்! கவலைப்பட வேண்டாம்!

**நாம் இந்த தேகமல்ல! மனமல்ல! அறிவாகாயமாய், ஆனந்த வடிவமாய் உள்ளே உள்ளோம்** - நமக்கு எக்காலும் அழிவில்லை;

ஒரு குறையும் நேராது; அவா மாசறுத்து, அவரோடு நம்மை கூட்டி, நித்தியமாய் வாழ வைப்பார்! இது சத்தியம்! **அஞ்ச வேண்டாம்; திருத்திடுவோம்** என அருட்பெருஞ்ஜோதியாகவே இருந்து பேராறுதல் கூறியுள்ளார் வள்ளலார்!

நாம் செய்ய வேண்டியதெல்லாம், **புருவமத்தியில் தங்கியிருந்து கொண்டு விசாரம் செய்தல் வேண்டும்.**

இந்த விசாரத்தின் பலனாக, முதலில் நம்மை **ஓர் நித்திய இருப்புணர்வு கொண்ட ஆகாசமாக (சிற்றம்பலமாக) நம்மை நாம் உணர்ந்துக்கொள்ளலாம்!** -

அடுத்தபடியாக, அந்த சிற்றம்பலம் என்கின்ற சிற்சபைக்கு உள்ளே விளங்குகின்ற, **"அருள்ஒளியை"** அறிய முயன்றுகொண்டு இருப்போமாக!

**ஆன்ம அறிவே, சுத்த மனமாய் விளங்கி, உள்ளிருக்கும் அருட் ஜோதியை காட்டி, கூட்டி வைத்திடும்** என்பது வள்ளலார் நமக்கு கொடுக்கும் உறுதி மொழி!

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க! வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!!**

## 8 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை "உணர்வும் மனிதனும்"

"உணர்வு" என்றாலும் "அறிவு" என்றாலும் ஒன்றேதான்!

இந்த மனித உடலில் என்னென்ன உணர்வு நிலைகள் அல்லது அறிவு நிலைகள் உள்ளன?

பார்த்தல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல், தொடுதல் ஆகிய ஐந்து உணர்வுகள் இந்த மாமிச உடலில் உண்டாகின்றன; இதையே, **ஐம்புலன் உணர்வுகள்** என்கின்றோம்!

**இந்த ஐம்புலன் உணர்வுகளும் மனிதனுக்கு எங்கே அனுபவமாகின்றது?** என்பதுதான் இரகசியமாக உள்ளது!

விஞ்ஞானிகள் நாம் அனுபவிக்கும் புலன் இன்பத்தைத் பற்றியும், அது செயல்படுகின்ற விதம் பற்றியும் மருத்துவத் துறையில்

நூறாண்டுகளுக்கும் மேலாக கடின ஆய்வுகள் செய்து பல உண்மைகளை வெளியாக்கி யுள்ளனர்!

அதிலே பார்த்தல் என்கின்ற உணர்வை எடுத்துக்கொள்வோம்;

"நாம் பார்க்கின்றோம்" என்றால், இரண்டு பொருள் முக்கியம்; அது ஒன்று கண், மற்றொன்று ஒளி! ஒரு மரத்தை அல்லது ஒரு வடிவத்தை பார்க்கின்றோம்! உடனே அது நம் கண்ணுக்கு தெரிந்துவிடுகிறது என நினைக்கின்றோம்! அது தவறு என்கின்றது விஞ்ஞானம்!

உண்மையில் மரத்துக்கும் கண்ணுக்கும் எந்த தொடர்பும் இல்லை; ஒளி தான் தொடர்பை உண்டாக்குகின்றது; சூரியனிடத்திருந்து வருகின்ற ஒளிக்கதிர்களில் கோடிக்கணக்கான "ஃபோட்டான்கள்" என்கின்ற ஒளித்துகள்கள் நிறைந்திருக்கின்றன; அந்த ஒளித்துகள்கள் நாம் பார்க்கும் பொருள்கள் மீது பட்டு பிரதிபலித்து, நமது கண்ணில் உள்ள குவி லென்சின் மீது படுகின்றது; சூரிய ஒளியிலுள்ள ஃபோட்டான்ஸ்கள் பொருள்கள் மீது பட்டு பிரதிபலிக்கும் போது, அந்த பொருளின் நிறம், வடிவம், தூரம், அசைவு எல்லாவற்றையும் உணர்த்தக்கூடியதாய் உள்ளது!

ஒளியானது கண் லென்ஸுல் குவிந்து விழுந்த பிறகு, கண்ணுக்கும் பின்னால் உள்ள "ஒளியுணர் கூம்புகள்" மூலமும், பார்வை நரம்புகள் மூலமும், அது மின்சார சமிங்ஞையாக **(electrical signal)** சிக்னலாக மாற்றம் பெற்று, நியூரான்கள் எனப்படும் பெருமூளைத் திசுக்களை வந்தடைகின்றன;

அதாவது தகவலாகத்தான் மூளையை வந்தடைய, பெருமூளையில்தான் நாம் காணும் பொருளை உணர்கின்றோம்!

அடுத்து, சுவையுணர்வை பார்ப்போம்! ஒரு லட்டு ஒன்றை சுவைக்கின்றோம் என வைத்துக்கொள்வோம்; லட்டு வேறு, சுவை வேறு அல்ல! லட்டை கண்ணால் காண்கின்றோம்; அதன் சுவையை நாவால் உணர்கின்றோம்; அறு வகை சுவைகளை சுவைக்கும்போது நாக்கிலே இன்பமாக இருப்பதாக நினைக்கின்றோம்! அது தவறு என்கின்றது விஞ்ஞானம்; நாக்கில் அறு சுவையை உணரக்கூடிய சிறப்புத் திசுக்கள் **(buds cells)** இருக்கின்றதாம்; இவைகள் இந்த பொருள் இந்த சுவையில் இருக்கின்றது என்பதை செய்தியாக, மின்சார சமிங்ஞையாக **(chemical reactions & electrical signal)** உணர்வு

நரம்புகள் வழியாக, பெருமூளையை வந்தடைகின்றதாம்! மூளையில் நாம் அந்த செய்தியை **இன்பமாக** உணர்கின்றோம்!

இதே போலத்தான் மற்ற கேட்டல், நுகர்தல், தொடுதல் எல்லாமும் மின்சார சிக்னலாக அல்லது செய்தியாக, சூக்கும நிலையாக மூளையில் உணர்கின்றோம்!

இப்பொழுது உண்மையை ஆராய்வோம்!

**ஏன் எல்லா ஐம்புலன் உணர்வுகளும்,மண்டைக்குள் இருக்கும் மூளைக்கு, கீழிருந்து மேலாக, செய்தியாக கடத்தி வரப்படுகின்றது?**

இதற்குக் காரணம் என்ன?

என்றால், **அனுபவிக்கின்ற ஆள் தலைநடுவேதான் இருக்கின்றான்!**

உண்மையில் அவனை கண்ணால் காணமுடியாது! அவன்தான், **உண்மை உணர்வு அல்லது உண்மை அறிவு ஆக உள்ளே உள்ளான்; அவன் அணு மாத்திரமானவன்; அவனையே "ஆன்மா " என்கின்றோம்.**

**இந்த ஆன்மாதான் மனிதனுடைய உண்மை வடிவம்! இதை ஆக்கவோ அழிக்கவோ முடியாது! இது உண்மையில் பிறப்பு இறப்பு இல்லாது! இது ஆனந்தமே வடிவமானது!**

என்றாலும் இயற்கையில் உள்ள அஞ்ஞானம் (அறியாமை) என்கின்ற பாசாந்தகார இருளில் அடைப்பட்டுக்கிடக்கின்றது, அனாதி காலமாக!

இந்த ஆன்மாவிற்கு உள்ளே **உள்ளொளியாக** கடவுள் என்றும் இருந்துக்கொண்டு, அஞ்ஞான இருளை நீக்கி, என்றும் அழியாத, **நித்திய நிலையான சத்திய சுகபூரண சச்சிதானந்த பேரின்பப் பெருவாழ்வு** வழங்கவே, ஆன்மாவைச் சூழ உயிர், உடலை ஆக்குவதும், வாழ்விப்பதும், பின் அழிப்பதுமாய் உள்ளார்;

புற உலக வாழ்வால், அறிவு அனுபவம், சிறிது சிறிதாக வளர்ந்து வளர்ந்து, இதற்காக கோடிக்கணக்கான பிறவிகளில், கோடிக்கணக்கான காலங்கள் கழித்து, இன்றைய நிலையில் இப்போது,

இந்த மனித தேகம், திருவருட் பெருங்கருணையினால் வாய்க்கப் பெற்றுள்ளோம்!

இதுவரையில் நாம் அனுபவித்த இன்ப துன்பங்கள் யாவும் பொய் மாயா இருளிலே நிகழ்ந்து, இனி அவை எல்லாம் நம்மை விட்டு அகன்று ஒழிய, **உண்மை இன்பத்தை, அருட் சுகத்தை அளிக்க ஆண்டவர் அருள்பாலிக்கின்றார்! -**

**மெய் அகத்தே விரைந்து வம்மின் இங்கே நித்திய மெய் வாழ்வு பெற்றிடலாம் கண்டீர்!** என, வருக வருக என்றழைக்கின்றார் நம் வள்ளற் பெருமான்!

திருமூலர் திருமந்திரத்தில் ஒரு செய்யுள்;-

**கண் நாக்கு மூக்கு செவி ஞானக் கூட்டத்துள்,**
**பண் ஆக்கி நின்ற பழம் பொருள் ஒன்றுண்டு,**
**அண்ணாக்கு மேலே அகண்ட ஒளி காட்டி,**
**பெண் ஆக்கி நம்மை பிழைப்பித்த வாறே** என்கின்றார்!

கண், நாக்கு, மூக்கு, செவி, தோல் ஆகிய ஐம்புலன்களும், தலையில், **இந்திரிய ஆகாசமாக** விளங்குகின்றது!

அதற்கு உள்ளே, **கரண ஆகாசமாகிய மனோ வெளி** விளங்குகின்றது. அதற்கு அப்பால், **ஜீவ ஆகாசமாகிய உயிர் வெளி** இயங்குகின்றது! அதற்கு அப்பால், அணுத்துவமான, **ஆன்ம ஆகாசம்** விளங்குகின்றது! இந்த ஆன்ம ஆகாசத்திற்கு உள்ளே தான், **பழம் பொருள் ஆகிய அருள் ஒளி** அனாதி காலமாய் ஐஞ்சக்தி ஐஞ்செயலோடு சதா சுடர் விட்டுக்கொண்டே இருக்கின்றது! இந்த அருள் ஒளி உணர்வே, **அருட்சக்தியாம் பெண்** என குறிப்பிடுகின்றார்! **இயற்கை உண்மையாகிய, சத்துப் பொருளாம், அன்புக் கடவுளுக்கு, இயற்கை விளக்கமாகிய, சித்தாம், அருள் உணர்வே, அருட்சக்தியாம், பெண்ணாக, அதுவே நாமாக, நமது உண்மையாக இருந்து, இயற்கை இன்பமாம் பேரின்பப் பெருவாழ்வே நமது குறிக்கோள் வாழ்வாக உள்ளதாம் -**

**தயவே கடவுள்! தயவுடன் வாழ்க!!**

# 9-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**அகமறியீர்!அனகம் அறிந்து, அழியாத ஞான அமுத வடிவம் பெறலாம்! வம்மின் இங்கே! என அழைக்கின்றார் வள்ளலார். அகம் இருந்து அனகம் உறுதல் என்றால் என்ன?**

“**அனகமுறுதல்**” என்றால் என்ன**?**

மனிதனுக்கு, “**அகம், புறம்**” என்ற இரு நிலைகள் உண்டு.

“**அகம்**” என்பது நமது “**அருட்ஜோதி ஆன்ம நிலையாகும்** ”. இது தலைநடுவே, அருவமான - சிற்றணு நிலையாகும்!

என்றாலும், எல்லையற்ற, பரந்த அகண்டாகாச வான் பெருவெளி முற்றும் இந்த சிற்றணுவில் அடங்கியுள்ளதாம்!

அதனாலே இது “**அகண்டாகாச நிறைவிலே சிற்றணுவான ஆன்மா**” எனப்படுகின்றதாம்.

இயற்கை உண்மையும், இயற்கை விளக்கமும், இயற்கை இன்பமும் நிறைவானது.

அதாவது, சத்து - சித்து - ஆனந்த வண்ணமானது!

இந்த ஆன்மா, தன்னைத்தானே உணர்த்துவதும், தன்னைத்தானே உணர்ந்துக்கொள்வதுமான அருட்ஜோதி அணுவாக உள்ளது!

அதாவது, நாம் ஆன்ம அறிவாக இருக்க, அந்த அறிவுக்கு அறிவாக இருப்பவர் இறைவன். அதாவது, ஆன்மாவுக்குள் உள்ளொளியாக, அருள் ஒளியாக இருந்து, ஐஞ்சக்தி - ஐந்தொழில் அருள்நடம் புரிந்துக் கொண்டிருக்கின்றார் அனாதி காலமாக!

இப்போது, **அனகம்** என்பது என்ன என்று ஆராய்வோம்.

இங்கு, அருட்பெருஞ்ஜோதி அகவல் அடி ஒன்றை குறிப்பிட வேண்டி இருக்கின்றது;-

“உருவமும் அருவமும் உபயமுமாகிய அருள் நிலை தெரித்த அருட்பெருஞ்ஜோதி” என்கின்றார் வள்ளலார். அதாவது, அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று நிலையாக, உள்ளிருந்து வெளிப்பட்டு, என்றும் அழியாத இறைமனிதனாக, விளங்கிக் கொண்டிருத்தல் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவுள்ளம்!

நம் தலைநடு விளங்கும் அருட் ஜோதி - கடவுளான்ம அணுவே, அருவ நிலையில் இருக்கும் “அகநிலை” ஆகும். இதுவே, நம் ஆதிமூல நிலை!

இந்த ஆன்ம அக அருவ அருள் நிலையிலிருந்து, ஆண்டவர், தன் அநந்யமான ஜோதி நிலையை, புறத்தே விரிக்கின்றார்!

உள்ளே, அருள் உணர்விலிருந்து, விரிகின்றன ஜோதியே, புறநிலையில், நமது உயிராக, மனமாக, உடலாக விளங்குகின்றது.

இதுவே, அகமிருந்து விரிந்த அனக நிலை ஆகும்! இந்த அனக நிலை, தற்போது கடவுளுக்கு மாத்திரமே அனுபவம்! ஆன்ம அக நிலையையே அறியாத நமக்கு, அனக நிலையைப் பற்றி என்ன தெரியும்?

முதலில், நாம் “தேகமே நான்” என்ற பொய் மாயா உணர்வு நிலையை கடந்து, சதா நினைப்பு மறப்பு கொண்டு நம்மை அலைக்கழிக்கும் மன உணர்வையும், ஜீவ உணர்வையும் கடந்து, ஆன்ம அறிவாகிய, உண்மை அறிவு நிலைக்கு வந்து நிற்றல் வேண்டும்;

அந்த ஆன்ம அறிவைக் கொண்டு, உள்ள நெகிழ்ச்சியால், உள்ளிருக்கும், “திருவருளை” அறியாது அறிந்து, உணராது உணர்ந்து, கலவாது கலந்து, அகநிலை பொருந்தி நிற்றல் வேண்டும்!

பின்பு, நமக்குள் நாமாய், விளங்கும் அருளே தனது ஜோதியை புறத்தே விரித்து, நமது உயிராய், மனமாய், உடலாய், சூழ்நிலையாய் விளங்குவதை, உள்ளபடி உணர்ந்து நிற்றலே **அனக நிலையாகும்**!

இந்த அனக நிலையை அறிந்துக்கொண்டு, நமது சிந்தனையும், சொல்லும், செயலும் அகமிருந்து அனகமாக வெளிப்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்தால் மனிதனுக்கு மரணமில்லா பெருவாழ்வு உண்டாகும் என்கின்றார் வள்ளல் பிரான்!

இதுவே **சுத்த சன்மார்க்கம் காட்டும் இறவாத அனக நிலைப் பேரின்பப் பெருவாழ்வு ஆகும்**! இந்த விளக்கத்தை தெரிவிப்பது, திண்டுக்கல், சுவாமி தயாநிதி சரவணானந்தா ஆவார்! தயவே கடவுள்! தயவுடன் வாழ்க!!

# 10-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# கடவுளின் பெருவடிவும் சிறுவடிவும்!

கடவுளுக்கு பெருவடிவு எது? அது எங்கே, எப்படி இருக்கின்றது? இது குறித்து விரிவான முறையில் விளக்கம் பெற வேண்டியிருக்கின்றது.

இந்த உலகம், அதாவது மாபிரபஞ்சம், 17000 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருக்கலாம் என விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்பு, என்ன இருந்தது?

ஒன்றுமே இல்லை! வெறும் **சூன்யவெளி** மட்டுமே இருந்தது. அதாவது **வெற்று இடம்** மாத்திரமே இருந்தது. அந்த வெற்றிடத்தில் எதாவது இருந்ததா?

இக் கேள்விக்கு கிடைக்கும் பதில், மெய்ஞ்ஞானியர் தனது சத்திய மெய்ஞ்ஞானத்தால் கண்ட உண்மை, என்னவெனில், அந்த அகண்டமான, எங்கும் முடியாத, எங்கெங்கும் நிறைந்த அந்த இருள் மயமான, வெறுவெளியில், **அன்புமயமான ஓர் இருப்பு, தன்னந்தனியாய், தான் ஒருவராய் மட்டும்** அருவ நிலையில், தோற்றக்கேடின்றி, காலம் தூரம் முதலிய தத்துவங்கள் கடந்தவராய், இயற்கையாய், என்றென்றுமாய் எங்கெங்குமாய் இருந்து க்கொண்டிருந்தது!

அதனையே, வள்ளற்பெருமான், **இயற்கை உண்மை என்கின்ற சத்துப் பொருள்** எனக் குறிப்பிடுகின்றார்!

இப்படி அந்த **"மெய்ப்பொருளாகிய கடவுள், இயற்கையிலே இருப்பது அற்புதத்திலும் அற்புதம்! வியப்பிலும் பெரு வியப்பு!"**

அப்படி அந்த எல்லையில்லாத அகண்ட பெருவெளியில் இருப்பதுதான் கடவுளின் **பெரு வடிவம்** ஆகும்!

இப்போது கேள்வி என்னவென்றால், அவர் ஏன் இந்த பிரபஞ்சத்தை தோற்றுவித்து, இதில் அனேகங்கோடி கோடி உயிரினங்களையும், மனிதர்களையும் உண்டாக்கி வாழ்விலே இன்ப துன்பங்களை அனுபவிக்கும்படிச் செய்துக்கொண்டிருக்கின்றார்?

உலக வாழ்விலே மனித இனம் அனுபவிக்கின்ற துன்பங்களை ஏட்டிலே எழுத முடியுமா? இது என்ன கடவுளுடைய திருவிளையாடலா? இப்படியான கேள்வி காலங்காலமாய், அறிஞர்கள் உள்ளத்திலே கேட்கப்பட்டு தான் வருகின்றது. சரியான பதிலைத் தான் எந்த மதமும், சமயமும், மார்க்கங்களும் கூற முடியாமல் திகைக்கின்றன!

வள்ளலார் வழங்கிய சுத்த சன்மார்க்கத்தில்தான் இப்போது உண்மை அறியப்படுகின்றது.

அந்த உண்மைதான் என்ன? இயற்கை உண்மையாகிய கடவுள் மூன்று விதமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றாராம். அதுவே, **இயற்கை உண்மை - இயற்கை விளக்கம் - இயற்கை இன்பம்** என்பதாகும். அப்படி விளங்குதல் அவருக்கு இயற்கையாய் உள்ளதாம். அதாவது, இதையே, **அன்பு - அருள் - இன்பம்** -என கூறுகின்றார் வள்ளலார்!

இப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன், இயற்கை விளக்கமும், இயற்கை இன்பமும் அதாவது அருளும் ஆனந்தமும், **இயற்கை உண்மையாகிய அன்பு இருப்பிலே, ஒடுங்கிக்கிடந்ததாம்.**

எப்படியும், அந்த அருளும், ஆனந்த அனுபவமும் அனுப்பப்பட்டாக வேண்டிய நியதி இருந்து வந்தது. எனவே, "**தன்னைத்தானே அனுபவிக்க வேண்டியிருந்தது.**"

அப்படி தன்னைத்தானே அனுபவிக்க, அவரே தன் அருளால், அனேகங்கோடி கோடி **அறிவு அணுக்களாய்** இயற்கையிலேயே தோற்றங்கொண்டிருந்தார். அந்த அறிவு அணுக்களே **ஆன்மாக்கள்** எனப்படுகின்றது.

இந்த ஆன்மாக்கள், ஒவ்வொன்றுமே, "**கடவுளுடைய சிறு வடிவமாகும்**"!! "**சிறுவடிவம்**" என்றால், வடிவம்தான், அணுத்துவமானதே யொழிய, அது அகண்டாகாச வெளியில் நிறைந்துள்ள முழு இயற்கையுண்மையையும் பூரணமாக தன் அகத்தே கொண்டதாய் விளங்குவதாகும்!

எனவேதான் இது, "**அகண்டாகாச நிறைவிலே சிற்றணுவான ஆன்மா**" எனப்பட்டது. இந்த ஆன்மாவிற்குள் கடவுளே **தனிப்பெருங்கருணை** வண்ணமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

எனினும், இந்த ஆன்மாக்கள், இயற்கையிலே அறிவு விளக்கமின்றி, அஞ்ஞானம் என்கின்ற பாசாந்தகார இருளில், தன்னை அறியாது, “**ஆணவம்**” என்கின்ற மலத்தால் கட்டுண்டு கிடந்தன.

இந்த இயற்கையான ஆணவ மலத்தை நீக்கிக் கொண்டு, “**என்றென்றும் அருள் இயற்கை இன்பானுபவத்தில்**” திகழ திருவுளம் கொண்டார்.

இந்த ஆணவ மலத்தை நீக்க, இயற்கையில் செயற்கையாகிய மாயா மலத்தையும், செயற்கையாகிய கன்ம மலத்தையும் சேர்க்க வேண்டியிருந்தது. அதற்காகவே இப் பிரபஞ்சத்தை தன் அருளால் அகமிருந்து விரித்து, ஆன்மாக்களை பூத பௌதிக பிண்ட உடலில் வரவழைத்து, புறமிருந்து சிறிது சிறிதாக அறிவு அனுபவத்தை ஏற்படுத்துகின்றார்.

முதலில், ஓரறிவு தாவரவர்க்கம் தொடங்கி, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு என கோடிக்கணக்கான தேகங்களில் எல்லாம் செலுத்தி செலுத்தி, புற இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்து, பிறகு, ஆறறிவாகிய மனிதப்பிறப்பில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மன அறிவை பக்குவப்பட வைத்து, இப்பொழுதுதான், தன்னைத்தானே உணருகின்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இந்த உண்மையை சுத்த சன்மார்க்கத்தின் மூலம் இப்பொழுது அறிகின்றோம்.

இனி, ஆன்ம அறிவைக் கொண்டு, அருள் உண்மையை அறிந்துக்கொண்டு, ஆணவம், மாயை, கன்ம மலம் எல்லாம் திருவருளின் மாற்றத் தோற்றமே எனக்கண்டு, அதுவே இப்பொழுது சுத்த சன்மார்க்கத்தில் **ஞான தேகமாகவும், பிரணவ தேகமாகவும், சுத்த தேகமாகவும்** - ஆக்கப்பெற்று எல்லையில்லாத நெடுங்காலமும் அருட் பெருஞ்சுகத்தை அனுபவித்துக்கொண்டே இருக்க ஆணை செய்யப்பட்டுள்ளோம். இந்த விளக்கங்களை நமக்கு வழங்கியவர், திண்டுக்கல் சுவாமி, தயாநிதி சரவணானந்தா அவர்கள்! தயவே கடவுள்! தயவுடன் வாழ்க!!

**அருட்பெருஞ்ஜோதி**
**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**
**அருட்பெருஞ்ஜோதி**

**தயவு**

# 11- தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# “தெய்வத்தின் உண்மையை உணர்த்தும் தெய்வீக எண்கள்”

**ஒன்று-இரண்டு-மூன்று**

1-2-3-4-5-6-7-8-9-10

இந்த எண்கள் ஒவ்வொன்றும் ஆன்மாவைப் பற்றிய உண்மைகளையும், கடவுளைப் பற்றிய உண்மைகளையும் நமக்கு தெரிவிக்கின்றன. அது என்னவென்று ஆராய்வோம்.

“1”

**ஒன்று** - ஒன்று என்பது **one** எண்ணிக்கையை குறிக்கின்றது.

அது மட்டுமில்லாமல், **ஒன்றான கடவுள் இருப்பை** குறிக்கின்றது.

அதாவது, **இருப்பது கடவுள் ஒருவரே, அவரே அருட்பெருஞ்ஜோதியர், அவரே தன் அருளால், யாவுமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றார்** - என்ற உண்மையை உணர்த்துகின்றது, இந்த ஒன்று என்ற சொல்.

இதைத்தான், வள்ளலார், **ஒன்று எனக் காணும் உணர்ச்சி என்று உறுமோ** - என இறைவனிடம் வேண்டுகின்றார்.

பட்டினத்தடிகளும்,

**ஒன்று என்றிரு; தெய்வம் உண்டு என்றிரு** - என்று உபதேசிக்கின்றார்.

மேலும், இந்த ஒன்று என்ற சொல், மனிதனுக்கு கடவுள் இடுகின்ற கட்டளையாக, அதாவது, **என்னிடத்தில் வந்து ஒன்றுவாயாக! -** என ஆசீர்வதிப்பதாதவும் இருக்கின்றது.

அடுத்து,

“2”

**இரண்டு** - இரண்டு, என்பது, ஒன்றாகிய கடவுளே அனுபவத்தின் பொருட்டு, **சக்தியும் சிவமுமாக** அம்மையும் அப்பனுமாக விளங்குகின்றார். அதாவது, இவ்வுலகில், இருப்பது, **கடவுளும் அவருடைய அருளும் அன்றி வேறில்லை! -** என்பதாகும்.

இதையே வள்ளுவர், **அன்பும் அறனும்** உடைத்தாயின் இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது, என்றார்.

மேலும், **அருட்பெருஞ்ஜோதியாகிய ஆண்டவர், அகம் புறம்** என்ற இரு நிலை கொண்டவராக விளங்குவதையும், இந்த இரண்டு என்ற சொல் விளக்குகின்றது.

அகநிலை ஆண்டவருடைய அருளாகவும்,புறநிலை ஆண்டவருடைய பெருஞ்ஜோதியான இந்த பிரபஞ்சத்தையும் குறிக்கின்றது.

அடுத்து,

## "3"

**மூன்று** - என்ற சொல் எதைக் குறிக்கின்றது?

இறைவன், **சத்து சித்து ஆனந்தமாக** - அதாவது, **சச்சிதானந்தமாக** - விளங்குகின்ற நிலையைக் குறிக்கின்றது.

இதையே, வள்ளலார், **இயற்கை உண்மை - இயற்கை விளக்கம் - இயற்கை இன்பம்** என, ஒன்றான கடவுள் மூவிதமாய் விளங்குவதாக குறிப்பிடுகின்றார்.

-அதாவது ஆண்டவர்,

**அன்பு இருப்பு - அருள் உணர்வு - ஆனந்த அனுபவம்** - ஆக மூவித நிலையாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

மேலும், இந்த மூன்று என்ற எண் "**அருட்பெருஞ்ஜோதியாகிய தனித்தலைமைக் கடவுளின் மூவியலைக்**" குறிக்கின்றது.

அதாவது, கடவுள்,

**"எல்லாம் வல்லவராக"**

**"எல்லாம் உடையவராக"**

**"எல்லாம் ஆனவராக"**

மூவியல் கொண்டு விளங்குகின்றார்!

மேலும், இந்த மூன்று என்ற எண் ஆன்மாவின்

"**மும்மல பாசத்தைக்**" குறிக்கின்றது.

-அந்த மும்மலங்களாவன;-

**“ஆணவம் - மாயை - கன்மம்”!!!**

மேலும் இந்த மூன்று,

மனிதனுக்கு உள்ள மூன்று உடலைக் குறிக்கின்றது! அதாவது,

**“தூல சரீரம்-சூக்குமசரீரம்-காரண சரீரம்”**

**(உடல் - உயிர் - ஆன்மா)**

ஆகிய மூன்று உடல் கொண்ட ஒருவனே முழு மனிதன் ஆவான்.

மும்மலங்கள் சம்பந்தப்பட்ட இந்த மூன்று உடலும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளால், அருட் பிரகாச வள்ளலார் மூலம் தோற்றுவிக்கப்பட்ட சுத்த சன்மார்க்க-அருட்பெருநெறியில் பயிலும் **“அருட் பக்குவ மனிதனுக்கு”**

**தூல உடம்பே -“சுத்த பொன்னொளி தேகமாகவும்”**

**சூக்கும உடம்பே -“ஓங்கார பிரணவ தேகமாகவும்”**

**காரண உடம்பே -“எங்கும் நிறைந்த ஞானதேகமாகவும்”** மாற்றமடைந்து, எத்தனை கோடி கோடி ஆண்டுகள் ஆனாலும் அழியாத **“முத்தேக சித்தியாக”** விளங்குகின்றதாம்.

முத்தேக சித்தி பெற்ற முதல் மனிதர் சிதம்பரம் இராமலிங்க அடிகளாவார். அடுத்து,

**“4”**

**நான்கு** - நான்கு பக்கங்களைக் கொண்டது சதுரம் ஆகும். இறைவன், எல்லாம் வல்ல, எல்லாம் உடைய, எல்லாம் ஆன இயல்புடன் **சதுரர்** ஆக திகழ்கின்ற விதத்தைக் குறிக்கின்றது.

மேலும், கடவுள், அண்டத்திலும் பிண்டத்திலும் (உடல்) விளங்குகின்ற **நான்கு** இடத்திலும் பூரணமாக நிறைந்து விளங்குகின்றதை குறிக்கின்றது.

அதாவது **அகம், அகப்புறம், புறம், புறப்புறம்** ஆகிய நான்கு நிலைகள், அண்டத்திலும் உண்டு! பிண்டத்திலும் உண்டு!

பிண்டமாகிய இந்த உடலில், **அகம் - ஆன்மா, அகப்புறம் - ஜீவன், புறம் - மனம், புறப்புறம் - ஐம்புலன்கள்** ஆகும்.

அண்டமாகிய வானிலே, **அகம் - அக்கினி, அகப்புறம் - சூரியன், புறம் - சந்திரன், புறப்புறம் - நட்சத்திரங்கள்** ஆகும்.

ஆக, அண்டத்திலும் பிண்டத்திலும் உள்ள **நான்கு** இடத்திலும் **கடவுட் பிரகாசம்** நிறைந்துள்ளது என்கின்றார் வள்ளலார். அடுத்து

**"5"**

**ஐந்து -** என்ற சொல் எதைக் குறிக்கின்றது**?**

ஆண்டவர் **ஆன்மா ஆகிய சிற்றம்பலமாகிய, சிற்சபையில் இருந்துக்கொண்டு** புரிகின்ற அருள்ஞானத் திருநடனத்தைக் குறிக்கின்றது.

இறைவன், தனது **ஐஞ்சக்தி** யைக் கொண்டு (பொருட்சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, யோகசக்தி, அருட்சக்தி) சதா **ஐந்தொழில்** (ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) இன்பத் திருநடனம் புரிந்துக் கொண்டிருக்கின்றார்! அடுத்து

**"6"**

**ஆறு -** ஆறு என்ற சொல் **வழி, சாலை, மார்க்கம்** என்ற பொருளைத் தருகின்றது.

இறைவனுக்கு, வழி என்பது **அருளே** ஆகும்.

நானே **சத்தியமும், வழியும், ஜீவனுமாய்** இருக்கின்றேன் என்பது பைபிள் வாசகம்.

சுத்த சன்மார்க்கத்தில், ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடாக, நாம் செல்லும் வழியாக, **ஆறு** ஆக, உள்ளதாம்

மேலும், ஆன்மா ஆகிய கடவுள் பிள்ளைக்கு **ஆறு முகம்** உள்ளதாம். அதாவது, பார்த்தல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல், ஸ்பரிசித்தல் முதலான ஐம்புலன் அறிவுகளும் **ஆறாவதாக -** மன அறிவும் கொண்டதாக விளங்குகின்றதாம். இதையே, கந்தப்பெருமானுக்கு **ஆறு முகம்** உள்ளதாக, தத்துவார்த்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், அருட்பெருஞ்ஜோதி ஆகிய ஆண்டவருடைய பெயரும் **ஆறு அசை (அ - ருட் - பெ - ருஞ் - ஜோ - தி)** கொண்டதாக உள்ளதாம். அடுத்து

"7"

**ஏழு** - என்ற எண், ஆறாவது மன அறிவுக்கு அப்பால் விளங்குகின்ற, ஏழாவது

**மெய்ஞ்ஞானத்தை,** மெய்யறிவைக் குறிக்கின்றதாகும். இந்த அறிவே **அருள் அறிவு** ஆகும்.

மேலும், இந்த மெய்ஞ்ஞானம்,ஆறு ஆதாரங்களைக் கடந்த

(மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை) ஏழாவது **நிராதாரத்தில்** விளங்குகின்றதாம். இந்த ஏழாவது நிராதாரநிலையே **பிரமரந்திரம் அல்லது சகஸ்ரகாரம்** எனப்படும். அடுத்து

"8"

**எட்டு** என்ற சொல் எதைக் குறிக்கின்றது? கடவுளை **எட்டு குணம் உடையவன், எண்குணத்தான்** எனக் குறிக்கப்படுகின்றார்.

அந்த எட்டு குணங்கள் என்ன? அவை, தன்வயத்தனாதல், தூய உடம்பினன், முற்றும் உணர்தல், இயற்கை உணர்வினன், இயல்பாகவே பாசங்களினின்று நீக்குதல், பேரருளுடைமை, முடிவில்லாத ஆற்றல் உடைமை, வரம்பு இல்லாத இன்பம் உடைமை ஆகும். இறைவன் எண்குணத்தான் ஆகையினாலே, வள்ளற்பெருமான், வடலூர் சத்திய ஞான சபையை **எண்கோண** வடிவில் கட்டியுள்ளார். அடுத்து

"9"

**ஒன்பது** இந்த எண் எதைக் குறிக்கின்றது?

ஒன்பது என்றால் **நவம்** என்பதாகும். நவம் என்றால் **எப்போதும் புதியதாக புதுமையாக இருக்கும் இறைநிலையை** குறிப்பதாகும். அடுத்து

"10"

**பத்து** இது ஆன்மாவைக் குறிக்கின்றது.

சைவ சித்தாந்தத்திலே, ஆன்மாவை பத்து என்ற எண்ணால் குறித்துள்ளார்.

பத்து என்ற எண்ணை தமிழில் **க0** என குறிப்பர். இதை ஒரே எழுத்தில். **ய** என குறிக்கப்படுகின்றது. **ய** என்கின்ற பத்தாகிய **கடவுளான்மா** நம் தலைநடுவே **தயவுச்சுடராய்** திகழ்கின்றது.

இதுவே அருட்ஜோதியாகிய அணு. இது எட்டும் இரண்டும் சேர்ந்த பத்தாக விளங்குகின்றது. இதுதான் **கடவுளாகவும் நாமாகவும், பொதுவாக விளங்குகின்றதாம் .**

இதைத்தான், வள்ளலார் - **எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணவும் அறியீர், எத்துணைக் கொள்கின்றீர், பித்துலகீரே** என்கின்றார்!

எண்குணத்தான் ஆகிய கடவுளை இரண்டாகிய சுத்த மனத்தால் எண்ணி எண்ணி(நினைந்து நினைந்து) அவரோடு கலந்து, ஒன்றாகி **பத்தாகிய அருட்ஜோதி கடவுளான்மாவாக** நிற்றலே எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணுதலாகும்.

இதைத்தான் **தை பிறந்தால் வழி பிறக்கும்** என்ற பழமொழி உணர்த்துகின்றது. தமிழ் மாதத்திலே தைமாதம் **பத்தாவதாக** வருகின்றது.

"தை பிறத்தல்" என்பது நாம் மேல் நிலையில் **கடவுள் - ஆன்மாவாக பிறத்தலையே** குறிக்கின்றது.

இதைத்தான் ஏசுபிரான்,

**ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் என மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கின்றேன்** என உபதேசித்தார்.

இந்த விளக்கங்களை நமக்கு தயவோடு அருளியவர்,திண்டுக்கல் சுவாமி, தயாநிதி சரவணானந்தா அவர்கள்.

அகமிருந்து வருக அருளுடன்!

அனகமாக வாழ்க தயவுடன்!!

## 12- தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

## திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உள்ளொளித் தியானம்

(பயம், மனக்கவலை, பிரச்சனைகள், தீராப்பிணி - சகல துன்பங்களையும் தீமைகளையும் நீக்கி, இகபர நன்மைகள் எல்லாம் நல்கி, அகநிலை நித்திய அருட் பேரின்ப நிறை வாழ்வருளும் ஒரு அருமருந்து)

**ஒளி நெறி வாழ்க்கை முறை**

(வழங்கியவர்;-தயாநிதி சுவாமி சரவணானந்தா, திண்டுக்கல்)

1. நம் சிரநடுவில்தான் (தலைநடு) **சத்திய ஞான ஆலயம்** இருக்கின்றது. அதில் இருந்து ஆட்சி செய்யும்

**அருட்பெருஞ்ஜோதியை** உணர்ந்து அதனுடன் ஒன்றி நிற்கப் பழக வேண்டும். இது நமது நிலையான வாழ்வுக்கு நிலைக்களம் அமைக்கும்.

2. நம்முடைய **உள் ஒளியே நாம்** என்ற உணர்வு நம்மிடம் நிலைக்க வேண்டும். இந்த **உள்ளொளி உணர்வு** நம் உயிர்ச்சக்தியையும், உயிரையும், உடலையும், ஒன்றினுள் ஒன்றாக இணைத்து அதை நிலைப்பெறச் செய்துவிடும்.

3. நம் **அகநிலையில் அருள் ஒளியை விசாரத்தால்** உணர்ந்துக்கொள்ள வேண்டும். அதனுடன் பொருந்தி அதுவாக ஒன்ற வேண்டும்.

பின்னர் **அனகமாகி தயவுப்பணியை** மேற்கொள்ள வேண்டும். அப்போது நம் "உள்ஒளி" நம் உயிரையும்,உடம்பையும் தன்மயமாக மாற்றிக்கொள்ளும். உயிரும், உடம்பும் உள்ஒளியுடன் ஒன்றியபோது அது நிலைப் பெற்றுவிடும்.

4. ஒவ்வொருவர் அகத்தில் இருந்தும் அருள் ஒளியைப் பரவச் செய்வது திருவருளின் செயல்.

5. **நாமே அருட்பெருஞ்ஜோதியாய்** இருந்துக்கொண்டு நமது எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் அருட்பெருஞ்ஜோதியைப் பரவச் செய்வது நம் கடமை.

**அகமிருந்து வருக அருளுடன்!**

**அனகமாக வாழ்க தயவுடன்!!-**

## "சுத்த சன்மார்க்க பயிற்சி நான்கு"

1) **"அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்தான், நமது உண்மையான அக வடிவம்"** என்பதை தெளிவு செய்து கொள்ளல் வேண்டும்.

2) அந்த **"அக உணர்வு கெடாமல், அருள் வண்ணமாகவே"** சிந்தனையும், சொல்லும், செயலும் வெளிப்படுத்திக் கொண்டு இருத்தல் வேண்டும்.

3) **"அருள் அனுபவ வாழ்வையே இலட்சியமாய்க் கொண்டு"**, பொறி புலன் இச்சையை விலக்குதல் வேண்டும்.

4) **"நமது ஆதிமூல நிலை, நடுத்தலை உள்ளிருக்கும் அருட்ஜோதி ஆன்ம அணுவாய் இருக்கின்றது."** அங்கிருந்து, இத் தேகத்தில் பூர்ணமாய் வியாபித்து உள்ளோம். ஆகையால், அவ் ஆன்ம அணுவை, மனதினால் உறுதியாய்ப் பற்றி அதுவாகி நிலைத்தல் வேண்டும்.

அங்கிருந்துதான் அருள் இன்ப வாழ்வு வாழ்தல் வேண்டும்.

இந்நான்கு பயிற்சியும் மேற்கொண்டு வாழ்ந்தால், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் சார்பு கொண்டவர்களாவோம். அதனால், சச்சிதானந்த வடிவில், மரணமில்லாப் பேரின்ப வாழ்வில் என்றும் வாழ்வோம். இது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆணை.

# 13- தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## சத்தியமும் அஹிம்சையும்

(மகாத்மா காந்தியடிகள்)

(நித்திய ஆன்ம அக நிலைக்கு உள்ளே இயற்கை உண்மையாகிய சத்திய ஒளியோடு ஒன்றி இருந்துக்கொண்டு, புற உலகில் சூழ வரும் ஜீவர்களுக்கு கருணைப்பணி புரிந்துக்கொண்டு வாழ்தல்)

நான் விரும்புவதும், பல ஆண்டுகளாக நான் பாடுபட்டு வந்திருப்பதும், ஏங்கியதும்,

1. **என்னை நானே அறிய வேண்டும் என்பதற்கும்**

2. **கடவுளை நேருக்கு நேராக காணவேண்டும் என்பதற்கும்**

3. **மோட்சத்தை அடைய வேண்டும்** - என்பதற்குமே!

இந்த லட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகவே நான் வாழ்கிறேன்; நடமாடுகிறேன்; நான் இருப்பதும் அதற்காகவே தான்!

நான் பேசுவன, எழுதுவன, ராஜீயத் துறையில் முயற்சி செய்வன ஆகியயாவும் இக்குறிக்கோளைக் கொண்டவையே!

**கடவுள் என்றால் சத்தியம் மாத்திரமே!**

எனக் கருதி நான் வழிபடுகின்றேன்.

**சத்தியத்தைத் தவிர வேறு கடவுள் இல்லை**

**சத்தியமே தலையாய தருமம்.** அதில் மற்றும் பல தருமங்களும் அடங்கி இருக்கின்றன.

**சத்தியம் என்பது உள்ளத்தில் உண்மையோடு இருப்பது;** உண்மையே பேசுவது!

**சத்தியம் என்பது சுத்த சுயம்புவான சத்தியமும் நித்தியத்துவமுமான கடவுளைக்** (இயற்கை உண்மை நித்தியக் கடவுள்) குறிக்கும்.

நாம் தினந்தோறும் கண்ணால் பார்க்கும் சூரியனை விட **கோடி பங்கு அதிகம் பிரகாசம் உடையது சத்தியத்தின் பெருஞ்ஜோதி!!!**

**மெய்ப்பொருள் அவர் ஒருவரே; மற்றவை யாவும் பொய்யே** என்ற திட நம்பிக்கை நாளுக்கு நாள் எனக்கு வளர்ந்துக்கொண்டு வருகின்றது.

**சத்தியத்தை தரிசிப்பதற்கு உள்ள ஒரே மார்க்கம் அஹிம்சை தான்!!**

அஹிம்சையைப் (உயிர் இரக்கம் என்ற ஜீவகாருண்யம்) பூரணமாக அடைந்தால் மாத்திரமே சத்தியத்தின் பூரணமான சொரூபத்தையும் தரிசிக்க முடியும்.

**மனம், வாக்கு, காரியங்களில் அஹிம்சை விரதத்தை -** (உயிர்க்கொலை செய்யாதிருத்தல், மாமிசம் உண்ணாதிருத்தல், பிற உயிரின் துன்பம் நீக்குவித்தல்) எனக்கு அருளுமாறு சத்தியமான கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

அவருடைய தரிசனம், எனக்கு இன்னும் கிட்டவில்லை. ஆயினும், அவரை (தியானத்தால்) தேடிக்கொண்டே இருக்கின்றேன். இம்முயற்சியில் வெற்றி பெறுவதற்காக, எனக்கு இனியதான எதையுமே தத்தஞ் (தியாகத்தால்) செய்துவிடக் தயாராயிருக்கின்றேன்.

இந்த **சுத்த சத்திய சொரூபியை** நான் அடையும் வரையில்,

**சத்தியமே எனக்கு வழிகாட்டும் ஒளியாகவும், பாதுகாக்கும் கேடயமாகவும் இருக்கின்றது.**

**இந்த சத்திய வழியே என்னைத் துன்பங்களில் இருந்து காத்து வருகின்றது.**

என் உள்ளொளிக்கு ஏற்ப நான் உள்ளே முன்னேறிச் செல்கின்றேன். என் முற்போக்கில், **சுத்த சத்தியமான கடவுளின்-** மங்களான. தோற்றங்களை அடிக்கடி காண்கின்றேன்.

**காம குரோதமற்ற,**

1. **நல்லொழுக்கத்தால் தன்னைத்தானே தூய்மைப்படுத்திக் கொண்டு**

2. **பணிவால், தூசிக்கும் தூசியாய் தன்னை ஆக்கிக் கொண்டு**

3. **இரக்கத்தால் எல்லா உயிர்களிடத்தும் தன்னை ஒன்றுபடுத்திக் கொள்பவர்** எவரோ, அவரே **அகண்ட பிரபஞ்ச முழுதும் வியாபித்து நிற்கும் சத்தியப்பெருஞ்ஜோதியை** தரிசிக்க முடியும் - மகாத்மா காந்தியடிகள், சபர்மதி ஆஸ்ரமம், 26-11-1925.

இங்கு நம் வள்ளற்பெருமான் திருவருட்பாவில் குறிப்பிட்டுள்ளதை ஒப்பிட்டுப் பார்ப்போம்;-

1. சித்திகள் அனைத்தையும் தெளிவித்து எனக்கே

**சத்திய நிலைதனை தயவினில் தந்தனை**

2. **சத்தியம் சத்தியம் சத்தியம் -** எனவே இத்தகைய வழுத்தும் என் தனிச் சத்தே (சத்து + இயம் = சத்தியம்)

3. வள்ளலார் நிறுவியவை;-

**சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், சத்திய தருமச்சாலை, சத்திய ஞான சபை**

**- சத்தியமான கடவுள் வழிபாட்டிற்கு உண்மையான நுழைவு வாயில் அஹிம்சையே !**

**எவ்வுயிரையும் கொல்லாதீர்!**

**மாமிச உணவு உண்ணாதீர்!!**

**பசித்த ஏழைகட்கு உணவு கொடுப்பீர்!!!**

## 14- தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## உப்பிட்டவரை உள்ளளவும் நினை!!

இதன் பொருள், பசிக்கு ஆகாரம் கொடுத்தவரை ஒருபோதும் மறக்காதே எனவே நினைக்கின்றோம்.

என்றாலும், இதன் பொருள் உயர்நிலையில் மேலான ஓர் கட்டளை வாக்கியமாக அமைந்துள்ளது.

வள்ளலார், சுத்த சன்மார்க்கத்திற்கு இரண்டு வழியைக் காட்டியுள்ளார்.

அதுவே, **சத்விசாரம், பரோபகாரம்** ஆகும்.

**“சத்விசாரம் என்பது சத்தாகிய மெய்ப்பொருளை சார்ந்து வாழ்வது”.**

**“பரோபகாரம்”** என்பது நம்மைச் சூழ்ந்துள்ள துன்பப்படும் உயிர்களுக்கு மனம், வாக்கு, காயத்தால் உதவி செய்துக்கொண்டிருத்தல் ஆகும்.

பரோபகாரத்தையே வள்ளலார் **“ஜீவகாருண்ய ஒழுக்கம்”** என்கின்றார்.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் மிக முக்கியமானது, உள்ளபடி பசித்த ஏழைகட்கு உணவு கொடுத்து, பசியாற்றுவித்தலாகும்.

இவர்கள் முதலில் புலால் என்னும் மாமிச உணவை மறுத்தவர்களாகவும், எவ்வுயிரையும் கொலை செய்யாது இருப்பவர்களாகவும் ஒழுக வேண்டியது முதற்செயல்.

இப்பொழுது,மேலே குறித்த பழமொழியின் உண்மைப் பொருள் காண்போம்.

**"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"** என்பதை பிரித்துப் பொருள் காண வேண்டும்.

அதாவது,

**உப்பு இட்டு, அவரை, உள் அளவும் நினை** என்பதாகும்.

உப்பு இடுதல் என்பது ஏழைகட்கு உணவு கொடுத்தல் ஆகும்.

தமிழ்நாட்டில் விருந்து உபசரிக்கும்போது, முதலில், இலையில் உப்பு தான் சிறிது வைப்பார்கள். இது தமிழர் பண்பாடு. இங்கு உப்பு என்பது ஆகாரத்தையே குறிக்கின்றது.

**உப்பு இட்டு** என்பது **அன்னதானத்தையே** குறிக்கின்றது.

அடுத்து, **அவரை உள் அளவும் நினை** என்பது, இறைவனை (அவரை), உள்ளத்திலே, மனமார, உளமார முழுமையான உள்ளன்புடன் நினைத்துக்கொண்டிருத்தலாகும்.

இதுவே **பரோபகாரம்-சத்விசாரம்** ஆகும்!

மேலும், இன்னொரு விதமாகவும் பொருள்படுகின்றது.

உப்பு என்பது **ஒளி பொருந்திய வெண்மை நிறம். இது கடவுளின் சுத்த அருள் நிலையை** குறிக்கின்றது. எனவே, சத்துப் பொருளாகிய **உள்ளொளியை** அகத்தே நிறுத்தி (உப்பு இட்டு), அவரை மனத்தின் முழு கவனத்துடன் (உள் அளவும்) நினைத்தலாகும்.

திருப்புகழிலே, அருணகிரிநாதர் கந்தர் அனுபூதியிலே இந்த சத்விசார - பரோபகாரத்தைப் பற்றி குறிப்பிடுகின்றார். அது:-

கெடுவாய் மனனே கதிகேள் **கரவாது**

**இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்!!**

சுடுவாய் நெடுவேதனை (பிறப்பு இறப்பு எனும் நீங்காத சுழற்சி) தூள்படவே,

விடுவாய் விடுவாய் வினை யாவையுமே!! என்கின்றார்.

எனவே, புறத்தில் வறியவர்களுக்கு உப்பு ஆகிய உணவு இட்டு, மேலும் உப்பு குறிக்கும் சத்துப் பொருளாகிய

**வெள்ளொளியாகிய உள்ளொளியை** பற்றிக்கொண்டு பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோமாக!!!

## 15- தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்!!

கல் என்றால் என்ன?

நாய் என்றால் என்ன?

முதலில் **கல்** என்றால் என்ன, என்பதைப் பார்ப்போம்.

**கல்** என்பது **கடவுளைக்** குறிக்கின்றது.

நம் நாட்டில் பெரும்பாலான கோயில்களில் கடவுள் திருவுருவச் சிலைகள் கல்லினாலே உருவாக்கப்பட்டுள்ளன.

கற்சிலைகளிலேதான் கடவுளை பாவித்து வழிபட்டு வருகின்றோம்.

**கல்** என்ற சொல்லில் கடவுள் உண்மை பொதிந்துள்ளது....எப்படி?

**க** என்பது தமிழில் முதல் **உயிர்மெய்** எழுத்தாகும்.

**"க் + அ = க"**

**"க்"** -என்ற மெய் எழுத்து, இந்த "மெய்" ஆகிய உடலைக் குறிக்கின்றது;

**"அ"**-என்ற உயிர் எழுத்து, உடலுக்குள் இயங்கும் உயிரைக் குறிக்கின்றது.

ஆக, **க** என்பது, மனிதனின் உடலையும்,உயிரையும் குறிக்கின்றது.

இந்த ஜடபூத உயிருடம்புக்கு உள்ளே **தலைநடுவில்**

**அருட்ஜோதியாய்** சுடர்விடுபவர்தான் கடவுள்.

இந்த கடவுளின், **திருவருள் நிலையைக்** குறிப்பதே 13 ஆவது மெய் எழுத்தான - **ல்** ஆகும்.

இதைத்தான்,திருவருட்பா அகவலில் குறிப்பிடுகின்றார்;-

**திரையோதச சிவவெளி** நடுவே வரையோதரு சுகவாழ்க்கை மெய்ப்பொருளே - எனப் போற்றுகின்றார்.

திரையோதசம் என்றால், **“திரி+ தசம் ; 3 + 10 = 13”** ஆகும்.

முதலில், நமக்கு வெளியே தோன்றுவது இந்த ஜட பூத உடல் நிலை. உடல் நிலையிலிருந்து ஆரம்பித்து, உள்ளே செல்ல செல்ல பல சக்தி நிலைகள் அனுபவமாகும். முடிவில் 13 ஆவது இடத்தில் **திருவருள் நிலை** ஆகிய கடவுள் உள்ளார்!

அந்த 13 நிலைகள் யாவை**?** அது;-

பூத நிலை, கரண நிலை, பிரகிருதி நிலை, மோகினி நிலை, அசுத்த மாயா நிலை, அசுத்த மகாமாயா நிலை, சுத்த மாயா நிலை, சுத்த மகாமாயா நிலை, சர்வ மகா மாயா நிலை, குண்டலி நிலை, பிரணவ நிலை,

முடிவாக 13 வது **திருவருள் நிலை**!!!

இதைக் குறிப்பதே **ல்** என்ற 13 வது மெய்யெழுத்து.இது,

**மெய்ப்பொருளாகிய** கடவுளைச் சுட்ட வந்தது.

ஆக, கல் என்ற சொல் கடவுளைக் குறிக்கின்றது.

அடுத்து, **நாய்** என்ற சொல், நாயான இந்த **தேகவுணர்வை** குறிக்கின்றது.

இந்த அசுத்த மாமிச **உடலே நான்** என்ற அஞ்ஞான இருளில் இருப்பவனை**, நாயைக் கண்டவன்** என்கின்றனர் மெய்ஞ்ஞானிகள்.

இவனுக்கு, **உள்ளே மேல் நிலையிலுள்ள “கல் ஆகிய அருள் உணர்வுக் கடவுளைக்” காண முடிவதில்லை**

இதைத்தான், **நாயைக் கண்டால் கல்லைக் காணோம்** எனப்பட்டது.

இதற்கு மாறாக, **சத்விசாரத்தால்** ஜடபூத **நாயாகிய தேகமே நான்** என்ற நிலையைக் கடந்து, மேலே உயர்நிலைக்கேறி**, திருவருள் உணர்வை** பெற்றுக்கொண்டவர்கள், மீண்டும், நாயான தேகவுணர்வுக்கு எக்காலும் இறக்கிவிட மாட்டார்கள்.

இதுவே, **கல்லைக் கண்டால் நாயைக் காணோம்** எனப்பட்டது.

இந்த உண்மையை, ஆங்கிலச் சொல் ஆகிய **God** (காட்) என்பதிலும் காணலாம். **"God"** என்றால் கடவுள்.

இதில் வேறு பொருள் இல்லை. இதையே,திருப்பிப் போட்டு வாசித்தால் **"Dog"** (டாக்) என ஆகும்,அதாவது நாய் என்ற பொருள் தரும்,இதில் கடவுளைக் காண முடியாது.

இந்தப் பழமொழி,ஒரு மெய்ஞ்ஞானி தனது அருள் அனுபவத்தைப் பற்றி தனது சீடனிடம் கூறிய வாசகமாகும்.

வள்ளற்பெருமான் பாடுகின்றார் ஒரு பாடல்;-

"புன் புலால் உடம்பின் அசுத்தமும், இதனில் புகுந்து **நான் இருக்கின்ற** புணர்ப்பும்,

என் பொலாமணியே, எண்ணி நான் எண்ணி ஏங்கிய ஏக்கம் நீ அறிவாய்!

**வன் புலால் உண்ணும் மனிதரைக்** கண்டு மயங்கி உள் நடுங்கி ஆற்றாமல், என்பெலாம் கருக இளைத்தனன், அந்த இளைப்பையும் ஐய நீ அறிவாய்! - என்கின்றார்.

இப் பழமொழி மூலம் நாம் அறிந்துக் கொண்டது என்ன?

மனிதன், **தேகமே நான்** என்ற பொய் மாயா **மருள் நிலை** கடந்து, **புருவநடு புகுந்து** உள்ளே, உள்ளொளியைப் பற்றிக்கொண்டு, அந்நிலை விட்டு கீழிறங்காது,

**கடவுளுடன் கலவாமல் கலந்து, இரண்டற்று ஒன்றாகி நித்தியமாய் நிலைத்து நிற்க வேண்டும்** என்பதே ஆகும்.

அங்கிருந்து, அனகமாக உயிர், உடல் என விரிந்து, எக்காலும் அழிவுறாது நீடூழி வாழ்தலே சுத்த சன்மார்க்கம் காட்டும் அருட்பெருநெறியாகும்.

**அகமிருந்து வருக அருளுடன்;**

**அனகமாக வாழ்க தயவுடன்!!!**

# 16 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## வள்ளலார் பெற்ற, எக்காலும் அழியாத அருட்ஜோதி ஒளியுடல்

வள்ளலார் பெற்ற,

**அன்புருவம் - அருளுருவம் - இன்புருவம்**

மண்புருவநடு முதலா மனம் புதைத்து, நெடுங்காலம் என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாந்து போயினர் என்கின்றார் நம் வள்ளற்பெருமான்! ஏன் அப்படிச் சொல்கின்றார்?

புருவநடுத் தியானம் என்பது பன்நெடுங்காலத்திற்கு முன்பே ஆதி பழந்தமிழன் கண்டதுதான் என்கின்றார்,சுத்த சன்மார்க்க சத்திய ஞானி தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்கள். முதன் முதலில், மனித இனம் தோன்றியது தமிழகத்தில்தான் என்கின்றார்.முதலில் தோன்றிய மொழியும் தமிழ்தான்! ஆதி தமிழன்,நெற்றிக்கண்ணைப் பெற்றிருந்தான். அதற்கு அடையாளமாக அவர்களுக்கு நெற்றிநடுவே பாதாம்பருப்பு அளவுக்கு சற்று வீங்கியிருந்ததாம்.

அவர்கள் பெற்றிருந்த அந்த மூன்றாவது கண்ணால்,எந்த முயற்சியுமின்றி கடவுள்-ஆன்ம உண்மைகளை அறிந்துக் கொண்டார்கள். அந்த ஞானக் கண்ணால், அவர்கள் முதலில் கண்டது அகண்ட ஆகாச வான் பெரு வெளி முற்றும், அனாதியாய் நிறைந்து, இருந்து வரும் **இறை பேரொளியே** ஆகும். அதையே அவர்கள், **கந்தழி ஜோதியாக** கண்டனர். கந்தழிஜோதி என்பது "கட்டுக்கடங்காத பேரொளிப்பிழம்பு" என்பதாம். அப்படி பெருவான்வெளியில் விளங்கும் அந்த இறையொளியே தனது தலைநடுவில் முழுநிறைவோடு விளங்குவதாகக் கண்டனர். அந்த **உள்ளொளியில்** பேரின்பம் அனுபவப்படுவதை உணர்ந்தனர். அதனால் தனது புறத்தோடும் மனத்தை புருவத்திடை நிறுத்தி அகத்தே ஒடுங்கி பேரின்பத்தை அனுபவித்தனர். அதனால் அவர்கள் மனம் புதைத்து போனது. அதாவது, இறந்து போனது. நெடுங்காலம் அகத்திலே ஒடுங்கி பேரின்பம் கண்டது உண்மைதான்! எனினும் உடலும், மனமும், உயிரும் அவர்களுக்குத் தேவைப்படாமல் போயிற்று; உடலும் உயிரும் கழன்று போயிற்று. உடலும் உயிரும் பிரிந்த அந்த நொடியே, அவர்கள் **அனுபவம் சூன்யமாயிற்று**!! ஆன்மா "தனி

இருப்பு" அறியாது இறையொளியில் மறைந்து போனது. அவர்கள் அனுபவத்தை இழந்தனர். மேலும் அந்த இனம் புறத் தேகபோக நாட்டம் சிறிதுமின்றி இருந்ததால், இனவிருத்தி இல்லாமல், மக்கள் இனமே சுருங்கியதால், கடவுள் அவர்களுடைய நெற்றிக்கண்ணை மறைத்தருளினார். பின்னர் அது மறையவே, பின் வந்தவர்கட்கு புறநாட்டம் அதிகரித்து, புலன் இன்பப் பெருக்கால் மக்கள் தொகை அதிகரித்தது. அதற்குப்பின் தோன்றிய மக்கள் சமுதாயம் கடவுள் உண்மையை மறந்தே போய், "தேகமே நான்" என்ற உணர்வோடே இவ்வுலகில் வாழ்ந்து,பலகால் சுகதுக்கங்களை அனுபவித்து முடிவில் இறந்துபோய்க்கொண்டிருந்தனர்.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான்,மனிதனுக்கு,மறுபடியும் கடவுள் சிந்தனை உதயமாயிற்று. எல்லாவற்றிற்கும் அப்பால், மேலே ஒரு ஒப்பற்ற பெரும்சக்தி இந்த மாபிரபஞ்சத்தை தோற்றுவித்து, அனந்தங்கோடி உயிர்களையும் படைத்து, எல்லாவற்றையும் இயக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தான். ஒரு புறம் மக்கள் சமுதாயம் புலபோக தேகபோக இச்சையிலேயும் சுகதுக்கங்களிலும் அழுந்திக் கிடக்க, சில நற் சிந்தனையாளர்கள் கடவுள் - ஆன்மா - பிரபஞ்சம் இது குறித்து தீவிரமாக ஆராய்ச்சி செய்து வந்தனர். அப்படி உலகெங்கும் ஆங்காங்கே அவரவர் சிந்தனையில் பக்குவத்திற்குத் தக கண்ட உண்மைகளை பல சமயமத கோட்பாடுகளாக வெளியிட்டனர். அப்படி வெளியான சமயங்களிலே முக்கியமானது சைவமும் வைணவமும்! இவர்கள்தான் கடவுள் ஆன்ம உண்மைகளை **அக நிலையிலிருந்து** கண்டு பல ஆகம சாஸ்திரங்களை உருவாக்கித் தந்தனர். இந்தியாவின் வடக்கே தோன்றிய ஞானிகள் வேதங்களை உருவாக்கினர். என்றாலும், தேக போக வாழ்விலே உழன்றுக்கொண்டிருந்த மக்களுக்கு சிற்பாலயங்களை ஏற்படுத்தி பக்தி மார்க்கத்தையே வலியுறுத்தினர்.

இப்போது விஷயத்திற்கு வருவோம்;

அகம் உணர்ந்த ஞானிகளுடைய நிலைப்பாடு என்ன?

எல்லா ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும், முத்தர்களும், ரிஷிகளும், முனிவர்களும், அடியார்களும் இறைவனிடத்து என்ன வேண்டினார்கள்?

பிறப்பு இறப்பு என்கின்ற பெருந்துன்பத்திலிருந்து தங்களை விடுவித்தருளுமாறு கடவுளிடம் வேண்டினார்கள். சைவ சித்தாந்தத்திலே, ஆன்மாவுக்கு **ஆணவம், மாயை, கன்மம்** என்ற மும்மலம் இருப்பதாகக் கண்டனர். இம் மும்மலத்தையும் ஒழித்து, **கடவுட்ஜோதியில் ஆன்மாவை ஐக்கியப் படுத்திக் கொள்ள வேண்டினர்!!**

அதற்காக ஞானிகளும்,யோகிகளும்,சித்தர்களும்,முத்தர்களும் தவம் செய்தனர். அந்த தவத்தில் உடலுணர்வை கடந்து, புறமிருந்து அகநோக்கிப் புறப்பட்டனர். மனதை புருவமத்தியில் கடவுள் சிவஜோதியில் ஒடுக்கினர். **மகா மாயையிலிருந்து** விடுபட மனதை **இறக்கும்படி** செய்தனர்.

“சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும் மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே” என்ற வாக்கியத்தால் அவர்கள் நோக்கத்தை அறியலாம். அப்படி உடல் உணர்வைக் கடந்து,மனதை புருவத்திடை நிறுத்தி, அதை இறக்கும்படிச் செய்து,ஆன்ம அகத்தே உள் புகுந்து **சிவஜோதியில் கலந்து நின்று சிவானந்தத்தை பருகி, அவ்வானந்த வெள்ளத்தே மூழ்கினர்**

புறத்துள்ள உடலும், உயிரும் இருந்தும் இறந்தது போலானது. ஒரு காலகட்டத்தில், உயிரும் உடலும் பிரிந்து விட்டது!

அதைப் பார்த்த மக்கள் சமுதாயம் அவர்கள் இறைவனோடு கலந்து பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றதாக எண்ணினர்;

ஆனால், வள்ளலாருக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் உணர்த்தியது என்ன?

ஒருவன் புறத்தே இவ்வுலக போகத்தை அனுபவிக்க வேண்டியும் சரி அல்லது அதற்கு மாறாக அகத்தே சென்று இறை பேரின்ப சுகத்தை அனுபவிக்க வேண்டுமாயினும் சரி **உடலும் உயிரும் நிலைத்திருந்தால்தான்** அது முடியும். இதுதான் ஆண்டவர் வள்ளலாருக்கு உணர்த்தியது. அப்படி என்றால், உடலையும் உயிரையும் இழந்த அல்லது சிவஜோதியில் கரைத்தவருடைய நிலைமை என்னவானது?

அவர்கள் **"நான்" என்ற உணர்வைக்கூட உள்ளொளியிலே ஒடுக்கிவிட்டதினால் அவர்கள் சச்சிதானந்த பேரின்பானுபவம் தடைபட்டு விட்டது!**

இதுதான் ஆன்மீக பரிணாம வளர்ச்சியில் இதுவரை வெளிவராத தகவல்!

அப்படி என்றால் வள்ளலாருக்கு ஆண்டவர் உணர்த்திய உண்மைதான் என்ன?

சச்சிதானந்த இறை அனுபூதியை எக்காலும் தடைபடாது அனுபவிக்க வேண்டுமென்றால், இந்த **உடல்-உயிர்-உள்ளம்** ஆகிய மூன்றும் நித்தியமாய் விளங்க வேண்டும்.

அது எப்பொழுது நித்தியமாய் விளங்கும் என்றால், **அகமிருந்து கடவுள் திருவருளே அனகமாக விரிந்து ஆன்மா, உயிர், உடல் என முத்தோற்றம் கொண்டு அதாவது அவரே அருவம், அருவுருவம், உருவம் என விளங்குவதை உணர்ந்து நிற்றல்!!!**

அதாவது இறைவனே அருவ ஆன்மாவாகவும்,அருவுருவ உயிராற்றல் வடிவமாகவும், உருவ உடல் தோற்றமாகவும் அருள் அனுபவத்தின் பொருட்டு தானே விளங்கிக்கொண்டிருக்கின்றார் என்ற உண்மையை உணர்ந்து, **கடவுள் நிலையறிந்து அம்மயமாய் நிற்றல்** வேண்டும் என்பதே சுத்த சன்மார்க்க கொள்கை!

இந்த சுத்த சன்மார்க்க அருட்பெருநெறியில், அந்த திருவருள் வெளிப்படும்போது, ஆன்மாவாகிய காரண சரீரம் **அன்புருவமாகிய ஞான தேகமாகவும்,** உயிராற்றல் வடிவமாகிய சூக்கும தேகம் **அருளுருவமாகிய பிரணவ தேகமாகவும்,** புற உடல் உருவமாகிய தூல தேகம் **இன்புருவமாகிய சுத்த தேகமாகவும்** திருவருளால் மாற்றமடைந்து எக்காலமும் அழியாது விளங்க வல்லதாகி விடுகின்றதாம். இந்த அழியாத **அகமிருந்து விரிகின்ற அனக நெறியால்** மட்டுமே இறைவனின் அருட்பெருஞ் சுகத்தை, எல்லையில்லாத காலமும் அனுபவித்துக் கொண்டேயிருக்க முடியுமாம்.

**அகமிருந்து வருக அருளுடன்; அனகமாக வாழ்க தயவுடன்!!!**

இக் கருத்தை நமக்கெல்லாம் இங்கு தெளிவுபடுத்துபவர் - தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்கள், திண்டுக்கல்.

வள்ளலார் தான் பெற்ற, (எத்தனைக் கோடி காலங்கள் ஆனாலும் அழியாத) அருட்ஜோதி ஒளியுடம்பைப் பற்றி திருவருட்பாவில் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அதில் ஒரு பாடலை காண்போம்;

**காற்றாலே புவியாலே ககனமதனாலே கனலாலே புனலாலே கதிராதியாலே**

**கூற்றாலே பிணியாலே கொலைக் கருவியாலே கோளாலே பிற இயற்றும் கொடுஞ் செயல்களாலே**

**வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும் மெய் அளிக்க வேண்டும் என்றேன், விரைந்து அளித்தான் எனக்கே**

**ஏற்றாலே இழிவு என நீர் நினையாதீர் உலகீர், எந்தை அருட்பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீரே!**

**முக்கிய குறிப்பு;**

ஒவ்வொரு ஆன்மாவும் முடிவில் வள்ளலாரைப்போல், எக்காலமும் அழியாத முத்தேக சித்தி(திரிதேக சித்தி) பெற்றேயாக வேண்டும் என்பது அருள் இயற்கை நியதி! மனிதன் அந்த அருட்ஜோதி ஒளியுடலைப் பெற்றுக்கொள்ளும் வரை மீண்டும் மீண்டும், பிறந்துக் கொண்டும் இறந்துக்கொண்டும்தான் இருப்பான்!

**மெய் அகத்தே விரைந்துவம்மின் இங்கே! நித்திய மெய் வாழ்வு பெற்றிடலாம் கண்டீர்!** என உலக சமுதாய மக்கள் இனம் முழுமைக்கும் அழைப்பு விடுக்கின்றார் வள்ளலார்!

தயவு

**வள்ளலார் அருளிய உள்ளொளித் தியானப் பயிற்சி முறை;-**

இந்த தேகத்தில் புருவ மத்தியில், **ஆன்ம அறிவு** என்கின்ற கற்பூரத்தில், **அருள்** என்கின்ற **"தீபம்"** விளங்குவதாக பாவித்துப் பார்த்து, அதில் பழகிப்பழகி, கடவுளிடத்து **உண்மையாகிய அன்பையும், ஜீவர்களிடத்து உண்மையாகிய காருண்யத்தையும்** இடைவிடாது வைக்க வேண்டியது.

**இதய ஸ்தானத்தில் இயங்குகின்ற மனதை புருவமத்தியில் நிறுத்திப் பழக வேண்டும்.** சிரநடு சிற்றம்பலத்தில்(ஆன்மா)

விளங்கும் அருட்பெருஞ்ஜோதியை நினைந்து நினைந்து போற்றிப் பணிந்து வழிபட்டு வந்தால் நாளும் அறியாதவெல்லாம் அறியலாம்! - திருவருட்பிரகாச வள்ளலார்

தயவு

## தயவு ஒளி தெய்வீக சிந்தனை

கேள்வி;- எல்லாம் சரி.

**“இன்றும் சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் ஆகிய முத்தேக சித்தி பெற்று மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்து வருபவர், வள்ளற்பெருமான் ஒருவர் மட்டும் தானே?!-**

1874 ஆம் ஆண்டு வள்ளலார், என்றும் அழியாத ஒளியுடல் பெற்றுக் கொண்டார்! அதன் பிறகு 145 வருடங்களில் ஒருவரும் அந்த நிலையை பெற்றதாக தெரியவில்லையே!! அது மற்றவர்களுக்கு சாத்தியமில்லையோ?!

**பதில்;-** தயவு வடிவம் ஐயா! வந்தனம்! இறைவன் **“அன்பு இருப்பு எனும் சத்துப் பொருளாக, அகண்ட வான் பெருவெளி முற்றும் அனாதி காலமாக இருப்பவர்!!”.** ஆண்டவர். அவர் எத்தனை கோடி கோடி யுகங்களாக இருந்து வருகின்றார்?!

இப்படி கேட்பது அறியாமையே! புற நிலையில், பற உலகில் தான் **“காலம்”** என்கின்ற **தத்துவம்** செயல்படுகின்றது! இதற்கு முற்றிலும் மாறானது அக உலகம்!

**“அக ஆன்ம அருள் உலகில் காலம் என்பதே இல்லை! அங்கு நித்திய நிகழ்காலம் மட்டுமே இருக்கின்றது! இறந்த காலமோ, எதிர் காலமோ அக அருட்பெருவெளியில் இல்லை!!”**

இந்த உலகம் தோன்றி 17000 கோடி ஆண்டுகள் ஆகியுள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். நெடுங்கோடி ஆண்டுகளுக்குப் பிறகே உயிரினங்கள் தோன்றின. அதற்கும் பல கோடி ஆண்டுகளுக்குப் பிறகே மனித இனம் தோன்றியது. மனித இனம் முதலில் ஆதிவாசி யாக, காட்டுவாசியாக பன்நெடுங்காலம் மொழி கூட அறியாது வாழ்ந்து வந்தான். பின்னர் பேச ஆரம்பித்தான். இப்படி பல இலட்சக்கணக்கான வருடங்கள் ஓடிவிட்டன. சில ஆயிரம்

ஆண்டுகளுக்கு முன்னரே சமய, மத, மார்க்கங்கள் தோன்றி, மனித மனத்தை பக்குவப்படுத்தத் தொடங்கின. 1865 ஆம் ஆண்டு புரட்சிகரமாக, ஆன்மீகப் பரிணாம வளர்ச்சியின் உச்ச நிலையாக, சுத்த சன்மார்க்கம் எனும் **"அருட்பெரும் தயவு நெறி"** நேரடியாக **"திருவருளால்"**, இராமலிங்கம் என்ற புறப்பெயர் கொண்ட ஓர் அக ஆன்மா மூலம் வெளியானது. இம்மார்க்கத்தில் தானே முதலில் **"மரணமிலாப் பெருவாழ்வு"** பெற்றுக்கொண்டார் வள்ளலார்! இனி அனந்தம் கோடி ஆன்மாக்களும் **"சுத்த, பிரணவ, ஞான தேகத்தை"** பெற்றேயாக வேண்டும். இது கடவுள் ஆணை! வள்ளலாருக்கு பிறகு (1874) யாரும் பெறவில்லையே! ஏன்?

- என்று கேள்வி எழுவது ஞாயமே! எனினும் அருட் பக்குவம் பெற இன்னும் கொஞ்ச காலம் ஆகலாம்.

**"சுத்த சன்மார்க்கம் அகநிலையிலிருந்துதான் பரவும்! மற்ற சமய, மத, மார்க்கங்களைப் போல் புற உலகில் வேகம் காணாது.**

**அருள்நிலைக்கு புறமிருந்து தோன்றிய யாவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இல்லாமல் போய்விடும்.**

**"அருட்பெருவெளியில் இருந்து தோன்றிய இயற்கை சன்மார்க்கமோ நெடுங் கோடாகோடி காலமும் விளங்கிக் கொண்டே இருக்கும்"**

இனி வரும் மனித ஆன்மாக்கள் **"மரணமிலா பெருவாழ்வில்"** தழைக்கப் போவது உண்மை! சத்தியம்!

வள்ளலாரைப்போல் ஆயிரமாயிரம், இலட்சோபலட்சம், கோடானுகோடி வள்ளலார்கள் வரப்போவது உண்மை! வந்துதான் ஆக வேண்டும். சிலர் வந்தும் இருக்கிறார்கள்!! ஒவ்வொரு ஆன்மாவும் அந்த நிலையை அடையும் வரை ஆண்டவரும் விடமாட்டார்! அவசரப்பட வேண்டியதில்லை!

தயவு

## 17-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## தயவே கடவுள்! தயவுடன் வாழ்க!!

## தயவுக் கடவுள் வருகை!!!

வள்ளலார் எல்லாம் வல்ல, எல்லாம் உடைய, எல்லாம் ஆன கடவுளை **தயவு** என்ற அருஞ்சொல்லால் குறிக்கின்றார்.

**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை** என்ற திருவருள் மகாவாக்கியத் திருமந்திரம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால், வள்ளலார் மூலம், முதல்முறையாக வெளியாக்கப்பெற்றது.

அதே போல் **தயவு** என்ற மூன்றெழுத்து மகாமந்திரச் சொல்லையும் தந்துள்ளார்.

திருவருட்பாவில், நான்காம் திருமுறையில், அருட் பிரகாச மாலை 47-வது பாடலில், வள்ளலார் இதை குறிப்பிடுகின்றார்;-

"அடியேனை அழைத்து அங்கையில் ஒன்று கொடுத்து **தயவினொடு வாழ்க!!** எனத் தனித் திருவாய் மலர்ந்தருளினாய்"

இது கடவுளே வள்ளலாருக்கு செய்த உபதேச மொழியாகும்!

இந்த தயவு என்ற சொல் தமிழ் மொழி உருவான காலத்திலேயே இருந்ததுதான்.

என்றாலும் அது, உயிர்களுக்கு இரங்குதல், அன்புத் தொண்டு செய்தல், சூழ்ந்தவர்கட்கு தயவு காட்டுதல் போன்ற ஜீவதயவை மட்டுமே குறிப்பதாக இருந்து வந்தது.

ஆனால் இன்று வள்ளலார் மூலம் வெளியாக்கப்பட்டது கடவுளின் **ரூப,சொரூப, சுபாவத்தைக்** குறிக்க வந்துள்ளது.

**கடவுள்- மனிதன்- பிரபஞ்சம்** ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைக்கும் சொல்லாக உள்ளது.

**த**-என்பது இயற்கை உண்மையையும், **ய**என்பது இயற்கை விளக்கத்தையும், **வு**என்பது இயற்கை இன்பத்தையும் குறிக்கின்றது.

அதாவது,

**த=**சத்துப்பொருள்

**ய=**சித்து விளக்கம்

**வு=**ஆனந்த அனுபவம் ஆகும்.

இதையே,

அன்பு இருப்பு **= த**

அருள் உணர்வு **= ய**

இன்ப அனுபவம் **= வு** - என்பதாகும்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான், தாயிற் சிறந்த **தயா** ஆன தத்துவனே எனக் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளாலார், பேருபதேசத்தில் இந்த தயவைக் குறித்து உரைத்துள்ளார். அது;-

" என்னை ஏறாநிலைமிசை ஏற்றிவிட்டது யாதெனில் **தயவு.**

**தயவு என்னும் கருணை தான்** என்னை தூக்கிவிட்டது.

அந்த **தயவுக்கு ஒருமை வரவேண்டும்!**

ஒருமை இருந்தால்தான், **தயவு** வரும். **தயவு** வந்தால் ஏறாநிலைமிசை ஏறலாம்.

என்னுடைய **அறிவு (தயா ஞானம்)** இப்போது அண்டாண்டங்களுக்கும் அப்பால் கடந்திருக்கின்றது.

அது **ஒருமை** யினால்தான் வந்தது. நீங்களும் என்னைப்போல் **ஒருமையுடன் இருங்கள்** என உபதேசித்துள்ளார் வள்ளலார்!

ஒருமை என்பது "ஒன்றேயான தன்மையாகும்'.!

மேலும் உபதேசக் குறிப்புகளில் சொல்லும்போது,

**ஆன்மாவின் இயற்கை குணம்** தயவு.

நாம் **தயா வடிவமானால் திருவருள் அனுபவம் உண்டாகும்!!** என்றும்,

ஆன்ம இயற்கையாகிய **தயவோடு இருந்தால் சிவம் ஆகலாம்** எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**ஒப்பற்ற தயவுடைய பேரறிவே பூரண இன்பமாம்** என்று கூறியுள்ளார்கள்.

தயவு என்ற சொல்லில்

**த - ய - வு** என்ற மூன்று தனி எழுத்துக்களும் ஓர் பேருண்மையை விளக்கிக் காட்டுகின்றது. அது என்ன உண்மை எனப் பார்ப்போம் இனி!!

**த**-த என்ற **தகர** எழுத்து,

**த் +அ = த** எனப் பிரிந்து கடவுள் உண்மையைக் குறிக்க வந்தது. இதில் **த்**என்ற **மெய் எழுத்து** எதைக் குறிக்கின்றது?

**த்**-என்பது ஏழாவது மெய்யெழுத்து மனிதனின் 7-வது, **மெய்ஞ்ஞானம் அல்லது மெய்யறிவை** குறிக்கின்றது. இந்த ஏழாவது மெய்ஞ்ஞானத்தை பெறுவதற்கு முன், ஐந்து புலன் அறிவு நிலைகளையும்,மேல் ஆறாவது மன அறிவையும் கடந்து வர கோடிக்கணக்கான பிறவிகளில் சென்று சென்று கோடிக்கணக்கான காலங்களைக் கடந்து, எல்லையில்லாத புலன் இன்ப துன்பங்களை அனுபவித்து அனுபவித்து, பின்புதான் தெளிவு ஏற்பட்டு, இப்போது ஏழாவது **த்**-என்னும் **மெய்ஞ்ஞானம்** ஏற்பட்டுள்ளது. இந்த மெய்ஞ்ஞானத்தால், கண்டுகொள்ளப்படும்,

கடவுள் உண்மையே **அ**-என்ற உயிரெழுத்தால் குறிக்கப்படுகின்றது.

அந்த **அ** என்பது எதைக் குறிக்கின்றது?

நாம் பார்க்கும், எல்லையற்ற **அகண்ட ஆகாச வான் பெருவெளி முற்றும் அனாதி காலமாக இருந்து வரும் இயற்கை உண்மையாகிய சத்துப் பொருளைக் -** குறிக்கின்றது, இந்த அகரமாகிய **அ**-என்ற எழுத்து.

அதாவது, வான் பெருவெளி முற்றும் நிறைந்த, எல்லா தோற்றத்திற்கும் **மூலமான** இறை பரம்பொருளை குறிப்பதே இந்த **அ** என்ற முதல் உயிரெழுத்து!! எங்கும் நிறை அகரமாகிய (அ) இறைவனை உணர்வது இந்த மனிதனின் ஏழாவது **த்** என்ற மெய்ஞ்ஞானம்.

இதையே வள்ளலார் அருட்பெருஞ்ஜோதி அகவலில் குறிப்பிடுகின்றார்.அது;-

**தகர மெய்ஞ்ஞான தனிப்பெருவெளி எனும் அகர நிலைப்பதி அருட்பெருஞ்ஜோதி** என்கின்றார்.

எனவே தகரம் என்பது ஏழாவது **மெய்ஞ்ஞானத்தால்** கண்டுக்கொள்ளப்படுகின்ற **பரமாகாச சொரூபியாகிய கடவுள்** ஆவார்.

இதனாலேயே, அன்று வள்ளலார், சத்திய ஞான சபையில், **தகரக் கண்ணாடி விளக்கு வைக்க வேண்டும்** என்றார்.

அடுத்து, தயவு என்ற சொல்லின் நடு எழுத்தாகிய **ய**என்பது எதைக் குறிக்கின்றது? அதன் உண்மை என்ன? என்று பார்ப்போம்.

**ய**என்பது **ஆன்மா** ஆகும்.

இது **சிற்றணு வடிவுடையது.**

இதன் இருப்பிடம் **தலைநடு** ஸ்தானமாகும்.

எல்லா உயிர்களின் சிரநடுவில் உள்ளது. மனிதனின் தலைநடுவேதான் இது மெய்யறிவால் கண்டு அனுபவிக்கக் கூடியதாய் உள்ளது.

இதுவே **அருட்ஜோதி கடவுளான்மா** எனப்படும்.

**ய**-என்ற எழுத்து பத்து என்ற எண்ணைக் குறிக்கும். **க0**-என உலகியலாரும், **ய**என்ற ஒரே எழுத்தாலும் 10 என்ற ஆன்மாவைக் குறிப்பர்.

இந்த பத்து ஆகிய ஆன்மா எட்டு + இரண்டு எனப்பிரிந்து ஒரு பேருண்மையை உணர்த்துகின்றது.

**8 + 2 = 10.** அதாவது,

**அ + உ = ய** ஆக பிரிந்து பொருள் தருகின்றது.

முன்பு தகரத்தில் உள்ள **அ** எனும் அகர வண்ணக் **பரமாகாச சொரூபி** ஆகிய கடவுளே, **ய** என்னும் யகரத்தில் உள்ள **அ**-ஆகி **சிதாகாச வண்ணமாய்** திகழ்கின்றார்!!

அவரே இவர்! இவரே அவர்!!

அங்கே **விளங்குபவராய் உள்ளவர்** ஆவார்!

இங்கே, மனிதனில்,

**உள்ளவராய் விளங்குபவர்** ஆவார்!!

**இரண்டு படாத பூரண இன்பினர் ஆவார்!!**

இப்போது அகரமும் உகரமும் (அ+உ) சேர்ந்து

**யகரமாகி** நிற்கும் கடவுளான்ம அருட்ஜோதி ஆன்ம அணுவைப் பற்றி ஆராய்வோம்.

வள்ளலார், அருட்பாவில்,

**எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணவும் அறியீர், எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே**என்கின்றார்.

மேலும் அகவலில்,

**எட்டு இரண்டு அறிவித்து என்னைத் தனியேற்றி,**

**பட்டி மண்டபத்தில் பதித்த மெய்த் தந்தையே** என்கின்றார்.

எட்டு என்பது எண்குணத்தான் ஆகிய இறைவனைக் குறிக்கின்றது.

அந்த எட்டாகிய இறைவனை இரண்டாகிய **சுத்த மனத்தால்** கூடிக் கலந்து ஒன்றாகி **அருட்ஜோதி ஆன்ம சொரூபியாகி** விளங்குவதே எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணுவதாகும்.

மேலும், இந்த கடவுளான்ம அருட்ஜோதி அணு, **தன்னைத்தானே உணர்த்துவதும் தன்னைத்தானே உணர்வதுமாக உள்ள ஓர் அருட்ஜோதி ஆன்மாவாகும்**

இது அனுபவத்தில் **தானாகவும் நானாகவும்** விளங்குகின்றது.

இதைத்தான் வள்ளற்பெருமான், **நான் ஆனான் தான் ஆனான் நானுந் தானுமானான்** என்று பாடுகின்றார்.

அடுத்து,

**வு**-என்கின்ற வுகரம் என்றால் என்ன?!

**வு**-என்பது **வ் +உ** எனப் பிரிந்து பொருள் தருகின்றது.

**வ்**-என்பது நம் தலைநடுவே சுடர்விடுகின்ற அருட்ஜோதி இறைவனின் **அருட் சக்தி** ஆகும்.

இந்த அருட்சக்தியே விரிந்து, பொருட்சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, யோகசக்தி, அருட்சக்தி எனவிளங்கி, **உ** என்ற உகர எழுத்தால் குறிக்கப்படுகின்றது.

மேலும், ஐந்தாவதாக வரும் உகர உயிரெழுத்து ஆண்டவரின் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் சுட்டுவதாய் உள்ளது.

சிரநடு விளங்கும் **உள்ளொளி** ஆகிய அருட்ஜோதிக் கடவுள் இந்த **ஐஞ்சக்தி-ஐந்தொழிலால்** தனது பெருஞ்ஜோதியை விரித்து இந்த மாபிரபஞ்ச உலகமாய் விளங்கச் செய்து கொண்டுள்ளார். இதுவே கடவுளின் **அருள் ஞானத் திருநடனமாகும்.**

இந்தத் திருநடனம் உலகுயிர்த் திரள்கள் எல்லாம் தன்னிலைக்கு ஏற்றி பேரின்பப் பெருவாழ்வில் வாழவைப்பதற்கேயாகும். இந்த திருநடனத் திருச்செயல் இடையறாது, தடையுறாது எக்காலும் நிகழ்ந்துக் கொண்டேயிருக்கும்.

இனி **தயவு** என்பது மேலும் எதைக் குறிக்கின்றது எனப்பார்ப்போம்.

ஒரு மனிதனுக்கு மூன்று உடல் உண்டு! அதாவது,

**தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம்** ஆகும்.

இதுவே, முறையே,

**உடல் உருவத் தோற்றம்-உயிர் ஆற்றல் வடிவம்- அக ஆன்ம அறிவு** ஆகும்.

அருள் ஆன்ம அகநிலையிலிருந்தே,

இந்த உடலும், உயிரும், மனமும் அனகமாக உள்ளிருந்து விரிந்து விளங்கிக் கொண்டுள்ளது. அப்படி விளங்கிக் கொண்டிருக்கும் உடலையும் உயிரையும் அருள் ஒளியோடு இணைத்து நித்தியமாக்கிக்கொண்டு எக்காலமும் அழிவுறாது **நித்யானந்த பேரின்ப பெருஞ்சுகத்தோடு வாழ்வதே சுத்த சன்மார்க்க லட்சியமாகும்!!!**

ஆன்ம அகமிருந்து திருவருள் பூரணம் வெளிப்படும்போது,

தூல தேகமே - **சுத்த தேகமாகவும்**

சூக்கும தேகமே - **பிரணவ தேகமாகவும்**

காரண ஆன்ம சரீரமே - **ஞான தேகமாகவும்**

மாறி மரணமில்லா பெருவாழ்வில் மனித இனத்தை வாழ்விக்க உள்ளது.

**த** - ஞான தேகம்

**ய** - பிரணவ தேகம்

**வு**- சுத்த தேகம்

**அகமிருந்து வருக அருளுடன்! அனகமாக வாழ்க தயவுடன்!!**

## 18 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**சுத்த சன்மார்க்கம் என்றால் என்ன?!**

**சுத்த சன்மார்க்கி யார்?**

**சன் + மார்க்கம் = சன்மார்க்கம்**

**சன்**-என்ற சொல் **சத்து** என்று பொருள்படும்.

**சத்து மார்க்கமே-சன்மார்க்கம்** ஆகும்.

அதாவது, சத்துப்பொருள் ஆகிய **கடவுள் நிலையிலிருந்து** வெளிப்பட்டு வாழ்ந்துக்கொண்டிருத்தலாகும்.

அந்த சத்துப் பொருள் நமது தலைநடுவில் ஏழாவது ஆகிய நிராதார நிலையில் **அருட்ஜோதி கடவுள்-ஆன்மாவாக**

கோடி சூரியப்பிரகாசத்துடன் சுடர்விட்டுக்கொண்டிருக்கின்றது.

அதுதான், **கடவுளாகவும் இருக்கின்றது; நாமாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றது**

இதைத்தான் வள்ளற்பெருமான்,அருட்பெருஞ்ஜோதி அகவலில்,

''பொது உணர்வு உணரும் போது அலால், பிரித்தே, ''அது'' எனில், தோன்றா அருட்பெருஞ்ஜோதி'' என்கின்றார்.

அதாவது,நம் தலைநடுவே விளங்கும் **அருள் உணர்வுதான் அருட் ஜோதியாக** உள்ளது.

இந்த **அருட்ஜோதி அக வடிவம்தான்** நமக்கும் கடவுளுக்கும் பொதுவாக உள்ளது.

நம்மையும் கடவுளையும் ஒருபோதும் பிரிக்க முடியாது. அப்படி அது உண்மையில் இரண்டாகவும் இல்லை!

ஆனால் அது,இப்போது

**தேகமே நான்** என்ற உணர்வில் பிழைத்துக்கொண்டு இருக்கின்ற நமக்கு ஒரு சிறிதும் அனுபவப்படுவதாய் இல்லை.

**“தேகம் நான்”** என்கின்ற பொய்யான மாயா உடல் உணர்வைக் கடந்து, புருவ மத்திக்கு உட்புறம் நமது மன உணர்வை ஓர்மையுடன் நிலை நிறுத்தி **உள் நோக்கி உற்று உற்றுப் பார்த்தால் உண்மை** சிறிது சிறிதாக வெளிப்படும்.

“செல்லும் அளவில் செலுத்துவேன் சிந்தையை” என்பார் திருமூலர்.

மனதை எப்போதும் புருவமத்தியின் கண்ணே செலுத்த வேண்டும் என்பது சுத்த சன்மார்க்கிகளுக்கு வள்ளலார் இட்ட கட்டளை.

புருவமத்தியில் மனதை நிலை நிறுத்தாமல், **தேகமே நான்** என்ற உணர்வில் இருந்துக்கொண்டு, மகா மந்திரம் ஜெபித்தல், திருவருட்பா ஓதுதல், அகவல் பாராயணம் செய்தல் போன்றவை **புறமிருந்து செய்யும் முயற்சிகளே!** முழுப்பயன் தராது.

தேக நிலையைக் கடந்து நமது **நித்திய நிலையான அருட்ஜோதியாகிய உள்ளொளி** - நிலையிலிருந்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்பதே சுத்த சன்மார்க்கக் கொள்கையாகும்.

**சுத்த சன்மார்க்க அனுபவம், கண்டத்துக்கு மேல்** என்கின்றார் பெருமான்.

திருவருட்பாவில் வள்ளலார் குறிப்பிடுகின்றார்;

“புன் புலால் உடம்பின் அசுத்தமும் இதனில் புகுந்து, **நான் இருக்கின்ற** புணர்ப்பும், என்பொலா மணியே, எண்ணி நான் எண்ணி ஏங்கிய ஏக்கம் நீ அறிவாய்” என்கின்றார்.

எனவே நமது **நான் இருக்கின்றேன்** என்ற

**அக உண்மை-அருட்ஜோதி இருப்புணர்வை** உண்மை அறிவால் திடமாக பற்றிக்கொள்ள வேண்டும்.

**“பகுத்தறிவுடைய மனிதன் தன்னை தேக நிலையிலிருந்து விடுவித்துக்கொண்டு கடவுள் நிலையில் இருத்திக் கொள்ளவேண்டியவனாய் இருக்கின்றான்”** - என்கின்றார் சுத்த சன்மார்க்க சத்திய ஞானி தயாநிதி சுவாமி சரவணானந்தா.

**தனு கரணாதிகள் தாம் கடந்து அறியும் ஓர் அனுபவமாகிய அருட்பெருஞ்ஜோதி**

என்கின்றார் வள்ளலார்.

தனு என்றால் உடல்; கரணம் என்றால் மனம். இந்த உடல் உணர்வையும், மன உணர்வையும் கடந்து

**உள்ளொளி ஆகிய சத்து நிலையிலிருந்து நித்தியமாய் வாழ்வதுதான் சுத்த சன்மார்க்கம்!!!**

இப்படி வாழ்பவர்களே சுத்த சன்மார்க்கிகளாவார்கள்.

**சுத்தம் சோறு போடும்** என்பது பழமொழி.

சுத்தம் என்பது நினைப்பு மறப்பற்ற சுத்த **அருள் நிலையைக்** குறிக்கும்.

“**சோறு**”- என்றால், முக்தி என்று பொருள். இந்த அருள் நிலை ஆகிய முத்திநிலையில் முதலிலேயே பொருந்தி வாழ்வதுதான் சுத்த சன்மார்க்க ஏற்பாடு.

**“முத்தி என்பது நிலைமுன் உறு சாதனம்”**

என்பார் வள்ளலார்.

மற்றைய சமய மத மார்க்கங்களில் முத்தி என்பது வாழ்க்கையின் முடிவில் கிடைக்கப்பெற்று, முடிவில் உள்ளொளியில் ஒடுங்கி, மேல் பிறவியற்று சூன்யமாய்ப்போதலே ஆகும். அங்கு இறை இன்பானுபவ வாழ்வு தொடர்ந்திருக்க வாய்ப்பில்லை.

கடவுட் பேரின்பானுபவம் எக்காலும் தொடர்ந்திருக்க வேண்டுமானால் இவ்வுடலும் உயிரும் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும். அதுதான் இறவாமை ஆகிய முத்தேக சித்திநிலை பெறுவது. இதுவே சுத்த சன்மார்க்கக் குறிக்கோளாகும்.

**அகநிலையைப் பற்றிக்கொண்டு அங்கிருந்து அருள்ஒளியையே அனகமாக விரித்து உயிரும் உடலும் உடன் கொண்டு இவ்வுலகில் வாழும் முறையே சுத்த சன்மார்க்கமாகும்.**

**“அகமிருந்து அனகமாக வாழ்பவர்களே சுத்த சன்மார்க்கிகள்.”**

இவர்களே சுத்த சன்மார்க்க சங்க உறுப்பினர்களாவார்கள்.

**அகமிருந்து வருக அருளுடன்!**

**அனகமாக வாழ்க தயவுடன்!!!**

## 19 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை "இருத்தலின் அற்புதம்"!!!

வள்ளலார் அருள் வாக்கு;-

இந்த பௌதிக உடம்பில்,

**இருக்கின்ற நீ** யாரெனில்,

**"நான் ஆன்மா.**; சிற்றணு வடிவினன்.

இதன் இருப்பிடம், புருவமத்தியாகிய லலாட ஸ்தானம். மேற்படி ஆன்மா கோடி சூரியப் பிரகாசம் உடையது - என்கின்றார்.

மேலும் திருவருட்பாவிலே கடைசி பாடலில், சத்திய அறிவிப்பில் ஒரு முக்கிய உண்மையை கூறுகின்றார்;

**"என் சாமி, எனது துரை, என்னுயிர் நாயகனார் இன்று வந்து**

**நான் இருக்கும் இடத்தில் வந்து அமர்கின்றார்,**

**பின் சாரும் இரண்டரை நாழிகைக்குள்ளே எனது பேருடம்பில் கலந்து, உளத்தே பிரியாமல் இருப்பார்** "- என்கின்றார்.

**"நாம் இருப்பதே அற்புதம்தான்!"** நாம் இருப்பதே அதிசயம்தான்!

**நான் இருக்கின்றேன்** என்ற அகவுணர்வு புனிதமானது; தெய்வீகமானது; மகத்துவமானது;

நாம் இருப்பது செயற்கை அல்ல.

**இல்லது வாரா; உள்ளது போகா** என்பர் ஞானிகள்.

இல்லாத ஒன்று புதிதாக வந்துவிடவில்லை. எனவே நாம் இவ் உலகில் புதிதாக வந்துவிடவில்லை; அப்படி வரவும் முடியாது.

திடீரென்று தோன்றியவர்கள் அல்ல நாம். அதுபோல, இவ்வுடல் அழிந்துவிட்டாலும், உயிர் பிரிந்து விட்டாலும் **"நாம் இல்லாமல் போக முடியாது".**

இதைத்தான், **உள்ளது போகா** என்பர் ஞானிகள்.

**“ இருப்பது என்றும் இருந்துக் கொண்டுதான் இருக்கும்; நாம் எல்லோரும் என்றென்றும் இருப்பவர்களே! அனாதி காலமாக நித்தியமாய் இருப்பவர்களே நாம். இனியும் அளவிறந்த கோடி காலமும் இருந்துக்கொண்டேதான் இருப்போம்.**

**என்றும் இருப்பதுதான் நமக்கு இயற்கை!!**

**“நான் இருக்கின்றேன் என்ற இருத்தலிலிருந்து”**, ஒருவரும் ஒருபோதும், விட்டு விலகவோ, ஒதுங்கவோ முடியவே முடியாது.

தற்கொலை செய்துக் கொண்டால், **“இல்லாமல் போகலாம்”**, என ஒருவர் எண்ணினால், அது அறியாமை. இல்லாமல் போக முடியாது ஒருகாலும்!

ஒருவர் இறந்துவிட்டால், அவர் சமாதியில், அவர் எப்போது தோன்றினார், எப்போது மறைந்தார் என்பதை,

“தோற்றம் - மறைவு” என எழுதி, நாள் - மாதம் - வருடம் குறிக்கின்றனர்.

இது அக உண்மையை உணராமையே.

அதே போல் ஒருவர் சொல்கின்றார்;-

“நான் பிறந்து 50 வருடங்கள் ஆகின்றன”, என தனது பிறந்த தேதியை சொல்கின்றார். அந்த பிறந்த தேதியைக் கூட உண்மையில் நாம் அறியோம். நமது தாய், தந்தை சொல்லக் கேள்விப்பட்டதுதானே!

உண்மையில், “நான் இருக்கின்றேன்” என்ற இருத்தல் உணர்வு, இவ்வுலகத்தே எப்பொழுதிருந்து இருக்கத் தொடங்கியது? எனப்பார்த்தால், அதன் ஆரம்பத்தை அறியவே முடியாது!

இதன் உண்மையை அறிய வேண்டுமானால், ஒருவன், தேக உணர்வைக் கடந்து, நினைப்பு மறப்பு அற்று, வேறு புற உலக சிந்தனை இல்லாது, மன ஒர்மையோடு, புருவமத்தியில் தனது கவனத்தைச் செலுத்தி, அகமுகமாக உள்நோக்கி, ஆழ்ந்து ஆராய்ந்துப் பார்த்தால், **நாம் நித்திய ஜீவனாக என்றென்றும் இருந்துவரும் நம் இயற்கை இருப்புண்மையை உணரலாம்.** இது உண்மை! சத்தியம். முயற்சி செய்வோம்; அந்த முயற்சியும் இன்றே தொடங்குவோம்.

அந்த விசார முயற்சியால் அனுபவமாகின்ற உண்மை என்னவெனில்,

**நம் தலைநடுவே விளங்கும் ஓர் அணுத்துவமான புள்ளி நிலையிலிருந்து விரிகின்ற, அருவமான, அனாதி நித்திய இருப்புணர்வு- அறிவு ஆகாச வெளியாக உணரப்படும்.**

**"அந்த உள்ளுணர்வுக்கு எப்போதும் இருக்கின்ற தன்மையே உள்ளதாக உணரப்படும்."**

அங்கு காலம் பொய்யாகி விடும்.அங்கு இறந்தகாலமோ, எதிர்காலமோ இல்லை.

அங்கு அது, "நித்திய நிகழ்காலத்திலேயே சதா நான் இருக்கின்றேன் என சுடர்விட்டுக் கொண்டிருப்பதை உணரலாம்.இது உண்மை!

அப்படி "நான் இருக்கின்றேன்" என விளங்குவது யார்?

அப்படி விளங்குவது கடவுளே! அதை "நான் தான்" என நாம் உரிமை கொண்டாட முடியாது. இத்தனை காலமாக அதை **"தனது"** என எண்ணி வந்ததுதான் "அஞ்ஞானமாகிய, பாசாந்தகார ஆணவ இருள்".

இந்த ஆணவ இருள் நீக்குவதற்காக, கோடிக் கணக்கான பிறவிகளில், அளவிறந்த காலமாக எல்லையில்லா சுக துக்கங்களை அனுபவித்து வந்துள்ளோம்.

இந்த தருணம் தான் அந்த அஞ்ஞான இருள் நீங்க இருக்கின்றது.

அந்த நான் என்ற அறிவுணர்வுக்குள்ளேதான் கடவுள், உள்ளொளியாய் - அருள் ஒளியாய் பிரகாசித்துக் கொண்டு இருக்கின்றார். இந்த தருணம் அவர் வெளிப்பட்டு, நம்மையும் அருள் வண்ணமாக்கி நித்திய, சத்திய, சுகபூரண பேரின்பப் பெருவாழ்வில் நிலவச் செய்ய உள்ளார். அவர் திருவுள்ளம் அறிந்து அவரை அறிய, அவரை சார்ந்து, கலந்து, ஒன்றி வாழ நாமும் இடைவிடாது முயற்சி செய்வோமாக! அம்முயற்சியில் வெற்றிபெற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் பெருங்கருணை புரிவாயாக!!

அன்பே அருட்பெருஞ்ஜோதி!

தயவே தனிப்பெரும் கருணை!!

## 20-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### அஞ்ஞான இருள் நீங்க வேண்டும்!!

### அகத்தில் அருட் ஜோதி உதயமாக வேண்டும்!!!

திருவாசகத் தேன் பருகுவோம்; உடல், உயிர், மனம் கடந்து உள்ளொளியை தரிசிப்போம்!!!

திருவாசகத்தில் ஓர் அரிய பாடல்;-

“இன்று எனக்கு அருளி, இருள் கடிந்து, உள்ளத்தே எழுகின்ற ஞாயிறே போன்று,

“நின்றநின் தன்மை நினைப்பு அற நினைத்தேன், நீ அலால் பிறிது மற்று இன்மை

“சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து, ஒன்றாம் திருப்பெருந்துறையுறை சிவனே

“ஒன்றும் நீ அல்லை; அன்றி ஒன்றில்லை, யாருனை அறியகிற்பாரே!! - என்பது பாடல்.

இப் பாடலின் பொருள் காண்போம்.

இன்று எனக்கு அருளி;

“இன்று” என்பது, இந்தப் பிறப்பில் என்பதாகும்.இதற்கு முன் கோடிக்கணக்கான பிறவிகளில், பல கோடி ஆண்டுகளாக எல்லையில்லாத சுக துக்க அனுபவங்களை ஏற்று ஏற்று பிழைத்து வந்துள்ளோம்.

மாணிக்கவாசகப் பெருமான் சொல்கின்றார்;

“புல்லாகிப், பூடாய், புழுவாய், மரமாகி,  
பல்விருகமாகிப், பறவையாய்ப், பாம்பாகிக்,  
கல்லாய், மனிதராய்ப், பேயாய்க், கணங்களாய்,  
வல்லசுரராகி, முனிவராய்த், தேவராய்ச்,  
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்,  
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், எம் பெருமான்  
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்” என்கின்றார்.

ஆக, ‘‘இன்று’’ என்பது எல்லாப் பிறவிகளையும் கடந்து வந்துள்ள இந்த மனிதப் பிறப்பைக் குறிக்கின்றது.

அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்பதால், தன்னையும், தனக்கு ஆதாரமான தலைவனையும் கண்டுகொண்டு பேரின்பம் அடைவதற்கான பக்குவமும் இப்பொழுதுதான் ஆண்டவர் அருள் புரிகின்றார்!

**எழுகின்ற ஞாயிறே போன்று, உள்ளத்தே இருள் கடிந்து;**

ஆன்ம அகத்தே அனாதி காலமாக இருந்து வரும் அஞ்ஞானம் என்கின்ற அறியாமையாகிய, பாசாந்தகார இருளை அகற்றி அருள்கின்றார் இறைவன்.

எது போல என்றால், ‘‘எழுகின்ற ஞாயிறே போன்று’’ என்கின்றார்.

இரவு நேரத்தில் உலகம் இருளில் மூழ்கியுள்ளது.காலையில் சூரியன் உதயமானதும் இருள் அகன்று விடுகின்றது.

அதுபோல் ஆன்ம அகத்தே இறைவன் அருட்ஜோதி ஞான சூரியனாக திருப்பள்ளி எழுகின்ற போது, அனாதி காலமாக நம்மை மறைத்திருந்த அஞ்ஞான இருள், கணப்பொழுதில் நீங்கிவிடுகின்றதாம்.

நின்ற நின் தன்மை, நினைப்பற நினைந்தேன்;

இறைவனுடைய தன்மை என்பது, பேரருட் பெருங்கருணையே ஆகும். அதையே ‘‘திருவருள்’’ என்பர் வள்ளலார், தனிப்பெரும் கருணை என்பார்.

இறைவன் வேறல்ல; அவருடைய கருணையாகிய திருவருட் சக்தி வேறல்ல!

அகண்டாகாச வான் பெருவெளி முற்றும் அனாதியாய், அன்பு இருப்பாய் - சத்துப்பொருளாய் - இயற்கை உண்மையாய் இருந்து வருபவர் மெய்ப்பொருளாகிய கடவுள்.

அவரே தன் இயற்கையுண்மையை முழுவதுமாகி வெளிப்படுத்த வேண்டியே, இயற்கை விளக்கமாய், அருள் உணர்வாய் நம் தலைநடு விளங்கும் ஆன்மாவில் என்றுமாய் விளங்கிக் கொண்டுள்ளார்.

அவரை நினைந்து நினைந்து, நினைத்த நினைப்பும் அற்று போய், இரண்டற கலந்து நிற்கின்றார், மணிவாசகப்பெருமான்.

அப்படிக் கலந்து, “ஒன்றாகி” நிற்கும் தருணத்தே, அவருக்கு இறைவன் ஒரு பேருண்மையை உணர்த்துகின்றார். அது என்னவெனில்;-

**நீ அல்லால், பிறிதுமற்றின்மை;** என அனுபவத்தில் உணர்கின்றார்.

அதாவது, இறைவனே இவ்வுலகில் எல்லாமானவராக விளங்கிக் கொண்டிருக்கின்றார். அவருக்கு அன்னியமாக எந்த அணுவோ, அண்டமோ, பொருளோ, உயிர்களோ, மனிதர்களோ இல்லை!

இறைவனே, யாவும் தானாய் - அருளாலே விளங்கிக் கொண்டு இருத்தலை உள்ளபடி உணர்ந்து நிற்கின்றார்.

**சென்று சென்று, தேய்ந்து தேய்ந்து, அணுவாய்;**

இதன் பொருள் என்ன?

ஆன்ம அணுவில் தான் ஆண்டவருடைய, அன்பு இருப்பை- தனிப்பெருங்கருணை இயல்பை பரிபூரணமாக கண்டு அனுபவிக்க முடியும்;

சிவானந்தத் தேனை பருக முடியும்.

“ஓர் அணு காண்குவர், தயவுக் கண்ணினர், தேறார் பூதக் காட்சியில் ஏனோர்” என்பார் தயாநிதி சரவணானந்தர்.

பூதக் காட்சி என்பது,

“தேகமே நான்” என்ற மாயா மயக்க உணர்வு. உடலே தன்னுடைய வடிவமாக கொண்டிருப்பவர்கட்கு, ஆன்ம அணுவின் உண்மையும், அதற்கு உள்ளீடாக உள்ள அருட்பெருவெளியின் இறையுண்மையும் சற்றும் உணரமுடியாது.

எனவே, உடல் உணர்வையும், அலை மன உணர்வையும், அநித்திய ஜீவ உணர்வையும் கடந்து, ஆன்ம அணு மாத்திரமாய் நிற்க வேண்டும்.

இதைத்தான் வள்ளலார்:-

“தனு கரணாதிகள்தாம் கடந்து அறியும் ஓர் அனுபவமாகிய அருட்பெருஞ்ஜோதி” என்கின்றார்.

தனு என்றால் உடல்; கரணம் என்றால் மனம்.

இந்த ஜடமான தத்துவங்களைக் கடந்து உள்ளே செல்லவேண்டும்.

இதைத்தான் மாணிக்கவாசகர்,

“சென்று சென்று, தேய்ந்து தேய்ந்து” என்கின்றார்;

தன்னை ஓர் அருட்ஜோதி ஆன்ம அணுவாக கண்டுக்கொள்கின்றார்.

அப்படி அவர் “அக அனுபவத்தில்” நிறைந்திருக்கும் போது

ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுகின்றார் :-

**ஒன்றாம் திருப்பெருந்துறையுறை சிவனே, ஒன்றும் நீ அல்லை! அன்றி ஒன்றில்லை** என்கின்றார்.

இதன் பொருள் என்ன?

**இருப்பது ஒன்றே; அதுவே எல்லாமாய் இருக்கின்றது என்பதுதான் உண்மை அனுபவம் .**

அதே நேரத்தில் புற உலகில், எந்த ஓர் அணுவையோ, உயிரையோ, பொருளையோ, உடல் உருவங்களையோ, அண்டத்திலுள்ள சூரியன் முதலான கோள்களையோ, “கடவுள்”, எனக் கூறிவிட முடியாது. அதே நேரத்தில் அவர் அன்றி இங்கு ஏதும் ஆகிவிட முடியாது.

ஆக இறைவன், **எல்லாம் ஆனவராகவும், ஒன்றும் அல்லாதவராகவும்** இருக்கின்றார்

இதைத்தான், “**ஒன்றும் நீ அல்லை; அன்றி ஒன்றில்லை**” என்கின்றார்.

அப்படிப்பட்ட ஆண்டவரை மனிதன் எங்கே கண்டுகொண்டு பேரின்ப நிலையில் வாழ முடியும்?

அந்த இடத்தைதான், திருப்பெருந்துறை என்கின்றார்.

திருப்பெருந்துறை என்பது, திருச்சிற்றம்பலம் ஆகும்.

ஆன்மா தான், திருச்சிற்றம்பலமாக, இறைவன் உறையும் திருப்பெருந்துறையாக உள்ளதாம்.

அந்த திருப்பெருந்துறை ஆகிய சிற்றம்பலம் எங்கு உள்ளது?

நம் தலைநடு இடத்தே உள்ளதாம்.

அதாவது, உச்சிக்குக்கீழே, உண்ணாவுக்கு மேலே, புருவமத்திக்கு நேரே, **தலைநடு அகமையத்தில், நிராதார நிலையில்** திகழ்கின்றதாம்.

இங்குதான், எல்லாம் வல்ல கடவுள், அருட்பெருஞ்ஜோதி-தனிப்பெருங்கருணையாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

நம்மையெல்லாம், ஆட்கொண்டு, சச்சிதானந்த, நித்தியானந்த பேரின்பானுபவத்தை வழங்கிட அருள்ஞானத் திருநடனம் புரிந்துக் கொண்டுள்ளார். அடுத்து முக்கியமான செய்தியை கூறுகின்றார் :

**யார் உன்னை அறியகிற்பாரே!!** என்கின்றார்;

**இறைவனை அவருக்கு அன்னியமாக, வேறாக இருந்து அவரை உணர முடியாதாம். அவரே நாமாகிய ஆன்மாவாகவும் உள்ளார். இந்த உண்மையை உள்ளூர உணர்ந்து அவர்மயமாய் வாழ கற்றுக்கொள்ள வேண்டும். இதுவே உண்மையான கல்வி ஆகும்.**

அருட்ஜோதி ஆகிய ஆன்மா என்பது, தன்னைத்தானே உணர்வதும், உணர்த்துவதும் ஆகிய நிலை!

அவரே நாமாய் இருந்துக்கொண்டு, தன்னைத்தானே அனுபவித்துக் கொண்டும் இருப்பதுதான் சச்சிதானந்த இறை வாழ்வு ஆகும்!

அகம் இருந்து வருக அருளுடன்!

அனகமாக வாழ்க தயவுடன்!!

## 21-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## பிரபஞ்சத் தோற்றம்

## கடவுளின் இருப்பும், பிரபஞ்சத் தோற்றமும்

எல்லையற்ற இந்த பிரபஞ்சம் (உலகம்) எங்கிருந்து தோன்றியது?

ஏன், எதற்காகக் தோன்றியது? எப்படித் தோன்றியது?

இந்த பேருலகில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற, எண்ணற்ற, அனந்தங் கோடி உயிரினங்களும், பல கோடி மனிதர்களும், எத்தனையோ விதமான கடும் சோதனைகளில் சிக்கி, தாங்க முடியாத பெருந் துன்பங்களை அனுபவிக்கின்றனரே!

பசி, கொலை, பயம், மனக்கவலை, வறுமை, தீராத கொடிய நோய்கள், முதுமை, வாழ்க்கையில் பல விதமான சோதனைகள்,

வேதனைகள் முதலிய துன்பங்களை அனுபவிக்கின்றதை பார்க்கும் போது, **கடவுள் என்று ஒருவர் இருக்கின்றாரா? உயிர்களையும், உலகத்தையும் படைக்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே!!** என எண்ணத் தோன்றுகின்றது.

கடவுள் கருணையே வடிவானவர் என மெய்யுணர்ந்த ஞானிகள் சொல்கின்றனர்.

**அப்படி என்றால், ஏன் இந்த உயிர்களை எல்லாம் துன்பப்படும்படி வைத்துள்ளார்?**

இதற்கான விடைகளைக் தான் சற்று விரிவாக ஆய்வு செய்ய வேண்டியிருக்கின்றது.

## கடவுளின் மூல நிலை

"அகர முதல எழுத்தெல்லாம், ஆதி பகவன் முதற்றே உலகு"- என்கின்றார் திருவள்ளுவர்.

பொருள்; "அ" என்ற தமிழ் முதல் எழுத்து, மற்ற எல்லா எழுத்துக்களுக்கும் முதற் காரணமாய் உள்ளதுபோல், இந்த உலகத் தோற்றத்திற்கும், இங்கு வாழ்கின்ற அனந்தங் கோடி உயிரினங்களுக்கும், ஒவ்வொரு உயிரின் உயிர் உணர்வில் உண்டாகின்றன இன்ப துன்ப அனுபவங்களுக்கும், இறைவனே காரணமாக உள்ளார் என்கின்றார்.

இப்பொழுது இறைவனின் ஆதிமூல நிலையைப் பற்றியும், அதிலிருந்து உண்டான உலகம் - உயிர்கள்- வாழ்வு அனுபவம் பற்றி விசாரம் செய்வோம்.

"கடவுளின் இயற்கை இருப்பும், பிரபஞ்சத் தோற்றமும்"

இவ்வுலகம் சுமார் 17,000 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானதாக இன்றைய விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அதற்கு முன் உலகம் இல்லை! ஒன்றுமே இல்லை!

வெறும் சூன்ய வெளி மட்டுமே இருந்தது!!!

அந்த சூன்ய வெளி "அருவமாய்" (கண்ணால் காணமுடியாத படி) இருந்தது.

ஒளியின்றி, இருள் நிறைந்ததாய் இருந்தது;

அகண்டமாய் - எங்கெங்கும் - எல்லையற்றதாய் - பரந்து விரிந்து இருந்தது.

அதாவது, வெற்றிடம் மாத்திரமே எங்கெங்கும் இருந்து வந்துள்ளது!!!

அந்த இருள் செறிந்த அகண்டமான, முடிவற்ற வெறுவெளியில் என்ன இருந்தது?

என்றால்,

அகண்டமான அன்பு என்கின்ற இருப்பு இருந்து வந்துள்ளதாம்.

இந்த அன்பு இருப்பைத்தான் கடவுளாகக் கண்டனர் மெய்ஞ்ஞானிகள்.

இந்த இருப்பு, "தன்னந்தனியதாய், தான் ஒரே ஒருவராய், தனக்கு அயலாய்-வேறாய் பிற ஏதும் இல்லாததாய்,"

அனாதியானதாய் (ஆரம்பம் - முடிவு இல்லாததாய்) இருந்து வந்துள்ளது.

இந்த அனாதி - நித்திய - சத்திய - அன்பு இருப்பினையே, சத்துப்பொருள் - மெய்ப்பொருள் என்கின்றனர் மெய்ஞ்ஞானிகள். நம் வள்ளலார், இதையே, இயற்கை உண்மை என்கின்றார்.

இப்பொழுது, நாம் தெரிந்துக் கொள்ள வேண்டிய முக்கியமான உண்மை, என்னவென்றால், **அப்படி அனாதி காலமாக எங்கெங்கும், என்றென்றும், இருந்துவரும் அந்த சத்துப் பொருளாகிய - இயற்கை உண்மையாகிய - அன்பு இருப்பு, அப்படியே, அது மாத்திரமாய், எப்போதும் போல இருந்துக் கொண்டிருக்க வேண்டியதுதானே? ஏன் இந்த பிரபஞ்சத்தையும், இதில் அனந்தங்கோடி உயிர்களையும், அவைகளுக்கு இடையறா இன்ப துன்ப அனுபவத்தையும் தோற்றுவித்துள்ளது?**

இதெல்லாம், ஏன்? ஏன்? என்ற கேள்விதான் எழுகின்றது. இதற்கு பதில் என்ன?

இயற்கை உண்மையாகிய கடவுளுக்கு, இயற்கையில், மூன்று இயல்பு உள்ளதாம்.

அதாவது "ஒன்றே மூன்றாக விளங்குகின்ற இயற்கை நிலையாம்!!"

அதுவே,

**இயற்கை விளக்கம்**

**இயற்கை இன்பம்**

**இயற்கை உண்மை**

இதையே,

சத்து - சித்து - ஆனந்தம் என்பர் ஞானிகள்.

இதையே,

அன்பு - அருள் - இன்பம் எனவும் கூறப்படும்.

இப்பொழுது மெய் விசாரத்திற்கு வருவோம்.

அந்த இருள் மய சூன்ய வெளியில் நிறைந்திருந்த, இயற்கை உண்மையாகிய, அன்புக் கடவுளிடத்தே, இயற்கை விளக்கமாகிய அருட் சக்தியும், இயற்கை இன்பமாகிய ஆனந்த அனுபவமும் தன்னுள் ஒடுங்கியே கிடந்ததாம்.

அதனால், அன்பு இருப்பு ஆகிய கடவுள்,

**இருந்தும் இல்லாதது போல் இருந்தாராம்.**

அதனால், **கடவுள் இருப்பில் பயன் ஒன்றும் இல்லாமல் இருந்தது.** எனவே, உள்ளொடுங்கி இருக்கும், இயற்கை விளக்கமாகிய அருட் சக்தியையும். இயற்கை இன்பமாகிய அருள் ஆனந்த அனுபவத்தையும் **வெளிப்படுத்த** இறைவன் திருவுளம் கொண்டார்.

தன்னைத் தானே அனுபவிக்க திருவுளம் கொண்டார்.

எனவே, அவரே,

தன்னை அனந்தங்கோடி ஆன்மாக்களாக - இயற்கை விளக்கமாக தோற்றம் கொண்டார் அத் தருணத்தே, வெட்டவெளி முழுதும் ஆன்ம அணுக்களாய் எங்கும் நிறைந்து விட்டன. அந்த எண்ணற்ற, தனி ஒவ்வொரு ஆன்ம அணுக்களுக்கு உள்ளும், இயற்கை உண்மையும், இயற்கை விளக்கமும், இயற்கை இன்பமும் பரிபூரணமாய் உள்ளொடுங்கி இருந்தது. எனினும், அவ் ஆன்ம அணுக்களுக்கு, தன்னுணர்வு உண்டாகவில்லை.; தன்னை அறியாமல், இயற்கையிலே,

அஞ்ஞானம் என்கின்ற அறியாமை இருளில் மூழ்கி இருந்தன. இதை, ஆணவ மலம் என்கின்ற பாசாந்தகார இருள் எனக் கூறுவர்.

இந்த இருள் நீங்கி ஆன்மாக்கள், தன்னையறிந்து, பேரின்பத்தில் வாழ, கடவுள் திருவுளம் கொண்டார்.

இந்த ஆணவ அஞ்ஞான இருள் நீங்க, புறத்திருந்து அறிவை வளர்க்க, ஆன்மாக்களுக்கு, பூத பௌதிக உடலில் செலுத்த இறைவன் திருவருட் சக்தி காரியப்படத் தொடங்கியது.

அத் தருணத்தேதான், இறைவன் நடுவிருந்த (அகம் இருந்து) திருவருட் சக்தி வெளிப்பட்டு, புறநிலை ஆகிய பிரபஞ்சமாய், பஞ்ச பூதங்களாய் (ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம்) விரிந்து விளங்கலாயிற்று.

முதலில், ஆகாசம் என்கின்ற முதல் பூதமும், பின் காற்றும், காற்றிலிருந்து நெருப்பும்(சூரியன்), பின் நீரும், நிலமும் தோன்றிற்று.

இதன் தொடர்ச்சி, தயவு ஒளி தெய்வீக சிந்தனை; **message** - 22ல் அடுத்து காணலாம்.

## 22-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## தியானமும் தியாகமும்

## (தொழுகையும் தொண்டும்)

இதையே நம் வள்ளல்பெருமான்,

**சத்விசாரம், பரோபகாரம்** என்பார்.

அன்பும் அறனும்உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது.; என்கின்றார் திருவள்ளுவர்.

பொருள்;-

இல் என்றால், வீடு என்று பொருள். ‘‘வீடு’’, என்பது உண்மையில் ஆன்மா ஆகும்.

**இந்த ஆன்ம இல்லமாகிய சிரநடு சிற்றம்பலத்தில் தங்கி, அங்கே நித்திய ஆன்ம சொரூபத்தில் நிலைத்திருந்துகொண்டு, கடவுளிடத்தில் அன்பும், புற**

**உலகில் சூழ வரும் உயிர்களுக்கும் மனிதர்களுக்கும், "அறம்"ஆகிய ஜீவகாருண்யப்பணி புரிந்துகொண்டிருப்பதே, உண்மையான இல்லற வாழ்வாகும்.**

திருவருட் பிரகாச வள்ளலார் இதையே **சத்விசாரம், பரோபகாரம்** என்கின்றார்.

**சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் என்னவென்றால், "எல்லா ஜீவர்களிடத்தும் தயவும், ஆண்டவரிடத்து அன்புமே முக்கியமானவை".**

வள்ளலாருக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே உபதேசித்தது என்ன எனில்,

"கருணையும் சிவமே பொருள்", எனக் காணும் காட்சியே பெறுக!! மற்றெலாம், " மருள்நெறி எனவே எனக்கு நீ உரைத்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்" என்கின்றார்.

"தியானம் என்கின்ற சத்விசாரம்"

**"சத்விசாரம்" என்றால் என்ன?**

கடவுளினது புகழையும், அவரது தரத்தையும், ஆன்ம உண்மையும் அதன் தரத்தையும் விசாரித்தல்.

இப்படி கடவுள் உண்மையையும், ஆன்மாவின் உண்மையையும் அறியமுடியாமல், தடையாக இருக்கும் நமது ஜீவனுடைய சிறுமைகளையும், குறைகளையும் நீக்கி அருள வேண்டி, ஆண்டவரிடத்தில் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

இனி, சத்விசாரம் அல்லது தியானம் என்பது குறித்து விசாரிப்போம்.

சத்விசாரம்!!

மூன்று சொல் சேர்ந்ததே சத்விசாரம் ஆகும்.

அதாவது; **சத்து + வி + சாரம் = சத்விசாரம்.**

"சத்து" என்ற சொல், சத்துப் பொருள் ஆகிய மெய்ப்பொருளாம் கடவுளைக் குறிக்கின்றது.

அடுத்து, **"வி"** என்கின்ற ஒரெழுத்து மொழி, கடவுள், நம் புருவமத்திக்கு உள்ளே, தலைநடுவில், நிராதாரநிலையில், ஆன்மாவில் விளங்குகின்ற உள்ளொளியாகிய - அருட்ஜோதியை குறிப்பதாம்.

“சாரம்”, என்றால், சார்ந்து வாழ்தல் என்று பொருள்.

ஆக, **“சத்துப் பொருளாகிய, “வி” என்கின்ற, “அருள் ஒளிப் பரம்பொருளாம்”, கடவுளை, சார்ந்து கலந்து ஒன்றி வாழ்தலே சத்விசாரம் என்ற சொல்லுக்குப் பொருளாகும்”. இதுவே தியானம் ஆகும்.**

சத்விசாரத்திற்கான வழிமுறைகள் என்ன?

நமது மனதை எப்போதும் சிற்சபைக் கண்ணே செலுத்த வேண்டும் என்கின்றார் வள்ளலார்.

அந்த சிற்சபை என்றால் என்ன? அது இந்த தேகத்தில் எங்கே உள்ளது?

ஆன்மாவே சிற்சபை ஆகும். சித்து + சபை = சிற்சபை.

“சித்து” என்றால் அறிவு. “சபை” என்றால் ஆலயம்; **சிற்சபை என்பது, அறிவு ஆகாயமாக விளங்கும் ஆன்மா.** இதுவே கடவுளுக்கு உண்மையான திருக்கோயிலாக உள்ளது.

இந்த அறிவுத் திருக்கோயில் ஆகிய ஆன்மா விளங்கும் இடம் மனிதனின், “தலைநடுவே” உள்ளது.

இங்குதான், அகண்ட வான் பெருவெளி எங்கும் நிறைந்த கடவுள் உண்மை, அருள்ஒளியாக சதா சுடர்விட்டுக்கொண்டும், தன் ஐஞ்சத்தி ஐந்தொழிலால் இந்த மகா பிரபஞ்சத்தை தோற்றுவித்து, இடையறாது இயக்கிக் கொண்டிருக்கின்றதாம். இதுவே கடவுளின் அருள் ஞானத் திருநடனமாகும்.

அருள் ஞான உணர்வு அல்லது **தனிப்பெருங்கருணை** தான் அவரது திருமேனியாக, அகவடிவமாக உள்ளதாம்.

இப்படியான கடவுளை எப்படி தியானம் செய்வது?

நமது மனதை எப்போதும் புருவமத்தியில் கண்ணே செலுத்த வேண்டும் என்கின்றார் வள்ளலார்.

அதாவது புருவமத்திக்கு உள்ளே மனதை நினைப்பு மறப்பு அற்று, வேறு உலக விஷய சிந்தனைகள் ஏதுமின்றி நிலைக்கச் செய்யவேண்டும்.

சுத்த சன்மார்க்க அனுபவம் கண்டத்துக்கு மேல், புருவமத்தியில் என்பார் நம் பெருமான். ஆக, **மனதை புருமத்திக்கு உள்ளே**

**நிலைநிறுத்தி, அகமுகமாக செலுத்தி, உற்று உற்று, உள்ளே பார்க்க பார்க்க முதலில் ஆன்மாவின் இருப்பை அறியலாம்.**

பின் ஆன்மாவிற்கு உள்ளே இருக்கும் அருள் ஒளியோடு தொடர்பு கொள்ள அதி தீவிர முயற்சி செய்ய வேண்டும்.

வள்ளல் பெருமான் இதற்கு ஓர் குறிப்பை வழங்கியுள்ளார்;-

இந்த தேகத்தில் புருவமத்தியில், ஆன்ம அறிவு என்கின்ற கற்பூரத்தில், அருள் என்கின்ற தீபம் விளங்குவதாக பாவித்துப் பார்த்து, அதில் பழகிப்பழகி, கடவுளிடத்து உண்மையாகிய அன்பையும் ஜீவர்களிடத்து, உண்மையாகிய காருண்யத்தையும் இடைவிடாது வைக்க வேண்டியது.

இதுவே வள்ளலாரின் உபதேசமாகும்.இதுவே சுத்த சன்மார்க்க தியான முறையாகும்.

**தியானம்** என்றால் என்ன?

**"தயா நாம்" ஆதலே உண்மைத் தியானம்** ஆகும்.

"தயா நாம் - தயா நாம்" என திரும்பத் திரும்ப உச்சரித்தால், தியானம் என்றாகும்.

இறைவன் அருள் உணர்வினன்; அகவடிவினன்: தனிப்பெரும் கருணை அல்லது தனிப்பெரும் தயவே வடிவானவன்.உண்மை அறிவாகிய, ஆன்ம அறிவைக் கொண்டு ஆண்டவருடைய தயா அல்லது அருள் வடிவை சத்விசாரத்தால் சார்ந்து, கலந்து, ஒன்றி வாழ்தலே தியானம் ஆகும். இனி,

தியாகம் என்கின்ற பரோபகாரத்தைப் பற்றி ஆய்வோம்.

**பரோபகாரம் (தியாகச் செயல்);-**

**பரோபகாரம் என்பது யாது?**

தேகத்தாலும்,மனத்தாலும், இந்திரியத்தாலும், திரவியத்தாலும், ஆன்மாக்களுக்கு உபகரித்தல். திரவியம் நேராத பட்சத்தில் திரகரணசுத்தியாய் (மனம், வாக்கு, காயம்அதாவது சிந்தனை, சொல், செயல்) ஆன்மநேய சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் சீவர்களினது வாட்டத்தைக் குறித்து கடவுளிடத்தில் பிரார்த்தித்தல்.

**"காலம் தாழ்த்தாது எவ்வுயிரையும் தம்முயிர் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும்!"**

ஜீவகாருண்யமே, பரோபகாரம் ஆகும். இந்த ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மேற்கொள்பவர்கள் முதலில், புலால் என்னும் மாமிச உணவை மறுத்தவர்களாகவும், எவ்வுயிரையும் கொலைபுரியாதவர்களாகவும் இருக்க வேண்டியது முதற்படி.

அடுத்து பசியால் வாடுகின்ற, எந்த ஆதரவுமற்ற ஏழைகட்கு உணவளித்தல் முக்கியமான, அவசியமான பரோபகார தியாகச் செயல் ஆகும்.

வள்ளலார் அருள் வாக்கு;

**ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு!**

**ஜீவகாருண்யமே முக்திக்கு முதற்படி!!**

**ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்!!!**

**முக்கிய குறிப்பு;-**

சத்விசார சாதனையையும், பரோபகார செயலையும் தனித்தனி நேரத்தில் செய்வதன்று.

சத்விசாரத்தால் அகநிலையில் உள்ளொளியைப் பற்றி இருந்துக்கொண்டே, புறத்தில் சூழவரும் உயிர்களுக்கும் மனிதர்களுக்கும் ஜீவதயவு தொண்டாற்றி மகிழ்தல்.

இதனால் வருகின்ற இன்பமே அருள் இன்பமாகும்!

இதுவே சச்சிதானந்த-நித்தியானந்த வாழ்வாகும்.

அகமிருந்து வருக அருளுடன்!

அனகமாக வாழ்க தயவுடன்!!

## 23-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## அணுவில் ஆண்டவன்

நாம் கண்ணால் காணும் இந்த மாபிரபஞ்சம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூத அணுக்களால் ஆனது.

இந்த அணுக்கள் எல்லாம் ஜடமே! இவைகளுக்கு “இருப்புணர்வு” கிடையாது.

இந்த பிரபஞ்ச வெளியில் அனந்தம் கோடி கோடி ஆன்மாக்கள் அனாதி காலமாகவே இருந்து வருகின்றன.

இந்த ஆன்மாக்கள் தனித்தனி ஒன்றிற்கும், அணு என்றே மெய்ஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த ஆன்ம அணுக்கள், அருவமானது; கண்ணால் காண முடியாது.

எல்லாம் வல்ல கடவுள், அகண்டாகாச வான் பெருவெளி முற்றும், பரமாகாச சொரூபியாக நிறைந்துள்ளவர். அவரே, தன்னைத்தானே அனுபவிக்கும் பொருட்டு, அனந்தங் கோடி ஆன்ம அணுக்களாய் அனாதியே தோற்றம் கொண்டுள்ளார்.

**ஒவ்வொரு தனித்தனி ஆன்ம அணுவும், அகண்ட வான்பெருவெளி முற்றும் நிறைந்துள்ள கடவுள் இயற்கை உண்மையை தன்னுள் கொண்டதாகும்.**

ஆண்டவருக்கு, அகல் வான்வெளி நிறைந்த பரமாகாச சொரூபம் கடவுளின், "பெருவடிவம்" ஆகும்.

ஆன்ம அணு கடவுளுடைய, "சிறு வடிவம்" ஆகும்.

இரண்டும் கடவுளுடையதே! இந்த ஆன்ம அணு, அகண்டாகாச நிறைவிலே சிற்றணுவான, கடவுள்-ஆன்மா (கடவுளான்மா) எனப்படும்.

எனினும், இந்த ஆன்மாக்கள் இயற்கையிலே, "அறியாமை என்கின்ற அஞ்ஞான, பாசாந்தகார இருளில் மூழ்கிக் கிடந்துள்ளதாம். இதையே, ஆணவ மலம் என்பர்.

தன்னை உணராது அஞ்ஞான ஆணவ இருளில் ஜடம் போல் கிடந்த ஆன்மாக்களை, அகம் விழிப்படைய ஆண்டவர் திருவுள்ளம் கொண்டார்.

அதற்கு புறநிலையில் இருந்துதான் அறிவுணர்வை சிறிது சிறிதாக உண்டுபண்ண வேண்டியிருந்தது.

அதற்காக பஞ்ச பூதங்களால் ஆன பௌதிக உடம்பில் **(physical body)** ஆன்ம அணுவை சேர்க்கின்றார்.

ஆன்ம அணுவுக்குள் கடவுள் பரிபூரணமாக, உள்ளொளியாய் இருந்து, தனது அருட் சக்தியால், அகத்தில் உள்ள பெருஞ்ஜோதி நிலையை புறத்தில் விரித்து, பஞ்ச பூத மாபிரபஞ்சத்தை தோற்றுவிக்கின்றார்.

ஐம்பூத அணுக்களின் கூட்டுத் தொகுப்பே, ஆன்மாவுக்கு சூழ் உடம்பாய் அமைகின்றது.

ஆன்ம அணுவுக்குள்ளிருந்து, திருவருட் சக்தி, உயிராற்றலாய், விரிகின்றதும், அதே நேரத்தில், பஞ்ச பூத அணுக்கள் சேர்ந்து உடல் உருவமாய் சூழ்கின்றதாம்.

ஆணவ மலம் மாத்திரம் உடைய ஆன்மாக்களுக்கு, பிற்சேர்க்கையாக, கன்ம மலத்தையும், மாயா மலத்தையும் கூட்டி, புற உலக வாழ்வை ஏற்படுத்துகின்றார்.

அப்படி நமக்கு வந்த முதல் தேகம், ஓரறிவுடைய தாவர வர்க்கமாகும். அதாவது, புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலியன. இதிலே எத்தனையோ லட்சக்கணக்கான வகையுண்டு. ஒவ்வொரு வகையிலும் செலுத்தி, தொட்டால் உணர்ந்துக் கொள்ளும்,“ஸ்பரிச அறிவை”, அனுபவப்படுத்துகின்ற்ர்.

இதற்காக பல இலட்சக்கணக்கான வருடங்கள் கடந்து போகின்றன.

தொட்டால் சிலுங்கி செடியைப் பார்த்திருப்போம் நாம். அதைத் தொட்டால், தனது இலைகளை மூடிக்கொள்ளும். இப்படி தொடு அறிவு முற்றுப் பெற்ற பின், சுவையை உணரக்கூடிய ஈரறிவு தேகங்களில் செலுத்துகின்றார்;

உதாரணம்:- சங்கு, சிப்பி முதலிய இலட்சக்கணக்கான வகையுண்டு. அதிலெல்லாம் நெடுங்காலம் வாழ்ந்த பிறகு, வாசனையை அறியும், மூவறிவு தேகத்தில் செலுத்துகின்றார் கடவுள். உதாரணம்:- ஈ, எறும்பு, கொசு, வண்டு, தும்பி முதலிய இலட்சக்கணக்கான வகை உயிரினங்கள். அந்தந்த தேகங்களிலெல்லாம் எவ்வளவோ இன்ப துன்பங்களை அனுபவித்தபின்,

பார்வை அறிவுடைய தேகங்களில் செலுத்துகின்றார். உதாரணம்; மீன், தவளை, பல்லி, பாம்பு, ஓணான் முதலிய இலட்சக்கணக்கான வகைகள். பல இலட்சக்கணக்கான வருடங்கள் அந்த தேகங்களிலெல்லாம் வாழ்ந்து வாழ்ந்து, எவ்வளவோ இன்ப துன்பங்களை, அனுபவித்து அனுபவித்து வந்தபின்,

கேட்கும் அறிவுடைய (சப்த அறிவு) தேகங்களில் செலுத்துகின்றார். உதாரணம்;-எலி, பூனை, நாய், பன்றி, ஆடு, மாடு, குதிரை, யானை, புலி, கரடி, சிங்கம், மான் முதலிய இலட்சக்கணக்கான உயிரின வடிவங்களிலெல்லாம், எல்லையில்லாத சுக துக்க அனுபவங்களை பெற்றபின், மனம் என்கின்ற ஆறறிவு தேகமாகிய, உயர்ந்த அறிவுடைய மனித தேகத்தில் செலுத்துகின்றார்.

ஆரம்பத்தில் ஆதிவாசியாய், காட்டுவாசியாய், கள்ளனாய், கொலை புரிபவனாய் வாழ்ந்திருந்தோம்.

அப்போதெல்லாம் செய்த கர்மவினையினால், பார்வை இழந்தவராக, கை கால் முதலிய உடல் உறுப்புகள் குறைந்தவராக பிறந்து பிறந்து, பல்வேறு வகையான இன்பதுன்பங்களை அனுபவித்து அனுபவித்து இறந்து இறந்து வீண்போயினோம்.

இத் தருணம் தான் உள்ளிருக்கும், உள்ளொளியாகிய கடவுள், **ஆன்மாவானது, தன்னை அறிந்து இன்பமுறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ளார்.**

நாமும் அதற்கான முயற்சி எடுக்க வேண்டியுள்ளது.

தன்னையும், தனக்கு ஆதாரமான தலைவனையும் அறிந்து, பேரின்பப் பெருவாழ்வில் வாழ ஆண்டவர் ஆணை செய்கின்றார்.

இப்போது இறைவன் எங்கே உள்ளார்?

அவரை அறிந்து கொள்வது எப்படி?

எந்தவிதமான பயிற்சியும் முயற்சியும் செய்ய வேண்டும்? என்பதைப் பார்ப்போம்:-

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார். எனினும், அவரை, புறத்தில் (புற உலகத்தில்) எங்கு எவ்வளவு காலம் தேடினாலும் கண்டுக்கொள்ள முடியாது.

**உன்னைப் பார்; உனக்குள்ளே என்னைப் பார்; ஊரைப் பார்த்து உழலாதே!!** என்று வள்ளலாருக்கு அருட்பெருஞ்ஜோதி ஆகிய ஆண்டவரே கட்டளையிடுகின்றார்.

எனவே, **முதலில் நம்முடைய ஆன்மாவை உணர்ந்துக் கொள்ள வேண்டும். நாமாகிய ஆன்ம அணுவை உணர்ந்துக் கொண்டால், ஆன்மாவிற்கு உள்ளிருக்கும் உள்ளொளியாம் கடவுளை உணர்ந்து கொள்ளலாம் !!!**

நாமாகிய அந்த ஆன்மா இந்த தேகத்தில் எங்கு உள்ளது?

உச்சிக்குக் கீழே, அண்ணாக்குக்கு மேலே, புருவமத்திக்கு நேரே, தலைநடுவில், இந்த ஆன்ம அணு, சதா **நான் - நான் என, "நான் இருக்கின்றேன்", என, அறிவு சொரூபமாய் -அறிவு ஆகாயமாய் சுடர்விட்டுக் கொண்டிருக்கின்றது !**

- அந்த ஆன்மப் பிரகாசத்திற்கு உள்ளே தான், அருள் விளக்காய் ஆண்டவர் கோடி சூரியப்பிரகாசத்தோடு ஒளி விட்டுக் கொண்டிருக்கின்றார்.

பெருமூளைக்கு கீழேயும், உண்ணாக்குக்கு மேலே உள்ள, உரல் போன்ற ஒரு குழி உள்ளது. அதை,

"ப"கர வடிவக்குழி என்பர்.**(Cerebrospinal cavity).**

அந்த குழிக்கு மேல்தான் இந்த, நித்தியமான, அருட்ஜோதி ஆன்ம அணு சதா பிரகாசித்துக் கொண்டுள்ளது.

இந்த ஆன்ம அணுவை, பேரானந்த-சச்சிதானந்த- நித்தியானந்த நமது ஆன்ம சொரூபத்தை அறிந்துக் கொள்ள ஒரு பயிற்சியை வள்ளலார் குறித்துள்ளார்.

அது;

எப்போதும் நமது மனதை புருவமத்தியில் செலுத்த வேண்டும் என்கின்றார்.

இதய ஸ்தானத்தில் இயங்கும் மனதை மேலேற்றி, நினைப்பு மறப்பின்றி, அகமுகமாக உள்நோக்கி செலுத்தி ஆழ்ந்து பார்த்தால், ஆன்மாவின் இருப்புண்மை சிறிது சிறிதாக வெளிப்பட்டு விளங்கும்.

பின்பு, அப்படி பெறப்பட்ட, ஆன்ம அறிவைக் கொண்டு உள்ளொளியாக உள்ளே உள்ள அருட்பெருஞ்ஜோதி இறைவனை அறியவேண்டும்!!

இப்படி புருவமத்திய தியானத்தை நாளும் பயின்று வந்தால், ஆன்மாவையும், உள்ளிருக்கும், அருள் ஒளிக் கடவுளையும் அறிந்து, பேரின்ப வாழ்வில் என்றும் வாழ்வோம்.

**தயவு**

# 24-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## களவும் கற்று மற

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

களவு என்பது திருட்டுத் தொழில்; பஞ்ச பாதகங்களில் ஒன்று. இதையும் கற்றுக்கொண்டு, பின்பு மறந்துவிட வேண்டுமாம்!! எப்படி இருக்கின்றது உபதேசம்?!

கற்ற தொழிலை மறக்கவும் முடியுமோ?

அப்படி என்றால் இதன் பொருள்தான் என்ன?

இந்த உபதேசம் ஒரு மெய்ஞ்ஞானி தனது சீடனுக்கு உபதேசித்த ஆன்மீக சாதனா மார்க்கம். இது குறித்து ஆய்வோம்!

களவு நிலை என்பது என்ன? அகண்ட வான் பெருவெளி எங்கும் அனாதியே அன்பு இருப்பாய்-சத்துப்பொருளாய் நிறைந்துள்ள இறைவனை, நாம் கண் முதலான ஐம்புலன்களாலோ, மனம் முதலான கருவியாலோ அறிந்துக் கொள்ள முடிவதில்லை.

அந்த அகநிலை அருள் ஆண்டவரின், புறநிலையாகிய ஜோதியாலான பிரபஞ்ச உலகத்தையே நாம் காண்கின்றோம்.

புறநிலை உலகமோ ஜடப் பொருளாக உள்ளது; இது கடவுளின் புறவடிவமே ஒழிய, இதையே கடவுள் என்றும் கூறிவிட முடியாது.

எனவே, **கடவுள் இயற்கையில் அகம் மறைந்திருப்பவராக உள்ளார்!!**

இந்த நிலையே, களவு நிலை ஆகும்.

அதாவது அருவமாய் மறைந்திருக்கின்ற,

இயற்கை உண்மை நிலை!!!

அவரே அருள் விளக்கமாக நம் தலைநடு விளங்கும் "ஆன்மாவாகிய சிற்றம்பலத்தில்", எழுந்தருளியுள்ளார்.

இங்கும் கூட அவர் ஆன்ம அகநிலையில் மறைந்தே உள்ளார்; மறைபொருளாய் உள்ளார்.

அப்படி ஒர் ஆன்மாவில், அக மறைந்திருந்தே, உள்ளிருக்கும் தன் அருட்சக்தியையே புறநிலையில் விரித்து நமது உடல் உருவம் ஆகவும், உயிர் உணர்வு வடிவமாகவும், மன அறிவாகவும் விளங்குகின்றார்!

அவருடைய அருளாலேதான் நாம் இவ்வுலகில் வாழ வந்திருக்கின்றோம்.

எதற்காக வந்துள்ளோம் என்பதை அறியாமல், மருளாகிய மயக்க நிலையில் எப்படி எப்படியெல்லாமோ நாளும் பிழைத்துக் கொண்டுள்ளோம்.

**இந்த புலால் உடம்பையே நான் என எண்ணி, ஏமாந்த வாழ்வு வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம் !**

நம் தலைநடு விளங்கும் அக ஆன்மாவில் மறைந்திருக்கும் இறைவன் நமது பக்குவத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

நாமோ இன்னும் மாயா மனோ மயக்கத்தால், ஐம்புலன் இன்பத்தையே உண்மையென பெரிதாக மதித்து துய்த்துக் கொண்டிருக்கின்றோம். அதனால் பெருந் துன்பத்தையும் அனுபவித்துக் கொண்டுள்ளோம்.

இந்த துன்பச் சூழல் நீங்கி, நித்திய ஆனந்த வாழ்வு பெற நமது, அக ஆன்ம அருட்ஜோதி நிலையை உணர்ந்துக் கொள்ள வேண்டியதே இப்போது அவசரமும், அவசியமும், இலட்சியமும் ஆகும்.

இப்போது ஆண்டவர் நம்முள் அகம் மறைந்திருக்கும் நிலையையே, களவு நிலை எனப் பார்த்தோம்.

ஆன்மாவே உள்ளம் எனப்படும்!! அந்த உள்ளத்திலே தான், “உள்ளொளியாக” கடவுள் இருந்து வருகின்றார்.

**உடலே நான் என்ற தவறான எண்ணம் இருக்கின்ற வரைக்கும் கடவுளை அறிய முடியாது.**

தேகம், மனம், உயிர் முதலிய ஜடமான தத்துவங்களை கடந்து, புருவமத்தியில் மனதை நிலை நாட்டினால்தான் கடவுளை, உள்ளத்தினுள்ளே உணரமுடியும்.

திருஞானந்த சம்பந்தர் முதன்முதலாக பாடிய பாடலை நினைவு கூர்வோம்;

“தோடுடைய செவியன் விடை ஏறி, ஓர் தூவெண் மதி சூடி, காடுடைய சுடலைப் பொடி பூசி, **என் உள்ளம் கவர் கள்வன்**” - என்று பாடுகின்றார்.

**புறம் தோன்றாது அகம் மறைந்திருக்கும் கடவுளை, “கள்வன்” என்கின்றார்.**

அதேபோல், அருணகிரிநாதப் பெருமானும்;-

செம்மான் மகளைத் திருடும் திருடன்,
பெம்மான்முருகன் பிறவான்இறவான்!!

என்கின்றார். இவரும் இறைவனைத் "திருடன்", எனவே போற்றுகின்றார்.

மேலும்,

அருட்ஜோதியாகிய ஆன்மா பிறப்பு இறப்பு அற்றது என்கின்றார்.

மாணிக்க வாசகம் பெருமானும்,

**தோன்றாப் பெருமையனே!** எனப்பாடுகின்றார்.

எனவே, **இறைவன் ஆன்ம அகத்தே அருவநிலையில் மறைந்திருக்கும் நிலையை குறிக்கவே களவு நிலை எனப்பட்டது.**

இந்த களவு நிலையில் இருக்கும் கடவுள் இயற்கை உண்மையைக் கற்றுக்கொள்வதே உண்மையான கல்வி ஆகும்..

**அதாவது புருவநடு நிலைத்து, மனம் நினைப்பு மறப்பற்று, உள்ளொளியோடு ஒன்றி, அந்த உள்ளொளியை கல்லி, (தோண்டி எடுத்து வெளிப்படுத்திக் கொண்டு) வாழ்தலே உண்மையான கற்றல் ஆகும்! இதையே, களவும் கற்று, என உபதேசிக்கப்பட்டது.**

அடுத்து, "**மற**" என்ற சொல் முக்கியமானதாகும்.

"தேகமே நான்" என்ற பொய் மாயாமருள் நிலையிலிருந்து விடுபட்டால்தான், அகநிலையை அறிந்துக் கொண்டு அழியாத அருள் இன்ப ஆனந்தப் பெருவாழ்வில் வாழமுடியும் என்பது குறிப்பு.

இந்த களவு நிலை ஆகிய அகநிலையை அறிந்துக்கொள்ள ஓர் உளவு உள்ளது என்கின்றார். வள்ளற் பெருமான்.

உளவினில் அறிந்தால் ஒழிய, மற்று அளக்கின், அளவினில் அளவா அருட்பெருஞ்ஜோதி!!! என்கின்றார்.

அந்த "**உளவு**" எது? அதுதான், **தயவு** என்கின்றார் வள்ளற்பெருமான்.

**என்னை ஏறாநிலைமிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு! தயவு என்னும் கருணை தான் என்னை மேலேற்றி விட்டது. அந்த தயவுக்கு ஒருமை வரவேண்டும். ஒருமையோடிருந்தால், தயவு வரும். தயவு வந்தால் பெரிய நிலைமேல் ஏறலாம்.**

ஒப்பற்ற தயவுடைய பேரறிவே பூரண இன்பமாம் என பேருபதேசத்தில் குறிப்பிடுகின்றார்.

மேலும், ஆன்மாவின் இயற்கை குணம் தயவு!

ஆன்ம இயற்கையாகிய தயவோடிருந்தால் சிவமாகலாம் என்கின்றார்.

நாம், தயா வடிவமானால் திருவருள் அனுபவம் உண்டாகும் எனவும் குறித்துள்ளார்.

தயவு, கருணை, அருள் என்ற மூன்றும் ஒரே பொருளைக் குறிக்கின்றன. அருள் அல்லது தயவு தான் கடவுளாக இருக்கின்றது. அதுவே மனிதனின் உண்மை அக வடிவமாக இருக்கின்றது.

இந்த தயவு அல்லது அருள் என்கின்ற உளவினைக் கொண்டு, நம் அக ஆன்ம நிலையாகிய களவு நிலையை நன்கு கற்று, அதனோடு ஒன்றிக் கலந்து அழியாத நித்தியானந்தப் பேரின்பப் பெருவாழ்வில் வாழ்வோமாக!!!

ஜீவகாருண்யமே முக்திக்கு முதற்படி!

ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு!!

ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்!!!

இன்று முதல் புலால்(மாமிச உணவு) உண்ணாதீர்!!!

அகமிருந்து வருக அருளுடன்!!

அனகமாக வாழ்க தயவுடன்.!!!

# 25-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# இருந்தபடியே மெய் இல்லத்திரு

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை!!

**"மெய் அகத்தே விரைந்து வம்மினிங்கே**

**நித்திய மெய் வாழ்வு பெற்றிடலாம் கண்டீர்!!"** - என்று வள்ளலார் அழைக்கின்றார்.

**மெய் வீட்டின் வித்தே** - திருவருட்பா

இல்லம், வீடு, அகம், மனை, இருப்பிடம், கிரஹம் எல்லாம் ஒரு பொருளைக் குறிக்கின்றது.

மனிதனுடைய உடம்போ மணல், கற்கள், இரும்பு, கட்டைகளால் ஆன இல்லத்தில் வசிக்க, இவனுடைய உயிரோ தசை, எலும்பு, இரத்தம், நரம்புகளாலான இவ்வுடலையே வீடாகக்கொண்டு விளங்குகின்றது.

தினமும் இந்த இல்லத்திற்கு குடிக்கூலி ஆகிய ஆகாரம் தரவேண்டும்.இல்லாவிடில் இல்லம் பாழ்பட்டு நில்லாமல் போய்விடும்.

இப்படி ஆன்மாவாகிய உயிர் பலவாகிய தேகம் என்கின்ற இல்லத்திலே தொடர்ந்து புகுந்து புகுந்து, எண்ணற்ற கோடி ஆண்டுகளாக, எண்ணற்ற பிறவிகள் எடுத்தெடுத்து, இளைத்திளைத்து இன்று மனித தேகம் கிடைத்துள்ளது.

ஒரு ஜீவனானது ஆறறிவுடைய மனிதப் பிறப்பு எய்துமுன் எத்தனை கோடி பிறவிகளில் புகுந்து இன்ப துன்பானுபவங்களைப் பெற வேண்டியிருக்கின்றது!! இதற்காக ஆன காலம் அளவு கடந்த நெடுங்காலம்!இதுவரை பட்ட அவத்தைகளும் அளவு கடந்தது!!

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான், மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று, வீடு உற்றேன் - திருவாசகம்.

**மனிதனுக்கு உண்மையான வீடு எதுவாக இருக்கின்றது? !**

**எனில், ஆன்மா தான் மனிதனுக்கு உண்மையான வீடு !!**

**இதுவே கடவுளுடைய, திருப்பதம் அல்லது திருவடி !**

**மனிதனின் தலைநடு விளங்கும், அருள்ஒளி உணர்வே உண்மைத் திருவடி ஆகும் !!**

இப்பிறப்பு இறப்பு துன்பம் நீங்க வேண்டுமானால், ஆன்மாவாகிய தன்னையும், தனக்கு ஆதாரமான தலைவனையும் அறிந்துகொள்ள வேண்டும். இருவரும் சேர்ந்து ஒரு வடிவமாய், ஒரே ஒருவராய், ஒன்றான இருப்பாய், ஏக அனேகமாய், சச்சிதானந்தமாய் (அன்பு+அறிவு+இன்பம்), விளங்குகின்ற இடமாகிய உண்மை வீட்டை, மெய் இல்லத்தை அறிந்து கொள்ளவேண்டும்.

இப்படி அறிந்து, அழியாத கடவுள் இன்பத்தில் ஓங்குவதே, வீடுபேறு ஆகும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்.

-திருக்குறள்.

எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்தி யென் அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி

- திருவருட்பா.

அஞ்ஞான இருளாகிய (பாசாந்தகார) ஆணவ மூலமலத்தால், தன்னை அறியாது கிடக்கும் ஆன்மா, கடவுள் திருவருட் செயலால், பிற்சேர்க்கையாகிய மாயா, கன்மமலத்தால் தேக போக வாழ்வில் வளர்க்கப் படுகின்றது.

தேகமேநான் என்ற புறநிலைக்கு இறங்கி பல்வேறு அவத்தைகளுக்குள்ளாகி பிறவிப் பெருங்கடலில் துன்பத்தில் சிக்கித் தவிக்கின்றது.

**இந்த அவலநிலை ஒழிய வேண்டுமானால், நம்மை நாம் மேல் நிலையில் கண்டுகொண்டு, நமது உண்மை வீடு ஆகிய சிற்றம்பலத்தில் தங்கி வசிக்க வேண்டும்.**

கட்டாத வீடு; அவனி காணாதது; என்றும் உள்ளது,

சுத்த தயவாளர் தம் சொத்து

தயவுக்குறள், தயாநிதி சுவாமி, சரவணானந்தா!

- பொருள்;- இவ்வுலகில் நிலவி நின்று, தயா இன்பம் வளர்க்க, ஓர் இல்லம் இன்றியமையாதது. அந்த இல்லமும் நமது சொந்த இல்லமாய் இருப்பது நல்லது.

**திருவருளால் நமக்கு ஓர் ''அக இல்லம்'' மெய்யாக வழங்கப் பெற்றுள்ளோம்!**

இவ் வீட்டின் உரிமை நாமானால்தான் இன்ப வாழ்வு வாழ முடியும்.

நமது ஆண்டவர் விளங்கும் சிற்றம்பலமே நல்ல வீடாக அமைந்துள்ளது.

கடவுளால் வழங்கப்பட்டுள்ள இவ்வில்லம் நிறை அருள் உடையார்க்கே உரிமையாகின்றது. அருள் இல்லார்க்கு இவ் அக இல்லம் புலனாவதில்லை! அப்படி ஒன்றும் இருப்பதாக அறியார்கள்.

அவர்கள் தமக்குச் சொந்தம் எனப் போற்றிக் கொண்டு வாழ்கின்ற புற இல்லமும் வாழ்வும் பொய்த்துப் போகின்றது.

எனவே, **இந்த மெய்யான திருச்சிற்றம்பலமாகிய திருவீட்டிலேயே தங்கி வசிக்க வேண்டும். இவ்வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது.**

திரு அம்பலவன் திருநோக்கம் பெற்றார்க்கு,

உரு அம்பலத்தே என்று உன்!! -வள்ளலார்!

**உள்ளாய், அருள் உணர்வாய், தலைநடு விளங்கும், அருள் விளக்காகிய திருவீட்டை, புதிதாகப் போய் யாரும் கட்டி வாழ வேண்டியதில்லை!**

இது அனாதி நித்தியமானது; சத்தியம் ஆனது!

இந்த தருணத்தில் நமது சொந்த உரிமையாக அதை கண்டுக்கொண்டு, அங்கு, இருந்தபடியே இருந்து வாழ வேண்டும்!!

அறியாமையாகிய அஞ்ஞானத் திரையை, சத்விசாரத்தால், நீக்கிப் பார்த்தால், இவ்வீடு விளங்குவது தெரியும். இங்கு புகுந்து தங்கி வாழ்தலையே இத்தருணம் உண்மையான, புதுமனை புகு விழாவாக, கிரஹகப் பிரவேசமாகக் கண்டு கொண்டு அழியாதப் பேரின்பில், என்றென்றும், எங்கெங்குமாய், எதுவெதுவுமாய் விளங்கியிருந்துக் கொண்டு வாழ்வோம்!

குறிப்பு; இந்த வீடு இப்போது, நம் அனுபவத்தில் விளங்காது உள்ளே பூட்டப்பட்டுள்ளது.

ஜீவகாருண்யம் என்ற உயிர் இரக்கத்தால், ஜீவ தயவு, என்ற திறவுகோலைக் கொண்டு, திறந்து உள்ளே சென்று, பூரண இயற்கை இன்பத்தில் திகழ வேண்டும்.

**ஆன்ம அகமே நமக்கு உண்மையான நிலைபெற்ற இல்லமாக, இருக்கின்றது!!** இதை விட்டுப் பிரியாது, புறத்து அடையாது, அகம் நிலைத்திருந்தால் தான், தொடர்ந்து நம்மைத் துரத்திவரும் வினைச் சூழலை அறுக்க முடியும்!

**- இந்த அகத்திருந்து, விடாது தங்கி இருப்பதுவே, வீடு பேறு எனும் முக்தி நிலையாம் !!**

புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு -திருக்குறள்.

- பொருள்; இவ்வளவு நாட்களாக இம்மனித உடம்பாகிய சிதையும் சிற்றில்லில், ஒரு மூலையில் ஒளிந்து வாழ்ந்திருந்து, மேலும் மேலும் இது போன்ற, அழி உடம்பை நாடிச் சென்று, பிழைத்து வந்த ஆன்மாவுக்கு இன்னும், ஒரு நிலையான இல்லம், சொந்தமாக கிடைக்கவில்லையே, அந்தோ!! என்று இரங்கி உரைத்துள்ளார் திருவள்ளுவர்.

**ஒரு பூதரும் அறியா தனிவீட்டில், உரை உணர்வு அற்று இரு!! பூத வீட்டில் இராமல்!!** - அருணகிரிநாதர்

**"தேகம் நான்", என்ற ஜடபூத உயிருடம்பு நிலையைப் பற்றிக்கொண்டு இருப்பதை விட்டு, நினைப்பு மறப்பற்ற, சுத்த மேனிலையில், நம்மை, அருள் விளக்காக, கண்டுகொண்டு நித்யானந்த பேரின்பப் பெருவாழ்வில் வாழவேண்டும் என்பது குறிப்பு.**

அகமிருந்து வருக அருளுடன்! அனகமாக வாழ்க தயவுடன்!!

## 26 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## புற உலக அநித்திய பிழைப்பும், அக உலக நித்திய வாழ்வும்

**நித்திய நிலையான ஆன்ம அகத்திருந்து, தயவை பெருக்கிக் கொண்டு, அருள் இயல் வாழ்வு வாழத் தொடங்கினால், அழியாத இன்ப வாழ்வில் தழைத்திடலாம்என்பது திருவருட் பிரகாச வள்ளலின் அனுபவமாகும் !!**

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!!!

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இன்பமாகவே வாழ ஆசைப்படுகின்றோம். எல்லா உயிர்களும் இன்புற்று வாழவே விரும்புகின்றன.

ஆனால் உலகில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றது. சிலர் துன்பத்தை அதிகமாகவும், சிலர் இன்பத்தை அதிகமாகவும் துய்க்கின்றனர்.

இந்த துன்பத்தையும், இன்பத்தையும் அனுபவிக்கின்ற மனிதன் யார்? எங்கிருந்து வந்தான்? எப்படி வந்தான்? இந்த உடம்பில் எங்கே இருக்கின்றான்?

ஐம்புலன் இன்பத்தையே பெரிதாக எண்ணி, இலட்சியமாகக் கொண்டு, அதை அடையவே வேகமாக முயல்கின்றது புற உலகம்.

இதில் சிக்கியுள்ள நமக்கு, உண்மையான வழி எது? உண்மையான வாழ்வு எங்கே? உண்மையான இன்பம் எது? எனத் தெரியவில்லை!

மனிதனாகப் பிறக்கிறோம். பிறந்த நாள் முதல் இதுவரை அனுதினமும், மூன்று வேளை உணவு உண்கிறோம்; உடுக்கிறோம்; உழைக்கிறோம்!

பாலுறவு கொண்டு, உறங்கி, விழித்து, கதைபேசி காலமெல்லாம் வீணாய்ப் போக்குகின்றோம்.

வந்த வழி அறியாது, செல்லும் வழி தெரியாது, உலகியல் ஐம்புலன் (பார்த்தல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல், ஸ்பரிசித்தல்) ஆவல் நெறியில் தன் போக்கில் வேகமாய் செல்கிறோம். தன் இனத்தை விருத்தி செய்ய மக்களை ஈன்றெடுத்து, அவர்களுக்காக கடமையைச் செய்து, காலத்தைக் கழிக்கின்றோம்.

மாயா இன்ப துன்ப அனுபவங்கள் எல்லாவற்றையும் ஏற்று ஏற்று, சலிப்பு இல்லாது, முடிவு இல்லாமை கண்டு திகைக்கின்றோம்.

இவ்வேளையிலே, நோய்கள் பல சாருகின்றன; இளமையும் மாற, முதுமையும் ஏற, இறுதியில், இன்பமாகக் கண்டவை எல்லாம் பொய்யாக-துன்பமாக மாறுகின்றது. மரணம் எனும் பெருந்துன்ப இருளில் மடிகின்றோம்.

மடிந்தவனை மற்றவர்கள் நீரில் மூழ்கி மறக்கின்றனர்.

**பேரினை நீக்கி, பிணம் என்று பேர் இட்டு,**

**நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே-** திருமந்திரம்.

ஒருவன் எங்கிருந்து வந்தான்? என்ன செய்தான்? எங்கே சென்றான்?

மனித வாழ்வின் உண்மை இலட்சியம் என்ன?

முன்பின் ஏதும் அறியாமல் பிறந்தோம்! இருந்து சிலகாலம் இவ்வுலகில் சிற்றின்பத்தையும், பெருந் துன்பத்தையும் அனுபவித்தோம்!

இறுதியில் இறந்து இங்கு இல்லாமல் போனோம்!

பிறப்புக்கு முன்னும், இறப்புக்குப் பின்னும் அவனது கதிதான் என்ன?

திருவருட்பா, ஞான சரியையில்(மரணமில்லா பெருவாழ்வு) ஓர் பாடல்;-

கண்டதெல்லாம் அநித்தியமே, கேட்டதெல்லாம் பழுதே,
கற்றதெல்லாம் பொய்யே, நீர் களித்ததெல்லாம் வீணே!
உண்டதெல்லாம் மலமே, உட்கொண்டதெல்லாம் குறையே,
உலகியலீர் இதுவரையும், "உண்மை அறிந்திலிரே"!!
விண்டு அதனால் என்? இனி நீர், சமரச சன்மார்க்க,
மெய் நெறியை, கடைபிடித்து, மெய்ப் பொருள் நன்கு உணர்ந்தே,
எண்தகு, சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைமின்!
இறவாத வரம் பெறலாம்! இன்பம் உறலாமே!!!

- வள்ளலார்.

மிகப் பெரிய இந்த உலகம், எத்தனையோ கோடானு கோடி ஆண்டுகளாக இயங்குகின்றது. ஆனால் இவ்வுலகில் தோன்றுகின்ற, ஒவ்வொரு உயிரின் வாழ்க்கை காலவரையை நோக்கும்போது, அது மிகமிக அற்பமான குறுகிய காலத்தில் முடிவடைகின்றது. பெருங்கடலின் ஓர் சிறு துளி போன்றது, நம் வாழ்நாள் அளவு; நீர்க்குமிழி போன்று நிலையற்றது.

அவசரமான புலன் இன்ப உலகில் அன்றாடம் உண்கிறோம்; உழைக்கிறோம்; போராடி போராடி, போட்டி - பொறாமை - பயம்-

கவலை - இன்ப துன்பங்களுக்கிடையே, நிதி திரட்டி, நிம்மதியான வாழ்வு பெற, ஓடுகின்றோம்!

இந்த வேளையில், இதை எல்லாம் சிந்தனை செய்ய நேரம் எங்கே?

பிழைக்கின்ற வேலையை விட்டுவிட்டு, இந்த விசாரம் தேவையா? இதனால் உடனே கைமேல் பலன் உண்டா?

என்றால், உண்டு! அங்கையில் நெல்லிக்கனி போன்று பலன் உண்டு! மிக வேகமாக ஓடி வாருங்கள்!

**மெய் அகத்தே விரைந்து வாருங்கள்!!!**

**நித்திய மெய் வாழ்வு பெற்றிடலாம்!!**

**சத்திய ஞான ஜோதி விளங்கும், அகத்திருச்சபைக்கே வாருங்கள்! தயவோடு வாருங்கள்!!**

நலமுற்று வாழலாம்! உண்மையெல்லாம் அறியலாம்! உயர் பயன் அடையலாம்! என்கின்றார் வடலூர் இராமலிங்க வள்ளலார்.

சத்திய ஞான ஜோதி ஆகிய இறைவன் விளங்கும் அகத்திருச்சபை!!!

இது மனிதனின் தலைநடுவே விளங்குகின்றது.

இந்த சபைக்கு நுழையும் வழி, புருவமத்திய ஸ்தானம்.

**இதய ஸ்தானத்தில் உலக விஷயங்களில் அலைகின்ற மனத்தை, நினைப்பு மறப்பு அற்று, புருவநடு நிலைநிறுத்தி, சத்விசாரத்தால், உள்நோக்கிப் பார்த்தால், இந்த ஆன்ம அகத்திருச்சபை விளங்குவது, மெய்யறிவில் புலனாகும்.** இந்த திருச்சபையில் விளங்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை சரணடைந்தால், பேரின்பப் பெருவாழ்வில் என்றும் வாழலாம்!!

திருவருட்பாவில் ஓர் பாடல்;

புகுந்தருணம் இது கண்டீர்! நம்மவரே, நான்தான் புகல்கின்றேன், என் மொழி ஓர் பொய்மொழி என்னாதீர்.

உகுந் தருணம், உற்றவரும் பெற்றவரும், பிறரும் உடைமைகளும் உலகியலும், உற்ற துணை அன்றே!

மிகுந்த சுவைக் கரும்பே, செங்கனியே, கோற்றேனே, மெய்ப்பயனே, கைப்பொருளே, விலையறியா மணியே!

தகுந்த தனிப்பெரும் பதியே, தயாநிதியே கதியே, சத்தியமே! என்றுரைமின் பத்தியொடு பணிந்தே!

புருவநடு புகுந்து, சிரநடு சிற்சபையாம் சிற்றம்பலத்தேயுற்று, எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி - தனிப்பெரும் கருணை ஆண்டவரைப் போற்றிப் பணிந்து, புகழ்ந்தேத்தி, ஒன்றிக் கலந்து நித்திய வாழ்வு பெறுவோம்!!!

அகமிருந்து வருக அருளுடன்! அனகமாக வாழ்க தயவுடன்!!

## 27-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## உள்ளே - வெளியே!! அகமும் புறமும்!!!
## மனிதன் யார்?!

ஒரு மனிதனைப் பார்க்கும் போது, முதலில் கண்ணுக்குப் புலனாவது, அவனது மாமிசத்தாலான புற உடல் உருவமே! இதையே மனிதனாக எண்ணிவிடுகின்றோம். இது முற்றிலும் தவறு!

மனிதன் என்பவன் அகம் + புறம், என்ற இரு நிலை கொண்ட ஒருவன்!

அதாவது, உள்ளே + வெளியே, எனலாம்.

இந்த பஞ்ச பூதத்தால் ஆன புற உடல் உருவம் வெளியே தோற்றிக் கொண்டுள்ளது.

இதன் உள்ளே (அகத்தே) இருப்பதுதான் ஆன்மா!

இது மனிதனின் (எல்லா உயிர்களுக்கும்) தலைநடுவில் அகமையத்தில் உள்ளது.

ஆன்மா என்பது கண்ணால் பார்க்க முடியாத, ஓர் சிற்றணு வடிவமுடையது; அருவமானது; அறிவு சொரூபமானது; அனாதியானது!

ஒரு நாணயத்திற்கு, எப்படி இரண்டு பக்கங்கள் இயல்பாய் உள்ளதோ, அதேபோல் மனிதனும்,

**அகம் புறம் என்ற இரு நிலைகளால் ஆன ஒருவன்!!**

அக ஆன்மா உள்ளே இருக்க, ஆன்மாவுக்கு உள்ளே இருக்கும், உள்ளொளி ஆகிய கடவுள் அருள், தனது ஜோதி நிலையை, உள்ளிருந்து புறத்தே விரிக்கின்றது.

அப்படி புறம் விரிந்த ஒன்றே, ஆன்மாவைச் சூழ்ந்து,

உயிர் உணர்வாகவும், மனோ சிந்தனையாகவும், மாமிச உடல் உருவமாகவும் விளங்கிக் கொண்டுள்ளது!!!

அகமும் புறமும் பிறிவற இணைந்தே விளங்குபவன் மனிதன்!

இந்த மனிதன் யார்? என்றால்,

**அகமிருக்கும், அருட்ஜோதிக் கடவுளின் அனக தோற்றமே மனிதன்!!!**

இந்த உடலையோ, மனத்தையோ, உயிர் உணர்வையோ, இதற்கப்பால் தலைநடு அகத்தே விளங்கும் அறிவாகிய, “ நான்” என விளங்கும், ஆன்மாவையோ, எதையுமே, “ நான் என்றோ, எனது என்றோ உரிமை கொண்டாடுவதற்கில்லை!! ”

இறைவனே எல்லாம் ஆகி உள்ளார்!

அவருக்கு அந்நியமாக, எப்பொருளோ, எவ்வுயிரோ, எந்த மனிதனோ இல்லை!! என்பதுதான் உண்மை.

நாம் கண்ணால் பார்க்கும், அகண்டாகாச வான் பெருவெளி முற்றும், அன்பு இருப்பாய் - சத்துப் பொருளாய் - இயற்கை உண்மையாய் நிறைந்துள்ள கடவுள், “பரமாகாச சொரூபியாவார்”!.

அந்த அனாதியான சூன்யப் பெருவெளியில் இருந்துதான், தனது அருளால் இந்த பஞ்சபூதத்தாலான மாபிரபஞ்சத்தை தோற்றி, விளக்கம் செய்துக்கொண்டுள்ளார்.

சூன்ய வெளியில் உள்ள, அன்பு இருப்பு ஆகிய கடவுளும், அதிலிருந்து வெளிப்பட்டுள்ள எல்லையற்ற மாபிரபஞ்சமும் ஓர் அற்புத சொல்லால் குறிக்கப்படுகின்றது.

அது;-

உள்ளவராய் விளங்குபவர்!!!-என்பதாகும். இது அண்டத்தில்! இது ஒரு முதல்நிலை.

அடுத்து, அவரே, பிண்டத்தில் (எல்லா உயிர்கள் - மனிதர்கள் உடல்) தலைநடு விளங்கும், ஆன்ம அணுவாகிய சிற்றம்பலத்தில்,

அருள் உணர்வாய் - சித்துருவமாய் - இயற்கை விளக்கமாய் விளங்குகின்றார்.

அவரே, தலைநடு உள்ளிருந்து, தனது அருட் ஜோதி இயற்கையையே, அகமிருந்து அனகமாக விரித்து, ஆன்ம அறிவு, உயிர் உணர்வு, மனோ சிந்தனை, உடல் உருவத் தோற்றம் என தானே எல்லா உயிர்களாகவும், சிறப்பாக மனிதனாகவும் விளங்குகின்றார். இந்த நிலை கடவுளின்,

விளங்குபவராய் உள்ளார்!!! என்ற இரண்டாவது நிலையாகும்.

இவ் இரண்டும் கலந்த நிலையே (தன் ஐஞ்சக்தி, ஐந்தொழில் அருள் ஞான திருநடனம் எனும் திருச்செயலால்)

மூன்றாவதாக,

ஆனந்த அனுபவம் - இயற்கை இன்பம்!! ஆகும்.

ஒன்றே மூன்றாய் சத்து + சித்து + ஆனந்தம் = சச்சிதானந்தம்! என விளங்கிக்கொண்டுள்ளார்!

இந்த உண்மையை உணர்ந்து, மனிதன், “நான்” என்ற ஆணவ அகங்காரமும், “எனது” என்கின்ற மமகாரமும் நீங்கி, தன்னை கடவுள் மயமாய் கண்டுகொண்டு, அவரோடு சத்விசாரத்தால் கலந்து, ஒன்றி இருந்துக்கொண்டு, அழியாது என்றென்றும் பேரின்பப் பெருவாழ்வில் வாழத் தலைப்படவேண்டும். இதுவே மனித வாழ்வின் உண்மையான இலட்சியமாகும்!

**பகுத்தறிவுடைய மனிதன் தன்னை தேகமே நான் என்கின்ற நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டு, கடவுள் நிலையில் இருத்திக் கொள்ள வேண்டியவனாய் இருக்கின்றான் !!!**

மேற்கண்ட விளக்கங்கள் எல்லாம் கீழ் காணும், திருவருட்பா - அனுபவமாலையின் ஒரு பாடலில் குறிக்கப்பட்டுள்ளது.அது;

எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும், உள் அகத்தும் புறத்தும், இயல் - உண்மை அறிவு இன்ப வடிவாகி நடிக்கும்

மெய்ப்பொருளாம் சிவம் ஒன்றே!!! என்று அறிந்தேன், உனக்கும் விளம்புகின்றேன் மடவாய் (மனமாகிய தோழி). நீ கிளம்புகின்றாய்

மீண்டும் இப்பொருள் அப்பொருள் என்றே இசைப்பதென்னே.?! பொதுவில் இறைவர் செயும் நிரதிசய இன்ப நடந்தனை நீ

பப்பறவே காணுதியேல், அத் தருணத்து எல்லாம், பட்டநடு பகல் போல வெட்டவெளியாமே!!!

**உண்மையை உணர்ந்து கொள்வோம்! உள்ளிருந்து வாழ்வோம்!!!**

**ஆன்மாவை அறிந்துக் கொள்வோம்! ஆனந்தமாக வாழ்வோம்!!!**

## 28-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## இல்லாமலே இருந்து கொண்டிரு!!!

ஒரு ஜீவனுக்கு ஏற்படுகின்ற துன்பங்களுக்குக் காரணம், நான், என்கின்ற அகப்பற்றும், எனது என்கின்ற புறப்பற்றும் தான்.

இவ்வுலகில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் இன்பமும் துன்பமும் மாறி மாறி அனுபவமாகிக் கொண்டிருக்கின்றது.

இன்பத்தை மிகவும் விரும்பிக் கொள்வதும், துன்பத்தை வெறுப்பதும் ஜீவனின் இயல்பாகின்றது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில், துன்பங்கள் முன்வினைக்குத் தக வந்து அமைகின்றன.

வறுமை, தீராத பிணி, குடும்பத்தினர் உறவில் விரிசல், தடுத்தலரிய பயம், கவலை, பசி, இன்மை, குடும்ப பாரங்கள், தீர்க்க முடியாத பல பிரச்சனைகள், பெரும் பகை, கடன் தொல்லை, களவு அல்லது வியாபாரத்தில் செல்வம் முழுதும் இழந்து நிற்றல், உத்தியோகமின்மை, பிரச்சனைகளினால் அவமானம், என பல வகைகளில் மனிதன் துன்பத்திற்கு ஆளாகின்றான்.

ஒருவனுக்கு வாழ்விலே அளவு கடந்த, தாங்க முடியாத துன்பம் தொடர்ந்து ஏற்படுகின்றபோது, நான் ஒருவன் இல்லை எனில், எல்லாம் சரியாகி விடும், எனத் துணிந்து, துன்பத்தை மேலும் மேலும் அனுபவிக்க விரும்பாததால், தற்கொலைக்குக் கூட முயற்சி செய்து மடிகின்றான்!

இதுவா பிரச்சனைக்கும், துன்பத்திற்கும் தீர்வு?!

“நான்” என்பது இல்லாமல் போக வேண்டும், என்பதற்காக அப்படி தற்கொலை செய்து கொண்டால் கூட ஒருவன், இல்லாமல் போக முடியாது!!

தேகம் நீங்கினால், மறுபடியும் வேறொரு தேகம் உடனே சூழும்!

வேண்டும் என்றாலும், வேண்டாம் என்றாலும், ஓர் உயிர், ஓர் உடம்பில் புகுந்து, உலக அனுபவ வாழ்வை இடையறாது ஏற்கும்.

தற்கொலை செய்து கொண்டவர், தூல உடல் இழந்தாலும், ஆயுட்காலம் முடியும் வரை, சூக்கும ஆவி உடலில் உழல்வர். பின்பு மறுபடியும் உலகில் பிறந்து, உடல் ஏற்று அனுபவம் தொடரும்.

இந்த எல்லையில்லாத தொடர் பிறவிகளையும் துன்பத்தையும் ஒழிக்க என்னத்தான் வழி?!

**உண்மையை உணர்ந்தால் எல்லா துன்பங்களும் நீங்கிவிடும்!**

**“நான்” என்பது இல்லாமல் போக வேண்டும்!!**

**நான்-நான் என்று சொல்வது தற்போதம்!**

**தற்போதம் இருக்கும் வரை இன்ப துன்பங்கள் இருந்துக்கொண்டு தான் இருக்கும்.**

தேக நிலையில் இருந்துக்கொண்டு, “நான்” என்கின்றோம்.

ஆனால், **நான் என்பது, தேகம், மனம், உயிர் இவற்றிற்கு காரணமான, ஆன்மாவையே குறிக்கின்றது.**

**ஆன்மா என்பது என்ன?!**

**அகண்ட வெளி நிறைந்த பரம்பொருள், தன் முழு இயல்போடு, ஒரு சிற்றணுவில் விளங்குகின்றார்.**

இடையறா அருள் அனுபவ நிமித்தத்தின் பொருட்டு, கடவுளே ஆன்மாவாக திகழ்கின்றார்.

**ஆன்மா என்பது கடவுளின் சிற்றணு வடிவம்; அது கடவுளே!!**

ஆன்மாவுக்கு இயற்கையாக தோற்றும் உணர்வு, ஆணவ மலம் என்ற தற்போதமாகும்.

அருள் ஞான பக்குவத்தே, ஆணவ மலம் நீங்க, இறை உண்மையே - “தான்” என்று உணரப்படுகின்றது.

நான் - எனது என்ற எண்ணங்கள் நீங்கி, எல்லாம் "கடவுள் மயமாக", உணரும் தன்மை வரல் வேண்டும்.

**அகம் விளங்கும் கடவுள் உண்மையே, "நான்-எனது" என்னும் எல்லாமாக உள்ளது!!**

யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்,
வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும். - திருக்குறள்.

யான் எனது என்னும் உரை மாய்த்துக்,
கோதில் அமுது ஆனானை, குலாவு தில்லை அம்பலத்தே கண்டேனே. - திருவாசகம்.

யான், தான் எனும் சொல் கெட்டாலன்றி, யாவர்க்குமாம் காண்டற்கு அரிதாம் சத்தியம்.

யானாகிய என்னை விழுங்கி, "வெறும் தானாய்",
நிலை நின்றது தற்பரமே!

**எல்லாம் அற, "என்னை இழந்த நலம்", சொல்லாய்!!!**

-திருப்புகழ்.

**"நான்" என்ற தற்போத உணர்வு நீங்கி, இறைவனோடு ஒன்றி நிற்கும்போது, நாம் என்று தனியாக ஏதுமில்லை!!**

அப்போது நான் என்பது இல்லாமலே, அது தானாய் இருந்துக் கொண்டிருப்போம்!

**ஒன்றே! சிவம் தான்!!" என அறியும் அறிவே, தகும் அறிவு!**

- திருவருட்பா

**தன்னைக் காட்டக்கூடாது; ஒளிக்க வேண்டும்** என்பது வள்ளலாரின் அருள் வாசகம்.

"நான் உதியா தன் இழப்பே முக்தி" என்றும் மெய்ஞ்ஞானிகள் மொழிந்துள்ளனர்.

- திருப்புகழ், கந்தர் அனுபூதியில் ஓர் முக்கிய பாடல் (அருணகிரி நாதப் பெருமான்)

**தன்னந்தனி நின்று அது தான்(என) அறிய,**
**இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?!**
**மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்,**
**கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே!!**

பொருள்;-

உடல், மனம், உயிர் ஆகிய தத்துவங்களை எல்லாம் கடந்து, தனித்திருந்து, சத்திய ஞானத்தால், இறைவா, உன்னை அறிகின்றபோது, “நான்”, என்பது ஒன்றுமில்லை!

இருப்பது கடவுள் ஒருவர் தான்!!!

அவரே, எல்லாமாய், எல்லோருமாய் விளங்குகின்றார்!

உள்ளதே உள்ளது!!

நீயே என்னுடைய உடல், மனம், உயிர், ஆன்மா எல்லாமாய் விளங்குகின்றாய்!!

இது, இந்த நிலை, உனது, இயற்கை சித் விளக்க வெளிப்பாடு!!

இதுவே, எல்லா உயிரின் உண்மையாய் இருக்கின்றது.

இந்த உண்மையை இன்னும் ஒருவர்க்கு எப்படிச் சொல்வது?!

யார், யாருடைய உண்மையை, எவருக்குச் சொல்வது?!

உன்னை அன்றி எவருமில்லையே!! நீயே உன் உண்மையை எனக்கு அறிவித்தபடி, எல்லோர்க்கும், உள்ளிருந்து உணர்த்தி வாழ்வைப்பாய்!!

-சதா சுடர் விட்டுப் பிரகாசிக்கும், அருட்ஜோதியானவனே!! (கதிர்வேல்:- கதிர் = ஜோதி, வேல் = கூர்த்த மெய்ஞ்ஞானமாகிய அருள்) உன்னையே நினைப்பவருடைய துன்பங்களை (கின்னம்) எல்லாம் போக்கி, அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை ஆகிய, கிருபை சூழ் சுடரால், உண்மை - அறிவு - இன்பப் பெருவாழ்வில் வாழ வைப்பவனே!!!

தெளிவு;-

நாம் நமது அகங்காரத்தை விடுத்து, அவரைச் சரண் அடைய, அவர் நம்மைக் காத்தருள்வார்!

தேகம், மனம், உயிர் முதலான தத்துவங்களைக் கடந்து, நிராதாரத்தே ஏறி,

தலைநடு விளங்கும், ஆன்ம அகநிலைக் கண், உற்றபோது, "நான்", என்பது, தனது சுதந்தரத்தால் விளங்குவது அல்ல! இறைவனே இப்படி இங்கு, "நானாய் விளங்கிக் கொண்டிருக்கின்றார்", என்பதை தெளியலாகும்.

அப்படித் தெளியும்போது, அங்கு ஆணவ மலம் நீங்கவும், அறியாமை இருள் மறையவும், அங்கு ஓர் அனுபவம் ஏற்படுகின்றது.

அந்த அனுபவத்தை எப்படி வாயால் சொல்ல முடியும்?!

இதுவரை "நான்", என புறத்தே இருந்து, பட்ட இன்ப துன்ப இன்னல் நிலை, சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தோடுகின்றது.

**அருட்ஜோதி ஞான சூரியன் எழுகின்றான்!!**

**- இப்பொழுது நான் எனவும், எனது இன்ப துன்ப அனுபவங்கள் எனவும் காண்டற்கு இல்லை!!**

அங்கு ஒன்றுமில்லாதது போல் உள்ளதோர் வெளி அனுபவமாகவும், அது என்றும் **இல்லாதே இருந்துக்கொண்டிருக்கின்ற** அனுபவத்தைத் தருகின்றது!!

-அங்கே அனுபவமாகின்ற ஆனந்தம், "ஆஹா! ஆஹா!" என வியந்து, அதிசயித்து அனுபவித்து அற்பகாலத்தில் (பொறி புலன், ஜீவ கரண வழி வரும் மாயா மனோ மயக்கம்) அழிவுறச் செய்வதில்லை.

மாறாக, நிரதிசய ஆனந்தமாய், நித்தியமாய், இயற்கை அருட் சுகமாய், அகம் புறமும் பொங்கி வழிவதாய் உள்ளது!!!

## 29-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## இறைவா! இந்த அசுத்த மனத்தை சுத்த மனமாக மாற்றித் தா!

அருள் உணர்வாய் எங்கள் சிரநடு விளங்கும் ஆன்மாவிலும், பெருஞ்ஜோதியாய் அகண்ட மாபிரபஞ்சம் முழுதும் எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கு ஓர் விண்ணப்பம்!!

(பிழையே உடைய இவ்வேழையேனின் குற்றமுடைய விண்ணப்பம்)

சுத்த மோனாதீத, இயல் உண்மை-அறிவு-இன்பத் தயவு ஒளியாகி, அன்புச் சிவமாகி, என் உயிர்க்கு உயிராகி, உற்ற துணையாகி நின்ற ஒருவனே! திருச்சிற்றம்பலத் தந்தையே! திருவருட் பிரகாச வள்ளலே! அருட்பெருஞ்ஜோதி நடராஜ பெருமானே!

இந்த உலகத்தே "நான்" தோன்றிய அந்த நாள் முதல் இந்த நாள் வரை, இந்த ஆசை மனத்தால், பொய்யான இன்பத்தையே என்றும் நாடி, அதனால் பெருந் துன்பத்தை தேடிக்கொண்டு, வாடித் தவிக்கின்ற இச்சிறியேனது சிறு விண்ணப்பத்தை, திருச்செவிக்கு ஏற்பித்தருளி கருணை செய்திடல் வேண்டும்!

**ஐயனே! இந்த அவா மனத்தை அடக்க முடியாமல், ஒவ்வொரு கணமும் படாதபாடு படுகின்றேன்.**

அதனால் மீண்டும் மீண்டும் தவறுகின்றேன்.

**"ஆசை அறுமின்! ஆசை அறுமின்! ஈசனோடு இணைய வேண்டுமென்றால், ஆசை அறுமின்"!** என்ற திருவருள் ஆணையை சற்றும் மதித்திலேன்.

புலன் இச்சை உலக வாழ்வே எனது இலட்சியமாக உள்ளது; என்னுயிர்ச் சுகமே எப்போதும் விழைகின்றேன், கருணையிலாக் கடையேன்!

ஐம்புலன் இன்பத்திற்காகவே எப்போதும் அலைகின்ற "நான்", அதற்காக தடை ஏற்படின், பிறர் மீது சினங்கொண்டு சொல்லாலும் செயலாலும் தாக்குகின்றேன்.

இவ்வுலகத்தே விருப்பு வெறுப்பினால் இன்புறுவதும் துன்புறுவதும் எனது இயல்பாக உள்ளது.

பயங்கவலையும், வறுமைப் பிணி மூப்பும் தொடர்கின்றன; இடர் படுகின்றேன். இந்த அல்லலுறு நிலையினின்று மீள இயலாது திகைக்கின்றேன்.

இடைவிடாத உண்மைத் தியானம், உன்மீது உண்மை அன்பு, உயிர்களிடத்து உண்மை இரக்கம், இப் பிரபஞ்ச போகத்தினிடத்து பற்றற்ற நிலையும் இன்னும் சித்திக்கவில்லை சிறிதளவும்!

மரணம் என்னை நெருங்கிக் கொண்டிருக்கின்றது, மன்னவ! நானும் புலன்களை அடக்க முடியாமல் கெட்டு ஒழிகின்றேன்.

இடைவிடாது என்னை வஞ்சித்து, தாக்குகின்ற இந்த "அறியாமை அவா" காரணமாக, என்னை காத்துக்கொள்ள முடியாமல், மாறாக இழிவு நிலைக்கு இழுத்து அழிகின்றேன். இருளிலே கிடந்து இன்னலுறுகின்றேன்; இரக்கம் ஓர் அணுவுமில்லேன்!

**அன்புருவ இறைவா! இக் கொடிய ஐம்புலக் கள்வர்களிடம் எனை இங்கே ஒப்படைத்து, நீ பாராது விலகி, அங்கே பொதுவில் நடிப்பது அழகன்று!**

இன்றே ஐம்புலன்களை அடக்கும் ஆற்றலை அள்ளித்தா!

**அப்பனே, இப்போதைக்கே, இங்கு என் மனத்தை நினைப்பு மறப்பற்ற (கருதா - மறவா நெறி) தூய நிலையில் இருக்கச் செய்து, அசைவிலா ஆனந்த அகநிலை பொருந்தவே வேண்டுகின்றேன்!**

அங்கே அன்பர்கள் எல்லாம், ஒடுங்கி நிலை பெற்று, ஆன்ம அகத்தே புகுந்து, உத்தமர்களாய் ஓங்குகின்றனர்!

எனை உடையானே! எனது குணநலன்களை நோக்காமல் மன்னித்தருளி, எனை திசை திருப்பி நின் திருத்தாட்களை என் தலைமீது வைத்திடல் வேண்டும். (சிரநடு விளங்கும் அருள் ஒளி உணர்வே உண்மைத் திருவடி).

**என்னை உனது உண்மை அடிமையாக்கி, இனியும் புறம் விடாது, அருள் அகத்தே, அணைத்து, பூரண ஆதரவு தருவாய் அப்பனே!**

எந்த நேரத்திலும், இந்த மனத்தை புலன்களொடு கீழிறக்கி விடாது, மேனிலையில் உன்னோடுஒன்ற வைப்பாய் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! எல்லாம் வல்லவனே!!

**இச்சை காட்டி, மாய இன்பம் கூட்ட என்னைத் துரத்துகின்ற இந்த "அழுக்கு அவா வஞ்ச மனத்தால், ஐயோ, இதுவரை நான் பட்ட துன்பமெல்லாம் போதும், போதும்! இனி எனை, புருவநடு அம்பல வாயிலில் நிறுத்திடுக! அபயம் அளித்திடுக!**

**இது தருணம் எனை மெய் வீட்டுக்கு அழைத்திடுக!**

அறியாமை இருளில் பலநெடுங்கோடி காலமாக, எண்ணற்ற பிறவிகள்தோறும் சென்று சென்று அறிவின்றி அல்லற்பட்டு உலைந்து

கெட்ட எனை, இனி நின் திருப்பதி (தலைநடு விளங்கும் அக ஆன்ம அருள் நிலையம்) சேர்த்து புதிய வாழ்வு அருள்வாய்!

தூக்கம், சோம்பல், பசி, புலன் அவா முதலிய தொல்லை இருள் ஒழித்து, அழியா பதந்தனில் வாழ வைப்பாய், அரும் பெரும் ஜோதியனே!

மாயைக் கட்டிலிருந்து விடுவித்து, மரணத்திலிருந்து எனைக் காத்தருள்வாய்!

பிறப்பு இறப்பு எனும் எல்லையில்லா துன்பக் கடலினின்று கரையேற்றுவிப்பாய்!

இனி இவ்வுலகில், "நான்", என்பதும், "எனது அனுபவம்", என்பதேதும் வேண்டாம்!

"நான்", ஓட, இயற்கை அருட்ஜோதி ஆன்ம அணுவாய், நீயே இங்கிருந்து, உள்ளிருந்து மலர்ந்து, அழியாதாட வருவாய்!!

அருட்பெருஞ்ஜோதி நடராஜ பெருமானே!

உனது அடியன் ஆவதற்கு, நான் எந்தவிதத்தும் ஓர் சிறிதளவும் தகுதியில்லேன்!

உனது அருளைப் பெறுவதற்கு ஆதாரம் ஏதுமில்லேன்.

உலகில் கடைய நாய்க்கும் கடைய நாய்க்கும் கடைய நாடினேன்!

எனினும், என்னை ஈன்ற அன்னை நீ! என்னுடைய அப்பன் நீ!! எனை இப்படியே, இப்படியில், இந்த அவா மனத்தோடே, புறம் போக்கில் விட்டுவிட்டால், சினங்காம மயக்கடைந்துள்ள நான், பாவங்கள் பலவும் செய்து, மீளாத துக்க சகாரத்தில் வீழ்வேன்!

**தெய்வமே, உன்னை அடுத்தும் நான் கெடலாமோ?!**

எனை இத்தரையில் இருளில் வீழ வைப்பையோ! அலது அக்கரையில் நின் திருவடிக்கீழ் வாழ வைப்பையோ?!

தேவரீர், **ஒருமை - நிராசை - தயவு** முதலிய தயா ஒழுக்கங்களைத் தந்து, எப்படியும் என்னை இப்பிறப்பிலேயே அக்கரை ஏற்றி கைவிடாது காத்திடல் வேண்டும்.

குற்றங்களை பெரிதும் பொறுத்திடல் வேண்டும்.

அறியாமையாலும், மறதியாலும், அஜாக்கிரத்தையாலும், தாமச துற்குணங்களாலும், அவா வேகத்தினாலும், வலிய ஊழ்

வினைகளாலும், மதம் பிடித்த மனத்தாலும், தீய பழக்க வழக்கங்களாலும், பழைய அசுத்த அனுபவ வாசனைகளாலும் அகப்பட்டு தாக்குண்டு வாடிய எனது உடல், உயிர், உள்ளம் ஆகிய மூவிடத்தும் குளிர்ந்த உனது திருவடிச்சோதி விரித்து அங்குள்ள பிணியாகிய சகல குற்றங்களையும் நீக்கியருளி எனை வாழவைப்பாய்! இனி நீ என்றும் என்னுள் வாழ்வாய், தெய்வமே!!

சிறு புலன் இன்பங்களையே அனுபவிக்க வேண்டும் என பெரிதும் விழைகின்ற இந்த அவா மனத்தோடு, அனுதினமும் போரிட்டு போரிட்டு ஒருபோதும் வெற்றி கண்டதில்லை!

என்னே எனது இந்த இழிநிலை இறைவா!

குறைந்தபட்ச அறிவு கூட இல்லாது குறைபட்டுக்கிடக்கின்றேனே!

தன்னிகர் இல்லா தயாளனே! தனிப்பெரும் தலைவனே! உனது திருவுள்ளம் யாதோ யாதோ! இன்னும் எவ்வளவு காலம் இந்த அவல நிலையில் அழுந்திக் கிடப்பேன்?

நாடி வந்து என்னை நீ, நல்லன யாவும் செய்திடல் வேண்டும்! தூய சுத்த அருள் மனத்தை நல்கிட வேண்டும்.

பகவானே! எனை தீய புலனெறியில், இருள் வழியில் செல்லவிடாது தடுத்து நிறுத்திநின் திருவடிக்கே என்றும் அடிமைகொள வேண்டும்!

**“நான்” என்கின்ற அகப்பற்றும், “எனது” என்கின்ற புறப்பற்றும் கொண்டு, இவ்வுலகில், இருளிடத்து இன்பம் தேடி, எண்ணற்ற குற்றங்கள் புரிந்து, மிக இழிந்த நிலையில் மாபாவியாய்க் கிடக்கின்றேன்.**

நான் செய்கின்ற கலகங்களை எல்லாம் தவிர்த்து, மெய்க்கதி அளித்து அபயம் கொடுத்தருள்வாய் அப்பனே! அம்பலவாணனே! அன்புச் சிவமே!

உலகியல் குடும்பச் சூழ்நிலை என்றும், மக்கட்கு செய் கடமை என்றும், பணம் காசு தேடி உழைப்பு என்றும், பல காரணங்களாலும், ஐம்புலக்களிக் கூத்தாட்டங்களினாலும், மாயா மனோ விகற்பங்களினாலும், மற்றைய பராக்குகளினாலும், உன்னை மறந்தேயிருந்தேன்!

இனி எந்த சூழ்நிலையாலும், உலகியல் கடமையாலும்,தொழிற் செயல்களினாலும், சுக போகத்தினாலும், இன்மை, பயங்கவலைப்

பிணியாதிய அவத்தைகளாலும், **தடைபடாது, நிலையில் மாறுபடாது, உன் அடி நினைந்து, வாழும் பரிசு ஒன்று அருள்வாய் !!!**

வானிடை எறிந்த கல் ஆனது, ஈர்ப்பு விசையால் விரைந்து கீழ்நோக்கி மண்ணில் வீழ்வதுபோல், எனது மனம், எவ்வளவுதான் கல்வி கேள்வியுற்றாலும், நல்லோரை நாடி நின்றாலும், மறுபடியும் மறுபடியும் உலக போகங்களை நாடியே விரைகின்றது.

இதுவரை இந்த அநித்திய மாயா உலக போகப் பொருள்கள் மீது, பற்றுவைத்து வைத்து, எவ்வளவோ சோதனை வேதனைகள் அடைந்தும் கூட பற்று விட்டிலேன்; பற்று அறும் வழியும் கண்டிலேன்.

இனி அம்பலப்பற்றே பற்ற, நீயே எனைப் பற்றுவாய் பற்றற்ற பரமனே!

**அருள் ஆண்டவர், அக விழிப்பை அருள்வாராக! உள்ளத் தெளிவும், உடல் நலமும் தருவாராக!!**

**அளிக்கப்பட்ட நிகழ்காலத்தே, ஒரு நொடி கூட அகநிலையிலிருந்து விலகிடாது, கடவுள் நிலை கண்டு அம்மயமாகி, அருள் ஒளி உருவில், அகத்தில் உன்னோடு இரண்டறக் கலந்து வாழ்வதையே, எனது இலட்சியமாக முன் வைத்திடுக இறைவா!!**

பிற எண்ணங்கள் ஏதும் தடுக்காத சுத்த நிலையுற்று, உடல், மனம், உயிர் ஆகிய தத்துவங்களைக் கடந்து, நான் - எனது என்பதை முற்றிலுமாக அறுத்தெறிந்து, தற்போதம் ஒழித்து,

கருணையும் சிவமே பொருள் எனக் கொண்டு, செயல் அனைத்தும் அருள்ஒளியால் கண்டு, வாழ்ந்திட அருள் செய்திடுவாய்!!!

**அழிகின்ற மாயா தேக உணர்வினின்று என்னை விடுவித்தருளி,**

**அழியா நித்திய மெய்ஞ்ஞான அருளக நிலைக்கு எனை மாற்றித் தா ! என நின்னிடம் மன்றாடுகின்றேன்,**

மன்றில் நின்றாடும் பொருளே!!

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! நின் திருத்தாட்களில் அபயம் புகுகின்றேன்! காத்தருள்வாய் அப்பனே!!

தயவு

# 30-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# சேரிடம் அறிந்து சேர்!!

திருவருட்பிரகாச வள்ளலாரின் திருவருட்பாவில் ஓர் இனிய பாடல்;

சீரிடம் பெறும் ஓர் திருச்சிற்றம்பலத்தே திகழ் தனித் தந்தையே நின் பால்

சேர் இடம் அறிந்தே சேர்ந்தனன் கருணை செய்தருள்! செய்திடத் தாழ்க்கில்

யாரிடம் புகுவேன்? யார் துணை என்பேன்? யார்க்கு எடுத்து என் குறை இசைப்பேன்?

போரிட முடியாது இனித் துயரொடு நான் பொறுக்கலேன் அருள்க இப்போதே!!

இந்த மாயா உலகத்தில் ஒவ்வொரு நாளும் மனிதன் படுகின்ற துன்பத்தை அளவிட்டு கூறமுடிவதில்லை! தடுத்தலரிய பயங்கவலை, தீராத கொடிய நோய், வறுமை, பசி, இன்மை, இச்சை, மூப்பு, குடும்பப் பிரச்சனைகள், என பலவாறான துன்பங்கள், சோதனைகள், வேதனைகள், முன்வினையால் அடுக்கும் வாதனைகள் என எத்தனையோ விதமான தொல்லைகளை அனுபவித்துக்கொண்டு இருக்கின்றான்.

**துன்பங்கள் ஏன் வருகின்றன? துன்பத்தை போக்கும் வழி என்ன? துன்பங் கலவாத இன்பநிலையில் வாழ்வது எப்படி?**

இதற்கான ஒரே வழி

**சேர்இடம் அறிந்து சேர்தல் !!!**

**அந்த இடம்தான், திருச்சிற்றம்பலம் !!!**

இந்த சிற்றம்பலம் எங்கே உள்ளது?

அங்கு போய் சேர்ந்து வாழ்வது எப்படி? சிற்றம்பலம் என்றால் என்ன?

சித்து+அம்பலம் =சிற்றம்பலம்!

மேலும், சிறிய+அம்பலம்=சிற்றம்பலம்!

- சித்து என்றால் அறிவு என்று பொருள். அந்த அறிவாக இருப்பது ஆன்மா!!!

இந்த ஆன்மா அணுத்துவமானது; கண்ணால் பார்க்க முடியாத அருவமானது! இதுவே அம்பலம் எனப்படுகிறது!

ஓர் புள்ளி போல் சிறியதினும் சிறியதாய் உள்ளதால், சிற்றம்பலம் எனப்படுகிறது!

இந்த சிற்றம்பலமாகிய ஆன்மா அனாதியானது; கடவுளைப் போல் ஆதி அந்தம் (முதலும் முடிவும்) இல்லாதது; என்றும் உள்ளது!

**என்று நீ, அன்று நான்!** என்பார் ஒரு மெய்ஞ்ஞானி!

இந்த அழியாத, என்றும் உள்ள ஆன்ம சிற்றம்பலத்தில்தான், அகண்ட வான்பெருவெளி முற்றும் சத்துப்பொருளாய், அன்பு இருப்பாய் எங்கெங்கும் என்றென்றும் இயற்கை உண்மையாய் இருந்துவரும் கடவுளே, தன் முழு இயல்போடு ஆன்ம சிற்றம்பலத்தில் எழுந்தருளி உள்ளார்!

இயற்கை விளக்கமாக - அருள் உணர்வாக - அருட்பெருஞ்ஜோதியாக விளங்குகின்றார் !!!

எனவே கடவுள் நம் ஆன்மாவிற்குள் உள்ளொளியாக அனாதி காலமாகவே, உள்ளே விளங்கி வருகின்றார்!

இந்த நித்திய ஆன்மா இந்த உடம்பில் எங்கே உள்ளது?

உச்சிக்குக் கீழே, உண்ணாவுக்கு மேலே, புருவமத்திக்கு நேரே, தலை நடு உட்பாகத்தில் உள்ளது!

அதாவது மண்டையில் உள்ள பெருமூளைக்குக் கீழேயும், உண்ணாவுக்கு மேலேயுள்ள முகுளநடு மூளைக்கு மேலே, ஒரு சிறிய உரல் போன்ற குழி ஒன்று உள்ளது! அந்த குழியை, "**ப**"கர வடிவக்குழி என்பர். அக்குழியில் அமுதரசம் என்கின்ற திரவம் உள்ளது. இந்த குழியை **cerebrospinal cavity** என்றும், அதில் சுரக்கின்ற திரவத்தை **cerebrospinal fluid** என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த பகரவடிவ குழிக்கு மேல் சிறிய வெற்றிடம் உள்ளது.

அந்த வெற்றிடத்தில் தான் இந்த சிற்றம்பலமாகிய ஆன்மா, கோடி சூரியப்பிரகாசத்தோடு, சதா சுடர்விட்டுக்கொண்டிருக்கின்றது - என்கின்றார் வள்ளலார்!

அந்த ஆன்மா தான் இந்த தேகத்தில், சதா "**நான் இருக்கின்றேன்**" என்றபடி சுடர்விட்டுக் கொண்டுள்ளது!

உண்மையில் நாம் அந்த அழிவில்லாத, அனாதி தொட்டு இருந்து வருகின்ற, அறிவே வடிவான நித்திய ஆன்மாவாகத்தான் உள்ளோம்!!!

எனினும், ஆன்மாவுக்கு இயற்கையில் உள்ள ஆணவ மலம் என்கின்ற அஞ்ஞானமாகிய பாசாந்தகார இருளில் மூழ்கி, நம்மையே நாம் அறியாது கிடக்கின்றோம்.

எத்தனையோ கோடி காலமாக எத்தனையோ கோடி பிறவிகளில் எல்லையில்லாத இன்ப துன்பங்களை அனுபவித்து வந்திருக்கின்றோம்.

இப்பொழுதுதான் நமக்கு பக்குவ மனிதப் பிறப்பு வழங்கப்பட்டுள்ளது கடவுள் அருளால்!

இந்த மனித பிறப்பு கூட உடனடியாக வந்து விடவில்லை! பல ஆயிரம் ஆண்டுகளாக பக்குவமில்லா மனிதப் பிறப்பில் புகுந்து புகுந்து, எல்லையில்லாத துன்பாவத்தைகளை அனுபவித்து அனுபவித்து, பட்டு பட்டு தேறிய பின்னரே, இப்பொழுது, **"தெய்வம் ஒன்று உண்டு"**, என்கின்ற தெளிவு பிறந்திருக்கின்றது! இப்படியான சூழ்நிலை கிடைப்பது அரிது! அரிது!!

**காற்றுள்ள போதே தூற்றிக்கொள்!!** என்பது பழமொழி.அதாவது இந்த உடம்பில் ஜீவசுவாசம் இருக்கும்போதே, ஆன்மாவின் உண்மையையும், ஆன்மாவிற்குள் உள்ளொளியாக உள்ள கடவுள் உண்மையையும் அறிந்துக்கொண்டு,

அழியாத நித்திய நிலையான ஆன்ம இன்ப சுகத்தை அறிந்து அடைய வேண்டும்!

ஆனால், நாம் இப்பொழுது எப்படி வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம்! **உண்மையை விட்டு விலகி, வெகு தூரம் வெளியே(புறத்தே) வந்து**, எப்படி எப்படியோ அநித்தியமான உலக வாழ்வில், மாயா வாழ்வில் பிழைத்துக் கொண்டுள்ளோம்!

இந்த ஒன்பது வாயில் கொண்ட, அசுத்த மாமிச உடலையே, "நான்", என எண்ணிக்கொண்டிருக்கின்றோம்!

மனம் மற்றும் உடல் சார்ந்த பொய்ச்சுகங்களுக்காகவே அல்லும் பகலும் பாடுபட்டு, முடிவில் விரைவில் மடிந்து போகின்றோம்!

இதற்காகவா நம்மை கடவுள் இந்த ஆறறிவுடைய மனித தேகத்தில் வரவழைத்துள்ளார்?

மனிதன் பிற உயிரினங்களுக்கு இல்லாத பகுத்தறிவை பெற்றுக்கொண்டதன் பயன் என்ன?

ஆன்மாவின் உண்மையை உணர்ந்துக்கொண்டு, ஆனந்த வாழ்வில் வாழவன்றோ, கடவுள் நம்மை இங்கு இத்தேகத்தில் வரவழைத்துள்ளார்?!

**இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்? முதலில், "தேகமே நான்" என்ற பொய்யான மாயா உணர்வைக் கடக்க வேண்டும் !**

**நித்திய அருட்ஜோதி ஆன்ம சொரூபமே, நமது ஆனந்த அகவடிவமாக உள்ளது!! என்பதை அறிந்துக்கொள்ள நாளும் அதற்கான முயற்சியை தவறாது மேற்கொள்ள வேண்டும்!**

அதற்குரிய சாதனம் என்ன?

"மனதை எப்போதும் புருவமத்தியில் செலுத்த வேண்டும்"-

பயிற்சி முறை;

தினமும் அதிகாலை, மற்றும் இரவு தூங்குவதற்கு முன் ஒரு 45 நிமிடம் தியானம் பழக வேண்டும்!

தியானம் செய்யும் முறை;

1.இதய ஸ்தானத்தில் இயங்கும் மனதை புருவ மத்திக்கு கொண்டுவர வேண்டும் (பொட்டு வைக்கும் இடம்)

2.ஒரு சிறு தென்னங் குச்சியால் புருவ நடுவே சில நொடிகள் அழுத்தம் தருக! இப்போது மனம் அங்கு வந்துவிடும்.

3- மனதை புற உலக விஷய சிந்தனை செய்யாது, எந்த நினைப்பும் மறப்பும் உண்டாகாதபடி கவனமாக இருக்க வேண்டும்.

4.புருவ மத்திக்கு உட்புறமாக (ஒன்றரை அங்குலத்திற்கு உள்ளே) ஒரு வெற்றிடத்தை கற்பனை செய்க!

5.அங்கே ஒரு சிறிய, பிரகாசமான, வெண்மையான தாமரைப்பூ விளங்குவதாகவும், அந்த தாமரைப்பூவிற்கு நடுவில் தீபம் ஒன்று சுடர்விட்டுப் பிரகாசிப்பதாகவும் பாவிக்க வேண்டும். அந்த தீபம் தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என நினைக்க வேண்டும். அவர் எப்போதும் தனிப்பெரும் கருணையோடு விளங்கிக் கொண்டிருப்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**எல்லையில்லாத பேரருட் பெருங்கருணைதான் கடவுளுடைய திருமேனியாக உள்ளதை நினைத்துப் பார்க்க வேண்டும்.**

ஆண்டவர் இங்கு என்ன செய்துக் கொண்டிருக்கின்றார்?

ஐஞ்சக்தி கொண்டு ஐந்தொழில் புரிகின்றார்!

**கடவுளின் ஐந்து சக்தி;** பொருட் சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, யோக சக்தி, அருட் சக்தி!

**கடவுளின் ஐந்து தொழில்;** இந்த ஐஞ்சக்கி கொண்டு ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் அனாதி காலந் தொட்டு புரிந்து வருவதை நினைவு கூரவேண்டும்.

6.தியானம் செய்யும்போது மகாமந்திரத்தை ஜெபிக்கலாம்!

வள்ளலாருக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தெரிவித்த மகா மந்திரம்;

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

இந்த மகா மந்திரத்தை மனதிற்குள்ளேயும் சொல்லலாம் அல்லது வாய்விட்டும் சொல்லலாம்!

இப்படி ஒரு 20 நிமிடம் அருட்ஜோதி தீபத்தை மறவாது, வேறு சிந்தனை இல்லாது, கடவுளின் பெருமையை, அவரது புகழை நினைத்து, முதற்படி தியானத்தை முடிக்கவும்!

## 7.இரண்டாம் நிலைத் தியானம்;-

இப்போது எந்த பாவனையும் செய்ய வேண்டாம்.

புருவமத்தியின் உட்புறமாக நமது எண்ணத்தை குவிக்க வேண்டும். வேறு எந்த சிந்தனையும் கூடாது!

**ஆன்மாவின் இருப்பு குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். இருக்கின்றேன் என்ற "இருப்புணர்வு" எங்கிருந்து வருகிறது? என மன ஓர்மை கொண்டு, ஆழ்ந்து ஆழ்ந்து, உள்நோக்கி (அகம் நோக்கி) கவனிக்க வேண்டும். அந்த "இருக்கின்றேன்" என்ற இருப்பதைத்தான், "நான்" என்கின்றோம்.**

2-ம் தியான நிலை ஒரு 30 நிமிடம் செய்யலாம். அந்த "நான்" என்ற உணர்வுக்கு உள்ளே தான், "தான்" என்ற கடவுள் எல்லையில்லாத கருணை ஒளியாய் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்.

அவருடைய அருள் ஞானத் திருநடனத்தால்தான், அணு முதல் அண்டம் வரை எல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த பிண்ட உடலில் அவருடைய ஞான நடத்தால் அனேக உடலுறுப்புக்கள் அணுவும் பிசகாது இயங்கிக் கொண்டே உள்ளது.

எடுத்துக்காட்டாக நுரையீரல் ஒருநாள் ஒன்றுக்கு 21,600 முறை காற்றை உள்வாங்குவதும், வெளிவிடுவதுமாய் உள்ளது. இதயம் நிமிடத்திற்கு 72 முறை இரத்தத்தை பம்ப் செய்து உடலின் மூலை முடுக்கெல்லாம் அனுப்புகிறது.

ஒரு சிறுநீரகத்தில் 10 லட்சம் நெப்ரான்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் இரத்தத்திலுள்ள அசுத்தங்களையும், அதிகப்படியான நீரையும் வடிகட்டி சிறுநீராகப் பிரித்து விடுகிறது.

சிறுமூளை, பெருமூளை, நடுமூளை, கல்லீரல், மண்ணீரல், சிறுகுடல், பெருங்குடல், 72,000 நாடி நரம்புகள், இரத்தம், சுக்கிலம் இன்னும் அனேக உறுப்புகள் தத்தம் வேலையை செய்துக்கொண்டுள்ளன! இதையெல்லாம் செய்வது யார்? மாயா சக்தியைக் கொண்டு இறைவனே செயல்புரிந்துக் கொண்டுள்ளார்!

இதுபோல் அண்டத்திலும் அதிசயத்தக்க அற்புதங்கள் நிகழ்கின்றன. சூரியனை பூமி முதலான கோள்கள் எத்தனையோ கோடி காலமாக அதுவதுவும் தனக்கு வரையறுக்கப்பட்ட பாதையில் சுற்றி வந்துக்கொண்டேயுள்ளது!

பூமி தன்னைத்தானே மணிக்கு 1,670 கி.மீ. வேகத்தில் சுற்றிக்கொண்டு, அதே நேரத்தில், மணிக்கு1,07,000 கி.மீ. வேகத்தில் சூரியனைச் சுற்றி வருகின்றது. இதற்கு இந்த ஆற்றல்கள் எங்கிருந்து கிடைக்கின்றது! கடவுளின் தனிப்பெரும் கருணையாகிய அருட்சக்தியிடமிருந்து கிடைக்கின்றது.

**செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்க!** என்று வள்ளலாருக்கு கடவுளே உபதேசித்துள்ளார்.

எனவே தியானம் செய்கின்றபோது இந்த அருள் ஆற்றலின் பெருமையை, எல்லாம் செய்யும் வல்லபத்தை நினைவு படுத்திக்கொண்டு உள்ள நெகிழ்ச்சியோடு இருந்தால் ஆன்மாவிற்கு உள்ளிருக்கும் ஆண்டவர் உண்மை சிறிது சிறிதாக வெளிப்பட்டு, எல்லா உண்மையையும் நமக்கு உணர்த்தி, **ஆன்ம அக நிலையில் நம்மை இருத்தி, அழியாத நித்திய சுக பூரண, சத்தியப் பெருவாழ்வில் நம்மை வாழவைப்பார்!**

## 31-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### நான் யார்?! "நான்"-நான் அல்ல !!<br>அதுவே, நானாகவும் இங்கு விளங்குகின்றது !!

நான் ஆர்? என்று அறியேன்! எங்கோன் யார்? என்று அறியேன்!!
- *வள்ளலார்.*

நன்று அறியேன்! தீது அறியேன்! "நான்" என்று நின்றவன் ஆர்"?! என்று அறியேன், நான் ஏழை என்னே பராபரமே! - *தாயுமானவர்.*

"நான் எனவும் நீ எனவும்" இரு தன்மை நாடாமல், நடுவே சும்மா

தான் அமரும் நிலை இதுவே சத்தியம் சத்தியம் என நீ தமியனேற்கு

மோனகுரு ஆகியும் கைகாட்டினையே, திரும்பவும் "நான்" முளைத்துக் தோன்றி

மானத மார்க்கம் புரிந்து, இங்கு அலைந்தேனே, பரந்தேனே வஞ்சனேனே!! - *தாயுமானவர்.*

நான் என்றும், தான் என்றும் நாடாத நிலையில், ஞான வடிவாய் விளங்கும் வான நடுநிலையே!! - *வள்ளலார்.*

"நான்" என்று எதைச் சொல்வேன்? அது நீயே ஆனாய்!! ஞானம் சேர் ஆன்மாணு நானோ? நீ தானே!! **-** *தயாநிதி சரவணானந்தா*

### முக்கிய குறிப்பு;

நம்முள்ளே தலைநடுவில் விளங்கும், கடவுள் ஆன்ம உண்மையை உணர்வதற்கு, இதய ஸ்தானத்தில் சதா நினைப்பு மறப்பு கொண்டு,

ஆயிரமாயிரம் எண்ணங்களால் நம்மை நாளும் அலைக்கழிக்கும் மனதை, **புருவமத்தியில் நிலை நிறுத்த வேண்டும்! புருவமத்தியிலிருந்து அகமுகமாக ஆழ்ந்து உள்நோக்கிப் பார்க்கும் பழக்கத்தை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும்;** அதுவே நமது கடமை! இறை உண்மையைக் காண உள்ளே வரவேண்டும். இதற்காக தினமும் புருவமத்திய தியானம் பழக வேண்டும்! புருவமத்தியே நமக்கு புகலிடமாக உள்ளது! அதிகாலை, இரவு உறங்குவதற்கு முன் ஒரு 30 நிமிடம் இந்த தியானப் பயிற்சியை மேற்கொண்டு வந்தால், இதுவரை காணதவெல்லாம் காணலாம்; அறியாதவெல்லாம் அறியலாம்; அனுபவித்தறியாதவெல்லாம் அனுபவமாகும்! இது உண்மை!

**ஆன்ம அகம் அறிந்தால் அல்லல் அகலும் !**

**அருள் உதயமானால் ஆனந்தம் அனுபவமாகும் !**

என்பது வள்ளலார் அருள் வாக்கு.

உள்ளிருந்து வாழ்வதுவே உண்மை வாழ்வாகும்! மற்று புறம் இருந்து புரிவதெல்லாம் பொய்ப்பிழைப்பே ஆகும் - வள்ளலார்.

கடவுள் நிலை அறிந்து அம்மயம் ஆதல் வேண்டும்- என்பதுவே இராமலிங்க அடிகளின் உபதேசம்!

எல்லையில்லாத துன்பத்தைத் தருகின்ற இந்த பிறப்பு இறப்பு என்கின்ற பெருங்கடலில் இருந்து கரையேற விரும்புவோர், தன்னை யார் அறிந்து கொள்ள வேண்டும்!

“தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே! ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே!” என்று பாடுகின்றார் வள்ளலார்.

- இனி “கடவுள்-ஆன்ம உண்மையை” அறிந்துக் கொள்வோம்;

திருவருட்பா செய்தியாக ஒரு கவிதை(10 வரிகள்)

1. உன்னை “ யார்?” என்று எண்ணி எண்ணி, நீ பார்க்கிறாய்!

2. இது, “யார் வாழும் வாழ்வு” என்று மயக்கோடு நீ ஏற்கிறாய்!

3. அகண்ட வெளி முற்றும் நிறைபொருளே இந்த மெய்-அணு(மனிதனுடைய ஆன்மா) ஆகிறார்!

4. நான் என்று கொள்ளற்கு முழு உரிமை எனக்கே ஆம் என்கிறார்!

5. உன் உடல், ஆவி, பொருள் எல்லாம் தானே எடுக்க காத்திருக்கின்றார்!

6. இவன் என்று, தனி ஒன்றில்லை! யாவும் தானே! ஒன்று!! என்கின்றார்.

7. மாயா இன்ப துன்ப, பிறப்பு இறப்பு பொய் வாழ்வு (விடு) மாற்றென்கிறார்!

**8. அகம் இருந்து நித்திய அருள் வாழ்வு உடன் ஏற்க அவசரமாய் அவர் அழைக்கின்றார்!**

9. சச்சிதானந்த அனுபவ வாழ்வேற்க, "**தான் கொண்ட திருக்கோலம் நீ** " என்கிறார்!

10. சாகாத வரம் அருள், சத்திய சன்மார்க்கம் இன்று தயவு செய்கிறார்!!!

இனி இதற்கான விளக்கம் காண்போம்;

1.உன்னை "யார்? " என்று எண்ணி எண்ணி நீ பார்க்கிறாய்?

2.இது யார் வாழும் வாழ்வென்று மயக்கோடு நீ என்கிறார்!

விளக்கம்;

"நான்-நான்", என்று சொல்லுகிறோம். "நான்" என்பதின் உண்மையை அறியாமலே உலகில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம்.

இந்த அசுத்த மாயா உடலையே நான் என மருளறிவால் கண்டுள்ளோம்.

"தேகமே நான்" எனவும், "போகமே முக்தி", எனவும் கொண்டிருக்கும் வரை ஆன்மாவை அறிய முடிவதில்லை.

புருவநடு மனதை வைத்து உள்நோக்கிப் பார்த்தால்,

"நான்" என்பதின் உண்மை விளங்கும்.

"இருக்கின்றேன்", என்ற உணர்வு நமக்கு உண்மையில் எங்கே அனுபவமாகின்றது? தலைநடுவில்தான் அது சதா உணர்வுச் சுடராய் பிரகாசித்துக் கொண்டுள்ளது!!

அது ஒரு **“நித்திய இருப்புணர்வு கொண்ட அறிவு ஆகாசமாகும்”!!** இதையே, “நான்”, என்றும், “ஆன்மா” என்றும் அறியப்படுகின்றது. அப்படி இங்கே, இருந்துக்கொண்டிருப்பது” யார்?

நாம், நம் சுதந்திரத்தால் அப்படி ஓர் உணர்வை விளங்கச் செய்ய முடியுமா? ஒருகாலும் முடியாது! அப்படி நம்மால், “இருக்கின்றேன் நான்” என்கின்ற இருப்புணர்வை, நம் சுதந்திரத்தால் விளக்கம் செய்யமுடியும் எனில் ஒருவனுக்கு மரணமே நிகழாது!

எனவே, அப்படி அந்த உணர்வை விளங்கச் செய்வது கடவுளே! தானே இங்கு இவ்வுலகில் “நான்” எனவும் விளங்கிக்கொண்டுள்ளார்! அந்த அறிவு வெளியாகிய, “ஆன்மாவிற்கு உள்ளே உள்ளொளியாக கடவுள் விளங்கிக்கொண்டுள்ளார்”!

இப்பொழுது நாம் புரிந்துக்கொண்டுள்ளது யாதெனில், **இருப்பது மெய்ப்பொருள் (கடவுள்) ஒன்றே! அதுவே எல்லாமாய், நாம் எல்லோருமாய், எல்லா உயிர்களுமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றது**!

அவரே இங்கு வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்!

அகநிலையில் அவர் ஒருவராகவும், புற உலகத்தே பலராகவும், பல்லுயிர்களாகவும் விளங்குகின்றார்!

இதைத்தான் மாணிக்கவாசகர், **ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க!** என போற்றுகின்றார்.

மேலும்,

“இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே”!!!என்கின்றார்.

“அகநிலையில் - அருட்பெருவெளியில் - உள்ள ஆண்டவரை”, புறவுலக இன்பதுன்பங்கள் தீண்டமுடியாது! அங்கு அவர் எப்போதும் இயற்கை இன்பம் என்கின்ற, “பேரானந்த நித்திரையில்” இருப்பார். அதே நேரத்தில் புற உலகில் “அனேகனாக” - உயிர்களாக வாழ்கின்ற நிலையில் மாயா இன்பதுன்பங்களை அனுபவிப்பவராகவும் உள்ளார்!

3. அகண்ட வெளி முற்றும் நிறைபொருளே இந்த “மெய்-அணு”(மனிதன்) ஆகிறார்!!

4. “நான்” என்று கொள்ளற்கு முழு உரிமை எனக்கே ஆம் என்கிறார்!

இதன் பொருள்;

நாம் கண்ணால் காணும் ஆகாயம் முழுமையான தல்ல! அகண்ட வான் பெருவெளியின் ஒரு சிறு கூறுதான் நம் கண்ணுக்குத் தெரிவது.

பஞ்ச பூதங்களில் முதலானது ஆகாயம். இது எங்கும் வியாபித்துள்ளதாம். வானம் எல்லையில்லாதது; அது எங்கும் முடியாது! இதுதான் அற்புதத்திலும் அற்புதம்! அந்த அகண்டவான்பெருவெளிக்குள்ளே என்றென்றுமாய், எங்கெங்குமாய், அனாதி காலமாய், ஆரம்பம் முடிவு இல்லாததாய் நிறைந்துள்ளவர்தான் கடவுள். அங்கு அவர், **அன்பு இருப்பாய்** உள்ளார்!!

இதையே வள்ளலார், "**இயற்கை உண்மை**" என்கின்றார்!

இந்த "சத்துப் பொருள்", கண்ணுக்குத் தோற்றாத

அருவநிலையில் உள்ளது! அந்த நிலையில் அவருக்கு,

"வாழ்வு" என்பதோ, "அனுபவம்" என்பதோ இல்லாது இருக்கின்றார்!

அப்படி உள்ளநிலை இருந்தும் பயனில்லாதது போல் இருந்ததாம். எனவே கடவுள், "தன்னைத்தானே அனுபவிக்க (இயற்கை இன்பம் என்கின்ற ஆனந்தானுபவம்)" திருவுளம் கொண்டார்! அக்கணமே தானே அனந்தம் கோடி ஆன்ம அணுக்களாக வெளிப்பட்டார்!

ஒவ்வொரு ஆன்ம அணுவும், அகண்டவெளி முற்றும் நிறைந்த, இயற்கை உண்மையை பூரணமாக தன்னுள் கொண்டதாம்! இதையே

"**அகண்டாகாச நிறைவிலே சிற்றணுவான ஆன்மா**" என்பார் சுத்த சன்மார்க்க சத்திய ஞானி, தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்கள்.

எனவே இறைவனே தன் முழு உண்மை கொண்ட ஆன்மாவாக, நாமாக, இங்கு விளங்கிக் கொண்டுள்ளார்!

எனவே அவரைத் தவிர, "நான்" என்று சொல்லிக்கொள்ள நமக்கு உரிமையில்லை!

அவரே இங்கு நாமாக விளங்குவது உண்மை!

5. உன் உடல், ஆவி, பொருள் எல்லாம் தானே எடுக்க காத்திருக்கின்றார்!

6.“இவன்” என்று தனி ஒன்றில்லை! “யாவும் தானே! ஒன்று!” என்கின்றார்.

இதன் பொருள்;

ஆன்மாவிற்கு உள்ளே “உள்ளொளியாய்” ஆண்டவர் என்றும், அனாதியே பிரியாது உள்ளார்! ஆன்ம அணுவுக்கு உள்ளிருக்கும் அந்த அருள் ஒளியே புறத்தே விரிந்து, நமது உயிர் உணர்வாகவும், மனோ சிந்தனையாகவும், உடல் உருவ தோற்றமாகவும் விளைவு கொண்டுள்ளது! அவரே உடல், உயிர், உள்ளம் (உடல், ஆவி, பொருள்) என விளங்குகின்றார். எதற்காக இப்படி விளங்குகின்றார்? எனில், அருள் இன்ப அனுபவத்திற்காகவே ஆம்!!!

எல்லையில்லாத காலமும் இயற்கை இன்பத்தை, தானே ஒரு ஆன்மாவாய் இருந்து தன்னைத்தானே அனுபவித்துக் கொண்டிருத்தல்! இதுதான் இறைவனின் திருவுள்ளம்; நோக்கமாகும்!

எனவே இங்கு உண்மையை உணராது, “நான்” என்ற அகங்காரமும், “எனது” என்ற மமகாரமும் கொண்டு இவ்வுலகில் சிறு புலன் இன்பங்களையும், அதனால் பெருந் துன்பத்தையும் அனுபவித்துக் கொண்டிருத்தல் ஏனோ?!

“எல்லாம் இறைவனுடையதே” என்பதை உணர்ந்து அறியாமையால் நமது என்று உடல், ஆவி, பொருளை உரிமையாக கொள்ளும் தற்போதம் ஒழித்து, அவரிடமே அதை ஒப்படைத்து விட்டால், அத்தருணமே அவர் நம்மை, அவர் மயமாக்கி பேரின்ப பெருஞ்சுக வாழ்வில் என்றும் வாழ வைப்பார்!

**7. மாயா இன்ப துன்ப பிறப்பு இறப்பு பொய் வாழ்வு (விடு) மாற்றென்கிறார்!**

**8. அகம் இருந்து நித்திய அருள் வாழ்வு உடன் ஏற்க அவசரமாய் அவர் அழைக்கின்றார்!**

இதன் பொருள்;

தேகமே நான் என்கின்ற பொய்ப்பாவனையிலிருந்து நாம் அனுபவிக்கும் ஐம்புலன் இன்பங்கள் எல்லாம், மாயா மனோ மயக்க இன்பமே! ஒழிய, அவைகள் உண்மை இன்பமல்ல! புறம் இருந்து அகமிருக்கும் ஆன்மாவை நோக்கிச் செல்லும் மாயா இன்பங்கள், ஆன்மாவில் மின்னல் போன்று தோன்றி, மயக்கத்தால் இன்பம் போலத்

தோன்றி, அக் கணமே மறைந்துவிடுகிறது; அங்கு அது நிலைப்பதில்லை! நிலைக்கவும் முடியாது!

அடுத்து பிறப்பும் இறப்பும்;

உண்மையில் பிறப்பும் இறப்பும் ஆன்மாவுக்கு இல்லை! ஆன்மாவின் மேல் தேகம் சூழ்வதும், நீங்குவதையுமே பிறப்பு இறப்பு என்கின்றோம்.

இந்த நிலை நீங்க வேண்டுமானால், எல்லையில்லாத மாயா பிறப்பு இறப்பு என்கின்ற பெருந் துன்பம் தொலைய வேண்டுமானால், தன்னை உணர்ந்துக்கொள்ள வேண்டும்!!!

**அதற்கு தேக நிலை கடந்து, ஆன்ம அக நிலையை பற்றிக்கொள்ள வேண்டும்! அங்கிருந்தபடி "அருள் வாழ்வு" வாழவேண்டும்.**

இந்த நித்திய நிலையான பேரின்ப வாழ்வு வாழ்வதற்கே, நம்மை அவசரமாய் அவர் அழைத்துக்கொண்டுள்ளார்! ஏன் இந்த அவசரம்? என்றால் மரணம் எப்பொழுது வரும் என்று சொல்ல முடியாது; குறுகிய காலமே உள்ளது; காற்றுள்ள போதே தூற்றிக்கொள்! என்பர் ஞானிகள். அதாவது இந்த உடலில் ஜீவ சுவாசமாகிய, மூச்சுக்காற்று உள்ளபோதே விரைந்து விரைந்து அகநிலையை சார்ந்துக் கொள்ளவேண்டும்; வீண் காலம் கழிக்கக் கூடாது!

9. சச்சிதானந்த அனுபவ வாழ்வேற்க "தான் கொண்ட திருக்கோலம் நீ !!!" என்கின்றார்.

10. சாகாத வரம் அருள் சத்திய சன்மார்க்கம் இன்று

"தயவு" செய்கிறார்!

இதன் பொருள்;-

சத்து+ சித்து+ஆனந்தம்=சச்சிதானந்தம். இதையே அன்பு-அருள்-இன்பப் பெருவாழ்வு என்பர்! அதாவது இதையே வள்ளல்பெருமான் "இயற்கை உண்மை- இயற்கை விளக்கம்- இயற்கை இன்பம்" என்கின்றார். இந்த அருள் இன்ப இயற்கைப் பெருவாழ்வு ஏற்கவே, இறைவனே, ஆன்மாவாக திருக்கோலம் பூண்டு இங்கு விளங்குகின்றார்!

இந்த மரணமில்லா பெருவாழ்வு வாழ வழிகாட்டுவது தான், வள்ளலார் வழங்கிய சுத்த சன்மார்க்க அருட்பெருநெறி!!!

இது சாதி, மதம், சமயம், இனம், பால், மொழி, தேசம் முதலிய வேறுபாடுகளைக் கடந்தது! ஆண்டவரே இத்தருணம் எல்லாவற்றையும் தவிர்த்து, உலக சமுதாயம் முழுமைக்கும் ஒரு பொது நெறியாக சுத்த சன்மார்க்கத்தை வள்ளலார் மூலம் வழங்கியுள்ளார்! ஏற்று இன்புறலாம், வாரீர் வாரீர்!!!

தயவு

## 32-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## வள்ளலார் கடவுளிடம் கேட்ட கேள்வி !;-
## “ வருந்தாது அணைவேனோ?!”

திருவருட்பா - இங்கிதமாலையில் - ஒரு பாடல்;-

இந்தப் பாடல் கேள்வி - பதில் முறையில் அமைந்துள்ளது! இதில் சிதம்பரம் இராமலிங்க அடிகளார் கேள்வி எழுப்புவதும், அதற்கு ஆண்டவர் பதில் அளிப்பதுமாக உள்ளது!

கேள்வி;- வான்தோய் பொழில் சூழ் ஒற்றியுளீர்,

வருந்தாது அணைவேனோ?! என்றேன்.

பதில்;- ஊன்தோய் உடற்கு! என்றார்.

இதற்கான விளக்கம் காண்போம்;-

“வான்தோய் பொழில் சூழ் ஒற்றி “

வள்ளலார் குமார பருவத்தில் இருந்தபோதே சென்னை மின்ட் - ஏழு கிணறு பகுதியிலிருந்து தினமும் திருவொற்றியூர் தியாகராஜப் பெருமானை நடந்தே சென்று, பகல் முழுவதும் கோயிலிலே தங்கி வழிபாடு செய்துவிட்டு இரவு வீடு திரும்புவது வழக்கம்.இனி இப் பாடலைப் பார்ப்போம்.;-

வானளாவிய இயற்கை வளங்கள் நிறைந்த திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள இறைவா! என்கின்றார்.

ஒற்றி உளீர்!!-என்பது என்ன? “ஒற்றி”, என்பது இறைவனும் ஆன்மாவும் இயற்கையிலே - அனாதியாகவே- இணைந்து, இரண்டற்று, ஒன்றுபட்டு உள்ள இடம்! இதுவே, உண்மை “திருவொற்றியூர்” ஆகும்.

மேலும் இதை “வான்தோய் ஒற்றி” -என்கின்றார். அதாவது, அகண்ட ஆகாச வான் பெருவெளி முற்றும் நிறைந்த “அன்பு இருப்பு” ஆகிய கடவுள் இயற்கை உண்மை, பரிபூரணமாக ஒவ்வோர் ஆன்மாவிலும் முழு உண்மையோடு பிறிவற பொருந்தியுள்ளதாம். இதனாலே, இது, “ வான்தோய் பொழில் சூழ் ஒற்றி” எனப் போற்றுகின்றார்!

இதுபற்றி திருமூலர் திருமந்திரத்தில் ஓர் இரகசிய குறிப்பு உள்ளது;-

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடில்

ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்

தான் பற்றப்பற்ற தலைப் படுந்தானே - என்கின்றார்.

- அகண்ட வானில் உள்ளீடாய் - பரமாகாச சொரூபியாய் - சத்துப் பொருளாய் நிறைந்துள்ள பரம்பொருளே, இந்த ஊனாகிய பிண்டத்தில், நம் தலைநடுவில் சிதாகாச வண்ணமாய் சுடர்விட்டுக் கொண்டு இருக்கின்றார் !

இதுவே, உண்மையான திருவொற்றியூர் ஆகும். இதுவே, சிற்சபை எனவும் சிற்றம்பலம் எனவும் போற்றப்படுகிறது!

இனி வள்ளலார் கேட்ட கேள்வியை பார்ப்போம்!

வருந்தாது அணைவேனோ?! என்ற ஐய வினா எழுப்புகின்றார்!

இந்த உலகில் இறைவனைச் சென்றடைய எத்தனையோ சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் உண்டாகியுள்ளன.

ஆன்மக் கடவுள் நிலையை அறிந்து பிறவிப்பெருங் கடலை கடக்க முயன்றவர்கள் எண்ணற்ற கோடி பேர்கள்! அவர்கள் இறைவனை அடைய கடுந்தவ வாழ்க்கை மேற்கொண்டனர்! மனைவி, மக்கள், சுற்றங்களை துறந்து காட்டுக்குச் சென்று கடுந்தவம் புரிந்தனர்! உணவையும், உறக்கத்தையும் சுருக்கினர்; அங்கு இயற்கையில் கிடைக்கும் காய் கனி மூலிகை முதலியவற்றை உண்டு இயற்கையோடு ஒட்டி வாழ்ந்தனர்! தேகத்தை போகத்தை வெறுத்தனர்! ஐம்புலன்களை அடக்கி ஒடுக்கினர்! ஆனாலும் மனதை அடக்க அரும்பாடுபட்டனர்! சுவாசத்தை கட்டுப்படுத்தும் முறைகளை மேற்கொண்டனர்!

மனதிற்கும் சுவாசத்திற்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக கருதினர். எண்ண அலைகளை கட்டுப்படுத்த சுவாச பந்தனம், இடைவிடாத பிரணாயாமம், மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை மேலெழுப்புதல் போன்ற சாதனங்களை பயின்றனர்! பலகாலம் இதற்காக அரும்பாடு பட்டனர்! கடுந்தவ தியானத்தால் உடலில் மிகுந்த உஷ்ணத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அதனால் பலருக்கு உடலில் உபாதைகள், நோய்களும் உண்டாயின! மூலிகைகளைக் கொண்டு பிணிகளை போக்கி, மறுபடியும் சாதனத்தை தொடர்வர்.

இதைப் பார்த்து வள்ளலார், “வருந்தாது அணைவேனோ!” உன்னை - என்கின்றார்.

“ஊன்தோய் உடற்கு!” என்று கடவுள் பதில் அளிக்கின்றார்.

இதன் பொருள்:-

ஊன் என்கின்ற மாமிசத்தால் ஆன இந்த உடலையே நான் என எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்குத்தான் வருத்தம், துன்பம் எல்லாம்!

இந்த தேகமே நான் என்ற உணர்வு நீங்கியவர்களுக்கு வருத்தம் ஏது?!

“தேகம் நான்” (ஊன்தோய் உடல்) என்ற பொய்ப் பாவனை இருக்கும்வரை துன்பங்கள் தொல்லைப்படுத்திக் கொண்டுதான் இருக்கும்!

அதற்கு வள்ளலார் “தங்கள் பதில் எனக்கு ஒன்றும் புரியவில்லை!” என்று, “தெளிய உரைப்பீர்,” என்றேன்.

அதாவது நான் எளிதில் புரிந்துக் கொள்ளும் படியாக, நன்கு தெளிவு அடையும்படியாக பதிலுரைப்பீர் என வேண்டுகின்றார்.

அதற்கு இறைவன் கூறும் பதில்;

**சான்றோர் உமது மரபு ஓர்ந்து, “தரித்த பேர்க்கு தகாது”** - என்பது கடவுள் பதில்!

இதன் பொருள் என்ன? நமது தமிழகத்திலே தோன்றிய ஆதி தமிழ் ஞான சித்தர்கள் உருவாக்கியது தான் தமிழ் மொழி! இதுதான் ஆதியில் உலகத்தில் உருவான முதல் மொழி! இம்மொழியில் ஒவ்வொரு எழுத்தும், சொல்லும், வாக்கியமும் ஆன்ம உண்மையையும், கடவுள் உண்மையையும் தெளிவாக எடுத்துரைக்கின்றது!

உனது முன்னோர்களாகிய, தமிழ் ஞான சித்தர்கள் ஒவ்வொரு உயிரின் மரபுக்கும் ஒரு பெயர் சூட்டியுள்ளனர்! மொத்தம்

84 லட்சம் வகை உயிரினங்கள் உலகில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஓர் ஒரு பெயர் சூட்டப்பட்டுள்ளது,

உதாரணமாக, குரங்கு! குரங்கு என்றால் அது ஒரு இனத்தைக் குறிக்கின்றது! அந்த சொல்லுக்கு அர்த்தமில்லை! மாடு என்றால் மாடு தான், தனி அர்த்தம் இல்லை! கழுதை என்றால் கழுதை தான், பொருளில்லை!

ஆனால், "**உமது மரபு ஓர்ந்து தரித்த பேர்**";

அதுதான், "**மனிதன்**"!!! என்ற சொல்.

மனிதன் என்ற சொல்லுக்கு அதி அற்புத பொருள் உள்ளது! அது என்ன?

மனிதன் என்ற சொல் இரண்டாக, இரண்டு வகையில் பிரிந்து அற்புதமான -உண்மையான - சத்தியமான பொருளைத் தருகின்றது!

**மன் + இதன் = மனிதன்**

**மன் + நிதன் = மனிதன்**

இதன் என்ற சொல் இதம் அல்லது சுகம் என்பதாம்! "மன்" என்றால் "நிலையான" என்று பொருள்.

- நிதன் என்ற சொல், நித்தியமாய் என்றென்றும் உள்ளவன்!! என்று பொருள்.

எனவே, **மனிதன் என்றால், மன்னி நிதமும் இதமாய் அழிவில்லாது "சச்சிதானந்த அனுபவத்தோடே", மரணமில்லாது வாழக்கூடியவன் என்று பொருள் !**

மரணம் மனிதனுக்கு இயற்கை அல்ல! தவறுபவனே மரணம் அடைகின்றான்! மரணம் தவிர்த்து மன்னி நிதமும் இதமாய் (நித்தியானந்தமாய்) வாழ வந்துள்ளவனே உண்மை மனிதன்!!

- என்று வள்ளலார்க்கு இறைவன் உபதேச பதில் அளிக்கின்றார்!

"உனது அகவடிவம் அருட்ஜோதி ஆன்மாவாக உள்ளது! அதைக் கண்டுகொண்டு அழியாத ஆனந்த வாழ்வில் தழைப்பாயாக!

**உனது உண்மை வடிவம் அருட்ஜோதி இயற்கையாக உள்ளது.** அதை மறந்துவிட்டு, தேகமே நான் எனக்கொண்டு, வருத்தப்படுதல் அறியாமை! என்கின்றார் இறைவன்.

மேலும், இந்த மரணமில்லா பெருவாழ்வைப் பெறுவதற்கான ஓர் அற்புத மொழியையும் தந்தருள்கின்றார். அந்த மொழி, என்ன மொழி? வள்ளலாரே அதை உரைக்கின்றார்;

என்றோர் "மொழி" தந்து அருள்கின்றார்! இதுதான் சேடி என்னேடி!

- இதன் பொருள்;

அந்த சாகாக் கல்வியை தருகின்ற ஏற்ற ஓர் மொழி எது? அதுதான் **தயவு** என்பதாகும்!

வள்ளலார் பேருபதேசத்தில் குறித்துள்ளது;

**என்னை ஏறாநிலைமிசை ஏற்றிவிட்டது யாதெனில், தயவு ! தயவு என்னும், கருணை தான் என்னைத் தூக்கிவிட்டது. அந்த தயவுக்கு ஒருமை வரவேண்டும் !!! ஒருமை இருந்தால்தான் "தயவு" வரும். "தயவு", வந்தால் பெரிய நிலை மேல் ஏறலாம் ! ஒப்பற்ற தயவுடைய பேரறிவே பூரண இன்பமாம் !!!** - *வள்ளலார்.*

இந்த தயவு என்ற சொல்லில் மூன்றெழுத்து உள்ளது, ஒவ்வொரு எழுத்தும் கடவுள் ஆன்ம உண்மையையும், பிரபஞ்ச இயக்கத்தையும் குறிக்கின்றது;-

த = இயற்கை உண்மை = அன்பு இருப்பு= சத்துப் பொருள்

ய = இயற்கை விளக்கம் = அருள் உணர்வு = சித்து விளக்கம்

வு = இயற்கை இன்பம்= இன்ப அனுபவம் = ஐஞ்சக்தி, ஐந்தொழில் திருநடனம்

மேலும் த.ய.வு.என்பது வள்ளலார் பெற்ற முத்தேக சித்தியைக் குறிக்கின்றது!

**த = ஞான தேகம்**

**ய = பிரணவ தேகம்**

**வு = சுத்த தேகம்**

இந்த முத்தேகமும் தனித்தனியாக விளங்குவதல்ல! ஒன்றினுள் ஒன்று இணைந்து ஒன்றாகவே விளங்கும்! இது எத்தனை கோடி கோடி ஆண்டுகள் ஆனாலும் அழியாது விளங்கிக்கொண்டே இருக்கும்! இந்த திரிதேக சித்தி வாழ்வை எந்த மனிதரும் அதிதீவிர முயற்சியால், சுத்த சன்மார்க்க அருட்பெருநெறி மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்கின்றார் வள்ளற்பெருமான்.

இனி வருங்காலங்களில் பக்குவ பகுத்தறிவுடைய மனிதர்கள், அதி தீவிர முயற்சியால் முத்தேக சித்தி பெற்று மரணம் தவிர்த்து வாழ்வார்கள்!

"தயவு"

## 33-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

புருவமத்தியில் மனதை நிலைநிறுத்தி அருட்பெருங் கடவுளை துதிப்போம்!!!

எல்லாம் வல்ல கடவுள் அருட்பெருஞ்ஜோதியாய் தனிப்பெரும் கருணையோடு நம் ஒவ்வொருவரின் சிரநடு சிற்சபையில் எழுந்தருளியுள்ளார்!!!

அவர் அங்கே எப்படி இருக்கின்றார்? அவர் இயல் என்ன? ஐந்தொழில் செயல் என்ன? அருட்பெருவெளியாகிய அவர் திருவருட் சக்தி திருமேனி இருந்த வண்ணம் என்ன?!

நினைந்து நினைந்து போற்றுவோம்! துதிப்போம்! வாழ்த்தி வணங்குவோம்! கல் மனம் கரைந்து நிற்போம்! அருள் பெறுவோம்!!!

# அருட்ஜோதித் துதி!
# “வள்ளலார் திருவருட்பா திருவார்த்தைத் திரட்டு”

## துதி - 1

1.அன்புச் சிவம் அருட்பெருஞ்ஜோதி

2.தயவுப்பரம் தயாபெருஞ்ஜோதி

3.இயற்கைச் சுயம் இறைபெருஞ்ஜோதி

4.பிறவா இறவா அகப்பெருஞ்ஜோதி

5.ஆதி அனாதி நித்தியப் பெருஞ்ஜோதி

6.ஏகன் அனேகன் சத்தியப்பெருஞ்ஜோதி

7.அமுதன் அனகன் அரும்பெரும்ஜோதி

8.அகண்ட பூரணன் சிவபரஞ்ஜோதி

9. சச்சிதானந்தக் கடவுட் பெருஞ் ஜோதி

10.சாகா வரந் தரும் சுகப்பெருஞ்ஜோதி!!!

## துதி - 2

1.அகல் வான் வெளி நிறை மெய்ப்பொருட் ஜோதி

2.சத்திய மெய்ஞ்ஞான தற்பரஞ்ஜோதி

3.ஆன்ம சிதாகாசத்துறு சிற்பரஞ்ஜோதி

4.சிற்றம்பலத் திருநட சிற்சபாஜோதி (சிரநடு ஆன்ம நிலையம்)

5.பொன்னம்பலப் பேருரு பொற்சுடர் ஜோதி (எல்லையற்ற மாபிரபஞ்சம்)

6.அசைவிலா அருண்மலை மாணிக்கசோதி

7.அலைவிலா அகநிலை திருமணிச்ஜோதி

8.உயிர்க்குயிராகிய என் உண்மணிச்சோதி

9.உள்ளொளியாகிய உயர் அருட் ஜோதி

10.தன்மய சின்மய சிதம்பர சுயஞ்ஜோதி

## துதி - 3

1.சர்வஜீவ தயாபர சுத்த சதானந்த ஜோதி

2.அம்மையப்பனாகிய என் அன்பருட்ஜோதி

3.அல்லற் கருநெறி அகற்றிடும் அற்புத ஜோதி

4.ஆனந்த மெய்வாழ்வருள் புத்தமுதாம் ஜோதி

5.மும்மலம் அறுத்திடும் மூவா முதற்பெருஞ்ஜோதி

6.நானெனதறுக்கும் நாதன் தனிக்கருணைச்சோதி

7.தலைநடுத் தலத்தே தன்னிலை விரிக்கும் தாட்சுடர்ஜோதி

8.வல்வினை யெலாந் தவிர்த்து வரநல்கும் வள்ளற் பெருஞ் ஜோதி

9.என் அறிவு உயிர் உடலென விரிந்த அனகதயாஜோதி

10.என்றுமாய் இருந்தே எங்குமாய் நிறைந்த பழம்பெரும் ஜோதி

## துதி - 4

1.எவ்வுயிரும் இன்புற நடம்புரி அருட் பிரகாசமாம் ஜோதி

2.பொய் வாழ்வகற்ற பொது நின்ற புண்ணியச்சோதி

3.நித்திய வாழ்வளிக்க நிறையொளி கொடுக்கும் நித்தபரஞ்ஜோதி

4.ஒளி-ஒலி மயமாய் வெளியெல்லாம் நிறைந்த ஓங்கார ஜோதி

5.புருவத்தின் நடுநின்று புண்ணியர் காணும் பூரணமாம் ஜோதி

6.புலையனேன் ஊனுடல் பற்றறுக்கும் அமலன் அருட் ஜோதி

**7.சினங்காம மயக்கறுத்திடும் சிகாரவல சிவமான ஜோதி**

8.அருவ அருளகம் நின்று அரசாளும் தெய்வ தயாஜோதி

**9.இடர் பிறப்பறுக்கும் புனிதநிலை உத்தமவுட்ஜோதி**

10.அபயம் அளித்தெனை ஆளும் அப்பன் அருட் ஜோதி

## துதி - 5

1.சுத்த சன்மார்க்க சுகநிலையில் வைக்கும் சுத்த சிவ ஜோதி

2.அருள்வெளி நின்று ஐந்தொழில் இயற்றும் அம்பல ஜோதி

**3.உணர்வுக்குணர்வாகி உண்ணின்று ஒளிர்கின்ற ஓர் உண்மையாம் ஜோதி**

4.**அறிவுக்கறிவாகி அகத்தொளிர்கின்ற ஞான உருவான ஜோதி**

5.ஆணவ மாமாயைக் கன்மம் ஒழிக்கும் என் குருமணிச்சோதி

6.நிராதாரத்தே நின்று நிரதிசய நடம்புரி நின்மலச் சோதி

7.அன்பு-அறிவு-இன்ப அனுபவ வாழ்வேற்கும் சித்துருவாம் ஜோதி

8.அருட்சக்தியாலே உலகனைத்தும் அரசாளும் ஜோதி

9.**சிவம் தான் ஒன்றதே இருப்பாய அயலற்ற ஓர்ஜோதி**

10.குற்றமெலாம் குணமாகக் கொளும் குணக்குன்றான ஜோதி

## துதி - 6

1.திருவருளாலே திருக்கதவந் திறக்கும் திருவருட்ஜோதி

2.திருக் கரத்தால் எடுத்தெனை அக்கரை சேர்க்கும் சர்க்கரைச் சோதி

3.வெட்டவெளி நடுவே நட்ட நடு நின்ற நடுவுநிலை ஜோதி

4.நான் இருக்கும் இடநடு நண்ணிய நாயகஜோதி

5.**"நாமெல்லாம் ஒன்று" எனக்காட்டிடும் ஒருமை உட்ஜோதி**

6.அகம் புறம் அணைத்தே ஆறுதல் அளிக்கும் ஐயன் அருட் ஜோதி

7.மறுத்தாலும் மறந்தாலும் மறைக்காது திரை நீக்கும் ஜோதி

8.சித்தம் சிவமாக்கி எனையாளும் அத்தன் அருட் ஜோதி

9.சும்மா இருக்கும் சுகமிது எனக்காட்டும் அம்மை அருட் ஜோதி

10.**நினைப்பு மறப்பற்ற இடத்தே எனை சுத்த வெளியாக்கும் ஜோதி**

## துதி - 7

1.**தனைக் காட்டாது ஒளிப்பாருள் வெளியாகும் மெய்ஒளியான ஜோதி**

2.ஆடாது அசையாது இருந்தருணத்தே அனுபவமாகும் ஜோதி

3.கன்மனங் கரைத்து புன்னெறி கடத்தி எனையாளும் ஜோதி

4.புலனெறி ஒழித்து புனிதநெறி அருளும் புண்ணியச் சோதி

5.கபால நடுவே நடுக்கண் திறக்கும் என் கண்மணி ஜோதி

**6.முகுளநடு மூளைமேல் நின்றொளிரும் நிகரில்லாத ஜோதி**

7.சிரநடு நல் இடத்தே சிக்கெனப் பிடிக்க அகப்படும் ஜோதி

8.ஓராயிரமாயிரம் அம்மையப்பனானாலும் ஆகாதே கருணை நிகர் ஜோதி

9.அடித்தும் அணைத்தும் அருட் பக்குவம் அளிக்கும் என் உயிர்த் தாயான ஜோதி

10.கோடி கோடி பிறவிகடோறும் நாடி எனைக் காத்த நற்ஜோதி

## துதி - 8

1.**தன்னைத் தானே வெளியாக்கும் இயற்கை விளக்கான ஜோதி**

2.மன வாசகங் கடந்த ஒரு மாதூரவெளியுற்ற சுத்த சிவமான ஜோதி

3.அருவாகி அகத்தே இல்லாதே இருக்கும் இயற்பெருஞ்ஜோதி

4.சுயம்பு தானாய் முளையாதே முளைத்த முழுமுதற் பொருளான ஜோதி

**5.மைய உணர்வு மெய்யறிவு தலத்தே மிளிர்கின்ற சத்தான ஜோதி**

6.எனை விட்டிறையும் அகலாது கலந்த அத்துவிதமான ஜோதி

7.உயிர் உணர்வினுக்கு உள்ளூற்ற அருள் உணர்வாம் ஜோதி

8.உள்ளுணர்வால் காணலன்றி புறமுகத்தான் தோற்றாத ஜோதி

9.பொது நோக்காலன்றி "அது" எனில் என்றும் வாராத ஜோதி

10.இப்பக்க நானாய், உட்பக்கந் தானாய் ஒன்றான உபய பக்க ஜோதி

## துதி - 9

1.நினைத்த நினைப்பற நின்ற தவர்க்கே திருமூலநிலை காட்டும் ஜோதி

2.விருப்பு வெறுப்பற்ற உத்தமர்க்கே விசாரத்தாலான ஜோதி

3.ஈரமும் அன்பும் கொண்ட உரிமையர்க்கே நிறங் காட்டும் ஜோதி

4.பொய் விட்டகன்ற புண்ணியர் உளத்தே அகம் பொங்கி தங்கிய ஜோதி

5.காய மாய உணர்வு நீக்கிடும் தாயனைய கண்ணுதற் ஜோதி

6.ஒழுக்கமும் விசாரமும் கொண்ட நல்லவர்க்கே நல் வாழ்வான ஜோதி

7.அருள் உணர்ச்சிக் கண்கொண்டு காணார்க்கு காண்பரிதாய ஜோதி

8.ஆன்மப் பிறப்பாம் அம்பலத்தே உரு கொண்டவர்க்கே அருளமுதான ஜோதி

9.சுத்த சத்விசார தியானத்தால், நான் காண உற்ற அருட்பெருஞ்ஜோதி

10.சுத்த பரோபகார தியாகத்தால், நம் அனுபவமாம் தயாபெருஞ்ஜோதி

## துதி - 10

1.அஞ்ஞான இருளகற்ற ஆதிமுதல் ஆன்மனைத் தொடர்ந்த ஜோதி

2.எல்லையில்லா அல்லற்பிறவி பெருங்கடல் கடத்தியருள் ஜோதி

3.என் பயங்கவலை துன்பத்திற்கிரங்கி எனை சபை சேர்க்கும் ஜோதி

4.உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் விட்டவர்க்கேயாம் ஜோதி

5.ஒரே ஒரு உண்மை இருப்பு அது தானாகிய கடவுளருட்ஜோதி

6.பலவாகிய தோற்றத்திற்குளே ஒரே இருப்பாய ஜோதி

7.தகர ககன நடன சுத்த மோனாதீத சுத்த தயா ஜோதி

8.**"ஏமாறாதே ஓமே நீ" என்ற நாமாம் அருட் ஜோதி**

9.மகன் என எடுத்தே மனக்குறைத் தவிர்த்தே அக மன்னிய ஜோதி

10.எட்டோடு இரண்டு சேர்த்த பத்தாம் புள்ளி கடவுள்-ஆன்ம ஜோதி

இது ஒரு திருவருட்பா திருவார்த்தை திரட்டு

தயவு

# 34-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

# அருட்ஜோதி தியானமும் அளவற்ற நன்மைகளும் (பாகம்-1)

அபயம் அளித்து ஆபத்தை நீக்கி அழியா இன்பம் அளிக்கும் அருட்ஜோதி தியானம்!

(புருவநடு இருந்து - சிரநடு ஸ்தானத்திற்கு)

குறிப்பு;- (திருவருட் பிரகாச வள்ளற் பெருமானாரின் திருவருட்பா குறிப்புகளும், தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்களின் தயவு விளக்க உரைகளும், சில திருமந்திர குறிப்புகளும் அடங்கியது)

தியானம் எப்போது செய்யலாம்?

தியானத்திற்கு உகந்த நேரம், அருணோதயம் தொடங்கி, உதய பரியந்தம் (3.am to 6.am) அமுதக் காற்று எனும் ஓசோன் வாயு O3 இவ் அண்டத்தில் வியாபகமாய் இருக்கின்றது. அக்காலத்தில் ஜீவர்கள் தியான முதலான நன்முயற்சியில் இருப்பது விசேஷ நலம் என்பது வள்ளலாரின் உபதேசம்.

மாலை அந்திப் பொழுதும் மன ஓர்மைக்கு ஏற்றது. மற்றபடி எக்காலத்திலும் கடவுட் சிந்தனையோடு இருக்க தவறாது பழக வேண்டுவது அவசியம்.

எக்காலத்திலும் புருவமத்தியின் கண்ணே மனத்தை செலுத்தி கடவுட் சிந்தனையிலே இருக்க வேண்டும் என்பது வள்ளல் ஆணை.

தேகத்தை சுத்தம் செய்து கொள்ளவும்.தியானம் செய்வதற்கான இடம் சுத்தமாகவும், காற்றோட்டம் உள்ளதாகவும், நிசப்தமாகவும் இருப்பது நல்லது. தரையில் துணி விரிப்பில், வடக்கு நோக்கி பத்மாசனம் அல்லது சுகாசனத்தில் அமரவும். இயலாதவர்கள் சாதாரண நிலையில் சப்பனமிட்டு அமரலாம்.

தியானம் தொடங்குவதற்கு முன் மனம் அமைதியாக வேண்டும். மன இறுக்கம் (tension) இல்லாது கவலை, பயம், சஞ்சலம், சந்தேகம், பெருநினைப்பு, பரபரப்பு முதலியவற்றிலிருந்து விடுபட வேண்டும்.

“பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்,
வரவரக் கண்டு ஆராய் மனமே - ஒருவருக்கும்

தீங்கு நினையாதே செய்நன்றி குன்றாதே
ஏங்கி இளையாதிரு''                    - குருஞானசம்பந்தர்.

''கையறவு இலாது நடுக்கண் புருவப் பூட்டு,
கண்டு களி கொண்டு திறந்துண்டு நடு நாட்டு''  - வள்ளலார்.

(கையறவு-சோம்பல், நித்திரை முதலான தாமச குணங்கள்,

நடுக்கண்-அகநிலை ஆன்ம அருள் உணர்வு விழி)

எவ்வித உலகியல் சிந்தனைக்கும் இடம் கொடுக்காது மனதை புருவமத்தியில்(இரு கண்களுக்கு இடையில்) இழுத்து நிறுத்தவும். கண்களை இலகுவாக மூடிக்கொள்ளலாம்.

ஓர் உபாயம்;- ஒரு சிறு குச்சியை எடுத்து புருவமத்தியில் (பொட்டு வைக்குமிடம்) ஒரு சில நொடிகள் லேசான அழுத்த ஸ்பரிசம் கொடுத்து, சிறு வலியுடன் கூடிய உணர்வை உண்டாக்கிக் கொண்டு, அங்கே மனதை நிலை நிறுத்திக் கொள்ளலாம்.

நினைப்பு மறப்பற்ற சுத்த நிலையில், தயா உணர்வுடன் பணிவோடு, மனதை மேற்குறித்த இடத்தில் நிறுத்தவும். இகலோக விசாரணை இன்றி பரலோக விசாரணையில் இருக்க வேண்டும்.

உலகியல் பிரச்சனைகள், துன்பங்கள் எல்லாவற்றையும் சற்று ஒதுக்கிவிட்டு அமைதி கொள்வோம். உள்ளும் புறமும் ஓர் வள்ளல் உயிருக்கு உயிராக உற்ற துணையாய், உள்ளொளியாய் உள்ளதால் வாட்டம் ஏன்? துன்பங்கள் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்து, நம்மை வாழவைக்கும் பரமகருணாநிதியாகிய தயாபரன் நம்முடன் உள்ளான். இந்த துணிவை, நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ளவும்!

''ஒடுங்கி நிலை பெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவதில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும் பயனில்லை பற்று விட்டோர்க்கே''          - திருமந்திரம்.

மனதை ஏன் புருவமத்தியில் நிற்கச் செய்ய வேண்டும்?

மெய்ப் பொருளாகிய இறைவன் இருக்கும் இடம் நமது தலைநடு ஸ்தானம். அதாவது இந்த தேகத்தில் நித்திய ஜீவனாகிய ஆன்மா விளங்கும் இடம் சிரசு. சிரநடுவிருந்து ஒளிரும் இந்த ஆன்மப்

பிரகாசத்திற்கு உள்ளிருக்கும் பிரகாசமே கடவுள். இதுவே, உள்ளொளி அல்லது அருள்ஒளி எனப்படும்.

“எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்” என்பது இங்கு கடவுள் திருப்பள்ளி கொண்டுள்ளதாலே ஆகும்.

“தேகமே நான்” என்ற கீழ்நிலை அறியாமை உணர்விலே எண்ணற்ற பிறவிகள் தோறும் பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ள நாம், திடீரென்று மேனிலையில் இறைவனோடு ஒன்றி வாழ்வது மிக கடினபாடாக இருக்கின்றது. தீவிர முயற்சி செய்துதான் மேலேற வேண்டியுள்ளது.

சிரநடு விளங்கும் கடவுள் ஒளி, புருவமத்திய ஞானக் கண்ணாடியில் பிரதிபலிப்பதால், புருவமத்தியே கடவுள் விளங்கும் கோட்டையை அடைய “ஞான வாயிலாக”, சிற்சபா துவாரமாக இருக்கின்றது.

ஆன்மாவுக்கு சகல விளக்கமாகிய சாக்கிர ஸ்தானம் லலாடம். ஆதலால் விசேடம் நிறைந்தது லலாடத்தில் மூக்கு நுனியாகிய புருவமத்தி.

மனித தேகத்தில் கடவுள் காரியப்படும் இடம் புருவமத்தி! இதற்கு அனுபவ சித்திகள் திரியோதசாந்தம் வரையிலும் உண்டு! ( திரியோ + தசம் + அந்தம் = திரியோதசாந்தம் = 13வது நிலை)

இந்த தேகத்தில் புருவமத்தியில், **ஆன்ம அறிவு** என்கின்ற கற்பூரத்தில், **அருள்** என்கின்ற தீபம் விளங்குவதாக பாவித்துப் பார்த்து அதில் பழகிப்பழகி, கடவுளிடத்து **உண்மையாகிய அன்பை**யும், ஜீவர்களிடத்து **உண்மையாகிய காருண்யத்தை**யும் இடைவிடாது வைக்க வேண்டியது. *-வள்ளலார்.*

புருவ மத்திய ஸ்தானத்தின் வேறு பெயர்கள்;

விந்து ஸ்தானம், அறிவு இடம், லலாடம், முச்சுடர் இடம்(சூரியன் - சந்திரன் - அக்கினி), முச்சந்தி மூலம்(ஆன்ம அறிவும் - உயிர் உணர்வும் - மனநினைப்பும் கூடும் இடம்), மற்றும் இடகலை - பிங்கலை - சுழுமுனை சந்திப்பு, மஹாமேரு, புருவமத்தி, சிற்சபா அங்கம். நெற்றிக்கண்

நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளி காணில்,
முற்றும் அழியாது உடம்பு.

மாதூர வெளியின் மனம் ஒன்ற வைத்தபின்,
போத கமாகும் உடம்பு.

உருவந் தழலாக உள்ளத்தே சென்று,
புருவத்திடை இருந்து பார்.

புருவத் திடையிருந்து புண் ணியனைக் காணில்,
உருவற்று நிற்கும் உடம்பு. *- ஔவைக் குறள்.*

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்,
வாட்டம் இல்லை! மனைக்கும் அழிவில்லை!
ஓட்டமும் இல்லை! உணர்வில்லை! தானில்லை!
தேட்டமும் இல்லை! சிவன் அவனாமே! -திருமந்திரம்.

ஒன்றை மறந்து மற்றொன்றை நினைந்து, சதா அலைக்கழிக்கும் மனத்தை, இரட்டுற நிற்கும் அதன் தன்மையை ஒழித்து, நினைப்பு மறப்பற முழுமையான நாட்டத்துடன் புருவ நடுவில் (பொட்டு வைக்குமிடம்) கடவுளை தீபச்சுடர் வடிவத்தில் மனக்கண்ணால் உற்று உற்று நோக்கி, அக உணர்வால் கலந்துக் கொள்ள வேண்டும். அப்போது இயல்பாகவே அடிக்கடி பிராண வாயுவானது மன ஓர்மையால், (உள்ளே இழுக்கப்படாமலும் வெளியே விடப்படாமலும்) நடுவே உலவி, அதாவது உயிர்ப்பு இடகலை பிங்கலையில் இயங்காது, சுழுமுனையில் நின்று, கடவுள் உண்மையை சிறிது சிறிதாக சாதகனுக்கு வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். தியானத்தில் அவ்வப்போது உள்ளிழுக்கப்படும் சுவாசத்தின் நீள அளவும், வெளியே விடப்படும் சுவாசத்தின் நீள அளவும், சுருங்கி குறைந்து, காற்று நுண்ணிய அளவே, உள்ளே இருந்து, நடுவே உலவிட, அதனால் மனத்தின் உண்முகப் பார்வை கூர்மையாகி கடவுள் உண்மையை உணரலாம்.

மற்றபடி பிராணாயாமம் முதலான மூச்சுப் பயிற்சி செய்தும், தனது சுய முயற்சியால் மூச்சை அடக்கி, சுழுமுனையில் நிறுத்த, சமாதி கூடும்.

சமாதிப் பழக்கம் பழக்கமல்ல! சகஜப் பழக்கமே பழக்கம்!!

சுத்த சன்மார்க்கத்தில் மூச்சடக்கும் பயிற்சி கூடாது; அதனால் சமாதி கூடி மூடம் உண்டாகும் என்பது வள்ளலார் அருள் வாக்கு!

ஒண்ணா நயனத்தின் உற்ற ஒளி தன்னை,
கண்ணாரப் பார்த்துக் கலந்தங்கு இருந்திடில்,
விண்ணாறு வந்து வெளி கண்டிடவோடி,
பண்ணாமல் நின்றது பார்க்கலுமாமே -திருமந்திரம்.

புருவ நடுவில் தெய்வ ஜோதி தீப பாவனை செய்து, உள்நோக்கி உள்ளுணர்வால் உற்று உற்றுப் பார்த்தால், மெய்யுணர்வு ஒளி வெளிப்படும். அதை அகக்கண்ணால் பார்த்துக் கலந்திட வேண்டும். அவ் அருள் வெளியில், அகண்ட வெளி முற்றும் நிறைந்த கடவுள் இயற்கை உண்மை வெளிப்படும்!

இயல்பாகவே ஆன்ம சிதாகாசத்தில் பூரணமாய் பொருந்தியுள்ள கடவுள் உண்மையை (தானேயான தூய சிவம்), ஜீவனின் தற்சுதந்திரம் அற்ற போது, தன்னைத் தானே உணர்த்த, அதுவே ஆன்மாவாய் இருந்து உணர்ந்துக் கொள்கிறது!!!

## "தலை நடுவே விளங்கும் தனிப்பெரும் தலைவன்"!!!

இறைவன் ஒவ்வொரு மனித தேகத்திலும் பூரணமாக விளங்குகின்றார்.

உச்சிக்கு கீழே உண்ணாவுக்கு மேலே, நிதம் வைச்ச விளக்கு எரியுதடி வாலைப்பெண்ணே! அவியாமல் எரியுதடி!

என்பது சித்தர் பாடல்.

அதாவது உச்சிக்குக் கீழே, அண்ணாக்குக்கு மேலே, புருவமத்திக்கு நேர் உட்பாகத்தில், தலைநடு இடத்தில் ஆண்டவர், அருட்பெருஞ்ஜோதி - தனிப்பெருங்கருணையோடு எப்போதும் சதா "கருணை விளக்கென பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்"!!!

அதாவது நமது தலையில், மண்டை ஓட்டின் உள்ளே பெருமூளை, சிறுமூளை, முகுள நடுமூளை என மூன்று மூளைப் பகுதிகள் உள்ளது. பெருமூளைக்கு கீழே, ஓங்கார முகுளமூளைக்கு மேல் ஓர் உரல் போன்ற சிறு குழி உள்ளதாம். அந்த குழி "ப கர வடிவத்தில்" உள்ளதாம். **(U shape cavity -cerebro spinal cavity)** . இதற்கு மேல் உள்ள சிறு வெற்றிடத்தில் தான்,

ஆன்மப் பிரகாசம் சதா "நான்-நான்" என்ற வண்ணமாய், "அறிவாகாயமாய்" சுடர் விட்டுக் கொண்டிருக்கின்றதாம்!

இந்த மெய்ஞ்ஞான (சத்திய ஞான சபை) உணர்வுக்கு உள்ளீடாய் இருப்பது எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி கடவுட் பிரகாசம்

-அருட் ஜோதி தியானம் - குறிப்புகள்

## 35 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## அருட்ஜோதி தியானமும் அளவற்ற நன்மைகளும் (பாகம்-2)

இந்த தேகத்தில் “நான் யார்?” எனில், நான் ஆன்மா; கோடி சூரியப் பிரகாசம் உடையவன். இதன் இருப்பிடம் மூக்கு நுனியாகிய புருவமத்தி. - வள்ளலார்.

கண்ணாக்கு மூக்குச் செவி ஞானக் கூட்டத்துள்,
பண்ணாக்கி நின்ற பழம் பொருள் ஒன்றுண்டு,
அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளி காட்டிப்,
பெண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்தவாறே! - திருமந்திரம்.

இந்த உடம்பின் தலைப்பகுதியில்தான் கண், நாக்கு, மூக்கு, செவி, தோல்(தேக முழுவதும்) ஆகிய ஐம்பொறிகளும் பொருத்தியுள்ளன. இவைகட்கு ஆதாரமாய் சிரநடு மெய்யொளி திகழ்கின்றது. எனவே அறிவு அனுபவங்கட்கு எல்லாம் அனுபவ இடமாகிய சிரப் பகுதியே சிறப்பும் உயர்வும் உடையதாகும்.

எனவேதான் அருட்பெருந்தலைவர் ஒளிர்கின்ற தலைநடுவைச் சுற்றி நான்கு உணர்வு நிலைகள் விளங்குகின்றன. அவையாவன;-

1. அகம் = ஆன்ம உணர்வு
2. அகப்புறம் = ஜீவ உணர்வு
3 .புறம் = மன உணர்வு
4. புறப்புறம் = ஐம்புலன் உணர்வு

இனி தியானத்தை தொடங்கலாம்;-

## முதற் பயிற்சி;

முன்னிலையில் அகல் விளக்கு தீபத்தை ஏற்றி வைக்கவும்.மன ஓர்மையோடு அந்த தீபச்சுடரில் எல்லாம் வல்ல கடவுள் விளங்குவதாக பாவிக்க வேண்டும். அத் தீபத்தையே உற்று நோக்க வேண்டும்.

“அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும்கருணை

அருட்பெருஞ்ஜோதி”

என்ற மகாமந்திரத்தை மெதுவாக சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். திருவருட்பாவிலிருந்து சில பாடல்களை ஸ்தோத்திரம் செய்யவும்.

பார்வையும் எண்ணமும் அகலாது, வேறு எதையும் சிந்திக்காது இருக்க வேண்டும். பார்வையும் எண்ணமும் விலகினால் உடனே திருத்தி சரிசெய்து கொள்ள வேண்டும்.

வடக்கு நோக்கி தியானம் செய்யும்போது, நம்மனோ கரண ஜீவாத்ம சக்தியை - துருவ நட்சத்திரம் நேரே ஈர்க்கின்றது. வேறு திசைகளில் கொஞ்சமும் அசையவிடாமல் மனதை ஓர்மையில் நிலைக்கும் படி செய்கிறது.இப்படி சிலகாலம் பழகி வந்தால் அனுபவம் உண்டாகும்.

- முதற்பயிற்சியை ஒரு 20 நிமிடம் செய்யலாம்.

## 2 ம் நிலை பயிற்சி;

புருவமத்தியில் ஒரு ஒன்றரை அங்குலத்திற்கு உள்ளே வெற்றிடத்தை பாவிக்க வேண்டும். அங்கு ஒரு சிறிய வெண்மையான, பிரகாசமான தாமரைப்பூ மலர்ந்து திகழ் வதாகவும், அம்மலர் நடுப்பொகுட்டின் மேல் ஒளிச்சுடர் (தீப ஜோதி) ஒன்று மிளிர்கின்றதாகவும், அவ்வொளிக்குள் அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் விளங்குவதாகவும் பாவிக்க வேண்டும். இங்கு இப்படி பாவிக்கப்படும் ஒளிச்சுடர், வெற்றுக் கற்பனையோ, பொய்யான பாவனையோ அல்ல! தலைநடுவுள் வளர் கடவுட்ஜோதியின் பிரதிபலிப்பே புருவமத்தியக் கண்ணாடியில் தோற்றுவதாம். ஆகையால், இங்கு மனம் நின்று மணிபெற்றுத் திகழ்வது ஆன்ம அனுபவத்திற்கு உரிய முதற்படியாய் இருக்கின்றது. இந்த இரண்டாம் நிலை பயிற்சியை ஒரு 20 நிமிடம் செய்யலாம்.

## 3ம் நிலை அகப்பயிற்சி;

புறத்தீபம் எப்போதும் தேவையில்லை. அடுத்து 2ம் நிலை பயிற்சி முடிந்த பின், அகநிலைக்கு வந்துவிட வேண்டும்!!!

சிரநடு சிற்றம்பலத்தில் கடவுளான்ம அருட்ஜோதி அணு சதா ஒளி விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

"அது நாம்" என்ற அனுபவம் வருவது எளிதன்று. அதற்கு தயா ஒழுக்கத்தோடு, சத்விசார வசத்தராய் இருந்து முயற்சிக்க வேண்டும்.

"அருட்ஜோதிக் கடவுள் அணு" திகழும் அம்பலத்தின் முன் வாயிலாம் புருவநடு இடம் உள்ளது. இங்குதான் உயிர் உணர்வும், மன உணர்வும் ஒன்றி நிற்கக் கூடியதாயும் இருக்கின்றது. ஆகையால் இந்த இடத்தில் மனதை நிறுத்திப் பழக வேண்டும்.

இறைவனை எப்படி வழிபட வேண்டும்?

திருவருட்பா "ஞானசரியை" பாடல்;

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழுங் கண்ணீர் அதனால்,

உடம்பு நனைந்து நனைந்து, அருள் அமுதே! நன்னிதியே!ஞான நடத்தரசே! என்னுரிமை நாயகனே! என்று

வனைந்து வனைந்து ஏத்துதும் நாம், வம்மின் உலகியலீர், மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்,

புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன், பொற்சபையில் சிற்சபையில் புகுந் தருணம் இதுவே! - *வள்ளலார்.*

புறத்தில் நேருக்கு நேராக எப்படி ஒருவரைப் பார்த்துப் பேசி பழகுகின்றோமோ, அதைவிட கோடி கோடி பங்கு அதிக நெருக்கமாக, உண்மையாக, எப்போதும் உடனாக, மறுத்தாலும் மறந்தாலும் ஒருபோதும் பிரியாதவனாக, நம்மில் நாமாக இறைவன் உள்ளே உள்ளார்!

இறைவனை ஒருபோதும் மறக்கக்கூடாது;

மறப்பற்ற உள்ளத்தில் மறைப்பற்று வாழும் வள்ளல் மலர் அடித்துணையே நாம் பெறுதல் வேண்டும் - *சரவணானந்தர்.*

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்,

மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்,
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத குணமுடையார் தொண்டராம் குணமிக்கார்!

இறவாமை வேண்டின் திருவடி மறவாமை வேண்டும்.

மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்,
நிலமிசை நீடு வாழ்வார் - *திருக்குறள்.*

**மனதை எப்போதும் சிற்சபைக் கண்ணே செலுத்த வேண்டும். எந்த காரியம் செய்யினும், எந்த விவகாரம் செய்யினும் சிவசிந்தனையோடு இருக்க வேண்டும்!**

**எப்போதும் இறைவனுடைய அருள் ஒளி உணர்வாம் திருவடியை மறவாதிருத்தலே "சாகாக்கல்விக்கு ஏது" !!!**

## 36 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "மூன்று உடல் கொண்ட ஒரு மனிதன் "நான்"!?

நம் கண்ணுக்கு முதலில் தோற்றமாவது இந்த மாமிசத்தாலான தூலவுடலே. "இதனையே "நான்" என மயக்க அறிவால் எண்ணி ஏமாந்த வாழ்வு வாழ்ந்து வருகின்றோம்!" இதற்கு உள்ளீடாக உள்ள சூக்குமவுடல் மற்றும் காரண உடல் பற்றி அறியோம்! மனிதன் கொண்டுள்ள மூன்று உடலைப் பற்றி விசாரம் செய்வோம்.

### 1.தூல சரீரம்

**(புற நிலை - புண்ணுடல் - உருவ உடம்பு - பௌதிக பிண்ட தேகம்)**

1. மண், நீர், காற்று, தீ, ஆகாயம் எனும் ஐம்பூத அணுக்களின் கூட்டுத் தொகுப்பு -"சிற்பிரபஞ்ம்"- பற்பல கோடி திசுக்களின் கூட்டுச் செறிவு - "அறிவாகிய ஆன்மா விளங்குவதற்கு இந்த தேகம் அவசியமாகின்றது"- ஆன்மாவின் கடைநிலைத்தோற்றம் இத்தேகம்.

2. ரோமம், தோல், இரத்தம், தசை, நரம்பு, எலும்பு, சுக்கிலம் (பெண்ணுக்கு கருமுட்டை) ஆகிய ஏழு தாதுக்களால் ஆன மாயா உடம்பு.

மூளை, இதயம், நுரையீரல், சிறுநீரகம், இரைப்பை, குடல் என பற்பல மாயா அசுத்த பூத காரிய இயக்கமுடையது.

3. மலம், சிறுநீர், வியர்வை, அழுக்கு முதலிய அசுத்தங்கள் நிறைந்த தத்துவப் புறவுடம்பு. பசி, தாகம், பிணி, முதலியவற்றால் அடிக்கடி தாக்கமுறுதல்; அதனால் உயிரும் தாக்கமுறுதல்; மூப்பு, விபத்து, ஆபத்து, கொலை முதலியவற்றால் மரணமுற்று அழிதல்.

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்,
உடம்பினில் உத்தமனைக் காண் *ஞானக்குறள்.*

மலங்களையும், அசுத்தங்களையும், கழிவுகளையும் சதா வெளியேற்றிக் கொண்டிருக்கும் ஒன்பது வாசல் கொண்ட மாயக் குடில் இது.

4. ஆக்கம் - வளர்ச்சி - தேய்வு - சிதைவுக்குட்பட்டது (பிறப்பு இறப்பு). தோற்றம் - தொடுதலுக்கு உட்பட்டது. இறக்கும்போது பௌதிக அணுக்கள் சிதைந்து மண்ணிலும் காற்றிலும் கலந்துவிடுதல்.

5. இந்த தூல உடல் உணவு, நீர், காற்று முதலிய புறத்தேவைகளைக் கொண்டு சிலகாலம் நிலைத்துள்ளது.

6. புற உலக நிகழ்வுகளை, பொருளின் தன்மைகளை, பௌதிக உடலின் கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐம்பொறிகளில் பதிவு செய்துக்கொண்டு, "உணர்வு அலையாக" உள்ளே தலைநடு மையத்திற்கு (மூளை)அனுப்புகிறது.

புறக்கருவி - பொறிபுலன், மன ஆய்வு அனுபவங்களுக்கு தூலதேக உண்மை விளங்கும்.

"விழிப்பு நிலையில் அறிவாகிய ஆன்மா, உள் உடம்பின் உயிர் உணர்வு வாயிலாக தூல தேகத்தில் புகுந்து, உலக அனுபவம் பெறுகின்றது".

7. உள்ளீடாக உள்ள சூக்கும உயிராற்றல் வடிவம் அச்சென விளங்க, அதில் தூலமான பௌதீக அணுக்கள் **(body cells)** பதிந்து உருவம் பெறுகின்றது.

8. உள் இருக்கும் சூக்கும ஆவி வடிவத்துடன் "உடல் - உயிர்" என இணைந்தே இயங்கும். **ஒரு மனிதனுக்கு குறிப்பிட்ட முகத்தோற்றம், உருவ அமைப்பு பெற்று விளங்குவதற்கு**

**காரணம், உள்ளீடாக உள்ள "அருவுருவ"- உயிர் ஆற்றல் வடிவமே.** இது போன்றே மற்ற எல்லா உயிரின வடிவங்கட்கும் ஆகும்.

பிற்சந்ததிக்கான வடிவம் சூக்குமமாக பௌதிக விந்து செல், கருமுட்டை, மற்றும் நரம்பு செல்களில் பதிந்திருத்தல்.

இன்று உலகில் வாழும் 800 கோடி மக்களுக்கும் தனித்தனி முகத்தோற்றம், குரல் ஒலி வித்தியாசம் கொண்டிருப்பது இயற்கையின் அற்புதம்!

9. ஆண், பெண் என்ற தோற்ற மாமாயை - நிற - உரு பேதமுடையது. ஆனால், அது மாயா மனோ மயக்கமே ஒழிய, உண்மையில் பௌதிக அணுக்களின் செறிவிலே வித்தியாசம் இல்லை. ஒருவாறு இனப்பெருக்க அமைப்பால் கொள்ளலாம்.

**"ஆண் - பெண் என்பது பொய்; அறியாமை!"** என்பார் வள்ளலார்.

**உயிர் உணர்வின் இருப்பிலே ஆண் - பெண் பேதமில்லை!** மாயா மயக்கத்தால் பேதம் பார்வையிலும் மனதிலுமே! அகத்தின்(அருள்) செயலால் கண் பொறிக்கு புற வடிவம் அப்படி அழகாக மயங்கும் வண்ணம் (மாமாயையின் செயலால்) ஆண் என, பெண் என தோற்றிக் கொண்டிருக்கின்றது.

ஒரு ஆண், பெண் வடிவத்தில் தான் இன்பம் இருக்கின்றது என எண்ணுகிறான். பெண்ணோ ஆண் வடிவத்தில் தான் இன்பம் இருக்கின்றது என எண்ணுகிறாள்.

இருவரும் இப்படி ஏமாந்தே, அதிசயித்து அதிசயித்து பொய் இன்பம் கொள்ள நேருகின்றது.

10. அறியாமை என்கின்ற அஞ்ஞான இருளில் தேகத்துள்ளிருக்கும் ஆன்மா, ஜீவசாக்கிரத்துற்று (தத்துவ விழிப்பு) மருட்சார்பு கொண்டு கீழிறங்கி, "தேகமே நான்" எனவும், "போகமே முக்தி" எனவும் கண்டு உலகில் உழல்கின்றது.

அபக்குவ அவத்தை-

**கன்ம மலம்1**

11. உடல் இயக்கக் கூறுகள் மிக அதிக / மிக குறைவான உழைப்பு, உணவு, உறக்கம் ஆகியவற்றாலும், சூழ்நிலை, வியாதி, வினைப்பயன், அஜாக்கிரத்தை, ஒழுக்கமின்மை, அறியாச்செயலால் இயல்பான

செயல்பாட்டுக்கு மாறுபாடாக இருப்பின் அதை வலியுணர்வாக, துன்பமாக அறியச் செய்வது "உள் உடம்பே"! (மண்டை வலி, கழுத்து, முதுகு, வயிறு, மார்புவலி, இடுப்பு, கை, கால், பல், எலும்பு, நரம்பு, மூட்டு, தசை வலிகள், ஐம்பொறி - கண், காது, மூக்கு, நாக்கு, தோல் வியாதிகள், விபத்து, ஆபத்து, வெட்டு - குத்து - அடி - உதைகளால் வலியுணர்வு)

12. உடல் உறவில் சிற்றின்ப உணர்வு;-

தடிப்புடன் கூடிய பால் உணர்வு உறுப்புக்கள், தோல் வெளி ஸ்பரிசம், முடிவில் சுக்கில (விந்து) இடப்பெயர்ச்சியான் உட்பரிச உணர்வை, உயிர்ச் சத்து ஆற்றல் இழப்பை, உயிர் வடிவமானது, **(தோற்ற மாமாயைத் தொடர்பால், இன்பம் தர வல்ல சத்துப் பொருள் என்ற மனோ மயக்க "நம்பிக்கை நோக்கில்", மனோ அசைவற்ற நிலையில்)** இன்ப உணர்வாக அனுபவிப்பது.இது மருள்நிலை இன்பமே ஒழிய உண்மை இன்பம் அல்ல!

ஓர்ந்து நோக்கில், அச் சில நொடி இன்பும், "தனக்குள் நிகழ்வதே ஒழிய புறத்தில் அல்ல"! என அறியலாம்.

இன்பம் அனுபவத்திற்கு வரும் அச் சில நொடிகளில்

மனத்தின் அந்நிய - அழகு வடிவ கற்பனை

(தனி இன்ப நம்பிக்கை - பாவனை) கைவிடப்பட்டு, உள் நிகழும் "ஏகதேச இன்ப சொரூபத்தில் மௌனமாய் நிற்றல்"!

13. முடிவான நிலை;-

கொலை, புலை (மாமிச உணவு) தவிர்த்து, பக்குவத்தில் தேக போக இச்சை ஒழித்து, ஆதரவற்ற ஏழைகளுக்கு பசியாற்றுவிக்கும் உயிர் விளக்க ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் பயின்று, வள்ளலார் வழங்கிய சுத்த சன்மார்க்க நெறியில், அசுத்த பூத காரிய இயக்க பௌதிக உடம்பு, சுத்த பூத காரிய இயக்க "சுத்த தேகமாக", என்றும் அழியாத "மாற்றறியா பொன்னொளி உருவமாக" ஆக்கப் பெறுதல்.

(விவரம்; திருவருட்பா, ஜீவகாருண்ய ஒழுக்கம்)

சுத்த தேகம் பெற்ற முதல் மனித ஆன்மா, சிதம்பரம் இராமலிங்க அடிகள் ஆவார். சுத்த தேகத்திற்கு இரத்தம், தசை, எலும்பு, நரம்பு, சுக்கிலம் முதலான அசுத்த பூத காரிய அணுக்கள் இரா! சுத்த தேகத்திற்கு பசி, தாகம், தூக்கம், பிணி, மூப்பு, மரணம் கிடையாது.

எத்தனை கோடி கோடி ஆண்டுகள் ஆனாலும் சுத்த பொன்னொளியுடல் அழியாது !!!

## சூக்குமம சரீரம்

(நுண்ணுடல் - **அகப்புற ஜீவநிலை** - அருவுருவ உடம்பு / ஆவி உருவம் / உள் உடம்பு / உயிர் + உணர்வு + ஆற்றல் வடிவம் / ஜீவ காந்த சக்தியுரு)

1. "உடல் முழுதும் உள்ள ஒவ்வொரு பௌதிக செல்களின் உள்ளும் புறமும் **உயிர் ஆற்றல் வண்ணமாய் வியாபித்து ஓர் வடிவுற்று நிற்கும்"**.உடல் கூறுகள், உறுப்புகள் எல்லாவற்றையும் இயக்கும்.

2. உடல் முழுதும் இந்த "உயிர் ஆற்றல் வடிவம்", **"ஜீவ-இருப்பு உணர்வாக"** இருந்து, இதய ஸ்தானத்தே **மன உணர்வாகவும்** இயங்கும்.

**ஜீவ ஆகாசமும் கரண ஆகாசமும் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) சேர்ந்த ஒன்றே "சூக்கும வடிவம்";** அகமிருக்கும் கடவுள் திருவருளின் அனக விரிவே யாவும்.

3. நடு மூளையிலுள்ள, நித்திய ஜீவனாகிய ஆன்மாவின் உள்ளொளியிலிருந்து புறப்பட்டு விரிந்து "ஆவி வடிவுற்று விளங்குதல்".

தசை, எலும்புகளாலான உடல் முழுதும் வியாபித்து. "உயிர் உடல்" என இணைந்து நிற்றல்.

**நாம் உண்மையில் இந்த ஆவி வடிவத்தில் இருந்துக்கொண்டு தான் உயிர் வாழ்வனுபவம் பெறுகின்றோம்!!!**

4. உள்ளொளியிலிருந்து ஆவி வடிவம் "சுடர்" என உயிருணர்வு கொண்டு விரியும்போது, புற உடம்பின் பிறப்பும், ஒடுங்கும் போது இறப்பும் நிகழ்கின்றது.

ஓர் ஆன்மா முக்தி அடையும்வரை (முத்தேக சித்தி / திரிதேக சித்தி) இந்த விரிதலும் ஒடுங்குதலுமாகிய "பிறப்பு-இறப்பு நிலை" தொடர்ந்துக் கொண்டேதான் இருக்கும்.

5. இந்த உயிர் உணர்விலான வடிவம், பிடிபடாது!

இறந்தோரின் ஆவிகளை சில சமயங்களில் ஒளி வடிவத்தில் கண்ணால் காணவும், ஆற்றலுதவி பெறவும் கூடும்! (அகால மரணத்தில் தேகம் இழந்து நிற்கும் பேய் வடிவம்). நல்லோர் ஆவிகள் ஒளிவண்ணமாகவும், தீயோர் ஆவிகள் இருள் நிறைந்ததாகவும் இருக்கும்!

6. "இத்தனைக் கிலோ பாரமான எடையுடைய மாமிசக்கூட்டை **(weighable physical body)** சுமப்பது இந்த ஆவி வடிவம்". பௌதிக உடலின் நடத்தல், இருத்தல், வேலை செய்தல் போன்ற அசைவு - புற இயக்கங்கட்கு காரணமாக உள்ளது.

(சென்றுண்டு வந்து திரிதரும் உள்ளுடம்பு, என்றும் கெடாது இது - ஔவை)

சூக்கும தேக உண்மை, அந்தர் முக அடிமன, ஜீவ உணர்வு அனுபவங்கட்கு விளங்கும்; வெளிமுக பொறிபுலன்களுக்கு விளங்காது.

கனவு நிலையில், ஆன்மா, சூக்கும வடிவத்தில் இருந்துக்கொண்டு, ஆழ்மனத்து கற்பனா அறிவு உலகத்தில் சஞ்சரித்து, பழைய அனுபவ வாசனையுடன் (தூல தேகத்தில் உலகில் விழிப்பு நிலையில் கண்ட) புதிய கற்பனை நிகழ்வுகளை, தன் ஆழ்மன ஆற்றலால் வரவழைத்து "கலவை" அனுபவம் பெறுகின்றது!

7. இந்த உள் உடம்பு சதா ஜீவ உஷ்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டு, புறநிலை சுவாசத்தால் உயிர்ப்புற்று, உடலுடன் கூடி விளங்குதல்.

8. நித்தியமான ஆன்ம அகநிலையைச் சார்ந்து வாழும் வரை, புற உணவு - உடலிலிருந்து அநித்திய ஆற்றலுடன் பிழைத்தல்.

ஆத்ம உள்ளொளி ஆகிய சுப்ரமணியம், இந்த "ஓங்கார பிரணவ வண்ண" சூக்கும வடிவத்தில் இருந்துக்கொண்டு தான் ஆறுமுக (ஐம்புலன்+ மனம்) வாழ்வு பெறுகிறது.

9. உயிராற்றல், புறச் சார்பு கொண்ட "தேகம் நான்" என்ற மருள் உணர்வு - மாயா - கன்ம மல சம்பந்த அபக்குவ காலமெல்லாம், புறத்தேக வயது, இரத்தம், சுக்கிலம், ஒழுக்கம்,உணவு, இவற்றின் தன்மை - அளவு முதலியவற்றை பொறுத்து இருத்தல்.

**“தேகம் நான்” என்ற உணர்வை நீக்கிக்கொண்டவனுக்கு மாயா காரிய பிணியுடல் இல்லை என்பது தெளிவு. அகச் சார்பு பெற்று திருவருள் அனுபவம் உண்டாகும் போது, உயிரில் நித்திய ஆற்றல் விளங்கும்.**

10. கரு உற்பத்தி முதல் இந்த உயிர் ஆற்றல் (ஜீவ காந்த சக்தியுரு) ஆன்மாவுக்கு உள்ளிருந்து விரியும் அதே நேரத்தில் புறத்தே பௌதீக அணுக்கள் (நாம் உண்ணும் உணவு பௌதீக உடற் செல்களாக தன்மாற்றம் அடைதல்) அந்த விரிவில் பதிதலும், உயிர் வடிவமும், உடல் உருவமும் இணைந்தே வளர்தலும் நடைபெறுகின்றது.

11. புற உலகத்திலிருந்து பௌதிக உடல் துணையால் பார்த்தல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல், ஸ்பரிசித்தல் ஆகிய ஐம்புலன் அனுபவங்களை கிரகித்து தனது மைய/ மூல நிலையமாகிய சிதாகாச ஆன்ம அணு வடிவத்திற்கு அனுபவம் கொளச்செய்யும் ஊடகமானது உயிர் வடிவம். திருவருளின் ஏகதேச செயற்கை இன்பமே, ஐம்புலன் இன்பமாக ஜீவ ஆன்மாவிற்கு அனுபவமாதல். ஆயினும் இவ்வின்பம் ஜடமே(அசத்து).

12. தூலமான விஷயங்களை ஐம்புலன் செய்தி - உணர்வு அலைகளாக தனது ஓங்கார சக்தியால் ஏற்று, ஆன்மாவின் அகப்புறமாகிய ஜீவ ஆகாசத்தில் இன்பதுன்பமாக அனுபவிக்கச் செய்தல்! ஒளி - ஒலி செய்திகளை **signals** கடத்தும், ஆகாய முழுதும் நிறைந்த மின்காந்த அலை **electro magnetic waves** போல், உடல் முழுதும் இன்பதுன்பம் ஏற்கும் “ஜீவகாந்த உணர்வு வடிவம்” நிறைந்துள்ளது.

13. உயிர் வாழ்க்கை அனுபவத்தில் மனத்தின் உணர்வினால் இதயத்தே பயம், கவலை, சந்தோஷம் முதலியவற்றால் ஆக்கம்/ தாக்கம் உற அதன் பதிவு உயிர், உடலிலும் தோன்றுதல்; காமம், கோபம் முதலிய தாமச குணங்களால் இழிவுறல்; சத்துவ குணத்தால் மேன்மையுறல்!

## அபக்குவ அவத்தை

## மாயா மலம்-1

14. எண்ணம், சொல், செயலால் நன்மை தீமை நுகர்தல்

(அறம், பாவத்தால் இன்ப துன்பத்தை சுகித்தல்)

நல்வினையும் தீவினையும் உண்டு திரிதரும்,
செய்வினைக்கும் வித்தாம் உடம்பு - ஞானக்குறள்.

முடிவான பேறு;-

சத்விசாரத்தால் கடவுள் உண்மையை உள்ளபடி அறிந்து, அக் கடவுள் உண்மை, எப்படி எங்கு விளங்குகின்றது என்பதை விசாரித்து, அது நம் உள் விளங்குவதை அறிந்து கொள்ளல் முதல் படியாம்.

அடுத்து, அம் மெய்ப்பொருளை இடையறாது நினைந்து, நினைந்து முடிவில் நம்மை மறந்து (எல்லாம் அற என்னை இழந்த நலம்) அதில் கலந்து நிற்றல் இரண்டாம் நிலையாம்.

பின்பு அதுவே நாமாகி விளங்கு நிலையே மூன்றாவது நிலை.

**புருவத்திடை நின்று, உள்ளொளியை நினைந்து நினைந்து, நினைத்த நினைப்பற்று, அந்த உள்ளொளியோடு நாமும் கலந்து நிற்கும் நிலையே, உண்மையில் நாம் விளங்கும் நிலையாம். இப்போது சிற்சபையில் விளங்கிக் கொண்டிருக்கின்றது கடவுளாகவும் உள்ளது; அதுவே நாமாகவும் இருக்கின்றோம் !**

அகத்தில் நாம் அதுவாக விளங்கிக் கொண்டிருக்கின்றோம். எனினும் உடற்பற்று காரணமாக, இன்பதுன்பத்தில் உழன்று கொண்டு, உலகில் பிழைத்துக் கொண்டும் இருக்கின்றோம்! **இந்நிலை கடந்து அந்நிலை வாழ்வு சேர்தல் வேண்டும்.**

இக்கரை கடந்திடில் அக்கரையே! இருப்பது சிதம்பர சர்க்கரையே!!

- என்பார் வள்ளலார்.

மனம் நினைப்பு மறப்பற்ற "சும்மா இருக்கும் சுத்த அருள்நிலையில்", "நிராசை-ஒருமை-தயவு" கொண்டோங்க, இரக்கமே தன்னுயிராக பெற்ற தருணத்தில், அருட்பெரும் தயவு நெறியில், பக்குவத்தில், உயிர் வடிவம் "ஓங்கார பிரணவ அருட்பிரகாச திருவுருவமாக" (ஓமயத் திருவுரு) மாற்றம் பெற்று, நித்திய ஆற்றலுடன் கடவுட் பேரனுபவத்தில் தழைத்து, அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் ஓங்கும்!

ஓங்காரமான கலசத்து அமிர்து உண்ணில்,
போங்காலமில்லை புரிந்து. - ஞானக்குறள்.

## 3. காரண சரீரம்

### (அக அறிவு நிலை / அருவ உடம்பு / அக உண்மை வடிவம் / நித்திய ஜீவன் / ஆன்ம சொரூபம்)

1. "நான்" என்ற வண்ணமுடைய "ஞான ஆகாசம்"; சிதாகாசம்; ஒவ்வொரு மனிதனின் / உயிரின் தலைநடுவில் (சிரநடு) உள்ளது.

புற உடல் உருவ இயக்கத்திற்கும், "ஆற்றல் உணர்வு - ஆவி வடிவத்திற்கும்" இதுவே நடுவாக உள்ளது.

2. **தானாகிய கடவுளின் "நான்" எனும் "சச்சிதானந்த அனுபவ மையம்"!**

ஐம்புலன், மன அறிவுக்கு எட்டாததோர் "தனி அகவெளி"!

காரண தேக உண்மை, அருள் உணர்வுக்கு மட்டுமே வெளிப்பட்டு, அநன்யமாக - தன்மயமாய் நிற்கும்.

3. மனிதனுடைய உண்மை வடிவமும், கடவுளின் உண்மை இருப்பிடமும் இந்த ஆன்ம நிலையமே! இதுவே அறிவுத் திருக்கோயில் என்றும், சத்திய ஞான சபை என்றும், மெய்யுணர்வு தலம் என்றும் போற்றப்படும்.

4. ஆன்மா இருக்கும் இடம்;-உச்சிக்குங் கீழே, உண்ணாவுக்கு மேலே, புருவமத்திக்கு நேர் உட்பாகத்தில், தலைநடு இடத்தில், இந்த "கடவுளான்ம அணு - அருட்ஜோதியாக" சதா பிரகாசிக்கின்றது; நிராதார நிலையில் திகழ்கின்றது. நித்திய நிலையான, நிறைவான பேரின்ப அனுபவம் கொண்டது.

5. அதாவது, நமது மண்டை ஓட்டின் உள்ளே பெருமூளை, சிறுமூளை, முகுளம் என்ற மூன்று மூளைப் பகுதிகள் உள்ளன. பெருமூளைக்கு கீழே, ஓங்கார முகுள மூளைக்கு மேல் ஓர் குழி உள்ளது. இந்த குழி "ப"கர வடிவத்தில் உள்ளதாம் **("U" shape cerebrospinal cavity).** இதற்கு மேல் உள்ள சிறு வெற்றிடத்தில் தான் ஆன்மப்பிரகாசம் சதா "நான்-நான்" என்ற "இருப்பு வண்ணமாய்" - அறிவாகாயமாய் சுடர் விட்டுக் கொண்டு இருக்கின்றதாம்.

இந்த "மெய்ஞ்ஞான உணர்வுக்கு" உள்ளீடாய் இருப்பது எல்லாம் வல்ல "கடவுட் பிரகாசம்"! இது கோடி சூரியப் பிரகாசம் உடையது!

இதுவே **"சுப்பிரமணியம்"** எனப்படும். இதுவே மனிதனின் உண்மை விழி ஆகிய "நெற்றிக்கண்" ஆகும்.

இதுவே **கடவுளின் "ஒரே பேறான குமாரன்"** என மொழியப் படுகிறது.

6. இயற்கை உண்மை - இயற்கை விளக்கம் - இயற்கை இன்ப. அனுபவம்(சத்து-சித்து-ஆனந்தம்) கொண்டதோர் "திருச்சிற்றம்பலம்".

7. பிறப்பு இறப்பு அற்ற தோர் அறிவாகாய சித்துருவம் - என்றும் உள்ளது - எங்கும் நிறைந்தது-எல்லாம் வல்ல "அருள் தன்மையது".

8. தலைநடு விளங்கும் இந்த ஆன்ம அணுவே அருட்பெருஞ்ஜோதி கடவுள் உண்மையை உணர்கின்றதும், உணர்த்துகின்றதுமாய் உள்ளது. அதாவது தன்னைத் தானே அனுபவிக்கின்ற நிலை; கடவுளும் மனிதனும் சேர்ந்து ஒன்றான அருட்ஜோதி நிலை! **(அருட்ஜோதியானேன் என்று அறையப்பா முரசு** *- வள்ளலார்*).

"இந்த ஆன்ம அணு, அகண்ட வான் பெருவெளி எங்கும் நிறைந்த அருட்பெருஞ்ஜோதி நித்தியக் கடவுளை, தன் அகத்தே பூரணமாகக் கொண்டது"

9. அபக்குவ அவத்தை:- **ஆணவ மலம்-1/2** (பாதி நிலை-இயற்கை மலமாகிய, தன்னை அறியா, அறியாமை ஆணவ இருள்).

புற உலக இன்ப துன்ப அனுபவங்கள் எல்லாவற்றையும் ஏற்பது இவ் அணுவே. எனினும், இன்பதுன்ப அனுபவங்கள் அகப்புற ஜீவநிலையில் தோன்றி ஒழிவனவே அன்றி, அக உலகை என்றும் தீண்டுவதில்லை! அக உலகம் என்றும் பேரின்ப மயமானது.

10. அனுபவத்தின் பொருட்டு உயிர், மனம், உடல் என அருளால் உள்ளிருந்து விரிந்து, புற உலகத் தொடர்பால் அனுபவ வாழ்வு ஏற்கிறது.**"புற உலகில் அனேக உடல் உரு கொண்டு வெவ்வேறான காலங்களில், சூழ்நிலைகளில் இருந்தாலும், நாம் அகநிலையில் உண்மையில் ஒரே பரமான்மாவாகத்தான் உள்ளோம்!"**

11. அறியாமை ஆணவ இருளில் கிடக்கும் ஓர் ஆன்மா தன்னை அறியும் வரை, புல்லாதி ஓரறிவு தாவர முதல் ஆறறிவு மனித தேகம் வரை எடுத்துள்ள பிறவிகளின் எண்ணிக்கை பல கோடி; எண்ணிறந்த காலம் பட்ட துயர் அளவிறந்தது.

“மெய்யுணர்வு” பெற புறமிருந்து புலன் உணர்வு கொண்டு முறைப்படி வளர்கின்றது. எனவே **இனியாவது தீவிர முயற்சி செய்து, இந்த “அகநிலையை” அறிந்து, பிறப்பு இறப்பு அற்று ஆனந்தமுறுவோமாக!**

12. ஆன்மா ஆழ்ந்த உறக்கத்தில் அவ்வப்போது உள் ஒடுங்க, ஆணவ இருளில் ஏதும் அறியாது சூன்யமாக அஞ்ஞான மறைப்பில் மூழ்குகிறது. உள்ளே எக்காலமும் “கருணை விளக்கென” பிரகாசிக்கும் இறைவன் திருச்செயலால் மறுபடியும் தத்துவ விழிப்பாகிய - ஜீவ சாக்கிரத்துற்று (ஆன்மா இன்னும் உண்மை அக விழிப்பு அடையவில்லை) புற உலக அனுபவம் தொடர்கிறது.

உறக்க நிலையில் தனது மூலமாகிய காரணதேகத்தில் வந்து தங்குகின்றது. தன்னை அறியா அறியாமை ஆணவ இருளால், இப்போது இதன் இருப்பு அனுபவமில்லாமல் சூன்யமாகிவிடுகிறது.

“நான் இருக்கின்றேன்” என்ற உயிர் உணர்வு எங்கே ஓடி மறைந்தது?! நாம் இன்னும் ஆன்மநிலையில் பிறக்காது செத்துக்கிடக்கின்றோம்!

13. ஆன்ம அறிவு, ஜீவ சாக்கிரத்தில், படர்க்கை நிலையில், புறத்தே இதய ஸ்தானத்தே மன அறிவாக செயல்பட, ஓர்மையுற்ற நிலையில் மதி நுட்பம், கல்வித்திறன், கடின ஆய்வு ஆகிய கலைகள் விளங்கவும், அதனால் அண்ட - பிண்ட - பண்ட பொருள் ஒளி, ஒலி, கதிர், விசை, அணு, ஆற்றல், விதிகள், செயல்கள், தன்மை, பயன்கள் பற்றிய இரகசியங்களை அறிந்து, வாழ்க்கையில் அதி நவீன விஞ்ஞான சாதனங்களை உருவாக்கி பயன்படுத்திக் கொள்கிறது. இது ஆத்ம சக்தியின் ஏகதேச வெளிப்பாடு!

14. இந்த ஆன்ம அணுவின் இயற்கை குணம் “தயவு”.

“நாம் தயா வடிவமானால் சிவம் ஆகலாம்”

“ஒப்பற்ற தயவுடைய பேரறிவே பூரண இன்பமாம்”!!!

15. கடவுட் ஜோதி சிரநடு சிற்றம்பலத்தே உள்ளது! மனிதன் தயா உணர்வோடு கடவுள் ஒளியை, ஞான வாயிலாகிய இருகண் நெற்றிப் புருவமத்தியிலிருந்துஉள்நோக்கி பாவித்துப் பார்த்து, நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, சிரநடு அன்பு ஒளியில் கலந்து, ஒன்றாகி, அதுவாகி நிற்க வேண்டும்.

**முடிவான சித்தி;-**

தேகம் நான் என்ற உணர்வை ஒழித்து, தேகநிலை (கன்ம மலம்-1), உயிர் நிலை (மாயா மலம்-1), ஆன்மநிலை (ஆணவ மலம்-1/2) கடந்துஆக 2.1/2 - இரண்டரை கடிகை நேரம் கடந்து, யான் எனது என்ற தற்போது நாசம் செய்து, "கடவுளான்ம நிலையுற்ற" தருணம், அருட் பக்குவத்தில் ஆன்ம காரண சரீரமே, "கடவுள் ஞான தேகமாக" எங்குமாய் அகண்ட ஆகாயம் போல் விளங்கும். "சச்சிதானந்த அனுபவத்தில்" ஒன்றான "அன்பு இருப்பாய் - சிவமாய் - யாவும் தானாய் நிற்கும்"!!!

ஐந்தொழில், ஐஞ்சக்தி கொண்டது; ஐம்பூத அகண்ட மாபிரபஞ்சம் இதன் ஜோதிப் புற உருவம். ஞான தேகம் பெற்ற முதல் மனிதர் வள்ளற்பெருமான்!

கருத்து; திருவருட் பிரகாச வள்ளலார், தயாநிதி சுவாமி சரவணானந்தா, திண்டுக்கல்.

## 37 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "தயவுக் கடவுள் வருகை"

### (அருட்பெருஞ்ஜோதிக் கடவுளின் சர்வ வியாபக நிலை)

(குறிப்பு;- சிறு பருவத்திலிருந்தே பள்ளி மாணவர்கள் அருட்பெருஞ்ஜோதிக் கடவுளின் சர்வ வியாபகத் தன்மையை உணர்ந்து உலகியல் கல்வி பயின்றிடும் வண்ணம் தொகுக்கப்பட்டது)

**பாடல் - 1**

தனி - சூனிய வெளியில் நிறைந்தவனே!

அரு - சத்துப் பொருளாய் இருந்தவனே!

கால - தூரக் கற்பனைக் கடந்தவனே!

பால் - வெளி அண்டம் பல ஆனவனே!

ஒரு - மாஜோதிப் பிரபஞ்சமாய் விரிந்தவனே!

அகர நிலைப் பதியே! ஆதிமூல ஒளியே!

அற்புதக் கடவுள்- அருட்பெருஞ்ஜோதி!

நானுனை அறிந்திட இங்கு அருளுகவே!!!

## பாடல் - 2

புவியாய் நின்ற புண்ணியனே!
நீராய் ஊர்ந்த தண்ணியனே!
தீயாய் விளைந்த செம்மையனே!
காற்றாய் அசைந்த நுண்ணியனே!
வெளியாய் விரிந்த வெள்ளையனே!
ஐம்பூத விரிவே! நமசிவய உருவே!
அன்புக் கடவுள் அருட்பெருஞ்ஜோதி!
நானுனை நினைந்திட அருளுகவே!

## பாடல் - 3

இரவியாய் ஒளிரும் வல்லவனே!
நிலவாய்க் குளிர்ந்த நல்லவனே!
கடலாய் நிலைத்த பெருமையனே!
மலையாய் உயர்ந்த பெரியவனே!
மழையாய்ப் பொழியும் கருணையனே!
அக இயல் எழிலே! புறச் செயல் உலகே!
கருணைக் கடவுள் - அருட்பெருஞ்ஜோதி
நான் உனைத் துதித்திட அருளுகவே!

## பாடல் - 4

உலகைப் படைத்த உத்தமனே!
உயிரைக் காக்கும் சத்தியனே!
என்னை வருவித்த சோதியனே!
என்னுள் வாழ்கின்ற இறையவனே!
என்றும் இருக்கின்ற நித்தியனே,!
எல்லாம் செய்கின்ற வல்லவனே!
உண்மைக் கடவுள் - அருட்பெருஞ்ஜோதி!
நானுனை வணங்கிட அருளுகவே!!

### பாடல் - 5

கண்ணுன் மணியுள் நின்றவனே!
செவியில் ஒலியை இசைப்பவனே!
நாவில் சுவையை விளைப்பவனே!
நாசியின் நாற்றத்தில் உற்றவனே!
தோலின் ஸ்பரிசத்து இன்பவனே!
மனத்தின் நினைப்பாய் மலர்ந்தவனே!
(அறுமுக) அனகக், கடவுள் அருட்பெருஞ்ஜோதி!
நான் உன்னை ஏத்திட அருளுகவே!!

### பாடல் - 6

மலரருள் மணமாய் நிறைபவனே!
நிறத்துள் கவர்ந்த காட்சியனே!
வடிவுள் அழகாய் அமர்ந்தவனே!
உணவுள் சுவையாய் நின்றவனே!
அறிவில் அறிவாய் சிறப்பவனே!
தனி ஓங்கார மூளையில் ஒளிர்பவனே!
அறிவுக் கடவுள் - அருட்பெருஞ்ஜோதி!
நானுனை உணர்ந்திட அருளுகவே!

### பாடல் - 7

உடலும் மனமும் நீதானே!
உயிரும் உணர்வும் நீதானே!
பசியும் நிசியும் நீதானே!
உணவும் உடைமையும் நீதானே!
உண்மையும் ஒழுக்கமும் நீதானே!
வழியும் வாழ்வும் நீதானே!
தானே நானான அருட்பெருஞ்ஜோதி!
நானுனைச் சார்ந்திடவே அருளுகவே!

### பாடல் - 8

அணுவுள் அடங்கிய அரியவனே!
அண்டத்து நிறைந்த பெரியவனே!
அகத்தில் அமர்ந்த உண்மையனே!
அன்பால் அழைத்தால் வருபவனே!
ஆருயிர்க்கு அனுபவம் தருபவனே!
பொதுநடம் உயிர் நடு இடுபவனே!
ஆற்றல் கடவுள் - அருட்பெருஞ்ஜோதி!
நானுனை புகழ்ந்திட அருளுகவே!!

### பாடல் - 9

ஆதியும் அந்தமும் இல்லவனே!
அம்மையும் அப்பனும் ஆனவனே!
உள்ளும் புறமும் நிறைந்தவனே!
சொல்லும் பொருளுமாய் நின்றவனே!
ஓசையும் ஒளியாம் ஓங்கரனே!
அணுவகக் கருவே! மின்காந்த(அ)லை விரிவே!
இயற்கைக் கடவுள் - அருட்பெருஞ்ஜோதி!
நானுனை ஒன்றிட அருளுகவே!

### பாடல் - 10

அன்பே உருவாய் அமர்ந்தவனே!
அருளாய் உயிர்க்குள் திகழ்பவனே!
இன்பால் ஐந்தொழில் புரிபவனே!
சிவமாய் எங்கும் நிறைந்தவனே!
சுகமாய் எனக்குள் நின்றவனே!
யாவும் தானாம் தன்மையனே!
சத்தியக் கடவுள் - அருட்பெருஞ்ஜோதி!
நானுனைப் பற்றிட அருளுகவே!

### பாடல் - 11

தலையின் நடுவுள் இருப்பவனே!
தயவுச் சுடராய் திகழ்பவனே!
உயிர்க்குள் உயிராய் உள்ளவனே!
உண்மை விசாரத்து ஒளிர்பவனே!
புருவநடு அகமனம் புகுந்தவனே!
கருணை பணியால் கிடைப்பவனே!
நித்தியக் கடவுள் - அருட்பெருஞ்ஜோதி!
நானுனைச் சேர்ந்திட அருளுகவே!

### பாடல் - 12

பிறப்பும் இறப்பும் உன்னாலே!
நினைப்பும் மறப்பும் உன்னாலே!
இரவும் பகலும் உன்னாலே!
இன்பமும் துன்பமும் உன்னாலே!
செயலும் பயனும் உன்னாலே!
சுதந்திரம் இங்கெனக்கு ஏதுமிலையே!
தனி ஒரு கடவுள் அருட்பெருஞ்ஜோதி !
நானுனைப் போற்றிட அருளுகவே!

### பாடல் - 13

புல் பூண்டு செடி கொடி- மரம்
புழு பூச்சி பல்லி பாம்பு -தேள்
ஈ எறும்பு கொசு வண்டு- நண்டு
காக்கைக் குருவி கோழி கொக்கு-கழுகு
கிளி ஆந்தை குயில் மயில்- புறா
அனந்தம் கோடி உயிர்களின் உள்ளொளியே
ஓடும் உலகுயிர் ஆகிநின்ற இறையே
நான் உன் ஆலயம் தொழுதிட அருளுகவே

## பாடல் - 14

மீன் தவளை எலி அணில் -ஓணான்
நாய் பூனை ஆடு மாடு- பன்றி
நரி முயல் மான் கழுதை-முதலை
புலி சிங்கம் யானை குதிரை -கரடி
மனிதன் பேய் நரர் சுரர்-கணம் என
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
பிறவா இறவா நித்தியச் சுயஞ்சுடரே
நான் அழியா சித்துரு பெற்றிட அருளுகவே

## பாடல் - 15

பசியின் கொடுமையில் பல்லுயிர்கள்
பிணியின் துன்பத்தில் பல மனிதர்
கவலைக்கிடமாய் எண்ணிறந்தோர்
கொலையால் பதைக்கும் ஆருயிர்கள்
எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி
ஆன்மநேயத்தால் துன்பம் அகற்றிடுவாம்
தயவுக்கடவுள்- அருட்பெருஞ்ஜோதி
நான் தயவால் வாழ்ந்திட அருளுகவே

## பாடல் - 16

உலகத்து இயக்கம் எதற்காக?
உயிர்கள் அனுபவம் எதற்காக?
நான் வந்துற்றது எதற்காக?
பிறப்புக்கு முன்பு எங்கிருந்தேன்?
இறப்புக்கு பின்னே எங்குறுவேன்?
நின்கழல் என் தலை வைத்துரைப்பாய்
எல்லாம் அறிந்தோய் அருட்பெருஞ்ஜோதி
நான் உண்மை தெரிந்திட அருளுகவே

### பாடல் - 17

“நான்” எனும் இருளை அகற்றிடுக!
பிறவித் துன்பம் அழித்திடுக!
மனத்தின் கவலை ஒழித்திடுக!
உடலின் நோவை நீக்கிடுக!
உள்ளத்தில் ஒளியை ஏற்றிடுக!
மெய் அக அருள்நிலை சேர்த்திடுக!
அம்மே-அப்பா அருட்பெருஞ்ஜோதி
நானுனை பெற்றிட அருளுகவே!

### பாடல் - 18

புலன்களை அடக்கும் வகையறியேன்!
பொய்ம்மயல் போகத்தே புக்கறிவேன்!
மனதின் குதிப்பை தடுத்தறியேன்!
எண்ணில குற்றம் பல புரிந்தேன்!
எனினும் உன்றன் தாள் அடைந்தேன்!
கைவிடேல் அபயம் அருளுக இதுவே சமயம்!
அன்புடை ஒளியே அருட்பெருஞ்ஜோதி!
நான் குற்றம் தவிர்ந்திட அருளுகவே!

### பாடல் - 19

புலன் நெறி இச்சை ஒழித்திடுக!
தயவு ஒழுக்கம் புகுத்திடுக!
ஒருமை உணர்வில் நாட்டிடுக!
கருணைச் செயலில் பணித்திடுக!
அமைதி அகத்தில் சேர்த்திடுக!
அறிவு நிலைதனில் இருத்திடுக!
உற்ற துணையே அருட்பெருஞ்ஜோதி!
நான் உனைப் பணிந்திட அருளுகவே!

### பாடல் - 20

தோலும் தசையும் நான் தானோ?
எலும்பும் நரம்பும் என்னுருவோ?
மலத்தும் சலத்தும் புகுந்தேனே!
குருதி வியர்வையில் கிடந்தேனே!
நானென இ-உடலை ஏன் இருந்தேன்?
உண்மை உருவே உள்ளத்து ஒளியே!
ஆதார பொதுவே அருட்பெருஞ்ஜோதி!
நானுனை கொண்டிட அருளுகவே!

### பாடல் - 21

தன்னை அறிய எனக்கு காட்டிடு!
உன்னை உரிமையா எனக்கு கொடுத்திடு!
உள்ளின் இருப்பை தெளிய தெரித்திடு!
உண்மை நிலையில் இன்றே இருத்திடு!
கருணை ஒளியில் நன்றே நாட்டிடு!
கருணைக் கடலே காக்கும் இறையே!
கனகசபை துரையே அருட்பெருஞ்ஜோதி!
நானுனை கலந்திட அருளுகவே!

### பாடல் - 22

நினைப்பு மறப்பு அற்ற நிலையை காட்டிடு!
இரவு பகல் அற்ற இடத்தில் சேர்த்திடு!
இன்ப துன்பம் அற்ற இயலில் கூட்டிடு!
பிறப்பு இறப்பற்ற இருப்பை தெரித்திடு!
யான் எனது அற்றெனை அருளில் அமர்த்திடு!
அருட்சிவபதியே அருந் தயாநிதியே!
என் ஆருயிர்த்துணையே அருட்பெருஞ்ஜோதி!
நானுனைப் புணர்ந்திட அருளுகவே!

### பாடல் - 23

உலகுடல் தீண்டாத உணர்வு ஒன்று!
மனவாக்கு கடந்து உள்ளாய் நின்று
தன்னந்தனியே எங்கும் சென்று
நான் பிறர் நீ என இல்லை - ஒன்று!
ஐந்தொழில் பிரபஞ்ச இயக்கம் உண்டு!
சிவசிவ இறையே தய தய ஒளியே!
ஆனந்த அமுதே அருட்பெருஞ்ஜோதி!
நான் நின் மயமாகிட அருளுகவே!

### பாடல் - 24

என்றும் இருப்பது ஒன்றே ஒன்று!
அகத்தே உறைவது நன்றே கண்டு!
ஒன்றி இன்றே சார்ந்து கொண்டு!
சகத்தும் புணர்ந்தது புரிந்து நின்று!
எவ்வுயிர்க்கும் செய்க அன்பு தொண்டு!
ஒன்றான இருப்பே! மன்றாடு நெருப்பே!
அம்பல விளக்கே அருட்பெருஞ்ஜோதி!
நான் அருண்மயமாகிட அருளுகவே!

### பாடல்- 25

இருந்தபடியே மெய்இல்லத்திரு!!
இல்லாமலே இருந்து கொண்டிரு!!
இருக்கும் போதே இறந்த போல் உறு!!
இறவாமலே பிறந்து விழித்தெழு!!
விழித்துக்கொண்டே உறங்கி இரு!!
உறங்காது அருளை மறவாதிரு!!
மறவா நினையா சுத்த நிலை பெறு!!
சுத்த தயவு ஆன்ம இயற்கையோடுறு!!

**-அகம் இருந்து வருக அருளுடன்-!!**

**-அனகமாக வாழ்க தயவுடன்!!**

**தயவேகடவுள்!**

**தயவுடன் வாழ்க!!**

**தயவே விழி!தயவே வழி!!தயவே வாழ்வு!!!**

**விழியும் வழியும் வாழ்வும் தயவே!!!**

**தயவு**

## 38 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## அருட்பெருஞ்ஜோதித் தனித்தலைமைப் பெருங்கடவுள்யார்? எங்கே, எப்படி இருக்கின்றார்?"

## கடவுளை அறிந்து அடைவதற்கான உண்மை வழி எது?

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், வெளியில் எங்கோ காணக்கூடிய பொருள் அல்ல!

அவர் எல்லா உயிர்களின் சிரநடுவில் நிலைத்து இருப்பவர். எனவே அவரை வேறு எந்த இடத்திலும் ஏறித் தேடி அடைய வேண்டியது இல்லை.

அருட்பெருஞ்ஜோதி தான் எல்லாருக்கும் எல்லாவற்றுக்கும் உரிய ஒரே கடவுள்! அவர்தான் எங்கும் எதிலும் நிறைந்து இருப்பவர். எக்காலத்திலும் இருப்பவர்!

சிலர் அருட்பெருஞ் ஜோதியை உணர்ந்து வழிபடுகின்றார்கள். பலர் அதன் உண்மைத் தன்மையை உணராமலேயே பல்வேறு பெயர்களில் வணங்குகின்றார்கள்.

அருட்பெருஞ்ஜோதி எங்கும் எதிலும் நிறைந்து இருந்தாலும், "அருள் உணர்வு" உடையவர்களின் சிரநடுவில் இருக்கும் "சிற்றம்பலத்தில்தான்" முழுமை பெற்று இருக்கிறது! இங்குதான் அருட்பெருஞ்ஜோதியைக் காணமுடியும். மற்ற எந்த இடத்திலும் அருட்பெருஞ் ஜோதியைக் காண முடியாது.

அருட்பெருஞ்ஜோதியின் அருள் அனுபவம் பெற்ற பிறகுதான் அருட்பெருஞ் ஜோதியை அறிந்து அனுபவிக்கவும் முடியும்!

-வள்ளலார் அருள் அனுபவம் பெற்றவர்; அருட்பெருஞ்ஜோதியை அறிந்து அடைந்தவர்; அதை அனுபவித்துக் கொண்டு இருப்பவர்; அவர் பெற்றிருக்கும் நிலையான வடிவம் தான் அருட்பெருஞ்ஜோதியின் "இயற்கை வடிவம்"!!

அருட்பெருஞ்ஜோதியின் வடிவத்தையே தம் வடிவமாக பெற்ற வள்ளலார் தாம் அடைந்த அருள் அனுபவங்களை மிக அற்புதமாக ஆறாம் திருமுறையில் பாடியிருக்கிறார்.

வள்ளலார் முதலில் கடவுளை, சிவபதி உண்மையாகக் கண்டார்; பிறகு அதன் இயற்கை உண்மை வடிவமான அருட்பெரும் ஜோதியைக்கண்டார்; அதை நன்கு அறிந்தார்; அதை அடைந்தார்; அதை அனுபவித்துக் கொண்டே இருக்கின்றார்!

தம் உள்ளே இருக்கும் அருட்பெருஞ்ஜோதி தான், எல்லா உயிர்களிலும் இருக்கிறது என்ற உண்மையை வள்ளலார் உணர்ந்தார்! அதனால் எல்லா உயிர்களையும் அருட்பெருஞ்ஜோதியின் ஆலயம் ஆகவே போற்றிக் கொண்டும் இருக்கின்றார்!

அருட்பெருஞ்ஜோதி குறைவற்ற கருணையுடைய பரம்பொருள்; முழு முதற்கடவுள்! அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆகிய ஒரே தெய்வத்தை அதன் பரிபூரணத்துவத்துடன் உணர்ந்து அனுபவித்து வருபவர் வள்ளலார்!

ஒவ்வொருவர் "சிரநடு சிற்றம்பலத்தில்" இருக்கும் "அருட்பெருஞ்ஜோதி" அங்கிருந்து வெளிப்பட வேண்டும்; "அனகமாக விரிய வேண்டும்"! பிறகு அது அவர் அவர் உயிரிலும், மனதிலும், உடம்பிலும் பரவி நிலைபெற வேண்டும்.

வள்ளலார் உயிரிலும், மனதிலும், உடம்பிலும் பரவி வெளிப்பட்டு இருக்கிறது, அருட்பெரும்ஜோதி!

**இம்மாதிரி அருட்பெருஞ்ஜோதி ஒவ்வொருவர் உயிரிலும், மனதிலும், உடம்பிலும் அனகமாகி வெளிப்பட்டு விரிந்து பரவவேண்டும். தம் உள் இருக்கும் அருட்பெருஞ்ஜோதியைத் தெரிந்து கொள்ளாமல் வெளியில் இருக்கும் அருட்பெருஞ்ஜோதியைச் சுற்றிக்கொண்டு இருப்பதால் பலன்**

**இல்லை. இதன் மூலம் அருட்பெரும் ஜோதியை அறியமுடியாது; பெருவாழ்வை பெறவும் முடியாது!**

தேவர்கள், மூவர்கள், முத்தர்கள், சித்தர்கள், மகான்கள், அவதார புருஷர்கள் ஆகியவர்கள் எல்லாம் தம் உள் இருக்கும் அருட்பெருஞ்ஜோதியை முழு வடிவத்தில் உணரவில்லை! இதனால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் தான் ஓரளவு ஆற்றலுடன் இருக்கிறார்கள். காலத்தால் மற்ற எல்லா உயிர்களையும் போல அவர்களும் மறைந்து போகிறார்கள்.

காரணம் அவர்கள் மேலும் மேலும் ஆன்மீகப் பக்குவம் பெறுவதற்காகவே மறைகிறார்கள்.

இப்படி செய்வது இறைவன் திருவருள் தான்!

திரு அருட்பிரகாசர் உயிரிலும், மனதிலும், உடம்பிலும், சூழ்நிலையிலும் அருட்பெருஞ்ஜோதி - அனகமாக - விரிந்து பரவி வெளிப்பட்டு நிலைத்து இருக்கிறது. இதுபோல வேறு யாரிடமும் அருட்பெருஞ்ஜோதி அனகமாகி வெளிப்பட்டு இருப்பதாக தெரியவில்லை.

அருட்பெருஞ்ஜோதி, வள்ளலாரின் திருவுருவத்தில் வெளிப்பட்டு இருப்பதுதான் அழியாத திருஅருட்பிரகாச வள்ளலாரின் இன்றைய திருவுருவம்!

இதைத்தான் அக அனுபவம் கெடாமல் அனக நெறியில் - வாழும் முறை என்கிறார் திரு அருட் பிரகாச வள்ளலார். சுத்த சன்மார்க்கத்தின் முடிந்த நிலை இதுவே என்கிறார்.

### அக அனுபவம் என்றால் என்ன?

சிரநடு சிற்றம்பலத்தில் இருக்கும் அருட்பெருஞ்ஜோதியை உணர்ந்து அவரை அடைந்து அனுபவிப்பது அக அனுபவம்

### அனக அனுபவம் என்றால் என்ன?

**சிரநடு சிற்றம்பலத்தில் இருக்கும் அருட்பெருஞ்ஜோதி, உயிரிலும், மனதிலும், உடம்பிலும், சூழ்நிலையிலும் விரிந்து, பரவி விளங்கும் அற்புதத்தை அனுபவிக்கும் அனுபவம் அனக அனுபவம்!!**

இயற்கை உண்மையின் இந்த அனுபவங்களை பெற்ற வாழ்க்கைதான், சுத்தசன்மார்க்க சுகநிலை வாழ்க்கை! அனக நெறி வாழ்க்கை!! ஒளி நெறி வாழ்க்கை!!

சுத்த சன்மார்க்க சுக நிலை வாழ்க்கையில் தாம் பெற்ற அனுபவங்களை தான் வள்ளலார் ஆறாம் திருமுறையில் அனுபவித்து அனுபவித்து பாடி இருக்கிறார்.

இந்த உலகில் அனக நெறி வாழ்க்கை அனுபவத்தை பெற்ற ஒப்பற்ற முதல் மனிதர் வள்ளலார்!!

திரு அருட்பிரகாச வள்ளலார் தாம் பெற்றிருக்கும் அனக நெறி வாழ்க்கை எல்லோருக்கும் உரிய வாழ்க்கையாக வேண்டும் என்று அருட்பெருஞ்ஜோதி தமக்கு ஆணையிட்டு இருப்பதாக சொல்கிறார். சத்தியமே செய்து சொல்கிறார்!

இந்த உண்மைகளை எல்லாம் ஆறாம் திருமுறை பாடல்களில் காணலாம். கண்டு அனுபவிக்கலாம்.

சுத்த சன்மார்க்க வாழ்க்கையை உலக மக்கள் எல்லோரும் உணர வேண்டும் என்பதற்காகவே, வடலூரில், வள்ளலார் - சத்திய தருமச்சாலை, சுத்த சன்மார்க்கக் கல்விநிலையம், சத்திய ஞானசபை - முதலியவற்றை தோற்றுவித்து இருக்கிறார்.

இந்த திரு அருள் நிலையங்களும், திரு அருட்பாவும் நமது வழிபாட்டுக்காவே வள்ளலாரால் வழங்கப்பெற்று இருக்கின்றன.

வள்ளலார் வழங்கியுள்ள அருட்பாக்களை முறையாக ஓதி உணராமலும், வடலூரில் இருக்கும், சத்திய ஞானசபையில் தகுந்த முறையில் ஜோதி வழிபாடு செய்யாமலும், சன்மார்க்க சங்கங்களை கூட்டி சத்விசாரம் செய்து, "அருள் அனுபவம்" பெறாமலும் தவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இதற்கு காரணம் என்ன? நமது அறியாமையும், போதுமான அளவு நாம் ஆன்மீக பக்குவம் பெறாது இருப்பதும் ஆகும்.

நமது அறியாமையை எப்படிப் போக்குவது? எப்படிப் பக்குவம் அடைவது? எப்படி அருள் அனுபவத்தை பெறுவது?

**ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் "ஜீவகாருண்ய ஒழுக்கத்தை" மேற்கொள்ள வேண்டும்! "தயா வடிவத்துடன்"**

**உயிர் குலத்துக்கு பணி செய்து வரவேண்டும். இதன் மூலமாக "இயற்கை உண்மையை" உணர முயலவேண்டும்.**

திரு அருட்பாவில் ஆறாம் திருமுறையில் இருக்கும் பாடல்களை உருக்கத்துடன் ஓதி, அதன் உண்மை பொருளை உணர வேண்டும். அதை வாழ்க்கையிலும் போதிய அளவில் மேற்கொள்ள வேண்டும்!

மன ஒருமையுடன் நம் உள் இருக்கும் "உள் ஒளியிலே" அருட்பெரும் ஜோதியை உருக்கமுடன் வேண்டி வர வேண்டும்

இவ்வாறு நாம் வாழ்க்கையை, திரு அருளைப் பெறும் குறிக்கோளுடன் நடத்தினால் நம்மிடம் உள்ள அறியாமை தொலையும்! நாம் பக்குவப்படுவோம்! "நம்மிலும் திருவருள் வெளிப்படும்"

அப்போது இயற்கை உண்மையாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை நேராகவே கண்டு இன்புறலாம்; அவரை அடையலாம்; அடைந்து அனுபவிக்கலாம்!!

ஆறாம் திருமுறைப் பாடல்கள் நமக்கு அருட்பெருஞ்ஜோதியைக் காட்டக் கூடிய ஆற்றல் பெற்றவை! அருட்பெருஞ்ஜோதியை அடைந்து அனுபவிக்கச் செய்யும் வல்லமையையும் பெற்றவை.

"சுத்த சன்மார்க்கம், மனிதர்களை நிலையான வாழ்க்கைக்கு அழைத்துச்செல்லும் மார்க்கமாகும்"!! நெறியாகும்!!

சுத்த சன்மார்க்க நெறியை தவிர மற்ற நெறிகள் எல்லாம் மனிதர்களை, மனித நிலையில் இருந்து உயர்த்தி அவர்களை தேவர்களாக ஆக்கவே தோன்றின என்று சொல்லப்படுகின்றன!

அதை அடைவதற்கு இந்த உலக வாழ்க்கையைத் "துறக்க வேண்டும்" என்று அந்த நெறிகள் சொல்லுகின்றன. வெளியில் இருக்கும் இறைவனை வழிபட சொல்லுகின்றன.இதன் மூலமாக தெய்வ நிலைக்கு உயர முடியும் என்றும் கூறுகின்றன.

வள்ளலார் வகுத்து வழங்கி இருக்கும் சுத்த சன்மார்க்கமோ, மற்ற நெறிகள் சொல்லுவது போல வெளியில் எங்கோ ஏறி அடையக் கூடியது அல்ல - அருட்பெரும் ஜோதியின் அருள் - என்கின்றது!!

"ஒவ்வொருவரும் தம் சிர நடுவில் இருக்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை, ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் மூலமாகவே அறிந்து, அடைந்து அனுபவிக்க வேண்டும்" என்று வற்புறுத்தி கூறுகின்றது.

அந்த அருள் அனுபவத்துடன் “நிலையாக வாழ முடியும்” என்று அழுத்தமாகவும் கூறுகின்றது.

மற்ற நெறிகளை புறக்கணிக்கும் நெறி அல்ல சுத்த சன்மார்க்கம்! அவற்றில் இருந்து ஓங்கி வளர்ந்திருக்கும் ஒப்பற்ற நெறி, சுத்த சன்மார்க்க நெறி!! இந்த உண்மையை எல்லோரும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்! இவற்றை எல்லாம் தெளிவாக உணர்த்துவது வள்ளலாரின் ஆறாம் திருமுறை பாடல்கள்.

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி

தயவு

## 39-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “கடையவனுக்கும் கதி மோட்சம்”

நீங்கள் இதுவரை ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாக இருந்தாலும், இனி தயா ஒழுக்கத்துடனிருந்து, தீவிர முயற்சி செய்தால் திருவருளைப் பெற்றுக் கொள்ளலாம்!

- திருவருட்பிரகாச வள்ளலார்.

“எல்லாம் வல்ல இறைவா! நின்னிடம் ஓர் முறையீடு! ஏற்று அருள் புரிவாய்!!”

“முறையீடு செய்யும் முறை;-”

புருவமத்தியில் மனதை நினைப்பு மறப்பற நிலை நிறுத்துவோம்! புருவமத்தியின் உட்புறமாக, உள்ளே ஒரு பிரகாசமான, வெண்மையான சிறிய தாமரைப்பூ மலர்ந்திருப்பதாகவும், அதன் நடுப் பொகுட்டில், எல்லாம் வல்ல உண்மைக் கடவுள் தீபஜோதி வடிவில் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருப்பதாக பாவித்துப் பார்க்க வேண்டும். “அருட்பெருஞ்ஜோதியாக தனிப்பெருங்கருணையோடு” அன்புக் கடவுள் அத்தீப வடிவில் விளங்குவதாக நினைந்து நினைந்து முறையீடு செய்வோமாக!!

"அன்பே இறைவா! அருளே இறைவா! இன்பே இறைவா!"

"அறிவே இறைவா! ஒளியே இறைவா! அமுதே இறைவா!"

"ஒன்றே இறைவா! சிவமே இறைவா! தயவே இறைவா!"

1. அம்மையே! அப்பா! அருட்பெருஞ்ஜோதி! என் ஆருயிர் துணைவா! எனவுனை செம்மையாய் இருபோதும் நினைத்திட வேண்டும் இறைவா!

2. "ஆருயிர்கள் எல்லாம் நின் ஆலயம்" எனக் கண்டு, தொண்டு செய்யவே, கருணையால் பார்த்தென்னை பணித்திடு இறைவா!

3. அவா அற்ற **"உண்ணிலைமையே"** எனக்கு அருளிட வேண்டும், "ஆவா" என அரைக் கணத்தே அளித்திடு இறைவா!

4. மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்! புறம் திரியும் மனத்து ஆசை யாவும் துறக்க வேண்டுமே இறைவா!

5. அடங்கா கொடிய புலனை, திடமுடன் அடக்கி, **"ஒடுங்கி நிலைபெற, மெய்அக ஒருமை"** எற்கருள் இறைவா!

6. "உள்-மெய்" (உண்மை)ஆன அடியனாக, என்னை நீ இன்றே, நின் திருவடிக்கு ஆண்டுகொள் இறைவா!

7. மாசு சேர்ந்திடா நினைப்பு மறப்பு அற்ற **"தூய சுத்த, தேசு மனோன்மணி கரணம்"** வேண்டுமே இறைவா!

8. சுத்தமாய் எனைத் திருத்தி, "நின் திருப்பதத்தே இருத்திடுவாய்!" சத்தியமே! தனிப்பதியே! தயாநிதியே!! இறைவா!

9. பாவியிற் பாவியேன், தீயறிற் தீயனேன், கடைய நாயினேன்! எனினும் சோதியில்! ஆதியே, நீ எனைக் கைவிடேல் இறைவா!

10. "யான், எனது என்ற அறியாமை அல்லல்" அறுத்திட, என்றனக்கு "மெய்ஞ்ஞான வாள்" ஒன்றருள் இறைவா!

11. பொல்லா அசுத்தப் புலையேன், மெய்வழி நில்லா மலத்துப் புழுவினேன், கதிதனை காட்டிடு இறைவா!

12. **"மூலத்தை அறிந்திடாது"** முழு மூடனாய் இங்கே வீணினில் காலத்தைக் கழிக்கின்றேன்! நின் திருக்கோலத்தை காட்டிடு இறைவா!

13. தேக, போக, ஜீவ சுதந்தரம் யாவும் நின்பால் ஈந்திட, தாக வேகங் கெடுத்திடு! என் **"தற்போதம் ஒழித்திடு"** இறைவா!

14. அரைக்கணத்தும் மறந்திடாது, உனை ஏத்த, என் அன்பே **"அருளொடு அம்பலத்து எனை வைத்திடு"** இறைவா!

15. "தேகம் நான் என்ற உணர்வு" கழன்றிட வேண்டும், "சுத்த அருளே நாம்" என்று உணர்ந்திட வேண்டும், இறைவா!

16. "தலைநடு தயவு ஒளி நாம்" என பெற்றிட வேண்டும், வலையான மற்ற பற்று அறுத்திடு இறைவா!

17. பிறந்து பிறந்து, இறந்து இறந்து, இளைத்தது போதும்! "பிறவா இறவா - நித்திய ரூபம்" எற்கருள், இறைவா!

18. தூய்மை என்பது பேச்சுக்கும் இடமில்லை! நின்னருளால் தூய கதி காணுவனோ?! "தயவு இயல் பூணுவனோ"?! இறைவா!

19. அம்பலத்தே நின் அருள் நோக்கம் பெற்று அடியேன், "இன்பவியன் மெய்யுரு" கொண்டு இலங்கிட வேண்டும், இறைவா!

20. "அருளே நாம்" எனுற்று, "ஆன்ம நேய ஒருமை" கொண்டு ஓங்கிட, திருக்கருணை புரிந்திடு! என் சிறுமை பொறுத்திடு! இறைவா!

21. அன்பு - தயவு - ஒழுக்கம்; பொறுமை - அடக்கம்; வாய்மை- தூய்மை வேண்டும் வேண்டும் ஓ இறைவா!

22. "புலனடக்கம்" என்றால், திரும்பி பாராது ஓடுவேன்! எனையுன் "திருவடிக்கே திரும்ப அழைத்திடு!" இறைவா!

23. காலம் இல்லை! இனி என்னை, "காலன் கொல்லும்"!, கருணையால் கள்ளனை காத்திடு! திருக் கள்வனே! இறைவா!

24. நெறியல்லா நெறி சென்று, எண்ணில்லா பிணிகள் தங்கினேன், நின் தண்ணருளால் யாவும் நீக்கிடு! இறைவா!

25. என் முயற்சியில் நம்பிக்கை ஓர் சிறிதும் எனக்கில்லை! நின் தயவுப் பயிற்சியால் உயர்ச்சி தந்து மேலேற்றிடு! இறைவா!

26. "உயிர்கள் துன்பு கண்டு இரங்கவில்லை!! நான் உன்னை அங்கு கண்டதில்லை!! "இயல் கருணைத் திறம்" அளித்திடு! இறைவா!

27. "நானை அறுத்து, தானாய் நிறுத்த அறிவு இல்லேன்!" எனை, திரு அருள் புரிந்து புணர்ந்திடு! இறைவா!

28. இமைப்பொழுதும் நீங்காது, என் நெஞ்சில் நிலை நின்று, **"சுமை உடல் பிறவி அல்லல் உணர்வு அகற்றிடு"!!** இறைவா!

29. "தேகத்தை மறந்து, ஏகத்தில் நிலைத்திருக்க" தாகத்தை - அருட் போகத்தை தந்து எனையாள்! இறைவா!

30. **"அகத்தே பிறழாது என்றும் நிலைத்திருக்க"**, அற்ப சுகத்தை, இச்சகத்தே நான் விழையாது, விலக்கிட அருள்! இறைவா!

31. பிழையே மீண்டும் மீண்டும் இழைத்தேன்! எனினும் அப் பிழை பொறுத்தல் என்றும் எந்தாய் நின் கடனே இறைவா!

32. தீ நெறியில் பழகிப் போன மனம், நின் "திருவருள் மா - தூ உணர்வு பெற்றிடுமோ?!" சன்னெறி உற்றிடுமோ?! இறைவா!

33. பலகாலும் நீ இட்ட கட்டளையை மறுத்தேன்! பாவிக்கு என்ன கதி நேருமோ! இறைவா!

34. உலகத்தில் இதுவரையும் என் போலும் பாவியை நீ படைத்ததில்லை! சத்தியமே! சத்தியமாம் தலைவா!

35. "மாய போகம்" மொண்டு மொண்டு கண்டதெல்லாம், "தீய துக்கம் ஒன்றே"! இனி, "அக்கரை சேர்த்திடு" இறைவா!

("இக்கரை கடந்திடில் அக்கரையே! இருப்பது சிதம்பர சர்க்கரையே")

36. **"காயத்திடாது, இக் கயவனை நின் கழற் கீழ் வைத்திட வேண்டும்!"** தாயான தயவுத் திறம் செய்திடு! இறைவா!

(காயத்திடாது = "தேகமே நான்" என்ற மருள் நிலை உணர்வு நீங்கி "அருளே நாம்" என்ற "அக உண்மை இயற்கை வடிவில் நிற்றல்")

இன்பே நன்றருளி "அருள் இயற்கையிலே" வைத்தாலும், இங்கே என்னை துன்பே செய்வித்தாலும் என் செய்வேன்!! -திருவருட்பா

37. தூய்மையான தயவு ஒழுக்கம் தவறாது சேர்ந்திட, என்னை நின் அருளால் நாளும் சார்ந்திடு இறைவா!

38. "தேகபோகம்" சேர்ந்திடாது, "ஏகபோகம்" ஏற்றிடவே, என்னை நீ எப்படியும் மாற்றிடு இறைவா!

39. கோனே! நீ இனும், பற்பல கொடிய நோய் தந்திடினும், நானாக திருந்திடேன்! "நீயே எனை பொருந்திடு," இறைவா!

40. “தயவு” என்ற ஒன்றாய், இன்று வந்தனை!! அறிந்திலேன்! உன் மீது குறை ஒன்றும் இல்லை! என் இறைவா!

(என்னை ஏறாநிலை மிசை ஏற்றிவிட்டது யாதெனில் “தயவு”!

“தயவு” தான் என்னைத் தூக்கிவிட்டது.வள்ளலார்)

தயவே கடவுள்!

தயவுடன் வாழ்க!!

41. என் மீதே குற்றமெல்லாம்!எனினும், “நானாக இங்கு வந்து தோன்றிலேன்!” எல்லாம் “நின்தாள் நாடகமே, “நான்”!” இறைவா!

**42. “அகம் இருந்து அருளொடு” நான் அவனியிலே தோன்றிட, “இயற்கை அருட்பிறப்பு” அளித்திடு! இறைவா!**

**தோன்றின் புகழொடு (அருள்) தோன்றுக!!**

43. ஏளனம் செய் பிறர் நகைக்க, இவ் உலகிடை உழலலாகுமோ!? **“மோனமாய் அகத்திருந்து அமைதி சேர்க்கலாகுமோ!”** இறைவா!

44. காக்கும் எம் காவலனாய், “காண்பரிய பேரொளியாய்” நின்றாயை, ஐயோ, நான் காணேனே என் இறைவா!!

45. மனந்தான் கொந்தளித்து, ஐயோ! என்னை தப்ப விடாது, தினந் தூண்டி, தீ நெறிக்கே அழைக்கிறதே! இறைவா!

46. தன் வசமே இழுத்து, இழி போகத்து எனை அழைக்கும், இக்கொடிய மன உறவு முறியாதோ! இறைவா!

47. கேடர்களில் கேடனேன்! கெடுவதற்கே ஓடினேன்! இனும் எனை தடுத்திடாது, புலனெறி செலவே விடுத்தனையே! இறைவா!

48. **ஆர் எனக்கு இங்கு உற்ற துணை உனையன்றி?! கைவிடியில் நீ என் செய்கேன்?! எங்குறுவேன்?! தீ நரகில் விழ்வேன்! இறைவா!**

49. பாவம் என்னை நான் செய்தேன்?! இத் தீ மனத்தை என் உடைமை ஆக்கினையே!! உடையவனே! என் இறைவா!

50. “அருள் வாழ்வு” என்று வரும்!? என்றே எதிர்பார்த்து ஏமாந்தேன்! “மருள் வாழ்வே நீள்கிறதே! “ மரணம் எனை சூழ்கிறதே! இறைவா!

51. உன்னால் என்னை திருத்திவிட ஆகாதோ! என் திருட்டு "மனம் திருவருளால் உருகாதோ!" இறைவா!

52. ஒன்று இனி என்னால் ஆகாது! உனக்கும், அருள் செய்ய மனமில்லை! "இன்னும் இங்கு நான் ஏன்?!" இறைவா!

53. அழுது தொழுது நின்றாலும், என் அவல நிலை மாறாதோ?! ஐயா நான் என் செய்வேன்! இருள் இடத்து, இங்கே இறைவா!

54. நீங்கா துன்பம் தானோ!? பேரழிவு தான் இனி எனக்கோ?! நான் படும் வேதனையை கண்டு ஒழியாயோ! என் இறைவா!

55. என்னத்தான் கற்றாலும் கேட்டாலும், எந்தாய்! என் விதி, இங்கு மாறலையே! என் செய்வேன்! என் இறைவா!

56. அப்பா நின் இருப்பு -அது பொய்யோ?! என்னில், சேர் இடத்தே நீ இலையோ?! யாரிடத்தே நான் அபயம் புகுவேன்?! பாரிடத்தே இறைவா!

57. நீ தான் என்னை படைத்தனையோ? இல்லை, மாயக் காம பிசாசு, என்னை பெற்றதுவோ?! என் சொல்லுவேன்! இறைவா!

58. **மனம் இரங்க நில்லேன்! சினம் இறக்கக் கல்லேன்! "அகம் பிறக்க வல்லேனோ?!"** நல்லன் அல்லேன்! இறைவா!

59. காலம் தாழ்த்தங்கே இருப்பது அழகன்று! இக்கணமே கால் தந்து எனை காத்திடு! காரகம் போக்கிடு! இறைவா!

(காரகம்= கார்+அகம்; அறியாமையாகிய அஞ்ஞான இருள் சூழ்ந்த உள்ளம்)

60. தவறு செய்தேன்! தெரிந்து செய்தேன்!! தொடர்ந்து செய்தேன்!!! தவறாது என்னை தண்டிப்பாயோ! தயவால் அண்டி ஆள்வாயோ?! இறைவா!

61. **"அந்தரத்தே தொங்கும் அருட்ஜோதி பற்றி நின்று", எந்தரத்து குற்றம் யாவும் தவிர்த்திட வேண்டும் இறைவா!**

(அந்தரம் = தலைநடு விளங்கும் நிராதார நிலை)

இதைத்தான் வள்ளற் பெருமான், புருவமத்திக்கு உட்புறம்

"ஒரு சவ்வு தொங்குகின்றது" என்றார்! "சவ்வு" என்பது ஓங்கார பிரணவ ஆன்மாவின் மிக நுண்ணிய நிலையைக் குறிக்கின்றது!

62. “அக ஒர்மையில் மிக மூழ்கி, அருள் வடிவம் தாங்கிட வேண்டும்!!” அன்பு -அருள் - இன்பம் அளித்திடு! இறைவா!

அன்பு - அருள் - இன்பம் = சச்சிதானந்தம்

63. “இடையறாது உன்னை, அகத்தே நிறுத்தி, அணைந்து புணர்ந்திட வேண்டும்!” தடை யாவும் நீக்கிடு! தகர மெய்ஞ்ஞானம் ஆக்கிடு! இறைவா!

தகர மெய்ஞ்ஞான தனிப்பெருவெளி எனும் அகர நிலைப் பதி அருட்பெருஞ்ஜோதி! - திருவருட்பா - அகவல்.

“த்” என்ற ஏழாவது மெய்யெழுத்து ஆறாம் மன அறிவுக்கு அப்பால் விளங்கும் “அருள் மெய்ஞ்ஞானத்தைக்” குறிக்கின்றது. இந்த அருள் ஞானத்தால், அகண்ட வான் பெருவெளி முற்றும் நிறைந்த “கடவுள் உண்மை” அகரநிலைப் பதியாக அறியப்படுகிறது. இந்த உண்மையை குறிக்கவே, சத்தியஞான சபையில்

“தகரக் கண்ணாடி விளக்கு” வைக்க வேண்டும், என்றார், வள்ளலார். - சுவாமி சரவணானந்தா.

64. “நான்” இல்லை! “நான்” இல்லை! என்று ஓடி, இங்கு “தான்தானே” என்று ஆடிட வேண்டும்! வான் கருணை வழங்கிடு இறைவா!

65. **“கூட்டில் வாள் சாத்தி நின்றிட வேண்டும்!!”** இன்றுமுதல் வாட்டமிலா நாட்டம் எனக்கருள் இறைவா!

(கூடு = உடல், வாள் =அருள் ஒளி)

66. **அறுத்துருவம் மாற்றிட வேண்டும்!! “அகத்து அருளை ஏற்றிட வேண்டும்!!” அறத்துருவம் தாங்கிட வேண்டும்!! சகத்திருளும் நீங்கிட வேண்டும்! இறைவா!**

அறுத்துருவம் மாற்றிட வேண்டும்= “தேகமே நான்” என்கின்ற உருவ உணர்வு நீக்குதல்!

அறத்துருவம் தாங்கிட வேண்டும்= “தயாமூல தர்மம்” ஆகிய “அருள் வடிவமே” நமது இயற்கை உண்மை - விளக்க “அருட்ஜோதி ஆன்ம நித்திய சொரூபமாக உள்ளதாம்”

67. ஜீவ சாக்கிராதி யாவும் நீங்கி, சுத்த துரியானுபவம் உற வேண்டும்!! **"திருவருள் விழிப்பை"** வழங்கிடு இறைவா!!

**"துரிய வாழ்வு (அ) சுகபூரண பெரிய வாழ்வு";-**

ஒருவன் விழிப்பு, கனவு, உறக்கம் (ஜீவ சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி) ஆகிய முந்நிலை அனுபவத்தையும் கடந்து,

"அகப்பெருவெளி" நிலையுற்று, அங்கு "அருள் உணர்வு" கெடாது, உலக விடயாதிகள் - வாசனைகள் ஏற்படாது, "அக விழிப்போடு இருத்தல்" துரியானுபவ நிலையாம். அப்படி இருந்து கொண்டே "அனக வாழ்வு" வாழவேண்டும்.

- சுவாமி சரவணானந்தா.

68. கல்லினும் வலிய மனத்தினேன், உன்னை பல்கால் மறக்கவே நேரும்! மறவாதிருக்க வரம் வழங்கிடு இறைவா!

69. காமம் - வெகுளி - மயக்கம், முக்குற்றம் விடுத்து, இக்கணம் "ஒருமை - நிராசை - தயவு" குன்றேறிட வேண்டும் இறைவா!

70. இனியும் எனைப் புறம் விடுத்திடேல்! என்றும் "அகத்து எனை அணைத்திடுவாய்" அன்பே! அறிவே! அமுதே! இறைவா.

71. "எட்டோடு இரண்டு சேர்த்து எண்ண வேண்டும்!" எண்ணி எண்ணி நின் வண்ணம் ஆக வேண்டும் இறைவா!

எட்டு = அ; அகரநிலைப் பதியாகிய இறைவனை, இரண்டு = உ; ஆகிய சுத்த மனத்தால் கூடி, தானற்று, அதுவாகி நிற்றல்!!

72. எவ்வுயிரும் என்னுயிர் எனக் கண்டு இரங்கவேண்டும்! அருள் வலத்தால் அங்கே துயர் போக்க வேண்டும் இறைவா!

73. பசியாற்றி, அறிவு ஏற்றி, யாரையும் இங்கு நீ அருள்நெறி சேர்த்திவிட வேண்டும்! "அருளொளி சாத்திடு இறைவா!"

74. நாள்தோறும் அன்பே! பூசையால் நான் உனை ஆசையாய்ப் புணர்ந்திட வேண்டும்! இரவுபகல் நீக்கிடு இறைவா!

75. **"அசைவிலா அகநிலை உற்று அமைதி உறவேண்டும்!" பேசா மோனாதீத இயல்பே! சுத்தமே! தனி சத்தமே!! இறைவா!**

(தனிச் சத்தம்= ஓங்கார பிரணவ சொரூபம்)

சத்த சொரூபா நமோ நமோ - அருணகிரிநாதர்.

76. “பத்தாம் கடவுளான்ம புள்ளியையே பற்றிட வேண்டும்!” மற்ற சிந்தனைப் பற்று அறுத்திடு! பகவனே இறைவா!

(8 + 2 =10) (அ+உ=ய)

சுத்த மனத்தால் (2=உ), கடவுளோடு (8=அ) ஒன்று கூடிய மனிதன், “கடவுளான்ம அருட்ஜோதி சொரூபியாய்”

தலைநடு இடத்தே (ய=10) திகழ்கின்றான்.

77. பகர வடிவ வளை குளத்தே இன்றே பதம் பற்றி நாளும் உகர பரோபகார பணி ஆற்றிட வேண்டும் இறைவா!

**78. “நித்திய ஆன்ம சொரூபியாய்” நித்தமும் சுத்தமாய் நிலைத்திருக்க வேண்டும்! சத்தியமாய் அருளிடு! இறைவா!**

79. என்னையும் “பரத்தே இருப்பது ஆக்கி,” ஒன்றினில் ஒன்றிடச் செய்வாய்! ஒன்றான தனிப் பரம்பொருளே! மன்றாடும் சுகப் பொருளே! இறைவா!

“என்னையும் இருப்பது ஆக்கினான்” - மாணிக்கவாசகர்.

80. “கருணையும் சிவமே பொருள்” எனக் கொண்டிட வேண்டும்!! “செயல் அனைத்தும் அருள் ஒளியால் கண்டிட வேண்டும்” இறைவா!

81. வள்ளல் நீயே இரவும் பகலும் என் கதியாய் உற்றிட வேண்டும்!! கள்ள மனக் குதிப்பு அற்றிட வேண்டும் இறைவா!

82. வானவெளி நடு ஒளிர் மா ஞாயிறே போல், ஊன் உடல் நடு ஞானவெளி உளே அருட்ஜோதியாய் வருக! முத்தம் தருக இறைவா!

முத்தம் =முத்தி நிலை

83. “தேகம் நான் எனும் கற்பனையிலிருந்து” மீளுவனோ! “அருளை நாம் எனும் உண்மையிலிருந்து” ஆளுவனோ! இறைவா!

**84. இப்போது “தோன்றியுள்ள மடமை” மாற வேண்டும்!! எப்போதும் “ஊன்றியுள்ள நிலைமையே” தேற வேண்டும் இறைவா!!**

85. அடாத காரியங்கள் செய்து இங்கே மாதர் மயக்கால், படாத பாடு படுகின்றேன்! விடாதே எனை! அடி கொடு இறைவா!!

விடாதே எனை = அப்படி மாதர் மயக்கில் செல்லவிடாதே! கைவிட்டு விடாதே!

அடி கொடு = திருவடி தந்து அருள்க!

86. வெளிக்குள் வெளி கடந்து ஒளிர வேண்டும்!! அங்கே சும்மா இருந்து சுத்த முற்று ஓங்கிட வேண்டும் இறைவா!

**87. புறச்சூழல் தனைப் பற்றாது "அகம் இருந்து அன்பொளி, பற்றி" அறச் செயலோடு இவ்வுலகில் தயவுடன் (கடவுளுடன்) வாழ பழக்கம் ஈ! இறைவா!**

88. "அறிவினுள்ளே அறிவுதனை அருளினால் அறியாதே அறிவேனோ!?" உலகில் மருளாதே வாழ்வேனோ? இறைவா!

89. கோடி தாயனையாய்! ஒரு கோடி தந்தை யணையாய்! வாடி நான் இங்கு இருத்தல் அழகோ! நாடி எனை வருக இறைவா!

90. "உண்மை வீடு இது" என கண்டு இங்கே, "அம்பலத்தே தங்கிட வேண்டும்!" அன்பினால் வசித்திட வேண்டும்! இறைவா!

91. "இங்கே வம்மின்" என அழைத்து, "அருள் வானத்தே தங்கவைத்து, நித்திய வாழ்வு தருக!!" வருக இறைவா!

92. புறத்தை விடுத்து, "அகத்தை அடுத்து, அருளை பிடித்து, அனகமாய் நடித்து" வாழ்ந்திட வேண்டும் நான் இறைவா!!

93. "துன்பம் அதைத் தந்திலையேல் உண்மை காண விழைந்திடேன்!!" எனினும், அறக் கருணையால் ஆள்க!! இறைவா!

94. "அறிவு நிலை இருந்து, அலைமனம் அசைவற்றிட வேண்டும்!! அருளின் ஒளிபெற்று, ஒருமையில் விளைவுற்றிட வேண்டும் இறைவா!!"

95. எல்லாம் வல்ல இறைவ நீ!! "என் உள்ளே உள்ள உண்மையை" கல்லா நின்று களிக்க வேண்டும் நான் இறைவா!

**96. "ஒன்றான இருப்பே!" மன்றாடு நெருப்பே! சென்றோடு மனத்தை நன்றாக திருத்தே! "மெய் அம்பலத்து இருத்தே!" இறைவா!**

97. **"அகத் தயவு ஒளியாய் நின்று, தயவையே நினைவில் கொண்டு"**, தக வாழ்ந்து வரவேண்டும்! இங்கிதமாய்! இறைவா!

98. மாயப் பிறப்பை மாற்றிடு! நின் அருளால் இங்கு இன்று எனை "தயவு பிறப்பில் ஆக்கிடு!!" ஈன உலகத்து இடர் நீக்கிடு! இறைவா!

99. பொய் மாயா பிறப்பிறப்பு - இன்ப துன்ப நிலையினின்று விடுத்திடு! எனை "மெய்ஞ்ஞான அருள் ஆன்ம - அக உண்மை பதியில் இருத்திடு!!" இறைவா!

100. மையப் புள்ளியில் நின்று, ஐய! மையல் வழி வென்று "தையாம் பத்தை பிறக்கச் செய்வாய்!" சத்தே! என் சொத்தே! இறைவா!

"தை பிறந்தால் வழி பிறக்கும்"

தை= பத்தாவது தமிழ் மாதம் குறிக்கும் பத்து ஆகிய "கடவுள் ஆன்மா"!

101. தீமை யாவின்றும் விடுத்திடு! சாவை என்றும் தடுத்திடு!

"ஓம் - ஐ - உரு" ஒன்றைக் கொடுத்திடு! என்னை அடுத்திடு! இறைவா.

"ஓம் - ஓங்காரப் பிரணவம்"

"ஐ" - கடவுள்

(ஓங்காரப் பிரணவ அருட் பிரகாச வடிவம்)

102. "திருவருள் இயல் வடிவொடு மன்றில் உரு நிலைத்து வாழ",

இருள் இடத்து உன்னை சிக்கெனப் பிடிப்பனோ?! என் இறைவா!

மன்று - மன்றம் = அம்பலம் = சிற்சபை

திரு அம்பலவன் திருநோக்கம் பெற்றார்க்கு, "உரு" அம்பலத்தே என்று உன்.

**மனிதனின் இயல் உண்மை நித்திய அகவடிவம், "அருட்ஜோதி ஆன்ம சொரூபமாய்" சிரநடு சிற்றம்பலத்தே திகழ்கின்றது.**

103. "இருந்தபடியே மெய் இல்லத்திருந்து, இல்லாமலே என்றும் இருந்து கொண்டிருக்க" சொல்லாய் ஒரு சொல் இறைவா!!

மெய் இல்லம் = சிரநடு சிற்றம்பலம்; இல்லாமலே இரு = யான், எனது என்ற தற்போதும் நீங்கி இருத்தல்.

104. நீ என்னுள்ளே உறைந்தும், என்னுடனே இருந்தும், எனைத் திருத்த மறந்தனையே!! எங்கே மறைந்தனையோ?! இறைவா!

105. கருத்துள்ளே இருத்தி, களித்துன்னைக் கருதி, கலகந் தவிர, திருந்திடவே மறுத்தேன்! உனை மறந்தேனே!! இறைவா!

106. “என்றும் இருந்திடும் ஒன்றே!” அகத்துனைக் கண்டு இன்றே ஒன்றுவது நன்றென்றே வந்தேன்! நீ வா வா இறைவா!!

107. சத்திய நிலைதனை தயவினில் தருவாய்! சடுதியில் வருவாய்! தயவான தத்துவனே! தாயிற் சிறந்தவனே இறைவா!

108. “மெய் வைத்து, அழியா வெறுவெளி நடுவுற்றிட”, எனை பொய் விடுத்து இழியா சிரநடு சேர்த்திடு! இறைவா!

109. “தன்னிலை மறந்து பதிநிலை யுற்றிட வேண்டும்! யாவும் தானாய் நின்றிட வேண்டும்!!” என்றும் எனக்கு இனிய இறைவா!

110. “சுத்த மெய்யுணர்வு மாத்திரமாய்”, அந்த மேல்நிலையில் சென்று நிலவவேண்டும்!!

“அசுத்த புலையுடல் நான் எனல்”- அற்று, அருட்பிரகாசமாக வேண்டும்!” இறைவா!

**111. “மல இரவு விடியாதோ!! மன்று கதவு திறக்காதோ!! மாயை மன சேட்டை ஒழியாதோ!! பண்ணிய பாவம் தொலையாதோ இறைவா!”**

112. வந்த வல்வினையால் பயந்தேன்! மந்தன் எனக்கு எந்த துணையும் இல்லேன்! பந்தப் புணை அறுத்தெனை ஆள்வாய் இறைவா!

113. உற்றுப் பார்த்தால் உள்ளே, “நான் என்ற ஒன்று தனி உளதோ?!” சற்றே நீ இரங்கி, நாயேற்கு உண்மை உரைத்தல் தகாதோ?! இறைவா!

(இங்கு இவ்வுலகில் “நான்” என மனிதனாய் விளங்கிக் கொண்டிருப்பதும், அந்த எல்லாமான இறைவனே)

114. “இருப்பு உணர்ந்து இறை உணர்வை இறுகப்பற்றி, இல்லாமல் இருக்கும் இயல் பெற இசைத்திடுக” இறைவா!!

(“என்னையும் இருப்பதாக்கினான்” - என்பார் மாணிக்கவாசகர்.

“இருப்பது ஒன்றே! அதுவே எல்லாமாய் இருக்கின்றது!!” என்று உணர்தலே “ஞானம் அடைதல்” ஆகும்.)

115. நேரடியாய், ஒரே அடியாய், விடாப்பிடியாய், "ஒன்று விடையால்" உனை அண்டி, கண்டுகொண்டு, கலந்து, ஒன்றிட வேண்டும்! இறைவா!

(ஒன்று விடை = பசு ஆகிய ஆன்மப் புள்ளி!! ஜீவாத்மா + பரமாத்மா= ஒன்றான கடவுளான்மா(1+1=1) "இறைமனிதன்")

116. **ஆன்ம இயற்கையோடு நான் அம்பலத்துற்று, தயவு ரூபம் பெற்று, ஆனந்த வாழ்வு கொண்டு ஓங்கிட வா! வரம் தா! இறைவா!**

(ஆன்மாவின் இயற்கை குணம் "தயவு"! ஆன்ம இயற்கையாகிய தயவோடிருந்தால் "சிவம் ஆகலாம்" - வள்ளலார்)

117. வேறு ஒரு ஆள் உள்ளே ஆடல் கண்டு, வாடலற **"எனை அவர் மயமாய் தேறும் ஒரு நாள் உண்டோ?!"** நான் மாறுவது என்றோ?! இறைவா!

118. அல்லும் பகலும் என் அகத்தில் இருந்திடு!! பின்னை என் அல்லல் பிறவி துன்பம் அகற்றிடு! இறைவா!

119. "நினைப்பு மறப்பற்ற சுத்த நிலையில் நிறுத்திடு!" எனை இன்ப துன்பம் அற்ற இயலில் இருத்திடு!! இறைவா!

120. இரவு பகல் அற்ற இடத்தை காட்டிடு!! எனக்கு, பிறப்பு இறப்பற்ற இருப்பை தெரிந்திடு!!" இறைவா!

121. தசை எலும்பு, தோல் நரம்பு, மூளை, இதய - குருதி, மலநீர் "அசுத்தப் புலையுடல் நான் என்றே இருந்தேன்!!" நன்றோ?! இறைவா!

122. "எப்போதும் இருக்கின்ற ஒருவா!! எல்லாமாய் விளங்குகின்ற இறைவா!!" தப்பேதும் இல்லாது தலைநடு நின் தாள் தாங்க வேண்டும் தலைவா!!!

"அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி"

தயவு

# 40 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# “கடவுள் விளங்கும் இடம் எங்கே?!”

கடவுள் இல்லாத இடமே இல்லை என்றும், கடவுள் எவ்விடத்தும் இருந்து கொண்டுதான் இருக்கின்றார் என்றும், முன்பு கேள்விப்பட்டும், ஓதியும் உணர்ந்தும் இருந்தோம். அந்த உண்மையை, இன்று திருவருளால் சத்விசாரம் செய்து ஓரளவு உள்ளவாறு தெரிந்து கொண்டும் இருக்கின்றோம்.

மேலும் இப்பொழுது நாம் ஆண்டவரோடு கலந்துகொண்டு, **“அத்துவிதமாக இருந்து கொண்டு”** வாழ வேண்டி இருக்கிறதால், அவரும் நாமுமான பரமான்ம - ஆன்ம அணுவைக் கண்டு கொண்டு நிலவிட வேண்டியுள்ளது. ஆகையால் அந்தக் “கடவுளான்ம அணுவை” நாம் எங்கே கண்டுகொள்ள முடிகின்றது எனப் பார்ப்போம்.

ஆன்மாவானது அகத்திலே அருவமாக இருந்து, அனகமாக விரிந்துள்ளதால், எந்தப் பொருளிலும், உயிரிலும் உள்ளிடத்தும் புறவிடத்தும் கண்டுகொள்ள முடியாது. அப்படிக் காணப்படுகின்ற எந்த ஒன்றும் உண்மைக் கடவுள் ஆகாது.

உதாரணமாக, மக்களில் சிறந்த பெரியோர்கள், அற்புத ஆற்றல் கொண்ட விக்கிரகாதிப் பொருள், இயற்கைச் சக்திகள், செயற்கைத் தோற்றங்கள் முதலியவைகளில் அங்கங்கு சிறிது சிறிது காணப்படுகின்ற விளக்கங்களும், கிடைக்கப் பெறுகின்ற அனுபவப் பயன்களும் **“முழுமையான கடவுள் உண்மை கொண்டன அல்ல”** எனவே அறிகின்றோம்.

அங்கங்கு அப்படியப்படி வெளிப்படுகின்ற சின்னஞ்சிறு விளக்கங்களைக் கூட்டிப் பார்க்கும்போது, அவை எல்லாவற்றையும் விட **“கோடி கோடி பங்கு அதிக விளக்கம் கொண்டது நம் கடவுள் உண்மை”** என உணர்த்த பெறுகின்றோம் நமது உள்ளத்திலே.

இவ் “உண்மை ஞான உணர்வில்தான் அந்த பரம்பொருள் முதலில் விளங்குகின்றதாக அறிகின்றோம்”. அந்த உணர்வு வெளிப்படுகின்ற இடம் எங்கே? என்று ஆய்வோம்.

மனித தேகத்தில் உயிர்ச் சக்தி எங்கும் பரவி நின்று, அங்கங்கு ஓர் ஒரு உணர்வைத் தோற்றுவிக்கின்றது. மேலும், அவ் உயிர் சக்தி

ஆன்மாவிடத்திருந்து தான் தோன்றிப் பரவி எங்கும் காரியப்படுகின்றதாம். ஆன்மாவின் கண் உதிக்கின்ற உயிர் உணர்வுச் சக்தியே, மனம் முதலாய கரணத்திற்கும், கண் முதலான இந்திரியங்களும், கருதுதல் - காண்டல் முதலான செயல்களுக்கும் துணையாய் இருக்கின்றதாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாய், அவ் "ஆன்மாவில் உதிக்கின்ற மெய்ஞ்ஞான உணர்வாலே" அந்த ஆன்மாவையே அறியக்கூடியதாயும் இருக்கின்றதை இன்று உணர்கின்றோம். அம் "மெய்ஞான உணர்வு எங்கே உதிக்கின்றது?!" தலையுள் மூளைத்தானத்தில்தான் எல்லா அறிவும் முளைத்து எங்கும் பரவுகின்றதை சிறுவர்களும் அறிவர்.

மேலும் அம் மூளைப் பகுதியிலும், முன்னிருக்கும் பெருமூளையினும், பின்னிருக்கும் பெரும் மூளையிலும், பின்னிருக்கும் சிறு மூளையினும், இடை நடுவில் இருக்கும் ஓங்கார முகுள மூளையினும் ஓர் ஓர் அற்புத ஆற்றல் கொண்டு அறிவு விளக்கம் செய்யப்படுகின்றதாம்.

இவற்றில் அந்த ஓங்கார மூளையின் ஆற்றலால்தான், மற்ற மூளைப் பகுதிகளின் செயல்பாடுகளும், உயிரின் இயக்கமும் நடைபெறுகின்றனவாம். மேலும் **"இந்த ஓங்கார மூளைத்தலமே மெய்யறிவு மலரக் கூடிய இடமாகவும் இருக்கின்றதாம்".** ஏனெனில், ஒன்றரை அங்குல நீளமும், மேலே பெருத்தும் கீழே சிறுத்தும், முகுளம் போல் இருக்கின்ற இந்த மூளைக்கு மேலே, கிண்ணம் போன்ற சிறு குழி இருக்கின்றது.

இக் குழிக்கு மேல், "வெறு வெளியான அண்டக் கவசம் போல் எலும்புக்கூடு மூடிக் கொண்டிருக்கிறது". இவ் வெறுவெளி நடுவில் தான் நம் கடவுள் ஆன்ம அணு பிரகாசித்துக் கொண்டிருக்கிறதாம். ஆகையால்தான் "இந்த மூளைப் பகுதியில், இந்த மெய்ஞ்ஞான விளக்கம் தோன்றுகின்றதாக அறிகின்றோம்."

**ஆகவே, "நடுத்தலையுள் வெளியில்தான், கடவுள் உண்மை கொண்ட ஆன்ம அணுவாக நாம் இருந்து விளங்கிக் கொண்டு உள்ளோம். இதுவே நமது உண்மை உறையுள்!! நமது உண்மை வடிவமும் இவ் ஆன்ம அணுவே ஆகும்."**

இங்கிருந்து கொண்டுதான், உயிர்ச் சக்தியையும், உணர்வையும், மூளைப் பகுதிகளுக்கும், இருதயக் கருவிக்கும், மற்றெல்லாப் பாகங்களுக்கும், விளக்கம் தந்து செயல் புரிவித்துக்கொண்டும் விளங்குகின்றோம்.

இருதயத்தின் இரத்த ஓட்ட சக்திக்கும், நுரையீரலின் உயிர்க்காற்று இயக்கத்திற்கும், கரண இந்திரியப் புலன் உணர்வுக்கும், ஆதாரம் நாமாயுள்ளோம். மேலும், மனோ புலன் உணர்வுக்கும், உயிர்ச் சக்தி இயக்கத்திற்கும், ஓட்ட வேகத்திற்கும் அதிக தொடர்பு உள்ளதால் இவை கூடி விளங்கும் இருதய ஸ்தானத்தில் திடீர் தாக்குதல் ஏற்படுவதால் தேகேந்திய முற்றுமே பாதிக்கப்படும்.

அவா வெகுளி மயக்கத்தால், முதலில் உணர்ச்சி அலைகள் மூளையிலிருந்து கிளம்பினாலும் இருதயத்திலேதான் பாதிக்கப்படக் காண்போம். இதனால், இந்த இருதயப் பிரதேசமே, மெய்யறிவு இடம் என்று சொல்லிவிட முடியாது.

இந்த உண்மையை புரிந்து கொள்ளாத காரணத்தாலும், மூளைப் பகுதிகளின் தாக்குதல் விளங்காததாலும், நெஞ்சிடத்தில் தானே எல்லா மாற்றச் செயல்களும் தோன்றிப் பரவுவதாலும், நம் கடவுள் ஆன்மா இவ் இருதயத்தானத்தில் இருப்பதாகக் கொண்டு விரிவுரை பல புனைந்து விட்டனர் பலர்.

எல்லாமான கடவுள் ஆன்மா, உயிர் ஒளி வடிவமாக இருதயத்தில் இருப்பதாகக் கொண்டு, பலவாகிய கடவுட் கற்பனைகளை புனைந்து அளித்துள்ளார்கள். இவர்களுடைய கற்பனைக் கெல்லாம் பொருந்துவது போல் தோன்றியும் மேலும் விரிந்து உள்ளது போல் விளங்கியும் கொண்டிருக்கும். **“பதியின் உண்மையான நிவாசஸ்தலம் சிரநடு வெளியில்தான் ஆதிமுதல் தோன்றித் திகழ்கின்றதாக அறிகின்றோம்.”**

நாமான கடவுள் அணு, செயலற்றுக் கிடந்தபோதே, அகமுடையானின் ஆணைப்படி ஓர் தந்தையின் சுக்கிலத்துளி நம்மைச் சூழ்ந்தது. அத்துளி பக்குவப்பட்ட தருணத்தே ஒரு தாய் கருப்பையின் சுரோணிதத் துணுக்கோடு கூட்டப்பெற்றது.

அப்படி கூட்டப் பெற்ற அந்த க்ஷணத்திற்றானே, நம் அணு வடிவம் ஒளிவிட ஆரம்பித்தது. உயிரியக்கம் வெளிப்பட்டு, தாயின் சத்திலிருந்து ஜீவ தேகத்தைக் கிரகித்துக்கொண்டு வளர்ச்சி பெறலானோம்.

கருப்பிண்ட வளர்ச்சி நிறைவுற்ற காலையில், யோனி வாயிலின் வழியாக இவ்வுலகிற்கு இறங்கி வந்தோம். இங்கு வந்து பிறந்தது முதல், எத்தனையோ இன்ப துன்ப அவஸ்தைகளை அடைந்து வளர்ந்து இன்றைய நிலையில் விளங்கிக் கொண்டு இருக்கின்றோம்.

ஆம். **"நம்மை நாம் அறிந்து கொண்டு, கபால நடுவுள் கடவுள் அணுவாய் இருந்து கொண்டு உள்ளோம். இதை நன்றாக ஞாபகத்தில், இருத்திக் கொள்ள வேண்டும். நாம் என்றாலே இந்த சிரநடுச் சிற்பர அணுக்களே ஆவோம் என்பதை எக்காலத்தும் எவ்விடத்தும் மறக்கவே கூடாது."**

இவ்வுண்மை அறிந்து கொள்ளப்படாத காலமெல்லாம், "நாம்" என்றால் தேக வடிவத்தையே நினைவுபடுத்திக் கொண்டு இருந்தோம். சற்று அருள் விசேடத்தால் கடவுள் ஆன்ம உண்மையை ஏகதேசம் கண்டு கொண்ட போதும் கூட, தேக நிலையில் இருந்து கொண்டுதான், "நாம் அது" என்றும், "தேகம் நாம் அல்ல" என்றும் பாவனை செய்து கொண்டு கிடந்தோம். அதனால் அன்று, நாம் அல்லாத மாயத் தோற்ற தேகத்தைத் துறக்கவும், துறந்து சென்று ஆன்ம பாவனையில் கரைந்து மறைந்து ஒழியவும் பயின்றோம்.

அது முற்றும் தவறு என்பது இன்றே விளங்குகின்றது. ஆதலின், இனிமேல் அப்படி, **"ஆன்ம அகவடிவாய் இருந்து கொண்டு", தேகத்தைத் துறவாமல் தயவுப் பணி புரிந்து கொண்டே வாழ வேண்டும் நாம்.**

அனாதி காலமாகவே, நாம் கடவுள் ஆன்மச் சிற்றணுக்களாய் இருந்து கொண்டுள்ளோம். ஏதும் அறியாதவர்களாய், ஏதும் ஆற்றல் அற்றவர்களாய்க் கிடந்தோம். அந்நிலையிலும் நம் அகமுடையான், பூரணமாயும், சர்வ காரணராயும், எல்லாம் வல்லவராயும் இருந்த போதிலும், ஒன்றும் இல்லாதவராயும், ஒன்றும் இயலாதவராயும் ஜட வஸ்து போன்று நம்மின் அணுவில் அணுவாய் மறைந்து இருந்து கொண்டு தன் அனக தயா ஆற்றலால், விரிந்தும் சுருங்கியும், எல்லாப் பிறப்பு தேகங்களை எடுத்து எடுத்து விடுத்துக் கொண்டே இருக்கின்றதாக அறிகின்றோம்.

விதிமுறைப்படி, நம் ஆன்ம அணு வடிவைப் பலப்பலவாகிய தேகங்கள் சூழ்ந்து சூழ்ந்து, குறிப்பிட்ட காலம் வரை விளங்கிக் கொண்டிருந்து விட்டு நீங்கி நீங்கிச் சென்று கொண்டே

இருக்கின்றனவாம். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தோம். முடிவாக **இந்தப் பிறப்பில்தான் "நம்மை நாம் கண்டு கொண்டுள்ளோம்."**

மேலும், நம் அருட்பெருஞ்ஜோதி நாயகனையும் உணர்ந்து கொண்டிருக்கின்றோம். நமது செயல்திறன் இன்மையும், நம் பதியின் சர்வசக்தி வல்லமையையும் அறிந்து கொண்டுதான் இருக்கின்றோம். அச்சக்தியைப் பெற வேண்டுமே! பெற்றுக் கொண்டு வாழ வேண்டுமே!! இதற்கு என் செய்வது?!

இதுகாறும், உண்மைப் பதியையும், அவர் கோயில் கொண்டிருக்கும் இடத்தையும் அறிந்து கொள்ளாமல், எங்கெங்கோ சென்று சென்று, எத்தனையோ பெரியார்களின் முன்போ, எத்தனையோ திருச்சந்நிதிகளின் முன்போ, எத்தனையோ பீடங்களின் முன்போ, எத்தனையோ கற்பனை நிலைகளின் முன்போ, குறையொன்றுமில்லாத வெறு வெளியின் முன்போவெல்லாம் முறையிட்டுக் கொண்டோம்; விண்ணப்பித்துக் கொண்டோம்; பிரார்த்தித்துக் கொண்டோம்; வரங்கிடந்தோம். இவைகளால் எல்லாம் ஏதேதோ பயன்களைப் பெற்றுப் பெற்று களித்துக் கிடந்து களைத்தே போயிருக்கின்றோம்.

உண்மையைப் பதியை உள்ளவாறு அறிந்து, உண்மை முறையீடு செய்து கொள்ளாததினால்தான் இதுவரை அலைந்து கெட்டோம் என அறிகின்றோம். இப்பொழுது ஆண்டவரின் தயவாலே, திருச் சந்நிதியைக் காணும் பாக்கியம் அடைந்துள்ளோம்.

"நம் ஆன்மக் கடவுள் சந்நிதி புருவத்திடை வெளியில் திறக்கப் பெற்றுள்ளது". நமது அகமுடையானே உள்ளிருந்து திறந்துவிட்டு இருக்கின்றார். முன்பு மன் புருவ நடுவிலிருந்து, மனம் புதைந்திருந்து, என்புருகத் தவம் செய்த பெரியோர்கள் எல்லாம் வாடி மடிந்து போகவிட்டிருந்த கடவுளர், அந்நாள் அக்கதவை திறந்திடவில்லை போலும்!!

அவர்கள் புறத்திருந்து, தேகத்தைப் பற்றி நின்று தவம் புரிந்தது குறைவுடைத்து போலும்!

கற்பங்கள் பலகோடி செல்லத் தீய கனலின் நடு ஊசியின் மேல் காலை ஊன்றிப் பொற்பற மெய் உணவின்றி உறக்கமின்றிப் புலர்ந்து எலும்பு புலப்பட ஐம்பொறி ஓம்பி நிற்பவற்கு ஒளித்து, மறைக்கு ஒளித்து, யோக நீண் முனிவர்க்கு ஒளித்து, அமரர்க்கு ஒளித்து மேலாஞ் சிற்பத்திற் சின்மயமாய் நிறைந்து ஞானத் திருவாளர் உட்கலந்த தேவ தேவே!!!

என்ற திருவருட்பா மகாதேவமாலைச் செய்யுளால், ஞானத் திருவாளர், உள்ளிருந்து பெருகிக் கலந்துகொள்ளுகின்ற பேற்றினை உணர்த்தப்படுகின்றோம்

நம் பதியே தயவுசெய்து, திருக்கதவம் திறந்து நம்மையும் உடன் கொண்டால் அன்றி, எந்தத் தவ முயற்சியாலும் நாம் உட்செல்லவும், சென்று வாழவும் மீளவும் முடியாதாம்.

பதி பதத்தை வணங்கி, வாழ்த்தி வாழும் முறையை இங்கே சிறிது குறிப்பாம்;- நம் சுத்தசன் மார்க்கத்தில் மக்கள் இரு பிரிவினராக குறிக்கப்படுகின்றனர். அவர்கள் சாதகர்கள், சாத்தியர்கள் எனப்படுவர்.

**சாதகர்கள்;** தயா ஒழுக்கம் பூண்டு, விசார சாதனை புரிந்து கொண்டு இருக்கின்றவர்கள் ஆவார்கள். "சாத்தியர்களோ, விசார சாதனை முடித்து அகநிலையில் பொருந்தி, அருள் அனுபவம் கொள்ள வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஆவார்கள்".

முதலில், ஒரு சாதகனின் நிலையைச் சற்று விளக்குவாம்; இவன் தேக நிலையிலிருந்து பயிற்சி தொடங்குகின்றவனே ஆவான். **இவன் உண்மை நெறியிற் குறித்த இந்திரிய ஒழுக்கத்தில் வழுவாது நின்று, கரண ஒழுக்கத்தில் சென்று "மனத்தை லலாடத்தில் (புருவ மத்தியில்) நிறுத்திப் பழகுவான்".**

"இந்த இடம் சுத்த மனம் ஒடுங்கி நிற்க ஏற்ற நிலையமாகும்". ஆகையால், மனதை ஒருமைப்படுத்த சாதகன் இவ்விடத்தை தேர்ந்து கொண்டுள்ளான். **"இந்நிலை நின்று பழகிய சாதகன், தேக நிலை கடந்து, ஆன்ம நிலை அடைய வல்லவன் ஆகின்றான்".** இங்கிருந்து உள்நோக்கிட தலைநடுத் தலைவர், பரமபதி உணரப்படுகின்றார். இந்த நடுக் கண்ணாடியிற் கண்டது, தன் பிரதி பிம்பமே.

தன்னைத்தான் அறிந்து கொள்ளாமல், தன் நிழல் உருவத்தையே தான் எனக் கருதி கொண்டிருந்ததை பண்பட்ட போதுதான் காண்கின்றான் இச் சாதகன். இவன் உலக மக்களை நோக்கும்போது, கரண சுத்தி எய்தியுள்ளதின் காரணமாக சூழ்நரின் புறத்தேகத் தோற்றத்தைக் கடந்து, ஒரு வண்ண உயிரினமாகக் காண்கின்றான்.

இவனுக்கு உயர்ந்தோர், தாழ்ந்தோர், இன்ன ஊரினான், பெயரினான், குணத்தான், செயலான், ஆண்மகன், பெண்மகள், எந்த

புறநிலை எல்லாம் உயிர் அனுபவ தயவுச் செயலுக்கு தடையாக இருப்பதில்லை. எவரிடத்தும் தடையின்றி தயவு செய்ய முற்படுவான்.

மேலும், இச் சாதகன் ஆன்ம ஞான ஒழுக்கத்தில் பயிலுகின்றபோது, **“தான் ஒரு ஆன்மா என்றும்”, தன்னைப் போன்றே ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு ஆன்மாவே என்றும் அறிந்து இருக்கின்றான். அன்றியும் ஒவ்வொரு ஆன்மாவும், ஒன்றான பரமான்ம பதியின் பலவாகிய புறத் தோற்றமே என்றும் உணர்கின்றான்.**

அப்போது, “தான் ஒரு கடவுள் ஆன்மாவாய் இருப்பதும், அந்தக் கடவுளான்ம வண்ணமாகவே யாவும் அகத்தே விளங்குவதாகவும் உணர்கின்றான்.” இதனால், **அக்கடவுள் - ஆன்ம மயமான தானே யாவுமாய், எவ்விடத்தும் இருப்பதாகவும் அறிந்து தயவு வாழ்வு வாழ முற்படுகின்றான்.**

இந்தச் சாதகன், தான் சாத்திய நிலை எய்தும் வரை “புருவ மத்தியினின்று கடவுளை முன்னிலைப்படுத்தி” எல்லா முறையீடுகளும் செய்கின்றான். “நினைக்கின்ற போதெல்லாம் அந்த அகப்பதியையே நினைக்கின்றான். நினைந்து நினைந்து அந் நினைப்பற நிற்கின்ற போது, தன்னைத்தான் மறந்து, அந்த நினைக்கப்படும் பொருளே தான் ஆகி நிற்கும் பேறு எய்துகின்றான்.”

“தான் கெட்டு அதுவாகி நிற்றலே சாத்திய நிலையில் முதற்படியாகும்”.

## சாத்தியர்கள்

இனி, சாத்தியனைப் பற்றி ஆய்ந்து காண்போம். சாதனை முடித்து “அகநிலை பெற்றவனே சாத்தியன் எனப்படுகின்றான்”. இங்ஙனம் உள்ள சாத்தியனே சுத்த சன்மார்க்கியாக விளங்குவான். **“இவன் வாழ்வெல்லாம் ஆன்ம நிலைய அம்பல வாழ்வே ஆகும்.”** இப்படி வாழ்கின்ற சுத்த சன்மார்க்க சாத்தியர்களே, **“அம்பல சகோதரர்கள்”** என்று மொழிய படுவார்கள். இவர்களுடைய சாத்தியானுபவம் சுத்த தயவால் விளைவு கொண்டிருப்பதாம்.

இச் சாத்தியர்கள், கடவுள் ஆன்ம ரூபிகள்தான் என்று கண்டு இருந்தும் கூட, அக் கடவுளரின் பூர்ண தயவு வெளிப்படாமையினாலே, இன்னும் தொடர்ந்து முறையிட்டுக் கொண்டே தான்

இருக்கின்றார்கள். இவர்களின் முறையீடு, ஆன்ம முன்னிலையில் அல்ல; மற்ற எதன் முன்னிலையிலும் அல்ல; தன்னகத்தே மறைந்துள்ள தன் பதியாலேதான் சதா விண்ணப்பித்துக் கொண்டும், வேண்டிக் கொண்டும், முறையிட்டுக் கொண்டே இருப்பார்கள். இது உயர்நிலை அனுபவத்தில் உள்ளவன், தனக்குத்தானே பேசிக்கொள்ளுதல் எனக்கூறலாம். தயாபெரும் அமுத சக்தி அகம் ஒடுங்கிக் கிடத்தலை அறிந்து கொண்ட சாத்தியன், அதை வெளிக் கொண்டுவர முயல்கின்றான். தன்னுடைய அணுத்துவ நிலையையும், துரும்பும் அசைத்தெடுக்க முடியாத அசக்தி இயல்பையும் உணர்ந்து உணர்ந்து, பலப்பலவாக பதியை வேண்டுகின்றான்.

சதா வேண்டிக்கொண்டேயிருந்து விட்டாலும், வேண்டுகையும் ஒழித்து தியானத்திலே அமிழ்ந்து கரைந்து போய் விட்டாலும், அந்தத் தயவு வெளிப்படுமாறு இல்லை என்று அறிந்துள்ளான்.

ஆதலின், வெற்று முறையிட்டால், புதைந்து போக கருதுகின்றான் இல்லை. அம் முறையிட்டால் பிறிவற இருந்து கொண்டே தயா வாழ்வு வாழ முற்படுகிறான். அப்போதுதான் பதியின் தயவு உள்ளம் நெகிழ்கின்றது. நெகிழ்ந்து, கசிந்து உருகி, கொஞ்சம் கொஞ்சமாக உயிர் உணர்விலும், தேகக் கரணங்களிலும் பாய்ந்து நிரம்ப வல்லது ஆகின்றதாம்.

இதனால்தான் அந்த அகப்பெரும் தயவு அமுத சக்தி உடலிடம் நிரம்பி, புற வடிவத்தையே தன்மயமாய் மாற்றுவதாம். இந்த மாற்றத்தால் இறப்பொழிந்த சுத்த தேகம் உண்டாகின்றதாம். இதுவே சுத்த சன்மார்க்க லட்சியமாகும். இதனையே சாதனா சாத்தியம் முற்றுப் பெற்றவனாக மொழிவர் நம் சுத்த சன்மார்க்கத் தலைவர் திரு அருட்பிரகாச வள்ளலார்.

இது தொடங்கி, ஒவ்வொருவரும், "**தான் கடவுள் ஆன்மரூபி**" என்பதை உணர்ந்து, "**அதுவாகி நின்று**", உள் வளர் பரமான்ம ஜோதியை வெளிப்படுத்திக் கொள்ளலே தயா நன்முயற்சி செய்ததற்கு இத் திருவருள் முறையீடு இங்கு தரப்படுகின்றதாம். இம் முறையிட்டால், அக மறைந்து கிடக்கின்ற "கடவுட் பூர்ண தயவு வெளி" அனுபவத்திற்குக் கிடைக்கப் பெறுவது சாத்தியமாகின்றதாம். இப்படி அகமிருந்து பெருகி நிறைவு கொண்டு, மனிதனைப் புனிதனாக்கி, சுத்த சுகானந்த வடிவனாக்கி வாழ்விப்பது ஆகிய நெறியே, "சுத்த

அனக நெறியாக'' வழங்கப்படுகின்றது. இதுவே சுத்த சன்மார்க்கம் என்றும் சொல்லப்படுவதாம்.

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

''தயவு''

## 41 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை ''மெய்யின்பம்''

''உலகமெலாம் உதிக்கின்ற ஒளி நிலை, மெய் இன்பம் உறுகின்ற வெளி நிலை என்று உபய நிலையாகி'' உள்ள கடவுளின் துணையடி உண்மையை குறிப்பிடுகின்றார், நம் திருஅருட்பிரகாச வள்ளலார், தம் ''அருட்பிரகாச மாலையின்'' முதலடியிலே.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் ''ஈரடியில்'' ஒன்று, பெருஞ்ஜோதி உலகத் தோற்றம் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ளதாம். **மற்றோர் அடிதான், மெய்யருள் ஆகிய அகத்திலிருந்து, அனகமாக யாவையும் ஆண்டுகொண்டு, குறைவற்ற நிறைவான பூரணானந்தமாக உள்ளதாம்.**

இவ் ''**அக நிலையே - வெளி நிலை**'' என விளம்பப்படுகின்றது. இங்கு ''வெளி'' என்றால், அகத்திற்கு மாறான புறம் என்பதல்ல; ''வெளி என்பதே வெறுமையான இடம் அல்லது வெற்றிடம் ஆம்.'' இந்த வெளி நிலையில் தான் கடவுளின் எல்லாம் வல்ல நிறையருள் ஒன்றி பிரிவற நிலவுகின்றது. இந்த அருள் வெளியில் இருந்துதான், அவ் அருட்சக்தியையே விரித்து சூழொளி கொண்டு அகிலாண்ட பிண்ட சராசரங்களை எல்லாம் தோற்றுவித்து விளங்கச் செய்து கொண்டிருக்கின்றார் நம் அருட்பெருஞ்ஜோதி பதி. பக்குவ வசத்தால் நம் ஆன்ம சிற்றணுவின் அகத்தே பதி அருள் உதித்துள்ளதால், இந்த அருள் அடி உண்மையை அறிகின்றோம்.

ஆன்ம அணுவின் அகமாகிய வெளியில், அருள் நிலையைக் கண்ட நாம், புறப் பேருலகில் உள்ள ஒவ்வொரு அணுவிலும், பொருளிலும், உயிரிலும் அகத்தில் உள்ள இது போன்ற வெளி நிலையிலிருந்தே யாவும் தோற்றுவிக்கப் பட்டுள்ளனவாகவும் உணர்த்தப்படுகின்றோம்; உணர்கின்றோம். அருள் ஞானத்தால் உணரும் இவ் ''உண்மையை

உணர்த்துகின்றதும், உணர்கின்றதும் ஒன்றான அருளே அன்றி இரண்டு அல்லவாம்''.

**கடவுளும் அவருடைய அருளும் இரண்டல்ல; உணர்த்துகின்ற அவரும், உணர்கின்ற நாமும் இரண்டற உள்ளது உண்மையே.** கடவுள் அருள் வண்ணர். அருள் அவருடைய தன்மையே. ஆகையால், இந்த **''அவருடைய தன்மையாகிய அருளே நாம் என்பது உண்மையே!!'' இந்த அருள் அக உண்மை வடிவினராகத் தான் நாம் அனாதி காலமாக இருந்து வருகிறோம்.** உணராதிருந்தோம் இதுகாறும்; உணர்ந்து கொண்டிருக்கின்றோம் இத்தருணம்.

நம் உண்மை வடிவம் இப்படியாக என்றும் இருக்க, இதனை அனுபவத்தில் வழங்குவித்தற் பொருட்டு ''சூழொளியை'' எப் பொருளாயும், எவ்வுயிராயும், எவ் உணர்வாயும் ஆக்கிக்கொண்டும், நீக்கிக் கொண்டும் வந்த ''அகம் வளர் அருளாளனின் ஆணை,'' இன்றே இந்த அருள்நிலை உண்மையை உணர்ந்து கொள்ளச் செய்துள்ளதாம். இவ்வுண்மையை உணர்ந்து கொள்ளாத காலமெல்லாம், நம்மை நாம் தேகபோக வாழ்வில் பலகாலும் பிழைத்துக் கொண்டும், பிறந்தும் இறந்தும் வந்தவர்களாக் கருதிக் கொண்டு உள்ளோம்.

**''நாமோ அருளொளிச் சூழலில் என்றும் இருந்து வருகின்றோம்.'' இப்படி இருக்கும் நாம் எங்கே பிறந்தோம்?! எங்கே இறந்தோம்?! நம்மைச் சூழ்ந்த ஒளி நிலையே, அக ஆணைப்படி, ஒவ்வொரு உயிருடம்பு உருவாய் ஆக்கி ஆக்கி அழிக்கப்பட்டு வந்துள்ளதாம்.** இப்படி ஒவ்வொரு ஜீவ தேகச் சூழலில் விளங்கிக் கொண்டிருந்த காலத்தும், நியதிப்படி சேர்ந்த சுகதுக்க வாழ்வால், ''அக உண்மை வெளியாம் பக்குவம் சிறிது சிறிது ஏற்பட்டு வந்துள்ளதாகும்.'' மற்ற எல்லா ஜீவ தேக நிலை வாழ்வு கடந்து, இந்த மனித தேக வாழ்வு உண்டானது முதல், மன அறிவு தோன்றி பக்குவப்படத் தொடங்கியதாம். இவ் அறிவு வளரத்தான் நெடுங்காலம் ஆகி விட்டிருக்கிறது!! ''புலன் உணர்வு நிலை கடந்து, மனோ கரண ஒர்மை வந்து, அக நிலையில் ஆழ்ந்து சென்று, ஆன்மாவையும் அறிந்துகொள்ள நேர்ந்தது'' ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே!! அப்படி ஆன்மக் காட்சியைக் கண்டவன் தேக நிலையில் இருந்துதான் கண்டான்.

“தேகம் மனிதனுக்கு அநித்தியமானது என்றும், ஆன்மாவே மனிதனின் உண்மை வடிவம் என்றும் காணப்பட்டதால் தான், தேகத்தை விட்டு, ஆன்ம நிலையில் தங்கிவிட முடிவு செய்திருந்தான்.” இந்த ஆன்ம ஞானத்தின் முடிவு உடல் இழப்பால் தடைபட்டு மறைவதாயிற்று. தேகம் மறந்த அகம் பாவனையில் சுகம் கண்டிருந்து ஒடுங்கிப் போனது தான் முடிவாம்.

இன்பமே எல்லோரும் வேண்டுகின்றனர். ஆனால் எது இன்பம்; அது மெய்யான இன்பம் என்று தான் மக்கள் அறிந்து கொள்ள வில்லை. புலன் அறிவில், மருள் மயக்கில் எதை எதையோ இன்பம் எனக் கருதிக் கொண்டு, அதனை எங்கெங்கோ தேடித் தேடி அலைகின்றான். எதனையோ இன்பம் என நாடிச்சென்று, கூடிக் களித்து முடிவில், அது இன்பம் அல்ல எனக் கண்டு ஏமாற்றத்தோடு திரும்புகின்றான். அதிலேயே துன்புற்று அழிகின்றான்.

இன்றைய உலகில் அறிவியல் தந்த பலவாகிய சாதனங்களைக் கொண்டும், சமய நெறியாளர் அளித்துள்ள வாழ்க்கை முறைகளைக் கொண்டும், பலவாகிய கலைத் துணைகளோடும் வாழ்வில் இன்பம் காண முற்படுகின்ற மக்களினம் உண்மையில் இன்பத்தையா காண்கின்றது?! இல்லை!! வாழ்வே சிதைகின்றது : வாழ்வில் நற்பயன் விளையக் காணோம். “இன்பம் இதுதான்”, என்று கூட மக்கள் அறிகின்றார்கள் இல்லை. புலபோக இச்சையில் காலமெல்லாம் கழித்துக் கொண்டிருக்கின்றவர்கள் புலனறிவுக்கு மேல் சென்று “அருள் ஞானத்தில் விளைவு கொள்ளும் உண்மை இன்பத்தை காண்பது எப்படி?”

உலகியலில் அடைகின்ற எந்த இன்பத்தையும், துன்பத்தையும் பற்று வைக்காமலும், பொருட்படுத்தாமலும் **“உண்மையான இன்பம் இன்னது” என்று அறியவும், அடையவும், “உள்ளூர விரும்பி விசார மேற்கொண்டு முயல வேண்டும்.”** அப்படி முயன்று கொண்டிருந்தால் உண்மை சிறிது சிறிதாக வெளிப்படும். அப்போது “பரோபகார உள்ளத்தோடு தயா நன்முயற்சியும் சேர்ந்து கொண்டால்,” தேக போக வாழ்வுக்கு அப்பாலான அருள் அனுபவ வாழ்வின் இரகசியம் வெளியாம். அவ் “அருள் வாழ்வில் உண்டாகின்ற இன்பமே மெய்யான சுத்த இன்பமாய் விளங்கும்.” இவ் உயர் இன்பத்தைப் பற்றி உண்மையாகச் சிறிதே தெரிந்து கொண்டாலும் போதும், இதனிடத்தில் பற்றும், பிற சிறு இன்பங்களின் நாட்டம் ஒழிந்துபோம். அருள்

இன்பத்தின் சுவையை அறிந்து கொண்டால் பிறிதொன்றிலும் நாட்டம் உண்டாகாது. இவ் அருள் இன்பத்தைப் பற்றி ஏதும் அறியாததினாலும், அப்படி ஒன்று இருக்கின்றதைக் கூட நம்பிக்கை கொள்ளாததினாலும் தான் புலன் இன்பமே பெரிதெனப் பேணிப் பேணி வீணிற் போய்க் கொண்டு இருக்கின்றனர் மாந்தர்கள்.

**“இது சமயம் அகம் இருந்து அருள் உண்மை அனகமுறுகின்றது.”** இதனை அகமிருந்துதான் காண முடியுமே அல்லாது, புறத்திலிருந்து காண (அனுபவத்தில் கண்டு கொள்ள) முடியாதாம். **நாம் அருட்பெரும் பதியின் இணைப்பால் அகமிருந்து இத் தேகத்தில் வாழ்க்கை நடத்திக்கொண்டு உள்ளதை உணர்கின்றோம்.** நம்பதி அருள் இன்ப நிறையுடையவராய் உடன் இருந்து கொண்டு விளங்குகின்றார். அவருக்கு இந்நிறை இன்ப நிலை இயற்கையானதாம். “அவரே இப்போது நாமாகி அருள் வழங்கிக் கொண்டு இருக்கின்றதை உணரும் போது,” இதுவே நமக்கும் அமைவதாய் அறிகின்றோம். ஆகவே அந்நிலை நின்று அருள் உணர்வோடு எதையும் பரநலம் கருதிச் செய்து வர வர, அருள் அனகமாய் விரிந்து நம்மில் சுத்த இன்ப உணர்வை நிரப்பி விடுவதாம். இந்த இன்பம் ஒன்றே உண்மையான இறை இன்பம்; நிறை இன்பம் ஆகும்.

நாம் நம்மை அறியாது கடவுள் வண்ணமாய் இருந்து வந்த காலத்தும், இப்பொழுதும், உண்மையில் நிறை இன்ப உருவினராகவே இருந்தோம்; இருக்கின்றோம். இனி எப்பொழுதும் இவ் இன்புருவில் திகழ்ந்து கொண்டிருப்பது திருவருட் சம்மதமே. **ஆகையால் நம்மைத் தேகிகளாய்க் கொண்டு, தேக போக இன்பமே உண்மை என மயங்கிக் கிடந்து, மடிந்து ஒழிதல் திருவருட் சம்மதம் அல்லவாம்.** ஆகவே இந்த அருள் இறை இன்பமே மெய் இன்பம் என்றும், இதனை “அகநிலை நின்று - அருள் அனுபவப் பெருக்கால் நிறையப் பெற்றுக் கொண்டு வாழ்தலே முறை என்று உறுதியாகக் கொள்ள வேண்டும் ஒவ்வொருவரும்.

# 42 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# ‘‘மெய்யின்பம்’’
# (பாகம்-2)

## ‘‘பசித்திரு; தனித்திரு; விழித்திரு!!’’

மேற்படி, அருள் இன்பத்தின் உண்மையைச் சிறிதும் புரிந்து கொள்ளாமல் தான், மனிதன் தேக நிலையில் இருந்துகொண்டு, உண்டி வகைகளில் எவ்வளவோ சுவைத்துச் சுவைத்து கண்ட இன்பமும் நிலைக்காது போனதை யோர்ந்து, உணவை வெறுத்துப் **பட்டினி கிடந்தும்,** தந்திர மந்திர யோக சாதனைகளால் ஆன்ம சக்தியை பெருக்கிக் கொண்டு, ஆனந்தமுற முயன்றும் தவறிப் போனான். இது போலப் பிறர் கூட்டுறவாலும், பிறச் சேர்க்கை வசதிகளால் இன்பம் காண முனைந்தும் அது கூடாது போக எல்லோரையும், எப்பொருளையும் விட்டு விலகித் **தனித்து இருந்தும்,** தவம் கிடந்தும், மனம் அடக்கி மோனத்திருந்தும் கண்ட இன்பம் நிலையாய் இருக்கவில்லை தனிமையிலே. தனிமையே இனிமை; ஏகாந்தம் சுகம்; என்பதெல்லாம் உண்மை அல்ல என்று கண்டு விட்டான். பின்னர் தூக்கம் சுகம் எனக் கருதி எல்லா வசதிகளோடும் துயின்று அதில் உண்மை இன்பம் இல்லை என கண்டு, துயிலாது **விழித்திருந்து** பார்த்தும், சுகம் காணாது, கண்மூடித் தியானித்தும் நிஷ்டை கூடியும் முடிவில் சமாதி நிலையில் பொருந்தியும் நிலையான இன்பம் காணாது போனான் மனிதன். ஆகவே பசித்தும், தனித்தும், விழித்தும் இருந்தால் பேரின்பப் பெரும் பதவி எப்படிக் கிடைக்கும் என்ற ஐயம் ஏற்பட்டு விட்டது மனிதனுக்கு.

நம் சுத்த சன்மார்க்க வள்ளலே இந்த மூவுரையைத் தான் உபதேச மந்திரமாக வழங்கி விட்டுள்ளார். **‘‘பசித்திரு தனித்திரு விழித்திரு’’** என்று ஆஞ்ஞையிட்டுள்ளார் இவ் உபதேசப்படி இருந்தால், அருட்பெரும் பதவி பெற்று ஆனந்தமாக வாழலாம் என்பது அவருடைய கருத்து; அவரே அனுபவத்தில் கண்டு வழங்கினதாகும்.

சுத்த சன்மார்க்க உண்மையினின்று நோக்கினால் தான் இந்த மூவுரையின் உண்மை கண்டு முழுப்பயனும் பெற்றுக்கொள்ள முடியும்.

**நம் வள்ளல் பெருமான் வாழ்ந்து கொண்டிருந்தது புற வாழ்க்கை அல்ல. உலகம் கண்டு கொண்டிருந்த அவரது**

**புறவடிவம் முழுமையானது அல்ல; அவர், "அகத்தே அருள் நிலையில் இருந்து அருள் ஒளியைப் பெருக்கி கொண்டு அனக நிறைவோடு வாழ்ந்து கொண்டிருந்தார்."** அவரது "அனக நிறை வடிவம் பேரொளி உடம்பாகும்." அதன் சிறு கூறே புற உடம்பாய் விளங்குவதாம். உலகத்தவர்க்கு அப்புற வடிவம்தான் தோற்றி நின்று சாதாரண மக்களுள் ஒருவராகக் கருதச் செய்திருந்தது. திருவருள் அவ் வடிவின் மூலமாக வெளியாக்கிய அற்புதச் செயல்களை அவர் புரிந்ததாகக் கொண்டு மிகவும் போற்றி வந்தது உலகம். உண்மையில் அவர் அருட்பெருஞ்ஜோதி பதியின் சம்பந்தத்தால், அகம் இருந்து அற்புத சித்திகள் எல்லாம் வெளிப்பட அருட்பிரகாச வள்ளலாராய் விளங்கி கொண்டிருந்தார் என்பதுதான் சத்தியம். **அகமிருந்து பெருகிய அருள் ஒளி நிறைவால், அவர் வடிவம் அருட்பிரகாசத் திருமேனியாய் விளங்கலாயிற்று. அது ஆண்டவரின் நிறை இன்ப வடிவமேயாம்.**

திருவருளால் நம் வள்ளல் தம்மை, இறைநிலையில் கண்டு கொண்டதால், அந்த இறைவனின் அருள் இன்ப இயல்பில் பூரிக்கலானார். அந்த அருட் பூரிப்பால், உடம்பின் அசுத்த மாயா இயல்புகள் மாறிச் சுத்த அருள் இயல்புகள் ஊறிட, அத்தேக வாழ்விற்குப் புற உண்டியின் தேவை அருகி ஒழிந்துவிட்டதாம். இவ் அனுபவம் ஓங்கும் போது உணவில் இச்சையோ வெறுப்போ உண்டாகாது. பசி உணர்ச்சி எழுந்தோறும் எழுந்தோறும், உட்பெருகும் அருள் ஒளியாம் அமுதம் வந்து சார்ந்து அப்பசியைத் தணித்து, உயிருடம்பில் அருள் ஒளி விளக்கத்தைக் கூட்டி விடுவதாம். ஆகையால் அந்நிலையில் அந்த பசி உணர்ச்சிக்கு புற உண்டி ஏதும் ஏற்காது பசித்துத் தான் இருக்க வேண்டி உள்ளதாம். மற்றபடி புசிப்பில் இச்சையோடு இருந்து கொண்டு பசித்திருக்கவோ, உள்ளொளியை அருளால் பெறாமல், பட்டினி கிடக்கவோ உரைத்ததல்ல இந்த உயர் உபதேசம்.

அடுத்து, **"நம் வள்ளல் ஒருவராய், அகமிருந்து நிறை ஒளி வண்ணராய்த் தனித்திருந்து, எங்கும் தன்னையே கண்டு வந்தது உண்மையாகும்."** அப்படித்தான் சன்மார்க்க நிலையுறுவோர் தனித்திருக்க வேண்டுமே அல்லாது, சாதாரண நிலையில் இருந்து கொண்டு தனித்துறைதல் மட்டும் போதாதாம்.

இறுதியாக, அருட் ஜோதி அனுபவத்தில் வாழ்கின்றவர்கள், சதா எக்காலும் அருள் ஒளியைப் பரப்பிக் கொண்டே, அவ் ஒளியால் ஐந்தொழில் இடையறாது விளங்கச் செய்து கொண்டே இருக்கின்றவர்களாவர். இவர்கள் எப்பொழுதும் உறங்குவதில்லை; விழிப்போடே இருப்பர்; மேலும் எக்காலும் இறவாது வாழ்ந்து கொண்டே இருப்பர்.

"மெய்யகத்தே நம்மை வைத்து விழித்திருக்கின்றாய் நீ, விளங்குக!! சன்மார்க்க நிலை விளக்குக!!" என்று நம் வள்ளலுக்கு அருட் ஜோதி ஆண்டவர் பணித்துள்ளதை அனுபவ மாலையில் காண்கின்றோம். இப்படியாகத்தான், "அருள் நிலை உற்றுப் பசித்தும், தனித்தும், விழித்தும் இருத்தல் வேண்டும்" என்பதே நமது அண்ணலார் ஆணை. இப்படி இருந்து பெறும் வாழ்வில்தான், மெய் இன்பம் தோற்றி, குன்றுதலும் மறைதலும் இன்றி, எப்போதும் விளங்கிக் கொண்டே இருக்கும் என்பது உண்மையாம்.

இந்த மேலான மெய் இன்ப வாழ்வு வழங்குதல் பொருட்டே, கடவுள் இப்பொழுது முதல் "அருட்பெருஞ்ஜோதியராக தனிப்பெருங்கருணை யோடு, என்றென்றும் நம் உள்ளமாம் சத்திய ஞான சபையிலே வெளிப்பட்டு விளங்கத் திருவுள்ளம் கொண்டு விளங்கி வருகின்றார்." இது அக ஞான சபையில் இருந்து அனுபவத்தில் பெற வேண்டி இருக்கின்றது. இந்த அக உண்மையை தெளிவித்தல் பொருட்டே, வடலூரின் கண், புறச் சின்னமாகச் சத்திய ஞானசபை என்ற ஒன்றை நிறுவி, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைக் குறிக்க, அந்த சத்திய ஞான சபையின் நடு பீடத்தில், அகண்ட தீபம் ஒன்று ஒளிவிட்டு எரிந்துகொண்டு பிரகாசிக்கும் படி அமைக்கப்பட்டுள்ளதாகும். அங்கு தீபச்சுடரைக் காணலாம்; அச்சுடருக்கு ஒளி கொடுக்கும் ஒன்றை, மற்ற எப்பொருட்கும், எவ்வுயிர்க்கும் ஒளியூட்டி வளர்கின்ற ஒன்றினை, நம் அகம் இருந்து ஒளியீந்து, அதனையே கண்டுகொள்ளச் செய்கின்ற ஒன்றையே நம் அருட்பெருஞ்ஜோதி பதியாகக் காண உள்ளோம்.

**"புற ஞானசபையில் தீப ஜோதியைக் காண்கின்றதோடு நம் அக ஞான சபையில் உண்மை அருட்பெருஞ்ஜோதியையே கண்டுகொள்ளவும் வேண்டும்."**

"நம் அருட்பெருஞ்ஜோதிபதி அருளும் ஒளியுமாய், அகமும் புறமும் கொண்டு விளங்குதல் போல, நாமும் அருள் நிலையிலிருந்து

ஒளியையே நிறை உருவாகக் கொண்டு சச்சிதானந்த அனுபவத்தோடு விளங்குதல் மெய்யின்ப வாழ்வாகும்.''

**அக அருள்நிலை யில்லாத புறவடிவம் நிலைக்காது; புறவடிவம் ஏற்காமல் அக அருள் மட்டும் விளங்காது;** இரண்டும் இணைந்த ஒன்றாய், அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் விளங்குதல் போல், மனிதன் அருளுடன் சுத்த ஒளியுடம்பு கொண்டு நிறை இன்ப நிலையில் விளங்கும் போதுதான் முழுமை பெற்று, மெய்யின்பில் திகழ்கின்றவனாக கொள்ளப்படுவான்.

அருட்பெருஞ்ஜோதிக் கடவுள்தானே, அகமிருந்து ஒவ்வொன்றுமாய் உருவேற்பதும், விடுவதுமாய் உள்ளார் என்பதை பலவற்றானும் கண்டு கொண்டுள்ளோம். அகமிருப்பது ஆண்டவரின் அருள் ஆற்றல். **அந்த அருள் ஆற்றலே தான் 1) பொருள் வடிவாக மாறி பரிணமிப்பதும், 2) உயிர் உடம்பாக ஆகி உடன் விளங்குவதும், 3) அருள் உணர்வாக விளைந்து தன்னையே கண்டு கொள்ளுகின்றதும் அறியப்படுகின்றன.**

ஆகவே, அகமான அந்த அருள் வெளியின் இன்றியமையாத, அருள் அனுபவத்திற்கு தேவையான பகுதியாக, இந்த மனித தேகம் திருவருளாலே ஆக்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றதாய் அறிகின்றோம். இந்த உடலாகிய பகுதியை புறக்கணித்துவிட்டு, அகத்தில் ஒன்றிப்போய் கிடப்பது இன்பானுபவ வாழ்வு நிலை என்று கொள்ள முடியாதன்றோ?! ''உடல் வாழ்வில், விழிப்பு நிலையில், அறிவு விளக்கத்தோடு இருக்கும்போதுதான், ஒருவனுக்கு இன்பானுபவம் விளங்குவதே அல்லாமல், அவன் உடலை மறந்து - உணர்வை மறந்து, உறக்க நிலையில் (சுழுத்தி அவத்தையில்) கிடக்கும்போது இன்பானுபவதிற்கு இடமில்லையாம்.'' அதேபோன்று, உயிர் உடம்பையே இழந்துவிட்ட இறப்பு நிலையில் ஒருவன் இன்பம் அனுபவிக்கிறான் என்பது பொய்யே. உறக்கத்தில் அல்லது சமாதியில் இருந்து விழித்து எழுந்த பின், உடல் உயிர் விளக்கம் பெற்ற போது தான், அந்த உறக்கத்தில் அல்லது சமாதியில் பெறப்பட்டிருந்த இன்பத்தைப் பற்றி ஒருவாறு கூற முடிகின்றதாம். ஆகையால், இன்பானுபவத்திற்கு ஒருவன், தனது உயிர் உடம்போடு வாழ்ந்து கொண்டிருப்பது மிக மிக முக்கியமாம். முன்பு, உடலை மறுத்து, ஆன்ம நிலையில் பொருந்தி, உணர்வு மறையாத துரிய அனுபவத்தில் இருந்தவர்கள், அந்நிலையில் சொல்லரிய ஆன்ம சக்தியையும் சுகா

அனுபவத்தையும் பெற்று மகிழ்ந்திருந்தனர். அச் சுகானுபவமே, ''மெய்யான நித்திய இன்ப நிலை'' என்று எண்ணிக் கொண்டு அதிலேயே நிலைத்து விட துணிந்தனர்.

அப்படி இருந்த போதுதான், தேக ஒழிவாகிய இறப்பு வந்துற்ற காலத்தில், மேற்படி இன்பானுபவம் மறைந்து ஒழிந்து போய் விடுகின்றதாம். ஆகவே, அவர்களின் ஆன்ம சுகம், மெய்யின்பமாக விளங்கியும் கூட, நிலைத்து விளங்கிக் கொண்டிருக்க வழியில்லாமல் போய் விட்டதாகும். ''**இந்த ஆன்ம இன்ப நஷ்டத்தையே, ஆன்ம இன்ப லாபம் என தப்புக் கணக்கு போட்டு விட்டனர் முன்னோர்கள்.**''

அக நிலையிற் பொருந்தி கண்ட ஆன்ம இன்பம் மெய்யானது தான் எனினும், அந்த மெய்யான இன்பம் நிலைக்காது பொய்த்து போனதே!!

நித்திய ஆன்மாவுக்கு நித்தியானந்த அனுபவம் அல்லவா மெய்யின்ப வாழ்வாகும்!! வாழ்வு அநித்தியமாய்ப் போனால், இன்பம் மறைவுற்றுப் போனால், அது ஆன்மாவுக்குப் பெருமை தரும் மெய்யான லாபம் என்று எப்படிக் கூற முடியும்?! எனவே, அந்த இன்பம் மெய்மை பெற்று விளங்காதது, பெரு நஷ்டமே ஆகும்.

இன்று திருவருள் பூரணத்தால் நம் வள்ளற் பெருமான் மெய் இன்பம் கண்டதோடு, அதனை ஒழிவற்ற மெய்யாக விளங்கும்படி மரணமில்லாப் பெருவாழ்வையும் பெற்றுக் கொண்டு விட்டார். இந்த அழிவில்லாப் பேரின்ப வாழ்வே, ஆன்மாவுக்கு உண்மையான மெய்யின்பமாகிய ஆனந்தம் என்னும் லாபமாம். அந்த லாபத்தோடே சிற்சபையாம் ஞான தேகத்தையும், பொற்சபையாம் சுத்த தேகத்தையும் சொந்தமாய்க் கொண்டு வாழ்ந்து வருகின்றார்.

- சுவாமி சரவணானந்தா

## 43 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### ''மரணம் மனிதனுக்கு இயற்கை அல்ல!!''

''சாகாத கல்வியே கல்வி, ஒன்றே! ''சிவம் தான்!'' என்று அறிந்த அறிவே தகும் அறிவு, மலம் ஐந்தும் வென்ற வல்லபமே தனித்த பூரண வல்லபம்''

வேகாத காலாதி கண்டு கொண்டு எப்பொருளும் விளைய விளைவித்த தொழிலே மெய்த் தொழிலதாகும் இந் நான்கையும் ஒருங்கே வியந்தடைந்து உலகமெல்லாம்

மா காதல் உற, எல்லாம் வல்ல சித்தாகி, நிறைவான வரமே! இன்பமாம் மன்னும் இது நீ பெற்ற சுத்த சன்மார்க்கத்தின் மரபு என்று உரைத்த குருவே!!

தேகாதி மூன்றும் நான் தரும் முன் அருள் செய்து எனைத் தேற்றி அருள் செய்த சிவமே!! சிற்சபையின் நடு நின்ற ஒன்றான கடவுளே!! தெய்வ நடராஜ பதியே!!

- நடராஜபதிமாலை, திருவருட்பா, திருவருட் பிரகாச வள்ளலார்.

இந்த பாடலில் சுத்த சன்மார்க்கத்தின் முழு விளக்கமும், அதன் கொள்கை கோட்பாட்டு அனுபவப் பயனும் குறித்து தெளிவு செய்யப்பட்டுள்ளன. இந்நெறி, மற்றைய உலக மார்க்கங்களைப் போல, புறக் கொள்கை கோட்பாடுகளையும், அனுஷ்டான விதிமுறைகளையும் பற்றி, வீண் கட்டு திட்டங்களைக் கூறிவிட்டு அக ஒற்றுமைக்கு ஊறு செய்வது அல்லவாம். "இது ஒன்றான அகநிலை யினின்றே, தயவோடு அனகமுற விரிகின்றதாலே, எல்லோரும் ஒத்து வாழவும், நிலைத்த இன்பம் கொண்டு ஓங்கவும் வழி செய்து கொடுப்பதாம்."

கடவுள் - ஒன்றான அருட்பெரும்பதி; உலகுயிர் எல்லாம் அவருக்கு உரியன; அவரது உடைமை; ஆகையால், உயர்ந்த அறிவு படைத்த உயிரினம் ஆகிய மக்கள் தமக்குத் தனித் தலைமை பெரும் பதியாய் விளங்கும் அந்த ஆண்டவரை போற்றி, அருள் அடைந்து உய்ய வேண்டும். இது திருவருள் ஆணை. இதனை அடிப்படையாய்க் கொண்டு, அகம் இருந்தே வழங்கப்படுகின்ற அருட்பெருநெறி, சுத்த தயா சன்மார்க்கம் ஒன்றேயாகும்.

இவ் உண்மைகளை எல்லாம் அறியாது, மனோ கற்பனையால், பலவாகிய கடவுட் கொள்கைகளையும், உலகியல் வாழ்க்கை முறைகளையும், கட்டு திட்டங்களையும் வகுத்து மக்களினத்தையே பலவகையிலும் பிரித்து, ஒருவருக்கொருவர் எதிர்ந்து கொள்ளவும் செய்துவிட்டன சமய மத மார்க்கங்கள் எல்லாம். அவைகளால் உலகை ஒன்றுபடுத்தி வாழ்விக்க முடியாது என்பதை எல்லோரும் அறிந்து கொண்டுள்ளோம். அவைகளின் துணையால் பொதுநலம் உண்டாகாது.

அவை ஒவ்வொன்றும் தன்னளவில் எவ்வளவு சிறந்ததாக இருக்கலாம். அவற்றை ஈன்ற தலைவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவோ சிறந்தவர்களாக இருக்கலாம். அவைகளைத் தீவிரமாய்ப் பின்பற்றி வாழ்கின்றவர்களும் எத்தனையோ நன்மைகளையும் பெற்று இருக்கலாம். அவ்வளவு இருந்தும் பொதுப்பட நோக்கும்போது இன்றைய உலகுக்கு, எல்லோரும் ஒத்து வாழ்ந்து உயர் இன்பம் அடையத்தக்க சிறந்த ஒரு வாழ்க்கைமுறை தேவையாய் இருக்கின்றது. அது ஒன்றான அருட்பெரும் பதியிடத்திருந்து வெளிப்பட்டு யாவரையும் தன் வழியில் நடந்து கொள்ளச் செய்ய வேண்டியுள்ளது. இந்த அருட்பெரும் வாழ்க்கை முறையால் உலகெல்லாம் அமைதியும் ஆனந்தமும் பெறுவது திண்ணம்.

இந்த "அருள்நிறை வாழ்க்கை முறைதான், சுத்த சன்மார்க்கம் ஆக இங்கு பேசப்படுகின்றது." இது சமய மத நெறிகளைப் போன்ற ஒன்றல்ல. "இது அகிலமாம் அன்பைப் போதிப்பது; சுத்த தயவை வளர்ப்பது; நல்லின்ப ஒற்றுமை வாழ்வை ஓங்க செய்வதுமாம்." ஆகையால், எம் மதத்தினரும், எக் கொள்கையினரும், எச் சமயத்தவரும் உலகப் பொது நலனை உத்தேசித்து இந்த வாழ்க்கை முறையை, **"அனக வாழ்வை மேற்கொள்ள வேண்டுவது அவசியமாகும்."**

இது சமயம் மனிதனுக்கு உண்மை அறிவு ஓரளவு அதிகரித்து உள்ளது. இருந்தும், புலபோக இச்சை மிகுதியால், அந்த உண்மை அறிவு கொண்டு வாழ முடியாதவனாய் அவஸ்தைப் படுகின்றான்.

**"தயா ஒழுக்கமும் சத் விசாரமும் மேற்கொண்டால், நலம் பெறலாகும்."** மெய்யறிவினால் மூட நம்பிக்கைகள் ஒழியும்; அவை ஒழிந்தால் பழையனவாகிய பழக்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கழிந்து போம். பின்னர் உண்மை உளம் கொண்டு நல்வழியில் வாழ வாழ எங்கும் நலம் பெருகும்.

ஆகவே, இந்த சுத்த சன்மார்க்கத்தை, ஏதோ ஒரு சாராருக்கு மட்டும் அளிக்கப்பட்டதாகக் கொள்ளாது, உலகர் யாவருக்கும் வழங்கப்பட்டதாகக் கொண்டு பெரும் பயன் பெற வேண்டுவது கடவுள் சித்தமாகும். இனி, மேற்குறித்த செய்யுளின் பொருள் விளக்கத்தை நோக்குவாம்;-

“சிற்சபையில் நடு நின்ற”

“ஒன்றான கடவுளே-”

“தெய்வ நடராஜபதியே-”

“இது முழு முதற் கடவுளின் பூர்ண விளக்கமாகச் சத்விசாரத்தால் கண்டு, அத்துவித சாத்திய நிலை அனுபவத்தில் விளங்குவதுமாம்.” இதனை ஒருவாறு தெளிவு படுத்துவாம். **நமது சிற்சபையின், ஆன்ம அணுவின், இதயத்தில் அக நடுவில், அந்தரத்தில் தான் நம் ஒன்றான அருட்பெரும் கடவுள் மன்னி நின்று ஒளிர்கின்றார்.** இந்தப் பதியின் சூழ் ஒளியால் உலகமெல்லாம் காரியப்பட்டுக் கொண்டே உள்ளனவாம். இப் புற நிலையே பதியின் திருநடனச் செயலாக உரைக்கப் படுகின்றதாம்.

ஆகவே, நமது ஆன்ம அணுவில் மன்னித் திகழும் கடவுள் ஒருவரே, சூழ் உலகெல்லாம் விளங்க, அணு முதல் அண்டமெல்லாம் கறங்கத் தன் அருள் நடனச் செயலைப் புரிந்துகொண்டே உள்ளாராம்.

எனவே, “நம் சிற்சபேசர் தன் பூர்ண ஆற்றலை, அகண்ட வெளி முழுதும் நிரப்பி நின்று ஆள்கின்றார்” என்று அறிகின்றோம். இந்த அகம் புறம் நிறைந்த நிலையே முழுமுதற் கடவுளின் பூர்ண வண்ணமாகும். “அகமும் புறமும் பிரித்துக் கொள்ளப்படாது. அகவடிவம் தான், கடவுள் வடிவம் என்றும், புறம் - மாயை என்றும் கூறுதல் கற்பனை சூதே.”

கடவுள் ஒருவரே என்றால், நம் ஒவ்வொரு ஆன்மாவிலும் தனித்தனியாய் விளங்குவதாக அறியப்படுகின்றதே, ஆதலால் கடவுள் பலவாகக் கொள்ள நேருமே என்றால், அப்படி அல்ல; ஒன்றான கடவுளே பூரணமாக இருந்து, நாமும் அதுவும் கலந்து, அகம் இருந்து நோக்கும் போது தான் எங்கும் நிறைந்திருப்பது விளங்குகின்றது. அந்த அகநிலை விட்டு புறத்தில் நோக்கப்படும் போது எல்லாம் அழிவுறுவனவாகவே அறிகின்றோம். அன்றியும், ஆன்மாக்கள் அணுத்துவமாய் அருகி இருத்தலின் புறத்தே காணப்படுவன அல்ல.

1)“உடலை” மட்டும் “உருவாகக்” காண்கின்றோம்.

2)“உயிரை” உடல் இயக்கச் சக்தியாய் - “அருவுருவாய்க்” காண்கின்றோம்.

3)“ஆன்மாவை,” ஓர் உயிர் உடம்பில் இருப்பதாக அறிவு கொண்டு அறிய மட்டும் முடிகின்றதால் அது “அருவமாம்.”

“இவ் அறிவுக்கு ஆதார நிலையம், நம் சிரநடுஒளி அணுவாய் இருக்கின்றது.”

“இவ் ஒளி அணுவில் தான் கடவுள் உண்மை அறியப்படுகின்றது.” ஒரு கடவுள் தானே எங்கும் பூரணமாய் இருக்கின்றதால், “நம் ஒளி அணுவாகிய ஆன்மாவில் முழுமையாக கண்டு கொள்கின்றோம்.”

“இந்த ஒரு கடவுளே, இடம் - காலம் கடந்து, எங்கும் என்றும் விளங்குகின்றார் என்ற உண்மையும் நாமே உணர்கின்றோம்.”

ஆகவே, “எல்லா உலகத்து எல்லா உயிர்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும் நம் பதி ஒருவரே உண்மைக் கடவுள் என்பது சத்தியமாம்.”

இந்த நமது ஒன்றான கடவுள் தானே, தனது பேர் உண்மையையும், பெரும் திறலையும், அருட் பெருமையையும் நமக்குக் காட்டிக்கொடுத்து, அனுபவமுறச் செய்ய வேண்டிப் புறத்திலே, ஓர் ஒரு காலத்திலே, ஓர் ஓர் இடத்திலே, ஓர் ஓர் உயிரிலே, ஓர் ஒரு பொருளிலே தன் ஏகதேச உண்மையை சிறிது சிறிது வெளிப்படுத்தி வெளிப்படுத்தி மறைக்கின்றார். அதனை அங்கு அங்கு கண்டும், உணர்ந்து தெளிவு பெறுகின்றோம் நாம்.

ஆகவே, நம் அகம் வளர் கடவுள் ஒருவரே என்றும் அவர் தன் சாயையாக பிற இடங்களில் தோற்றிப் பயன் கொள்ளச் செய்கின்றார் என்றும் தெளிகின்றோம்.

## “குருவாகித் தோன்றல்”

ஆன்மாவின் அகத்திலே அருவ அருட்சக்தியாகியுள்ள ஒன்றை, அந்த ஆன்மா எப்படி அறிந்து கொள்ள முடியும்?!

“அந்த அருள் அறிவினால் தான் அறிந்து கொள்ள முடியும்!!” அவ் அறிவே அருட் குருவாக உடனிருந்து காட்டிக் கூட்டி வைக்க வல்லதாம். இது பக்குவம் ஆகிய “விஞ்ஞானகலர்” ஆன்மாவுக்கு ஏற்படுகின்றதாம்.

மற்ற, "பிரளயாகலர், சகலர்" ஆன்மாக்களுக்கு, இந்த அருள் அறிவை போதிக்கும் குரு, "சூக்கும, தூல மனித உருவிலும்," நூல்கள், பொருள்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் என்ப.

எனவே, அருவமாய் சிற்றம்பலத்திருக்கும் ஒன்றான கடவுள்தானே இந்தக் குருக்களின் வடிவாக தோன்றி அருளுபதேசம் புரிகின்றார் என்று அறிதல் கூடும்.

## "குருவே சிவம் ஆவது"

"உபதேசிக்க வரும் குருவின் உண்மை வடிவம், அந்த உபதேசப் பொருள் வண்ணமாகவே இருக்கின்றது." அப்பொருள் பரம்பொருளாகிய சச்சிதானந்த பதியே ஆகும், இதனையே சிவம் என்று கூறப்படும். ஆகையால், குருவால் தான், அவர் வண்ணம் ஆகிய கடவுளைக் காண வல்லவன் ஆகிறான் ஒரு மனிதன்,

இப்போது, நம் வள்ளலுக்குச் சிற்சபேசரே அருட் குருவாக எழுந்தருளி, அகத்தினின்றே யாவையும் ஓதாது உணர்த்தி உபதேசித்து விட்டதை இப் பாடலில் காண்போம். சுத்த சன்மார்க்கத்தின் மரபு அல்லது வாழும் முறைமை என்ன என்பதைத்தான் நன்கு எடுத்துக் கூறியுள்ளார். இதில்;

1)"சாகாத கல்வி"

2)"ஒன்றே சிவம் அதுதான்!!" என்று அறிகின்ற அறிவு தகும் அறிவு.

3)"மலம் ஐந்தும் வென்ற வல்லபமே தனித்த பூரண வல்லபம்."

4)"வேகாத காலாதி கண்டு கொண்டு எப்பொருளும் விளைய விளைவித்த தொழிலே மெய்த்தொழில்."

இந் நான்குமே சுத்த சன்மார்க்கம் மேற்கொண்டோருக்கு வகுத்து அளிக்கப்பட்ட வாழ்க்கை முறையாம். இவைகளைச் சற்று விரிவாகக் காண்போம்.

1)"சாகா கல்வி;-"

சாதாரணமாக கல்வி என்றால் அறிவு விளக்கம் அடையப் பெறுதலாம். "அகமறைந்து கிடக்கும் மெய்யறிவை வெளிப்படுத்திடப் பெறல் உண்மை கல்வி என்ப." நம் ஆன்மாவினுள் மறைந்துகிடக்கும்,

பேரருள் பெரும் சக்தியை வெளிப்படுத்தப் பெறுவதால், அது இவ்வுடலில் நிரம்பி இறப்பையே நீக்கி விடுகின்றதாம். இதுவே, அருட் கல்வியின் பெரும் பயனாக உள்ளது. இதுவே சாகாக்கல்வி எனப்படுவது.

2)"ஒன்றே சிவம் தான் என்று அறிகின்ற அறிவே தகும் அறிவு."

அந்தச் சாகாக் கல்வியை கற்பதற்குத் துணையாய் "சத்விசாரம் செய்ய வேண்டியது முதற்கடமை." இதனால், ஆன்மாவைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் ஓரளவு அறியப்படுகின்றதாம். "ஒன்றான கடவுள் அல்லது சிவமே உண்மையில் எல்லாமாகி உள்ளதை அறிகின்றான்." அப்படி எல்லாம் தானாய் இருப்பதால், அந்தக் "கடவுளே நாமாகவும் அறியப்படுகின்ற இப்போது, இந்தக் கடவுள் தான் என்று அறிகின்ற அறிவே தகும் அறிவு, மெய்யறிவு எனத் தீர்மானித்துக் கொள்ளுகின்றோம்."

3)அந்தக் கடவுள் "தான்" என்ற முடிவுக்கு வந்து விட்டால் மட்டும் அதுவாக ஆகிவிட்டோமா?! இல்லை!!

அது, "தான்" என்று, அறிவால் தான் அறியப்பட்டு இருக்கின்றதே ஒழிய, அனுபவ வாழ்வில் பெற்று விடவில்லையாம்.

அதற்கு, அந்தக் கடவுளுக்கும் தனக்கும் இடையில் மறைத்து தடுத்துக் கொண்டிருக்கின்ற மலம் ஒழிக்கப்பட வேண்டியுள்ளதாம். இந்த மல மறைப்பு ஜீவதேக சம்பந்தத்தால், "ஆணவம், மாயை, மகா மாயை, திரோதாயி, கன்மம் என்ற ஐவண்ணமாகச்" சூழ்ந்துகொண்டு இருக்கின்றதாம்.

இதனால் உண்மையில் இருக்கின்ற, "கடவுள் தான்" என்ற உணர்வு மறைவுற்று, "தேகம் தான்" என்றும், இதில் உண்டாகின்ற மாயா உணர்வு அனுபவங்களும் தோற்றங்களும், இதில் செயல்படுகின்ற மூவினைகளும் "தனது" என்றும் கொள்ளப்படுவதே ஐம்மல ஆற்றலாக இருக்கின்றதாம்.

**அருள் அறிவால் இந்த ஐம்மல ஆற்றலைக் கெடுத்து அக வடிவில் நிற்பதே அது "தான்" ஆக நிற்கும் உபாயமாம்.** இதுவே, மூன்றாவதாக, "மலம் ஐந்தும் வென்ற வல்லபமே தனித்த பூரண வல்லபம்" ஆக மொழியப்பட்டதாம்.

4)அருள் ஞானத்தால் மல மறைப்பை நீக்கிக் கொண்டு, "தான் - அக் கடவுள்" என்ற உண்மை உணர்வில் பிறழாது நின்று விட்டால் முடிந்துவிட்டதா?! இல்லை. அந்தக் கடவுள் தனித்து சும்மாவா இருந்து கொண்டு இருக்கின்றார்?! இல்லை! சதா, உலக உயிர்த்திரள் எல்லாம் இன்படைய திருநடனம் புரிந்து கொண்டே இருக்கின்றார்.

ஆகையால், "அது - தானாக இருக்கும் ஒருவனும்" சதா உலகுயிர்க்கு அன்பு இன்பம் விளைவித்துக் கொண்டே இருத்தலே முறையாம். இதையே, "வேகாத காலாதி கண்டு கொண்டு எப்பொருளும் விளைய விளைவித்த தொழில்," என்று கூறப்படுகின்றது.

யாதெனில், "வேகாக்கால், போகாப்புனல், சாகாத்தலை" என்ற மூன்றால், ஒவ்வொரு ஆன்மாவிற்கும் (முக்கியமாக நம்மைச் சூழ்கின்ற மனிதர்களுக்கு) 1.உயிர் விளக்க ஆற்றலும், 2. உயிர் உடம்பு விளக்கப் பொருள்களும், 3.மெய் இன்பம் உண்டாக்கும் அறிவும் வழங்கிக் கொண்டே இருப்பதுதான் இந்தக் "கடவுள் மனிதனாகிய சுத்த சன்மார்க்கியின்" தொழிலாக விளங்குவதாம்.

ஆகவே இவை நான்கையும் கொண்டு வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதே சுத்த சன்மார்க்க மரபு எனப்படுகின்றது. இந் நெறியால் உலகமெல்லாம் பேரன்பில் பிணைக்கப்பட்டு பேரின்பம் விளங்க வேண்டும் என்பதுவே கடவுள் ஆணையாம்.

இந்த உண்மை நெறியைத்தான் "மெய்யறிவே குருவாகி நின்று" நம் வள்ளலாருக்கு உபதேசித்தது. இவ்வுண்மை அறிவிக்கப்பட்டதும், தன் உடல் - பொருள் - ஆவியை எல்லாம் அந்த அருளுக்கே அடைக்கலமாய்க் கொடுத்து விடுவதற்குள்ளாகவே, அருள்பாலித்து அந்தக் "கடவுள் அனுபவத்தையே" வழங்கி விட்டதாம். ஆம். அது முதலாக இவர் அருட்பிரகாசர் ஆகி முத்தேக சித்தியோடு (சுத்த, பிரணவ, ஞான தேகம்) இருந்துகொண்டு, இந்த சுத்த சன்மார்க்கப் பெரும் பணியைப் புரிந்து கொண்டேயுள்ளார் என திருவருளால் உணர்த்தப்படுகின்றோம் நாம்.

எனவே, நம்மில் மறைந்திருந்து ஆண்டுவந்த ஆண்டவர், அருட்குரு வடிவாகி, இம் மார்க்க உண்மையை உபதேசித்து, நம்மையும் தன் பால் சேர்த்துக் கொண்டு, சுத்த சன்மார்க்க வாழ்வில், நமது அருட்பிரகாச

அண்ணலார் தலைமை பூண்டு நடத்த நம்மையும் உடன் வாழ்விக்கின்றார் என அறிந்து கொள்ளுகின்றோம்.

"இந்தச் சுத்த சன்மார்க்க வாழ்க்கை முறை, உலகில் எல்லோருக்கும் நல்வாழ்வு அளிப்பதாகும்." மதச்சார்பற்ற நிலையில் எல்லோரும் ஏற்றுப் பயன் கொள்ளல் அறிவுடைமையாகும். இயற்கையின் நியதியாலும், தர்ம நியாயப் பொது நோக்காலும், அகிலமாம் சகோதரத்துவத்தாலும் எல்லோரும் நல்லின்ப வாழ்வு பெற உரிமை உடையவர்களே ஆவார்கள்.

ஆகையால் இந் நெறிப்படி வாழ்ந்தால் தான் நாம் ஒவ்வொருவரும் கடமையைச் செய்கின்றவர்கள் ஆவோம். இதுவே நமக்கெல்லாம், ஒன்றான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தனிப்பெருங் கருணையோடு ஆணை செய்திருக்கின்ற முதல் கடமையாகும். அறிந்து ஏற்று, அருள் அடைந்து, உய்வு பெறுவோமாக!!

- சுவாமி சரவணானந்தா

"தயவு"

## 44 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "திருவருட் பிரகாச வள்ளலாரின் உண்மை நிலை"

முதலில் நம் வள்ளலார், இராமலிங்கமாக விளங்கினர். அப்போது "அவருடைய உண்மை வடிவம் ஆத்ம அணுவாக தான் இருந்தது."

"இராமலிங்க ஆத்ம மணி இயற்கையிற்றானே அருளொளி கொண்டு வெளிப்பட நின்றது."

அதனால் அவ் அருளுக்கு உரிய தெய்வப் பண்புகள் பல அவருடைய பிள்ளைப் பருவத்தில் இருந்தே ஒளிவிடலாயின. இக்காரணத்தால், "உயிரிரக்கம், ஓதாது உணரும் உண்மை ஞானம், உயர் ஒழுக்கம்" முதலியன இவர் உள்ளத்தின் உண்ணின்று வெளிப்பட்டு, தேக கரணேந்திரியங்களின் ஆறாக காரியப்படலாயின.

**"திருவருள் வயத்தான் தன் உண்மையாகிய ஆத்ம ஞானம் பெற்று நின்று, எவ்வுயிரும் தன்னுயிர் ஆக மெய்ப்பட விளங்கக் கண்டு, எவ்வுயிர்க்கும் இரங்கும் தயவே தன்**

**உணர்வாகப் பெற்றார். இவையே உயிர் அனுபவமும், அருள் அனுபவமுமாக விளங்கின.''**

''இவற்றால் எவ்வுயிருக்கும் உயிராய் இருந்து வாழ்விக்கின்ற சர்வ ஜீவ தயாபரனின் அனுபவமும் இது என வெளிப்பட்டது.''

''மேற்குறித்த தெய்வானுபம், தான் ஆத்ம வடிவிலிருந்து, தனக்குரிய தயா சக்தியை வெளிப்படுத்திக் கொண்டபோது, தான் கடவுளோடு ஒன்றுபட்டு,'' விறகில் தீ போலும், பாலில் கலந்து மறைந்து நிற்கும் நெய் போலும் இருக்க, இருந்து, **''தானும் கடவுளும் ஒன்றுபட்டு இருக்கும் உறவைத் திடமாக மறவாதிருத்தி, தீவிர தயா உணர்ச்சியைத் தூண்ட, தன்னுள் மறைந்து கிடந்த தெய்வசக்தி கண்கூடாக, கைக்கனியாக பெறப்பட்டது.''**

இவ் அனுபவம்,

''விறகில் தீயினன் பாலில் படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்
உறவு கோல் நட்டு உணர்வுக் கயிற்றால்
முறுகி வாங்கிக் கடைய முன் நிற்குமே''

- என்ற தேவாரத்தால் குறிக்கப்படுகின்றது. இதன் உண்மை யாதெனில், நமது ஆன்மாவில் கலந்து மறைந்துள்ள கடவுள் சக்தியானது, விறகினிடத்து நெருப்பும், பாலினிடத்து நெய்யும் மறைந்து கிடப்பதே போல், ''நம் ஆத்ம மணி இடத்து அருட்பிரகாசம் ஒளிந்து நிற்கின்றது.''

விறகில் மறைந்துள்ள தீயை, கோல்கொண்டு கடைவதால் வெளிப்படுகின்றது. இது அரணி கடைதல் எனப்படும். இதுபோல், ''ஆத்ம மணி இடத்துள்ள, அருளொளி தயா முயற்சியினால் வெளிப்படுகின்றது.'' இரண்டாவதாக, பாலில் உள்ள நெய் எப்படி வெளிப்படுவது எனில், பாலைக் காய்ச்சி, பிறையிட்டாற்றி, மத்தை நட்டு, கயிற்றான் சுற்றி, நன்கு கடைய, வெண்ணையாய் வெளிப்படுவது என்க.

இதேபோல், நமது ஆத்ம மணியின் கண் அமைந்துள்ள அருட்ஜோதியன் ஆகிய பெருமான், ஆன்மாகாசமாகிய பாலை, சத்விசாரமாகிய சுத்த அக்கினியால் காய்ச்சி, முன் பாலினிடத்து பெற்ற சிறிது தயிரை அக் காய்ச்சி ஆறிய பாலில் பிறையிட, அப்பால் வெண்ணெய் கலந்த தயிராக மாறி விடுகின்றது.

அதாவது "சத்விசாரத்தினால்" பெற்ற ஆன்மாவின் இடத்து தயா உணர்ச்சி ஆகிய மோரைச் சிறிதே சேர்க்க, தயா வண்ணம் ஆகிய, தெய்வ சக்தி கொண்ட ஆத்மானுபவம் என்னும் தயிராக விளங்கும். இந்த, அருட்ஜோதிப் பெருமானை அகத்தில் கொண்டிலங்கும் "ஆத்மானுபவம் தான்" வெண்ணெய் கலந்த தயிராக இருப்பது. "இவ் ஆத்மானுபவத்தில் இருந்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை கொண்டு, தயா உணர்ச்சி நிரம்பி வாழ, அகத்தில் இருக்கும் அருட்பிரகாசம் வெளிப்பட்டு, இவ் அசுத்த கரண மாயா தேகத்தை, சுத்த ஜோதி தேகமாக மாற்றித் தெய்வ அனுபவம் வழங்குகின்றதாம்."

இதுதான் தயிரில் கலந்த வெண்ணையை (ஆன்ம) உறவாகிய கோலை நன்கு நாட்டி (தயா)உணர்ச்சி ஆகிய கயிற்றினால் சுற்றி, தீவிர வாழ்க்கையாகிய, "வாங்கிக் கடைதல்" செய்யும்போது (கடவுள் அருள் வடிவாகிய) வெண்ணெய் தெருளத் திரட்டிக் கொள்ளப்படுகின்றது என்க.

எனவே, "நம் ஆத்ம மணியிற் கரந்து நிற்கும் அருட்ஜோதிப் பெருமானை, அவ் ஆன்ம நிலையினின்று தயா முயற்சியினால் வெளிப்படுத்தி கொள்ள வேண்டும்" என்பதாம்.

மேற்படி, அருட்ஜோதி சக்தி ஆன்ம மணியினின்று வெளிப்படும்போது இத் தேகம் இறவாப் பேரின்ப வடிவாக ஆகிவிடுகின்றது. இதுவரை, ஆன்மா, கட்டை போன்றும், பால் போன்றும் தன் உட் பொருளாகிய, மாமணிச் சோதியனை, விறகில் தீயை, பாலின் நெய்யை காரியப்படுத்திக் கொள்ளாது இருந்ததால் இறந்து, செயலற்று, தோற்றமின்றிக் கிடந்ததாகும்.

**"உண்மை மனிதன் ஆத்ம வடிவன் ஆதலின், மாமணிச் சோதியன் வெளிப்படாத வரை, ஆத்ம அணு செயலற்றுக் கிடந்தது. உண்மை மனிதன் உயிரற்றுக் கிடந்தவனே!!".**

ஆதலின், **"தெய்வ உணர்ச்சிக் கொண்டு ஆத்ம வடிவில் நிற்பவன் தான், உயிர் பெற்று எழுந்தவன். இவ் அருள் அனுபவம் பெற்ற உண்மை வடிவம் தான், இறந்தவன் எழுப்பப்பட்டவன் கொண்ட திருவுரு."**

இதற்கு சுத்த சன்மார்க்க அனுபவ பிரமாணம்,

"என்னே உலகில் இறந்தார் எழுதல் மிக
அன்னே அதிசயம் என்று ஆடுகின்றார் -இன்னே
**"திரு அம்பலத்தான் திரு நோக்கம் பெற்றோர்க்கு"**
**"உரு அம்பலத்தே என்று உன்."**

என்ற அருள் வெண்பாவால், "இவ்வுலகில் எவன் ஒருவன் அருட்பெருஞ்ஜோதி அம்பலவாணனைக் கண்டு கொள்ளுகின்றானோ, அவன் அதே க்ஷணத்தில் உயிர் பெற்று எழுந்து, மெய்யறிவுப் பீடமாகிய அம்பலத்திலே அருட்ஜோதி கொண்ட ஆன்ம மணியாய் விளங்குகின்றவன் ஆகின்றான்." இந்த உண்மையை அனுபவப் பூர்வமாகப் பெற்ற நம் இராமலிங்க ஆத்ம ஜோதி மணி "திருவருளினால் தன் அக வடிவை, அனக வடிவமாக மாற்றப்பட்டனர்." அப்போது, அனக வடிவாகிய தேகம் அருட்ஜோதி கொண்டது ஆதலின், "இராமலிங்க ஆன்ம ஜோதி மணி, இப்போழுது அருட்பெருஞ்ஜோதி மயமான அருட்பிரகாச வள்ளன் மணியாக விளங்குகின்றார்." பிரணவ ஜோதி ஆத்ம அணுவிலிருந்து அருட் பிரணவ ஜோதி சக்தியை வெளிப்படுத்தித் தன் வடிவத்தைப் பிரணவ ஜோதி தேகமாக, அருவுருவாக ஆக்கிக் கொண்டார் நம் வள்ளலார். இதுவே பேரின்பப் பெருஞ் சுக வடிவமாகும்.

## "திருச்சிற்றம்பலத் தந்தையார் தர்மச் சாலைக்கு எழுந்தருளும் உண்மை" ;-

"நமது ஆத்ம அணுவே கடவுள் வெளிப்படும் ஆலயமாக உள்ளது." இவ் ஆத்ம அணு, அருள் உணர்வு பெற்றுக் கொண்டபோது, இதற்கு உள்ளிருக்கும் ஆண்டவர் சக்தி வெளிப்படுகின்றது. ஆகையினால், **"அருட்சக்தி காரியப்பட்ட ஆத்ம அணுவே, தர்மச் சாலையாக, நமது அருள் அம்பலவாணன், சிற்றம்பலத் தந்தையார் எழுந்தருளிக் காட்சி கொடுக்கும் இடம் என்று உண்மையாக அறிய வேண்டும்."** ஆகவே, நமது ஆத்மாவில் அருட்ஜோதி ஆண்டவர் வெளிப்பட்டு விளங்குவதே நம் திருச்சிற்றம்பலத் தந்தையார் தர்மச் சாலைக்கு எழுந்தருளுவதாம்.

முதலில், நம் இராமலிங்க ஆத்ம மணியில் ஒளிவிட்டு நின்றார் நம் சிற்சபேசர். இவ்வுண்மை அனகம் உற்ற அந்த ஷணத்தில் தானே இராமலிங்கம், அருட்பிரகாச வள்ளன் மேனி கொண்டு எழுந்து விட்டது. இதுவரை ஆத்ம வடிவில் புதைந்து கிடந்த கடவுள் சக்தி

வெளிப்படாது, விறகில் தீ போலும், பாலின் நெய் போலும் மறைந்திருந்தது. இப்பொழுது ஆத்மாவினின்று அருட்பிரகாசம் வெளிப்பட்டுள்ளது, விறகில் இருந்த தீயும் வெளிப்பட்டு கனன்று எரிகின்றது, பாலிலிருந்த வெண்ணெய்யும் திரட்டிக் கொள்ளப்படுகின்றது. இங்ஙனம் இராமலிங்கம் ஆகிய ஒரு ஆத்ம அணுவில் அருட்ஜோதி வெளிப்பட்டது உண்மை. மேலும், ஆன்மாக்கள் எல்லாம் ஒரு தன்மை கொண்டு, ஒரே வண்ணம் ஆகிய பிரணவ ஜோதி அணுக்களாய் உள்ளன ஆதலால், “ஒன்றில் அருட்ஜோதி வெளிப்பட்ட போது எல்லா (ஓர் உரிமை கொண்ட) ஆத்ம அணுக்களிலும் அவ் அருட்ஜோதி வெளிப்பட்டுள்ளது உண்மையே ஆகும்.” ஆகையால், நமது திருச்சிற்றம்பலத் தந்தையார், தர்ம சாலையில் எழுந்தருளி உள்ளது உண்மையே. இறந்தவர்கள் ஆகிய ஆன்மாக்களை எல்லாம் எழுப்பி உள்ளதும் உண்மை. இவ் உண்மையை அறிந்து கொண்ட சுத்த சன்மார்க்கர்கள் உயிர் பெற்று எழுந்து, என்றும் விளங்குவர். ஆத்ம அணுவை உடைத்து, அதிலிருந்த அருட்பெரும் சக்தியை வெளிப்படுத்தப் பட்டதற்கு பிரமாணமாக, விஞ்ஞானத்தில் விளங்கிய அணுவும் **(Atom)** உடைக்கப்பட்டு அதற்குள் அளவிடக் கூடாத அபார சக்தியும் **(Electrons etc..)** கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை, அணுவில் மறைந்திருந்த தெய்வச்சக்தி வெளிப்படாது இருந்த காரணத்தால், உண்மைத் தெய்வானுபவம், வேதாந்தத்தில் விளங்கிய,

1)“பிரக்கியானம் பிரமம்”

2)“அயமாத்மா பிரம்மம்”

3)“தத்துவமசி”

4)“அகம் பிரம்மாஸ்மி”

என்னும் மகா வாக்கியங்களின் அனுபவ சாத்தியம் கூடவில்லை. கடவுளோடு இரண்டறக் கலந்து விட்டதாகக் கூறப்பட்ட ஐக்கிய நிலை முற்றிலும் உண்மை அல்ல. இது சுத்த சன்மார்க்கம் ஒன்றுக்கே கூடும்.

இதற்கு மேற்கோள்;-

“அம்மை அடுத்த திருமேனி அழகீர்! ஒற்றி அணி நகரீர்!!”

“உம்மை அடுத்தார் மிக வாட்டம் உறுதல் அழகோ?!” என்றுரைத்தேன்,

“நம்மை அடுத்தாய்!! நமை அடுத்தோர், நம் போல் உறுவர்!!!அன்றேல் ஏது”

“எம்மை அடுத்தது!!” என்கின்றார் இதுதான் சேடி என்னேடி

என்ற அருள் இங்கிதமாலைப் பாசுரத்தால், “தெய்வத்தோடு ஒன்றுபட்டு விட்டவர்கள் என்பதற்கு உதாரணம், அவர்கள் அந்த தெய்வத்தன்மை கொண்டு அற்புத சித்தியோடு அழியாது விளங்க வேண்டும், அப்படி இல்லையாயின், அவர்கள் கடவுளோடு ஐக்கியப் பட்டார் என்பது பொய்யே ஆகும்.”

எனவே, இச் சுத்த சன்மார்க்கக் காலம் ஆன்மாக்களுக்கு அருட் ஜோதிப் பெருஞ்சுக வடிவம் வழங்கப்படும் காலமாக அறிந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது நம் திருஅருட்பிரகாச வள்ளலார், ஜோதி வடிவு கொண்டு, தன் தேகத்தை சுத்த - ஞான வடிவ லட்சணத்தால் உலகில் தன் சித்தி உண்மையை விளக்கிக் கொண்டு உள்ளார். இது வெளிப்பட கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டுள்ளார். அதாவது, அருட் பக்குவம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இது,

“சுத்த வடிவுஞ் சுக வடிவாம் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்து ஓங்கும் சித்தெனும் ஓர்
ஞான வடிவும் இங்கே நான் பெற்றேன் எங்கெங்கும்
தான விளையாட்டு இயற்றத்தான்”,

-என்ற அருட்பாவால் உண்மை நிலை ஓர்ந்து கொள்ளப்படும். நம் அருட்பிரகாச வள்ளலின் அருட்பெரும் செயலால் ஆத்மானுபவமும், ஆண்டவர் அகப் புணர்ச்சியால், திரிதேக அனுபவ சித்தியும் பெற்று அளவிறந்த நெடுங்காலம் அருட்பெருஞ்ஜோதி மயமாய்த் தனிப்பெருங்கருணை செயல் விளங்க என்றென்றும் வாழ்வோமாக!!!

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

“அகமிருந்து வருக அருளுடன்!! அனகமாக வாழ்க தயவுடன்!!!”

“நித்திய நிலையான ஆன்ம அகம் பற்றி நில்!!”

"சத்திய பதியான அருட்ஜோதியோடு உறு!!"

"சுத்த தயவு செயலாக எதையுமே செய்!!!"

"தயவே விழி!! தயவே வழி!! தயவே வாழ்வு!!!"

## 45 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை வள்ளலார் கடைசியாக அருளுரையாற்றிய "பேருபதேசத்தின் பரம இரகசியம்!!" ("பத்து தினங்களாகிய கொஞ்ச காலம்")

வள்ளலார் இராமலிங்க அடிகளார் தனது சுத்த தேகமாகிய பொன்னொளி உடலை 30 - 01 - 1874 ஆண்டு, வடலூரரை அடுத்த மேட்டுக்குப்பம் எனும் சிற்றூரில் "சித்திவளாகத் திருமாளிகையில்" மறைத்துக் கொண்டார். அதற்கு சரியாக 100 நாட்களுக்கு முன்பாக 22 - 10 - 1873 அன்று,அங்கு சுத்த சன்மார்க்க கொடியேற்றி (மஞ்சள் மற்றும் வெண்மை நிறம்) நீண்ட உபதேசம் செய்தருளினார்கள். இதுதான் கடைசியாக உலக மக்களுக்கு வள்ளலார் ஆற்றிய "பேருபதேசம்" அல்லது "மஹா உபதேசம்" ஆகும். இம் மகாவுபதேசம் சுத்த சன்மார்க்க நெறியை விளக்குகின்றது. அதில் ஆரம்பிக்கும் போதே முக்கியமான சுத்த சன்மார்க்க சாதனத்தை வலியுறுத்துகின்றார்.

இதில் "பத்து தினங்களாகிய கொஞ்ச காலம்" என்கின்றார். அப் பெருமான் சொன்னதைப் பார்ப்போம்.

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் இனியும் வீண் காலம் கழித்து கொண்டு இருக்காதீர்கள். **"இது முதல் சாலைக்கு ஆண்டவர் போகின்ற பத்து தினமாகிய கொஞ்சக் காலம் வரையில்,"** நீங்கள் எல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எதுவென்றால்; நாம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது.

1) "சாலை" என்றால் என்ன?

2) "ஆண்டவர் சாலைக்குப் போகிற" என்றால் என்ன?

3) "பத்து தினங்கள்" என்றால் என்ன?

4) "கொஞ்ச காலம்" என்று ஏன் சொன்னார்?

திருவருட் பிரகாச வள்ளலார் ஏற்படுத்தியது;

1) சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் (1865)

2) சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை (1867)

3) சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை (1872)

இதை சுருக்கமாக "**சங்கம், சாலை, சபை**" என்பர்.

1) சங்கம் என்பது ஒத்த கருத்துடையவர் ஒன்று கூடி "சத்விசாரம்" செய்ய ஏற்படுத்தப்பட்டது.

2) தர்மச்சாலை என்பது எந்த ஆதரவுமற்ற, உள்ளபடி பசித்த, ஏழைகளுக்கு, ஆகாரம் கொடுத்து பசியைப் போக்கி திருப்தி இன்பத்தை உண்டுபண்ணும் "ஜீவகாருண்யம்" என்ற "பரோபகாரம்" புரிவதற்கு ஏற்படுத்தப்பட்ட அன்னக் கூடம்.

3) சத்திய ஞான சபை என்பது "சத்விசாரத்தாலும் பரோபகாரத்தாலும்" உண்டான "அக விளக்கத்தைக்" கொண்டு வழிபாடாற்றும் ஆலயம்.

இப்பொழுது வள்ளலார் சொன்ன மகாவாக்கியத்தைப் பார்ப்போம்.

## "ஆண்டவர் சாலைக்குப் போகிற" என்றால் என்ன?

"சாலை" என்றால் "வழி", மார்க்கம் என்று பொருள்.

அகண்ட வான் பெருவெளி முற்றும் அனாதி காலமாய் நிறைந்துள்ளவர் "இயற்கை உண்மை" ஆகிய ஆண்டவர். அதுவே "சத்துப் பொருள்" ஆகும். "மெய்ப்பொருள்" என்பதும் இதுவே.

இவரே "அன்பு இருப்பாய்" அகண்டாகாரப் பெருவெளி முற்றும் நிறைந்துள்ளவர்.

இந்த "அன்பு இருப்பாம்" சத்துப் பொருள் ஆகிய இயற்கை உண்மைக் கடவுளே, நம் சிரநடு விளங்கும் ஆன்ம அணுவில்,

"இயற்கை விளக்கமாய்- அருள் உணர்வாய்- தனிப்பெருங்கருணையே வடிவாய்" எழுந்தருளியுள்ளார்.

"இந்த தனிப்பெருங் கருணை ஆகிய அருள் உணர்வே," அகண்டவெளி முற்றும் நிறைந்த அன்புக் கடவுளுக்கு "சாலையாக-வழியாக" இருக்கின்றது.

இதைத்தான் இயேசுவின் வாசகம் குறிக்கின்றது. அது;-

**"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்றேன்"** என்றார்.

"வழி என்பதும் சாலை என்பதும் திருவருளையே குறிக்கின்றது"

இதைத்தான் வள்ளற்பெருமான் அருட்பெருஞ்ஜோதி அகவலில்,

"எங்கே கருணை இயற்கையின் உள்ளன, அங்கே விளங்கிய அருட்பெரும் சிவமே" என்கின்றார்.

இங்கு சொல்லப்படுகின்ற "கருணை" ஆண்டவரின் தனிப்பெருங் கருணையைக் குறிக்க வந்ததேயன்றி ஜீவ கருணையை அல்ல.

எனவே அகண்டவெளி நிறை ஆண்டவர் "**தனிப்பெருங்கருணை ஆகிய திருவருட் திருமேனி**" கொண்டு நம் சிரநடு ஆன்ம சிற்சபையிலே விளங்குகின்றதையே "ஆண்டவர் சாலையில் தயாமூல தன்ம சொரூபியாய்" எழுந்தருளியுள்ளார் என்பது ஆம்.

அடுத்து, "**பத்து தினங்கள்" என்றால் என்ன?**

சைவ சித்தாந்தத்தில் ஆன்மாவை "பத்து"(10) எனும் எண்ணால் குறிக்கப்படும். இதுவே "ய" என்ற எழுத்தால் குறிப்பர். "பத்து" என்பது, "எட்டும் இரண்டுமாக" பிரிந்து தோற்றி பொருள் தரும்.

இந்த எட்டும் இரண்டுமே "அகரம் உகரம்" ஆகும்.

"அ" என்ற எழுத்து "8" என்ற எண்ணைக் குறிக்கும்.

"உ" என்ற எழுத்து "2" என்ற எண்ணைக் குறிக்கும்.

நம் வள்ளற்பெருமான் அகவலில்,

"எட்டிரண்டு அறிவித்து எனைத் தனியேற்றி, பட்டி மண்டபத்தில் பதித்த மெய்த் தந்தையே!!"

என்கின்றார். மேலும் ஒரு பாடலில்,

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர் கண்ணோடே கருத்தோடே கருத்தனை கருதீர்

பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில் பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்

கொட்டோடே முழக்கோடே கோலங் காண்கின்றீர் குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்

**"எட்டோடே இரண்டு சேர்த்து எண்ணவும் அறியீர்!! எத்துணை கொள்கின்றீர் பித்து லகிரே!!"**

என்கின்றார்.

"எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணினால் வருவது பத்து ஆகிய ஆன்மானுபவம்".

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்பது பழமொழி.

இங்கு கண் என்பது "அருள் ஞான உணர்ச்சி" ஆகிய கண்ணாகும்.

அதாவது "அ" எழுத்து நிலையில் ஒரு விளக்கத்தையும் அதுவே "எட்டு" (8) என்ற எண்ணாக வந்து மேலும் ஒரு கடவுள் உண்மை விளக்கத்தையும் தருகின்றது.

அதேபோல் "உ"- எழுத்தாக வந்து ஒரு விளக்கத்தையும், "இரண்டு"(2) என்ற எண்ணாக வந்து மேலும் ஒரு "கடவுளான்ம" விளக்கத்தையும் தருகின்றது.

"அ" என்ற எழுத்து பொதுவாக ஆகாச நிலையையே சுட்டுவதாம். இங்கு ஆண்டவராகிய முதல்வர் "பரமாகாச சொரூபியாய்" நம் தலை நடுவில் "அருள் ஒளி விளக்காய்" திகழ்கின்ற நிலையைக் குறிக்கின்றதாம். ஆக "அ" என்ற எழுத்து நம் முதல்வர் ஆகிய கடவுளைக் குறிக்கும்.இவரே "பரமான்மபதி" ஆவார்.

"உ" என்ற எழுத்து நமது "உணர்வு" அல்லது "ஆன்ம அறிவைக்" குறிக்கின்றது. இதுவே "உண்மை அறிவு" ஆகும். இதுவே "ஜீவான்மா" எனப்படும்.

உண்மையில் ஜீவான்மா, பரமான்மா எனத் தனித்தனியாக இல்லை.

"அஞ்ஞானம் என்கின்ற பாசாந்தகார ஆணவ இருளால்" நாம் கடவுளை விட்டு பிரிந்திருப்பது போல் தோன்றுகின்றது. இந்த

அஞ்ஞானம் எனும் "அக இருளை" நீக்க வேண்டியே நாம் சதா சத்விசார வசத்தராய் இருக்க வேண்டும்.

"உகரம்" ஆகிய சுத்த மனோ உணர்வால், "அகரம்" ஆகிய பதியை கூடி நின்றலே, "எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணுதல்" ஆகும். இப்போது விசார வசத்தால் நாம் "இறைவனை இயற்கையாகவே கூடாமல் கூடியுள்ள உண்மை நிலை" உணரப்படும்.

**இப்போது சுத்த சன்மார்க்க சாதகன் "பத்தாகிய கடவுளான்மா" ஆகி திகழ்கின்றான்.**

**இந்த "கடவுளான்ம சொரூபியாய்" நிலைத்திருத்தலையே "பத்து தினம்" என்கின்றார் வள்ளலார்.**

மேலும் எட்டு (அ= 8) என்ற எண், "எண்குணத்தான்" ஆகிய அந்த அருளொளிக் கடவுளைக் குறிக்கின்றது.

இறைவனுடைய 8 குணங்கள்;

1) தன் வயத்தானாதல்

2) தூய உடம்பினனாதல்

3) இயற்கை உணர்வினனாதல்

4) முற்றும் உணர்தல்

5) இயல்பாகவே பாசங்களினீங்குதல்

6) பேரருளுடைமை

7) முடிவில் ஆற்றலுடைமை

8) வரம்பில் இன்பமுடைமை

அடுத்து, இரண்டு (உ=2) என்ற எண் எதைக் குறிக்கிறது?

இடகலை, பிங்கலை என்ற இரு வாசிக்கால் கொண்டு ஜீவிக்கின்ற ஜீவான்மாவைக் குறிக்கின்றது.

மேலும், சிரசில் (தலைநடு) என்றும் அழியாத சாமான்ய நித்திய ஜீவனாகவும், இதய ஸ்தானத்தே விஷேச ஜீவனாகவும்(அநித்திய ஜீவன்) இரட்டுற விளங்குகின்றது.

இந்த இரண்டாகிய நித்திய, அநித்திய ஜீவனை, எட்டாகிய இறைவனோடு இரண்டற கலப்பித்து மரணமில்லாது வாழ்வதுவே சுத்த

சன்மார்க்கக் குறிக்கோளாகும். இந்த நிலையில் அநித்திய ஜீவனும் அருள் ஒளியின் சேர்க்கையினால் நித்தியத்துவம் பெற்றுவிடுகின்றது.

இதுவே எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணுதல் ஆகும்.

இதைத்தான்,

**"தை பிறந்தால் வழி பிறக்கும்"** என்றனர் ஞானிகள்.

தமிழ் மாதத்தில் "தை" பத்தாவது மாதமாகும். அதாவது "நாம் அகநிலையில் கடவுளான்மாவாக பிறந்தால்" அழியாத பேரின்ப வாழ்வுக்கு வழி பிறக்கும் என்பது உட்கோள்.

அடுத்து, **"கொஞ்ச காலம் வரையில்"** என்று ஏன் சொன்னார்?

இந்த "பத்தாகிய கடவுளான்ம நிலையில்" அசைவற பொருந்தி நிற்றலே "முக்தி நிலையாகும்".

இந்த முக்தி நிலை, மற்றைய சமய, மத, மார்க்கங்களில் முடிவாக பெறுகின்ற நிலையாகும்.

ஆனால், நம் வள்ளற்பெருமான் வழங்கிய சுத்த சன்மார்க்கத்தில், சுத்த சத்விசாரத்தால் முதலிலேயே அடைந்து நிற்றலாகும். அதாவது இறைவனோடு ஒன்றி "நான்" என்பது போய் அதுவாக நிற்றலே ஆம்.

இதைத்தான் பெருமான், திருவருட்பா அருட்பெருஞ்ஜோதி அகவலில்,

"முத்தி என்பது, நிலைமுன் உறு சாதனம்" என்று குறித்துள்ளார்.

இதன் பிறகு அந்த "அகநிலையிலிருந்து அனகமாக விரிந்து," உடல், உயிர், உள்ளமெல்லாம் அந்த அருளொளியையே விரித்து நிரப்பிக்கொண்டு,

**சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம்** ஆகிய முத்தேக சித்தி பெற்று மரணமில்லாது என்றென்றும் வாழ்வதே "சித்தி நிலை" ஆகும்.

"அகமிருந்து வருக அருளுடன்!!

அனகமாக வாழ்க தயவுடன்!!!"

"தயவு"

# 46 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

# “இந்த கோட்டைக்குள் அந்நியர் யாரும் பிரவேசிக்க முடியாது!!”

ஆம். இப்படி ஒரு வாசகம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வாழ்கின்ற அருள் வெளியாகிய கோட்டைக்கு வெளியே அறிவிப்புப் பலகையில் **(Notice board)** தொங்கவிடப் பட்டிருந்தது. இது கற்பனை என்றாலும் உண்மை நிலை இதுதான்.

“இருப்பது மெய்ப்பொருள் ஒன்றே!! அதுவே எல்லாமாய் விளங்குகின்றது; நம் ஒவ்வொருவருமாய் விளங்குகின்றது!!”

என்பதே அடிப்படையான உண்மை.

இறைவன் எப்போதும் “தனி ஒருவனாக - தனியனாக - தான் மாத்திரமேயாக இருந்துக் கொண்டிருக்கின்றான்!!”

அவருக்கு அந்நியமாக ஓர் அணுவோ, அண்டமோ, பிண்டமோ, ஒரு பொருளோ, ஒரு உயிரோ இல்லை; இருக்கவும் முடியாது!!

“இயற்கை உண்மை என்று சொல்லப்படும் அந்த மெய்ப்பொருள் தன்னந் தனியாகத்தான் அன்றும் - இன்றும் - என்றும் இருந்து வருகிறது!!”

“தன்னந்தனி நின்றது தானறிய, இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?!” - என்பார் கந்தரநுபூதியில் அருணகிரிநாதர்.

இதன் பொருள்; “தன்னந்தனி நின்றது”அகண்டாகாச வான் பெருவெளியில் அனாதி நித்தியமாய் சத்தியமாய் என்றென்றும் “அன்பு இருப்பாய்” தன்னந்தனியாய், இருந்து வருபவர் ஆண்டவர். அருவநிலையில் அங்கு இருக்கும் அவருக்கு “அனுபவ வாழ்வு” இல்லாமல் இருந்தது.

“அருள் அனுபவ வாழ்வின்” நிமித்தமாக தானே ஓர் “கடவுள்-ஆன்ம சிற்றணு” தோற்றம் கொண்டு இவ்வுலகிடை விளங்க வருகிறார். இங்கு பக்குவ மனித ஆன்மாவில் “தன்னைத்தானே அனுபவிக்க” திருவுளம் கொண்டு, அக ஆன்மாலயத்தில் எழுந்தருளி அருளானந்தத் திருநடனம் புரிந்து கொண்டுள்ளார். இங்கு தானே ஒரு ஆன்ம சிற்றுருவில் இருந்து “தன்னைத்தானே உணர்ந்துக் கொண்டும், உணர்த்திக் கொண்டும் உள்ளார். உணர்த்துவது

அதுவான கடவுளும், உணர்வது இதுவான மனிதனும் ஆக அவரே இருநிலை கொண்ட ஒருவராய், ஒரு "கடவுளான்மாவாய்" சச்சிதானந்த அனுபவத்தில் திகழ்கின்றார். இங்கு மனிதன் வேறு கடவுள் வேறு என்பதே இல்லை. ஆன்மாவும் அதன் நடுவான உள்ளொளியாகிய கடவுளும் இயற்கையில் அத்துவிதமாக "தனி" அனுபவத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம்.

இதை எப்படி பிறர்க்கு இசைவிப்பது?!

"பிறர் என்றும், பிறிது என்ற ஒன்றும்" கடவுள் ராஜ்ஜியத்தில் இல்லவே இல்லை.

ஒன்றும் நீ அல்லை! அன்றி ஒன்றில்லை!!

"யார் உனை அறியகிற்பாரே!!"

- என்கின்றார் மாணிக்கவாசகர், திருவாசகத்தில்.

ஆக, "**இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?!**"

என்றும்,

"**யார் உனை அறியகிற்பாரே!!**" என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்கள்.

**"எவராலும் கண்டுகொளற்கு அரிதாம் நித்திய வான் பொருளை"**

என ஞானசரியையில் குறிப்பிடுகின்றார் நம் வள்ளற்பெருமான்.

இதிலிருந்து தெரிவது என்னை எனில், "மெய்ப்பொருளாகிய கடவுளுக்கு அந்நியமாக இருந்து யாரும் அவரை அறிய முடியாது! அடைய முடியாது!!"

மேலும், நம் வள்ளற்பெருமான் ஆறாம் திருமுறை, "திருச்சிற்றம்பல தெய்வமணிமாலையில்"

திருச்சிற்றம்பலத்தே ஓங்குகின்ற "**தனிக்கடவுள்**" ஒருவர் உண்டே கண்டீர்!!

என 13 பாடல்களிலும் குறிப்பிடுகின்றார்.

"தனி" என்ற சொல் மிக முக்கியமான கடவுளின் இயற்கை அற்புதத்தை விளக்க வந்துள்ளது.

இது குறித்து நம் வள்ளலார் ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்;

நினைத்த போதெல்லாம் நின்னையே நினைத்தேன்!! (துவைத நிலை)

நினைப்பற நின்ற போதெல்லாம் எனைத்

“தனி” ஆக்கி, “நின் கணே” நின்றேன். - திருவருட்பா (அத்துவைத நிலை)

அப்படியென்றால், இங்கு இவ்வுலகத்தில் “நான்” என விளங்கிக் கொண்டிருக்கும் இம் “மனிதன் யார்?!”

“கடவுளுக்கும் மனிதனுக்கும் என்ன உறவு?!”

“நான் இருக்கிறேன்” என்ற உணர்வு நமக்கு மூளைகளின் நடுவிருந்து, தலை மையத்தில் இருந்து சதா வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அந்த “இருப்புணர்வை” நம் சுதந்திரத்தைக் கொண்டா விளக்கிக்கொள்கிறோம்?!

இல்லை!! “உள்ளிருக்கும் ஏதோ ஒன்று இங்கு நான் - நான் - நான் என சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது”

ஆக, அந்த அகமிருக்கும் மெய்ப்பொருளே இம் மனிதனாய் இங்கு விளங்கிக்கொண்டுள்ளது.

“நான்” என நிற்பது நம் தயாஜோதி நாதன் என்றறிந்திங்கு “நான் அவராதல் வேண்டும்!!” - *சுவாமி சரவணானந்தா.*

“நான்” என்பது (அருட்ஜோதியாகிய ஆன்மா) கடவுளின் சிற்றணு வடிவம். “நான்” என்பதை “நான்” என நினைப்பதுதான் தவறு. இப்படி இங்கு “,நாமாக விளங்குவது கடவுளே” என உணர்வதுதான் ஞானமடைதல் ஆகும்.

**“நான் என்பது கூட நானல்ல !! ” “அது இறைவனே”**

இதுகாறும் நெடுங்கோடி காலமாக, பலகோடி பிறவிகள் தோறும் இதை(நான்) கடவுளிடத்திருந்து பிரிந்துள்ளதாக “அஞ்ஞானம் எனும் ஆணவமலத்தால்” கருதி வந்திருந்தோம்.

இந்த “யான், எனது” என்கின்ற தற்போத உணர்வு நீங்க வேண்டும். “யான்” எனும் அகங்காரமும், “எனது” எனும் மமகாரமும் ஆகிய தற்போதம் அற்று அருளில் சரணடைந்தது நிற்றல் வேண்டும்.

"யான், எனது எனும் செருக்கு அறுப்பான்,
வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்றும்,

"தன்னுயிர் தான் அறப் பெற்றானை,
மன்னுயிர் எல்லாம் தொழும்"

என்ற திருக்குறளால் உண்மையை அறியலாம்.

திருவருட்பாவில் ஓர் பாடல்;

**"அத்துவித ஆனந்த அனுபவ இடையீடு"**

திருத்தகு பொன்னம்பலத்தே திருநடஞ் செய்தருளும் திருவடிகள் அடிச்சிறியேன் சென்னிமிசை வருமோ

உருத்தகு நானிலத்திடை நீள் மலத்தடை போய் ஞான உருப் படிவம் அடைவேனோ? ஒன்றிரண்டு என்னாத

பொருத்தமுறு சுத்த சிவானந்த வெள்ளம் ததும்பிப் பொங்கி அகம்புறம் காணாது எங்கும் நிறைந்திடுமோ!!

அருத்தகும் அவ் வெள்ளத்தே

**"நான் மூழ்கி," "நான் போய்," "அதுவாக பெறுவேனோ!!"** அறிந்திலன் மேல் விளைவே. - என்கின்றார் நம் வள்ளற்பெருமான்.

"அது"என்ற சொல் இறைவனைக் குறிக்கும்.

அதுவினுள் அதுவாய் அதுவே அதுவாய் பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே!!

தானொரு தானாய் தானே தானாய் ஊன், உயிர் விளக்கும் ஒரு தனிப் பொருளே!!

மேற்கண்ட அகவல் அடிகள் இறைவனே எல்லாமாகி விளங்குவதை உணர்த்துகின்றது.

"மனிதன் யார்? மனிதனது உண்மை என்ன?!"

"பொது உணர்வு" உணரும் போது அலால், "பிரித்தே, "அது" எனில் தோன்றா" அருட்பெருஞ்ஜோதி - என்பது அகவல் வரிகள்.

**"அருள் உணர்வு" தான் கடவுளுடைய ஒப்பற்ற தயவு உடைய பேரறிவு நிலை ஆகும். அதே சமயம் மனிதனுடைய ஆதிமூல உண்மையும் அந்த "அருள்" ஆகவே உள்ளது.**

**"அருள்" தான் கடவுளாகவும் இருக்கின்றது. அதுவே மனிதனுடைய "உண்மை அக வடிவமாகவும்" இருக்கின்றது.**

**"அருள் என்பது கடவுளுடைய தன்மை. அந்த கடவுளுடைய தன்மையாகிய அருள் ஆகத்தான் நாம் இருக்கின்றோம் என்பதுதான் உண்மையிலும் உண்மை."**

"அத்துவிதம் சத்தியம்!!" என்பது மெய்கண்டார் சத்திய வாசகம்.

ஆக கடவுளுக்கும் சரி, மனிதனுக்கும் சரி "பொது உணர்வாக இருப்பது அந்த அருளே!!"

எனவேதான், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளலாருக்கு,

"அருளே நாம் அறிவாய்!!" என மும்முறை அருட்பெருஞ்ஜோதி அகவலில் உபதேசித்துள்ளார்.

உண்மை இப்படி "அருளே நாமாய் இருக்க", நம்மை கடவுளுக்கு அந்நியமாக இருப்பதாகக் கருதிக்கொண்டிருப்பது,

"ஆணவ அகங்கார மறைப்பாகிய மருள் நிலையாகும்!!"

கடவுளுக்கு அந்நியமாக நின்று அவரை வேறு எவரும் அறியவோ அடையவோ முடியாது. "சுத்த சத்விசாரத்தால், நம்மை அதுவாகக் கண்டுக்கொண்டு, அருட்பெருஞ்ஜோதி உண்மையிலிருந்து இவ்வுலகில் சச்சிதானந்த அனுபவத்தோடு, நித்தியானந்தமாய் வாழ வந்துள்ளோம் நாம் ஒவ்வொருவரும்."

"யானாகிய என்னை விழுங்கி, வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே!!" - *(திருப்புகழ்)*

"தயவு"

## 47 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "அம்பல இரகசியம்"

அம்பலம் என்ற சொல் ஆன்மீகப் பாதையில் உள்முக பயணம் மேற்கொள்வோர் மிக மிக முக்கியமாக அறிந்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்,
நிலவுலாவிய நீர்மலி வேணியன்,

"அலகில் சோதியன் "அம்பலத்து ஆடுவான்",
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். - *சேக்கிழார் பெருமான்*

"அகாரமானது"(அ) அம்பலம்; அனாதியானது அம்பலம்;
"உகாரமானது"(உ) அம்பலம்; உண்மையானது அம்பலம்;
"மகாரமானது"(ம்) அம்பலம்; வடிவமானது அம்பலம்;
சிகாரமானது அம்பலம்; தெளிந்ததே சிவாயமே - *சிவவாக்கியர்.*

எல்லாம் செயல் கூடும் என் ஆணை,"அம்பலத்தே
எல்லாம் வல்லான்" தனையே ஏத்து.

"அம்பலத்தரசே அருமருந்தே!!"
ஆனந்தத் தேனே அருள் விருந்தே!!

அருட் ஜோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்,
"**அம்பலத்தில்** ஆடுகின்ற" ஆனந்த தெய்வம்.

நடமிடும் "அம்பல நன்மணியே"

நடராஜ பலமது நம்பலமே
நடமாடுவது "திரு அம்பலமே"

அம்பலப் பாட்டே அருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு

அம்பலவாணனை நாடினனே
அவனடியாரொடும் கூடினனே

"அம்பலத்தில் ஆடுகின்றார்" பாங்கிமாரே!!
அவர் ஆட்டம் கண்டு நாட்டம் கொண்டேன் பாங்கிமாரே!!

"திரு அம்பலவன்" திருநோக்கம் பெற்றார்க்கு "உரு அம்பலத்தே" என்று உன்.

- *திருவருட்பா* (*வள்ளலார்*)

அம்பலம் என்ற சொல் "சிற்றம்பலம்" ஆகிய "சிற்சபையைக்" குறிக்கும்.

சிற்றம்பலம் என்றால் சிறிய அம்பலம் ஆகும். ஆன்மாவே சிற்றம்பலமாக உள்ளது. ஆன்மா என்பது அணுத்துவமான ஓர் அணு (சிற்றணு வடிவம்). இதுவே ஆண்டவர்க்கு அரிய கோயிலாக, ஆலயமாக, இல்லமாக இருக்கின்றது.

“இந்த சிற்றம்பலம் தான் ஆன்மாவாக உள்ளது. அதுதான் நாமாக இருக்கின்றோம்”.

இந்த ஆன்ம அணு இந்த பௌதிக உடலில் “தலைநடுவே சதா நித்தியமாய் பிரகாசித்துக் கொண்டுள்ளது”.

நமக்குள் அகண்ட வான் பெருவெளி முற்றும் நிறைந்த “அன்பு இருப்பு” ஆகிய கடவுள் “அருள் உணர்வு எனும் உள்ளொளியாக” இருந்துக்கொண்டு தன் ஐஞ்சக்தி - ஐந்தொழிலால் “அருள் ஞான இன்பத் திருநடனம்” புரிந்துக் கொண்டுள்ளார்.

இந்த “அம்பல இரகசியத்தைப்” பற்றி வள்ளலாருக்கு ஆண்டவரே விளக்கம் அளிக்கும் பாடலைப் பார்ப்போம் :-

ஆடும் கருணைத் திரு நடத்தீர்! “ஆடும் இடந் தான் யாது என்றேன்?!”

“பாடுந் திருவும் சவுந்தரமும் பழமும் காட்டும் இடம்” என்றார்

“நாடும்படி நன்கு அருளும்! “என்றேன். நங்காய், “முன் பின் ஒன்றேயாய்,

ஈடுந்திய பல் நடுவுளதால்!!” என்றார்! தோழி இவர் வாழி!!

*- வள்ளலார்*

“அம்பலம்” என்ற வார்த்தை மூன்று சொற்களாக பிரிந்து இறைவனின் “அடி - நடு - முடி” உண்மையை வெளிப்படையாக விளக்குகின்றது.

“அம்பலம் = அம்+பல்+அம்”

இதைத்தான் மேற்கண்ட பாடலில், “முன்(அம்), பின்(அம்) ஒன்றேயாய், ஈடுந்திய “பல்” நடுவுளதால்!! எனப்பட்டது.

“அம்” என்பது “அ - உ - ம்” என விரிந்து “ஓம்” என்ற ஓங்கார பிரணவத்தைக் குறிக்கும்.

இதில் "அ" என்ற "அகர" எழுத்து அகண்ட வான் பெருவெளி முற்றும் நிறைந்த "அனாதி நித்திய இயற்கை உண்மைக் கடவுளைக்" குறிக்கும். இவரே அந்த எல்லையற்ற சூன்யப் பெருவெளி முற்றும் நிறைந்தவராய் "அன்பு இருப்பு எனும் சத்துப் பொருளாய்" என்றென்றும், எங்கெங்கும் இருந்து வருபவர் ஆவார்.

அந்த இயற்கை உண்மைக் கடவுள் ("அ"), மூவிதமாய் விளங்குபவர் ஆவார். அதாவது ஒன்றே மூன்றாய் விளங்குதல் அவர்க்கு இயல்பாம்.

அதாவது,

"இயற்கை உண்மை = அ"(சத்து)

"இயற்கை விளக்கம் = உ." (சித்து)

"இயற்கை இன்பம் = ம்"(ஆனந்தம்)

இதுவே "அன்பு இருப்பு- அருள் உணர்வு- ஆனந்த அனுபவம்"(அ-உ-ம்) ஆகும்.

இந்த முதலில் வருகின்ற "அம்"(அ-உ-ம் = "ஓம்") அகண்ட வான்பெருவெளி முற்றும் நிறைந்த கடவுள் உண்மையைக் குறிக்கும். இது, இந்த மாபிரபஞ்ச இயக்கத்திற்கும், உயிர்களின் வாழ்வனுபவத்திற்கும் "அடிநிலை ஆதார சத்துப் பொருளாய் இருத்தலால், இதுவே இறைவனின் "அடி" ஆகும்.

இதைத்தான் கிறிஸ்துவ மதத்தில் "ஆமென்" என குறிப்பர். "ஓம்" என்பதே "ஆமென்" என வந்துள்ளது. இதைத்தான் பைபிளில்,

"ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது; அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார்; சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானது ஒன்றும் அவரை அல்லாமல் உண்டாகவில்லை; அந்த வார்த்தை, மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்!!" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. - யோவான்(1; 1.3, 14)

"பல்" என்ற சொல்லில்

"ப" என்பது எதைக் குறிக்கின்றது?

“ப” என்ற எழுத்து நமது தலை நடுவில், அதாவது அண்ணாக்கு மேல் உள்ள, முகுள மூளைக்கு மேல் அமைந்துள்ள பகர வடிவ குழியை குறிக்கின்றது!! **(“U” shape cavity. Cerebrospinal cavity)**

அதாவது உச்சிக்கு கீழே, உண்ணாக்கு மேலே, புருவ மத்திக்கு நேர் உட்பாகத்தில், இந்த சிறு “உரல்” போன்ற குழி அமைந்துள்ளது! இந்த குழிக்கு மேல் ஓர் சிறு வெற்றிடம் உள்ளது. அந்த வெற்றிடத்தில் தான் “அருட்ஜோதி - கடவுள் ஆன்மா”, கோடி சூரிய பிரகாசத்துடன் “அருள் ஒளியாக” சதா பிரகாசித்துக் கொண்டு உள்ளது.

இந்த அருள் ஒளியே “ல்” என்ற 13 வது மெய்யெழுத்தால் சுட்டப்படுகிறது.

இந்த ஜடபூத உயிருடம்புக்கு உள்ளே தலைநடுவில் அருட்ஜோதியாய் சுடர்விடுபவர்தான் கடவுள். இந்த கடவுளின், திருவருள் நிலையைக் குறிப்பதே 13 ஆவது மெய் எழுத்தான - **ல்** ஆகும்.

இதைத்தான், திருவருட்பா அகவலில் குறிப்பிடுகின்றார்;-

திரையோதச சிவவெளி நடுவே வரையோதரு சுகவாழ்க்கை மெய்ப்பொருளே - எனப் போற்றுகின்றார்.

திரையோதசம் என்றால்,

திரி + தசம்; 3+10 = 13 ஆகும்.

முதலில், நமக்கு வெளியே தோன்றுவது இந்த ஜட பூத உடல் நிலை. உடல் நிலையிலிருந்து ஆரம்பித்து, உள்ளே செல்ல செல்ல பல சக்தி நிலைகள் (வெளிகள்) அனுபவமாகும்.

முடிவில் 13 ஆவது இடத்தில் திருவருள் நிலை ஆகிய கடவுள் உள்ளார்!

அந்த 13 நிலைகள் யாவை? அது;-

1)பூத நிலை, 2) கரண நிலை, 3) பிரகிருதி நிலை,4) மோகினி நிலை,5) அசுத்த மாயா நிலை,6) அசுத்த மகாமாயா நிலை, 7) சுத்த மாயா நிலை, 8) சுத்த மகாமாயா நிலை, 9) சர்வ மகா மாயா நிலை, 10) குண்டலி நிலை, 11) பிரணவ நிலை, 12) பரிக்கிரக நிலை

முடிவாக 13 வது திருவருள் நிலை!!!

இதைக் குறிப்பதே **ல்** என்ற 13 வது மெய்யெழுத்து.இது,

மெய்ப்பொருளாகிய கடவுளைச் சுட்ட வந்தது.

திரயோதசநிலை, இது தான் 13ஆம் நிலையான அருள் அனுபவ நிலை. இந்த 13ஆம் நிலையான அருள் அனுபவத்தில் தான் "அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணையாக" உள்ள கடவுள் உண்மை வெளிப்படுகின்றது.இந்த உண்மை வெளிப்படுவது பகர வடிவ நமது ஆன்ம சிற்றம்பலத்தே. இதையே பல் வண்ணமாக திகழ்வதாக அறிகின்றோம். மேலும் இங்கு அனுபவம் சித்திக்கணும்.

அடுத்து கடைசியில் வரும் "அம்" "(அ - உ - ம்)" எதைக் குறிக்கின்றது?

எல்லையற்ற இந்த மாபிரபஞ்சத்தையே குறிக்கின்றது.

இந்த பிரபஞ்சம் எப்படி உருவானது?!.

"அ - உ - ம்" ("அம்") ஆல் உருவாகியுள்ளது.

"அ" என்ற எழுத்து புறத்தில் உள்ள எல்லையற்ற அகண்ட வான் பெருவெளியைக் குறிக்கின்றது.

"உ"என்ற எழுத்து, அந்த ஆகாசத்தில் சூக்குமமாய் இரண்டற கலந்துள்ள காற்றைக் குறிக்கின்றது.

"ம்"என்ற எழுத்து பிரபஞ்சம் முழுதும் நிறைந்துள்ள "மின்காந்த சக்தியைக்" குறிக்கின்றது.

"அகரத்தில்" (அ -ஆகாயம்) இருந்து "உகரமாகிய" காற்றும், "மகரமாகிய" மின்காந்த சக்தியும் **(Electro Magnetic Field)** தோன்றி, அதிலிருந்து இந்த "பிரபஞ்சம்" உண்டாகி விளங்கிக் கொண்டுள்ளது.

இந்த பிரபஞ்சத்தின் கூறே நமது "உடலாயும், உயிராயும்" ஆன்மாவைச் சூழ்ந்து விளங்கிக்கொண்டிருக்கின்றது.

மாபிரபஞ்சத் தோற்றமும், இயக்கச் செயல்கள் யாவுமே உண்மையை வெளியிடும் இங்கித அடையாளங்களாக உள்ளன. அகண்ட வெளியும், அதில் நிறை இயற்கை ஆற்றலும், நுண்மின் துகள்களுமே, "அ-உ-ம்" எனத் தோற்றி "ஓம்" என ஆகி சதா ஒலி-ஒளியாய் விளங்கிக் கொண்டுள்ளன. இந்த "ஓம்" (அம்) தான், இறை-உண்மைக்கோர் இங்கிதக் குறிப்பாய் இருக்கின்றது. இதற்கு

உள்ளீடாக, எல்லாம் வல்ல ஆண்டவரின் அருட் பெரும் ஆற்றல் இருந்துகொண்டு, புறச் சூழலாய், எல்லாப் பொருள் வடிவங்களையும், எல்லா உயிரின வடிவங்களையும், சிறந்த நம் தேக வடிவங்களையும் ஆக்கிக் கொண்டும், மாற்றிக் கொண்டும் உள்ளதாம்.

இதுவே "அம்+பல்+அம் = அம்பலம்" என்பதின் உண்மையாகும்.

ஓங்காரமே இறைவனாகவும், அதிலிருந்தே இப் பிரபஞ்சமும், உயிர்களும் தோன்றியுள்ளதை "திருவள்ளுவர் திருக்குறளில்" முதல் குறளில் வெளிப்படுத்தியுள்ளார். அதைப் பார்ப்போம்.

"அகர முதல எழுத்தெல்லா மாதி,
பகவன் முதற்றே உலகு"!!!

இந்த குறளில் முதல் எழுத்தாக வருவது "அ" ஆகும்.

கடைசியில் "உலகு" என்ற சொல்லில் கடைசி எழுத்து "கு" ஆகும்.

இந்த உயிர்மெய் எழுத்து "கு=க்+உ" என பிரியும்.

இந்த குறளில் கடைசி எழுத்தாக வருவது "உ" என்ற எழுத்து.

அடுத்து "ம்" என்ற எழுத்து சரியாக குறளின் நடுவில் வந்துள்ளது.

"எழுத்தெல்லாம் ஆதி" என்பதே "எழுத்தெல்லா மாதி" என வந்துள்ளது.

"மா" என்ற எழுத்தில் ம்+ஆ என பிரியும். இந்த "ம்" என்ற எழுத்து நடுவிலே வந்துள்ளது. எப்படி?!

குறளில் முதலிலிருந்து (இடமிருந்து வலமாக) எழுத்துக்களை எண்ணிக்கொண்டு வந்தாலும் சரி, கடைசியிலிருந்து முன் நோக்கி (வலமிருந்து இடமாக) எண்ணிக்கொண்டு வந்தாலும் சரி "13" எழுத்தாக வருவது இந்த "மா" என்ற எழுத்தாகும். இதில் மறைந்துள்ளது "ம்" என்ற எழுத்து.

எனவே குறளில்

முதல் எழுத்து "அ"

கடைசி எழுத்து "உ"

நடு எழுத்து "ம்"

ஆக "கடவுள் வாழ்த்தில்" முதல் குறள், ஓங்கார பிரணவ மந்திரத்தால் அமையப் பெற்றுள்ளது, அதிசயமே!!

மேலும் "ம்" என்ற ("மகர ஜோதி" ஆகிய மெய்ப்பொருள்) எழுத்து "13" எழுத்தாக அமைந்துள்ளதும் அற்புதமே!!!

இந்த "அம்பல இரகசியத்தைப்" பற்றி வள்ளலாருக்கு ஆண்டவரே விளக்கம் அளிக்கும் பாடலைப் பார்ப்போம் :-

ஆடும் கருணைத் திரு நடத்தீர்! "ஆடும் இடந்தான் யாது என்றேன்?!"

"பாடுந் திருவும் சவுந்தரமும் பழமும் காட்டும் இடம்" என்றார்

1. பாடும் திருவும் (அம்) - புறநிலை உருவம் - "சுத்த தேகம்"- பொன் வடிவம்

2. சௌந்தரமும் (பல்). - நடு நிற்கும் இடைநிலை - அருஉருவ "பிரணவ தேகம்"- ஆனந்த சௌந்தரிய வடிவம்

3. பழமும் - அகநிலை அருவம் - "ஞானதேகம்" ஆகிய பழம் அல்லது பலம்

மூன்றும் சேர்ந்து விளங்கும் ஒன்றான பேரம்பலமாகிய பொன்னம்பலம் (பொன் அம்+பல்+அம்)

பொன் =திரு

அம் = சௌந்தரம்

பழம் = ஞானவெளி

ஒரு மனிதனுக்கு மூன்று தேகங்கள் உள்ளன.

1) காரண ஆன்ம வடிவம்

2) சூக்கும உயிர் ஆற்றல் உணர்வு வடிவம்

3) புறத்தே உடலாகிய தூல வடிவம்

சுத்த சன்மார்க்க அருட் பெருநெறியின் சேர்ப்பால் இந்த மூன்று தேகமும் எக்காலும் அழியாத திரிதேக (முத்தேக சித்தி) சித்தி பெற்று மரணமிலாப் பெருவாழ்வில் திகழ்கின்றது.

1) காரண ஆன்ம வடிவம் - ஞான தேகமாகவும்

2) சூக்கும உயிராற்றல் உணர்வு வடிவம் - பிரணவ தேகமாகவும்

3) தூல தேகமாகிய புறவுடல் - சுத்த பொன்னொளி தேகமாகவும்,

திருவருட் பூரணத்தால் மாற்றம் அடைந்து எத்தனை கோடி கோடி யுகமானாலும் மரணமிலாது நித்தியமாய் என்றென்றும் விளங்க வல்லதாகும்.

இதில் நடுவுற்ற சூக்கும அரு உருவ உயிர் அறிவு அன்புணர்வாய் ஒளிரும் இடம் “பல்” நிலை.

இதற்கு அகத்தே “அம்” எனும் ஞான தேகமும் புறத்தே “அம்” எனும் சுத்த தேகமும் விளங்குகின்றது.

இந்த “அம்பலம் (அம்+பல்+அம்)”

என்ற சொல்லுக்கும், வள்ளற் பெருமானுக்கு 22-10-1873 ஆம் ஆண்டு, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வெளிப்படுத்தியருளிய

“அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி”

என்ற மகா மந்திரத்திற்கும், “தயவு” என்ற மூன்றெழுத்து மகாமந்திரச் சொல்லுக்கும் நேரடித் தொடர்பு உள்ளது.

மேலும் இந்த மகா மந்திரத்தில் அருட்பெருஞ்ஜோதி என்ற சொல் மூன்று முறை குறிப்பிட காரணம் என்ன? தனிப்பெருங்கருணை என்ற சொல் ஒருமுறை வரக் காரணம் என்ன?

வள்ளலார் வடலூர் அடுத்த மேட்டுக்குப்பத்தில் சுத்த சன்மார்க்க கொடியேற்றி நீண்ட ஒரு பேருபதேசம் செய்தார்கள்.அதில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்;

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி, எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை, தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திர வாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின் கண் அனுபவித்து எழுந்த உண்மை அறிவு அனுபவ ஆனந்த இன்பத்தை, நீங்கள் எல்லவரும், என்போல் ஐயம் - திரிபு - மயக்கம் இன்றி அடைய, **என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமையைப் பற்றி குறிப்பித்தேன்; குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன்!** நமது ஆண்டவர்

கட்டளையிட்டது யாதெனில், நமக்கு முன் சாதனம் கருணை யானதினாலே, ஆண்டவர் முதற் சாதனமாக

**அருட்பெருஞ்ஜோதி**
**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**
**அருட்பெருஞ்ஜோதி**

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக்கொண்டார். **"தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய பேரறிவேயாம்."**

இஃது வாச்சியார்த்தம்; இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுபவம் பெறுவதற்கு தடை இல்லை!!

பொதுவாக தமிழ் வார்த்தைகளை "அலகு" அல்லது "அசை" என பிரிப்பர். அப்படி ஒரு வார்த்தையில் எத்தனை அசை உள்ளது என பார்க்கும்போது மெய் எழுத்துக்களை மட்டும் கணக்கில் கொள்ள மாட்டார்கள். உயிர் எழுத்து, உயிர் மெய் எழுத்து மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அப்படி பார்க்கும்போது, மகாமந்திரத்தில்

"அருட்பெருஞ்ஜோதி" இதில் 6 அசை வரும்.

"தனிப்பெருங்கருணை" இதில் 7 அசை வரும்.

6+7=13.

பதின்மூன்று என்பது சுத்த சன்மார்க்கத்தில் முடிவான அருள் அனுபவ நிலையைக் குறிக்கும்.

வள்ளற் பெருமான் உரைநடைப்பகுதியில் இந்த திரியோதச நிலைப் பற்றி குறித்துள்ளார்.

அது முதலில் நாம் நம் உடலைத்தான் கண்ணால் பார்த்தும், "உடலே நான்" என மயக்கறிவால் எண்ணியும் பிழைத்து வருகிறோம். பஞ்ச பூதத்தால் ஆன இந்த உடலையே பூதநிலை என குறிக்கின்றார். இப்படியே கரண நிலை என ஆரம்பித்து உள்ளே நமக்குள் செல்ல செல்ல முடிவில் இருப்பது (13 நிலை) திருவருள் நிலை.

இதுவே "அருட்பெருவெளி" எனவும் "தயாமூல தர்மம்" எனவும் குறிப்பிடுகின்றார்.

இங்குதான் பேரின்பம்-சச்சிதானந்தம் அனுபவப்படுகின்றதாம்.

அடுத்து மிக முக்கியமான செய்தி;

இதே போன்று "அருட்பெருஞ்ஜோதி மகா மந்திரத்தை" அலகு பிரித்துப் பார்க்கும்போது மொத்தம் 25 அசை வரும்.

25 என்பதை தமிழில் "உரு" எனக் குறிப்பிடப்படும். "உரு" என்பது 25 என்ற எண்ணிக்கையைக் குறிப்பது மட்டும் அல்ல!

**"உரு" என்பது நம்முடைய "அக வடிவத்தைக்" குறிக்கின்றது.**

திருவம்பலவன் திருநோக்கம் பெற்றார்க்கு,

"உரு" அம்பலத்தே என்று உன். - என்பது வள்ளல் வாசகம்.

உலகியலில் ஒருவன் சிந்தனை, சொல், செயல் நேர்மையானதாக இல்லையெனில் அவனைப் பார்த்து **"உருப்படுவாயா?!"** என்று கடின சொல்லாக வைவர்.

**"உருப்படுவாயா என்றால் உனது உண்மை அக வடிவமாகிய "அருள் உருவில்" பொருந்தி வாழ்வாயாக?! என அர்த்தம்.**

ஆக மகா மந்திரம் நமது "அக உண்மை அருள் உருவத்தை" காட்டி கூட்டி வைக்கவே திருவருளால் வள்ளலார் மூலம் வெளியானது.

கருத்து;-

திருவருட் பிரகாச வள்ளலார்,

தயாநிதி சுவாமி சரவணானந்தா

# பகுதி - 1 முற்றிற்று.

## தயவு



# “பகுதி - 2”

## 1 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## நான் யார்?

## - கடவுள் எங்கே?

இந்த மாமிச உடலையே நான் என் நினைப்பது தவறு. அது அறியாமையாகிய அஞ்ஞான இருள்.

இந்த உடலும், மனமும், உயிரும் நான் அல்ல!

அறிவே வடிவான ஆனந்த மயமான ஆன்மாவே உண்மையில் நாமாக உள்ளோம்.

இந்த ஆன்மா ஆவதுமில்லை; அழிவதுமில்லை; இது என்றென்றும் இருந்து வருவதே. அதாவது அனாதி காலமாக இருந்து வருவது.

இந்த அறிவே வடிவான ஆன்மா, இந்த உடம்பில் எங்கு உள்ளது?

உச்சிக்குக் கீழே, அண்ணாக்குக்கு மேலே, புருவ மத்திக்கு நேரே, அதாவது தலை நடுவில் உள்ளது.

இதைக் கண்ணால் பார்க்க முடியாது. இது அணு வடிவமானது.

இது கோடி சூரியப் பிரகாசம் உடையது.

இந்த ஆன்மாவிற்கு உள்ளே தான் கடவுள் உள்ளொளியாக என்றென்றும் இருந்து வருகின்றார்

கடவுளை புற உலகில் தேட வேண்டியதில்லை. நமக்கு உள்ளே தான் “அருட்பெருஞ்ஜோதியாக” உள்ளார்.

அவர் எல்லையில்லாத “தனிப்பெருங்கருணையே” வடிவானவர்.

கடவுளை நினைக்க வேண்டும் என்றால், நமது மனதை புருவ மத்தியில் நிலை நிறுத்த வேண்டும்.

புருவ மத்திக்கு உள்ளே ஒரு சிறிய, வெண்மையான தாமரைப்பூ இருப்பதாகவும், அந்த தாமரைப்பூவிற்கு நடுவில் ஒரு தீப வடிவில் கடவுள் விளங்குவதாகவும் பாவித்து வழிபட வேண்டும்.

இப்படி கடவுளை நேரடியாக தொடர்புக்கொண்டு வழிபட்டு வந்தால், எல்லா நன்மையும் கிடைக்கும்; துன்பங்கள் எல்லாம் ஒழியும்; தீராத நோய்கள் எல்லாம் தீரும்! *- இராமலிங்க அடிகளார்*

## கடவுளைக் காண வேண்டுமா?!
## உன் துன்பங்கள் தொலைய வேண்டுமா?!

புற உலகில், வெளியே எங்கும் கடவுளைத் தேடாதே; அப்படி எவ்வளவு காலமும் எங்கு தேடியும் அவர் கிடைக்க மாட்டார்.

**உனக்கு உள்ளே வா; மனதை அகமுகமாக திருப்பு; புருவ மத்திக்கு உள்ளே குவி; உற்று உற்று உள்ளே பார்;**

**"ஓர் அக உணர்வு உள்ளே உதிக்கும்! - அது " நான் இருக்கின்றேன்" என்ற இருப்புணர்வு மாத்திரமாய் நிற்கும்.**

**அது நித்திய இருப்புணர்வு ஆகாசமாய் அனுபவமாகும்**; அது நமது தலைநடுவே ஓர் அணுப்புள்ளி நிலையிலிருந்து விரிகின்றதாகும்.

அந்த இருப்புணர்வுக்கு உள்ளே தான் எல்லாம் வல்ல கடவுள் பெருங்கருணையே வடிவாய் விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

அவரையே ஞானிகள் உள்ளொளி என்கின்றனர். அந்த உள்ளொளியை உணரவேண்டும் என்றால், நாமும் கருணை மயமாக வேண்டும்; எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்; பசியோடிருக்கும் ஏழைகட்கு உணவளிக்க வேண்டும்.

எவ்வுயிரையும் கொலை செய்தல் கூடாது; மாமிச உணவு சாப்பிடக் கூடாது; பிற உயிர்களின் துன்பத்தைக் கண்டு இரங்கி, அந்த துன்பத்தைப் போக்க கடவுளிடம் பிரார்த்தனை செய்து வரவேண்டும்.

இப்படி செய்து வந்தால் உள்ளொளியாகிய கடவுள் நமது துன்பங்களை தீர்த்து வைப்பார்.

*- வடலூர் வள்ளலார்*

வள்ளலார் அருளிய மகா மந்திரம்;-

**அருட்பெருஞ்ஜோதி !**

**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை !**

**அருட்பெருஞ்ஜோதி !**

இந்த மந்திரத்தை தினமும் காலை, மாலை ஒரு 15 நிமிடம், புருவமத்தியில் ஒரு தீபச்சுடர் வடிவில் கடவுளை, மன ஓர்மையோடு நினைத்து, ஜெபித்து வந்தால், எல்லா துன்பங்களும் நீங்கி, சகல நன்மையும் உண்டாகும். இது சத்தியம். வள்ளலார் வாக்கு!

## தயவு ஒளி தெய்வீக சிந்தனை

திருவருட் பிரகாச வள்ளலார் எனும் வடலூர் இராமலிங்க சுவாமிகள் அருளிய "சுத்த சன்மார்க்கக் கொள்கைகள்";-

**இறைவன் அருளைப் பெற தயவே வழி**

**இறைவன் அருள் வடிவானவன்.**

அகண்ட ஆகாயவெளி முழுதும் நிறைந்தவன். என்றும் எங்கும் இயற்கை உண்மையாக, சத்துப் பொருளாக இருப்பவன்.

-உலகில் எப்பொருளிலும், எவ்வுயிரிலும் அருட்பெருஞ்ஜோதியாக நிறைந்துள்ளார்.

-கருணை மயமான மனித உள்ளத்தில் தான் கடவுளைக் காண முடியும்.

-எல்லா உயிர்களும் கடவுள் விளங்குகின்ற உண்மையான ஆலயங்கள் என்று அறியவேண்டும்.

-எல்லா உயிர்களிலும் கடவுள் வியாபித்து இருப்பதை அறிதலே உண்மையான ஈஸ்வர பக்தி.

-எவ்வுயிர்க்கும் இரங்கி அன்பு செய்வதே உண்மையான கடவுள் வழிபாடு.

-எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையை கடைபிடிக்க வேண்டும்.

-"தெய்வங்கள் பல " என்று கற்பனை செய்யக்கூடாது. "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்". கடவுள் ஒருவர்தான். அவர் "அருட்பெருஞ்ஜோதி"யாக உள்ளார்.

-சிறு தெய்வ வழிபாடு அவசியமல்ல. தெய்வங்கள் பெயரால் உயிர்களை பலியிடுதல் கூடாது. அது பெரும்பாவக் கொடுஞ்செயல்.

-எவ்வுயிரையும் கொலை புரிதல் கூடாது.

-மாமிசம் என்னும் புலால் உண்ணக்கூடாது.

-ஆடு, மாடு, கோழி, மீன், முதலிய "கடவுள் வாழும் ஆலயங்களை" "ஆ" என்று துடிதுடிக்க பதைபதைக்க இரத்தம் சிந்த கொன்று தின்றால் இறைவன் அருளை எப்படி பெற முடியும்?

-சாதி, மதம், சமயம், இனம், மொழி, தேசம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலான வேறுபாடுகள் கூடாது. எல்லோரும் நமது சகோதரர்களே என்று உணரவேண்டும்.

-இறந்தவர்களை புதைக்க வேண்டும்; எரித்தால் பாவம்.

-ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல்!

-ஆதரவற்ற ஏழைகட்கு, ஊனமுற்றவர்கட்கு ஆகாரம் கொடுத்தால் எல்லா துன்பங்களும் நீங்கி கடவுளின் திருவருளைப் பெற்று எக்காலமும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வு பெறலாம்

நில்! கவனி!! செல்!!!

## 1-உன்னையே நீ அறிவாய்!

இன்றைய சுய சிந்தனை;-

கேள்விகள் கேட்கப்படவேண்டும்! அப்போதுதான் பதில் கிடைக்கும்! அப்படி கேட்கின்ற கேள்வி, தன்னையே நோக்கி கேட்கப்படவேண்டும். அப்படி மனிதன், தன்னை நோக்கி கேட்கப்படவேண்டிய முதல் கேள்வியும் முக்கியமான கேள்வியும் என்ன என்றால்,அது,

**நான் யார்? என்பதுதான்!** இந்த கேள்விதான் இப்பொழுது அவசரமானதும், அவசியமானதும் ஆகும். நான் யார்? எனத் தெரியாமலே இவ்வுலகில் வாழ்ந்துக்கொண்டிருப்பது, அறியாமையாகிய இருள் நிலை ஆகும். இந்த அஞ்ஞான இருள் ஞானம் என்கின்ற ஒளியால் விலக்கப்பட வேண்டும். நான் இருக்கின்றேன் என்ற உணர்வு நமக்கு இந்த உடலில் எங்கிருந்து உதிக்கின்றது என்பதை கவனிக்க வேண்டும். இந்த அசுத்தமான மாமிச உடலிலிருந்து உதிக்கின்றதா அல்லது இதயத்தில் இயங்குகின்ற மனம் மற்றும் உயிர் நிலையிலிருந்து உதிக்கின்றதா? இல்லை!

இல்லை!! அதற்கு மேல் **அறிவு நிலையிலிருந்தே இந்த நான் இருக்கின்றேன் என்ற இருப்புணர்வு உதயமாகின்றது.** அந்த அறிவு இந்த உடலில் எங்கே நிலைகொண்டிருக்கின்றது? **தலை நடுவில் இருந்துதான் இந்த அறிவு, சதா "நான்-நான்" என உணர்வுச் சுடராய் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது! இது, நித்திய இருப்புணர்வு ஆகாசமாய் இருக்கின்றது!** இதைக் கண்ணால் காண முடியாது! இது அணுத்துவமான ஒர் மிகச்சிறுப்புள்ளி நிலையிலிருந்து வெளிப்பட்டு விளங்கிக்கொண்டே இருக்கின்றது!

இப்படி இது ஏன் எதற்காக எப்படி விளங்கிக் கொண்டிருக்கின்றது?

கேள்வியும் பதிலும் தொடரும்!

-நில்! கவனி! செல்!!!

## 2 - உன்னையே நீ அறிவாய்!!!

"**அன்பாம் அகிலமாம்**" என்பதே வள்ளலார் வாக்கு.

**அகண்டமான அன்பு என்கின்ற இயற்கை இருப்புதான் கடவுள் எனப்படுகின்றது!!!**

அதையே இயற்கை உண்மை என்றும் அருட்பெருஞ்ஜோதி என்றும் வள்ளலார் கூறுகின்றார். அது நம் தலைநடுவே ஆன்மாவில் தனிப்பெருங்கருணையோடு விளங்கிக் கொண்டிருக்கின்றது.

எல்லா உயிர்களின் தலைநடுவிலும் அந்த "கடவுள் உள்ளொளி" சதா பிரகாசித்துக்கொண்டுள்ளது. அந்த உள்ளொளியே உள்ளிருந்து விரிந்தே ஒவ்வொரு உயிரின், மனிதனின் அறிவாகவும்,உயிராகவும், மனமாகவும், உடலாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஐந்தறிவு வரையுள்ள ஜீவராசிகள் மனம் இல்லாத காரணத்தால் கடவுளை அறிய அங்கு வழியில்லை. (மனம் பெற்ற மனிதன் மட்டுமே) தன்னையும் தனக்குள் இருக்கும் கடவுளையும் அறிந்து, உணர்ந்து பேரின்பத்தில் வாழமுடியும். ஆனால், நாம் இப்போது இந்த உடலே நான் என எண்ணிக்கொண்டு மாயா உலக வாழ்வில் அல்லலும், துன்பமும், பலவிதமான அவஸ்தைகளும் பட்டுக்கொண்டு எப்படி எப்படியெல்லாமோ பிழைத்து வந்து முடிவில் அழிந்து போகிறோம்.

இதற்காகவா இறைவன் இந்த தேகத்தில் நம்மை வரவழைத்துள்ளார்?!

ஆன்மாவை அறிந்துக் கொண்டு நித்தியமான ஆனந்த வாழ்வில் வாழ அல்லவோ நாம் இங்கு வந்துள்ளோம்!!!

மனிதன் உள்ளிருக்கும் உண்மையை உணராது தேகபோக, உடல் இச்சையை மாத்திரமே அனுபவித்து ஒழிந்து போவது கடவுளின் திருவருட் சம்மதமல்ல!

நான் யார்? உண்மையில் நான் எதுவாக இருக்கின்றேன்? என்று தீர விசாரிக்க வேண்டும். கடவுளுடைய உண்மை என்ன?

கடவுள் உண்மையில் எங்கே, எப்படி இருக்கின்றார்?! என சத்விசாரம் செய்ய வேண்டும்.

“பொது அன்றி தங்கும் இடம் போச்சு” என்கின்றார்கள் மெய்யுணர்ந்த ஞானிகள். பொது என்பது நம் ஆன்மா ஆகும்!!

ஆன்மாவிற்கு உள்ளே தான் எல்லாம் வல்ல ஆண்டவர் அனாதி காலமாக இருந்து வருகின்றார்.அந்த நாமாகிய ஆன்மாவாகவும் விளங்குவது கடவுளே!! கடவுளே எல்லாம் ஆனவராய்த் திகழ்கின்றார். அவருக்கு அயலாய் எந்த ஒரு மனிதனோ, உயிர்களோ, பொருள்களோ இல்லை! அவரே இப் பிரபஞ்சத்தில் எல்லா அணுக்களாயும், அண்டங்களாயும் இருந்துக்கொண்டும், அவற்றை இயக்கிக் கொண்டும் உள்ளார். இதெல்லாம் எதற்காக என்றால், “கடவுளின் அருள் அனுபவத்திற்காக” என்பதே விடையாகும்.

**தன்னைத் தானே அனுபவிப்பதற்காகவே அவரே ஆன்மாவாய் விளங்குகின்றார்!!**

கடவுளின் சத்து - சித்து - ஆனந்த அனுபவ வாழ்விற்காகவே இப்பிரபஞ்சத்தில் எல்லாம் விளங்கிக்கொண்டு இருக்கின்றன. இப்பொழுது மனிதன் உண்மையை உணர்ந்துக்கொள்ள பகுத்தறிவை பயன்படுத்த வேண்டும்.

**உடல், மனம், உயிர் நிலைகளைக் கடந்து, நாம் அழியாத ஆனந்த மயமான அருட்ஜோதி - ஆன்மாவாகத்தான் என்றென்றும் அனாதி காலமாக இருந்து வருகிறோம் என்ற உண்மையை உணர்ந்துக்கொண்டு அழியாத பேரின்பப்**

**பெருவாழ்வில் வாழ கடமைப்பட்டுள்ளோம். அதுவே இந்த மனிதப் பிறப்பின் உண்மையான இலட்சியமாக உள்ளது.**

அந்த தலைநடு விளங்கும் ஆன்மாவை அறிய மனதை இரு கண்களுக்கு இடையில், புருவ மத்திக்கு உள்ளே நினைப்பு மறப்பு இன்றி நிலை நிறுத்தி உள் நோக்கிப் பார்த்தால் ஆன்மாவின் இருப்பு தெரியவரும். அது, ஓர் **நித்திய இருப்புணர்வு அறிவு ஆகாசமாக அனுபவப்படும்!!**

அந்த ஆன்ம அறிவுக்குள் ஒப்பற்ற பெருந் தயவுடைய பேரறிவாக, தனிப்பெருங்கருணை வண்ணமாக விளங்குபவர் தான் கடவுள். அவரை அன்பு உணர்ச்சியால் பற்றிக்கொண்டு, அகம் இருந்து உயிர், உடல் என அனகமாக என்றென்றும் அழியாது வாழ்வதே வள்ளலார் இவ்வுலக மனித சமுதாயத்திற்கு காட்டிய சுத்த சன்மார்க்க அருட்பெருநெறியாகும்.

**அகம் இருந்து வருக அருளுடன்!**
**அனகமாக வாழ்க தயவுடன்!!**

இந்த விளக்கத்தை தருபவர் திருவருட்பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க அடிகளார்.

நில்! கவனி!! செல்!!!

## 3- உன்னையே நீ அறிவாய்!!!

## நான் யார்?!

இன்றைய சுய சிந்தனை;

**எல்லா துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற ஒரே வழி தன்னை யார்? என்றும், தனது உண்மை என்னவென்றும் அறிதல் வேண்டும்.** மனிதன் உண்மையையும், கடவுள் உண்மையையும் உள்ளபடி அறிய இறைவனிடம் அபயம் வேண்டி நிற்போம்.

“நான் யார்” என்று அறியேன், எனக்கோன் யாரென்று அறியேன்என்பது திருவருட்பா பாடல்.

தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே, ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே என்று வள்ளலார் வேண்டுகின்றார்.

தன்னை அறிய தனக்கொரு கேடில்லை,
தன்னை அறியாமல் தானே கெடுகிறான்,
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்,
தன்னை அருச்சிக்கத்தான் இருந்தானே

என்பது திருமூலர் திருமந்திரம்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னை யாரென்று அறிந்து கொள்ளவேண்டும். அதுவே தலையாய கடமை! இப்பிறப்பின் இலட்சியம்! எல்லா துன்பங்களுக்கும் மூலகாரணம், "தன்னை யார்?", என்று தெரிந்துக் கொள்ளாமையே!

**தன்னை அறி; இன்பமுறு; சாகாது இரு**

- என்பதே வள்ளலாரின் உபதேசம்.

தன்னை அறியும் அறிவு தன்னைப் பெறில்,
பின்னைப் பிறப்பில்லை வீடு - என்பது ஔவைக்குறள்.

இப்பொழுது நம்மை நோக்கியே நாம் கேள்விகளைக் கேட்போம்.

மனதை இருகண்ணிடை புருவமத்தியில் அறிவு பீடத்தில் நாட்டம் வைத்து, சிந்தித்து உணர்ந்தால் தான் கேள்வியின் முக்கியத்துவம் புலனாகும். பின்பு உள்ளிருந்து விடை கிடைக்கும். ஒவ்வொரு கேள்வியையும் ஊன்றி பலமுறை சிந்தித்து புருவநடு நிற்கவும்!

அகநிலையை அறிந்து சகல துன்பத்திலிருந்தும் விடுதலைப் பெற விசாரமே வழி.

**அகநிலை ஆய்வு :**

**மனிதன் யார்? !!**

இனி தன்னை நோக்கிய கேள்விகள் தொடரும் :

நான் என்பது என்ன? நான் என்பது யார்? இவன் விலாசம் என்ன?

நான் என்பது இந்த உடலா? உடல் எனக்கு எப்படி வந்தது?

நான் இத்தனை கிலோ எடையாக உள்ள கறிச்சுமையாக உள்ளவனா?

கண்ணாடியின் எதிர் நின்று, ஊனக்கண்களால் பார்த்துத் தெரிந்துக் கொண்ட முக உருவம்தான் எனது உண்மை வடிவமான? கண்ணின்றி கண்ணாடியின்றி காண முடியாதபடி உள்ள இந்த மாமிச உடலோ என் உண்மை உருவம்.?

**காலம் செல்லச் செல்ல, தோற்றத்திலும் எடையிலும் சூழ்நிலைக்கேற்ப மாறிக்கொண்டு, முடிவில் மூத்துசிதைந்து நாறி ஒழியும் இந்த ஒன்பது வாயிலுடைய மலக்கூடோ நான்? இதுதான் தன்னை "நான்" என்கிறாதா?**

மண்ணும் நீரும் காற்றும் அடைத்த பையோ, ஐயோ நான்?

உடம்பின் உள் உறையும், சூக்குமமான உயிர் நானா? இந்த உடம்புக்குள் உயிர், எங்கிருந்து வந்தது எப்படிப் புகுந்தது? ஏன் புகுந்தது?

உயிர் என்பது என்ன? அது எப்படி, எங்கு இவ்வுடலில் இருக்கிறது? அது எதனால் ஆனது? அதன் வடிவம் என்ன?

இது கூடுவதும் குறைவதுமான ஆற்றலால் ஆனதோ? வாங்குவதும், விடுவதுமான சுவாசக் காற்றால் ஆனதோ? இன்ப துன்பம் கடத்தும் ஊடகமோ இது? இதயத் துடிப்பால் ஜீவித்திருக்கும் தத்துவமோ இது?

ஊனக் கண்ணால் உடம்பைப் பார்க்கிறோம்! இந்த நான் என்ற உணர்வுடைய உயிரை எந்தக் கண்கொண்டு அறிவது? இப்பொழுது வரை அந்த உயிரின் வரலாறு பற்றி என்ன தெரிந்துள்ளேன்?

அடுத்து இதய ஸ்தானத்தில் இருந்து, எண்ணற்ற எண்ணங்களால் நாளும் என்னை பலவாறாக தொல்லைப்படுத்தி அலைக்கழிக்கும் இழி மனம் நானா?

உயிர் வாழ்க்கை அனுபவத்திற்கு ஆதார மைய நிலையமாகிய மூளைநடுவே இருக்கும் அறிவு எனும் ஆன்ம இருப்புணர்வு நானா?

காண்டல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல், ஸ்பரிசித்தல் முதலான ஐம்புலன் உணர்வுகள் எல்லாமே நரம்புகள் வழியாக மூளைநடு ஸ்தானத்திற்கு செய்தியாக கொண்டு சென்று அனுபவிப்பது எப்படி? ஏன்? ஐம்புலன் உணர்வும், மன நினைப்பு மறப்பும் இங்கு யாருக்கு எங்கு ஏற்படுகின்றது?

நான் எங்கிருந்து வந்துள்ளேன்? எதற்காக பிறந்துள்ளேன்? இப்பிறப்பின் இலட்சியம் என்ன? உயிர் வாழ்க்கையின் அவசியம் என்ன? எதற்காக நான் வாழ்ந்துக்கொண்டிருக்கிறேன்?

ஏதோ பிறந்தோம்! சிலகாலம் இங்கு போராடி, பிழைத்திருந்துவிட்டு, மடிந்து ஒழிந்து தான் விதியா?

மனிதனுக்கு, இன்ப - துன்ப அனுபவங்களைத் தரும் இந்த புற உலக பிரபஞ்ச வாழ்வு தரும் பயனும் முடிவும் என்ன? இங்கு கற்ற பாடம் என்ன?

இங்கு திருவருட்பா பாடல் ஒன்றின் சில வரிகளை நினைவு கூர்வோம்;-

கண்டது எல்லாம் அநித்தியமே! கேட்டதெல்லாம்பழுதே

கற்றதெல்லாம் பொய்யே! நீர் களித்ததெலாம் வீணே! உண்டதெல்லாம் மலமே உட்கொண்டதெல்லாம் குறையே! உலகியலீர் இதுவரையும் உண்மை அறிந்திலீரே !!!!???

## நான் ஒருவன் இங்கு ஏன்? "எனது" என்ற தனி ஒரு அனுபவம் எதற்கு?

"நான்" இல்லாமலே இருந்திருந்தால் நல்லாயிருந்திருக்கும் அன்றோ? ஏன் இவ்வுலகில் இந்த அல்லலும், தொல்லையும், துன்பமும், பாடும்?

இந்த உடலில், "இருக்கின்றேன் நான்" என்ற உயிர்வுணர்வு - ஜீவ இருப்புணர்வு எங்கிருந்துக் கிளம்பி வந்துக்கொண்டிருக்கின்றது?

நான் - நான் - நான் என்று, சதா சுயம்பிரகாசமாய் என்றும் எப்போதும் ஒருபடித்தாய் நிகழ்காலத்திலேயே நிராதாரத்தே சுடர்விட்டுக்கொண்டு இருக்கின்ற உணர்வும் சுடர் ஒன்றை யார் என்று நீ பார்க்கிறாய்-??!!

தூலசரீரம், சூக்குமசரீரம் - காரண சரீரம் என்பதென்ன?

உடம்புக்கும், உயிருக்கும், அறிவுக்கும் என்ன தொடர்பு?

உயிரைச் சூழ்ந்து இந்த தூலமான மாமிச புலையுடலும், உடலுக்கு உள்ளீடாக சூக்குமமான உயிரும் ஒன்றாய் இணைந்து விளங்க, இதற்குப்பால், காரணமான "நான்" எனும் அறிவும், ஆக ஆம் மூன்றும் ஒன்றி வந்த விதம் என்ன?

என்னுடைய “நான்” என்ற இருப்புணர்வு

உடல் உருவத் தோற்றத்தால் விளங்குகின்றதா?

**(Appearing physical body)**

உயிர் ஆற்றல் வடிவத்தால் விளங்குகின்றதா?

**(Experiencing energy body)**

ஆன்ம அறிவு விளக்கத்தால் விளங்குகின்றதா?

**(Presence of soul atom)**

இந்த மூன்றும் இருப்பதால்தான் நான் இருக்கின்றேன் அன்றோ?!

-இப்பொழுது இக் கேள்விகளுக்கான விடை என்ன?

**நான் என்ற ஒன்று, வெளியே தோற்றுவதல்ல; நான் என்பது இதுவரை நாம் எண்ணியது போல ஜடமானதேகமாக தோன்றி, சிலகாலம் விளங்கி, பின் மங்கி மறைந்து ஒழியும் வடிவமல்ல! இது (நான்) உள்ளிருந்து ஓங்கும் அருட் ஜோதி அணு!!! அறியாமையில் உள்ளவரை. அதன் உண்மைப் பொருள் மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. உண்மை நிலை பெற விழைவோர்க்கு உரிமையானது; வெளிப்படையானது;**

**உள்ளே மிக மிக ஆழ்ந்த நிலையில் பேரமைதியில் வைக்கப்பட்டுள்ளது.**

**இது அறிவு சொரூபமானது; தயவே இயல்பானது; மெய்ஞ்ஞான உணர்வானது : நான் என்பது ஓர் அற்புதமான அக உணர்வு: இது கடவுளின் இயற்கை விளக்க சித்துருவம்; பிறப்பு இறப்பு அற்றது !!!**

அன்புச் சிவமாகிய ஏகமான கடவுளே நான் என்ற அனேக வேடம் பூண்டு சச்சிதானந்த அனுபவத்தின் பொருட்டு எண்ணற்ற ஆன்ம கோடிகளாக விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

**நானாகிய மனிதனும், தானாகிய கடவுளும் சேர்ந்த இரண்டற்ற ஒருநிலை கொண்ட ஓர் அணுவே அருட்ஜோதி ஆன்மா இது பேரானந்த அனுபவம் கொண்டது !!!**

ஆன்மாவை அறிந்து கொள்வோம் !!

ஆனந்தமாக வாழ்வோம் !!

# 4-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## மனக்கவலையை மாற்ற தியானம் செய்க

-அதிகாலை தியானம் நல்ல சூழ்நிலையை உண்டாக்கும்.

-புருவ மத்திக்கு உள்ளே ஒரு சிறிய, பிரகாசமான, வெண் தாமரைப்பூ விளங்குவதாகவும், அந்த தாமரைப்பூவின் நடுப்பொகுட்டிலே ஒரு தீபம் சுடர்விட்டுக் கொண்டிருப்பதாகவும் பாவிக்க வேண்டும்.

-எல்லாம் வல்ல கடவுள் அந்த தீபத்தில் எழுந்தருளியிருப்பதாக நினைக்க வேண்டும்.

-அகண்டமான அன்பு உணர்வுதான் கடவுளாக இருக்கின்றது.

-அது எல்லாம் செய்ய வல்லது; எந்த ஒரு வேண்டாத சூழ்நிலையையும் மாற்றி சகல நன்மையும் தர வல்லது.

-அதிகாலை தியானம், மனக்கவலையைப் போக்கி, உடல் ஆரோக்கியத்தைத் தரும்.

-தியானம் செய்யும்போது,

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

என்ற மகாமந்திரத்தை ஜெபிக்கவும்.

-அரை மணி நேரமாவது தியானத்தில் இருக்க வேண்டும்.

-தியானம் செய்கின்றபோது வேறு சிந்தனை ஏதும் தோன்றாதபடி கவனமுடன்தொடர வேண்டும்.

# 5- தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## மனக்கவலையை மாற்ற தியானம் செய்க

திருவள்ளுவர் கூறுகின்றார்;-

“தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு,

அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது ” என்கின்றார்.

**தாள் சேர்தல் என்றால் என்ன?**

தாள் என்பது இறைவனுடைய திருவடி ஆகும். திருவடி என்றால் மனிதனுக்கு இருப்பது போன்ற பாதம் என்று நினைத்துவிடக் கூடாது.

திருவடியின் உண்மையை நாம் உள்ளபடி அறிந்துக் கொள்ள வேண்டும்.

இறைவனுக்கு, அடி - முடி என்ற இரு நிலைகள் உண்டு.

**முடி என்பது என்ன?**

நாம் கண்ணால் பார்க்கும் ஆகாயம் எல்லையற்றது; அளவிடற்கு அரியது. நம் கண்ணுக்குத் தெரிவது பரந்த அகண்டாகாச வான் பெருவெளியின் மிகமிக சிறிய கூறே ஆகும். ஆகாயம் எங்கேயும் முடியாது. அது எங்கேயாவது முடிந்துவிடுமாயின், அதற்கு அப்பால் என்ன இருக்கும்? என்ற கேள்வி எழும்! வானம் எங்கேயும் முடியாது என்பதுதான் இயற்கையில் உள்ள அற்புதம்!!! அந்த அகண்டாகாச வான்பெருவெளிக்கு உள்ளே, அனாதி காலமாய் இருந்து வருபவர்தான் அன்பு இருப்பு என்கின்ற கடவுள்!!! இதையே வள்ளலார், சத்துப் பொருள் என்றும், இயற்கை உண்மை என்றும் அழைக்கின்றார்.

இப்படி அகல் வான் வெளியிலே **எங்கெங்கும் என்றென்றும் உள்ள நித்திய சத்திய இயற்கை அற்புத அன்பு என்கின்ற இருப்பே கடவுளின் முடி எனப்படும்.**

அடுத்து, **அடி - திருவடி - தாள் என்பது என்ன?**

இயற்கை உண்மைக் கடவுளின், இயற்கை விளக்க நிலையே அடி - திருவடி - தாள் எனப்படும். அதாவது அன்பு என்கின்ற அகண்டமான இருப்பாம் கடவுளே, எல்லையில்லாத, பேரருட் பெருங்கருணை கொண்டு, அருள் என்கின்ற தனிப்பெருங்கருணை உணர்வாகி நமது தலைநடுவில் உள்ள ஆன்ம அறிவில் எழுந்தருளியுள்ள நிலையே **திருவடி** ஆகும்.

**இந்த திருவடி அகண்டாகாச வான் பெருவெளி முற்றும் நிறைந்த இறை உண்மையைப் பூரணமாக தன்னுள் கொண்டதாகும். அது வேறல்ல! இது வேறல்ல!**

அதுவே இது; இதுவே அது !!!

அறிவால் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைவோனே என்பார் அருணகிரிநாதர்.

எனவே, இறைவன் நமக்குள்ளே பரிபூரணமாக உள்ளார் என்பதை அறிவதுதான் உண்மை அறிவு.

தியானத்தால், அருள் உணர்வாய் நம்முள் நாமாக விளங்கும் கடவுளைப் பற்றிக்கொண்டு வாழ்தலே உண்மை வாழ்வாகும்!!!

இப்படி வாழ்பவர்களுக்கு, இறைவன் அருளாலே மனக்கவலை எல்லாம் ஒழிக்கப்படும். புறச்சூழ்நிலைகள் எல்லாம் நன்மை பயப்பனவாகவே இருக்கும்; ஒரு குறையும் நேராது!

**தியான மயமானால் பொசிப்பு மாறும்**

என்பது வள்ளலார் அருள் வாக்கு! பொசிப்பு என்பது ஊழ்வினையால் வரும் துன்பங்கள்; அஜாக்கிரத்தையினால், உடல்-உயிர் - உள்ளம் ஆகிய மூன்றையும் அடுக்கும் கேடுகள்; முடிவில் மரணத்தையே தருவது ; இவை எல்லாமே பொசிப்பு எனப்படும். இவை எல்லாவற்றையும் நீக்கி, உண்மையும் - அமைதியும் - ஆனந்தமும் நிறைந்த சத்திய நித்திய நிறை வாழ்வளிப்பதுவே வள்ளலார் காட்டிய அருட் ஜோதி தியானம்!!!

அனுதினமும் தவறாமல் அதிகாலையிலும், இரவிலும் அருட்ஜோதி தியானம் பழகுவோம்! அளவற்ற நன்மைகளைப் பெறுவோம்!!!

தயவு

## 6-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

மனக்கவலையை மாற்ற தியானம் செய்க

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேராதார்" - என்பது வள்ளுவர் வாக்கு.

உள்ளொளித் தியானம்

திருவருட்பா குறிப்பு;

இந்த தேகத்தில், புருவ மத்தியில், ஆன்ம அறிவு என்கின்ற கற்பூரத்தில் அருள் என்கின்ற தீபம் விளங்குவதாக பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகி கடவுளிடத்து உண்மையாகிய அன்பும்

ஜீவர்களிடத்து உண்மையாகிய காருண்யத்தையும் இடைவிடாது வைக்க வேண்டியது.

எப்போதும் புருவமத்தியின் கண்ணே மனத்தை செலுத்த வேண்டும்.

-அகமாகிய ஆன்மப்பிரகாசமே சபையாகவும், அதன் உள்ளொளியே - பதியாகவும் கண்டு நிற்றல் வேண்டும்.

உன்னைப் பார்; உனக்குள்ளே என்னைப்பார்; ஊரைப் பார்த்து உழலாதே என்று கடவுள் உபதேசிக்கின்றார்.

**தியானத்தின் பலன்கள் : -**

உண்மையான தியானப் பயிற்சியை தினமும் செய்து வந்தால் உடல், மனம், உயிர், ஆன்மா ஆகிய நான்கு இடத்தும் சிறந்த நன்மைகள் இறைவன் திருவருளால் ஓங்கும். புருவ மத்திய தியானத்தின் தனிச் சிறப்பு;-

இந்த இடம் உங்களுக்கு தாய், தந்தை, அண்ணன், தம்பி, உற்றார் உறவினர், சிநேகிதர் முதலான ஆப்தர்களால் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ அதைவிடக் கோடி கோடி பங்கு அதிகமான உதவி கொடுக்கும்படியாக உள்ள இடம் இந்த இடம் என புருவ மத்திய லலாடஸ்தானமாகிய சித்திவளர் அகமாகிய ஆன்ம பீடத்தை குறிக்கின்றார். இங்குதான் அருட்ஜோதியாகிய ஆன்மா கோடி சூரியப் பிரகாசத்துடன் ஒளிர்கின்றது என்கின்றார் வள்ளலார்.

உடல்;

சீரான இரத்த ஓட்டம், சீரான சுவாசம், உடல் ஆரோக்கியம், சோம்பலின்மை, சுறுசுறுப்பு, நோய்கள் நீங்கும். ஊழ்வினையால் எந்த கெடுதலும் வராது.

மனம்;

மன அலைச்சல் நீங்கி, உள்ளத்தில் அமைதி சிறக்கும். பயம், கவலை முதலியன உள்ளொளியால் நீக்கப்படும். உள்ளே இருக்கும் ஒப்பற்ற துணைவனை நேருக்கு நேர் அறிந்தபின் மனோதிடம் உண்டாகும். மாணவர்கட்கு ஞாபகசக்தி அற்புதமாக வளர்ந்து வளமான சிந்தனை ஆற்றல் மிகும். கல்வித் திறன் ஓங்கும். ஒழுக்கமான குணம் வளரும்.

உயிர்;

ஜீவசக்தி பெருகும். அமைதியான இன்பம் கிடைக்கும். உள்ளொளியிலிருந்து அமுதம் பெருகி உயிரை வளர்க்கும். எத்தகைய துன்பமும் சாராது அருள் ஒளி உடனிருந்து காக்கும்.

ஆன்மா;

ஆன்மா தன்னை அறிந்து சத்சித் ஆனந்த பேரின்பத்தில் விளங்கும். இதுவரை தன்னை மறைத்திருந்த பாசாந்தகார அஞ்ஞான ஆணவ இருள் அகன்று போக, தன்னை கடவுள் மயமாக அறிந்து நிற்கும். மாயா மலமும் இருவினை கன்ம மலமும் ஒழியும். நினைப்பு மறப்பு, இன்பம் துன்பம், இரவு பகல், பிறப்பு இறப்பு இவைகளாலான அநித்திய மாயா மயக்க வாழ்வு கழியவும்,

அகநிலை நித்திய அருள் இன்ப வாழ்வு தழைக்கவும்,

இறவாமை என்னும் சாகாக்கல்வி கற்கும்.

அகண்ட பிரபஞ்ச வெளி முற்றும் நிறைந்து யாவும் தானாய் நிற்கும்!! ஒன்றான அருள் அனுபவத்தில் ஓங்கும்.

**நித்திய நிலையான ஆன்ம அகம் பற்றி நில்!**
**சத்திய பதியான அருட்ஜோதியோடு உறு!!**
**சுத்த தயவு செயலாக எதையுமே செய்!!!**

- வள்ளலார் அருளிய தியானக் குறிப்புகள்

தயவு

# 7 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# வள்ளலாரின் உயிர் இரக்கம் !!!

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன், பசியினால் இளைத்தே

வீடுதோறு இரந்தும் பசியறாது அயர்ந்த வெற்றரைக்கண்டு உளம் பதைத்தேன்,

நீடியபிணியால் வருந்துகின்றோர் என் நேருறக் கண்டு உளந் துடித்தேன்,

ஈடின்மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர் தம்மைக் கண்டேஇளைத்தேன்.

- வள்ளலார் வாழ்வில் நடந்த ஓர் அதிசயத்தக்க சம்பவம்;-

- ஒருமுறை வள்ளற் பெருமானும், அவருடைய நண்பர் சிவயோகி கல்பட்டு ஐயாவும், ஒரு அன்பரின் அழைப்பை ஏற்று, மாட்டு வண்டியில், பக்கத்து கிராமத்திற்குச் சென்றுக் கொண்டிருந்தனர். அது ஒரு கூடாரம் அமைத்த வண்டி. வண்டியின் மீது வைக்கோல் போட்டு, அதன்மீது கீத்தான் (சாக்குப்பை) போடப்பட்டு மெத்தை போலிருந்தது. அதன் மேல் இருவரும் அமர்ந்திருந்தனர். வண்டி சென்றுக்கொண்டிருந்தது. அப்போது பெருமான் கல்பட்டு ஐயாவைப் பார்த்து, “சற்று நேரம் இளைப்பாறுதும் காணும்”, என சொல்லிக்கொண்டே, கல்பட்டாரின் மடியில் தலையை வைத்து சாய்வாகப் படுத்துக்கொண்டார். ஒரு பத்து நிமிடம் ஆகியிருக்கும். கல்பட்டு ஐயா தான் கட்டியிருந்த மடித்துணி (வேஷ்டி) ஈரமாய் நனைந்து போய் இருப்பதைப் பார்த்தார்; அவருக்கு ஒன்றும் புரியவில்லை! ஏன்? எனத் தெரியவில்லை. கடைசியில் வள்ளலாரின் முகத்தைப் பார்த்தார்; அவரது திருக்கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்து வழிந்துக்கொண்டிருந்தது! அதிர்ந்து போனார் கல்பட்டார். “என்ன ஆயிற்றோ பெருமானார்க்கு?” என்று நினைந்து உளம் நடுங்கினார். எனினும் பெருமானை எழுப்ப துணிவு இல்லை.“எந்த தவநிலையில் இருக்கின்றாரோ”, என தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டார். இன்னும் சற்று நேரம் வண்டி போய்க் கொண்டிருந்தது. இப்பொழுது பெருமானின் கண்களிலிருந்து பெருகிய தண்ணீரானது, கீழே விரிக்கப்பட்டிருந்த சாக்குப்பை முழுதும் நனைந்து விட்டிருந்தது.கல்பட்டார் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை. இப்பொழுதும் அவரை எழுப்ப துணிவில்லாமல் இருந்தார். நேரம் கடந்துக்கொண்டிருந்தது. வள்ளலாரின் திருக்கண்களிலிருந்து பெருக்கெடுத்த நீர் நின்றபாடில்லை! அது சாக்குப்பைக்கு கீழே பரப்பப்பட்டிருந்த வைக்கோல் முழுதும் நனைந்து போய், வழிந்து மாட்டுவண்டிக்கு கீழே சொட்டு சொட்டாக சிந்திய வண்ணம் இருந்தது!! அவ்வளவுதான். அதைக் கண்ட கல்பட்டய்யா, “ ஐயோ! சுவாமி, உங்களுக்கு என்னவாயிற்று?”, என் கதறியபடி கேட்டார்.

பெருமான் எழுந்துக்கொண்டு, “ஒன்றுமில்லை காணும்! இந்த உலகத்தில் உயிர்களெல்லாம் எல்லையில்லாத துன்பத்தில் சிக்கி தவிக்கின்றனவே! இறைவா, இவ்வுயிர்களின் துன்பமெல்லாம் எப்போது தொலையுமோ?! ”, என்று ஆண்டவரிடத்து விண்ணப்பம் செய்துக்கொண்டிருந்தேன் காணும், என திருவாய் மலர்ந்தருளினார்கள்!

இது உண்மையாக நடந்த ஒரு நிகழ்ச்சி.உலகுயிர்கள்பால் வள்ளலார் வைத்திருந்த கருணையை அளவிட்டு கூறமுடியாது. அதை அவரே ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்:-

1) வரும் உயிர் இரக்கம் பற்றியே உலக வழக்கில் என் மனம் சென்றதோறும்,

வெருவி நின் அடிக்கே, விண்ணப்பித்திருந்தேன், விண்ணப்பம் செய்கின்றேன் இன்றும்,

உருவ, “என் உயிர்தான்- உயிர்இரக்கந்தான், ஒன்றதே! இரண்டிலை!! இரக்கம்

ஒருவில், என் உயிரும் ஒருவும்!”, என் உள்ளத்து ஒருவனே நின் பதத்தாணை.

2) என்னையும் இரக்கம் தன்னையும் ஒன்றாய் இருக்கவே இசைவித்து இவ்வுலகில்,

மன்னி வாழ்வுறவே, வருவித்த கருணை வள்ளல் நீ, நினக்கு இது விடயம்

பன்னல் என் அடியேன்! ஆயினும் பிள்ளைப் பாங்கினாலுரைக்கின்றேன், எந்தாய்!

இன்னவாறு என நீ சொன்னவாறு, இயற்றாது இருந்ததோர் இறையுமிங்கிலையே!

மேற்கண்ட பாடலிலிருந்து, வள்ளற்பெருமான் பெருங்கருணையே வடிவாய் திகழ்ந்தார் என்பதை உணரலாம்.

மேலும், இவ்வுலகில் மனிதர்கள் புலால்(மாமிசம்) உணவிற்காக உயிர்களை துன்புறுத்திக் கொலை புரிவதை சர்வசாதாரணமாய்க் கொண்டுள்ளனர். இந்த இரக்கமற்ற, ஆன்ம நேயமற்ற செயலைப் பார்த்து உளம் நடுங்கி ஓர் பாடலில் குறிப்பிடுகின்றார்;-

- துண்ணெனக் கொடியோர், பிற உயிர் கொல்லத் தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்,

கண்ணினால் ஐயோ, பிற உயிர் பதைக்கக் கண்ட காலத்திலும் பதைத்தேன்,

மண்ணினில் வலையும் (மீன் பிடிப்பதற்காக) தூண்டிலும், கண்ணி வகைகளும் கண்டபோதெல்லாம்,

எண்ணி என் உள்ளம் நடுங்கிய நடுக்கம் எந்தை நின் திருவுளம் அறியும்!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

கொல்லா விரதம் உலகெலாம் ஓங்குக!

இன்று முதல் புலால் (மாமிச உணவு) உண்ணாதீர்!!!

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி

ஆன்ம நேயம் ஓங்குக! தயவுடன் வாழ்க!!

## 8 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## கடவுள் - ஆன்ம உண்மைகள்

ஆன்மா, பரம்பொருளாகிய கடவுளின் ஒரு சிற்றணு வடிவம்.

ஆன்மாவில் கடவுள் தம் பூர்ண நிலையை என்றும் கொண்டுள்ளார். அபக்குவ காலமெல்லாம், அக் கடவுள் தன்மை வெளிப்படுத்தப் படுவதில்லை.

ஆன்ம அணுவகத்திருக்கும் அக்கடவுள் தன் உண்மையை (சத்து-சித்து - ஆனந்தம் எனும் சச்சிதானந்த வாழ்வு) வெளிப்படுத்த வேண்டி, உயிர் உடம்புகளை ஏற்று ஏற்று ஆன்ம அறிவை வளரச் செய்து கொண்டுள்ளார்.

ஆன்ம அணுவைச் சூழ்ந்து, கடவுள் ஒளி சதா விரிவதுவும் சுருங்குவதுமாய் உள்ளது. விரிவதால் தேகப் பிறவியும், சுருங்குவதால் தேகப் பிரிவாகிய இறப்பும் சம்பவிக்கின்றன.

ஆன்மா எப்போதும் ஒளிர்கின்றது. அது இல்லாமல் ஓர் அணுவும் இல்லை; ஒரு உயிரும் இல்லை. ஆனால் அது புறத்தே எங்கும், எதிலும் காண முடியாது. மனித தேகத்தில், மெய்யறிவினால் தான் காணமுடியும்.

அந்த ஆன்மா தான், மனிதனின், "தலைநடுவுள்", தேக சிருஷ்டி தொடங்கி ஜீவிய காலம் முற்றிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதாம்.

இந்த ஆன்ம அணுவை, இந்த சிரநடு இடத்தில், ஞான விசாரத்தால் கண்டுக்கொள்ள உதவுகின்றது, நமது சுத்த சன்மார்க்கம்.

இந்த அருட்ஜோதி ஆன்ம அணு தான் நமது நித்திய வடிவம். எல்லாவகை பிறப்புத்தேகங்கள் வந்து சூழ்ந்திருந்து நீங்கிய காலத்தும், நாம் இக்கடவுள் ஆன்மாவாய் விளங்கிக் கொண்டுதான் இருந்திருக்கின்றோம்.

இந்த ஆன்மா, பரிபாகமுறாத வரை கடவுள் ஆணையின்படி, தேகங்கள் வந்து வந்து போய்க்கொண்டே தான் இருக்கும். அதாவது பிறப்பு இறப்பு உண்டாகிக் கொண்டேதான் இருக்கும்.

ஆன்மா பூர்ணமுறும்போது, அகமிருந்து கடவுட் ஜோதி, அனக நிறைவுக் கொண்டு, உடலையே அருட்பெருஞ்ஜோதி சக்திமயமாய் மாற்றிக்கொண்டு, என்றும் விளங்கவல்லதாகும். இதுவே ஆன்மாவுக்கு பேரின்ப சித்தி வாழ்வு நிலையாகும்.

இந்த ஆன்ம உண்மை விளக்கத்தை இப்பொழுது கடவுள் தயவு தான் அகத்திருந்து வெளியாக்குகின்றது.

தயவு

- தயாநிதி சுவாமி சரவணானந்தா, திண்டுக்கல்.

## 9 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!!!

கொல்லா நெறியே உலகெலாம் ஓங்குக!!!

இன்று முதல் புலால்(மாமிச உணவு) உண்ணாதீர்!!!

சுத்த சன்மார்க்க நெறி;

**1. கருணையின் முழுமையே கடவுளின் வடிவம்.**

**2. காணும் உயிரெல்லாம் கடவுளின் ஆலயம்.**

**3. எல்லா நெறியிலும் இரக்கமும் மையம்.**

**4. சன்மார்க்க நெறியினில் இரக்கமே எல்லாம்.**

**5. இரக்கம் தோன்றினால் உடன் அருள் விளங்கும்.**

**6. அருள்ஒளி கிடைத்தால் அனைத்தும் பெறலாம்.**

**7. கொலை, புலை தவிர்த்தால் அருள்ஒளி பெருகும்.**

**8. ஒளி வழித் தியானம் உயிர் - உடல் வளர்க்கும்.**

**9. கரிசாலை மூலிகை உடல் - உயிர் காக்கும்.**

**10. உணவுக் கொடையே உயர் பேரின்பம்.**

கரிசாலை = கரிசலாங்கண்ணி கீரையை தினமும் சிறிது உட்கொண்டால் சகல நோய்களும் நீங்கி, நெடுநாள் தேகம் நீடித்திருக்கும்.

கொலை, புலை தவிர்த்தல்;- பிற உயிர்களை துடிக்கத் துடிக்க, பதைக்கப் பதைக்க, இரத்தம் சிந்த, துன்புறுத்திக் கொன்று, அதன் மாமிசத்தை உண்பது, ஐயோ, மனிதநேயமற்ற செயல்.

நன்றி;- திருவருட்பா சாரம் - ஓர் வள்ளலார் அன்பர்.

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி

புருவமத்தியில், தீப ஜோதி வடிவில், கடவுளை பாவித்து, இந்த மகா மந்திரத்தை தினமும் காலை, மாலை ஒரு 10 நிமிடம் ஜெபித்து வந்தால், எல்லா துன்பங்களும் விலகி, சகல நன்மைகளும் உண்டாகும்.இது சத்தியம் - வள்ளலார் அருள் வாக்கு.

## 10 - எல்லா பிணிக்கும் ''கருணையே'' மருந்து!!!

உடலின் பிணிக்கும் உயிர் பிணிக்கும், உகந்த மருந்தொன்று

அருளும் என்றேன்

கடல் சேர் உலகில் காணாத ''கருணை'' மருந்து தந்துள்ளோம்

மடமை தவிர்த்து "உள் பார்த்தாலே", மகிழ்வாய், கொண்டு
வாழ்வாய் மேல்!
இடர் செய் பிணிகள் விடை கொள்ளும், இன்பே சேரும் என்றாரே!

## அருட்பெருஞ்ஜோதி "தயவுக் கடவுள்"!!!

கடவுள் ஒன்றே ஒன்றென்று, காசினி யுள்ளோர் கண்டுகொள்ள
சுடரும் ஜோதி "தயவோடு" - "தூய அக வானில்" தோன்றிடவே
அடரும் துன்ப இருள் அகன்றது காண், அடுக்குது இன்ப
வாழ்விங்கே,
திடமார் ஞான சன்மார்க்கம், தேர்ந்து கொள்வீர் செகத்தீரே!!!

தயாநிதி சுவாமி சரவணானந்தா, திண்டுக்கல்.

# 11-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## துன்பங்கள் தீரும் வழிகள்!!!
## உலக மக்களுக்கு அவசர அவசிய அழைப்பு!!!

1. உள்ளும் புறமும் உற்ற துணையாக உள்ளொளியாக, அவரவர் தலைநடுவிலும், ஆண்டவர் உள்ளார்; அஞ்ச வேண்டாம்.

2. இந்த உலகத்தில், ஆறறிவுடைய மனிதப் பிறப்பே உயர்வானது. கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள், இந்த பிறப்பினால் அடையத் தக்க ஆன்ம இன்ப லாபத்தை காலம் உள்ளபோதே அறிந்து அடைய வேண்டும்.

3. குறுகிய காலமே உள்ளதால், விரைந்து விரைந்து முயன்று அந்த ஆன்ம லாபத்தை அடைய வேண்டும். காலத்தை வீண்பொழுது கழிக்கக் கூடாது.

4. இந்த பிறப்பு போனால் மறுபடியும் மனிதப் பிறப்பு கிடைப்பது அருமை. இப்போதுள்ள சூழ்நிலை மீண்டும் பெறுவது அரிது!

5. இங்குள்ள நீங்கள் எல்லோரும் இதுவரைக்கும் இருந்ததுபோல், இனியும் வீண் காலம் கழித்துத் கொண்டிருக்காதீர்கள்.

6. நம்முடைய நிலை (ஆன்ம அக வடிவம்) எப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிஸ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை (ஆன்மாவிற்குள் உள்ளொளியாக உள்ள கடவுள்) எப்படிப்பட்டது?

மனிதன் யார்? கடவுள் இருக்கும் இடம் எங்கே?

(அண்ணாக்குக்கு மேலே, கபால நடுவில்-தலைநடுவில் அருட்பெருஞ்ஜோதியாக கடவுள் எழுந்தருளியுள்ளார்).

துன்பங்கள் எல்லாம் தீரும் வழி என்ன? இந்த உலகம் ஏன் தோன்றியது? என்பது போன்ற அண்ட விசாரம், பிண்ட விசாரம், ஆன்ம விசாரம் செய்து வாருங்கள்!!

7. பயமும், கவலையும், வறுமையும், துன்பமும் கொண்டு இடர்படுகின்ற சகோதரர்களே நீங்கள், இங்கு வாருங்கள்!!! உங்கள் துன்பங்கள் எல்லாம் நொடிப்பொழுதில் தீர்ந்துவிடும்!

“இங்கு” என்பது எங்கு? புருவமத்திய ஸ்தானம்! புருவமத்தியில் மனதை நினைப்பு மறப்பற நிலை நிறுத்திப் பழகி, அகம் நோக்கி, உள்ளே ஆழ்ந்து உற்று கவனித்தால் ஓர் உள்ளுணர்வு உதிக்கும். அதுவே, ஆன்ம அறிவாகும். அந்த அறிவுக்குள் அறிவாக, ஒப்பற்ற தயவுடைய பேரறிவாக இருப்பவர்தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்!!

**8. பிணி, மூப்பு, விபத்து, ஆபத்துகளின்றி இன்பமாக வாழ வேண்டுமா? சத்திய ஞான ஜோதி விளங்கும், அகத் திருச்சபைக்கே வாருங்கள்!!! தயவோடு வாருங்கள்! நலமுற்று வாழலாம்!**

9. எல்லோர்க்கும் தாய், தந்தை, அண்ணன், தம்பி முதலான ஆப்தர்களால் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப் பங்கு அதிகமான உதவி கொடுக்கும்படியான இடம், இந்த இடம் (சிரநடு சிற்சபை ஆகிய சிற்றம்பலம்). இது சத்தியம். இது ஆண்டவர் கட்டளை!

10. துன்பத்திற்கு காரணம் என்ன என்று விசாரியுங்கள். மனிதன் முதலில் தன்னை யார்?! என்று அறிந்துக் கொள்ள வேண்டும்.

தன்னை அறிந்தால் இன்பமுறலாம்!! தன்னை யார் என்று தெரிந்துக் கொண்டால் எல்லா துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறலாம்; ஊழ்வினைகள் தாமே விலகிவிடும்.

11. தன்னை அறிய தனக்கொரு கேடில்லை! தன்னை அறியாமல் தானே கெடுகிறான்.

12.ஆன்மாவுக்கு இயற்கை குணம் தயவு! இதுவே மூல தர்மம்.

**ஆன்ம இயற்கையோடு இருந்தால் சிவம் ஆகலாம் !!!**

13. **ஆன்மா வசிக்கின்ற இந்த தேகம் என்கிற வீட்டிலே, அருட் பிரகாசமாம் தீபத்தை ஏற்றி வைத்து, மருளாகிய அஞ்ஞான இருளைப் போக்கிக்கொண்டு, பிராண நஷ்டம் இல்லாது என்றும் ஆனந்தமயமாய் இருக்க வேண்டும்.**

14. ஒருவன் பிரார்த்தனை செய்யும்போது, அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல! உலகமெல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படி செய்வதால் அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கிவிடும்.

15. ஒரு ஜாம நேரம் (3 மணி நேரம்) மனத்தில், இகலோக உலக விசாரணையின்றி, புருவமத்தியில் மனதை நாட்டி, பரலோக விசாரிப்பு டன், ஆன்ம நெகிழ்ச்சியோடு, தெய்வத்தை சிந்தித்துக் கொண்டாவது, அல்லது ஸ்தோத்திரம் செய்துக்கொண்டாவது இருந்தால், நாம் பெற வேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம்.

16. நம்முடைய தலைவராகிய கடவுளை, நாம் அடைவதற்கு, அவர் எழுந்தருளி இருக்கும் கோட்டையின் சாவியாகிய, **அருள்** வேண்டும். **இந்த அருள், அன்பினால் அல்லது வேறு வகையால் அடைவது அரிது. அவ் அன்பு ஜீவகாருண்யத்தால் அல்லாது வேறு வகையால் வராது.**

17. அந்நிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே, உயிர் இரக்கம் எனும் ஜீவகாருண்யம். இதுதான் முத்தி அடைவதற்கு முதற்படியாக இருக்கின்றது.ஆதலால், இதை பாதுகாத்தல் வேண்டும்.

எவ்வுயிரையும் கொல்லாதீர்!

இன்று முதல் புலால் என்னும் மாமிச உணவு உண்ணாதீர்!!

18. ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பது, ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற, ஆன்ம உருக்கத்தைக் கொண்டு, கடவுள் வழிபாடு செய்து வாழ்தல் என்று அறிதல் வேண்டும்.

19. ஜீவர்களுக்கு பசியினால் வரும் துன்பத்தையும், கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதுவே ஜீவகாருண்யமாகும்.

20. ஜீவகாருண்யம் விளக்கும்போது, அன்பும் அறிவும் உடனாக நின்று விளங்கும். அதனால் உபகார சக்தி விளங்கும்; அந்த உபகார சக்தியால், எல்லா நன்மைகளும் தோன்றும்.

21. ஜீவகாருண்யம் மறையும் போது, ''அன்பும் அறிவும்'', உடனாக நின்று மறையும். அதனால் உபகார சக்தி மறையும்; அதனால் எல்லா தீமைகளும் தோன்றும்.

அறிவு விளங்கிய மனிதர்களுக்கு ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு!!!

- திருவருட்பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க அடிகளார்!

## 12-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### உலக மக்கள் அனைவரும் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கம் நான்கு ! !

உலகத்தினிடத்தே பெறுவதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப்பெற்ற, நண்பர்கள் அனைவரும் நாமும் அறிய வேண்டுவதும், ஒழுக வேண்டுவதும் யாதெனில்;-

- இயற்கையில் தானே, ''விளங்குகின்றவராய் உள்ளவர்'' என்றும், இயற்கையில் தானே, ''உள்ளவராய் விளங்குகின்றவர்'', என்றும், ''இரண்டு படாத பூரண இன்பமானவர்'' என்றும், எல்லாம் ஆனவர் என்றும், ஒன்றும் அல்லாதவர் என்றும், சர்வ காருண்யர் என்றும், சர்வ வல்லபர் என்றும், எல்லாம் உடையவராய் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வு இல்லாத தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும், சத்திய அறிவால் அறியப்படுகின்ற, உண்மைக் கடவுள் ஒருவரே, அகம் புறம் முதலிய எவ்விடத்தும், நீக்கமின்றி நிறைந்த, **சுத்த மெய்யறிவு எனும் பூரணப் பொது வெளியில்,** அறிவார் அறியும் வண்ணங்கள் எல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே ஆகிய கடவுளை, இவ் வுலகினிடத்தே ஜீவர்களாகிய நாம் அறிந்து, அன்பு செய்து அருளை அடைந்து, அழிவில்லாத, சத்திய சுகபூரணப் பெருவாழ்வை, பெற்று

வாழாமல், பல்வேறு மார்க்கங்களிலும் பல்வேறு லஷியங்களைக் கொண்டு, நெடுங்காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவும் இன்றி, விரைந்து விரைந்து பல்வேறு ஆபத்துக்களினால், துன்பத்தில் அழுந்தி அழுந்தி இறந்து இறந்து வீண் போயினோம், வீண்போகின்றோம்.

- ஆதலால், இனிமேலும் ஜீவர்களாகிய நாம், விரைந்து, விரைந்து, இறந்து இறந்து வீண் போகாமல், **உண்மை அறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம்,** முதலிய சுப குணங்களைப் பெற்று, நற்செய்கை உடையவர்களாய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும், உண்மைப் பொது நெறி ஆகி விளங்கும், சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப், பேரின்பசித்திப் பெருவாழ்வில், பெரும்சுகத்தையும் பெரும் களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளம் கொண்டு, அருட் பிரகாச வள்ளலார் மூலம், சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கத்தை உலக மக்கள் அனைவரும் கடைபிடித்து, உய்வடைய அருளி உள்ளார்கள்.

சுத்த சன்மார்க்க தனிப்பெருநெறியைப் பற்றுவதற்குரிய, உண்மை ஒழுக்கங்களில் நாம் எல்லோரும், தனித்தனி ஒழுக வேண்டுவது அவசியமாகலின், அவ்வொழுக்கங்கள் இவை என உணரவேண்டுவது;-

சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்;

நாம் பெறும் **புருஷார்த்தம்** நான்கு.அவையாவன;

1. ஏமசித்தி, 2. சாகாக் கல்வி,

3. தத்துவ நிக்கிரகம், 4. கடவுள் நிலை அறிந்து அம்மயம் ஆதல்.

### ஒழுக்கம்

இவை பெறுவதற்கு ஒழுக்கம் நான்கு. அவையாவன;

1. இந்திரிய ஒழுக்கம்
2. கரண ஒழுக்கம்
3. ஜீவ ஒழுக்கம்
4. ஆன்ம ஒழுக்கம்.

### 1. இந்திரிய ஒழுக்கம்;-

இந்திரிய ஒழுக்கம், கன்மேந்திரிய ஒழுக்கம் + ஞானேந்திரிய ஒழுக்கம் என இருவகைப்பட்டது.;-

1.) கொடிய சொல் செவி புகாது நாதம் முதலிய ஸ்தோத்திரங்களைக் கேட்டல்; 2.) அசுத்தப் பரிசமில்லாது தயா வண்ணமாக பரிசித்தல். 3.) குரூரமாக பாராதிருத்தல். 4.) உருசி (சுவை) விரும்பாதிருத்தல். 5.) சுகந்தம் விரும்பாதிருத்தல். 6.) இன் சொல்லாடல். 7.) பொய் சொல்லாதிருத்தல். 8.) ஜீவஹிம்சை நேரிடும் காலத்தில் எவ்வித தந்திரத்தினாலாவது தடை செய்தல். 9.) பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல். 10.) ஜீவ உபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும் திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல். 11.) நன் முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல். 12.) மலஜல உபாதிகளை அக்கிரமம் அதிக்கிரமம் இன்றி, கிரமத்தில் நிற்கச் செய்தல். 13.) எவ்விதமெனில், மித ஆகாரத்தாலும், மித போகத்தாலும் செய்வித்தல். 14.) கால பேதத்தாலும், உஷ்ண ஆபாசத்தாலும் தடை நேர்ந்தால் (மலச் சிக்கல்) ஔஷதி வகைகளாகும், பௌதிக மூலங்களாலும், சரபேத அஸ்தபரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவத் தியான சங்கற்பத்தாலும் தடை (மலச் சிக்கல்) தவிர்த்துக் கொள்ளல். 15.) சுக்கிலத்தை (விந்து) அக்கிரம - அதிக்கிரமத்தில் விடாது நிற்றல் = மந்ததரம், 16.) தீவிர தரம் = எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமல் செய்வித்தல்.17.) இடைவிடாது கோசத்தைக் (ஆண் பாலுறுப்பு) கவசத்தால் மறைத்தல். 18.) இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களை மறைத்தல். 19.) சஞ்சரிக்கும் காலத்தில் காலில் கவசம் (காலணி) தரித்தல். 20.) அழுக்காடை உடுக்காதிருத்தல் முதலியன இந்திரிய ஒழுக்கமாம்.

### 2. கரண ஒழுக்கம்;-

உண்மையான கடவுள் ஒருவரே!!! என்று சத்திய சங்கல்பம் கொள்ளல்; சிற்சபையின் கண் மனம் செல்லுவது தவிர, வேறு எந்த வகை ஆபாசத்திலும், செல்லாமல் அதை இழுத்து மேற்குறித்த இடத்தில், அதாவது, கடவுளிடத்தில் நிறுத்துவது. மனதை சிற்சபை அறிவாகிருதி ஆக்கல்; இதன் பூர்வத்தில் புருவமத்தியில் நிற்கச் செய்தல்; இதன்றி துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்;

ஜீவ தோஷம் (பிறர் குற்றம்) விசாரியாதிருத்தல்; தன்னை மதியாதிருத்தல்; செயற்கை குணங்களால் உண்டாகிய கெடுதிகளை நீக்கி, இயற்கையாகிய சத்துவ மயமாக நிற்றல்; பிறர் மேல் கோபியாதிருத்தல்; தனது சத்துருக்கலாகிய தத்துவங்கள் மேல் கோபித்தல்; அக்கிரம அதிக்கிரம புணர்ச்சி (உடலுறவு) செய்யாதிருத்தல் முதலிய இவற்றையே கரண ஒழுக்கம் என்பர்.

### 3. ஜீவ ஒழுக்கம்;-

ஜீவ ஒழுக்கமாவது, ஆண் மக்கள் பெண் மக்கள், யாவரிடத்திலும், ஜாதி, மதம், சமயம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேச மார்க்கம், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி, எல்லவரும் தம்மவர்களாய்ச் சமத்தில் கொள்ளுவது; தானாய் நின்றலாம்!!!

### 4. ஆன்ம ஒழுக்கம்;-

- யானை முதல் எறும்பு வரை தோன்றிய ஜீவர்களினது சூக்குமம், தனித்தலைவன் ஆதலால், அவ்வச் சீவர்களின் **ஆன்மாவே திருச்சபையாய், அதனுள் உள்ளொளியே பதியாய் நிற்பதால், யாதும் நீக்கமறக் கண்டு, எவ்விடத்தும் பேதமற்று, எல்லாந் தானாய் நிற்றல்.**

இவ் வண்ணம் நின்றால், மேற்குறித்த அரும் புருஷார்த்தம் கைகூடும். ஒருமை என்பது தனது **அறிவு - ஒழுக்கம் ஒத்த இடத்தில், தானே கூடும்!!** மற்ற இடத்தில், தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது, அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்பது!!!

இங்ஙனம் கூறிய ஒழுக்கங்களுள்ளே, இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம் என்னும் இவற்றை நாம் ஒவ்வொருவரும், உண்மை உணர்ச்சியுடன் மேற்கொண்டு ஒழுக வேண்டும்.

ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்னும் இருவகையான அரிய ஒழுக்கங்கள், திருவருள் துணை பெற்ற பின்னர் அன்றி கைகூடா!! ஆதலால், அவ்வொழுக்கங்களைப் பெற்று, ஒழுகுவதற்குமான நன் முயற்சிகளில் பழக வேண்டும்.

இவ் வண்ணமான ஒழுக்கங்களில் இயன்ற மட்டில் ஒழுகப்பெற்று, இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம்பராவல், பிற

உயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய்திருத்தல், முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று, பழகிப் பழகி இருத்தல் வேண்டும்!!!

- திருவருட்பா, திருவருட் பிரகாச வள்ளலார்.

## 13 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "தியானமும் ஞானமும்"

அதிகாலைப் பொழுதில் அகல் விளக்கேற்றி,
அருட்பெருஞ்ஜோதியாய் ஆண்டவரை எண்ணி,
அகக் கண் திறக்க, புறக் கண்ணை மூடியே,
ஆசனம் இட்டே "அகத்தே உற்றுணர்ந்து"
புருவத்தின் மத்தியில் உயிரின் இயக்கத்தை
புரிந்து தெரிந்திட புத்தொளி பிறக்கும்!
உடலது மறக்கும் புற உணர்வதும் இறக்கும்!
உவகையும் அமைதியும் ஊற்றென சுரக்கும்!
உண்ணுதற்கே உடலென்று எண்ணியது மாறும்!
**ஒப்பில்லா ஓங்காரம் தன்னுள்ளே சேரும்!!**
விண்ணெல்லாம் உள் எண்ணம் வீதி வலம் வரும்!
விஞ்ஞானமும் விளங்காத மெய்ஞ்ஞானம் ஆகும்!
மானிட வாழ்வின் மகத்துவம் புரியும்!
மனத்தின் மாசகலும் மருத்துவமும் அறியும்!
ஏன்? எதற்கு? என்ற எல்லா கேள்விகட்கும்
இயற்கையின் பதில்கள் ஏற்பாய் அமையும்!
பொருள் பற்றழியும்! மெய்ப்பொருள் தெரியும்!
பொறுமையும் மௌனமும் புகலிடமாகும்!
தருமமோ வளரும்! தானென்பது அழியும்!
கருமமோ கழிந்து நற்கதியோ கிடைக்கும்!

துன்மார்க்கம் மறையும்! சன்மார்க்கம் வளரும்!

**துயர் படும் உயிர்க்கெலாம் தொண்டாற்றி மகிழும்!!**

**அருளறம் சிறக்கும் ஆன்மநேயம் பிறக்கும்!**

**ஆனந்தம் நெஞ்சினில் பூரணமாய் நிலைக்கும்!**

மனதினை வளமாக்கும்! மனித நேயம் மலரும்!

மரணத்தை வெல்லும் மார்க்கமது புலரும்!

தினந் தினம் தியானத்தை செய்வோமானால்

சித்திவளாகமே சத்தியம்!! சத்தியம்!!

(சித்தி வளாகம் = சித்தி வளர் அகம் = ஆன்ம அகநிலை = மனிதனுடைய இயற்கை உண்மை நித்திய வடிவம்)

நன்றி;- ஓர் சன்மார்க்க மெய்யன்பர்

சித்தி வளாகம்(சித்தி வளர் அகம்) = சிரநடு ஆன்ம பீடம்;-

எல்லோர்க்கும் தாய், தந்தை, அண்ணன், தம்பி முதலான ஆப்தர்களால் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ அதற்குக் கோடிக் கோடி பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம். இஃது ஆண்டவர் கட்டளை

-திருவருட்பிரகாச வள்ளலார்.

"அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி"

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!!!

கொல்லா நெறியே உலகெல்லாம் ஓங்குக!!

சுத்த சன்மார்க்க அருட்பெருநெறி உலகெல்லாம் பரவுக!!

# பகுதி - 2 முற்றிற்று.

தயவு

# "பகுதி -3"

## A1 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## நான் யார்?

"நான்" என்ற ஒன்று வெளியே தோற்றுவதல்ல! "நான்" என்பது இதுவரை எண்ணியது போல ஜடமான தேகமாக தோன்றி, சிலகாலம் விளங்கி பின் மங்கி மறைந்து ஒழியும் வடிவமல்ல. இது (நான்) உள்ளிருந்து ஓங்கும் அருட் ஜோதி அணு!

அறியாமையில் உள்ளவரை அதன் உண்மைப் பொருள் மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. உண்மைநிலை பெற விழைவோர்க்கு உரிமையானது; வெளிப்படையானது; உள்ளே மிகமிக ஆழ்ந்த நிலையில் பேரமைதியில் வைக்கப்பட்டுள்ளது.

**இது அறிவு சொரூபமானது**
**தயவே இயல்பானது!**
**மெய்ஞ்ஞான உணர்வானது!!!**
**"நான்" என்பது அற்புதமான ஓர் அக உணர்வு!**
**இது கடவுளின் இயற்கை விளக்க சித்துருவம்!!!**
**பிறப்பு இறப்பு அற்றது!**

அன்புச் சிவமாகிய ஏகமான கடவுளே "நான்" என்ற அனேக வேடம் பூண்டு சச்சிதானந்த (சத்து+சித்து+ஆனந்தம்) அனுபவத்தின் பொருட்டு எண்ணற்ற ஆன்ம கோடிகளாக விளங்கி நடித்துக்கொண்டிருக்கின்றார்!

**நானாகிய மனிதனும், தானாகிய கடவுளும் சேர்ந்த "இரண்டற்ற நிலை" கொண்ட ஓர் அணுவே "அருட்ஜோதி ஆன்மா"!!! இது பேரானந்த அனுபவம் கொண்டது!**

இப்போது எடுத்துள்ள இந்த தேகம் கருப்பையில் ஓர் அணுவாய் வளரத் தொடங்கிய அந்த நொடி முதல், இந்த தேகம் மூத்து ஒழியும் அந்த கடைசி நொடி வரையிலும் **"இருக்கின்றேன் நான்"** என்ற

இருப்புணர்வு கொண்டு பிரகாசிப்பது அந்த ஆன்மாவே. இது உண்மையில் பிறப்பு இறப்பு அற்றது. இதைச் சூழ்ந்து பலவாகிய தேகங்கள் வருவதும் போவதுமாய் உள்ளது.

**ஆன்மா எப்போதும் நிகழ்காலத்திலேயே என்றென்றும் வாழ்வனுபவம் பெற்று வருகிறது.**

புற வடிவங்கள், சூழ்நிலை அனுபவங்கள் வேறு வேறாக இருப்பினும், எல்லோருள்ளும் இந்த "நான்" என்ற "மைய உணர்வு" ஒரே மாதிரியாக விளங்குகின்றது!

அந்த அசையாத அமைதியான ஆன்மநிலைக்குப் புறத்தில் தான் மாயா பிறப்பு இறப்பு நிகழ்கின்றது நெடுங்கோடி காலமாக! இந்தப் பிறவிப் பெருங்கடல் துன்பத்திலிருந்து ஒருவன் விடுதலைப் பெற வேண்டுமானால்

"தன்னை அறிந்துக் கொள்ளவேண்டும்"!!!

இப்போது நீ உன்னை மாயா சம்பந்தத்தால் ஐம்பூதத்தாலான சிற்பிரபஞ்சமாகிய இந்த தேகத்தில் குழைத்துக் கொண்டு, குழம்பிப்போய், அதையே நீ எனக்கொண்டுள்ளாய்.

இந்த நிலைமை மாறி வேண்டும்; மாறித்தான் ஆக வேண்டும்! அப்போதுதான் உனக்கு, **உண்மையான, அமைதியான, ஆனந்தமான அழியாத வாழ்வு உண்டாகும்!!!**

தயவு

## A2 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை "சிற்றின்பமும் பேரின்பமும்"!!!

(சிற்றின்பத்தின் இயலும் பேரின்பத்தின் இயலும்)

இன்பத்தில் என்னய்யா சிற்றின்பம்...பேரின்பம்...!!

படைப்பினால் ஈர்க்கப் பட்டால் சிற்றின்பம்.

படைத்தவனால் ஈர்க்கப்பட்டால் பேரின்பம்.

படைப்புகளை அனுபவித்தால் சிற்றின்பம்.

படைப்புகளை ஆராதித்தால் பேரின்பம்.

படைப்புகளை படைப்புகளாய் கண்டால் சிற்றின்பம்.

படைப்புகளில் படைத்தவனைக் கண்டால் பேரின்பம்.
என்னால் தான் இந்த வாழ்க்கை எனில் சிற்றின்பம்.
இறைவனால் தான் இந்த வாழ்க்கை எனில் பேரின்பம்.
நான் இந்த உடல் என எண்ணினால் சிற்றின்பம்.
நான் இந்த உயிர் என எண்ணினால் பேரின்பம்.
அமைதி ஆனந்தம் சிறிதே பெற்று பின் இழந்தால் சிற்றின்பம்.
அமைதி ஆனந்தத்தை நித்தியமாகப் பெற்றால் பேரின்பம்.
செய்வதெல்லாம் தனக்காக என்றால் சிற்றின்பம்.
செய்வதெல்லாம் இறைவனுக்காக என்றால் பேரின்பம்.
செய்வது நான் என எண்ணினால் சிற்றின்பம்.
செய்வது இறைவன் என எண்ணினால் பேரின்பம்.
புறப் பொருட்களில் நிகழ்வில் சுகமுறுவது சிற்றின்பம்.
**அகத்திலேயே நித்திய சுகம் பெறுவது பேரின்பம்.**
இன்பத்தை அடைந்தாலும் மீண்டும் வேண்டுவது ; திருப்தி அடையாதது சிற்றின்பம்.
வேறு எதனையும் விரும்பாதது ; பூரணமானது பேரின்பம்.
நிரந்தர பேரின்பத்தை மறைப்பது சிற்றின்பம்.
நிலையற்ற சிற்றின்பத்திற்கு அப்பாற்பட்டது பேரின்பம்.
உடலோடு மனதை தொடர்புப்படுத்துவது சிற்றின்பம்.
உயிரோடு மனதை இணைப்பது பேரின்பம்.
இன்பம் என்கிற வடிவிலிருக்கும் துன்பமே சிற்றின்பம்.
துன்பம் போல் அறியப்பட்டு இன்பமாவது பேரின்பம்.
எங்கோ இருக்கிறான் இறைவன் எனில் சிற்றின்பம்.
எங்கும் இருக்கிறான் இறைவன் எனில் பேரின்பம்.
பலவீனம், நோய், துன்பம், மரணம் தருவது சிற்றின்பம்.
மரணமிலாப் பெருவாழ்வைத் தருவது பேரின்பம்.
பயம், சஞ்சலம், சந்தேகம், குற்ற உணர்வு தருவது சிற்றின்பம்.
பயமறியாதது, ஸ்திரமானது, தூய்மையானது பேரின்பம்.
சிறு உணர்ச்சிகளில் இன்பம் அடைவது சிற்றின்பம்.
எல்லையற்ற பிரம்மத்தில் கலப்பது பேரின்பம்.
பிறரை தனக்காக பயன்படுத்துவது சிற்றின்பம்.

தன்னை பிறருக்காக அர்ப்பணிப்பது பேரின்பம்.
அளவுடையது, முடிவுடையது சிற்றின்பம்.
அளவற்றது, முடிவிலாதது பேரின்பம்.
அறிவை மழுங்கடிப்பது சிற்றின்பம்.
அறிவைப் பிரகாசிக்கச் செய்வது பேரின்பம்.
அழகை மட்டும் ஆராதித்தால் சிற்றின்பம்.
அழகற்றதும் அழகும் ஒன்றானால் பேரின்பம்.
பயன் கருதி செயல் புரிந்தால் சிற்றின்பம்.
பயன் கருதாது செயல் புரிந்தால் பேரின்பம்.
முதலில் இனித்து பின் கசப்பது சிற்றின்பம்.
முதலில் கசந்து பின் என்றும் இனிப்பது பேரின்பம்.
இரக்கமற்றது, ஒழுக்கமற்றது சிற்றின்பம்.
கருணையுடையது, தர்மமானது பேரின்பம்.
உடலாய் அனைத்தையும் கண்டால் சிற்றின்பம்.
உயிராய் அனைத்தையும் கண்டால் பேரின்பம்.
புலன்களில் இன்பம் துய்ப்பது சிற்றின்பம்.
புலன்களுக்கு அப்பால் சென்றால் பேரின்பம்.
மனம் உலகில் அலைந்தால் சிற்றின்பம்.
மனம் இறைவனில் ஒடுங்கினால் பேரின்பம்.
மரண பயம் ஏற்படுத்துவது சிற்றின்பம்.
மரணத்தையும் வெல்வது பேரின்பம்.
மனமாய் இருந்தால் சிற்றின்பம்.
மனதைக் கடந்தால் பேரின்பம்.
வேறு வேறாய்க் கண்டால் சிற்றின்பம்.
எல்லாம் ஒன்றெனக் கண்டால் பேரின்பம்.
பகுதியாய்க் கண்டால் சிற்றின்பம்.
மொத்தமாய் கண்டால் பேரின்பம்.
அகங்காரம் கொண்டால் சிற்றின்பம்.
அகங்காரம் துறந்தால் பேரின்பம்.
தசையில் சுகம் பெறுவது சிற்றின்பம்.
அன்பில் தன்னை இழப்பது பேரின்பம்.

ஆண் பெண்ணில் இன்புறுவது சிற்றின்பம்.
ஆண் பெண்ணை வணங்குவது பேரின்பம்.
துய்க்கும் நேரத்தில் மட்டும் இருப்பது சிற்றின்பம்.
துய்த்து விட்டால் நீங்காதது பேரின்பம்.
ஜீவராசிகளால் தரமுடிந்தது சிற்றின்பம்.
இறைவனால் தரப்படுவது பேரின்பம்.
உலகைப் பற்றினால் சிற்றின்பம்.
இறைவனைப் பற்றினால் பேரின்பம்.
பிறர் நலனைக் காணாதது சிற்றின்பம்.
தன் நலம் கொள்ளாதது பேரின்பம்.
இன்பம் இல்லாத இன்பம் சிற்றின்பம்.
இன்பமான இன்பமே பேரின்பம்.
அஞ்ஞானம் விரும்புவது சிற்றின்பம்.
ஞானம் விரும்புவது பேரின்பம்
பெற்று மகிழ்வது சிற்றின்பம்.
கொடுத்து மகிழ்வது பேரின்பம்.
சக்தியை இழப்பது சிற்றின்பம்.
சக்தியாய் மாறுவது பேரின்பம்.
பற்றுக் கொள்வது சிற்றின்பம்.
பற்றற்று இருப்பது பேரின்பம்.
மாறுவது, தாவுவது சிற்றின்பம்.
மாறாதது நிலைத்தது பேரின்பம்.
நிலையற்றது சிற்றின்பம்.
நிரந்தரமானது பேரின்பம். -

(90 -குறிப்புகள்;-அகமுணர்ந்த ஓர் சன்மார்க்க மெய் அன்பரின் அனுபவ வெளியீடு!!!)

தயவு

## A3 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

எல்லாம் சரிதான் ஐயா! அசைவ உணவை விடமாட்டேன்னு ஒரே பிடிவாதமா இருக்கின்றீர்களே! ஒரு உயிரை பதைபதைக்க துடிதுடிக்க, இரத்தம் சிந்த துன்புறுத்திக் கொன்று அதன் மாமிசத்தைத் தின்றுவிட்டு, எத்தனை கோயில் கட்டினால், என்ன பிரயோஜனம்? எத்தனை கோயில்கள் - எத்தனை கடவுள்களை வழிபட்டாலும் என்ன பிரயோஜனம்?! கடவுளின் உண்மை இருப்பிடத்தை தெரிந்துக் கொள்ள வேண்டும் அல்லவா?

“உயிரெலாம் ஒரு நீ திருநடம் புரியும் ஒரு திருப்பொது என அறிந்தேன்” - வள்ளலார்

**“உயிருள் யாம்; எம்முள் உயிர்!! இவை உணர்ந்தே, உயிர்நலம் பரவுக என்று உரைத்த மெய்சிவமே!!!”**

உண்மையான கடவுள் வழிபாடு எது? எல்லா உயிர்களும் உண்மைக்கடவுள் விளங்குகின்ற உண்மையான ஆலயங்களாகும்!

எல்லா உயிர்களிலும் கடவுள் வியாபித்திருத்தலை அறிந்து, அஹிம்சையை கடைபிடித்தலே உண்மையான ஈஸ்வர பக்தி! கோயில்கள் எல்லாம் மனிதனால் - கற்களால் உருவாக்கப்பட்டது. உயிர்கள் மாத்திரமே உண்மைக் கோயில்! உயிர்களிடத்தில்தான் இறைவன் பரிபூரணமாக சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்!

இன்று முதல் புலால் உண்ணாதீர்கள்!!! மிக்க நன்றி

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

“எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க”!!!

“தயவே கடவுள்! தயவுடன் வாழ்க”!!!

“கொல்லா நெறியே உலகெலாம் ஓங்குக!!!”

# A4 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**கேள்வி;-** எல்லாம் சரி.

“இன்றும் சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் ஆகிய முத்தேக சித்தி பெற்று மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்து வருபவர், வள்ளற்பெருமான் ஒருவர் மட்டும் தானே?!-

1874 ஆம் ஆண்டு வள்ளலார், என்றும் அழியாத ஒளியுடல் பெற்றுக் கொண்டார்! அதன் பிறகு 145 வருடங்களில் ஒருவரும் அந்த நிலையை பெற்றதாக தெரியவில்லையே!! அது மற்றவர்களுக்கு சாத்தியமில்லையோ?!

**பதில்;-** தயவு வடிவம் ஐயா! வந்தனம்! இறைவன் “அன்பு இருப்பு எனும் சத்துப் பொருளாக, அகண்ட வான் பெருவெளி முற்றும் அனாதி காலமாக இருப்பவர்!!”. ஆண்டவர். அவர் எத்தனை கோடி கோடி யுகங்களாக இருந்து வருகின்றார்?!

இப்படி கேட்பது அறியாமையே! புற நிலையில், பற உலகில் தான் “காலம்” என்கின்ற தத்துவம் செயல்படுகின்றது! இதற்கு முற்றிலும் மாறானது அக உலகம்!

**“அக ஆன்ம அருள் உலகில் காலம் என்பதே இல்லை! அங்கு நித்திய நிகழ்காலம் மட்டுமே இருக்கின்றது! இறந்த காலமோ, எதிர் காலமோ அக அருட்பெருவெளியில் இல்லை!!”**

இந்த உலகம் தோன்றி 17000 கோடி ஆண்டுகள் ஆகியுள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். நெடுங்கோடி ஆண்டுகளுக்குப் பிறகே உயிரினங்கள் தோன்றின. அதற்கும் பல கோடி ஆண்டுகளுக்குப் பிறகே மனித இனம் தோன்றியது. மனித இனம் முதலில் ஆதிவாசி யாக, காட்டுவாசியாக பன்நெடுங்காலம் மொழி கூட அறியாது வாழ்ந்து வந்தான். பின்னர் பேச ஆரம்பித்தான். இப்படி பல இலட்சக்கணக்கான வருடங்கள் ஓடிவிட்டன. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சமய, மத, மார்க்கங்கள் தோன்றி, மனித மனத்தை பக்குவப்படுத்தத் தொடங்கின. 1865 ஆம் ஆண்டு புரட்சிகரமாக, ஆன்மீகப் பரிணாம வளர்ச்சியின் உச்ச நிலையாக, சுத்த சன்மார்க்கம் எனும் “அருட்பெரும் தயவு நெறி” நேரடியாக “திருவருளால்”, இராமலிங்கம் என்ற புறப்பெயர் கொண்ட ஓர் அக ஆன்மா மூலம் வெளியானது. இம்மார்க்கத்தில் தானே முதலில்

“மரணமிலாப் பெருவாழ்வு” பெற்றுக்கொண்டார் வள்ளலார்! இனி அனந்தம் கோடி ஆன்மாக்களும் “சுத்த, பிரணவ, ஞான தேகத்தை” பெற்றேயாக வேண்டும். இது கடவுள் ஆணை! வள்ளலாருக்கு பிறகு (1874) யாரும் பெறவில்லையே! ஏன்?

- என்று கேள்வி எழுவது ஞாயமே! எனினும் அருட் பக்குவம் பெற இன்னும் கொஞ்ச காலம் ஆகலாம்.

**“சுத்த சன்மார்க்கம் அகநிலையிலிருந்துதான் பரவும்! மற்ற சமய, மத, மார்க்கங்களைப் போல் புற உலகில் வேகம் காணாது.**

**அருள்நிலைக்கு புறமிருந்து தோன்றிய யாவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இல்லாமல் போய்விடும்.**

“அருட்பெருவெளியில் இருந்து தோன்றிய இயற்கை சன்மார்க்க மோ நெடுங் கோடாகோடி காலமும் விளங்கிக் கொண்டே இருக்கும்”

இனி வரும் மனித ஆன்மாக்கள் “மரணமிலா பேருவாழ்வில்” தழைக்கப் போவது உண்மை! சத்தியம்!

வள்ளலாரைப்போல் ஆயிரமாயிரம், இலட்சோபலட்சம், கோடானுகோடி வள்ளலார்கள் வரப்போவது உண்மை! வந்துதான் ஆக வேண்டும். ஒவ்வொரு ஆன்மாவும் அந்த நிலையை அடையும் வரை ஆண்டவரும் விடமாட்டார்! அவசரப்பட வேண்டியதில்லை!

## A5 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### “பூரண சரணாகதி”

### (தற்சுதந்திரமின்மை)

### “சுத்த சன்மார்க்க சத்திய விண்ணப்பம்”

“இயற்கை விளக்கம் நிறைவாகியுள்ள” ஓர் சுத்த சிவானுபவ ஞானசபையில், “இயற்கை உண்மை நிறைவாகிய” திருவுருவைத் தரித்து, “இயற்கை இன்ப நிறைவாகிய” சிவானந்த ஒருமைத் திருநட செய்கையை எவ்வுயிரும் இன்பம் அடைதல் பொருட்டே செய்தருளுகின்ற “எல்லாம் வல்லத் தனித் தலைமைக் கடவுளாகிய, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!!” தேவரீரது திருவருட் சமூகத்தில் யான் செய்து கொள்ளுகின்ற சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்;

இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர் உடைத்தாகிய தேகத்தைப் பெற்ற யான், இத்தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்து, "இத்தேகத்தையே நித்திய தேகம் ஆக்கிக்கொண்டு", எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எத்துணையும் தடைபடாத "பேரின்ப சித்திப் பெருவாழ்வைப்" பெற்று வாழ்தல் வேண்டும் என்பதே, எனது சத்தியமான அதிதீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது.

எனது விருப்ப முயற்சி இங்ஙனமாக, அவத்தைகள் எல்லாவற்றையும் நீக்கி இத் தேகத்தை நித்திய தேகமாக்கி, எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் எதனால் பெறுதல் கூடும் என்று அறியத் தொடங்கிய தருணத்து, வேறு எந்த வழியாலும் பெறுதல் கூடாது, "எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்திரம்" ஒன்றாலே பெறுதல் கூடும் என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

பின்னர், திருவருட் சுதந்தரம் நமக்கு எந்த வழியாற் கிடைக்கும் என்று அறிய தொடங்கிய தருணத்து, "எனது யான்" என்னும் "தேக சுதந்தரம், போக சுதந்தரம், ஜீவசுதந்தரம் என்னும் மூவகைச் சுதந்தரங்களும்" நீங்கிய விடத்தே கிடைக்கும் என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

ஆகலில், எனது சுதந்தரமாக கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும், போக சுதந்தரத்தையும், ஜீவ சுதந்திரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்தரமாக கொடுத்துவிட்டேன்! கொடுத்த தருணத்தே, இத்தேகமும், ஜீவனும், போகப் பொருள்களும் சர்வசுதந்தரர் ஆகிய கடவுள் பெருங்கருணையால் கொடுக்கப் பெற்றனம், அன்றி நமது சுதந்தரத்தால் பெற்றன அல்ல என்னும் உண்மையை அருளால் அறிவிக்கவும் அறிந்துகொண்டேன். இனி இத்தேகத்தினிடத்தும், ஜீவனிடத்தும், போகப் பொருள்கள் இடத்தும், தேவரீர் திருவருள் சாட்சியாக, எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்றமாட்டாது. தேவரீர், திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து, இத்தேகத்தையே, நித்திய தேகமாக்கி "எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்தி பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்."

இத்தேகத்தைப் பெற்ற எல்லா ஜீவர்களுக்கும் எனக்கு அறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களையும், உரிமையுடையவர்கள் ஆக்கி வாழ்வித்தல் வேண்டும்.

தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம்!! வந்தனம்!!

இங்ஙனம்

“சிதம்பரம் இராமலிங்கம்”

திருச்சிற்றம்பலம்

படமுடியாது இனி துயரம் படமுடியாது அரசே!

பட்டதெல்லாம் போதும்! இந்த பயம் தீர்த்து இப்பொழுது என்

உடல் உயிர் ஆதிய எல்லாம் நீ எடுத்துக்கொண்டு, உன் உடல்

உயிர் ஆதிய எல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்!

வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாய்! என் கண்ணுள் மணியே! என் குரு மணியே! மாணிக்க மணியே!

நடன சிகா மணியே! என் நவமணியே! ஞான நன் மணியே! பொன்மணியே! நடராஜ மணியே!!

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி

தயவு

## A6 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**“இரக்கமே என் உயிர்! ஒப்பற்ற தயவுடைய பேரறிவே பூரண இன்பமாம்!!!” - திருவருட்பிரகாச வள்ளலார்.**

உண்மையில் இறைவனுடைய சக்தியாலும், விருப்பத்தாலும் மட்டுமே நாம் உலகில், எந்த செயலையும் செய்ய வல்லவர்கள் ஆகின்றோம்! நம்முடைய உடல், உள்ளம் ஆகியவற்றின் செயல்கள் அனைத்தின் துவக்கமும், இறைவனின் சக்தியில் தான் உள்ளது! அத்தகைய மகிமை நிறைந்த “சரணாகதி” அடையும்போது, அந்த

மேலான பக்தன், ஒரே நேரத்தில் செயல் புரிந்தும், புரியாமலும் இருக்கின்றான். அவன் உள்ளத்துள்ளே அமைதியான, புனிதமான உணர்வுடன் நிரந்தரமான பரவச நிலையில் வாழ்கின்றான்! மேலும் அவனுடைய உள்ளத்திலும், உடலிலும் தெய்வீக சக்தி செயல் புரிகின்றது. உண்மையில் அத்தகைய பக்தன், இறைவனுடைய அனைத்து மேன்மைகளையும், மகிமைகளையும் வெளிப்படுத்தும் உண்மையுள்ள குழந்தையாகவும் தெய்வீக உணர்வு, தெய்வீக சக்தியின் உருவமாகவும் இருக்கின்றான்

ஒரு மனிதன், உலகிலுள்ள எல்லா சாஸ்திரங்களையும் கற்றவனாக இருக்கலாம். தனிமையில் தவம் புரிந்து இருக்கலாம்! யாத்திரை சென்று புனிதமான கோயில்களையும், இடங்களையும் தரிசித்து இருக்கலாம்! பேச்சாற்றலும், அற்புதமான சக்திகளையும் பெற்றிருக்கலாம். ஆனால் துயருற்றோர், வறுமையில் வாடுவோர், பசியால் துன்புறுவோர் ஆகியோருக்கு "இரங்கும் உள்ளம்" இல்லையென்றால், இவ்வனைத்துப் பேறுகளும், எதற்கும் தகுதியற்றவை ஆகின்றன!

இந்த நிலவுலகில், அனைத்து உயிர்களிடத்தும் ஒரே மாதிரியான கதிர்களை பொழியும் "தெய்வீக அன்பு" பக்தனின் உள்ளத்தில் உதயமாகும் போது, அவன் இறைவனைக் கண்டு, "இறையனுபவம்" பெறுவான்! அப்பொழுது, உண்மையில் அவன் தெய்வீக அமைதி நிறைந்தவன் ஆகின்றான்!

"உலகிலுள்ள அனைத்து உயிர்களிடத்தும் அவன் அன்புடையவன் ஆகின்றான்" ஏனென்றால், அவன் பேரன்புக்குரிய இறைவனே இவை அனைத்துமாக இருப்பதை அவன் காண்கின்றான்!! அவனுடைய கண்ணோக்கு பளிங்குபோல், தூய்மையானது! அவன் உலக இன்பங்களுக்காக வாழ்வதில்லை. ஆனால் "சேவை செய்வதற்காகவே" வாழ்கின்றான். அத்தகைய மகாத்மாக்கள் இந்த நில உலகத்தின் நன்மக்கள் ஆவர்! அவர்கள்தான் மக்கள் உள்ளங்களில் பேராசையால் விளைந்த ஆழமான காயங்களை, உண்மையில் குணப்படுத்துபவராவர்.

நீ யாருக்காவது ஒரு நன்மையை செய்யும்போது, புகழ், அங்கீகாரம் அல்லது பொருளாதார லாபம் ஆகிய எந்த வடிவத்திலும், பிரதிபலனை எதிர்பார்க்கக்கூடாது. உனது சேவை தன்னிச்சையாக, அன்புடன் செய்யப்பட்டதாக இருக்கட்டும்! அதுவே உன் உள்ளத்திற்கு சிறந்த

ஆறுதலாக அமையும். மேலும் அது அளவற்ற மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் காரணமாக இருக்கும்! நீ எத்தகைய பிரதிபலனையும் எதிர்பார்க்கும் போது, சேவையில் பெறப்படும் மகிழ்ச்சியை இழக்கின்றாய்! எனவே, "பிரதி பலனை எதிர்பாராது சேவை செய்வது முதல் நிலையாகும்"!!

உன்னை சுற்றிலும் உள்ள மக்களின் துன்பங்களையும், கவலைகளையும் நீக்குவதில் நீ எல்லா நேரமும் ஈடுபட்டிருக்கும்போது, யாருக்கு எத்தகைய சேவை செய்தாலும், "செய்தேன்" என்ற உணர்வின்றி இருப்பது இரண்டாவது நிலையாகும்!!

அதுவே சேவையில் வாழ்வின் நோக்கத்தின் நிறைவாக உள்ளது.

ஒளியைக் கொடுப்பது எப்படி சூரியனின் தர்மமோ, அப்படியே சேவை உனது தர்மம் ஆகிறது! அதுவே உன்னுடைய உண்மையான இயல்பும் ஆகும்! மற்றவர் நன்மையின் பொருட்டு, உன் வாழ்வை தியாகம் செய்வது, உனக்கு மேலான இன்பத்தையும், மகிழ்ச்சியையும் தருவதாகின்றது! நீ பொறுமையின் அற்புதமான ஆழத்தையும், எப்பொழுதும் "மன்னித்தலை மறவாத உணர்வையும்" மற்றவர்களுக்காக எத்தகைய துயரத்தையும் ஏற்றுக்கொள்கின்ற திறனையும் வெளிப்படுத்துகிறாய்!! மேலும் இவை யாவும், விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் செய்கின்றாய்! -"பணியே அதற்கான பரிசு"- என்ற சொற்கள் எவ்வளவு உண்மையாக இருக்கின்றன!! மேலே குறிப்பிட்ட பக்தனுடைய வாழ்வில் இது நன்றாக விளங்குகின்றது!! - ஓர் சன்மார்க்க ஞானி

"தயவே கடவுள்"!! தயவுடன் வாழ்க"!!!

**"இரக்கம் ஒன்றே உணர்வால், இன்பம் ஒன்றே குறியாகும்!!!"**

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும்கருணை

அருட்பெருஞ்ஜோதி

"எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க"!!!

தயவு

“கடவுளை ஆன்ம அறிவைக் கொண்டே அறிய வேண்டும்”!!!

“நீங்கள் “உண்மை அறிவாய்” விசாரம் செய்து வாருங்கள்! “

அவசியம் இதற்கு “காரணமான தயவு” இருக்க வேண்டியது.

ஆன்ம அறிவு=அறியும் அறிவு=காரியத்தில் உள்ளது.

அருள் அறிவு ஆகிய தயவு”= அறிவிக்கும் அறிவு = காரணத்தில் உள்ளது.

ஆன்ம அறிவே “சிற்சபை எனும் சிற்றம்பலம்”

அதற்குள் வீற்றிருந்து அருள் ஞானத்திருநடம் புரிபவரே “உள்ளொளி” ஆகிய “அருட்பெருஞ்ஜோதி நடராஜர்”!!!

## A7 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### “வள்ளலார் காட்டிய சுத்த சன்மார்க்க அருட் பெருநெறி, உலகில் எப்படிப் பரவும்? எப்போது பரவும்?!”

“உலகெலாம் பரவ என் உள்ளத்திருந்தே, அலகிலா ஒளி செய் அருட்பெருஞ்ஜோதி!!”

வள்ளல் பெருமான் மூலம், எல்லாம் வல்ல தனிப்பெரும் பதியாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே, உலக மக்கள் சமுதாயம் முழுமைக்குமாக ஏற்படுத்தியதுதான், அருட்பெருநெறியாகிய சுத்த சன்மார்க்கம்.

ஒன்றான அன்புக் கடவுளே, நேரடியாக சிதம்பரம் இராமலிங்கம் எனும் அருட் பக்குவ ஆன்மா மூலம் 1865 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. இன்றைக்கு சுத்த சன்மார்க்கம் தோன்றி 155 ஆண்டுகள் ஆகின்றன. இன்றுவரை ஆயிரக் கணக்கான சன்மார்க்க சங்கங்கள் தோன்றியுள்ளன; தோன்றிக் கொண்டேயுள்ளன.

ஆனால், சுத்த சன்மார்க்கம் என்றால் என்ன? என்பது தெரியாமலே, புரிந்துக் கொள்ளாமலே இருக்கின்றோம்.

**“சத்து மார்க்கம்” எனப்படுவதே “சன்மார்க்கம்” ஆகும்.**

“சத்து” என்றால் என்ன என்பதைத் தெரிந்துக் கொள்ளாமல் “சன்மார்க்க நெறியைக்” கடைபிடிக்க முடியாது!

“சத்து என்ற சொல் சத்துப் பொருளாகிய கடவுளைக்” குறிக்கின்றது. இந்த “சத்துப் பொருளாம் மெய்ப்பொருள்”- எங்கே உள்ளது?!

நாம் கண்ணால் காணும் ஆகாயம் அளப்பரியது; எல்லையற்றது. அந்த “அகண்ட வான் பெருவெளி முற்றும்” அனாதி காலமாய், நித்திய - சத்திய வஸ்துவாய் இருந்து வருபவர்தான் “சத்துப் பொருளாகிய கடவுள்”

அப்படியுள்ள சத்தாகிய இறைவன் “தன்னைத் தானே அனுபவிக்க வேண்டி” தானே “அனந்தங் கோடி ஆன்ம அணுக்களாய்” தோற்றங் கொள்கின்றார்! இதுவே இறைவனின் “சித்து விளக்க நிலையாகும்”

தனித்தனி ஒவ்வொரு ஆன்ம சிற்றணுவும் அந்த “அகண்ட ஆகாச வான் பெருவெளி முற்றும் நிறைந்த சத்துண்மையை தன் அகத்தே கொண்டது”!!

அந்த ஆன்மா கடவுளுடைய “சிற்றணு வடிவம்” ஆகும். இதுவே “சிற்றம்பலம் என்றும் சிற்சபை என்றும்” போற்றப்படுகிறது.

இந்த ஆன்ம சிற்றம்பலம், நம் புருவமத்திக்கு நேர் உட்பாகத்தில், தலைநடுவில் கோடி சூரியப் பிரகாசத்துடன் சுடர் விட்டுக் கொண்டிருக்கின்றது!

அந்த அகநிலை ஆன்ம அணுவுக்குள் “உள்ளொளியாக” இருக்கும் சத்துப் பொருளாகிய “அருளே” புறத்தில் தன் பெருஞ்ஜோதியை “அனகமுற விரித்து” நம் உயிராக, மனமாக, உடல் உருவமாக, அதன் தொடர்ச்சியான பேருலகப் பெரும் பிரபஞ்சத்தை தன் ஐஞ்சத்தி - ஐந்தொழிலால் ஆக்கிக் கொண்டுள்ளது.

எனவே, “**அந்த ஆன்ம அணுவுக்கு அகமும் புறமும் அருளும், பெருஞ்ஜோதியுமே நிறைந்துள்ளது**”

ஆக கடவுளும், அவருடைய திருவருளும் தான் எல்லாமாகி,

“**யாவும் தானாய்**” விளங்கிக் கொண்டுள்ளது. எத்தனை கோடி மனிதர்களாகவும், அனந்தங் கோடி ஜீவராசிகளாகவும் புறத்தில் அவரே அனேகராக விளங்கிக் கொண்டுள்ளார். இந்த உண்மை இப்படி இருக்க புற உலகில், “நான் என்றும் நீ என்றும் அவன்-அவள்-அது என்றும்” சொல்வதும், நினைப்பதும், “ஆணவ அறியாமையாகிய அஞ்ஞான பாசாந்தகார இருளே” ஆகும்.

அந்த அஞ்ஞான ஆணவ இருள் நீங்க எத்தனை கோடி பிறவி எடுத்தோம்? எவ்வளவு கோடி காலங்கள் சென்றுள்ளது? அப் பிறவிகள் தோறும் நாம் அடைந்த இன்ப துன்ப அனுபவங்கள் எல்லையற்றது.

மனிதப் பிறவி எடுத்தும் எத்தனையோ சமய, மத, மார்க்கங்களில் இலட்சியம் வைத்து "உண்மைக் கடவுளை" அறிந்து, "உண்மை இன்பத்தை" அடைய முடியாமல் தவறிப் போய்க் கொண்டே இருக்கின்றோம்!

இப்போதுதான் அந்த உண்மைக் கடவுள்-தனிப்பெருங்கருணையால் உலக மக்கள் அனைவரும் உண்மை நெறியை கடைபிடித்து "நித்திய நிலையான பேரின்ப பெருஞ்சுகத்தை" அடையும் பொருட்டு "சுத்த சன்மார்க்கம்" எனும் "உலகப் பொது நெறியை" வழங்கியுள்ளார்.

இனி, சுத்த சன்மார்க்கம் என்பது என்ன? அது இவ் உலகில் எப்படி-எப்போது பரவும்? என்பதைப் பார்ப்போம்.

**ஒரு சுத்த சன்மார்க்கி "தேகமே நான்" என்ற பொய்யான மாயா உணர்விலிருந்து முதலில் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். இந்த உடலும், மனமும், உயிரும் தத்துவங்களே என அறிய வேண்டுவது முதல் நிலை "விசாரமாகும்"!**

**ஒரு சுத்த சன்மார்க்கி எப்போதும் "சிற்சபை நாட்டத்தோடு" இருக்க வேண்டும். அதற்கு முதலில், "புருவ மத்தியில்" மனதை நாட்டிப் பழக வேண்டும்.**

இப்படிப் "புருவமத்தியில் இடைவிடாது, நினைப்பு மறப்பின்றி மனதை நிலை நிறுத்திப் பழகினால், ஆன்மாவின் இருப்பு சிறிது சிறிதாக அனுபவப்படும்"!!

மனிதன் தனது "உண்மையான ஆன்ம அக வடிவத்தை பொருந்தி நிற்றல்" சுத்த சன்மார்க்கத்திற்கு முதற்படி ஆகும்.

புறத்தில் உயிர்களிடத்து இரக்கமும், அகத்தில் "சத்துப் பொருளாகிய உள்ளொளியிடத்து" அன்பும் இரு கண்கள் போன்றவையாகும்.

இதையே வள்ளற்பிரான் "சத்விசாரம், பரோபகாரம்" என்கின்றார். எனவே, **இடைவிடாத சத்விசாரத்தால், தொடர்பறாத "உள்ளொளி நிலைப் பேறும்", புறத்தே பரோபகாரத்தால்**

**உயிர்களுக்கு அன்புப் பணியும் செய்து வருவதே சன்மார்க்கியின் வாழ்க்கை!**

சுத்த சன்மார்க்கம் "அகநிலையில் இருந்து தான் பரவும்."

மனோ கரண, ஜீவ முயற்சிகளால் ஒருகாலும் பரவாது. ஆயிரமாயிரம் சன்மார்க்க சங்கங்களும், அதில் பல இலட்சக் கணக்கான உறுப்பினர்களும் இருந்தும் என் பயன்??!!

ஒரு சுத்த சன்மார்க்கி தான் முதலில் "அகநிலையில் நிலைக்க வேண்டும்"!!! புற உலகைப் பார்க்கக் கூடாது. "புறத்திலே சீர் திருத்தம் கொண்டுவர முயல்வது வீண் பிரயாசை!"

-அதற்கான நேரம் வரும் போது, அவர்களுக்குள் இருந்து திருவருளே உணர்த்த திருந்தி விடுவார்கள்.

திருநீறு அணிதல் கூடாது, நாமம் போடக்கூடாது என்றெல்லாம் "புற சீர் திருத்தமெல்லாம் சுத்த சன்மார்க்கம் ஆகிவிடாது."

முதலில் நாமே புருவநடு நிலைப்போம்! அகம் இருந்து வாழப் பழகுவோம்! ஒருவன் தன் "அருட் ஜோதி அக ஆன்ம சொரூபத்தில்" நிலைத்து விட்டால், அவனைத் தொடர்ந்து பல இலட்சக்கணக்கான பக்குவ ஆன்மாக்கள் பின் தொடர்வர். அந்த குறிப்பிட்ட ஆன்மாவிலிருந்து புறப்படும் "அன்பு ஒளியால்" அனைவரும் ஜோதி சூழலில் உள்ள இழுக்கப்படுவர்.

"நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன்" என்றார் வள்ளற்பெருமான். அப்படி சொன்னது யார்?! வள்ளலுக்கு உள்ளிருந்து அருட்பெருஞ்ஜோதியே அப்படி திருவாய் மலர்ந்தது!!

"உள்ளம் எனும் ஆனந்த ஓங்கல் மிசை ஏறி,

-வெள்ள வெளிக்குள்ளே விளையாடும் பிள்ளை

-உலகம் எனும் சேரிக்கு ஒரு காலும் வாரான்

-கலகம் விளையும் எனக் கண்டு!!!

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

# A8 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "ஓம் என்ற பிரணவத்தின் பொருள்"

தயவு வடிவம் ஐயா! அனேக வந்தனம்.

நாம் முக்கியமாக தெரிந்துக் கொள்ள வேண்டியது;-

**அகரம் - உகரம் - மகரம்**

அதாவது அ - உ - ம்

-இந்த மூன்றெழுத்தின் முக்கூட்டு ஒளியே "ஓம்" ஆகும். இதுவே ஓங்கார பிரணவ மூல மந்திரம் ஆகும். எந்த ஒரு மந்திரத்தை உச்சரிப்பதற்கு முன் இந்த ஓம் ஆகிய பிரணவ மூல மந்திரத்தை சேர்த்து ஜெபிக்கும் போது அதன் ஆற்றல் மிகும்.

இந்த அகர, உகர, மகரம் சேர்ந்த "ஓம்" மந்திர மொழியே,

கிறிஸ்துவ மதத்தில் "**ஆமென்**", எனவும், முகமதிய மதத்தில் "**ஆமின்**" எனவும் வந்துள்ளது!!

"ஏமாறாதே ஓமே நீ" என்பார், சுத்த சன்மார்க்க சத்திய ஞானி தயாநிதி சுவாமி சரவணானந்தா!

இந்த அகர, உகர, மகரம் - பொதுவாக இறைவனுடைய "இயலையும், செயலையும்" குறிப்பது.

அ-ஆக்கல், உ- காத்தல், ம்- அழித்தல் ஆகிய முப்பெரும் செயலும் புற உலகிடை செயல்படுகிறது. மற்ற மறைத்தல், அருளல் ஆகிய இரு தொழிலும் அக உலகில் ஆன்மாவில் நிகழ்த்தப் படுகின்றது.

இப்பொழுது இந்த "ஓம்" குறிக்கும் கடவுள் விளக்க நிலை காண்போம்.

இந்த ஓங்காரத்திற்கு பல கோணங்களில் பொருள் உண்டு!

ஒன்றான அன்புக் கடவுள், மூவிதமாய் விளங்குதல் அவர்க்கு இயல்பாய். அதைக் குறிப்பதே **அ+உ+ம் = ஓம்**!!

**இயற்கை உண்மை - அ**

**இயற்கை விளக்கம் - உ**

**இயற்கை இன்பம் - ம்**

இதுவே சத்து + சித்து + ஆனந்தம் = சச்சிதானந்தம்!!

இதுவே "அன்பு - அருள் - இன்பம்" எனப்படும். ஒன்றான கடவுளே இப்படி மூவிதமாய் விளங்கிக் கொண்டுள்ளார்.

**அகரம்** - என்பது நாம் கண்ணால் காணும் எல்லையற்ற "அகண்டாகாச வான்பெருவெளிக்கு" உள்ளீடாய், என்றென்றும் எங்கெங்கும், அனாதியாய், ஆதி அந்தம் இல்லாததாய், நித்திய-சத்திய வஸ்துவாய், அருவமாய் நிறைந்துள்ள கடவுளைக் குறிக்கின்றது. இதையே வள்ளலார், "இயற்கை உண்மை "என்றும், "சத்துப் பொருள்" என்றும், "அன்பு இருப்பு" என்றும் குறிக்கின்றார்.

**உகரம்** - அதுவே இயற்கை விளக்கமாக, அருள் உணர்வாக, சித் ஜோதியாக நம்மில் விளங்குகின்ற நிலை!

**மகரம்** - இயற்கை இன்பம் - ஆனந்த அனுபவ வாழ்வு

அடுத்தபடியாக விளக்கம்;-

**அகரம்** - "அ" என்ற எழுத்து "8" என்ற எண்ணைக் குறிக்கும். நம் உடம்பு எண் ஜாண் அளவு கொண்டது. "அ" என்ற எழுத்து இந்த எண்ஜாண் உடலைக் குறிக்கின்றது.

**உகரம்** - இந்த உகரம் "2" என்ற எண்ணைக் குறிக்கின்றது. தூல உடம்புக்குள் இயங்குகின்ற, சூக்கும உயிரே உகரமாக குறிக்கப் படுகின்றது. இந்த உயிர் நித்திய ஜீவன் (தலைநடுவில் விளங்கும் ஆன்மா) ஆகவும், அநித்திய ஜீவன் (இதய ஸ்தானத்தே விளங்கும் தத்துவ ஜீவன்) ஆகவும் இரு கூறாய் விளங்குகின்ற நிலையை குறிப்பதே இந்த உகரம்(உ=2).

**மகரம்** - இந்த உடல், உயிர்க்கு அப்பால் "உள்ளொளியாக" விளங்குவதை குறிப்பதே மகர மெய் எழுத்து. இதுவே "மகர ஜோதி" ஆகிய கடவுள்.

ஆக, உள்ளொளியே(ம்), அகமிருந்து விரிந்து, மனிதனின் உயிராக(உ), உடலாக(அ) விளங்கிக் கொண்டிருக்கின்றது.

உண்மையில் கடவுள் தானே யாவுமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றார். அவரே எல்லா உயிர்களாகவும், மனிதர்களாகவும் விளங்குகின்றார், தன் திருவருளால்!!!

உண்மையில், "நான், எனது", என்று சொல்லுவது அறியாமை இருளே. சச்சிதானந்த அருள் அனுபவ வாழ்வின் நிமித்தமாக கடவுள் திருவருளே "நான்-எனது", என எல்லாமாக விளங்குகின்றது. முடிவில்

மனிதனுக்கு மரணமில்லா பேரின்பப் பெருவாழ்வை வழங்க உள்ளார் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

**ஓம்** - மேலும் ஒரு பொருள்;

அகண்ட ஆகாயமே எல்லா தோற்றத்திற்கும் காரணமாய் இருக்கிறது. இதுவே அகரம் ஆகும். இந்த ஆகாயத்தில் பிரிவற இருப்பது உகரம் ஆகிய காற்று. இக் காற்றில் உள்ளது மகரமாகிய மின்காந்த அலைகள்.

இந்த அகர உகரம் கொண்டே எல்லா அணுக்களும், அண்ட கோடிகளும், உயிர்களும், உயிர்களின் பிண்ட உடம்புக்கும், மற்ற எல்லாப் பொருள்களும் தோன்றியுள்ளனவாம்.

உதாரணம்; மின்னல் - இடி (ஒளியும் ஒலியும்)

“நாத விந்து கலாதி நமோ நம”என்பார் அருணகிரிநாதர்!

ஆண் சுக்கிலம் -விந்து ஒளி

பெண் சுரோணிதம் -நாத ஒலி

இரண்டும் சேர்ந்து கரு உற்பத்தி ஆகின்றது.

ஓங்காரத்தின் பொருள் விரிந்து கொண்டே போகும். முடிவான பொருள் இறைவனே.

தயவு

# A9 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “சிவராத்திரியின் தத்துவார்த்தப் பொருள்”

“சிவம்” என்பது சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய “நித்திய மங்கள ஜோதி” என்று உண்மை கண்டோர் உரைக்கின்றனர். இந்த கடவுட் ஜோதி, கண் முதலான இந்திரியங்களுக்கும், மன முதலான கரணங்களுக்கும் புலனாகாதாம். அப்படி “உண்மை வஸ்து” மறைந்திருக்க, உண்மை அல்லாத அழிந்துபடும் அநித்திய பொருள் மட்டும், பொறி புலன்களுக்கு தோன்றி நின்று மறைகின்றதாம்!

புற உலக தோற்றத்திற்கு, ஞாயிறு எப்படி காரணமாய் இருக்கின்றதோ, அதே போல், “அகமாகிய ஞான ஆகாச வெளியில்”,

சிவமாகிய ஜோதி தயாஜோதி சக்தியுடன் திகழ்ந்து, தேகாதி பிரபஞ்சத்திற்கும் மகா காரணமாய் இருக்கின்றதாம். **“சித்து ஒளி மயமான சிவம்”, தடிப்பேறிய ஜட மூட பூத தேகாதி பிரபஞ்சத்தால் சூழ்ந்து மறைக்கப்பட்டுள்ளதாம். இதுவே இருண்ட இரவு என்னும் “சிவராத்திரி”!**

இந்த “தேகம்” இல்லாமல், “தேகி” ஆகிய கடவுளை அறிந்து அடைதல் கூடாதது போன்றே, “சிவானுபவம்” பெறுவதற்கு இந்த ராத்திரி துணையாக உள்ளதாம்.

உயர் பிறப்பாகிய இந்த மனித தேகத்தினால், “அகத்தே பகுத்தறிவு தோன்றி”, அது கொண்டு,

“கடவுள் ஒருவர் உண்டு!” என்ற நிச்சய புத்தி உண்டாகி, அக் கடவுள் எல்லாம் வல்ல “தயாபெரும் பதியாக உள்ளவர்!” என்று அறிந்து, நாமும் அத் “தயா மயமாகி” அக்கடவுள் அனுபவத்தை அடைய வேண்டி உள்ளதாம்.

மனோ அறிவின் ஆற்றல் கொண்டே, “அக விசாரப் பண்பாலே” கண்ட கடவுள் ஜோதியைச் “செம்பொருளாம் சிவமாக” கற்பித்த ஆன்றோர், அப்பதியை அடைய, தேகாதி பிரபஞ்சத்தை, முற்றும் மறந்த -பக்தி வழிபாட்டால், “நிர்விகற்ப சமாதி நிஷ்டையால்” அடையலாம் என்றார்கள்.

இவற்றிற்காக தந்திர மந்திர மார்க்கங்களை வழங்கியுள்ளார்கள். அவைகளின்படி பின்பற்றினால், அவர்களுடைய லட்சியம் சித்திப்பதும் உண்மையே!

அந்த லட்சியம் இன்று முடிவு நிலையாக இல்லை!

யாதெனில், **“கடவுள் அனுபவம் பெறுவதற்கு, இந்த உடம்பை விட்டு விட வேண்டும் என்ற கொள்கை சரியன்றாம்!!”**

ஏனெனில், அக் கடவுள் அனுபவம் விளங்குவதற்கே, இந்த தேகம் இருந்தாலன்றி, இது இல்லாமல் போய், வேறு எது இருந்தாலும், ஒன்றுமே இல்லாவிட்டாலும் பயன் இல்லையாம்!!

ஆதலின் இத் தேகத்தை இழந்து விடக்கூடாது!! “இது இருக்கின்றபோதே அந்த அகப்பதியோடு பதிந்து ஒன்றி விட வேண்டும்!!” அப்படி ஒன்றி, அதிலே “அமிழ்ந்து போய், மறைந்து

விடாமல்'' அப்பதி உண்மை இயல் ஆகிய "தயாஜோதியை உண்ணின்றே'' உயிர், உடம்பிலும், அதன் செயலிலும் கலப்பித்து, அதனால் இந்த அசுத்த அநித்திய தேகநிலையை, சுத்த நித்திய ஜோதி வடிவாக மாற்றி கொள்ள வேண்டியுள்ளது! இப்படி ஆக்கிக் கொண்டால்தான், அந்த கடவுள் அனுபவத்தோடு மன்னி வாழலாம்!!

விரதம், பூஜை, ஜபம், தபம் முதலிய அனுஷ்டித்தும், அடைகின்ற பழைய முடிவு தேக அந்தியம் வரை மட்டும் இருந்து மறைவதால், பூரணமானது அல்ல! என உணர்கின்றோம்.

இதற்கு விபரம்;

சிவராத்திரி விரதத்தால் மனிதர்கள், தேவர்கள் முதலானோர், தங்கள் துன்பங்களையும், மரண பயத்தையும் கூட சிவனருள் அடைந்து வென்றார்கள் என்றும், நாமும் அப்படி அனுஷ்டித்தால் அப்படியே நன்மை அடையலாம் என புராணங்களும், இதிகாசங்களும் கூறுகின்றன. இதற்குமேல், தந்திர யோக சாதனையால் கண்ட உண்மை யாதெனில்;

அண்டத்தில் சூரியனும், சந்திரனும் ஒரு வழிபட்ட அமாவாசையில், பிண்ட தேகத்திலும், சூரிய கலை - சந்திர கலை கூடிய சுழுமுனையில் விரதமிருந்து தியானத்தால், "மெய்ஞ்ஞானம்'' உண்டாகின்றதாம்!

"அகரம்'' ஆகிய சூரியன், "உகரம்'' ஆகிய சந்திரனுடன் ஒன்றிணைய ("அ + உ''=) "யகரம்'' ஆகிய ஆன்மாவாம்!!

இதனை "எட்டும் இரண்டும் சேர்ந்த லிங்க வடிவம்'' என்பர்! இந்த "ஆன்ம லிங்க யகரபீடம்'' இரு கண் "புருவ நடு'' திகழ்வதால், "அங்கு மனம் புதைத்து, தியானித்தால் ஞானக் கண் திறந்து உண்மை விளங்கும்!''

அமாவாசை விரதத்தின் லட்சியம் இது என்ப!

இந்த ஞான விழி திறக்கப் பெற்றுக்கொண்டு "உள் நோக்கும்போது'' உச்சிக்கும் கீழே, உண்ணாவுக்கு மேலே, "நித்திய ஜோதி தீபமாய்'' உள்ள பதி அனுபவம் தோன்றும்!

இதுவே "ஞான சூரியன்!'' இதன் ஒளி கொண்டு தான், நமது "உயிர் உணர்வாகிய மதி'' பிரகாசிக்கின்றது. இவ்விரு ஜோதியும் ஒன்று பட்டுவிட்டால், "ஜீவ - பரமான்ம ஐக்கியம்'' ஏற்பட்டு விடுவது என்ப!!

அகர வண்ண எட்டு ஆகிய பரமாகாசத்தில், உகர வண்ண இரண்டாகிய உணர்வை - கலப்பித்தலே எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணுதல் என்ப. இவ் அகநிலை அனுபவம் உண்டாகவே, "சிவராத்திரியை" இந்நாளில் ஏற்படுத்தியுள்ளனர்.

நமது ஆன்ம ஜோதி பதி நிலையே, "கும்ப ரவி" என்பது! இதனை "ஓங்காரக் கலசம்" என ஓதுகின்றது ஔவையின் யோக ஞான குறள்! இந்த,

"ஓங்கார கலசத்து உயர்ந்த அமிர்து உண்ணில், போங்காலம் இல்லை புரிந்து"

என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலைக்கு ஏறுவதற்கு முன், "நமது உயிர் உணர்வு ஒடுங்கிக் கிடக்கின்ற இடத்தை அறிய வேண்டியுள்ளது!"

அச் சிரநடு ஜோதி பீடத்திற்கு கீழே, "ஓங்கார மூளை" என்னும் (**medulla oblongata =** மெடுல்லா ஒப்லாங்கடா) ஆகும். இதன் உரு மகர மீன் வடிவமாக உள்ளது.

"இந்த நிலையில் மனதை நிறுத்தி ஒருமையினால், உயிர் உணர்வை மேலே ஏற்றினால், ஜீவ மதி, ஆன்ம ரவியோடு கலந்து கொள்ளும் என்ப!"

இந்த மகரமதியும், கும்ப ரவியும் உள்ள நாளே, மாசி மாதம் "அமாவாசைக்கு முன் தினமான சதுர்தசி!" இந்நாளே "சிவராத்திரியாம்!" இந்த சதுர்தசியில் "தூங்காதே, சிவ ஜோதியை மறவாதே உபவசித்து இருந்தால், மேற்படி சிவானுபவம் சித்திக்கும்" என்பது யோக ஞானிகளின் முடிவு.

மேற்குறித்த லட்சிய முடிவுகள் எல்லாம், "மனிதனை உலக விஷயங்களிலிருந்து திருப்பி, நிராசை உண்டாகி, உள் ஒளியில் ஒடுங்கி, மறைந்து போக கூறிய உபாயங்களாகவே முடிந்தன!"

அந்தத் தந்திர சாதனைகளால், ஏதோ சில பல யோக ஞான சித்திகள் கூடிவரப் பெற்று, இவ்வுலகில் அற்புதம் நிகழ்த்த முடிந்தது!

அதனால் அவ்வழி சென்றால், நாமும் அப்படி சித்தி கொண்டு களித்திருக்கலாம்.

இதற்குமேல்,

**“சுத்த தயா ஒழுக்கத்தோடு கூடிய சத்விசாரத்தால், உண்மையை ஓர்ந்து, தேகபோகப் பற்றில் நிராசை உண்டாகி அருட்பெருஞ்ஜோதியில் கலந்து கொள்ளுவது, இந்நாள் பெறவேண்டிய முதல் நிலையாகும்”.**

சிவராத்திரியின் தத்துவாதீதப் பொருள், இதுவாகக் கண்டு கொள்ள வேண்டும். இப்படி கண்டு கொண்டு தயா ஜோதி மயமாக வாழ வாழ, மற்றெந்த சாதனைகளாலும் அடைதற்கரிய “பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று திகழ்வோம்!!”

- “தயாநிதி சுவாமி சரவணானந்தா”

“அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி”

தயவு

## மஹா சிவராத்திரியின் சிறப்பு

லூமினிபெரஸ் ஈத்தர் **(Luminiferous Eather)** எனப்படும் ஒரு பிரம்மாண்ட பிரபஞ்ச சக்தி மகா சிவராத்திரி அன்று மட்டுமே ராக்கெட் வேகத்தில் ஸ்பிரிங் என்ற தன்மையில் பூமியை நேரடியாக வந்து இறங்கும். இந்த நேரத்தில் முதுகை நேராக வைத்து தூங்காமல் இருந்தால் அபரிமிதமான சக்தி கிடைக்கும். இதனால் பல நன்மைகள் உண்டு. இந்த சக்தி வேறு எந்த நாளும் கிடைக்காது. எனவேதான் மகாசிவராத்திரியன்று தூங்காமல் விழித்திருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

ஈத்தர் எனப்படும் சக்தி தான் இந்த உலகத்தை இயக்குகிறது. இந்த ஈத்தர் உலகம் முழுவதும், அண்டவெளி முழுவதும் நிறைந்து இருக்கிறது. மேலும் பூமியை நோக்கி ஒவ்வொரு வினாடியும் வந்துகொண்டே இருக்கிறது.

பூமி சூரியனை நீள்வட்ட பாதையில் சுற்றி வருகிறது. இதில் இரண்டு நீள்வட்ட பாதையில் உள்ளது. ஒன்று சிறிய நீள்வட்டப் பாதை, மற்றொன்று பெரிய நீள்வட்டப் பாதை. பூமி பெரிய நீள்வட்டப்பாதையில்

இருந்து சிறிய நீள்வட்ட பாதைக்கு மாறும் நேரம் தான் இந்த மகா சிவராத்திரி நேரம்.

மேலும் ஈத்தர் என்ற சக்தி எப்பொழுதும் பூமியை நோக்கி வந்து கொண்டே இருக்கிறது. வருடத்தில் ஒவ்வொரு மாதமும் சிவராத்திரி வரும். ஒவ்வொரு மாதமும் வரும் சிவராத்திரியில் ஈத்தர் சக்தி சற்று அதிகமாக இருக்கும். ஆனால் வருடத்தில் ஒருமுறை வரும் மாசி மாத சிவராத்திரி மட்டும் அபரிமிதமாக, அளவுக்கு அதிகமாக சக்தி இருக்கும். இதற்கு நிகர் வேறு எந்த மாதமும் இருப்பதில்லை. எனவேதான் இந்த சிவராத்திரியை மகா சிவராத்திரி என்று அழைக்கிறார்கள்.

ஈத்தர் சக்தி இரண்டு விதமான தன்மைகளில் பூமியை நோக்கி வரும் ஒன்று ஸ்பிரிங் **(SPRING)**, இரண்டு ஃபால் **(FALL)**. இதில் ஸ்பிரிங்க்கு சக்தி அதிகம். ஃபால்க்கு சக்தி குறைவு.

மாசி மாசம் மகா சிவராத்திரியில் வரும் ஈத்தர் ஸ்பிரிங் தன்மைகொண்டது. இதற்குத் தான் அதிக சக்தி உண்டு. ஏனென்றால் ஈத்தர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகரும், பூமி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சுற்றிக்கொண்டிருக்கும். எனவே நேரடியாக முழு சக்தியை இந்த மகாசிவராத்திரியில் மட்டுமே கிடைக்கும்.

புரியும்படி சொல்ல வேண்டுமென்றால், ஈத்தர் 24 மணி நேரமும் பூமியை நோக்கி சைக்கிள் வேகத்தில் வரும். ஒவ்வொரு மாதமும் வரும் சிவராத்திரியில் புல்லட் வேகத்தில் வரும். மாசி மாசம் மட்டும் ராக்கெட்டில் வேகத்தில் வரும்.

மகா சிவராத்திரி அன்று பூமி, நிலா, சூரியன் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் நடு இரவு 12:15 **AM** முதல் 12: 45 **AM** வரை உச்சகட்ட ஈத்தர் சக்தி கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனவே இந்த நேரம் சிறப்பான நேரம். இந்த நேரம் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறும்.

இந்த லூமினிபெரஸ் ஈத்தர் **(Luminiferous Eather)** பல மதங்களில், பல மார்க்கங்களில் இறைவன், கடவுள், பிரமாண்டம், இறைத்துகள் ஆற்றல், பேரறிவு, பிரபஞ்சம், பரமாத்மா மற்றும் அண்டம் என்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கிறார்கள்.

மகாசிவராத்திரி அன்று விரதம் இருந்து, தூங்காமல், முதுகை நேராக வைத்து, விழித்திருந்து தியானம் செய்வது மிக மிக சிறப்பு.

ஈதர் உச்சந்தலையில் உள்ள சகஸ்ரஹார சக்கரத்தின் வழியாக பீனியல் கிளாண்ட் என்ற ஆனந்த சுரப்பி என்ற ஆனந்த மூளையை அடைந்து பலவிதமான நல்ல ஹார்மோன்களை சுரக்கும். இந்த நேரத்தில் நமக்கு நாமே நம்மை ஆசிர்வாதம் **(Self Blessing)**

செய்து கொள்ளும் பொழுது இது நமது டி என் ஏ **(DNA)** ல் கெட்ட பதிவுகளை (கர்மா) அழிக்கும் வல்லமை உள்ளது.

மகா சிவராத்திரியில் பகலில் சக்தி கிடைக்காதா?

பகலில் சூரிய வெளிச்சம் இருப்பதால் ஈத்தர் சக்தி சற்று குறைவாக இருக்கும். இரவில் சூரிய வெளிச்சம் இல்லாததால் சக்தி அதிகமாக இருக்கும். இரவு 9 மணிக்குத்தான் மெலடோனின் **(Melatonin)** என்ற ஒரு திரவம் நமது உடலில் சுரக்கும். மேலும் காலை 2 மணிக்குத்தான் நாம் பிரபஞ்சத்தோடு மிகவும் நெருக்கமாக இணைந்திருக்கும் நேரம். எனவே இரவு 9 மணி காலை 2 மணி வரை தான் அதிக சக்தி பெறும் நேரம் எனவே இரவில் கண் விழிக்கிறார்கள்.

மகா சிவராத்திரி ஏன் இந்தியாவில் மட்டும் இருக்கிறது மற்றும் நாடுகளில் இல்லை?

நமது நாட்டில் மட்டும்தான் ஆசான்கள் உள்ளதை உள்ளபடி அனைவருக்கும் ஓபனாக சொல்கிறார்கள். பல நாடுகளில் இந்த விஷயத்தை ஆசான்கள் மட்டும் புரிந்து தான் மட்டும் பயிற்சி செய்து சக்தியை எடுத்துக் கொள்கிறார்கள். மேலும் பல நாடுகளில் இதுபோன்ற விஷயங்கள் யாருக்கும் தெரிவதில்லை.

இந்த ஈத்தரைத்தான் ''ஈசன்'' என்று சிலர் அழைக்கிறார்கள். ஈசனை தான் சிவன் என்று அழைக்கிறார்கள். ''ஈத்தர் ராத்திரி'' என்பது தான் சிவராத்திரி என்று கூறப்படுகிறது. எனவே மகா சிவராத்திரி அன்று விழித்திருப்பது அனைவருக்குமே நல்லது.

இப்படி அறிவியல் பூர்வமாக சொன்னால் சிலருக்கு மட்டுமே புரியும் என்பதற்காக, ஞானிகள் பல கதைகளைச் சொல்லி அனைவரையும் தூங்காமல் விழித்திருக்க வைத்து சக்தி கிடைக்க செய்திருக்கிறார்கள்.

புராண கதைகளில் கூட பார்வதி தேவி கடும் விரதம் இருந்து சிவனின் உடலில் சரிபாதி பெற்றதாக கதைகள் உண்டு. அதாவது சிவமும் சக்தியும் இணையும் நாள் இதுவே. சிவசக்தி தத்துவம் நடக்கும் நாள். அதாவது சுழுமுனையில் சுவாசம் நன்றாக ஓடும் நாள் இந்த நாளில் பிரபஞ்சத்தில் இருந்து கிடைக்கும் சக்தியை சுழுமுனை நாடி வழியாக பரம்பொருள் இருக்கும் மூன்றாவது கண் பகுதிக்கு நேரடியாக கொண்டு செல்ல முடியும்.அதுவும் இயற்கையாகவே. அந்த அற்புதம் நடக்கும் நாள் இந்த மஹா சிவராத்திரி நாள் ஆகும்.

அன்று ஒரு ராத்திரி முதுகெலும்பு நேராக இருக்கும் படி நிமிர்ந்து இருக்க வேண்டும். உள்முகமாக கவனித்து இருக்க வேண்டும்.

ஒவ்வொரு விஷயங்களுக்கு பின்னாலும் ஒப்பற்ற பிரபஞ்ச ரகசியத்தை ஒளித்து வைத்த நம் முன்னோர்களின் அறிவியலை அறிவை என்னென்று சொல்வது. - ஓர் அன்பர்

## A10 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "ஊழ் என்ன செய்யும்?"
## "கோள் என்னசெய்யும்?"
## (ஔவையாரும் வள்ளலாரும் உபதேசித்தவை)

ஊழ் வினை உறுத்து வந்து ஊட்டும்.

"வருந்தி அழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமின் என்றால் போகா " - என்பார் ஔவை.

செய்த தீவினைகள் இருக்க, தெய்வத்தை நோவதால் ஒருப்பயனும் இல்லை. நாம் எடுத்தக் காரியங்கள் உரிய நேரம் வராமல் கைக்கூடாது. என்னத்தான் ஓங்கி உயர்ந்த மரமென்றாலும், உரியப் பருவம் வராமல் கனி விட்டுப் பழம் ஆகாது.

"அடுத்து முயன்றாலும் "ஆகும் நாள் அன்றி", எடுத்தக் கருமங்கள் ஆகா..

தொடுத்த உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம், பருவத்தால் அன்றி பழா "

என ஔவை மூதுரையில் வினையின் வலியை அழகுபட கூறுகிறார்.

ஒன்றை இழக்கும் நேரத்தில் மயக்கமும், அதை அடையும் காலத்தில் அறிவுத் தெளிவும் விளங்கும்.

இந்த ஊழ் வலிமை மிக்கது. வினைக்காலத்து அதை நாம் வெல்ல நினைக்கும் முன்னே, அது

முந்திக் கொண்டு வென்றுவிடும்.

“ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்து உறும்” என்பார் வள்ளுவர்.

ஆனால் “தவமுடையார், அத்தகு துன்பங்களை பொறுத்துக் கொள்வார்கள். மேலும் பிறருக்கு துன்பம் செய்யாமலும் இருப்பார்கள்.”

துன்பம் உறுகின்ற போதெல்லாம், அதனை தாங்கிக் கொண்டு “உள்ளொளிப் பெறுவர்.”

சுடினும் ஒளிப்பெறும் பொன் போல் இருப்பர்.

“தவமுடையார் தமது உடலையே அன்னியமாக கருதுவர்”

. இந்த அந்நியமான உடம்பைக் கொண்டு, பெறும் எப்பொருளையும் விரும்பமாட்டார்கள்.

பிறப்பால் வரும் எவ்வினையையும் விட்டு விலகி நிற்பர்.

“எழுதியவாறே காண், இரங்கும் மடநெஞ்சே! நாம் கருதியவாறே கருமங்கள் ஆகாது.

இதில் நமக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது?

“ இறைவனே கொடுத்தான் என்று, எல்லோர்க்கும் கொடுத்து மகிழ்வாய் வாழுங்கள்”

என்கிறார் தமிழ் மூதாட்டி.

சரி, இந்த ஊழினை கடக்க வழியே இல்லையா?

அவரே, வழியும் சொல்கிறார்.

“சிவாயநம” என்று சிந்தித்து இருப்போர்க்கு, அபாயம் ஒருநாளும் இல்லை. உபாயம் அதுவே!....மதியாகும் அல்லாத எல்லாம், விதியே மதியாகி விடும்,”

ஆற்றில் மேடும் பள்ளமும் போல் உலகச் செல்வங்கள். மானிடர்களே!, செல்வமும் அதுப்போல் வரும், போகும்.

அது வற்றிவிடும் முன்னே, “எல்லோர்க்கும் உணவிடுங்கள். நீர்க் கொடுங்கள். அதனால் உள்ளத்தில் ஒழுக்கம் ஓங்கி நிலைக்கும்.”

இந்த தவத்தாலும், இறைவனை எண்ணி இருப்பதாலும், கொடும் பாழ் வினை சூழினும், நலம் பெறுவீர்கள்.

அன்பே சிவம். வாழ்க வையகம்.

- ஓர் சன்மார்க்க மெய்யன்பர்

“வள்ளலாரின் சுத்த சன்மார்க்க உபதேசம்;-”

**சுத்த சன்மார்க்கத்தில் உயிர்இரக்கமே கடவுள்வழிபாடாகும். உயிர்களுக்கு உபகாரம் செய்வதே ஊழ்வினைகள் நீங்குவதற்குரிய பரிகாரமாகும்.**

சுத்தசன்மார்க்க நெறியில் தெளிவுடன் சமய மத ஆச்சாரத்தை அனுட்டிக்காமல், சுத்தசன்மார்க்க பெருநெறி ஒழுக்கமாம் எல்லா உயிரையும் தன்னுயிர்போல் பார்க்கும் பேரொழுக்கத்தை மட்டுமே கடைபிடித்து,

பெருமானாரிடத்து முழு நம்பிக்கையும்,

ஆண்டவரிடத்து மாறாத அன்புடனும் வாழுகின்ற சுத்தசன்மார்க்கிகளுக்கு ஊழ்வினையால் எவ்வித ஆபத்துகளும் துன்பங்களும் உண்டாகாது என வள்ளற் பெருமான் உறுதிபட ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

நாம் சார்ந்திருக்கின்ற சுத்தசன்மார்க்கம் நிறை அருள் பூரணஞான சித்தர் நடத்துகின்ற ஒரு ஞான மார்க்கமாகும்.

ஆன்மாக்களின் வாழ்க்கைக்குரிய நியதிகளை உள்ளதை உள்ளபடி மறைப்பு இல்லாமல் தெளிவுடன் உள்ளங்கை நெல்லிக்கனியைப் போன்று விளக்கி அருளுகின்ற ஒளி மார்க்கமாகும்.

கடவுள் உண்மையை இலைமறை காய்மறையாய் எவற்றையும் மறைத்து கூறாமல்...

ஆன்மாக்கள் எல்லாம் விரைந்து சிவானுபவத்தைப் பெறவேண்டும் என்பதற்காகவே...

நமது வள்ளற் பெருமான் திருவருட்பாவை எளிய தமிழில் எளிய நடையில் எல்லோரும் படித்து பயன் பெறவேண்டும் என்பதற்காக,

ஆறு திருமுறைகளையும் வகுத்தருளியதுடன், உரைநடையாகவும் பல உபதேசங்களை வழங்கியுள்ளார்கள்

வினைவசத்தாலோ அல்லது நம்மை பக்குவிக்கும்பொருட்டு திருவருட் செயலாலோ, நமது குடும்பத்தில் சில காரியத்தடைகள், நிம்மதியின்மை, கொடிய வறுமை போன்ற துன்பங்களால் நாம் அவத்தையுறும்போது..

இதற்கு சில பரிகாரங்கள் செய்தால் சரியாகிவிடும் என்று கூறி அவர்களை சன்மார்க்கத்திற்கு மாறான செயல்களில் சமய மத ஆசார வகைகளில் பரிகாரம் செய்து வழிநடத்துவது தவறான வழிகாட்டுதலேயாகும்

சுத்தசன்மார்க்கத்தில் கடவுள் வழிபாடு என்பது உயிர் இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆம், **ஒரு ஜீவன் அவத்தையுறுவதைப் பார்க்கின்றபோது உண்டாகும் ஆன்ம உருக்கத்தைக் கொண்டு அந்த ஜீவனுக்கு உபகாரம் செய்திடுவதும், நமது சக்திக்கு உட்பட்டு செய்ய இயலாத தருணத்தில் அந்த ஜீவனுக்காக ஆண்டவரிடம் பிரார்த்திப்பதுவுமே சுத்தசன்மார்க்கத்தில் இறைவழிபாடாகும்**

ஆம், ஒவ்வோர் உயிரையும் கடவுளாகக் கண்டு அவ்வுயிர்களுக்கு வரும் துன்பங்களை நிவர்த்தி செய்வதே சுத்தசன்மார்க்க வழிபாடாகும்.

“உயிருள்யாம் எம்முள்உயிர் இவைஉணர்ந்தே உயிர்நலம் பரவுகென்று உரைத்த மெய்ச்சிவமே_ ”

இந்த வழிபாட்டைக்கொண்டே ஆறறிவுடைய மனிதராகப் பிறந்த எல்லா ஆன்மாக்களும் இப்பிறவியில் தமது இகலோக வாழ்வில் முற்பிறவி வினைகளால் உண்டாகின்ற அவத்தைகள் அனைத்திற்கும்

பரிகாரத்தை தேடிக்கொள்ள வேண்டும் என்பது சத்தியவான் வார்த்தையாகும்.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மேற்கொள்ளும்போது தீராத பெருநோய் என்று சொல்லக்கூடிய குஷ்டமாகிய தோழுநோய்கூட தீர்ந்திட வல்லதாய் உள்ளது என்பது பெருமானாரது திருவாக்காகும்.

மேலும் நீண்டகாலமாக குழந்தையின்மை, தொடர்ந்து காரியத்தடைகள். எதிர்பார்த்த காரியங்கள் செயல்கூடாமை, திருமணத்தடைகள் முதலிய அனைத்து வினைகளும் ஜீவகாருண்ய ஒழுக்கம் ஒன்றாலேதான் நிவர்த்திசெய்யப்பட்டு செயல்கூடும் என்பது சுத்தசன்மார்க்க அருள்நியதியாக உள்ளது.

இந்த வினைநிவர்த்தி ஒழுக்கமும் வினைக்கு உட்பட்டவர்கள்தான் செய்யவேண்டுமே தவிர அவர்களுக்காக மற்றவர்கள் செய்வது என்பது பிரயோசனமாகாது.

அவரவர் வினையை அவரவரே சுமந்திட வேண்டும்

இப்படி இருக்கையில்,

பரிகாரம் என்ற பெயரில் வேறு எந்தவகையில் முயற்சி செய்தாலும் இந்த சுத்தசன்மார்க்க உலகத்தில் காரியம் செயல்கூடாது என்பதை நன்றாக அறிந்து உணர்ந்திடல் வேண்டும்.

எளியேன் தற்போது கூறியுள்ளது தயவைப் பிரதானமாகக் கொண்ட புனிதமான சுத்தசன்மார்க்கத்தில் பயணிக்கின்ற அன்பர்களுக்கு மட்டுமேயாகும்.

- ஓர் சன்மார்க்க மெய்யன்பர்.

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

“எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!!”

“கொல்லா நெறியே உலகெல்லாம் ஓங்குக!!”

“சூழ்க தயவு!!”

# A11 . தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# "சான்றோர் காட்டிய அறநெறி;-"

1.ஒளிவு மறைவு இன்றி பேச்சிலும் செயலிலும் "நேர்மையைப்" பின்பற்றுங்கள்

2. பெருந்தன்மையுடன் இருங்கள். பிறர் செய்த குற்றம், குறைகளை மன்னிக்கப் பழகுங்கள்.

3. கடந்த காலம், எதிர்காலம் இரண்டும் நம் கைவசத்தில் இல்லாதவை. "நிஜமான நிகழ்காலத்தில் வாழப் பழகுங்கள்!"

4. "எளிய வாழ்வையும், உயர்ந்த எண்ணத்தையும் கொண்டவனாக மனிதன் இருக்க வேண்டும் ".

5. வயிறு புடைக்க உணவு சாப்பிடக்கூடாது. எப்போதும் உணவில் நிதானத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

6. "எண்ணம், சொல், செயல் மூன்றாலும் யாருக்கும் துன்பம் செய்யாதீர்கள்!" சுயநலமின்றி பிறரை நேசியுங்கள்!

7. "யாரையும் புண்படுத்த வேண்டாம். அனைவரிடமும் அன்பு காட்டுங்கள்."

8. வாரம் ஒரு முறை விரதம் மேற் கொள்ளுங்கள். முடியாவிட்டால் பால், பழம் மட்டும் சாப்பிடுங்கள்.

9. பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காதீர்கள். யாரையும் சார்ந்து இருக்க வேண்டாம்! சொந்தக் காலில் நில்லுங்கள்!

10. "ஒழுக்கத்தை உயிராக போற்றுங்கள்!" நன்னெறி தரும் சான்றோரின் வரலாற்றைப் படியுங்கள்!

11. அதிகாலையில் எழுந்து பணிகளில் ஈடுபடுங்கள். இரவில் நீண்ட நேரம் கண் விழித்து, கேளிக்கையில் ஈடுபடாதீர்கள்.

12. சத்தியம் இருக்கும் இடத்தில் எல்லா நற்குணங்களும் இருக்கும்! "சத்தியமும் கடவுளும் வெவ்வேறானது அல்ல!"

13. உடலுக்கு உணவு போல, உயிருக்கு (எல்லா உயிர்களின் நன்மைக்காக இறைவனிடம் வேண்டுதல்) பிரார்த்தனை மிகவும் அவசியமானது.

14. தினமும் இரண்டு மணி நேரமும், சாப்பிடும்போதும் மௌனத்தை கடைபிடியுங்கள்.

15. திருப்தியுடன் வாழ வேண்டுமானால், ஆடம்பர விஷயங்களில் கவனம் செலுத்தாமல் எளிமையாய் வாழ்வோம்.

16. "எதையும் எதிர்பார்க்காமல் பிறருக்கு இயன்ற சேவைகளைச் செய்யுங்கள்!"

17. பெற்றோரை கடவுள் போல் நேசியுங்கள்! "அனைவரிடமும் அன்பை வளருங்கள்!" மனித சமுதாயம் மீதுள்ள அன்பு, முதலில் நம் வீட்டிலேயே துவங்குகின்றது என்பதை உணருங்கள்.

18. மிருக குணத்தைப் போக்கி மனிதத்தன்மையை கைக்கொள்வதே தெய்வீக வாழ்க்கை! தூய தன்மையை அனைவரும் கடைபிடித்தால் வாழ்க்கையில் உயரலாம்.

19. பொறுமை, அன்பு, இரக்கம், அமைதி மற்றும் சகிப்புத் தன்மையால் கோபத்தை கட்டுப்படுத்துங்கள்! இவற்றை மறந்து மன்னிப்பதுடன் மக்களுடனும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுடனும் ஒத்துப்போக கற்றுக்கொள்ளுங்கள்.

20. "அகிம்சையே ஒப்பற்ற ஆன்மீக சக்தியாகும்! இதைப் பின்பற்ற தொடங்கினால், எல்லா நற்குணங்களும் நம்மை வந்தடையும்!"

21. "தினமும் காலை நான்கு மணிக்கு எழுந்து தியானம் செய்து மனதை ஒருமுகப்படுத்துங்கள்!" தியானம் செய்ய தனியிடம் தேவை. அந்த இடம் உங்கள் கட்டுப்பாட்டில் இருப்பது நல்லது.

22. "ஒழுக்கத்தை என்றும் உறுதியான அடிப்படையாகக் கொண்டு தெய்வீக வாழ்க்கை வாழுங்கள்!" விரைவில் வாழ்வின் லட்சியத்தை நீங்கள் எட்டி பிடிக்க முடியும்.

23. செய்த தவறுகளைக் குறித்து எண்ணிப்பார்த்து, உங்களை நீங்களே திருத்திக் கொள்ளுங்கள்! இதைத்தான் சுயசோதனை என்பர். அடுத்தவர்களின் குறையைப் பெரிது படுத்தாதீர்கள்.

24. "எல்லா நேரங்களிலும் கடவுளை நினையுங்கள்!!" குறைந்தபட்சம் காலை, மாலையில் கடவுளை தியானிப்பது மிகவும் நன்மை தருவதாகும்.

25. வெட்டிப்பேச்சினால் பயன் கிடையாது. "மக்களுக்குத் தொண்டு செய்வதில் தனித்திறமையும், பற்றும் கொண்டு விளங்குங்கள்!" உங்கள் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் சேவை எண்ணம் மிளிரட்டும்.

26. நன்மை தராத செயல்களையோ, வெட்கப்படக்கூடிய செயல்களையோ ஒருபோதும் செய்யாதீர்கள்! சமூகம் புகழும் நல்ல செயல்களையே விருப்பத்துடன் செய்யுங்கள்!

27. மனதை கீழ் நிலைப்படுத்தும் எந்த விஷயத்தையும் சிறிதும் அனுமதிக்காதீர்கள். ஆன்மீக உணர்வினைத் தரும் தெய்வீக நூல்களைப் படியுங்கள். நல்லவர்களோடு பேசுங்கள், பழகுங்கள்.

- ஓர் சன்மார்க்க மெய்யன்பர்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!!!

கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்குக!!!

இன்று முதல் புலால் (அசைவம்) உண்ணாதீர்கள்!

சுத்த சன்மார்க்க அருட்பெருநெறி உலகெங்கும் பரவுக!!

"அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி"

தயவு

## A12 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை "அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரும் தயவும்"

அகண்ட வெளிநிறை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்(**"த"**), எங்கும் பூரணமாயுள்ளவர்.

ஒவ்வொரு அணுவிலிருந்தும்(**"ய"**) பரிபூரண அனுபவம் வெளிப்படத் திகழ்கின்றவராவர்.

அந்த அருட்பெருஞ் ஜோதியையே நம் சிற்றம்பலத்தே இன்று கண்டு கொள்ளுகிறோம்.

இப்போது அவ்வாண்டவர் அனுபவம் தயவாக விளங்குவதை இங்கு காணலாகின்றது.

நமது ஆன்ம சிற்சபையே "**யகர**" வண்ணமானதாம்.

இந்த யகர ஆன்மாவின்

அகத்தும்("**த**"),

புறத்தும் ("**வு**")

"தகராகாசக் கடவுள்" விளக்கமும்,

"வுகரத்தால்" தோற்றுவிக்கப்பட்டுள்ள உயிர் -உடல் வண்ணமுமாக உள்ளதால் தயவு என்பதுதான் நமக்குக் கடவுள்.

இதுவே கடவுள் அனுபவத்தை உணர்த்த வந்ததாய்ச் சிற்சபையிலிருந்து தெளிவு பெறலாகின்றதாம்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் உண்மை, சுத்த சன்மார்க்கியின் அனுபவத்தில் உள்ளும் புறமும் நிரம்பிய "சுத்த தயவு" மயமாகவே திகழ்கின்றதை இன்று காண்கிறோம்.

கடவுள் தயவின் பெருமை என்னே! இவ்விறை தயவு உண்மையை அறிந்து கொள்ளும்போது இறை பரம்பொருளை இச் சொல்லுக்குரிய அனுபவப் பொருளாகத் தெளியலாகின்றது.

இத்தெளிவு பெறாத காலத்து, இதுவரை தயவு என்ற சொல்லுக்கு, ஜீவ தயவைக் குறிக்கும் அன்பு, கருணை, இரக்கம், கிருபை என்றெல்லாம் புனைப் பொருள்களைக் கற்பித்துக் கொண்டிருக்கின்றான் மனிதன்.

இது முதல் நாம் நமது அருட்பெருஞ் ஜோதி சிற்சபையிலிருந்து தயவு வண்ணமாகக் கடவுளை உணர்ந்தும், போற்றியும் அடைந்தும் பேரின்பமுறுவோம்.

"ஈன்ற நற்றாயினும் இனிய பெருந்தயவு

ஆன்ற சிற்சபையில் அருட்பெருஞ் ஜோதி"

தயவு உரை: உலகில் நற்றாய் என்று பெற்ற அன்னையையும், செவிலித்தாய் என்று வளர்ப்பவளையும் குறிப்பர்.

ஏனெனில் ஈன்ற என்ற சொல்லே முன் வந்து, பெற்ற என்ற பொருளை வழங்கி நிற்கின்றதால், நற்றாய் என்பதில் நல் என்ற பகுதிக்கு நன்மை என்ற பண்பு குறிப்பதாய் இருக்கின்றது.

ஈன்றவள் சிறப்புமிக்க நல்லவளாக இருக்க வேண்டுமென்பது உணர்த்தப் பெறுகின்றோம்.

இவ்வுலகில், ஈன்றவள் பொல்லாதவளாயும் இருக்கவும் காண்கிறோம். அது போலல்லாது நற்குண சீலமிக்க அன்னையையே குறிக்க இங்கு இந்த நற்றாய் வந்துள்ளதாம்.

அந்த நல்ல பெற்றவளை விட எவ்வளவோ அதிகமான தயவு நிரம்பியவர் நம் கடவுள் என்பதைக் கூற இக் குறிப்பு முன் வழங்கப்பட்டுள்ளதாம்.

அன்னையிலும் தயவுடையாய் என்று ஆண்டவரைத் துதிக்கின்றவர் அடியார்கள்.

கடவுள் தயவு எல்லை கடந்தது, பெருமை மிக்கது. பேரின்பமே பயப்பது.

உடலீன்ற அன்னைக்குப் பாசம் அல்லது பற்று காரணமாகத் தன் குழந்தையிடத்து அன்பு ஏற்படும்.

இத்தாய் அன்பு அல்லது தயவு, கடவுள் தயவுக்கு எவ்வளவோ அற்பமானது.

கடவுளே ஆன்மாவுக்குத் தேவையான உயிரையும், உடலையும் போகப் பொருள்களையும் தடையறாது உதவிப் பக்குவப்படுத்தி மெய்யின்ப வாழ்வையே வழங்கி விடுகின்றார்.

இதனால் அந்தக் கடவுள் செயலின் ஒரு கூறே ஒருவனுக்கு உடலின் அன்னையாய்த் தோன்றி, ஏகதேச அன்பைக் காட்டி ஒருவாறு சிலகாலம் வளர்த்துச் செல்கின்றதுமாம்.

ஆதலின் ஈன்ற தாயின் அந்தச் சிறிதளவு தயவுகூட நம் பதியின் ஏகதேச வெளியீடே என்று அறிகின்றோம்.

ஆகவே கடவுளர் தயவு ஒன்றே நிறைவுடையது எனவும், அது இனியதும், பெரியதும் உள்ளும் புறமும் நீங்காதிருந்து வாழ்விப்பதும் என்று உணரப்படும்.

ஆன்ற என்பது அகன்ற, விசாலமான எனவும், அடங்கிய தெனவும் பொருளாம்.

அதாவது கடவுள் தயவு உண்மை, அகண்டவெளி முழுவதும் நிரம்பியுள்ளது என்பதையும், அம்முழுத் தன்மையும் ஆன்ம சிற்றணுவிடத்தே அடங்கியிருந்து, பக்குவத்தே அனுபவப்படுகின்றது என்பதையும் குறிக்கின்றதாம்.

நமது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், இச் சிற்சபையில் சுத்த தயவு வண்ணமாக வெளிப்பட்டிலங்க உள்ளதுதான் இன்று நாம் காணும் புதுமையாம்.-

- தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## A13 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "கருங் காக்கையும் அன்னப் பறவையும்"

1."மருள் நிலை"

2."தெருள் நிலை"

3."அருள் நிலை"

### "1. மருள் நிலை"

இது தேகத்தை நான் என எண்ணுவது!! இந்த மாமிச உடலையே நான் என எண்ணுவது அறியாமை! இது மருள் நிலை ஆகும்! இது கருங்காக்கைக்கு உதாரணம்.

### "2. தெருள் நிலை"

தேக உணர்வு கடந்து, நினைப்பு மறப்பு கொண்ட மன உணர்வையும் கடந்து, இதய ஸ்தானத்தில் இயங்கும் அநித்திய ஜீவ உணர்வையும் கடந்து, புருவமத்தி அடைந்து, அகமுகமாக ஆழ்ந்து உள் நோக்கி, சிர நடுவில் விளங்கும் "ஆன்ம ஜோதியே நான்" என கண்டு கொள்ளல். "ஆன்ம சொரூபமே எனது உண்மையான வடிவம்" என நிற்பது இரண்டாம் நிலை!! இது அந்த கருங்காக்கை, புண்ணிய நதியாகிய கங்கையில் மூழ்கி எழுந்த போது, அது வெள்ளை நிற அன்னப் பறவையாக மாறிவிடுகின்றதை ஒப்பதாகும்.

## “3. அருள் நிலை”

மூன்றாவது நிலை, அந்த “ஆன்மா நான்” என்கின்ற “தற்போதம்” போய், “நான் - நான்” என சதா சுடர் விடுகின்ற அந்த “அறிவு வடிவான ஆன்மா” கூட, அந்த “நித்திய ஆன்ம அக வடிவம்” கூட தன்னுடையது அல்ல!! உண்மையில் அது கடவுளே!! “கடவுளே தான் தன் அருளால், நானாய் இங்கே விளங்கிக் கொண்டுள்ளார்” என உணர்வது! இது ஆணவ மல நீக்கம் ஆகும்! இது அந்த அன்னப்பறவை மேரு மலையை அடைந்து, பொன் வண்ணமாக மாறி விட்ட நிலையை ஒக்கும். இது அருள்நிலை!

“ஆன்மா நான்” என்ற “தற்போதம்” ஒழிந்து அருளில் புகலடைந்து நிற்றல்!!

அருள் ஒளி விளக்காம் அருட்பெருஞ்ஜோதி வடிவமே, உண்மையில், அக நிலையில் ஒருவராகவும், புறத்தில் பலகோடி மனிதர்களாகவும், அனந்தகோடி உயிரின வடிவங்களாகவும், பல்வேறு காலங்களில், பல்வேறு சூழ்நிலையில், பல்வேறு புற அனுபவம் கொண்டு தானே அகமிருந்து விரிந்து அனகமாக விளங்குவதாகவும் உணர்ந்து நிற்றல் மூன்றாம் நிலை!! இந்நிலையில் தான், உண்மையில்

“கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல்”,

“யாவும் தானாய் நிற்றல்” எனும் அனுபவமும் உண்டாகின்றதாம்!

“இருப்பது ஒன்றே!! அதுவே எல்லாமாய் இருக்கின்றது” என அனுபவப்பூர்வமாக உணர்ந்த நிலை!!

அகத்தில், தானே அந்த அருட்பெருஞ்ஜோதி ஆனந்தபதி மயமாய் என்றும் இருந்துகொண்டு, இந்த சுத்த சன்மார்க்க சாத்தியன் ஆன்மாக்களை பக்குவப்படுத்தும் ஐந்தொழில் அருள் ஞான திருநடம் புரிகின்றான்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா.

# A14 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “எல்லாம் செயல்கூடும்”

“எல்லாம் செயல் கூடும், என்னாணை அம்பலத்தே எல்லாம் வல்லான் தனையே ஏத்து”.

என்பது வள்ளற் பெருமானின் சத்திய வாசகம்.

இங்கு “அம்பலம்” என்ற வார்த்தை மிக முக்கியமானதாகும்.

சுத்த சன்மார்க்கத்தில் புறவழிபாட்டு முறை இல்லை! ஆண்டவர் “அக அம்பலத்தே” அருள் ஞான ஐந்தொழில் திருநடனம், அனாதி காலமாக புரிந்து வருகின்றார்.

அம்பலம் என்பது ஆன்மா ஆகும்.

இதுவே “சிற்றம்பலம்” என போற்றப்படுகிறது.

அதாவது சிறிய அம்பலம் = சிற்றம்பலம்.

ஆன்மா மிக மிக சிறிய அணு. அருவமான அணு. இது இருக்கும் இடம் “சிரநடு ஸ்தானம்”! என்றாலும் இந்த சிற்றம்பலமாகிய (“சிற்சபை எனவும் போற்றப்படும்”) அறிவுத் திருக்கோயிலுக்கு உள்ளே செல்லும் வழி நெற்றி “புருவ மத்தி” ஆகும்.

இந்த புருவமத்தியில் தான் ஆன்ம அறிவும், உயிர் உணர்வும், மனோ சிந்தனையும் ஒன்று கூடும் இடமாக உள்ளது.

இடகலை, பிங்கலை, சுழுமுனை சந்திக்கும் இடமாகவும் உள்ளது.

மேலும் இடது கண்(சந்திரக் கலை), வலது கண் (சூரியக்கலை), நடுவே நெற்றிக்கண் (அக்கினி கலை) ஆகிய மூன்றும் சந்திக்கும் இடமாக உள்ளது.

எனவேதான் இந்த இடம் “முச்சந்தி” எனப்படுகிறது.

இந்த புருவமத்தியில் மனதை நினைப்பு மறப்பற நிலைநிறுத்தி, அகமுகமாக உள் நோக்கிப் பார்த்து சிற்சபேசன் வீற்றிருக்கும் “சிற்சபைக்குள்” நாம் புகுந்துக் கொள்ள வேண்டி இருக்கின்றது.

எனவேதான் வள்ளற் பெருமான் “கரண ஒழுக்கத்தில்” குறிப்பிடும்போது,

எக்காலத்தும் புருவமத்தியின் கண்ணே மனதை செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

இப்படி புருவமத்தியில் இருந்துக் கொண்டுதான் "அம்பலவாணனை ஏத்துதல்", துதித்தல், போற்றுதல், வணங்குதல் வாழ்த்துதல் செய்ய வேண்டும்.

இப்படி ஆன்ம அம்பலத்தில் இருந்துக்கொண்டு "எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை" ஏத்தி வழிபட்டு வந்தால், அவர்களுக்கு எல்லா துன்பங்களும் நீங்கும்; உலகியல் காரியங்கள் கூட தடையில்லாது சித்தியாகும்.

அதைவிட முக்கியமானது "ஆணவம், மாயை, கன்மம்" ஆகிய மும்மலங்கள் நீங்கி பிறவித் துன்பத்திலிருந்து விடுதலைப் பெறுவதே!

"எல்லாம் செயல் கூடும்" என்பது உலகியல் காரிய சித்தி மட்டுமல்ல; நமது "உள்முகப் பயணம்" வெற்றியாகி முடிவான பேறாகிய "பேரின்ப சித்திப் பெருவாழ்வு" பெறுவோம்.

இக் கருத்துக்கள் திருவருட்பா உரைநடைப்பகுதியில் உள்ளது.

## A15 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "ஒருமை என்றால் என்ன?!"

ஒருமை என்ற சொல் வள்ளற் பெருமானாரால் கூறப்படுகிறது. இதன் சரியான விளக்கம் என்ன?

"ஒருமை!"

வள்ளல் பெருமான் பேருபதேசத்தில், இந்த ஒருமையைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்.

"என்னை ஏறா நிலை மிசை ஏற்றிவிட்டது யாதெனில், தயவு". அந்த தயவு வருவதற்கு "ஒருமை" வரவேண்டும்.

"ஒருமை" இருந்தால் தான் "தயவு" வரும்.

"தயவு" (சத்து - சித்து - ஆனந்தமாகிய கடவுள் உண்மை) வந்தால்தான் பெரிய நிலைமையில் ஏறலாம்.

இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினால் தான் வந்தது.

“நீங்களும் என்னைப்போல் ஒருமையுடன் இருங்கள்!!”

வள்ளல் பெருமான் சிறுவயதிலேயே இறைவனை பாட தொடங்கும்போது,

“ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற” உத்தமர்தம் உறவு வேண்டும் என பாடுகின்றார்

**“ஒருமை என்றால் என்ன?!”**

**“ஒன்றேயான உண்மை”**

அதாவது ஒருமை என்ற சொல்லை இரண்டாக பிரிக்கலாம்.

ஒன்று + உண்மை= ஒருமை

ஒரு + உண்மை =ஒருமை

மேலும்,

ஒன்று + மை = ஒருமை

“ஒன்றாகிய இறைவனின் தன்மை”.

அது “அருளே” ஆகும்.

ஒன்று என்றால் இறைவன், கடவுள், தெய்வம் என பொருள்படும். அவர் தன்மையாக இருப்பது அவருடைய “திருவருளே!”

“ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு!!”என்பார் பட்டினத்தார்.

“ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்று உறுமோ?!” என்கின்றார் வள்ளலார்.

இங்கே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னென்றால் ஓர்மை என்ற சொல்லும் (ஆன்மீகத்தில்) வழக்கத்தில் இருந்து வருகிறது.

“ஓர்மை” என்பது (Concentration - கான்சென்ட்ரேஷன்) மனதினுடைய நினைப்பு மறப்பு அற்ற நிலை! இதுதான் மன ஓர்மை ஆகும்.

ஒருமை என்பது வேறு; ஓர்மை என்பது வேறு

**Concentration of Mind (with out any thought.i.e. meditation) towards the truth of oneness = "ஓர்மை"**

**Realisation of being Oneness..(God himself)= "ஒருமை"**

அதாவது மனதை ஒரு நிலைப்படுத்தி நினைப்பு மறப்பு அற்ற நிலையில் ஓர்மையோடு உள்நோக்கிப் பயணம் செய்து, முடிவில் அங்கே அந்த உள் நிலையை (அகநிலை) தெரிந்து கொள்வது தான் "ஒருமை நிலை".

ஓர்மை என்பது உள்நோக்கி பயணம் செய்கின்ற ஒரு தியான நிலை **(Practice)** அதன் முடிவில், கண்டு கொள்வது, "ஒன்றான இருப்பு ஆகிய கடவுள் உண்மையை" கண்டு கொள்ளுகின்றோம். இதுவே ஒருமை நிலை. ஒருமை என்பது "அக நிலையைக்" குறிக்கின்றது.

ஒருமை நிலை என்பது "மன ஓர்மையைக் கொண்டு, அகத்தில் உள்ளே ஆழ்ந்து சென்று ஒன்றான கடவுள் உண்மையை உணர்ந்து கொள்வதுதான் ஒருமை நிலை "

"அகம் அறியீர்!! அனகம் அறிந்து, அழியாத ஞான அமுத வடிவம் பெறலாம் வம்மின் இங்கே!!" என்கின்றார் வள்ளலார்.

அகநிலை என்பது எப்படி இருக்கின்றது?!

என்றால், அது ஒருமையாக தான் இருக்கின்றது! அந்த "அகநிலை ஆகிய இறை நிலை" எப்படி இருக்கின்றது என்றால் "ஒன்றேயான தன்மையில் இருக்கிறது".

உண்மை என்னவென்றால்,

"இருப்பது ஒன்றே!! அதுவே எல்லாமாய் இருக்கின்றது!!!"

இதுதான், இதை அறிந்து கொள்வது தான் சுத்த சன்மார்க்கத்தில் விசாரணை முடிவில் உண்டாகின்ற சாத்தியானுபவம்.

இருப்பது ஒன்றே ஒன்று!! அதுதான் கடவுள்!! அவரேதான் புறத்தில் எல்லா உயிரினங்களாகவும், எல்லா மனிதர்களாகவும், எல்லா பொருள்களாகவும், எல்லா அண்டங்களாகவும், அண்டத்தில் நிறைந்துள்ள எல்லா அணுக்களாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

"கடவுள் தன் திருவருட் சக்தியால் அப்படி எல்லாமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றார்."

ஒரு சுத்த சன்மார்க்கி அறிந்து அடைய வேண்டியது, முதலில் எது?!

என்றால் இந்த "ஒருமை நிலை ஆகிய அக நிலையை" அறிந்து அடையவேண்டும்.

அங்கிருந்து "அனகமாக விரிகின்ற நிலையே தயவு நிலை" என்கிறார் வள்ளல் பெருமான்.

அதாவது அகம், அனகம்

"அகம்" என்பது "ஒருமை" நிலை.

"அனகம்" என்பது உள்ளிருந்து விரிந்து விளங்குகின்ற "தயவு" நிலை.

வள்ளல் பெருமான் பேருபதேசத்தில் சொல்லுவது;

என்னை ஏறாநிலை மிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது, அந்த தயவுக்கு ஒருமை வரவேண்டும். ஒருமை இருந்தால்தான் தயவு வரும். தயவு வந்தால் பெரிய நிலை மேல் எறலாம்.

தயவு வருவதற்கு முன்னாடி இருக்கின்ற நிலை, ஒருமை நிலை!!

ஒருமை நிலை பெற்ற பிறகு, அடுத்து பெறுகின்ற நிலை அனகநிலை ஆகிய தயவு நிலை!!

இந்த "அகநிலை தான், அருள் உணர்வு நிலை" எனப்படுகின்றது. அதாவது, இதுதான் "அருட்பெரு வெளியாகியிருக்கிறது".

இதைத்தான்

வள்ளல் பெருமான் "அருள் ஜோதி நிலை" என்கின்றார்.

"அனக நிலை" என்பது என்ன?

இது அகநிலை ஆகிய அருட்ஜோதிக் கடவுள், உள்ளொளி நிலையிலிருந்து அனகமாக புறம் விரிந்தே நம் அகப்புறம் ஆகிய ஜீவனாகவும், புறம் ஆகிய மனமாகவும், புறப்புறம் ஆகிய இந்திரியங்களாகவும் விளங்கி கொண்டிருப்பதுதான் அனக நிலை.

இறைவன் நமக்குள் அப்படித்தான் ஏற்கனவே விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அதாவது ஆன்மாவுக்கு உள்ளே இருக்கின்ற உள்ளொளி நிலைதான் அகநிலை. உள்ளொளி என்றாலும் அருள் ஒளி என்றாலும் அருட் ஜோதி என்றாலும் இந்த அகநிலையையே குறிக்கும்.

இந்த அகநிலை என்பது பொதுவான ஒன்று!! அகநிலை என்பது ஒன்றே ஒன்றுதான்!

“அதுதான், மனிதனுடைய உண்மையாகவும் கடவுளுடைய உண்மையாகவும் பொதுவாக இருக்கின்றது ”.

இந்த நிலைதான் அருள்ஜோதி நிலை ஆகும்.

நம்முடைய உண்மையும் சரி, கடவுளுடைய உண்மையும் சரி, தனித்தனியாக இல்லை!! இரண்டும் ஒன்றுதான்.

முன்பு இருந்த மெய்ஞ்ஞானிகள் இந்த அக நிலையை அறிந்து கொண்டு, அந்த அகவெளியில் அடங்கிப் போய் விட்டார்கள். அந்த ஒருமை நிலையைக் கண்டு கொண்டு அதிலேயே ஆழ்ந்து அமிழ்ந்து அடங்கிப் போய் விட்டார்கள். அவர்கள் நான் என்கின்ற அந்த ஆத்ம உணர்வை கூட அந்த ஒளியில் கரைத்து வைத்துவிட்டார்கள். அவர்களுடைய இறை இன்பானுபவம் சூனியமாகி விட்டது அவர்கள் இல்லாமல் போய் விட்டார்கள்.

அப்படி உள்ளொளியில் ஒடுங்கி, அடங்கி, பிறவாமை எய்தி இல்லாமல் போவது சரியானது அல்ல! அது முறையானது அல்ல! அந்த முறை தவறு என்கிறார் வள்ளலார்.

அப்போது என்ன செய்யவேண்டும்?!

அக நிலையை அறிந்து கொண்டு, அங்கிருந்து தயவால் அனகமாக விரிந்து, உடல், உயிர், மனம் கொண்டு என்றென்றும் விளங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பது தான் சுத்த சன்மார்க்க ஏற்பாடு.

இறைவன் ஏற்கனவே அப்படித்தான் நம்முடைய அக ஆன்மாவிலிருந்து, அருள்ஒளியே அனகமாக விரிந்து நம்முடைய ஜீவனாகவும் மனமாகவும் உடலாகவும் அனகமாக விரிந்து விளங்கி கொண்டிருக்கிறார்.

ஆனால், இந்த அனக நிலை நமக்கு அனுபவத்திற்கு வராமல் இருக்கின்றது!!

ஏன் நமக்கு அது அனுபவம் அனுபவம் ஆகவில்லை? - என்றால்,

இந்த “தேகமே நான்” என்கின்ற மாயா உணர்விலேயே நாம் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த மாமிச உடலையே நான் என மதித்து போற்றி கொண்டிருக்கின்றோம்.

இது ஒரு தவறான உணர்வு!! மாயா உணர்வு!! மருள் நிலை உணர்வு!

நாம் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? என்றால் இந்த "தேகமே நான்" என்கின்ற "மருள் நிலை உணர்வைக்" கடந்து, மன உணர்வைக் கடந்து, இதய ஸ்தானத்தில் விளங்குகின்ற உயிர் உணர்வைக் கடந்து, "உட் சென்று அக நிலையை பொருந்தி நிற்க வேண்டும்"

**அதீத மன ஓர்மையைக் கொண்டு உட் சென்று அந்த "அகநிலை ஆகிய ஒருமை நிலைப் பற்றிக் கொண்டு வாழ வேண்டும்"**

இங்கு இந்த "ஒருமை நிலை என்பது இறைவன் தான் இருக்கிறார்! இறைவன் மட்டுமே இருக்கிறார்!!" இறைவன் அகநிலையில் ஒருவராக இருக்கிறார். அவர் மட்டுமே தன்னந்தனியனாக இருக்கிறார்!

இதை அறிந்து கொண்டு இறைவனை ஒன்றாமல் ஒன்றி நிற்கின்ற நிலையே ஒருமைநிலை ஆகும்!!

இந்த ஒருமை நிலையில் தான் ஒருவராகவே இருக்கின்ற இறைவன் அன்றும் சரி இன்றும் சரி என்றும் சரி அவர் மட்டுமே (தான் மட்டுமே) என்றென்றும் எங்கெங்கும் தான் ஒருவராகவே இருந்து கொண்டிருக்கின்றார்.

அவருக்கு அன்னியமாக எந்த உயிரோ, எந்த பொருளோ, எந்த மனிதரோ, பிற யாரும் இல்லை!! இருக்கவும் முடியாது!!

அப்படி என்றால் இங்கு வாழ்கின்ற நாம் எல்லாம் யார்?

இந்த "நான்" என்பதுதான் என்ன?

யார் என்றால், இந்த நான் என்கின்ற ஆன்ம உணர்வு இறைவனுக்கே ஒரு அனுபவ புள்ளியாகும். அனுபவம் மையம் ஆகும்.

அதாவது "நான்" என்பது இறைவனுக்கு **(Divine Experience Center)** சச்சிதானந்த அருள் அனுபவ வாழ்வு வாழ, தானே ஏற்றுக் கொண்டுள்ள ஒரு இறை அனுபவப் பீடமாகும்.

# A16 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

கேள்வி;- "என் இரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்" என்று வள்ளலார் பாடுகின்றாரே!?

"கண்மணிக்குள்ளா கடவுள் இருப்பார்?!"

திருவருட்பா பாடல்;

என் இதயக் கமலத்தே இருந்தருளும் தெய்வம்! என்னிரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்!

பொன்னடி என் சென்னியிலே பொருந்த வைத்த தெய்வம்! பொய்யாத தெய்வம்! இடர் செய்யாத தெய்வம்!

அன்னியம் அல்லாத தெய்வம்! அறிவான தெய்வம்! அவ் அறிவுக்கு அறிவாம் என் அன்பான தெய்வம்!

சென்னிலையில் செம் பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம்! சிற்சபையில் விளங்குகின்ற தெய்வம் அதே தெய்வம்!!

அன்பு வடிவம் ஐயா! அனேக வந்தனம்.

"என் இரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்"

என்பதின் பொருள் என்ன?

"கதிர்நலம் என் இரு கண்களில் கொடுத்தே,

அதிசயம் இயற்று எனும் அருட்பெருஞ்ஜோதி"

- அருட்பெருஞ்ஜோதி அகவலில் வள்ளலார் கூறியுள்ளார்.

"ஆன்ம அகத்தில் அருள் ஒளியாய் இருக்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்" (பொன்னடி என் சென்னிமிசை வைத்த தெய்வம்), அகமிருந்து அனகமாக வெளிப்படுகிறார்.

அவருடைய "இதய ஸ்தானத்தில் விளங்கும் அகப்புற ஜீவனிலும் நிறைகின்றார்" (என் இதயக் கமலத்தே இருந்தருளும் தெய்வம்)

அடுத்து வள்ளலாரின் புற உடலிலும் நிறைகிறார் கடவுள்.

நமது வலது கண் சூரியனின் அம்சமானது.

இடது கண் சந்திரன் அம்சமாகும்.

வள்ளலாருடைய இருகண்கள் வாயிலாகவும் (புறத்தில் கூட) அருள் ஆண்டவர் நிறைகின்ற போது, அருள் ஆற்றல் கண் வழியாகவும் வெளிப்பட்டதாம்.

வள்ளலார், புலால் உண்ணும் பழக்கம் உடையவர் ஒருவரை, அவர் ஒரு கணம் பார்த்த மாத்திரத்திலே அம் மனிதர் புலால் உண்ணுவதை நிறுத்திவிடுவாராம்!!.

அத்தகைய பேராற்றல் பெற்றவராய் விளங்கினார் வள்ளலார்.

வள்ளலார் திருக்கண்களின் பார்வை பட்டாலே ஒருவர் ஆன்ம பக்குவ நிலைக்கு வந்து விடுவாராம்.

இதனால்தான் "என் இரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்" என்றார்.

## "மாயை" என்பது ஓரளவு அனைவரும் அறிந்ததே! "சுத்தமா மாயை" என்பது என்ன?

"திரையோதச நிலைகள்";-

1.பூத நிலை

2-கரண நிலை

3.பிரகிருதி நிலை

4.மோகினி நிலை

5.அசுத்த மாயா நிலை

6.அசுத்த மகாமாயா நிலை

7."சுத்தமாயா நிலை"

8.சுத்த மகாமாயா நிலை

9.சர்வ மகாமாயா நிலை

10.குண்டலி நிலை

11.பிரணவ நிலை

12.பரிக்கிரக நிலை

13 "திருவருள் நிலை"

**"பேருபதேசம் :-"**

நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக் கொண்டிருக்கின்ற அனந்த திரைகளில், அழுத்தமாய் இருக்கின்ற முதல் திரை ஆகிய பச்சைத்திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கினால், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். அந்த பசுமை வர்ணம் எப்படிப்பட்டதென்றால், கருமைக்கு முதல் வர்ணமான பசுமை இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்க வேண்டும் என, ஸ்தோத்தரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும்- இவ்வண்ணமாக, இருக்கின்றபோதும் படுகின்ற போதும் இடைவிடாது இவ் விசாரத்தோடு, "ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்க வேண்டும்" என்கின்ற முயற்சியுடன் இருந்தால் தெரிய வேண்டியதை தெரிந்துகொள்ளலாம்.

மேலும், சிலர் இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக்கின்றதே!! இத்தருணத்தில் முயற்சி செய்வான் ஏன்?! ஆண்டவர் வந்தவுடனே பெற வேண்டியதை நாம் பெற்றுக் கொள்ளப்படாதோ?! என்று வினவலாம்.

ஆம் இஃது தாம் வினவியது நலந்தான்! ஆண்டவர் வரப்போகின்றதும் சத்தியம் தான்! நம்மவர்களின் திரை நீங்கப் போகின்றதும் சத்தியம் தான்!! நீங்கள் எல்லவரும் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகின்றதும் சத்தியம் தான்!!

ஆனால் முன்சொன்ன ராகசம்பந்தமான பச்சைத்திரை இரண்டு கூறாக இருக்கின்றது. யாதெனில்;-

அசுத்த மாயா திரை, சுத்த மாயா திரை என்னும் இரண்டுமாம்.

இவை கீழ் பாகத்தில் ஒரு கூறும், மேற்பாகத்தில் ஒரு கூறும் ஆக இருக்கும்.

கீழ்ப் பாகத்தில் உள்ளது அசுத்தமாயாதிரை! மேல்பாகத்தில் சுத்தமாயா திரை இருக்கும்!

இவற்றில் அசுத்தமாயாதிரை இகலோக போக லட்சியம் உடையது.

சுத்தமாயா திரை பரலோக சாத்தியத்தை உடையது.

இவற்றில் ஆண்டவர் வந்து அனுக்கிரகம் செய்கின்றபோது, முயற்சியில்லாத சாதாரண மனுஷ்யர்களுக்கு, கீழ் பாகத்தில் இருக்கின்ற அசுத்த மாயை என்னும் பச்சைத்திரையை மாத்திரம்

நீக்குவார். ஆதலால், அக்காலத்தில் நாம் அத்திரை நீங்கியவுடன் கூடிய வரையில் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்கலாமே அல்லது, பெற வேண்டியதை பெற்றுக் கொள்வதற்கு கூடாது. மேலும் பஞ்சகிருத்திய விபவங்களும், இதர சித்தி முதலியவைகளையும், ஆன்ம அனுபவத்தையும், செய்யவும் பெறவும் கூடாது. பின்னும் நன்முயற்சி செய்தே மேலேற வேண்டும்!

சுத்த மாமாயைத் தொடர்பு அறுத்து, "அருளை" அத்தகை காட்டும் அருட்பெருஞ்ஜோதி.

உரை விளக்கம்

- சுவாமி தயாநிதி சரவணானந்தா

மகா மாயை முன்பு "தோற்றம்" என்னும் அடை கொடுக்கப்பட்டது. இங்கு "சுத்தம்" என்னும் அடை வழங்கப்பட்டுள்ளது. தோற்றம் பக்குவப்படாத அசுத்த நிலையை சுட்டினதாகவும், அதில் "உண்மை முற்றும் மறைந்து கிடந்து இருந்து" பலகாலும் உலக வாழ்வில் பட்டுப் பட்டுத் தெளிவுற்று, மேல்நிலை உறுவதாகவும் கொள்ளப்படுவதாம். அப்படிப் பல பிறப்பு கடந்து, பண்பாடுற்ற உள்ளம், "அதிவிரைவில் உண்மையில் நாட்டம் கொள்கின்றது". அபக்குவ மனம் தான் அசுத்த மாயா நிலையில் உள்ளது; சுத்த மனம், பக்குவம் உற்ற உள்ளம், சுத்த மாயா நிலையுற்றதாம்.

அப்படிச் சுத்தமுற்ற மனம் இயல்பாகவே பிரபஞ்ச போகத்திடத்தில் அதிக நாட்டம் இன்றி "அருள்நெறியை விரும்பி," அகம் திரும்பி விடுகிறது. அப்போது இறையருளே அந்த பக்குவியை வரவேற்றுத் திருவருளாலே உண்மையைக் காட்டி அம்மாயையின் தொடர்பறுத்து அருளில் கூட்டி வைக்கின்றதாம்.

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி

தயவு

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்பது ஆன்மீகப் பழமொழி!

நமது தமிழ்ஞான சித்தர்கள் எழுத்தையே எண்ணாகவும் பயன்படுத்தினர்.

அகரம் = 8

உகரம்= 2

"அ" என்ற எழுத்து எல்லா எழுத்துக்களும் முதலாவதாக - அடிப்படையானதாக உள்ளது போல் "அகண்ட வான் பெருவெளி" முற்றும் நிறைந்த அனாதி நித்திய இயற்கையுண்மைக் கடவுளை "பரமாகாச சொரூபி" எனப் போற்றப்படுகின்றார்.

அவரே நம் தலை நடுவில் "அருள் ஒளி விளக்காக" திகழ்கின்றார்.

இந்த "அருட்ஜோதி" அகர வண்ணம் கொண்டதாகும்.

இந்த அகரம் 8 என்ற எண்ணாக வந்து, இறைவனுடைய "எண் குணத்தை" குறிக்கின்றது.

"உகரம்" என்பது யாது?

இந்த உகரம் பல அர்த்தங்களைக் கொண்டது.

"ஜீவான்மாவே" உகரமாய் உள்ளது.

இது சிரநடுவில் "நித்திய ஜீவனாகவும்", இதய ஸ்தானத்தில் "அநித்திய ஜீவனாகவும்" உள்ளதை குறிக்கவே 2 ஆகிய உகரம் வருகிறது.

பொதுவாக உகரம் என்பது "உயிர் உணர்வை" குறிக்கும்.

இது "ஆன்ம அறிவில்" இருந்து விரிந்து விளங்குகின்றது.

ஆன்ம அறிவும், உயிர் உணர்வும், மனோ சிந்தனையும் ஒன்று கூடும் இடம் "புருவமத்தி"!

மொத்தத்தில் இம் மூன்றும் ஒன்று கூடிய "சுத்த மனமாக - மனோன்மணியாக" புருவமத்தியில் "உகரம்" ஆக திகழ்கின்றார்.

உண்மையில் இந்த உகரமும் "அருள் ஒளியின்" அனக விரிவாகக் கண்டு, இடையறா சத்விசாரத்தால் (உகர உணர்வால்) அகர வண்ணக் கடவுளை ஒன்றி நிற்கும் போது,

அகரமும் உகரமும் (கடவுளும் மனிதனும்) சேர்ந்து யகர வண்ண பத்தாகிய "அருட்ஜோதிக் கடவுள் ஆன்மாவாய்" விளங்குகின்றதாம்.

இதுவே எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணுதலாகும்.

# A17 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “மூன்று வித ஆன்மாக்கள்”

## “சகலர் - பிரளயாகலர் - விஞ்ஞானகலர்”

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என ஆன்மாக்கள் மூவகைப்படும்.

“சகலர்” என்பவர்கள் “கன்ம மலம், மாயா மலம், ஆணவமலம் ஆகிய மும்மலம் சம்பந்தமுடையவர்கள்”

அடுத்து, “பிரளயாகலர்” இவர்கள் கன்ம மலம் நீக்கப்பட்டவர்கள். “மாயா மலமும், ஆணவ மலமும்” சம்பந்தப்பட்டவர்கள்.

அடுத்து, “விஞ்ஞானகலர்”:- இவர்கள் கன்ம மலமும், மாயா மலமும் நீக்கப் பெற்று, “ஆணவமலம் மாத்திரம் உடையவர்கள்!”

**“சகலர்”**

ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலம் உடையவர்கள். தேகத்தையே தானாகவும், விலங்கியல் வாழ்வே லட்சியமாகவும் கொண்டிருக்கின்றவர்கள் “சகலர்” எனப்படுவார்கள்.

அதாவது, இந்த “அசுத்த மாமிச உடலையே நான் என எண்ணி”, ஐம்புலன்கள் வழியாக வருகின்ற “மாயா இன்பத்தையே, உண்மை இன்பம் என எண்ணி பிழைத்து வருபவர்கள்” இவர்கள். மனித குருவையே சரணடைந்து பக்குவம் உறுவார்கள்.

**“பிரளயாகலர்”**

மாயா மனோ உணர்வாலும், புலன் உணர்வாலும், தன்னை மனிதனாக மதித்துக் கொண்டிருக்கின்றவர்கள் “பிரளயாகலர்” எனப்படுவர்.

கன்மம் ஆகிய ஒரு மலம் ஒழித்து விட்டவர்கள்! “எல்லாம் கடவுளின் செயல் என கண்டும், அச் செயல் யாவும் மேலான நன்மை விளையும் பொருட்டே”, என்றும் கருத்தில் கொண்டு, எதையும் எவரையும் விருப்பு-வெறுப்பால் அடுக்காது, எப்போதும் நன்மையையே புரிந்து கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு உண்மையை உணர்த்தி உயர் நிலைக்கு ஏற்ற, மனிதர்கள், நூல்கள், கருவிகள், குருவெனத் தோன்றி, “உண்மை நெறி ஒழுக்கம்” புகட்டி விடும். அப்படி ஒழுகும்

அவர்கள், "எல்லாம் அவன் செயல்" என்பதை, "சத்விசாரத்தால் மெய்யாகவே அறிந்து", உண்மை நிலை பெற முயற்சி மேற்கொண்டு இருப்பார்கள். இவர்கள் "உள்ளொளியையே ஞான குருவால் உபதேசிக்கப் பெறுவார்கள்".

"விஞ்ஞானகலர்"

இவர்களே, கன்மமும் மாயையும் ஒழித்தவர்கள் ஆவர்.

இவர்கட்கு "கருணையும் சிவமும் ஆக, கன்மமும் மாயையும் மாறி விட்டிருக்கும்."

இவர்களுக்கு உபதேசிக்கும் குரு தெய்வ தெய்வீக இயல்புடன் தோன்றி உண்மை உணர்த்திவிட்டு உடன் மறைந்துபோம்.

அதுமுதல், "உபதேசப் பொருள் தானே உள்நிலை கொண்டிடும் உண்மைக் குருவாக விளங்கும் "

இவர்கள் இந்த அகக் குருவினால்தான் எப்போதும் உண்மை எல்லாம் உணர்த்தப் பெற்று, கடவுள் நிலையை அடைய உதவுவது, இந்த "உள்ளொளிக் குருவே!!"

இந்த விஞ்ஞானகல ஆன்ம பரிபாகிகள்தான் சுத்த சன்மார்க்க நிலைக்கு உரியவர்களாக மேல் இதய ஜோதி (சிரநடு சிற்றம்பல ஜோதி) குருவால், ஒளி நெறியில் செலுத்த பெறுகின்றார்கள்.

இவர்கள் ஆணவமாகிய ஒரு மலம் நீக்கப்பட உள்ளனர்.

விஞ்ஞானகலரின் மெய்ஞ்ஞான நிலையை நோக்குவாம். ஒவ்வொருவனிலும், உடல் - உயிர் - அறிவு என்ற முந்நிலைகள் ஒன்றினில் ஒன்றாய் இருக்கின்றதாம்.

**அறிவால், "தன்னை ஆன்ம சொரூபியாய் அறிந்து கொண்டிருக்கின்றவரே "மெய்ஞ்ஞானியாம் விஞ்ஞானகலர்" ஆவார்.**

"தன்னை ஆன்மாவாக கண்டிருக்கின்ற விஞ்ஞானகலன்" தன்னில் மறைந்து கிடக்கும் கடவுள் உண்மையை அறிகின்றான். அறிந்தும், தான் அக் கடவுள் மயமாக வாழாது உள்ளான்.

ஏனெனில், கடவுள் அருள் அனுபவம் வெளிப்பட்டு, தான் ஆத்மா என்ற ஆன்ம போதத்தை மாற்றி, "தான் கடவுள்" என்ற அனுபவத்தை வாழ்வில் பெறப்பட வேண்டி இருக்கின்றதாம்.

இந்த ஆன்ம போதம் தான் ஆணவமலம் எனப்படும்.

ஆகவே, விஞ்ஞானகலருக்கு ஆணவமலம் ஒழியவும், கடவுள் நலம் விளையவும், அருள் அனுபவம் எல்லாம் வருவிக்கப்படுகின்றனவாம்.

இந்த விஞ்ஞானகலர் யார்?!

இவர்களுக்கும் தற்கால விஞ்ஞானிகளுக்கும் என்ன சம்பந்தம்? என்று சற்று ஆய்வோம்.

“இந்த விஞ்ஞானகலர், மெய்ஞ்ஞானம் பெற்றுள்ள ஆன்மாக்கள் ஆவர்.”

கலர் என்றால் மனிதனாகிய ஆன்மா.

இங்கு ஞானத்திற்கு முன் வந்த “வி”, “சிறந்த அருள் அறிவின் சேர்க்கை யுடைமையைத் தெரிவிப்பதால் (“வி” என்ற எழுத்து அருள் ஒளி ஆகிய கடவுளைக் குறிக்கும்) இவர்கள் “மெய்ஞ்ஞான சகிதர்” என்று கூறப்படுவர்.

ஆனால்இப்பொழுதைய விஞ்ஞானியர்க்கு மெய்ஞ்ஞானம் இல்லாததால் “வி” இன்மைப் பொருள் தந்து நிற்கின்றதாம்

அந்த மெய்ஞ்ஞானம் இல்லாதவர்கள் இவர்கள் என்பது கருத்து.

ஆனால் இப்பொழுது புலன் இன்ப வாழ்வைப் பிரதானமாகவும், அதற்காம் புலபோக அறிவே, சிறந்ததாகவும் கொள்ளுகின்றவர்கள், இந்த விஞ்ஞானிகளை மேலான அறிவுடையவர்கள் என்றே கொள்ளுவர். ஆகவே இந்த விஞ்ஞானிக்கும் அந்த விஞ்ஞான கலருக்கும் சம்பந்தம் இல்லை என்க.

## A18 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### “ஆத்மா”

“ஆத்மாவை அறிதல்” என்பது ஆத்மாவாக இருத்தலே, (தானாய் இருத்தலே தன்னை அறிதலாம்)

ஆத்மா நமக்குத் தெரியாது என்று கூறமுடியுமா? நம் கண்களை நாம் காண முடியவில்லை என்பதால் (கண்ணாடி இல்லாத போது), கண்கள் இல்லை என்று கூறமுடியுமா? அதுபோலவே ஆத்மாவும்.

"ஆத்மா என்பது காணப்படும் பொருள் அன்று!, நாம் அதுவாய், அது நாமாய் இருக்கின்ற உண்மை ஞானானுபவப் பொருள்"

**"நாமாய் இருக்கின்ற ஆன்மாவை நாமே தேடுவதா?!"** என்னே இந்த அஞ்ஞானம்!!

**ஒரு சிறு கதை;-**

ஒரு ஊரில் ஒரு ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் தனது எஜமானரிடமிருந்து 10 ஆடுகளை வாங்கி வைத்திருந்தான். தினமும் காலையில் அந்த 10 ஆடுகளை காட்டுக்கு ஓட்டி வந்து மேய்த்துவிட்டு மாலையில் வீடு திரும்புவான். அவன் எஜமான் தினமும் அதற்கான கூலியை அச் சிறுவனுக்கு கொடுத்து விடுவார். தினமும் அந்த ஆடுகளை ஊருக்கு பக்கத்திலுள்ள காட்டுக்கு மேய்க்க அழைத்து வருவான். அவன் அந்தக் காட்டிலே ஆடுகளை மேய விட்டுவிட்டு, அந்த காட்டுக்கு நடுவிலே இருந்த துறவிகள் வசிக்கும் ஒரு ஆசிரமத்தில் திண்ணையில் அமர்ந்து கொள்வான். அந்த ஆசிரமத்தில் நிறைய துறவிகள் இருந்தனர். அதில் ஒரு துறவி அந்த ஆடு மேய்க்கும் சிறுவனிடம் அடிக்கடி அன்புடன் பேசிக் கொண்டிருப்பார். இப்படி தினமும் அவன் அங்கு ஆடு மேய்த்து விட்டு மாலையில் அந்த பத்து ஆடுகளை வீட்டுக்கு ஓட்டி சென்று விடுவான். இப்படி தினமும் இது நடந்து கொண்டிருந்தது. ஒருநாள் அவன் வழக்கம் போல, அந்த பத்து ஆடுகளை காலையில் காட்டுக்குள் மேய விட்டு விட்டான். மதிய நேரம் அவன் அந்த ஆசிரமத்தின் முகப்பில் அமர்ந்து தான் எடுத்து வந்த உணவை சாப்பிட்டான். சாயங்காலம் வீட்டுக்குப் போகும் பொழுது அவன் ஆடுகளை வழக்கம்போல் எண்ணிப் பார்த்தான். அப்படி எண்ணிப் பார்த்ததில் 9 ஆடுகள் தான் இருந்தன. ஒரு ஆட்டைக் காணவில்லை. அவன் பதறிப் போய், மிகவும் பயந்து விட்டான். தன் எஜமானரிடம் என்ன சொல்லுவது என்று அவன் கவலை அடைந்தான். அந்த ஒரு ஆட்டுக்குட்டியை காணாததால் அவன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டான். அந்த காட்டு வழியே வருவோர் போவோர் எல்லாம் அவன் அழுவதைப் பார்த்து அவனிடம் என்ன என்று விசாரித்தனர். அவர்களிடம் அவன் எனது ஒரு ஆட்டுக்குட்டியை காணவில்லை என்று அழுதுகொண்டே சொன்னான். அதைக் கேட்ட அவர்கள் "ஐயோ பாவம்", என்று சொல்லி விட்டு, சென்று விடுவர்.

இப்படியே பல பேர் வந்து அவனிடம் விசாரித்து “ஐயோ பாவம்”, என்று சொல்லிவிட்டு சென்று கொண்டிருந்தனர். நேரம் ஆக ஆக கண்களில் நீர் பெருக அழ ஆரம்பித்தான். அப்படி அவன் அழுது கொண்டே அந்த ஒன்பது ஆடுகளை ஓட்டிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். ஆசிரமத்தின் வழியேதான் அவன் செல்ல வேண்டும். அங்கு அவன் எப்போதும் பேசிக் கொண்டிருக்கும் அந்தத் துறவி, அவன் அழுவதைப் பார்த்து “தம்பி ஏன் அழுது கொண்டிருக்கிறாய்?” என்று இரக்கத்தோடு கேட்டார். அதற்கு அவன், “எனது ஒரு ஆட்டை காணவில்லை சுவாமி! எனது எஜமானுக்கு நான் என்ன பதில் சொல்லப் போகிறேன் என்று தெரியவில்லை. அவர் என்னைப் பிரம்பால் அடித்தே கொன்றுவிடுவார். எனக்கு ஒன்றும் புரியவில்லை சாமி”, என்று தேம்பி தேம்பி அழுதான். அந்த துறவி அவனையே உற்றுப் பார்த்தார். “தம்பி மொத்தம் எத்தனை ஆடு இருக்கிறது?” என்று கேட்டார். “சுவாமி 10 ஆடுகளில் 9 தான் இருக்கிறது. ஒரு ஆட்டை காணவில்லை சுவாமி”, என்றான். அந்த துறவி அவனை அழைத்து, “தம்பி உனது தோளை பார்!!” என்றார். அவன் தனது தோளைப் பார்த்தான். அப்போதுதான் அவனுக்கு தெரிந்தது, அந்த பத்து ஆடுகளில், ஒரு குட்டி ஆடு ஒன்று இருந்தது. அதை ஆசையாய் அவன் வளர்ப்பான். அன்று அவனை அறியாமலேயே அந்த சிறிய ஆட்டுக்குட்டியை ஆசையாய் தனது தோளின்மேல் வைத்துக் கொண்டிருந்தான். அப்படியே பொழுதும் போய்விட்டது. தன் தோள் மேல் இருந்த ஆட்டுக்குட்டியை அவன் மறந்துவிட்டான். அதனால் அவனுக்கு ஒன்பது ஆடுகள்தான் தெரிந்தன. தன் தோள் மீது இருந்த ஆட்டுக்குட்டியை அவன் மறந்தே போய் விட்டான். அந்த துறவி சொன்ன பிறகுதான் அவனுக்கு தன் தோள் மேல் இருந்த தன்னுடைய அந்த ஆசையான ஆட்டுக்குட்டி கண்ணுக்கு தெரிந்தது. இப்பொழுது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! அவன் மிகவும் சந்தோஷமாய் ஆடினான்! பாடினான்!! ஆனந்தக் கூத்தாடினான்! ஆடிக்கொண்டே சந்தோஷமாய் வீட்டுக்கு அவன் சென்று விட்டான்.

இந்த கதை மூலம் நாம் அறிவது என்னவென்றால் அவன் இதுவரை அறியாமல் இருந்த அந்த பத்தாவது ஆட்டுக்குட்டியை போன்றதுதான் நமது ஆன்மா. சைவசித்தாந்தத்தில் ஆன்மாவுக்கு 10 என்று சொல்வர். அதாவது “ய”! “ய” என்ற எழுத்து ஆன்மாவைக் குறிக்கும். ஆக நாம்

எத்தனையோ கோடி பிறவிகளில் எத்தனையோ கோடி வருடங்களாக **நாம் நமது ஆன்மாவை அறியாமலே இருந்து கொண்டிருக்கின்றோம். அறியாமல் இருந்தபோது கூட நாம் அந்த ஆன்மாவாகதான் இருந்துக் கொண்டிருந்தோம்! இருக்கின்றோம்!! இருப்போம்!!**

ஆனால் "தேகமே நான்" என்ற மாயா உணர்வுக்கு இறங்கி வந்து விட்டபடியால், நம்மை நாம் மறந்து இவ்வுலகில் வீண் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, **ஆன்மா என்பது தேடக்கூடிய பொருள் அல்ல!! நாம் உண்மையில் அந்த ஆன்மாவாக தான் இருக்கின்றோம்! "நமது வடிவம் உண்மையில் ஆன்ம அக வடிவமே!!" என்று உணர்தலே ஞானம்!** இந்த ஞானத்தை நாம் தேடி அடைய வேண்டியதில்லை. உண்மையில் ஞானம் என்பது அந்த அறிவே வடிவான ஆன்மாவே!! அந்த ஆன்மாவாகத் தான் நாம் இருக்கின்றோம் என்பதை சத் விசாரத்தால் உணர்ந்து கொள்வதே நாம் செய்ய வேண்டிய முதல் கடமையாகும். - ஓர் மெய்யன்பர்.

"இந்த பௌதிக உடம்பில் இருக்கின்ற, "நான் யார்?" எனில், "நான் ஆன்மா!".; "சிற்றணு வடிவின்"

இதன் இருப்பிடம் புருவமத்திய லலாட ஸ்தானம்!

மேற்படி ஆன்மா கோடி சூரியப் பிரகாசம் உடையது.

-வள்ளலார்.

## A19 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "ஓடும் உலகு-உயிர் ஆகி நின்றானே"

என்பது மெய்யுணர்ந்தோர் சத்திய வாசகம்.

இறைவனே தானே, எல்லாம் வல்ல திருவருட் சுதந்தரத்தால், இப் பிண்ட தேகத்தில் நாமாகிய,

"அகம்" - ஆன்மா

"அகப்புறம்" - ஜீவன்

"புறம்" - மனம்

"புறப்புறம்"இந்திரியங்கள் யாவுமாய்

அவரே "அகமிருந்து அனகமாய்" வெளிப்பட்டு விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

இங்கு "நாம்" என்று சொல்லிக் கொள்வதற்கு ஒன்றுமே இல்லை!

"இருப்பது ஒன்றே; அதுவே எல்லாமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றது!!"

என்பதை அறிவது தானே, சுத்த சன்மார்க்கம்.?!

காக்கையிலும் சரி, மயிலிலும் - குயிலிலும் சரி, அவைகளின் வாயிலிருந்து வெளிவரும் ஓசையோ- சப்தமோ "ஓங்கார பிரணவத்தின் ஏகதேச இசையே"!!

ஆன்மாக்கள் எல்லாம் தனித்தனி ஒவ்வொன்றும் "இயற்கை உண்மை" ஆகிய "சத்துப் பொருளை" தன்னகத்தே பரிபூரணமாய் முழுமையாய் கொண்டதே!!

ஒரு சிற்றெறும்பிலுள்ள ஆன்மாவிலும் சரி, மலத்திடை புழுத்த புழுவிலும் சரி, ஒரு நாயிலும் சரி, ஒரு முற்றும் மெய்யுணர்ந்த ஞானியிலும் சரி - உள்ளே இருக்கும் ஆன்ம அருட்ஜோதி ஒன்றுதான்!!

எனவே, யார் மூலம் வேண்டுமானாலும் "உண்மை" வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.

"இது தருணம் ஆண்டவர் உண்மையை தெரிவித்தார்; தெரிவிக்கின்றார்; தெரிவிப்பார்!!"

என்று பெருமானே கூறியுள்ளார். சுத்த சன்மார்க்க உண்மைகள் பலர் வாயிலாக வெளிப்பட்டுக் கொண்டே இருப்பது, வள்ளற் பெருமானுடைய திருச்செயல்.

எல்லா வேத, ஆகம நூல்களிலும் அந்தந்த நூல்களின் கடைசியில் "முற்றும்" என குறித்து விடுவார்கள்.

ஆனால், சுத்த சன்மார்க்கம் அப்படி அல்ல! திருவருட்பாவில் கடைசி பக்கத்தில் "முற்றும்" என சொல்லிவிட முடியாது.

சுத்த சன்மார்க்க அனுபவங்களை வள்ளலார் ஆங்காங்கே பிறர் வாயிலாக தானே வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்.

அதை ஏற்பதும் ஏற்காததும் அவரவர் மனோ பக்குவமே!

சுத்த சன்மார்க்கம் ''புறநிலையில்'' இல்லை! அது ஆன்ம அகமிருந்து வெளிப்படுவது.

## A20 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## ''கடவுள் - ஆன்மா - உயிர் - மனம் - கர்மா''

## ''முதலில் இருந்து வா!! முடிவில்லாது வாழ்!!!''

பறநிலையிலிருந்து பார்க்கும் போது முதலில் நமக்குத் தெரிவது, இந்த பஞ்ச பூதத்தாலான பௌதிக உடம்பே. இதற்கு உள்ளீடாய் மனமும், அதற்கும் உள்ளே உயிரும் எல்லாவற்றிற்கும் அப்பால் ஆன்மா இருக்கின்றது.

இந்த ஆன்மா இருக்குமிடம் ''சிரநடு நிராதாரநிலையம்'' ஆகும்.

இந்த அறிவாகிய ஆன்மாவிற்கு உள்ளே தான் கடவுள் ''அருள் ஒளி அல்லது உள்ளொளியாய் உள்ளார்''

அந்த ஆன்ம அகமிருக்கும் உள்ளொளியே ''அகமிருந்து அனகமாக விரிந்து'' நமது என்னும்,

ஆன்மா - அகநிலை

உயிர் உணர்வு - அகப்புற நிலை

மனம் - புறநிலை

உடல் மற்றும் ஐம்புலன்கள் - புறப்புற நிலை

ஆகிய நான்கு நிலைகளாக விரிந்து ''**புறத்தில் மனிதனாகவும் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றார்.**''

ஏன் இப்படி அவர் இந்த மனிதனாக தோற்றம் கொண்டுள்ளார்?! எனில்,

''சச்சிதானந்த அனுபவத்தை'' முடிவில் பக்குவ மனிதனில் பூரணமாக வெளிப்படுத்தி, ''தானே அந்த மனிதனாய் இருந்து தன்னைத்தானே அனுபவிக்கவே'' இந்த ஏற்பாடு.

இதற்காகவே ஆதி தொட்டு, அளவிறந்த காலமாக இந்த மாபிரபஞ்ச இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஆன்மாக்கள் முறைப்படி பக்குவமுறவும், அறிவு விளக்கம் படிப்படியாக உண்டாகவும், புல்லாதி ஓரறிவுத் தாவர வர்க்க முதல் ஆறறிவு பகுத்தறிவுடைய மனித தேகம் வரை எத்தனையோ கோடி பிறவிகளில் எவ்வளவோ காலமாக செலுத்தப்பட்டு, புற உலக இன்ப துன்பங்களால் சிறிது சிறிதாக ஆன்ம அறிவை விளங்கச் செய்விக்கின்றார் ஆண்டவர்.

இதற்காகவே "கர்மா" எனும் "கன்ம மலத்தை" யும் (செயற்கை)

"மாயை" எனும் மாயா மலத்தையும் (இயற்கையில் செயற்கை) ஆன்மாவுக்கு பிற்சேர்க்கையாக கூட்டுகின்றார்.

"ஆணவ மலம்" ஆன்மாவுக்கு இயற்கையாய் உள்ளதே.

இம் மூன்றும் சேர்ந்தே அந்த ஆன்மா இவ் உலகில் வாழ வருகின்றது.

நல்வினை, தீவினை என்பது ஆன்மாவுக்கு இறைவனின் திருவருளால் தோற்றுவிக்கப்பட்டது.

அருள் நியதிப்படி ஒவ்வொரு ஆன்மாவும் இந்த மாயா - கன்ம "இயற்கை நியதி - விதிச் சூழலில்" உட்பட்டு வாழ்ந்து, "அக அறிவை படிப்படியாக வளர்த்துக் கொள்கின்றது."

எந்த ஒரு உயிரும் சரி, எந்த ஒரு மனிதனும் சரி, எந்த ஒரு தீய (அ) நல்ல செயலைச் செய்தாலும், அது திருவுள்ளம் அறியாது நடைபெறவில்லை.

இந்த அறம் - பாவத்தால், இன்ப - துன்பம் வந்தடைகின்றது.

ஒவ்வொரு இன்ப துன்பத்தாலும் அதி சூக்குமமாக (அறிந்தோ அறியாமலோ) அந்த குறிப்பிட்ட ஆன்மா அகத்தில் பக்குவமடைந்துக் கொண்டிருக்கின்றதுதான் உண்மை.

ஒருவன் பல கொலைகள் செய்தாலும் கூட, இறைவன் அவனை தனது கண்காணிப்பில் வைத்துக் கொண்டுதான் இருக்கின்றார். தக்க நேரத்தில் அவனுக்கு நியதிப்படி தக்க தண்டனை அளித்து, துன்புறுத்தி, பின்பு அவனே தன் தீய செயலுக்கு உண்மையாக வருந்தி இறைவனிடம் வேண்டும் போது, அத்தீயவனுக்கும் உண்மையை உணர்த்தி ஆட்கொள்ளுதல் இறைவனுடைய பேரருட் பெருங்கருணையாகும்.

தீயநெறியில் செல்லுகின்றவனைக் கூட, முதலில் அவன் "அவாவின்" படியே செல்லவிட்டு, பின்பு துன்பத்தை அனுபவிக்கச் செய்து, முடிவில் அவனே திருந்திவிடும்படி செய்வது திருவருளின் செயல். எனவே "கர்மா" என்பது கூட "ஆன்மாவை அக விழிப்படையச் செய்ய" திருவருள் மேற்கொண்டுள்ள வழிமுறையாகும்.

இதற்கு மேல் மனிதன் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ திருவருளால் வள்ளலார் மூலம் சுத்த சன்மார்க்க அருட் பெருநெறி தோற்றுவிக்கப்பட்டுள்ளது இது தருணம்.

## A21 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "அன்னதானத்தின் மகிமை
## (ஜீவகாருண்யத்தின் வல்லபம்)"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்,
பெற்றான் பொருள் வைப்புழி!! - திருக்குறள்

பொருள்;- எந்த ஆதரவுமற்ற உள்ளபடி பசித்த ஏழைகளுக்கு ஆகாரம் கொடுத்து அப்பசியை நிவர்த்தி செய்து, அவர்களுக்கு திருப்தி இன்பத்தை உண்டுபண்ணுகின்றவனே, தான் சம்பாதித்த பொருளை சேமித்து வைக்கும் உண்மையான இடமாகும்(ஏழைகளின் வயிறு)

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல், அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்!!

பொருள்;- தவம் செய்யும் ஞானிகளின் ஆற்றல் தன் உடல் பசியை உணராதிருத்தலே! ஞானிகளின் இத்தகைய அரிய தவ ஆற்றல் கூட, பசித்தோர்க்கு உணவளிக்கும் உயிரிரக்கமுள்ள சமுசாரியின், ஜீவகாருண்ய வல்லபத்திற்கு பின்தங்கியுள்ளதே ஆகும்.

-திருவள்ளுவர்

"ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு!"
"ஜீவகாருண்யமே முக்திக்கு முதற்படி!!"
"ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்!!!"

-திருவருட்பிரகாச வள்ளலார்

“அன்னதானத்தின் மகிமையையும், ஜீவகாருண்யத்தின் வல்லபத்தையும்” விளக்கும்

**ஒரு சிறு கதை;**

**(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் சொன்னது)**

முன்பு ஒரு காலத்தில், ஒரு ஊரில் “பெரியம்மா” என்கின்ற அம்மையார் வாழ்ந்துவந்தார். அவர் பெயருக்கு ஏற்ப, அவருக்கு வயது 60 நிரம்பியிருந்தது. அவருக்கு “தயாளன்” என்ற ஒரு மகன் இருந்தார். அவர் திருமணம் செய்து கொள்ளாத பிரம்மச்சாரி!! அந்த அம்மையார் சிறந்த இறை பக்தர். எப்பொழுதும் கடவுள் சிந்தனையிலேயே ஆழ்ந்து இருப்பார். அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து, தியானத்தில் ஆழ்ந்து விடுவார்; இரண்டு மணிநேரம் தொடர்ந்து தியானத்தில் இருப்பார்; பிறகு எழுந்து உலகியல் கடமைகளை செய்வார். அவருக்கு இறை சிந்தனையோடு, “ஜீவகாருண்ய உணர்வும்” அதிகமாக இருந்தது. உயிர்களிடத்து உண்மையான அன்பு பூண்டிருந்தார். கடவுள் அடியார்களுக்கு அன்னம் இடுவது, உள்ளபடி பசித்த ஏழைகளுக்கு ஆகாரம் கொடுப்பதும், அவருடைய தினசரி தயவு காரியமாக இருந்தது. தினமும் ஒரு ஐம்பது - அறுபது பேருக்காவது அவர் அன்னதானம் செய்வார். அவருக்கு பொருளாதார சூழ் நிலையும் கடவுள் திருவருளால் நன்கு அமைந்திருந்தது. அவருக்கு 50 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தில் நெல் முதலான தானியங்களை பயிர் இடுவார். அவருடைய வயல்வெளியில் சுமார் 30 விவசாயிகள் தினமும் வேலைக்கு வருவார்கள்.அதில் 10 பேர் அந்த அம்மையாரின் வீட்டருகே குடிசைகள் அமைத்து நிரந்தரமாக தங்கி இருந்தனர். அவர்களுக்கும் காலை மதியம் இரண்டு வேளை இலவசமாக உணவு அளிப்பார். இப்படி அவருடைய ஜீவகாருண்ய பணி பல வருடங்களாக தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருந்தது. அப்படியிருக்கையில் ஒரு நாள், தன்னுடைய மகனைப் பார்த்து, “மகனே! நீ ஜீவகாருண்யத்தின் அருமை பெருமைகளை பற்றி நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய ஆசை! நான் படிக்காதவள்; எனக்கு ஜீவகாருண்யத்தைப் பற்றி அவ்வளவாக தெரியாது! நீ ஞானிகளிடம் சென்று, அவர்களுடன் சில நாள் தங்கி, அவர்களுக்கு சேவை செய்து, இந்த ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் மேன்மையையும் அதனுடைய

பலன்களையும் பற்றி நன்கு அறிந்து வருவாயாக!!" என கட்டளையிட்டார். அதற்கு அவருடைய மகன் மிகவும் இசைந்தார். மறுநாளே, அவருடைய மகன் தனது தாயாரிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டார். " அம்மா நான், இங்கிருந்து வட இந்தியா வரையில் நடைபயணம் மேற்கொண்டு, ஆங்காங்கே உள்ள ஆசிரமங்களில் உள்ள யோகிகளிடமும், ஞானிகளிடமும் ஜீவகாருண்யத்தின் வல்லபத்தையும், அன்னதானத்தின் மகிமையையும் கேட்டு வருகின்றேன் அம்மா, எனக்கு விடை தாருங்கள்!!" என தாயின் திருவடிகளில் விழுந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டார்.

அவர் அங்கிருந்து நடைபயணம் மேற்கொண்டார். அன்று காலையிலிருந்து இரவு வரை நடந்து சென்று கொண்டிருந்தார். இரவு நேரமாகி விட்டபடியால் ஒரு ஊரில் சத்திரம் ஒன்று இருந்தது. அங்கு உணவருந்தி அந்த சத்திரத்தில் இரவு தங்கி விட்டார். மறுநாள் அதிகாலையில் எழுந்து, சிவ தியானம் செய்துவிட்டு, மீண்டும் புறப்பட்டார். இப்படியே சில நாட்கள் அவர் பல ஊர்களை தாண்டி செல்ல வேண்டி இருந்தது. முடிவில் ஓரிடத்தில் ஒரு துறவிகளின் ஆசிரமத்தைக் கண்டார். அங்கு இருந்த துறவிகளின் திருவடிகளை வணங்கி, தான் வந்த நோக்கத்தை அவர்களிடம் தெரிவித்து, அங்கு சில நாள் தங்கி இருந்து சேவை செய்யவும் அனுமதி கோரினார். அதற்கு அங்கிருந்த துறவிகள் சம்மதித்தனர். அங்கு சில நாள் பழகி அங்கிருந்த ஞானிகளிடம் ஜீவகாருண்யத்தைப் பற்றி கேட்டறிந்தார். அவர்களும், அவர்கள் அனுபவத்தை அவருக்கு சொன்னார்கள். பிறகு அங்கிருந்து துறவிகளிடம் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் நடை பயணத்தை தொடர்ந்தார். அப்படியே சில நாட்கள் அவரது பயணம் தொடர்ந்தன. அதற்கப்புறம் மீண்டும் ஒரு ஊருக்குப் பக்கத்தில் ஒரு ஞானியின் இருப்பிடம் அவருக்கு தெரியவந்தது. அங்கு சென்று அந்த ஞானியின் திருவடியை விழுந்து வணங்கி தான் வந்த நோக்கத்தை பற்றி தெரிவித்தார். அந்த ஞானியும் அகமகிழ்ந்து இங்கே சில நாள் தங்கி இருக்கலாம் என்று சொன்னார். அந்த இளைஞருக்கும் மனம் சந்தோஷமாக இருந்தது. அங்கே பல நாட்கள் தங்கி அந்த ஞானியிடம் பழகி அவரிடம் அன்னதானத்தின் மகிமையையும், ஜீவகாருண்யத்தின் வல்லபத்தையும் கேட்டறிந்தார். பிறகு அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டு தனது பயணத்தை தொடர்ந்தார். காலையில் தொடர்ந்த அவருடைய நடைபயணம் மாலை நான்கு வரை நீடித்தது. வழியில் ஒரு

பெரிய காடு இருந்தது. தயாளன் அந்த காட்டின் வழியே செல்ல வேண்டியிருந்தது. அப்படி காட்டின் வழியே சென்று கொண்டிருந்தார். அங்கே பல விலங்கினங்கள் காணப்பட்டன. அது ஒரு அடர்ந்த காடு! சில துஷ்ட மிருகங்களும் தூரத்தில் ஆங்காங்கே உலவிக் கொண்டிருப்பதையும் பார்த்தார். பொழுதும் சாய்ந்து விட்டது! இருட்டுகின்ற நேரம். தயாளனுக்கு செய்வது ஒன்றும் புரியவில்லை! காடு போய்க்கொண்டே இருந்தது; எங்கு முடிவடையும் என்று தெரியவில்லை. சற்று யோசித்தபடி இருந்தார். அப்போது அவர் எதிரிலே ஒரு வேடன் ஒருவன் வந்தான். அவன் கரிய நிறம் உடையவனாக இருந்தான். அவன் வேடன் என்றாலும், எந்த உயிரினங்களையும் அவன் வேட்டையாடுவதில்லை! இயற்கையிலேயே அவன் கருணை உடையவனாக இருந்தான்! அவன் நமது இளைஞரைப் பார்த்து, "நீங்கள் எங்கு சென்று கொண்டு இருக்கிறீர்கள்?" எனக் கேட்டான். அந்த வேடனிடம், நம் இளைஞர், தனது லட்சியத்தை தெரிவித்தார். வேடன் மிகவும் அகமகிழ்ந்தான். "ஐயா இப்பொழுது இருட்டி விட்டது! இந்த காட்டில் துஷ்ட மிருகங்கள் உலவிக் கொண்டு இருக்கும்! அவைகள் நம்மை அடித்து சாப்பிட்டு விடும்! ஆகவே நீங்கள் இன்று இரவு என்னுடனே இங்கேயே தங்கி விடுங்கள் " என்றான். வேடன் இரவில் தங்குவதற்காக ஒரு இருப்பிடம் மரத்தின்மேல் அமைத்திருந்தான். அதாவது அருகருகே இருந்த நான்கு பனை மரத்தின் உச்சியில் பரணை ஒன்று அமைத்து இருந்தான். அங்குதான் வேடுவனும் அவனது மனைவி வேடுவச்சியும் இரவு நேரத்தில் தங்குவார்கள். அந்த இளைஞரை பார்த்து, "ஐயா நீங்களும் இன்று மரத்தின் மேலே உள்ள பரணையில் எங்களுடன் தங்கிக் கொள்ளலாம்" என்று கூறினான். அதற்கு இளைஞரும் மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார். அன்று இரவு வேடுவச்சி இரண்டு அப்பங்கள் செய்து வைத்திருந்தாள். இப்பொழுது அந்த இளைஞரோடு சேர்த்து மூன்று பேர் இருப்பதால் அந்த இரண்டு ஆப்பத்தை பங்கிட்டு கொள்ள வேண்டியிருந்தது. வேடன் தனது மனைவியை பார்த்து, "பெண்ணே! இந்த இரண்டு ஆப்பத்தையும் மூன்றாக பிரித்துக் கொண்டு, வந்துள்ள விருந்தினருக்கு ஒரு பங்கு கொடுத்து விடலாம் " என்று யோசனை கூறினான். வேடுவச்சியோ வேடனைப் போல் கருணையுள்ளம் படைத்தவள் அல்ல! அவள் சற்று கடின சித்தம் உடையவள். அவள் அந்த ஆப்பத்தை மூன்றாக

போடுவதற்கு சம்மதிக்கவில்லை. "எனக்கு மிகவும் பசி எடுக்கிறது; எனக்கு ஒரு ஆப்பம் முழுமையாக வேண்டும்; நீ வேண்டுமானால் உன்னுடைய பங்கை அவருக்கு கொடுத்து விடு" என்றாள். வேடனும் வேறுவழியின்றி தனது ஆப்பத்தை அப்படியே அந்த இளைஞருக்கு கொடுத்துவிட்டார். இளைஞர் அதற்கு சம்மதிக்கவில்லை. இருவரும் ஆளுக்கு பாதி எடுத்து சாப்பிடலாம் என்றார். வேடனும், "ஐயா! நீங்கள் எவ்வளவு தொலைவு நடந்து வந்திருக்கிறீர்கள்! மிகவும் களைப்பாக இருக்கிறீர்கள்! பசி அதிகமாக இருக்கும்; நானோ சற்று முன் தான் சில காய்கனிகளை இங்கே காட்டில் சாப்பிட்டு, எனக்கு வயிறு நிறைந்து இருக்கின்றது; இதை இந்த அப்பத்தை நீங்கள் அப்படியே சாப்பிட்டால் தான் எனக்கு மன நிறைவாக இருக்கும். எனவே நீங்கள் சாப்பிடுங்கள்" என்றான். அவருடைய உபசரிப்பை கேட்ட நம் இளைஞர் அந்த ஆப்பத்தை சாப்பிட்டார். இப்பொழுது உணவு அருந்தி ஆகிவிட்டது. இப்பொழுது படுத்துக்கொள்ள வேண்டும். வேடன் வந்த விருந்தினரையும் மரத்தின் மீது பத்திரமாக மேல் ஏற்றினார். மரத்துக்கு மேலுள்ள பரணையில் வேடன், வேடுவச்சி, நம் இளைஞர், மூன்று பேரும் படுத்துக்கொண்டனர். வேடருடைய மனைவி கடும் கோபமாக இருந்தாள். "இது மிகவும் இடம் சிக்கனமாக உள்ளது. இதில் எப்படி 3 பேர் படுப்பது?" என்றாள். அதற்கு வேடன், "என்ன செய்வது! இன்றைக்கு ஒரு நாள் அனுசரிச்சு படுத்துக் கொள்ளலாம்", என்றான். இருவர் மட்டும் படுத்திருந்தபோது இடம் தாராளமாக இருந்தது; இப்பொழுது மூன்று பேர் படுத்ததனால் நெருக்கம் ஆகி விட்டது! பரணைக்கு ஓரத்தில் படுபவர்கள், மிகுந்த ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்; இல்லையென்றால் தூக்கத்தில் புரண்டு விழுந்தால் தொப்பென்று கீழே விழ வேண்டியது தான்! கை கால் முறிந்து, உயிர் போய்விடும்! கவனமாக படுத்துறங்க வேண்டும். அதனால் வேடுவன் தனது மனைவியை பார்த்து, "நீ, அந்த ஓரமாய் படுத்து கொள்; நான் இந்த ஓரமாய் படுத்து கொள்கிறேன்; நமது விருந்தாளி பாதுகாப்பாக நடுவில் படுத்துக் கொள்ளட்டும்! ஏனென்றால் அவருக்கு இந்த மாதிரி இடத்தில் படுத்து பழக்கம் இல்லை!", என்றான். வேடுவச்சிக்கோ, தன் பக்கத்தில் அந்த புதிய இளைஞர் படுப்பதை விரும்பவில்லை! எனவே, அதற்கு அவள் சம்மதிக்காது, "அந்த இளைஞரை ஓரமாகவே படுக்கச் சொல்லுங்கள்", என கோபமாக சொன்னாள். வேடுவனும் செய்வது

வேறு அறியாது, அந்த இளைஞரை ஓரமாகப் படுத்து வைத்து விட்டான். சிறிது நேரத்திற்குப் பிறகு வேடுவச்சி ஆழ்ந்து உறங்கி விட்டாள். வேடனுக்கோ, தூக்கம் வரவில்லை! அந்த இளைஞர், உறக்கத்தில் புரண்டு கீழே விழுந்துவிட்டால் என்ன செய்வது! உயிர் போய்விடுமே! என்று பயந்து, அவர் அந்த இளைஞரை நடுவில் படுக்கச் செய்துவிட்டு, தான், ஓரமாய் படுத்துக்கொண்டான். ஒரு மூன்று மணி நேரம் ஆனது. நடுராத்திரியில் வேடுவச்சி விழித்துக்கொண்டாள். அவளுக்கு ஏனோ தூக்கம் வரவில்லை! அவள் என்ன செய்தாள் என்றால், அந்த இருட்டில் ஒன்றும் தெரியவில்லை! அந்த இளைஞர் ஓரமாக தான் படுத்துக் கொண்டிருக்கிறான் என்று நினைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு மூன்று பேர் அங்கு படுத்து இருப்பது பெரிய சங்கடமாக இருந்தது. கருணையற்ற அந்த வேடுவச்சி, ஓரமாய் இருந்த அவரை தள்ளி விடலாம் என்று கீழே தள்ளிவிட்டார். ஆனால் அங்கு படுத்திருந்தது வேடுவன் அல்லவோ?! அவன் கீழே பொத்தென்று விழுந்து, தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, ரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்து சற்று நேரத்தில் இறந்து விட்டான்! பொழுது விடிந்தது! வேடுவச்சி எழுந்து பார்த்தாள்! தன் பக்கத்தில் இளைஞன் படுத்துக் கொண்டிருந்தான். ஐயோ இளைஞன் இங்கு இருக்கிறானே! இளைஞனை தானே நாம் தள்ளி விட்டோம் என்று துடித்தாள். கீழே பார்த்தாள் வேடுவன் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தான். ஐயோ ஐயோ என்று கூக்குரலிட்டாள்; அழுது கதறினாள். இளைஞர் எழுந்தார். நிகழ்ந்த சம்பவத்தை அறிந்து கொண்டார். வேடுவச்சியைப் பார்த்து, “என்ன செய்தாய், பெண்ணே! இப்படி செய்து விட்டாயே! இது எவ்வளவு கொடுஞ்செயல்! கொடும் பாவம்!”, என்று அவளை வைது விட்டு, அங்கே மரத்தடியில் ஒரு பெரிய குழித் தோண்டி வேடுவனை புதைத்து விட்டு, இறைவனிடம் பிரார்த்தனை செய்து அழுதார்; தனக்கு பசிக்கு அன்று இரவு அவர் அன்போடு கொடுத்த ஆகாரத்தையும், படுப்பதற்கு அவர் கொடுத்த இடத்தையும் நினைந்து நினைந்து அவர் அழுதார்; அவர் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை! வேடுவனைப் புதைத்துவிட்டு, அவர் மீண்டும் கிளம்பி விட்டார். பிறகு அந்த காட்டை கடந்து விட்டு ஊர் வழியே சென்று கொண்டிருந்தார். சில ஊர்கள் கடந்தபின், அங்கே ஒரு சாதுக்களின் ஆசிரமத்தை கண்டார். வேடுவன் இறந்து போன சம்பவம் அவரது உள்ளத்தை மிகவும் வாட்டி கொண்டிருந்தது. அங்கு ஆசிரமத்தில் இருந்த ஞானியை பார்த்து தான்

மேற்கொண்டிருந்த லட்சியத்தையும், வழியில் காட்டில் தங்கியதையும், வேடுவன் இறந்து விட்டதையும் அந்த ஞானியிடம் கூறி தேம்பித் தேம்பி அழுதார். அந்த ஞானி அவருக்கு ஆறுதல் கூறி, சில நாட்கள் அங்கேயே தன்னுடன் அவரை தங்க வைத்தார். சில நாட்களுக்குப் பின் அந்த ஞானி ஒரு நாள் தயாளனைப் பார்த்து, "அன்பா! நீ, இங்கிருந்து நேரே வட நாட்டுக்கு பயணம் மேற்கொள்! அங்கு வடநாட்டில், காசி மாநகரத்தை "காசிராஜன்" என்கின்ற அரசன் ஆண்டு வருகிறான். அந்த அரசனுக்கு இன்னும் 9 மாதங்களில் ஒரு குழந்தை பிறக்கப் போகின்றது! அந்த குழந்தை, பிறந்தவுடன் பேச ஆரம்பிக்கும்! யாருடன் பேச ஆரம்பிக்கும் என்றால், "உன்னுடன் தான்! அந்த குழந்தை பேசும்! வேறு யாரிடமும் பேசாது. உன்னிடம் சில வார்த்தை பேசிவிட்டு, அது பேச்சை நிறுத்திவிடும் ", என்றார். இதைக் கேட்ட நம் இளைஞர் மிகவும் வியப்படைந்தார்! இது எப்படி நடக்கும்?! பிறந்த குழந்தை எப்படிப் பேசும் சுவாமி?! ", என்றார். அதற்கு அந்த ஞானி சொன்னார், " நிச்சயமாக அந்த குழந்தை பேச ஆரம்பிக்கும்! உன்னை பார்த்து தான் பேசும்! ஒரு சில நிமிடங்கள் பேசி, அந்த குழந்தை பேச்சை நிறுத்தி விடும்! நீ இப்பொழுதே புறப்படு! இப்பொழுது புறப்பட்டால் தான் நீ நடைபயணமாக காசிக்குப் போய் சேர்வதற்கு 9 மாதங்கள் ஆகும். வழியில் ஆங்காங்கே உள்ள துறவிகளின் ஆசிரமத்தில் தங்கி சில நாட்கள் ஓய்வு எடுத்துக்கொள்! கடைசியில் காசிக்கு சென்று வா! அந்த குழந்தைதான் அன்னதானத்தின் மகிமையையும் ஜீவ காருண்யத்தின் வல்லபத்தையும் உனக்கு சொல்லப் போகின்றது! நாங்களெல்லாம் இறை சிந்தனையிலேயே இருக்கின்றோம். எங்களுக்கு அனுபவப்பூர்வமாக ஜீவகாருண்ய ஒழுக்கத்தை பற்றி அவ்வளவாக தெரியாது! அந்த குழந்தை உனக்கு ஜீவகாருண்யத்தை பற்றி சொல்லும்! நீ போய் வா!", என்று ஆசீர்வதித்தார். அந்த நம் இளைஞர் மிகவும் வியப்படைந்தார். ஞானியிடம் விடைபெற்றுக்கொண்டு நடைபயணம் மேற்கொண்டார். அவர் அப்படியே 9 மாதங்கள் ஆங்காங்கே உள்ள ஆசிரமங்களில் தங்குவதும், ஞானிகளுடன் பழகி இருந்து, கடைசியில் காசி மாநகரத்தை சென்றடைந்தார். அங்கு அந்த அரண்மனையில் இருக்கும் அரசன் காசிராஜனை பார்ப்பது அவ்வளவு எளிதல்ல! அரண்மனைக்குள் யாரும், அவ்வளவு எளிதாக நுழைந்து விட முடியாது! அதனால் நம் இளைஞர் ஒரு அமைச்சரை சந்தித்தார். அந்த

அமைச்சரிடம் தான் வந்த நோக்கத்தை பற்றியும், லட்சியத்தைப் பற்றியும் எடுத்துக் கூறினார். அந்த அமைச்சர் மிகவும் மகிழ்ந்தார். “நான் அவசியம் நமது மகாராஜாவை தங்களுடன் சந்திக்க வைக்கிறேன்” என்று உறுதி சொன்னார். அந்த அமைச்சருக்கும் குழந்தை பேசும் என்கின்ற அந்த நிகழ்ச்சியை அவரால் நம்ப முடியவில்லை! எனினும் “பொறுத்திருந்து பார்ப்போம்!” என்று, நம் இளைஞரை அந்த மகாராஜாவின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். மகாராஜா எதிரில் அமர்ந்து கொண்டிருந்தார். நம் இளைஞர் அவர் எதிரில் நின்று கொண்டிருந்தார். “யாரப்பா நீ? எங்கிருந்து வருகிறாய்? உனக்கு என்ன வேண்டும்?”, என்று மகாராஜா நம் இளைஞரைப் பார்த்து கேட்டார். அதற்கு இளைஞர், ஆரம்பத்திலிருந்து இதுவரை நடந்த விஷயங்களை ஒன்று விடாமல் மகாராஜாவிடம் சொன்னார். “மகாராஜா! தங்களுக்கு பிறக்கப் போகின்ற குழந்தை, பிறந்த உடன், என்னுடன் பேச ஆரம்பிக்கும்! அந்த மழலையின் பேச்சை கேட்கவே நான் இங்கு வந்து இருக்கின்றேன்! அந்த குழந்தை அன்னதானத்தின் மகிமையையும், ஜீவகாருண்யத்தின் வல்லபத்தையும் எனக்கு எடுத்துச் சொல்லும் என்று ஒரு ஞானி சொல்லி அனுப்பினார்”, என்றான். அரசனுக்கு அந்த செய்தி மிகவும் வியப்பூட்டும் செய்தியாக இருந்தது; அவன் நம்பவில்லை; என்றாலும் ஒரு ஞானி சொல்லி அனுப்பியதால், நம்பாமலும் இருக்க முடியவில்லை. இன்னும் இரண்டு நாட்களில் குழந்தை பிறக்கும் என்று வைத்தியர்கள் கூறியிருந்தனர். அன்று அதிகாலை 4 மணிக்கு குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தையை நீராட்டி, அரண்மனை நடு இடத்திற்கு கொண்டு வந்தார்கள். குழந்தையின் முகம் மிகப் பிரகாசமாக இருந்தது. அங்கு சுற்றி அமைச்சர்களும், மற்றவர்களும் “ குழந்தை பேசப் போகிறது”, என்ற ஆவலில், எல்லோரும் காத்திருந்தனர்! காசி மகாராஜன் நம் இளைஞரை குழந்தையின் அருகில் வரும்படி அழைத்தான். இளைஞரும் குழந்தையின் அருகில் போய் நின்று அந்த குழந்தையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்த குழந்தையும் அந்த இளைஞரை பார்த்துக் கொண்டே இருந்தது; புன்சிரிப்பு செய்தது; பிறகு வாயைத் திறந்து பேச ஆரம்பித்தது; “அன்பரே! ஜீவகாருண்ய ஒழுக்கத்தைப் பற்றியும், ஜீவகாருண்யத்தின் வல்லபத்தைப் பற்றியும், அன்னதானத்தின் மகிமையை பற்றியும், எனக்கு என்ன தெரியும்?! ஒன்றும் தெரியாது! ஒரு நாள், ஒரே ஒரு நாள், ஒரு வேளை, நான்

உனக்கு கொடுத்த ஒரு ஆப்பத்தின் பயனாக, அந்த தர்மத்தின் பயனாக, நான் காசி மாநகரை ஆண்டு கொண்டிருக்கின்ற இந்த காசிமகாராஜனுக்கு மகனாகப் பிறந்து உள்ளேன், என்றால் அன்னதானத்தின் பெருமையை என்னென்று சொல்வது?! ஜீவகாருண்யத்தை என்னால் எடுத்து கூற முடியாது! நீ, நேராக திரும்பிப் போ; தென்னாட்டுக்கு திரும்பிப் போ! அங்கே "பெரியம்மா" என்கின்ற ஒரு அம்மா இருக்கின்றார்கள். அவர்கள் ஜீவகாருண்யமே வடிவாகி, எந்த ஆதரவுமற்ற ஏழைகளுக்கும், இறை அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதே தனது வாழ்நாளின் முக்கிய தொண்டாக நினைத்து அயராது பணியாற்றி வருகிறார்கள். அவரிடம் நீ சென்று போய் அன்னதானத்தின் மகிமையையும், ஜீவகாருண்யத்தின் வல்லபத்தையும் தெரிந்து கொள்வாயாக!!" என்று கூறி தனது பேச்சை நிறுத்திக் கொண்டது. அவ்வளவுதான்!! அதற்கப்புறம் அந்த குழந்தை பேசவில்லை. தன் குழந்தை பேசுவதை அறிந்த காசி மகாராஜன் மிகுந்த வியப்புக்கு உள்ளாகி, மிகுந்த சந்தோஷத்தில் இருந்தான். வந்த நமது இளைஞருக்கு பொற்காசுகளை ஒரு மூட்டையில் அள்ளிக்கொடுத்து, "அன்பரே! தாங்கள் இங்கு வந்ததற்கு நான் எவ்வளவு பாக்கியம் செய்து இருக்க வேண்டும்! மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்! தங்கள் சொந்த ஊருக்கு சென்று வாருங்கள் " என்று பிரியா விடை பெற்றுக் கொண்டு, அனுப்பி வைத்தார். நமது இளைஞர் அங்கிருந்து புறப்பட்டு தனது ஊரை நோக்கி வந்துகொண்டிருந்தார். அவர் இங்கு வந்து சேர்வதற்கு பத்து மாதங்கள் ஆகிவிட்டன. அந்த குழந்தை சொல்வதே தனது தாயை தான் என்பதை அப்பொழுதே, குழந்தை பேசும்போதே, புரிந்து கொண்டார். நேராக வீட்டிற்கு வந்து, தனது தாயின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு அழ ஆரம்பித்தார். பெரியம்மா தனது மகனை குனிந்து எழுப்பி, அணைத்துக் கொண்டார். "என்ன மகனே! ஜீவகாருண்யத்தின் வல்லபத்தையும், அன்னதானத்தின் மகிமையை தெரிந்து கொண்டு வந்தாயா?!", என்று கேட்டார். அதற்கு மகன் சொன்னார்;- "அம்மா! நீங்களே ஜீவகாருண்யமே வடிவமாக இருக்கின்றீர்கள்! இனியும் நான் எங்கு சென்று ஜீவகாருண்யத்தை பற்றி தெரிந்து கொள்வது?! தேவையில்லை! இனி தங்களின் பணியை நான் என்றென்றும் தொடர்வேன்!" என்று தனது தாய்க்கு உறுதிமொழி சொன்னார். அந்த பெரியம்மாவும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

## **“ஜீவகாருண்ய ஒழுக்கமே உண்மையான கடவுள் வழிபாடு”**

**(திருவருட்பா உரைநடைப்பகுதி -ஜீவகாருண்ய ஒழுக்கம்-வள்ளலார்)**

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க “ஆன்ம லாபத்தை” காலமுள்ள போதே அறிந்து அடையவேண்டும்.

எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வே இந்தப் பிறப்பினால் அடையத்தக்க “ஆன்ம லாபம்” என்று உண்மையாக அறியவேண்டும்.

எல்லா அண்டங்களையும், எல்லா புவனங்களையும், எல்லா பொருள்களையும், எல்லா ஜீவர்களையும், எல்லா ஒழுக்கங்களையும், எல்லா பயன்களையும், “தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட் சக்தியால்” தோன்றி விளங்க, விளக்கம் செய்விக்கின்ற, இயற்கை உண்மை வடிவினர் ஆகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று, தடைபடாமல் வாழ்கின்ற, அந்த பெரிய வாழ்வை, “கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக்” கொண்டே அடையக்கூடும் என்று அறிதல் வேண்டும்.

கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளை, ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் அல்லது வேறு எந்த வழியாலும் பெறக்கூடாது என்று உறுதியாக அறிய வேண்டும்.

**“அருளைப் பெறுவதற்கு ஜீவகாருண்யமே வழி” ஆதலால், “ஞானவழி” என்பதும் “சன்மார்க்கம்” என்பதும் ஜீவ காருண்யம் ஒழுக்கம் என்றும்,**

“அஞ்ஞான வழி” என்பதும், “துன்மார்க்கம்” என்பதும், ஜீவகாருண்ய ஒழுக்கமின்மை என்றும் அறியப்படும்.

**“ஜீவகாருண்யம் விளங்கும் பொழுது, அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும்”. அதனால், உபகாரசத்தி விளங்கும். “உபகார சக்தியால் எல்லா நன்மைகளும் தோன்றும்”.**

ஜீவகாருண்யம் மறையும்போது, அறிவும் அன்பும் உடனாக மறையும்; அதனால் உபகாரசத்தி மறையும்; அது மறையவே, எல்லா தீமைகளும் தோன்றும்.

**ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகிற "ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் ஜீவகாருண்ய ஒழுக்கம்" ஆகும்.**

ஜீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, பயம், எளிமை, கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்ட பொழுதாயினும், கேட்ட பொழுதாயினும், "இவ்வாறு உண்டாகும்" என்று அறிந்தபோது ஆயினும், ஆன்ம உருக்கம் உண்டாகும்.

**"ஜீவகாருண்ய ஒழுக்கமே புண்ணியம்"**

ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்பம்! ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே, கடவுள் விளக்கம். இவ் விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால் கண்டு அனுபவித்தும் பூர்த்தியடைந்த சாத்தியர்களே, "ஜீவன் முத்தர்கள்" என்றும், அவர்களே "கடவுளை, அறிவால் அறிந்து, கடவுள் மயம் ஆவார்கள்" என்று சத்தியமாக அறியவேண்டும்.

"அறிவு விளங்கிய மனிதர்களுக்கு ஜீவகாருண்யமே உண்மையான கடவுள் வழிபாடு!!"

அறிவினான் ஆகுவது உண்டோ? பிறிதின் நோய்
தந்நோய் போல் போற்றாக் கடை. -திருவள்ளுவர்.

பொருள்;- மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதிக் காப்பாற்றா விட்டால், பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ?!

புண்ணிய பூமிகளை வலம் செய்தல், புண்ணிய தீர்த்தங்களிளாடல், புண்ணிய தலங்களில் வசித்தல், புண்ணிய மூர்த்திகளை தரிசித்தல், தோத்திரம் செய்தல், ஜெபம் செய்தல், விரதம் செய்தல், யாகம் செய்தல், பூஜை செய்தல், முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும் பக்தர்களும், உணவை நீக்கி, உறக்கத்தை விட்டு, விடயச் சார்புகளைத் துறந்து, இந்திரியங்களை அடக்கி, மனோலயம் செய்து, யோகத்தில் இருக்கின்ற யோகிகளும், அளவிறந்த சித்தியின்பங்களைப் பெற்ற சித்தர்களும், நித்தியா நித்தியங்களை (நித்தியம்-அநித்தியம்) அறிந்து, எல்லாப் பற்றுகளையும் துறந்து, பிரம்மானுபவத்தை பெற்ற ஞானிகளும், "ஜீவகாருண்யம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால், "மோட்சம் என்கின்ற மேல் வீட்டிற்கு" முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்தில் காத்திருந்து, மீளவும் அத்

திறவுகோலை சம்பாதிக்கத் திரும்புவார்கள் அல்லது கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழ மாட்டார்கள் என்று உண்மையாக அறியவேண்டும்.

"ஜீவகாருண்யம் செய்வதால் உண்டாகும் நன்மைகள்";-

1) சூலை, குன்மம், குஷ்டம் முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்கு ஒத்தபடி, "பசித்தவர்களுக்கு பசியாற்றுவிப்பதே விரதமாக" அனுசரித்தார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பே, "நல்ல மருந்தாக", அந்த வியாதிகளை நிவர்த்திசெய்து விசேஷ சௌக்கியத்தை உண்டுபண்ணும் என்பது உண்மை.

2) பல நாள் சந்ததி இல்லாமல், பல பல விரதங்கள் செய்து வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத் தக்கபடி, பசித்த ஏழைகளுக்குப் பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு, நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டுபண்ணும் என்பது உண்மை.

3) அற்ப வயதென்று குறிப்பினால் அறிந்துக்கொண்டு, இறந்து போவதற்கு அஞ்சி விசாரப்படுகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத் தக்கபடி, பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு தீர்க்காயுளை உண்டுபண்ணும் என்பது உண்மை.

4) கல்வி, அறிவு, செல்வம், போகம் முதலியவைகளைக் குறித்து வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றி வைப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு கல்வி, அறிவு, செல்வம், போகம், முதலானவைகளை உண்டுபண்ணும் என்பது உண்மை.

5)பசித்தவர்களுக்கு பசியாற்றி வைப்பதே விரதமாகக் கொண்ட, ஜீவகாருண்யம் உள்ள சமுசாரிகளுக்கு கோடையில் வெயிலும் வருத்தாது; மண்ணும் சூடு செய்யாது; பெருமழை, பெருங்காற்று, பெறும் பனி, பேரிடி, பெருநெருப்பு, முதலிய ஆபத்துகளும் உண்டாகா. அந்த ஜீவகாருண்யம் உள்ள சமுசாரிகள், ஆற்று வெள்ளத்தாலும், கள்ளர்களாலும், விரோதிகளாலும் கலங்கப்படார்கள். அரசர்களாலும், தெய்வங்களாலும் அவமதிக்கப்படார்கள். விளைநிலத்தில் பிரயாசை

இல்லாமலே விளைவு மென்மேலும் உண்டாகும்; வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியோகத்தில் கெடுதி இல்லாத மேன்மையும் உண்டாகும். சுற்றங்களாலும், அடிமைகளாலும் சூழப்படுவார்கள். துஷ்ட பிசாசுகளாலும், துஷ்ட தெய்வங்களாலும் பயம் செய்யப்படார்கள்.

**“ஜீவகாருண்யம் உள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துகளும், அஜாக்கிரத்தையினாலும், ஊழ்வினைகளாலும் சத்தியமாக வராது.”** - திருவருட்பிரகாச வள்ளலார்.

# A22 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# “அருட்பெருங்கடவுள்”

எல்லாம் வல்லவர் என்றும், எல்லாம் ஆனவர் என்றும், எங்கும் உள்ளவர் என்றும், சச்சிதானந்தர் என்றும், விளங்குகின்ற “நம் அருட்பெருஞ்ஜோதி பதி ஒருவரே உள்ளார்!!” என்பதை திருவருளால் உள்ளபடி அறிந்து கொண்டிருக்கின்றோம். அந்த அருட்பெரும் பதியைத் தவிர எவ்வுலகத்தும், எக்காலத்தும், பிறிதொரு தலைவர் இல்லை என்றும் அறிகின்றோம். அந்த ஒருவராகிய ஒப்பற்ற தனித் தலைமைப் பெரும் பதிக்கு **“ஆன்ம சிற்றணுவே என்றும் விளங்கும் உண்மைக் கோயிலாக உள்ளது”** என்றும் அறிகின்றோம். இந்த ஆன்ம சிற்றணுவாகிய சிற்றம்பலத்தே, அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் எழுந்தருளி நித்தியராய் விளங்குகின்றார். இப்படி விளங்குகின்ற அம்பலத்தரசு தானே, “எல்லா உலகத்து, எல்லா பொருளும் ஆக தோற்றியுள்ளார்” என்ற உண்மையை அவர் தயவே உணர்த்த உணர்கின்றோம். ஒன்றாகிய பதியின் தயவும், அருள் ஐந்தொழிலும் அளவு கடந்தது. ஆதலின், அவர் விளங்கும் ஆன்மாவும், அதனைச் சூழ் ஐந்தொழில் நடனமும் அளவுக்கு உட்படாத எண்ணிக்கையில், அளவுகடந்த நெடுங்காலம் விளங்குவனவாம். கடவுள் தயவினால் அன்றி, இந்த ஒன்றான அருட்பெருஞ்ஜோதிப் பதியைக் கண்டுகொள்ள முடியாது. பண்பட்ட மனத்தின் பகுத்தறிவுக்கு அப்பாலாய், இந்த அருள்ஞானம் திகழ்வதாலே, மற்ற எதனாலும் நம் பதியைக் கண்டுகொள்ள முடியாது.

புறத்தில் காணும் எந்த உயிரிலும், எந்தப் பொருளிலும், எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும் நம் பதியைக் காண முடியாது.

ஆகையால், நாம், பிறர் வடிவில், விக்கிரகத்தில், தந்திர, மந்திர, இயந்திரங்களில், பிறிதொரு உலகத்தில், பிற பொருள்களில், சக்திகளில், மற்றொன்றில், நமது பதி இருப்பதாக் கருத வேண்டாம்; பாவிக்க வேண்டாம்; "உண்மையில் அவைகளில், எங்கும் இருப்பினும், அங்கு காண்டற்கில்லை!!"

உண்மையில் வெளிப்பட்டு விளங்குகின்ற இடம், "சுத்த அருள் ஞானம் விளங்குகின்ற நம் ஆன்மாத் தளி (சிற்றம்பலம் என்கின்ற "சிரநடு விளங்குகின்ற சிற்சபை") ஒன்றேயாகும்". இந்த இடத்தில்தான் அருள் ஞான கண்ணுக்கு தோற்றி என்றும் விளங்குகின்றார். இங்கு எழுந்தருளியிருக்கின்ற ஒன்றான பதியே, "எங்கும், என்றும், யாவுமாய் விளங்குவதாய் அறிந்துகொள்ள உள்ளது."

எவ்வுயிர்க்கும் எப்பொருட்கும் உள் அகத்தும் புறத்தும் இயல் உண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்

"மெய்ப்பொருளாம் சிவம் ஒன்றே என்று அறிந்தேன்!!" நினக்கு விளம்புகின்றேன்! மடவாய், நீ கேட்கின்றாய் மீட்டும்

இப்பொருள் அப்பொருள் என்றே இசைப்பது என்னே?! பொதுவில் இறைவர் செயும் நிரதிசய இன்ப நடந்தனை நீ

பப்பறவே காணுதியேல், அத்தருணத்து எல்லாம் பட்டநடு பகல் போல வெட்டவெளி யாமே!! - திருவருட்பா

நம் ஒன்றான சிவபதி, எவ்வுயிராயும், எப்பொருளாயும், எந்த ஒரு அணுவாயும் உண்ணின்று விரிந்துள்ளார். அப்படி நிற்பவர், "சத்தாகிய இயற்கை உண்மையையாயும், சித்தாகிய இயற்கை விளக்கமாயும், இன்பமாகிய ஆனந்த நடனம் புரிகின்றவராயும் உள்ளார்". அதாவது எந்த இடத்தும், அருட்பெருஞ்ஜோதி பதி, ஆனந்த நடனம் சதா புரிந்து கொண்டேதான் இருக்கின்றார். இப்படி யாவுமாய் நின்றாடும் நம் பதியின் நடன உண்மையை, அகத்தளியிலன்றி ("ஆன்ம சிற்சபை") எங்கும் காண்டற்கில்லை!! இப்பொருள் என்றும், அப்பொருள் என்றும், இவர் என்றும், அவர் என்றும், இதுவென்றும் அதுவென்றும், சொல்லப்படுகின்ற பலவும், என்ன?! என்ன?! நம் ஆனந்தப் பதியின்

அருட்பெருஞ்ஜோதி நடனமே அல்லாது வேறொன்று இல்லை. அந்த ஆனந்த நடனத்தின் தோற்றமே எங்கெங்கும் காணப்படுகின்றன. இயற்கைக் காட்சிகளிலே, வண்ண வண்ண மலர்களிலே, மண்ணியற் பொருள்களிலே, கருவினிலே, சக்திகளிலே, வெளிப்பட்டு இலங்குவது, எல்லாம் ஆனந்த நடனத்தின் மிக நுண் கூறுகளே. அன்றியும், உயிர்களின் புறத்தோற்றத்திலே, அக அறிவிலே, குணத்திலே, செயலிலே, அனுபவத்திலே, அவ் ஆனந்தத்தின் சிதறல்களே காண்கின்றோம்.

## "அம்பலக் காட்சி"

"அருட்பெருஞ்ஜோதி ஆனந்தத் திருநடனப் பெரும் செயலின் உண்மை, இதுசமயம் அம்பலத்தில் இருந்து காண்கின்றோம்". இந்த உண்மையை முன்பு கண்டுகொண்டோம் இல்லை. எனினும், இந்த அற்புதத் திருநடனம் அனாதி காலம் தொட்டு நடந்து கொண்டே தான் இருக்கின்றது. இக்காட்சியை உண்மையாகக் கண்டு, நித்திய வாழ்க்கையில் பயன் கொண்டு, தயானந்த மயமாய்த் திகழச் செய்தல் பொருட்டே, நம்மை இதுவரைத் திரை மறைவில், திரோபவம் செய்து, "உள் வளர வாழ்வித்து கொண்டு வந்துள்ளார்."

## "அகப்பரிணாமம்"

மண்ணோடு மண்ணாய்க், கல்லோடு கல்லாய்ப், புதைவுற்றுக் கிடந்த நாமாகிய ஆன்ம சிற்றணுவைச் சுட்டி அறிதற்கும் கூடாது இருந்து இருந்தோம். அதிலிருந்தே, இந்த பெரிய இன்ப அனுபவத்தை வழங்கும் பொருட்டு, முதலில் ஓரறிவு முதலாம் புலனறிவைத் தழைக்கச் செய்ய, ஒரு புல்லின் கருவில் சேர்த்தார். அதற்கு மேல் எத்தனையோ கோடி பிறவியில் சேர்க்கப்பட்டு, புலன் அறிவு வளர்ந்தது; மன அறிவு தழைத்தது; அது நிரம்பி இஞ்ஞான்று, இந்த ஆன்ம ஞானமும் வந்து விளங்குகின்றது. இவ்வளவு நெடுங்காலமாக அணுத்துவமாய் அருகிக் கிடந்தார் நம்பதி! "**அது நாமாய் இருந்த உண்மையும் இன்றே அறிகின்றனம்.**" இங்ஙனம் அளவறிய நெடுங்காலம் அணுத்துவமாய் இருந்த "நாம்" என்பது, அந்த "அருட்பெருஞ்ஜோதியாய் வெளிப்படுகின்றார்." இந்த வெளிப்படல் "அனக நிறைவே" அன்றி வேறல்ல!! இனி அருட்பெருஞ்ஜோதிபதி அனக நடனத்தை அனைத்துலக மக்களும் கண்டுகொள்ளச் செய்வார்.

சிற்றணுச் சிற்றம்பலத்தே இருந்தாடிய சிவபதி, இதுகாறும் தன் உண்மையைக் காட்டாது, ஆனந்த நடனம் புரிந்து கொண்டே இருந்தார். அந்த அம்பலவாணனைக் கண்ட ஆன்மாக்கள் பலரும், தவம் புரிந்து, பல வேறு சித்திகளையும், பதப் பிராப்திகளையும் பெற்று மகிழ்ந்தனர். பதியோடு கலந்து ஒடுங்கின பல ஆன்மாக்கள்; அவை மேற் பிறவி வேண்டாது ஒன்றிக் கிடந்தனர்; மற்றும் சிலரோ, ஆன்மாலயத்து இறைவனை, புறத்தே கண்டு வழிபட, அற்புத சிற்ப ஆலயங்களையும், மூர்த்தி, தல, தீர்த்தங்களையும், விழா வைபவ கொள்கை கோட்பாடு முறைகளையும், பக்தி மார்க்கத்தையும் ஏற்படுத்தினார்கள். அக ஒழுக்கம் குன்றி, புற நாட்டமும் - வாழ்க்கை போராட்டமும், மிகுந்த இந்த சமயத்தில் நமது சிற்சபேசர் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி பதியாய், இம் மார்க்கத்துறும் யாவரும் கண்டுகொள்ள வெளிப்படுகின்றார். இன்று அனகமுறுகின்ற நம் பதி, முன்போல் அகத்தே மறைந்திருந்து ஆடிக்கொண்டே உலகையெல்லாம் ஆட்டுபவர் அல்லர்! அனக நடனத்தால், அணு நிலை கடந்து, அகஒளியே - அருட்பெருஞ்ஜோதியாய், அதுவே புற உடம்பாய் ஆக்கிக்கொள்ள செய்யவுள்ளார்.

## "உடலின் அவசியம்"

மண்ணான கன்ம உடல், பூத அணுக்களின் கூட்டுறவால் ஆக்கப்பட்டு, ஆன்மாவைச் சூழ்ந்து கொண்டே உள்ளதுமாம். இவ்வுடல் ஆதியிலிருந்தே மலவுடம்பாயே இருக்கின்றது. இந்த மலஉடம்பின் சேர்க்கையால்தான், "ஆன்ம வடிவாகிய நாம்" புலனறிவு விளக்கம் பெற்றுக் கொண்டே வந்துள்ளோம். ஒவ்வொரு பிறப்பினூடும், தேகம் இல்லாமல் நாம், (ஆன்மாவாகிய நாம்) விளங்க முடியாது என்று அறிகின்றோம். ஆனால், இத்தேக கவசம், நமது பரிபாக நிலைவரை உண்மையை காட்டாத திரை மறைப்பாக இருக்கின்றது. இதனால் தான், இம் மறைப்பு மலமாக உரைக்கப்பட்டு வந்தது. இம்மலத்தின் இன்றியமையாமையும் இப்பொழுது கண்டு கொள்ளுகின்றோம். கடவுள் அருள் தானே இதுகாறும், இம் மலம் என்னும் இழிகுணப் பொருளாய் உண்மையை மறைத்துக் கொண்டு சூழ்ந்ததாக அறிகின்றோம்.

ஆன்மாவைச் சூழ்கின்ற தேகம், பிரபஞ்ச பூதாணுக்களின் சேர்க்கையால் ஆனது. இது மாயா தேகம்; அதாவது, தோன்றுவதும் அழிவதுமாய் உள்ளது. பூதாணுக்கள் அழிவனவல்ல; அவற்றால்

ஆகும் தேக வடிவங்களும், பிற பொருள்களும், அவ்வணுக்களின் கூட்டுறவால் தோன்றியும், பிரிவால் சிதைந்தும் முன்னிலையுறுவனவாம். இப்படி நிலையான அணுக்களைக் கொண்டு மாய விளையாட்டு இயற்றுவது எது எனில், கடவுளின் திருவருளேயாம். இவ்வருளால் விளங்குகின்ற அந்த மாயா தோற்றமும், நிகழ்ச்சிச் செயலும், அபக்குவத்தே பொய்யென மயங்க செய்தன; அவையே, பக்குவத்தே, மெய்யருட் செயலால் அறிந்துகொள்ளவும் செய்தனவாம். இவ்வுண்மையைத் தான் முன்பு மாயா தேகம் அழிந்து ஒழியாது, பின்னர் அதுவே அருள் வண்ணமாய்ச் சூழ்ந்து உதவுவதாக மொழியபட்டதாகும். “தேகமும், போகப் பொருளும், கடவுள் அருளின் கூறு” என்பதே அனுபவத்தில் விளங்குவது.

அஞ்ஞான அந்தகாரத்தில் மலமென வெறுத்து ஒதுக்கப்பட்டதும், அப்படி அதனை ஒழித்தால் அன்றி பேரானந்தப் பெருவாழ்வு பெற முடியாது என்று கருதி கிடந்ததும், அந்த பரம்பொருள் நிலைக்கும், இந்த மாயா உலகுக்கும் இடைப்பட்டுக் கிடக்கும் பசு (ஜீவன்), திருவருளால் மேலேறும் போது, பதியோடு ஐக்கியமும், பாச நீக்கமும் உண்டாகும் என்றும் சித்தாந்தம் செய்யப்பட்டிருந்தது. அந்நிலை உண்மை, சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்பட்டுவிட்டது; அஞ்ஞான அந்தகாரம் ஒழிந்தது. அருட்பெருஞ்ஜோதி உலகிலேயே, நம் தனித்தலைமைப் பெரும் பதியே, நம் ஆன்மப் பசுவாய், அரும்பி இருந்ததாகவும், அகம் நிறைந்த அருட்ஜோதி மணத்தோடு கட்டவிழ்ந்து (அசுத்த மல உடம்பையே) சுத்த அருள் ஜோதி மலர் உடம்பாக விளங்குவதாகவும் அறிகின்றோம்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## A23 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## கடவுள் ஒருவரே!!

அவர், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆவார்!!

# எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே!!

# அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!!

# கருணாநிதியாகிய கடவுளே!

# உயிரிற் கலந்த பெருங்கருணைப் பெருமானே!

# அருட்பெருஞ்ஜோதித் தனித் தலைமைக் கடவுளே!

# பெருங்கருணைப் பெரும்பதியாகிய கடவுளே!

# களைப்பறிந்துதவும் கருணைக் கடலாகிய கடவுளே!

#தாயினுஞ் சிறந்த தயவுடைக் கடவுளே!

# ஓ!! ஒப்புயர்வின்றி விளங்குகின்ற ஒருவரே!!

# சத்திய ஞானானந்த தனித் தலைமைக் கடவுளே!!

# எல்லாம் வல்ல இயற்கை யுண்மைக் கடவுளே!!

# எல்லாமுடைய இயற்கை விளக்கக் கடவுளே!!

# எல்லாமாகிய இயற்கை யின்பக் கடவுளே!!

# அகண்ட பூரணா னந்தராகிய அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே!!

# அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய பூரணரே!!

# சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே!!

# சுத்த சன்மார்க்க லட்சிய சத்திய ஞான்க் கடவுளே!!

# தனித் தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுளே!!

# அறிவாரறியும் வண்ணங்களெல்லாமுடைய பேரருட் பெருஞ்ஜோதிப் பெருந்தகைக் கடவுளே!!

# இயற்கைத் தனிப்பெருங் கருணைத் தனிப்பெரும் பதியாகிய தனித் தலைமைக் கடவுளே!!

# அருட்பெரு வெளியின் கண்ணே அருட்பெருஞ்ஜோதி வடிவராகி விகற்பமில்லாது விளங்குகின்ற மெய்ப் பொருட் கடவுளே!!

# எல்லாமானவராயும், ஒன்றுமல்லாதவராயும் எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற தனித் தலைமைக் கடவுளே!!

# எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!!

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

ஆண்டவருக்கு வந்தனம்

-திருவருட்பிரகாச வள்ளலார்

# A24 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "அனக வடிவம்"

"அகம்" என்பது "உள்" என்ற பொருள் கொண்டதாம். எல்லாவற்றிற்கும் உள்ளீடாய் இருந்து, யாவுமாய், எவருமாய்த் தோன்றிப் புறப் பேருலகம் முழுமையாய் விளங்குவதும், விளங்கச் செய்து கொண்டிருக்கின்றதும் எதுவோ அதுவே "கடவுள்" எனப்படும்.

**அளந்து அறிதற்கரிய புறப் பெருநிலை "கட" எனவும், அறிந்து உணர்தற்கரிய "அக இயல் நிலை "உள்" எனவும்" இருந்து கொண்டிருப்பதை, தெரிந்து கொண்டு இருக்கின்றான் மனிதன்.**

இந்த "மனிதனின் அக நிலைதான், அழியாத தெய்வீகக் கடவுள் இயல் ஒளி அணுவாய்", இவ் உடல் - உயிர் வாழ்வுக்கு முழு முதல் துணையாய், "ஆன்ம அணு எனத் தலை நடுவுள்ளிருந்து ஒளிர்கின்றதாம்".

இவ் அகச் சிற்றுருவாய் இருக்கின்ற ஆன்மா, இப்பக்குவ மனித வடிவச் சேர்க்கையால் தான், இது சமயம் தனது, "அக - புற இயல் உண்மையை" அறிந்து கொண்டுள்ளதாம்.

அக அறிவு உணர்வும், புறத் தோற்ற விளக்கமும் கூடி விழிப்பு நிலையுடன் திகழும் இடம், இரு கண் "புருவநடு இடமாகும்".

இந்த இடத்தில், "அருள் அல்லது தயா ஒருமையுடன்" இருக்கும் ஒருவன், "கடவுள் விளக்க நிலையைக்" கண்டு அடைய கூடியவனாய் இருக்கின்றான்.

இந்நிலை அனுபவத்துடன் விளங்கும் ஒருவனே, அகமும் புறமும் இணைந்த ஒருவனாய், பக்குவ மனிதனாய் இருக்கின்றான்.

வேறு விதமாய்க் கூறின், கடவுள் தானே, அகத்தில் அணுத்துவமாயும், புறத்தில் அகண்டமாயும், இம் மனிதனில் இருநிலை அனுபவமும் வெளிப்படக் கொண்டு விளங்குவதாம்.

இக்கடவுள் நிலைதான், அகம் மாத்திரம் அல்லாத, புறம் மாத்திரம் அல்லாத, இரண்டும் ஒன்றென இணைந்த "அனக நிலை" ஆகும்.

ஆக, "மனிதனின் உண்மைநிலை, கடவுளின் அனக நிலையாகவே உள்ளதாம்"

இவ் உண்மையை அறியாதார், "உடல் வடிவையே, மனிதனின் இயல் வடிவமாகக் கருதி கொள்கின்றனர்".

மறுபுறம், ஆன்ம ஞானம் பெற்ற வேதாந்தியும் கூட, "தன்னை நித்திய ஆன்ம வடிவினன் என்றும், மாயா தேக வடிவினன் அல்லன்" என்றும் கூறிக் கொள்ளுகின்றான். இதுவும் சரியன்று.

ஆன்மா, நித்தியக் கடவுள் வண்ணம் ஆனது என்பது உண்மையே என்றாலும், அந்த ஆன்மாவுக்கு, கடவுள் விளக்க அனுபவம் கூடித்திகழும் இம் மனித வாழ்வுநிலை இன்றியமையாததாக இருப்பதாம். எனவே, இவ் அனக நிலையே வாழ்வுடன் விளங்குவதாகும்.

மேலும், அணுத்துவ ஆன்ம நிலை அகம் மாத்திரமாய் இருக்க, இம்மனித அனக நிலையோ, அகம் புறம் நிறைந்த கடவுள் விளக்கம் கொண்டு விளங்குகின்றதாம்.

அன்றியும், இவ் "அனகம்" என்ற சொல்லே கூட, "அன் + அகம்" எனப் பிரித்துக் காணும் போது, கடவுளின் அடி முடி சுட்ட வந்த தமிழ் மொழியின், முதலும் ஈறும் ஆகிய, "அ, ன்" அகத்துடன் இணைந்து நின்று அனுபவப்படுத்துகின்றதாம்.

எனவே, மனிதன் இந்த அனக வடிவினனாக இருந்து, தன் அகமும், புறமும் நிறைந்த அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் அனுபவத்தோடு வாழ்கின்றவனாகின்றான்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## A25 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "அடி உதவுவது போல் அண்ணன் தம்பியும் உதவான்"

### "அடி"(புறப்பொருள்);

அடி என்பது ஒரு மனிதனுக்கு, புறவுலகில் ஏற்படுகின்ற இன்ப துன்ப அனுபவங்கள் ஆகும்.

இது உண்மை - இது பொய்; இது நல்லது, இது கெட்டது என்ற தெளிவு ஒருவனுக்கு அவ்வளவு எளிதாக வந்துவிடுவதில்லை.

பொய்யையே மெய்யாகவும், தீமையானதையே நன்மை எனவும் கொண்டு வாழ்கின்ற ஒருவன் உலகில் பலகாலும் (அடி) பட்டுப் பட்டுத் தேறிதான் உண்மை நிலைக்கு வருகின்றான்.

அவனுக்கு உலக அனுபவமே நல்ல ஒரு பாடசாலையாக உள்ளது.

பொறி புலன்கள் வழி அனுபவிக்கின்ற இன்பங்கள் ஆரம்பத்தில் சந்தோஷத்தை தருவதானாலும், முடிவில் அது நீங்காத பெருந் துன்பத்தையே வந்துவிடுகிறது.

துன்மார்க்கத்தில் சென்று அல் வழியில் இன்பம் துய்க்கும் ஒருவனுக்கு எவ்வளவு அறிவுரை சொன்னாலும் அவன் ஏற்பதில்லை. இறைவனும் அவன் செல்லும் தீய வழியிலே முதலில் செல்லவிடுத்து, பின்னர் துன்பத்தைக் கொடுத்து, அவனே தன் சொந்த அனுபவத்தில் நன்மை தீமைகளை உணரும்படி செய்து, திருத்தி நல்வழிப்படுத்துகின்றார்.

ஓர் உதாரணம்;-

பொழுது போய்விட்டது; சூரியன் மறைந்து விட்டான்; இருள் சூழ்கின்ற நேரம்; ஒரு தாய் தன் ஆறுமாத குழந்தையை வீட்டின் தாழ்வாரத்தில் தரையில் படுக்க வைத்துள்ளாள்; அந்த குழந்தைக்கு எதிரே மூன்றடி தள்ளி ஓர் அகல் விளக்கை ஏற்றி வைத்துள்ளாள். (அந்த காலத்தில் மின் விளக்குகள் இல்லை.) குழந்தையை வெளிச்சத்தில் குப்புற படுக்க வைத்துவிட்டு வீட்டு வேலைகளை செய்துக் கொண்டிருக்கின்றாள். குழந்தை, தனக்கு முன்னால் பிரகாசித்துக் கொண்டுள்ள விளக்கை உற்று உற்று நோக்கிக்கொண்டு இருக்கின்றது. அந்த விளக்கைத் தொடவேண்டும் என்று ஆசை எழுகின்றது. அதனால் அவ்விளக்கை நோக்கி கையை நீட்டியபடி முன்னோக்கி நகர்கின்றது. இதை கவனித்த தாய் அக் குழந்தையை சற்று பின்னுக்கு இழுத்துவிட்டு மீண்டும் தன் வேலையை கவனிக்கின்றாள். குழந்தையின் ஆவல் இன்னும் அதிகமாகி, அவ்விளக்கைத் தொட முன்னோக்கி மீண்டும் நகர்ந்து வருகின்றது; இதைப் பார்த்த தாய் குழந்தையை ஐந்து அடி தூரம் இழுத்து வைத்துவிட்டு மீண்டும் தன் வேலையை கவனிக்கின்றாள். குழந்தை சும்மா இருக்குமா? மேலும் மேலும் அதன் ஆசை அதிகரித்து, விளக்கை நோக்கி நகர்கின்றது. தாயானவள், ஐந்தடி தூரம் இழுத்துவிட்ட தைரியத்தில் சற்று கவனக்குறைவாக இருந்துவிட்டாள்.

அந்த சமயத்தில் குழந்தை ஆவலோடு விளக்கின் அருகில் சென்று, தன் விரலால் விளக்கைத் தொட்டது. தீயில் விரல் சுட்டதுதான் தாமதம்; விரலை சட்டென்று பின்னுக்கிழுத்து வலியால் அழ ஆரம்பித்தது. சற்று நேரம் கழித்து அழுகை நின்றுவிட்டது.

இப்போது தாய் தனது குழந்தையை விளக்கின் அருகிலேயே கிடத்திவிட்டு தனது வேலையை கவனிக்கத் தொடங்கினாள். இப்பொழுது அக்குழந்தை விளக்கைப் பார்த்துக் கொண்டிருந்ததே ஒழிய, அதைத் தொடவேண்டும் என்ற ஆவலே இல்லை. தொட்டால் சுடும் என்ற அனுபவம் அக்குழந்தைக்கு ஏற்பட்டுவிட்டது. அதைத் தொடவேண்டும் என்ற எண்ணம் அறவே அற்று விட்டது.

அதுபோல்தான் மனிதன் நன்மை, தீமை, உண்மை, பொய் என்பதை தன் சொந்த அனுபவத்தில் பட்டுப்பட்டு தேறி, பின்னரே அக உண்மையைக் கண்டறிய முயற்சிக்கின்றான்.

எனவே மனிதனுக்கு புற உலக இன்ப துன்ப அனுபவங்களே ''அடி''யாக உள்ளது. இதைத்தான் ''அடி உதவுவது போல் அண்ணன் தம்பியும் உதவான்'' என்று சான்றோர்கள் கூறியுள்ளார்கள்.

### ''அடி''(அகப்பொருள்);

அடி என்பது ஆண்டவருடைய திருவடி ஆகும்.

அருணகிரிநாதர் பாடுகின்றார்;-

''அடியைக் குறியாது அறியாமையினால் முடியக் கெடவோ முறையோ முறையோ!!''

### ''திருவடி என்பது என்ன?''

அது மனிதனுக்கு உள்ளதுபோல் ஐந்து விரல்களைக் கொண்ட காலா?!

அப்படி நினைப்பது தவறு! அறியாமை!

அகண்ட வான் பெருவெளி முற்றும் நிறைந்த கடவுள் உண்மை ''அன்பு இருப்பாக'' அனாதி காலமாய், ஆதி அந்தம் இல்லாத நித்திய இயற்கை வஸ்துவாய், ''சத்துப் பொருளாய்'' என்றென்றும் இருந்து வருகின்ற ஒன்றாகும். இதுவே கடவுளின் ''முடி'' எனப்படும்.

**இந்த அகண்டாகாச வான்பெருவெளி முற்றும் நிறைந்த கடவுள் உண்மை, தன் முழு உண்மையை "அருள் உணர்வாக" ஆன்மாவில் வெளிப்படுத்திக் கொண்டு விளங்குகின்றார். இந்த அக ஆன்மாவிற்குள் இயற்கையாய் பொருந்தியுள்ள "அருள் ஒளி உணர்வே கடவுளின் திருவடி" ஆகும்.**

இந்த கடவுள் திருவடியாகிய அருள் ஒளி வடிவைப் பற்றி வாழ்கின்றபோதுதான் ஓர் ஆன்மாவுக்கு பிறவித் தளைகள் நீக்கப்படுகின்றது.

**திருக்குறள்;**

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் "அடி" சேராதார்.

"ஆணவம், மாயை, கன்மம்" ஆகிய மும்மலம் நீக்குகின்றது.

"கடவுள் நிலை அறிந்து அம்மயமாகி பேரின்பப் பெருஞ்சுக வாழ்வில்" நீடூழி நிலவுகின்றது.

இதைத்தான் "அடி உதவுவது போல் அண்ணன் தம்பியும் உதவான்" என்று மெய்ஞ்ஞானிகள் உரைத்துள்ளனர்.

இந்த மனித தேகத்தில், சிரநடுவில் விளங்கும் சிற்சபையில் தான் ஆண்டவருடைய திருவடி "அருட்பெருஞ்ஜோதியாக - தனிப்பெரும் கருணையோடு" சதா விளங்கிக் கொண்டிருக்கின்றதாம். இந்த "அருள் திருவடி விளங்குகின்ற சிற்சபை" வந்தடைந்தால், சகல நன்மைகளும் பெற்றுக்கொள்ளலாம் என்கின்றார் வள்ளற்பெருமான்.

**திருக்குறள்;**

"மலர் மிசை ஏகினான் மாண் "அடி" சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

மலர் = ஆன்மாவாகிய தாமரை

நீடு வாழ்வார் = மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்வார்.

எல்லோர்க்கும் தாய், தந்தை, அண்ணன், தம்பி முதலான ஆப்தர்களால் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ அதற்குக் கோடிக் கோடி பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம் என்று "திருவடி" விளங்கும் ஆன்ம சிற்சபையைக் குறிப்பிடுகின்றார் வள்ளலார்.

# A26 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "உண்மையைத் தேடி வேண்டியதில்லை!!"

உண்மை எப்போதும் ஒன்றாகவே உள்ளது. அது இரு கூறாக இல்லை. இருக்கவும் முடியாது.

மனிதன் வேறு, கடவுள் வேறு, என உண்மை இரண்டாக இல்லை.

"இருப்பது ஒன்றே! அதுவே எல்லாமாய் இருக்கின்றது!!" என்பதே மெய்ஞ்ஞானிகளின் சத்திய வாசகம்.

**"ஒன்றென்று இரு!! தெய்வம் உண்டென்றிரு!!"**

- பட்டிணத்தடிகள்.

**"ஒன்று" எனக் காணும் உணர்ச்சி என்று உறுமோ?!"**

- வள்ளலார்.

**"ஒன்றே"!! "சிவம் தான்"!! என அறிகின்ற அறிவே தகும் அறிவு!**

- திருவருட்பா.

மனிதன் தன்னைக் கடவுளுக்கு அன்னியமாய் இருப்பதாக கருதுவது அஞ்ஞான அபக்குவ நிலை.

**"கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் வேண்டும்"**

- வள்ளலார்.

"தேகமே நான்" என கருதிக்கொண்டு, புற உலகில் கடவுளை தேடிக்கொண்டிருப்பது முறையல்ல.

அதே போல் உலக வாழ்வை துறந்து, உடலையும் உயிரையும் வெறுத்து, ஒதுக்கி உதறித் தள்ளிவிட்டு யோகத்தில் மிக ஆழ்ந்து போய், உள்ளே ஒடுங்கி சமாதி நிஷ்டை கூடுவதும் சரியன்று.

உண்மை எங்கும், எப்போதும், ஒருபடித்தாய் இருந்தபடியே இருந்துக் கொண்டிருக்கின்றது.

உண்மை எங்கும் நிறைந்திருந்தாலும், அந்த உண்மையை உள்ளபடி உணருகின்ற "அக மையம்" உன்னிடத்தேதான் உள்ளது.

அந்த அகமையம்தான் "அறிவு" என்றும் "மெய்யுணர்வு" என்றும், "ஆன்மா" என்றும், "உண்மை மனிதன்" என்றும் கூறப்படுகிறது.

அந்த "இயற்கை உண்மை" ஆகிய கடவுள், தன்னைத்தானே அனுபவிக்க வேண்டி, அனாதியே ஏற்றுள்ளதுதான் இந்த "ஆன்ம சிற்றணுத் தோற்றம்".

ஆகவே ஆன்மாவைக் கூட "தனது" என்று ஒருவரும் உரிமை கொள்வதற்கில்லை. "அது கடவுளே!"

இந்த உண்மையை ஒருவன், புருவ நடு மனதை நினைப்பு மறப்பற நிலை நிறுத்தி, அகமுகமாக ஆழ்ந்து, உள்நோக்கிப் பார்த்துப் பழகி, சிரநடு சிற்றம்பலத்தில் நிலைத்திருக்க, "உண்மையை அதுவாக இருந்து உணரலாம்"!!!

மற்றபடி அந்த அகப்பெருவெளிக்குள் அயலார் யாரும் உள்ளே புக முடியாது. அயலாக இருந்து உள்ளே புக முயற்சித்தால் உள்ளொளியில் ஒடுங்கி சூன்ய நிலைக்கு ஏகவே நேரும்.

"உண்மையைத் தேட வேண்டியதில்லை!!" சத்விசாரத்தால் உண்மையை ஓர்ந்துக் கொள்ள வேண்டும்.

அதாவது "தெளிவு" செய்துக்கொள்ள வேண்டியதே நாம் செய்ய வேண்டுவது. அது இங்கேயே இப்பொழுதே சாத்தியம் தான்.

அகண்ட வான் பெருவெளி முற்றும் அனாதி காலமாக இருந்து வருவது "இயற்கை உண்மை" என்கின்ற அன்பு இருப்பு ஆகிய சத்துப் பொருள்.

அதையே வள்ளலார், "விளங்குபவராய் உள்ளவர்" என்கின்றார்.

அவரே "தன்னைத்தானே அனுபவிக்கும் பொருட்டு, சச்சிதானந்த அனுபவ வாழ்வேற்க, "அருள் உணர்வாய்-இயற்கை விளக்கமாய்", மனிதனின் சிரநடு ஆன்மாவில் விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

சிரநடு அருள்ஒளியாய் விளங்கும் அவரே,

அகமிருந்து அனகமாக,

| | |
|---|---|
| அகம் | - ஆன்மா |
| அப்புறம் | - ஜீவன் |
| புறம் | - மனம் |
| புறப்புறம் | - பஞ்சேந்திரியங்களைக் கொண்ட உடல் |

என விரிந்து மனிதனாக விளங்கிக் கொண்டுள்ளார்.

இந்த ஆன்மக் கடவுள் நிலையையே வள்ளலார், "உள்ளவராய் விளங்குபவர்" என்கின்றார்.

மேலும், இறைவனை "இரண்டு படாத பூரண இன்பினர்" என்கின்றார்.

அவர் இத்தருணத்தில், சுத்த சன்மார்க்கத்தில் மனிதனில், "தன் அருட் பூரணத்தை வெளிப்படுத்திக் கொண்டு", அசுத்த பூத உடலையே, சுத்த ஒளியுடலாக மாற்றிக்கொண்டு, திரிதேக சித்தியொடு, மரணமிலாப் பெருவாழ்வில் மனிதனை வாழவைக்க உள்ளார்.

## A27 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை "சிற்சபை தியானம்"

**முதற்படி;**

முன்னிலையில் அகல் விளக்கு தீபத்தை ஏற்றி வைத்து, அந்த தீபத்தில் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை பாவிக்க வேண்டும்.

"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"

என்ற மகா மந்திரத்தை, தீபத்தையே உற்று நோக்கிய வண்ணம் ஒரு 10 நிமிடங்கள் ஜெபிக்கலாம்.

**இரண்டாம் படி;-**

இப்பொழுது மனதை புருவமத்தியில் நினைப்பு மறப்பு அற்று நிலை நிறுத்த வேண்டும்.

இதய ஸ்தானத்தில் இயங்கும் மனம் நம்மை நாளும் ஆயிரமாயிரம் எண்ணங்களால் அலைக்கழிக்கின்றது.

இந்த மனத்தால் ஆன்மானுபவமும் சிவானுபூதியும் பெறமுடியாது.

எனவே இம் மனத்தை புருவமத்தியில் ஓர்மையோடு நிலைத்திருக்கச் செய்தால் உண்மையை சிறிது சிறிதாக உணரலாம்.

“தேகமே நான்” என்ற பொய்யான மாயா உணர்வில் நெடுங்கோடி காலமாக பழகிவிட்டிருந்தபடியால், மனம் முதலில் புருவமத்திக்கு வர இயலாது.

இதற்கு ஓர் உபாயம் உள்ளது;

ஒரு சிறு தென்னங்குச்சியை கொண்டு புருவமத்தியில் (பொட்டு வைக்கும் இடத்தில்) 30 விநாடிகள் அழுத்தம் கொடுக்க, சிறு வலி ஏற்படும். இப்போது மனம் எளிதாக புருவமத்தியில் நிலைக்கும்.

புருவமத்தியிலிருந்து தேக உணர்வுக்கு கீழிறங்கும் தோறும் இப்படி குச்சியால் அழுத்தம் தரலாம்.

இப்போது புருவமத்திக்கு உள்ளே (ஒன்றரை அங்குலத்திற்குள்ளே) ஒரு சிறிய, பிரகாசமான, வெண் தாமரைப்பூ மலர்ந்திருப்பதாகவும் அதன் நடுப் பொகுட்டில் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் “தீபச்சுடர் வடிவில்” விளங்குவதாகவும் பாவிக்கவும்.

அவர் “தனிப்பெருங்கருணையே” திருமேனியாகக் கொண்டு ஐஞ்சக்தி - ஐந்தொழிலால் இப்பேருலகப் பெரும் பிரபஞ்சத்தை விளங்கச் செய்துக் கொண்டே இருப்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படி தியான நிலையில் இருந்துக் கொண்டுதான் திருவருட்பா பாடல்களை ஓதிவரல் வேண்டும். இப்படி ஒரு 15 அல்லது 20 நிமிடங்கள் இரண்டாம்நிலை தியானம் செய்யலாம். நேரத்தை விருப்பத்திற்கு ஏற்றவாறு அதிகரித்துக் கொள்ளலாம்.

**மூன்றாம்படி ;-**

இப்போது பாவனை கடந்து “உண்மை நிலைக்கு” வரவேண்டும்.

முதலில் “நான் யார்?!” என ஆன்ம விசாரம் செய்ய வேண்டும்.

இந்த தேகம் நானாக இருக்கின்றேனா?!

எண்ண அலைகள் சதா எழுகின்ற மனம் நானாக இருக்கின்றேனா?!

இதய ஸ்தானத்தில் இயங்கும் உயிர் நானாக இருக்கின்றேனா?

எது நானாக இருக்கின்றேன்?! என்றால், இவைகள் எல்லாம் தத்துவங்களே ஒழிய நாமல்ல எனத் தெளிதல் வேண்டும்.

பின், “யார் நான்?!” என்ற விசாரணையில் மூழ்க வேண்டும்.

புருவமத்தியில் மனதை ஓர்மையோடு நிலைநிறுத்தி அகமுகமாக உள்நோக்கி ஆழ்ந்து கவனித்தால் **"அறிவு என்கின்ற ஆகாச வெளி"** நாமாக இருப்பதை உணரலாம்.

இதையே "ஆன்மா" என்கின்றோம்.

இது, **"நித்திய இருப்புணர்வு கொண்ட அறிவு ஆகாய வெளியாக"** அனுப்பப்படும்.

இதுவே, "சிற்றம்பலம் என்றும் சிற்சபை என்றும் சிதாகாசம்" எனவும் போற்றப்படும்.

இந்த "சிற்சபைதான் நாமாக இருக்கின்றோம்!!"

இந்த சிற்சபைக்குள்ளேதான் எல்லாம் வல்ல கடவுள், "தனிப்பெருங்கருணை" எனும் "திருவருட் திருமேனி" கொண்டு அனாதி காலமாய் ஆனந்த நடனம் புரிந்து வருகின்றார்.

"உயிர் அனுபவம் உற்றிடில், அதனிடத்தே ஓங்கும் அருள் அனுபவம் உற்றிடும்" என்பது வள்ளல் வாசகம்.

முதலில் ஆன்மானுபவம் பெற முயற்சிப்போம்.

## A28 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "இரண்டற்ற இன்ப வாழ்வு"

இரண்டற்ற இன்ப வாழ்வை விளக்கும் ஒரு சிறு கதை;-

இயற்கை வளம் பொருந்திய ஒரு சிற்றூர். அவ்வூருக்கு 4 மைல்களுக்கு அப்பால் ஓர் அழகிய பூஞ்சோலை. அதற்குப் பக்கத்தில் தெளிவான நீர் நிறைந்த அழகிய குளம். குளத்துக்கு பக்கத்தில் துறவிகள் வசிக்கும் ஆஸ்ரமம் ஒன்று இருந்தது. ஆஸ்ரமத்துக்கு அருகில் 150 வருடம் பழமையான மிகப்பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அது மிக உயரமாகவும், ஒரு ஏக்கர் நிலப்பரப்பளவு விழுதுகள் விட்டு விரிந்து பரந்து வியாபித்திருந்தது. அது பல கிளைகளைக் கொண்டு மிக அடர்த்தியாக இருந்தமையால் சூரிய ஒளி கீழே விழாது. அந்த மரத்திற்குக் கீழே சுற்றிலும் பாறையாலான இருக்கைகளை அமைத்திருந்தனர் துறவிகள். காலையில் மரத்திற்கு கீழ் அமர்ந்து ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டிருப்பர்.

அந்த ஆல மரத்தில் அனேக விதமான பறவைகள் வசித்து வந்தன. பசியெடுக்கும் போது வெளியே சென்று இரை தேடிய பின், மீண்டும் இம் மரத்திற்கு வந்துவிடும். எல்லாப் பறவைகளும் உல்லாசமாய் ஆனந்தமாய் கூவிக்கொண்டிருக்கும்.

அந்த பறவைகளின் கூட்டத்திலே ஒரு வித்தியாசமான பறவை வாழ்ந்து வந்தது. அப் பறவை மற்றவற்றைப் போல் கூவிக்கொண்டிருப்ப தில்லை. எப்போதும் சாந்தமாக, அமைதியாகவே இருக்கும். மற்ற பறவைகளுடன் சேராமல் தனிமையில் இன்பம் கண்டிருக்கும். உள்ளத்தில், உண்மையும் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த ஒரு துறவி போல் இருக்கும்.

ஒருநாள் பொழுது விடிக்கின்ற நேரத்தில் அந்த பறவைக்கு இதுவரை எப்போதும் கேட்டிராத இனிமையான ஓர் புதியதொரு பறவையின் குரல் கூவக் கேட்டது. அந்த இன்னிசை நாதத்தில் மயங்கியது; தன்னை மறந்தது. சற்று நேரத்திற்கு பின் சகஜ நிலைக்கு திரும்பியது. இன்னும் அந்த புதிய பறவையின் இன்னிசை நாதம் வந்துக்கொண்டே இருந்தது. அந்த ஓசை எங்கிருந்து வருகிறது என்பதை கூர்ந்து கவனிக்கவும், அது மரத்தின் மேல் உச்சியில் இருந்து வருவதை உணர்ந்தது. அந்த அற்புதப் பறவையைக் காணவேண்டும் என இந்த பறவைக்கு ஆவல் பொங்கியது. அந்த புதிய பறவை உயரமான மர உச்சியில் இருப்பதாலும், வழியில் பற்பல கிளைகள் இருப்பதாலும் சட்டென்று மேல் செல்ல முடியவில்லை. ஒவ்வொரு கிளையாக ஆவலோடு தாவித் தாவி மேலேறியது. முடிவில் கடைசி உச்சிக்கிளைக்கு வந்து அந்த அழகான பறவையையும் அதனிடத்திருந்து வெளிப்படும் இன்னிசை நாதத்தையும் கேட்டு பரவசமடைந்தது. மேலும் அதற்கு பேராசை பொங்கியது; அப் பறவையின் அருகில், பக்கத்தில் சென்று அமரவேண்டும் என்று பேராவல் உண்டானது. எனவே, உச்சங்கிளைக்குத் தாவி அப்பறவையின் பக்கத்தில் அமர்ந்தது. அமர்ந்ததுதான் தாமதம். அப்போது எதிர்பாராத விதமாக ஒரு அனுபவம் ஏற்பட்டது. அங்கே இரண்டு பறவைகள் இல்லை. ஒரே ஒரு பறவை மட்டுமே இருந்தது. அப் புதிய பறவையே தானாக இருப்பதாக உணர்ந்தது. ஒருபோதும் அந்த உச்சியில் இரண்டு பறவைகள் இருந்ததில்லை என உணர்ந்து. இயற்கையில் தானே அதுவாகவும், அதுவே தானாகவும் இருப்பதை

அனுபவப்பூர்வமாக உணர்ந்து, “இருப்பது ஒன்றே” என உணர்ந்து ஆனந்தமாய் வாழ்ந்து வந்தது.

இதுபோல் தான் நம் திருவருட் பிரகாச வள்ளலாருக்கு, சுத்த சன்மார்க்கத்தில் ஏற்பட்ட “அருட்பெருஞ்ஜோதி தானான இறையனுபவம்.”

திருவருட்பா குறிப்புகள்;-

# “நான் ஆனான் தான் ஆனான் நானும் தானும் ஆனான்”
# “அருட்ஜோதி யானேன்” என்று அறையப்பா முரசு!

அருளாட்சி பெற்றேன் என்று அறையப்பா முரசு!

# தன் கையில் பிடித்த தனி அருட்ஜோதியை

என் கையில் கொடுத்த என் தனித் தந்தையே!!

# “நான் போய் அதுவாகப் பெறுவேனோ?!”

இனி இது குறித்த விளக்கத்தை கீழே காண்போம்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு, “அனாதி இயற்கையே ஆகும்.”

“என்று நீ, அன்று நான் உன் அடிமை அல்லவோ!!” என்ற வாசகத்தால் இவ் உண்மை அறியலாம்.

“உண்மையில் கடவுள் ஒருவரே என்றென்றும் இருந்து கொண்டிருக்கின்றார். அவரைத் தவிர அயலாய், வேறு எவரும் இருக்கின்றதில்லை!” அவரே தன் அருளோடு விளங்கிக் கொண்டிருக்கிறார். அந்த அருள்தான் யாவுமாய்த் தோன்றுவதும் மறைவதுமாய் இருக்கின்றதாம்.

ஆகையால், இப்பொழுது “நாம் யார்?” என்றால், “ஆண்டவர் அருளைத் தவிர வேறு இல்லை!” என்று கண்டு, “நாம் அவரது அருளே” என்று உணர்ந்து கொண்டு இருக்கின்றோம்.

இவ்வுண்மைக் காரணத்தால்தான், “நான்”, “நாம்” என்பன “தன்மை” என்று இலக்கணத்தில் மறைத்துக் கூறப்பட்டுள்ளன.

கடவுள் தன்மை ஆகிய அருள் தான் இந்த “நான்”, “நாம்” என்பது உண்மையே.

கடவுளும் அவர்தம் அருளும் பிரிவற அனாதி இயற்கையாய் விளங்குதல் அறிவோம்.

இதனால்தான், "கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு அனாதி இயற்கை" எனப்பட்டது.

அனாதி இயற்கை உண்மை அப்படி இருப்பது, இப்பொழுதுதான் கண்டு கொள்ளப்படுகின்றது.

அதாவது இம் மனிதப் பிறவியில், "அருள்ஞானம்" தோன்றியுள்ள இத்தருணம்தான், "நாம் உண்மையில் கடவுளோடு இரண்டற்ற நிலையில் தான் இருந்து கொண்டு வருகின்றோம்" என்பதை உணர்ந்து கொண்டுள்ளோம்.

இந்த அருள்ஞானம் தோன்றாத வரையும், மருள் மயக்க மனோ அறிவில் கிடந்து, சூழ்நிலையைப் பார்த்துக் கொண்டே இருந்ததே வரையிலும், மனிதனுக்கும் கடவுளுக்கும், தொடர்பு அற்று விட்டிருந்தது போலும், பிரிவு நிலை ஏற்பட்டிருந்தது போலும், கருதப்பட்டுக் கொண்டிருந்தது.

அந்த பிரிவு நிலையை போக்கித், தொடர்பை உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு எல்லாவிதமான சமய மத முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தனவாகவும் அறிந்திருந்தோம்.

இந்த மாயா மயக்க நிலை ஏன் ஏற்பட்டிருந்தது என்றால், தேகப்பற்று காரணத்தினால் தானாம்.

இத்தேகப்பற்றால், தன்னை இது (தேகமாக) ஆகக் கருதிக்கொண்டு, கடவுளை அயலாகப் பாவித்து வந்தான்.

சற்று பகுத்தறிவு முதிர்ந்ததும், "தான் இத்தேக ரூபி அல்ல"; இதற்குள்ளிருந்து விளங்கும் "ஆன்மா" என்ற ஒன்றே! எனக் கொண்டிருந்தான்.

அப்போதும், இந்த ஆன்மாவாகிய தனக்கும் கடவுளுக்கும் பிரிவு நிலை இருப்பதாகவே கருதினான்.

தேகப்பற்று அற்று, சுத்தன் ஆனால் தான், தனக்கு பரமாத்மாவின் ஐக்கியம் உண்டாகும் என்று நினைத்து வந்தான்.

தேகம் அற்றால்தான் கடவுட் கலப்பு உண்டாகும் என்ற கருத்து உண்மை அல்ல;

இந்த தேகம் இருக்கின்றதால்தான் அந்தக் கடவுள் ஞானமே விளங்கும் போது, இத்தேகமே ஒழிந்து விட்டபின், அந்த ஞானமும் அனுபவமும் எப்படி விளங்க முடியும்?!

ஆகையால், இத்தேகம், கடவுள் ஞானம் விளங்கத் துணையாய் இருப்பது உண்மை.

இந்த ஞான நிலையில் இரண்டற்றதுவாய் நின்று நம்பதி அருளே தேகமாய்ச் சூழ்ந்து இருக்கின்றது எனவும் அறிந்து, அந்த நித்திய அருள் விளக்கம் குன்றாமல், அது கொண்டு விளங்கும் தேகம் பிரிந்து விடாமல், சுத்த அருள்மயமாய் விளங்கச் செய்து கொள்வதற்கு, இந்தச் சமயம் கருணை பாலிக்கப் படுகின்றோம்.

இதனால், புறத்தேகத்தினிடத்து புலன் ஆசை அற்றவர்களாய், அருள்ஒளி நிரம்பப் பெற்றவர்களாய், கடவுட் பழமை உறவை புதுப்பித்துக் கொண்டு என்றும் வாழத் தலை படுகின்றோம்.

“உண்மையில், நாம் கடவுளை எக்காலமும் ஒன்றிதான் இருந்தோம்; இருக்கின்றோம்; இருப்போம்!!”

இதுகாறும் அறியாமையால், தேகிகளாய்க் கருதிப், பிரிந்தவர்களாய் நினைத்துக்கொண்டு அவலமெல்லாம் பட்டோம்;

இப்பொழுது அறிவு வந்தது!! “கடவுளோடு அத்துவிதமாய் இருப்பதை உணர்ந்து கொண்டோம்;”

நமது இயற்கையாகிய அருளாலே வாழ முற்பட்டு விட்டோம்!!

இனி, “இரண்டற்ற பிரியா இன்ப வாழ்வே ஆகும்!!”

- சுத்த சன்மார்க்க சத்திய ஞானி தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## A29 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “ஆன்ம அறிவு பெறுவது எப்படி?”

இவன், “தான் கடவுளின் அருள் தன்மையாகிய ஆன்ம சொரூபம்” என்று உணர்ந்து இருக்க வேண்டும்.

ஜீவ ஆன்மாவுக்கு பந்தம் பரமான்மாவே தவிர உலகத்தில் வாழ்க்கையில் உள்ள எதுவும் சொந்தம் இல்லை.

இதனை உணர்ந்து உலகில் நம் கண் முன்னாடி காணும் அனைத்தையும் கடவுள் சொரூபமாகக் காண வேண்டும்.

அப்படி காண்பதுவே ஆன்மக் காட்சியாம். இந்த ஆன்மக் காட்சியினின்றே கருணைப் பணியைத் தெய்வ வழிபாடாகச் செய்து வர ஆன்ம அறிவு பெறலாம்.

உலகபோகம் அனைத்தும் பொய் என விடுத்து, நிராசையோடு இந்த உலகத்தில், எல்லாம் திருவருள் செயல், நாம் ஒரு பாத்திரம் தான் என்று வாழ ஆரம்பித்தால் தேகப்பற்று ஒழிந்தே போயிற்று.

அப்படி தேகப் பற்றை ஒழித்துவிட்டு, ‘‘தான் ஆன்ம சொரூபம்’’ என உணர்ந்து முறையாக ஆண்டவனிடத்து முறையிட்டால், அவனுக்குத் திருவருளால் சுத்த சன்மார்க்கம் முறையாகக் கொடுக்கப்படுகிறது.

வசதியான இடம் எங்கே என்று திரிந்து இளைத்தேன் அல்லால்,
ஒரு கணத்தும் உன்னை நினைந்ததுண்டோ!
என்னை உடையானே!
எவ்வகை நான் உய்யு மாறே?

தயவு

புலங் கொள் கொடிய மனம்போன போக்கில்
போகாது எனை மீட்டு
நலங்கொள் கருணை சன்மார்க்க நாட்டில்
விடுத்த நற்கொடியே
வலங்கொள் ஞான சித்தியெலாம் வயங்க
விளங்கும் மணிமன்றில்
குலங்கொள் கொடியே மெய்ஞ்ஞானக் கொடியே
அடியேற்கு அருளுகவே.

தயவு

சுத்தசன்மார்க்கம் ஜீவகாருண்யத்தில் ஆரம்பித்து சுத்த சிவானுபவத்தில் நிறைவு பெறுவது. எல்லா உயிரையும் தம் உயிர் போல பாவிக்கின்ற உணர்வைப் பெறுதல்.

எல்லா உயிரையும் தன் உயிர்போல பாவிப்பதால், அவர்களது பயமும் இடரும் துன்பமும், ‘‘தான் படுவதாக உணர்ந்து,’’ ஆண்டவரிடம் உயிர்களது துன்பங்களை நீக்கிக் கொள்ளும் சகோதர நேயத்தால்

வேண்ட, அந்த நெகிழ்ச்சியானது அவரது அருள் துணையை பெற்றுக் கொள்ள உதவும் என நம் திருவருட்பிரகாச வள்ளல் குருராயன் உபதேசித்துள்ளார்.

அதுதான்

இதுவரை அடியேன் அடைந்தவெம் பயமும்
இடர்களும் துன்பமும் எல்லாம்
பொதுவளர் பொருளே பிறர்பொருட்டு அல்லால்
புலையனேன் பொருட்டல்ல இதுநின்
மதுவளர் மலர் பொற்பதத்துணை அறிய வகுத்தனன்
அடியனேன் தனக்கே
எதிலும் ஓர் ஆசை இலையிலை பயமும் இடரும்
மற்றிலையிலை எந்தாய்

எவ்வுயிரையும் கடவுள் சொரூபமாகக் காணவும் அருளைப் பெறவும், அருட் துணையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த சிறப்பு மிக்க மனிதப்பிறப்புதான் அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் ஏற்றுள்ள,

"பவபந்த நிக்கிரக வினோத சகலமாம் சிற்பராந்த சொரூபம்"
இக்கரை கடந்திடில் அக்கரையே
இருப்பது சிதம்பரச் சர்க்கரையே.

ஆசையால் மனிதன் புலனின்ப நாட்டத்தில் சிக்கிக் கொள்கிறான். அதனால் கர்மாவாகிய (அ) வினை செய்ய வேண்டி உள்ளது. இந்த நல்வினை / தீவினை ஆகிய இருவினையால் பிறப்பு இறப்பு தொடர்கின்றது.

எந்தப்பிறவியில் இச்சை ஒழிகிறதோ, அப்போது மனிதனுக்கு உண்மை ஞானம் (படிப்பு, வியாக்கியான அறிவல்ல) பிறக்கிறது.

அவாவெகுளி மயக்கம் அழுக்காறு இன்னாசொல்லால் அவதிப்படும் பிழைப்பு இக்கரை ஆகும்.

இந்தப் பிழைப்பை விட்டுவிட்டு பிழைப்பாகிய ஆற்றைக் கடந்து, புலன் அவா இல்லாத அருள் உணர்வு உடைய வாழ்வு நிலை ஆகிய அக்கரை அடைய வேண்டும்.

இதற்கு, "ஜீவதயவில் தொடங்கி, சுத்த சிவ அனுபவத்தில் நிலைக்க வேண்டும்."

ஒழுக்கம் நிரம்பி, கருணையே வடிவாக நிற்கும் உண்மை சத்விசார நிலை பற்றினால், நாம் தாழும் குணம் வரும்.

அதனால் திருவருட்சத்தி பதிந்து மெய்யறிவு விளக்கம் பெறலாம் -

"காலம் தாழ்த்தாது எல்லா உயிரையும் தன் உயிர்போல பார்க்கின்ற உணர்வை வர வழைத்துக் கொள்ளுங்கள்" என்பது வள்ளல் உபதேசம் வாழ்வு தரும்.

தயவடிமை சின்னாளபட்டி செல்வராஜ் ஐயா அவர்கள்.

## A30 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### "உபதேசம்"

வடலூர் சத்திய தருமச்சாலையில் வள்ளலார் அமர்ந்து இருக்கிறார். அவரை நாடி ஒரு துறவி வருகிறார்.

அவர் பெயர் "திருச்சிற்றம்பல ஞானியார்". அவர் ஒரு முருகபக்தர்; காவி உடை தரித்தவர்.

வள்ளல் பெருமானை வணங்கித், "தமக்கு உபதேசம் செய்யவேண்டும்" என்று கேட்கிறார்.

வள்ளலார், தாம் வெள்ளையாடை உடுத்தவர் என்றும், "காவி உடை தரித்த துறவிகளுக்குத் தாம் உபதேசம் செய்வது மரபுக்கு மாறாகும்" என்றும் சொல்லி மறுக்கிறார்.

திருச்சிற்றம்பல ஞானியார் கேட்கவில்லை. "தமக்கு உபதேசம் செய்தே ஆகவேண்டும்", என்று மீண்டும் வேண்டுகிறார்.

திருச்சிற்றம்பல ஞானியார் மன நிலைக்கு ஏற்றபடி, முருகப்பெருமானே அவர் முன்னால் இருந்து, அவருக்கு ஞானோபதேசம் செய்யும் பாவனையில் வள்ளலார் அவருக்கு உபதேசம் செய்கிறார்.

**"நின் நிலையை, என் அருளால் நீ உணர்ந்து, நின்று அடங்கில்,**
**இந் நிலையே அந்நிலையை எய்துதிகாண்!! முன்னிலையில்**
**இற்குருவில் நாட்டாதே! என்றுரைத்தான் ஏரகம் வாழ்**
**சற்குரு என் சாமிநாதன்!!"**

உபதேசம் பெற விரும்பும் ஒருவருக்குச் செய்யும் உண்மையான உபதேசமும் இப்படித்தான் இருக்க வேண்டும்.

சுத்த சன்மார்க்க உபதேசத்தின் மூலமாக ஒருவர் பெறவேண்டியது, "நிலைத்த இறை இன்ப அனுபவமே!!"

இதற்கு "உபதேசிக்கப்படும் பொருள் அருட்பெருஞ்ஜோதி ஆக இருக்க வேண்டும்". அதை உபதேசிக்கின்ற குருவும் அருட்பெருஞ்ஜோதியாகவே இருந்து உபதேசிக்க வேண்டும்.

உபதேசத்தை பெறுகின்றவரும், தம்முள் அருட்பெருஞ்ஜோதி இருக்கும் நிலையை உணர்ந்து அதனுடன் ஒன்றி நின்று ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உபதேசத்தின் பயனை அவர் அடைந்து அனுபவிக்கவும் முடியும்.

இங்கே உபதேசிப்பவர் வள்ளல்பெருமான். இருந்தாலும், அவர் தாமே நேராக அத் துறவிக்கு உபதேசிக்கவில்லை. தம்மிடம் உபதேசம் பெற விரும்பிய துறவியின், வழிபடு கடவுளான திருவேரகத்துள் உறையும் சுவாமிநாதனே அவருக்கு உபதேசிப்பதாகச் சொல்கிறார்.

திருஏரகத்தில் உறையும், சுவாமிநாதக் கடவுள் நம் ஒவ்வொருவர் சிரநடுவிலும் இருக்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்தான்.

எந்த உபதேசமும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை பற்றித்தான் இருக்கும். இதன் உண்மையை "உபதேசம்" என்ற வார்த்தையே விளக்குகிறது.

"உபதேசம்" என்பது, "உப + தேசம்" என்ற இரண்டு சொற்களால் ஆனது.

"உப" என்பதை "உ+ப்+அ" என்று பிரிக்கவேண்டும். இதில் இருக்கும் "ப்" என்ற எழுத்து, நமது சிரநடுவில் அருட்பெருஞ் ஜோதி "பகர" வடிவில் குவிந்து இருக்கும் இடத்தை காண்பிக்கின்றது.. **(Cerebrospinal cavity contains cerebrospinal fluid)**

(இந்த குழி முகுள மூளைக்கு மேல் உள்ளது)

“உ” என்ற எழுத்தும், “அ” என்ற எழுத்தும், இறைவனின் வடிவமான ஓங்காரத்தைக் காட்டுபவை.

(அ+உ+(ம்)= ஓம்)

“தேசம்” என்றால் இடம் என்று பொருள். இதையே “தேசு + அம்” என்று பிரித்து, ஒளிதரும் ஓங்கார வடிவமான அருட்பெரும்ஜோதியாக கொள்ளலாம்.

உபதேசம் என்ற சொற்றொடர், நம் ஒவ்வொருவருடைய உடல் தத்துவத்தையும், உயிர் தத்துவத்தையும், இந்த உடம்பை உருவாக்கி அதை இயக்கி வரும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரையும் குறிக்கும் அருமையான சொற்றொடர்.

நம்முள் இருந்து நம்மை இயக்கி வரும் “அருட்பெருஞ்ஜோதி தான் நாம்” என்னும் உண்மையை நமக்கு உணர்த்தி, அந்த பெரும் பொருளை அடைந்து அனுபவிக்கும் பக்குவத்தை நமக்கு ஏற்படுத்துவது தான் உண்மையான உபதேசம்.

“நின் நிலையை” - உன்னுடைய நிலையை

“என் அருளால்” - என்னுடைய திருஅருள் ஆற்றலால்

“நீ உணர்ந்து” - நீ அறிந்து கொண்டு

“நின்று அடங்கில்”- அந்த நிலையிலிருந்து தியானத்தின் மூலமாக அனுபவத்தை பெற்றால்

“இந்நிலையே” - இந்த அனுபவ நிலையே

“அந்நிலையை” - திரு அருள் நிலையை

“எய்துதி காண்” - நீ அடையும்படி செய்யும் என்பதை கண்டு கொள்வாய்

“முன் நிலையில்” - உனக்கு எதிரில் ஒருவரை நிறுத்தி

“இற்குருவில்” - இல்லாத ஒரு குருவை

“நாட்டாதே” - இருப்பதாக எண்ணித் தடுமாறாதே!

“என்றுரைத்தான்” - என்று உபதேசித்தான்

“ஏரகம் வாழ் சற்குரு” - திரு ஏரகத்தில்

“என் சாமிநாதன்” - சிரநடுவில் எழுந்தருளி இருக்கும் சற்குருவாகிய என் சாமிநாதன்.

உபதேசிக்கப்படுகிற பொருளும், அதை உபதேசிக்கிற குருவும், உபதேசம் பெறுகிறவர் "உள்ளிருந்தே செயல்பட வேண்டும்" என்பதுதான் இந்த உபதேசப் பாடலின் சிறந்த கருத்தாகும்.

இதனால்தான் இந்தப் பாடலில், "முன்னிலையில் இற்குருவில் நாட்டாதே!! என்று உரைத்தான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"இற்குரு" என்பதை "நிற்குரு" என்று சிலர் பாடபேதம் காட்டுகிறார்கள். "நிற்குரு" என்பதை "நில்-குரு" என்று பிரிக்கவேண்டும். இதற்கு, ஒருவர் முன்னிலையில் நிற்கின்ற உருவம் என்பது பொருள்.

ஒருவருக்கு வெளியிலிருந்து உபதேசிக்கும் எந்தக் குருவினாலும் முழு உண்மையை உபதேசிக்க முடியாது. அவரவர் உள்ளிருக்கும் இறைவன் தான் அதை செய்ய முடியும்.

வெளியில் இருக்கும் எந்த உருவத்தையும் "நிலையானது" என்று எண்ணுவது மிகவும் தவறானது; அவ்வுருவம் மயக்கத்தை கொடுப்பது; மறைந்து போகக் கூடியது!

ஆகையால், இல்-குரு என்பதுதான் சரியான பாடம். "உன் உள் இருக்கும் இறை வடிவத்தை உணர்ந்து, அதையே குருவாகக் கொள்ள வேண்டும்" என்பதைத்தான் இல் குரு என்ற சொற்றொடர் விளக்குகின்றது.

நம் உள் இருக்கும் இறை வடிவம் எது?! அதுதான், "சிரநடுவில் விளங்கும் சிற்றம்பலத்தில் ஒளிரும் அருட்பெரும்ஜோதியின் ஆனந்த வடிவம்!!"

இதுதான் உபதேசிக்கப் படவேண்டிய பொருளும், உபதேசிக்கும் குருவின் திருவுருவமும் ஆகும். அது மட்டுமல்ல, உபதேசம் பெறுகிறவரின் உருவத்தை உருவாக்கிய திருவுருவமும் ஆகும்.

தம் உருவத்தை உருவாக்கிய திருவுருவத்தின் கருணையையும், "தம் உருவத்தில் திருஅருள் இருக்கின்ற நிலையையும், திருவருளால் உணர்ந்து, அதனுடன் ஒன்றி, அதை அனுபவித்த வண்ணம் அதுவாகவே நிற்க வேண்டும்."

இவ்வாறு நம் நிலையும், நமக்கு ஆதாரமாக இருக்கின்ற இறைவனின் நிலையும் ஒன்றே என்பதை உணர்ந்து நிற்கும் உபாயத்தைதான், இந்த உபதேசப் பாடல் உணர்த்துகின்றது.

ஒருவர் தம்முள் இருக்கும் இறைவனுடன் தாமும் இணைந்து, சுத்த அத்துவித நிலையில் நிற்கிறார். அப்போது அவர் தம் முன்னே இருப்பவரின் நிலையைப் பற்றி என்ன எண்ணுவர்?!

தம் எதிரில் இருப்பவருடைய புறத்தோற்றத்தைக் காண மாட்டார். அவர் உள்ளே இருந்து, அவரது தோற்றத்தை உருவாக்கி, அவரை இயக்கிவரும் இறைவனையே அவரிடமும் காண்பார்.

தம்முள்ளே உபதேசப் பொருளாகவும், உபதேசிக்கும் குருவாகவும் இருக்கும் இறைவனே, அவருள்ளும் அவருக்கு உபதேச பொருளாகவும், உபதேசிக்கும் குருவாகவும் இருப்பதை உணர்ந்து கொள்வார்.

அதனால் தன் எதிரில் இருப்பவரையும் தம்மைப் போலவே எண்ணுவார். எல்லாம் இறைவன் மயம் என்பதை உணர்ந்து மகிழ்ந்து இருப்பார். இதுதான் இறைவனை அடைந்து அனுபவிக்கும் நிலை. உபதேசத்தின் பயனால் பெற்றிருக்கும் மிக உன்னதமான நிலை!!

“ நம்முள் இருக்கும் இறைவனை உணர்ந்து அவனுடன் ஒன்றி நிற்க வேண்டும்!!”

அவன் தரும் அருள் ஆற்றலால், சூழ்ந்து இருக்கும் எல்லா உயிர்களுக்கும் தொண்டு புரிய வேண்டும். சுத்த சன்மார்க்க பண்பு உள்ளவர்களுக்கே அவனைப்பற்றி உபதேசிக்கவும் வேண்டும். இந்தப் பணியின் மூலமாகத், தம்முள் இருக்கும் இறை இன்ப அனுபவம் அகமிருந்து அனகமாக விரியும். உடம்பின் ஒவ்வொரு உயிர் அணுவிலும் இறை ஒளி பரவி நிலைபெறும். இதனால் உள்ளமும் உடலும் இறை இன்ப அனுபவத்துடன் நிலை பெற்று வாழ்ந்து வரும்.

வள்ளல் பிரானிடம் உபதேசம் பெற்ற திருச்சிற்றம்பல ஞானியார் இறைவனை உணர்ந்து கொள்கின்றார். அவர் சுத்த சன்மார்க்க விளக்கத்தைப் பூரணமாக தெரிந்து கொண்டிருந்தால், அகத்திலிருந்து அனகமாக விரிந்து வாழும் பேரின்ப வாழ்வையும் பெற்றிருப்பார்.

சுத்த சன்மார்க்கத்தின் உண்மையை உணராமல், விரதம் முதலியவற்றை மேற்கொள்ளுவதும், மௌனமாக இருப்பதும்,

உண்ணாமலும் உறங்காமலும் இருப்பதும், பரிபூரணமான இன்பத்தை கொடுக்காது.

உண்ணாமல் இருப்பதையே உபவாசம் என்றும் சொல்லுவதுண்டு. உபவாசம் என்பதில் உண்மை பொருள் உண்ணாமல் இருப்பது அல்ல!! உள்ளே இருக்கும் இறைவனோடு ஒன்றியிருந்து, அவனருளால் உயிர்களுக்கு பணிபுரிந்து, நிலைத்து வாழ்வது தான் உபவாசம்; இதுதான் உபதேச பொருளாகும்.

உள்ளிருக்கும் இறைவனை உணர்ந்து கொண்டு, அவர் உபதேசத்தைப் பெற்று, உபவாசம் செய்பவர்கள் சுத்த, பிரணவ, ஞான உடம்பாகிய முத்தேக சித்தியைப் பெற்றுப் பேரின்ப பெருவாழ்வைப் பெறுவார்கள்!!

-தயாநிதி சுவாமி சரவணானந்தா.

"தயவு"

# A31 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "தயவினொடு வாழ்க!!"

எங்கும் விளங்குவதாகி, இன்ப மயமாகி, என் உணர்வுக்கு
உணர்வு தரும் இணையடிகள் வருந்த,
பொங்கும் இரவிடை நடந்து, நான் உறையும் இடத்தே போந்து,
மணிக் கதவுதனைக் காப்பவிழ்கப் புரிந்து,
தங்கும் அடியேனை அழைத்து, அங்கையில் "ஒன்று" அளித்தே,
"தயவினொடு வாழ்க!!" எனத் தனித் திருவாய் மலர்ந்தாய்
இங்கு நினது அருட்பெருமை என் உரைப்பேன்!! பொதுவில் இன்ப
நடம் புரிகின்ற என்னுடைய நாயகனே!

- திருவருட்பிரகாச வள்ளலார்.

(திருஅருட்பா - நான்காம் திருமுறை -அருட்பிரகாச மாலை - 47 ஆம் பாடல்.)

வள்ளாலார், "பேருபதேசத்தில்" இந்த தயவைக் குறித்து உரைத்துள்ளார். அது;-

**“என்னை ஏறாநிலைமிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு. தயவு என்னும் கருணை தான் என்னை தூக்கிவிட்டது. அந்த தயவுக்கு ஒருமை வரவேண்டும்! ஒருமை இருந்தால்தான், தயவு வரும். தயவு வந்தால் ஏறாநிலைமிசை ஏறலாம். என்னுடைய அறிவு (தயா ஞானம்) இப்போது அண்டாண்டங்களுக்கும் அப்பால் கடந்திருக்கின்றது. அது ஒருமையினால்தான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுடன் இருங்கள்”** என உபதேசித்துள்ளார் வள்ளலார்!

ஒருமை என்பது “ஒன்றேயான தன்மையாகும்”.!

மேலும் உபதேசக் குறிப்புகளில் சொல்லும்போது,

**ஆன்மாவின் இயற்கை குணம் தயவு.**

நாம் **தயா வடிவமானால்** திருவருள் அனுபவம் உண்டாகும்!! என்றும், “**ஆன்ம இயற்கையாகிய தயவோடு இருந்தால் சிவம் ஆகலாம்**” எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒப்பற்ற தயவுடைய பேரறிவே பூரண இன்பமாம் என்று கூறியுள்ளார்கள்.

**“தயவு” தான் எங்கும் நிறை கடவுட் பெரும் ஜோதியாய் இருக்கக் காண்கின்றோம்.**

அவரே நம்மில் சிரநடு ஆன்ம ஜோதி மணியாய் எழுந்தருளி, அருள் ஐஞ்செயல் விளங்க, விளங்குகின்றதை உள்ளபடி அறிகின்ற போது, அவரும் நாமும் பிரியாதிருக்கும் “இயல் உண்மை நிலையை” நன்கு அறிகின்றோம்.

“தயவு” என்பதில், தகர எழுத்தில் (த=த்+அ) “அ”கரமாகிய உயிரையும், “த்” என்னும் தகர மெய்யையும் கொண்டு விளங்குகின்றார்.

இது “அளப்பரிய ஆகாச வெளி நிறை கடவுள் வடிவம், நமது தலைநடு ஏழாவதாகிய நிராதாரத்தில் உள்ள “தகராகாசமாய்” உள்ளதை உணர்த்துவதாம்.

ஆகவே **“த” என்பது “பரமாகாச வடிவினராகிய கடவுள்”**, நம் **தலை நடுவுள் விளங்கும் நிலையைக் குறிப்பதாம்.**

அடுத்து **“யகரமாய்” உள்ளது நம் ஆன்ம அணுவாம்.**

கடவுள் இப்படித் "தய" என "கடவுளான்ம" வடிவினராய் எழுந்தருளி, "வுகர" விரிவால் உயிர், உணர்வு, உடல், உலகு எல்லாமாய் நிறைந்து விளங்குவதை சுட்டுவதாம்.

ஆகவே "தயவு" தான், கடவுளும் நாமும் பிரிவற "உள்நின்று", ஜீவ தேகாதி - பிரபஞ்சம் எல்லாம் ஏற்று விளங்குவதைக் காண்கின்றோம். இதனால் இத் தயவின் உயர் சிறப்பு நன்கு தெளிவாகின்றதாம்.

தயா சுத்த நெறியே, மனிதனை முதலில், "அகத் தெய்வ தயா பீடமேல்" விளங்குதலை காட்டிக் கொடுத்து விடுகின்றது. இதுவரை தேக, கரண நிலைகளினின்று, வாழ்ந்தும் வாழாது வீண் போக நேர்ந்ததை மாற்றி, "மேல் நிலை மாடத்தே, தயாஜோதி பீடத்தே" இருந்துகொண்டு, தயா செயலோடு உலகில் வாழ்ந்து வரச் செய்வது இம் இம்மார்க்கம். உலகெலாம் நலம் பெற்றுய்ய இத் தயாநெறி உதவுவதாம்.

தயாநெறி அனுபவம் உலகெலாம் தழைக்க, ஒவ்வொருவரும் "அகத்தே தயவு நிலை பொருந்தி நின்று" உலக சமுதாயம் எல்லாம் ஒன்று எனக் கண்டு ஒத்துவாழப் பழகுதல் வேண்டியிருக்கின்றது.

உள் வளர் "தயவு ஒளியே" யாவருள்ளும், எத் தெய்வத்துள்ளும் இருந்து விளங்குகின்றதால், புறத்தோற்றச் செயல்களைக் கண்டு விருப்பு வெறுப்பு அடையாது தயவு செய்வோம்.

**"அகத்தே அருளால், ஆண்டவர் ஜோதியைத் "தயவு ஒளியாகக்" கண்டு, அதுவாகி நின்று", தேகப்பற்றும், புலனிச்சையுமற்று, தயவால் பிறர்க்கு "உயிர் விளக்கத் தொண்டும், அறிவு விளக்க செயலும்" புரிந்து கொண்டிருப்பதுதான் வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.**

புலன் இன்ப வாழ்வில், இதுகாறும் சுகமெனக் கண்டிருந்தது எல்லாம் உண்மையல்ல என தெரிந்து, தெளிந்து, "உண்மைச் சுகம்" கடவுள் தயவால் உள்நின்று அனுபவிக்கப்பட வேண்டியுள்ளதாம்.

பிறர்க்கு தயவால் இன்பு செய்யும்போது, ஏற்போர்க்கு உடலிலும், உயிரிலும், தெளிவும் விளக்கமும் ஏற்படுகின்றன. அச்சமயம் நமக்கோ அகத்தே அத்தயா ஒளியின் விளக்கம் பெருகுகின்றது. அவ் ஒளி பெருகப் பெருக, உள்ளத்தில் தெளிவும், இன்பமும் இடங்கொள்ள,

உயிரிலும், உடம்பிலும் ஆற்றலும் சௌக்கியமும், மொத்தத்தில் அமைதியும் ஆனந்தமும் விளைகின்றனவாம்.

**“அகத் தயாஒளியின் நிறைவே, நமக்கு அழியா இன்ப வாழ்வை நல்குவதாம்.”**

தனித்தலைமைப் பெரும் பதியாகிய கடவுள், நமது “அகத்தே இருந்து தயவு வண்ணமாய் எழுந்தருளித் திகழ்கின்றார்”.

அவர் ஒருவரே முழு நிறைவாக எங்கணும் எக்காலமும் விளங்கிக் கொண்டுள்ளார் என அறிகின்றோம்.

இந்த ஒன்றான தயவுக் கடவுளேதான் இவ் அகண்ட பிரபஞ்ச நிறைவாகியுள்ளதோடு, என்றென்றும், எவ்விடத்தில், எச்சூழலில் முக்கியமாக, எம் மனித வடிவின் ஆன்ம அணுவிலிருந்தும் விளங்கிக்கொண்டு, அவரவர்கட்கு தயவுப் பக்குவம் வரும் வரை, மேலும் மேலும் தனு கரண புவன போகங்களை வழங்கி வழங்கி, வாழ்வித்து வாழ்வித்து மேல்நிலைக்குச் செலுத்திக்கொண்டே உள்ளார்.

தயவுப் பக்குவம் எய்தியுள்ள இத்தருணம் தான், “அவரே நாமாய், இந்தத் தயவு வண்ணமாய் வெளிப்பட்டுள்ளார்.”

இந்நிலை நின்று காணும் போது, “அவர் மயமான நாமே” எங்கெங்கும் “அகநின்று அனகமாக விரிந்து விளங்குகின்றோம்” என அறிகின்றோம்.

இதனால் நம்மை அல்லால், நாமே பிறர் என விளங்குகின்றதல்லால், உண்மையில் வேறு எவரும் இல்லை என அறிகின்றோம். இத் தெளிவோடு “இறை இன்ப நிறை வாழ்வு” வாழ ஆணை செய்யப்படுகின்றோம்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா.

“தயவு”

# A32 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "அறிவுரை விண்ணப்பம்";

சர்வ வல்லமை உடையவராயும், சர்வ ஜீவ தயாபரராயும், எங்கும் நிறைந்து, என்றும் விளங்கும் ஒப்புயர்வற்ற தனித்தலைமைப் பெரும் பதியே, எல்லோர்க்கும் பொதுவாய் விளங்கும் உண்மைக் கடவுள் என்றும், நம் "மெய்யறிவின் கண்" திருவருளால் உணர்த்தப் பெற்று அறிந்து கொள்ளுகின்றோம்.

இத் தெய்வசக்தி விளக்கமும், அதன் அனுபவத்தால் அருட்பெரும் சித்தி அற்புத வாழ்வும் நம் "மெய்யறிவின் கண்" நின்றே பெற்றுக் கொள்ள வேண்டி இருக்கின்றன. இச்சக்தி சித்தி அனுபவத்திற்கு நம் மனித தேகம் தான் உரியதாக இருக்கின்றது. ஆகையால், இத் தேகம் நன்னிலையில் இருக்கும் போதே மேற்படி "தெய்வானுபவத்தை" பெற்றுக் கொள்ள வேண்டும். இத் தேகத்திலிருந்து, இதற்கு உள்ளீடாய் விளங்கும், "அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை" ஆண்டவரை உண்மையாகக் கண்டு கொண்டால், அவருடைய திருவருளாலேதான் இப்பொழுது இம் மனித ஜீவ தேகத்தில் நிலைத்துள்ளோம் என்பதையும், நம்மைச் சூழ்ந்த பிரபஞ்சப் பொருட்கள் யாவும், அவர் திருவருளாலே நிலைத்துள்ளன என்பதையும் உண்மையாக அறிந்து கொள்வோம். அங்ஙனம் அறிந்துகொண்டு அனுபவம் பெறுவதற்கு, "ஒருமையோடும் தயையோடும் அதி தீவிரமாக முயல வேண்டும்". அப்பொழுது அத் தெய்வ சக்தியே நம் தேகத்திலும், ஜீவனிலும், போக பொருள்களிலும், பூரணமாய் இடம் கொண்டு விளங்கும். அப்போதுதான் இத் தேகம் பிற சக்தித் துணை இன்றி அழிவற்ற அருட்பெருஞ்ஜோதி சக்தியால், நித்திய ஜீவனோடு நிலைக்கும்.இவ் அருட்பெருஞ்ஜோதி சித்தியால் மகா அற்புத சித்திகள் எல்லாம் விளங்கும்.

மேற்படி அருட்பெரும்ஜோதி சக்தியைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ளாவிட்டால், இப் பிறவிப் பெரும்பயன் அடையக்கூடாது போகும். நம் மனித தேகத்தைப் பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும், மேற்படி சக்தி சித்தி வழங்கப்பட்டுள்ள போதிலும், அஃது, "ஒருமையும் தயவும்" பூரணமாய் நம்மில் விளங்கும் போதுதான் அனுபவப்படுவதாய் உள்ளது. ஏகதேச அனுபவம் பெற்றுக்கொண்டவர்கள், மனித தரத்திற்குச் சற்று அப்பாற்பட்ட தெய்வ சக்தி கைவர பெற்றவர்களாய், அது கொண்டு அற்புதம் பல நிகழ்த்துகின்றனர். அவர்களும் பூரண சக்தியைப் பெற்றுக் கொள்ளாததினால் தெய்வ நிலை பெருஞ் சித்தியைப் பெற

முடியாது போக, முடிவில் தம் தேகத்தை விட்டு விடுகின்றனர். பின்னர் அவர்களின் சக்தி சித்தி பூரணம் அடைவதற்கு மறுபடியும் மனிதப் பிறப்புத் தேகம் பெற்று மேலேற வேண்டியதாகும்.

எனவே, மனித தேகத்தைப் பெற்றுள்ள நாம், "கடவுள் நிலை அறிந்து அடையவேண்டும்" என்பதே திருவருள் ஆணையாகும். இதற்காகவே நம்மை இவ்வுயர்வுடைய மனித தேகத்தில், நம் கருணாமூர்த்தி வருவித்து பக்குவப்படுத்திக் கொண்டிருக்கின்றார். இத் திருவருள் ஆணையை உணராது, கடவுளைப் பற்றிய விசாரம் இல்லாது, உலக சுக போகங்களில் மூழ்கி இருப்பவர்களும், உலக சுக போகங்களை வெறுத்து "ஒன்றும் வேண்டாம்" என்று தனித்து இருப்பவர்களும், "நாம் பாடுபடுகிறோம் - பயன் பெறுகின்றோம் - சுகமாய் வாழ்கின்றோம், பிறர் தயவு நமக்கு எதற்கு"? என்று இறுமாந்து இருப்பவர்களும் உண்மை அறியாததினால், அப்படி இருந்து மாண்டொழிந்தனர். அவர்களுடைய கதி என்ன? அவர்களுடைய வாழ்க்கை முடிந்து விட்டதா? இல்லை!! இல்லை!! இவர்களுக்குக் கொடுத்த சிறந்த தேகத்தை அலட்சியம் செய்து, அதனால் அடையவேண்டிய பெருவாழ்வு பெற்றுக்கொள்ளாது போனவர்களே!! இவர்கள் இன்னும் பக்குவ நிலையை அடையவில்லை! அதனால் அங்ஙனம் அஜாக்கிரதையாய் தம் தேகத்தை மண்ணாக்கி கொண்டார்கள்!! என்று, பின்னும் தயை மிகுதியினால், மறுபடியும் அவர்கள் மேல் நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு திருவருளால் மனித தேகம் வழங்கப்படும்.

ஆகையால் முன் மனித தேகத்தில் நமக்கென்ன என்று ஏமாந்து இருந்தவர்கள் திருவருள் ஆணைக்கு, அறியாமையினால் மாறுபட்டு இருந்தனர் என்றும், அப்படி இருந்ததும் - இருப்பதும் - இருக்கின்றதும் திருவருட்சம்மதம் அல்ல என்றும்; இப்பிறப்பு இல்லாவிட்டால், அடுத்த பிறப்பில் ஆவது - அல்லது - பல பிறவிகளில் அல்லலும் அவத்தையும் பட்டொழிந்த பின்னராவது - முடிவில் "தெய்வநிலை அடைய வேண்டும்" என்பதே கடவுள் சம்மதம். ஆகையால் அறிவுடையோர் யாவரும் திருவருள் ஆணைக்கு இணங்க, இப்பிறவியின் பெரும் பயனை காலமுள்ள போதே பெற்றுக்கொண்டு, கடவுட் பாலனாய்க் களித்து, "கருணை ஜோதி வாழ்வில் வாழவேண்டும்"

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

"தயவு"

# A33 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## " தயா உபதேசம் "

1)"அக நிலையில் ஒன்றி அருள் ஒளி வடிவில் இருக்க உண்மையாய்ப் பழகவேண்டும்".

2)தயவின் துணையால் வாழ்வில் நாம் இன்பநடை போட வேண்டும்.

**3)"உள்ளொளி நிலையிலிருந்து வாழப் பழகி விட்டால்" துன்பம் அழியும்; இன்பம் பெருகும்.**

4)தயவின் ஆற்றல் அகமிருந்து பெருகி உயிர் உணர்வில் நிறையும்போது, சிந்தனையில் தெளிவும் அளவற்ற ஆற்றலும் கிடைக்க பெறுகின்றோம்.

5)முதலில் **"சிரநடுத் தயவு ஒளியில் பூரண புகல் அடைந்து நிற்க!!"**

6)"உண்மையில் என்றும் உள்ளாய் இருந்து கொண்டு இருக்கின்றது ஒன்றே ஆகும்!!".

**7)"இது முதல் தயவுடன் அகத்தே இருந்துகொண்டு எப்படியும் வாழ்வாயாக!!"**

8) இனி புதிய "தயாஒளி நிறைவாழ்வு" மேற்கொண்டு, சதா நன் முயற்சியோடு இருந்து முன்னேறி வரவும்.

**9)"நித்திய வாழ்வில் அகநிலை பிறழாது இருந்து வருக!!"**

10)அருட்பெருஞ்ஜோதியை ஒன்றி அதுவாகி, மறத்தலும் நினைத்தலும் அற்று, சுத்த நிலையில் இரவு பகல் இல்லா இடத்தில் பொருந்தும் நாளே சிறந்த நாள்.

11)தேகபோக பற்றற்று "உண்ணின்று, அருள் வண்ணமாய்" ஓங்குதல் ஒன்றே முறையாகும்.

12)மனிதன் உண்மை அகம் இருந்து விளங்குவதால், அவ் அகம் தெரிந்து, தெளிந்து புற வாழ்வில் சிறக்க வேண்டும்; "அன்பர்கள் அகக்கண் மலர்ந்து நோக்குவார்களாக!!"

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

"தயவு"

## A34 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### "தருமம் என்பது என்ன?!"

எந்த ஒரு பிரதிபலன் பாராமல் செய்யும் பணி!!!

தர்மம் என்றால் கைமாறு கருதாத ஈகை!!!

தருமம், கருணை, தயவு, இரக்கம் எல்லாம் ஒரே பொருளைக் குறிக்கும். உண்மையில் "தருமம்" என்பது "அன்பு இருப்பாகிய" கடவுளின் தன்மையாகிய "அருள் உணர்வாம் - திருவருளையே" குறிக்கின்றது.

இதையே வள்ளற்பெருமான்

**"தயாமூல தன்மம்"** எனக் குறிப்பிடுகின்றார்.

**"தனிப்பெரும் கருணை"** என்பதும்,

இயற்கை உண்மை ஆகிய கடவுளின் **"இயற்கை விளக்கம்"** என்பதும்,

**"அருட்பெருவெளி"** என்பதும்,

"தயாமூல தன்மம்" என்பதுதான் "தர்மம்" என்பதற்கு உண்மையான பொருள்.

அந்த "அருள் உணர்வை" ஆன்ம அறிவால் பற்றிக்கொண்டு, புறத்தில் நம்மைச் சூழ வரும் உயிர்களுக்கு அன்புத் தொண்டு புரிந்து வருவதே "தரும நெறி" ஆகும்.

**"தர்ம நெறி அல்லது தர்மச் சாலை";-**

அகநிலையில், சத்விசாரத்தால், ஆன்ம இயற்கையாகிய "தயா உணர்வாய்-அருள் உணர்வாய்" அசைவற நிற்றலே "தர்ம சொரூபியாதல்!!"

இறைவனுடைய தன்மை "அருள்". அந்த இறைவனுடைய "அருள் தன்மையே நாமாக உள்ளோம்"

மனிதனின் அகமிருக்கும் அருளே அனகமாக விரிந்து உயிர் உணர்வில், மனோ - வாக்கு - காயத்தில் "உயிர் இரக்கமாக" விளைவு கொள்கின்றது.

இதுவே ஜீவகாருண்ய ஒழுக்கமாம். கொல்லாமை, புலால் மறுத்தல், அற்றார் அழிபசி தீர்த்தல் - தரும நெறி (அ) தருமச் சாலை ஆகும்.

எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி இரங்குதல் இந்த ஆன்மாவுக்கு இயல்பாகின்றது.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!!

- தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## A35 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### "விசார சங்கற்பம்"

அருட்பெருஞ்ஜோதி உண்மையைச் சத்விசாரத்தால் அடைய, **"உள்ளத்தில் அசைவற நிற்கும் மனோநிலை"** உண்டாகும். அதுவே விசார சங்கற்பம் ஆகும்.

**"அருட்பெருஞ்ஜோதி உண்மையை, மனோ நன் முயற்சியால் சதா நினைந்து நினைந்து, அக மனத்தில் ஊன்றச் செய்து, அப் பற்று விடாது தங்கி வாழ்தல் ஒன்றே சத்விசாரத்தால் பெறப்படுகின்ற நித்திய சங்கற்பம் ஆகும்."** சாதாரணமாய் ஒன்றைத் தீவிரமாக சிந்தித்து தெளிந்து உறுதிபட்ட உள்ள நினைவே சங்கற்பம் என்று கூறுவர்.

அறியாமையில் "தேகம் நாம்" என்ற எண்ணமும், தற்போத ஞானத்தில் "ஆன்மா நாம்" என்ற சிந்தனையும் உண்மையல்ல. "அருள்ஞான உணர்வுடன் கூடிய ஆன்மாவின் அனக வாழ்நரே நாம்" என்ற அனுபவம் ஒன்றே உண்மை. "இந்த ஞான அனுபவம் அக வானில் அரும்பி மலர்வதாகும்." இம் மெய்யுணர்வே சங்கற்பத்தால் பெற்று கொள்ளப்படுவதாம்.

"கடவுள், சத்து, சித்து, ஆனந்தம் ஆகி -அதுவே நாமாகி, இரண்டற்று ஒன்றி உள்ளதே உண்மை." இதனை உணர்ந்து உறுதியாக உட்கொண்டு, இவ்வெண்ணம் மாறாது, மறந்து போகாது நிற்பதுதான் சங்கற்பம்.

ஜீவ தேக, மனோ கரண அபக்குவத்தால், "நமது உண்மை நிலையாம் - கடவுள் இயல்" அறியப்படாது இருந்தவரை மறைந்திருந்த ஒன்று, பக்குவ வசத்தால் இதுசமயம் வெளிப்படுகின்றது. சத்விசாரத்தால் இவ்வுண்மையைப் பற்றி நிலைத்திருத்தல் ஒன்றே உண்மைச் சங்கற்பம் ஆகின்றது.

அருட்ஜோதி ஆகிய கடவுள் சக்தி அழிவற்றது, நித்தியமானது. சத்விசாரத்தால் அறிந்து கொண்ட இந்த உண்மையை, செம்மையாக நெஞ்சில் இருத்தி, தேகேந்திரிய உணர்வில் சதா நிரப்பிக்கொண்டு விளங்குவதற்கு இச்சங்கற்பம் உதவுகின்றது.

இந்த அருட்ஜோதி உணர்வாகிய சங்கற்பம், உலகியல் வாழ்வில், தேகச் செயலில் விளங்குவதால்தான் ஒழிவற அனுபவப்படுகின்றதாம். மற்றபடி இச் ஜோதியை சிந்தித்துப் பொய்ப் பாவனை செய்து நிட்டையில் அழுந்துவதால் நித்யானுபவம் உண்டாகாது.

நிலையாய் விளங்கும் பரம்பொருளை, நம் சிரமத்திய பகர வடிவக் குழியினின்று, சத்விசாரத்தால் கல்லி (தோண்டி) வெளிக்கொணர்ந்து, அதனோடு சார்ந்து கலந்து, தயை விளங்கத் திகழ்தல் விசார சங்கற்பமாம்.

எந்த மெய்ப்பொருளாகிய அருட்ஜோதியைக் கற்க வேண்டுமோ, அதனை உள்ளூரக் கற்று, உணர்ந்து கொண்டு, நழுவ விடாது, தயை வளர் பணி புரிந்து கொண்டு இருத்தல் வேண்டும். இப்படி மெய்ப்பொருளைப் பற்றற பற்றி நிற்பதுவே உண்மையான சங்கற்பமாம்.

அகத்தே அத்துவைத அனுபவம் பெறுவதுவே சங்கற்பம் எனும் யோகமாம். இந்த அனுபவத்திற்கு ‘‘தயா நல்லொழுக்கமும், உண்மைநிலை பிறழா சத்விசாரமும்’’ பழகுதல் வேண்டும். மேற்படி விசார சங்கற்பத்தால் உள் ஒடுங்கி விடாது, ‘‘உள்ளே ஒன்றுபட்டு,’’ உலகியல் துறவா ‘‘சகசானுபவம்’’ பெறுதல் வேண்டும் என்பது குறிப்பு.

‘‘சிரநடு சிற்றம்பலச் சோதியைப் பற்றி நின்று,’’ வழுவாது வாழ்வதற்கு, இச் சங்கற்ப விசாரம் மேற்கொள்ள வேண்டியுள்ளோம். அப்படி சங்கற்பத்தோடு இருந்துகொண்டு, புறவுலகில் தயவுப் பணி புரிவதால் அகங்கண்ட ஜோதியே, புறங்கொண்டு இவ் உடலையும் தன்மயமாய்ச் செய்து வாழ்விக்கும். மற்றபடி சங்கற்பமில்லா எல்லா உழைப்பாலும் இருவினை சூழப் பிறவித் தொடர் வளரும்.

- சுவாமி சரவணானந்தா.

# A36 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## சாமான்யரின் கேள்வி

ஒருவர் பல வருடங்களாக தினசரி திருவருட்பா படிப்பது, ஏழைகளுக்கு அன்னமிடுவது என்று இதைமட்டுமே செய்து வருகின்றார்.

அவர் எவ்வாறு கடவுளைக் காண்பார் என்பதை தயவுடையவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

எல்லாம் தானாக நடக்கும் என்று பொதுவாகக் கூறக்கூடாது

தெளிவான பதில் தாருங்கள் தயவுடையவர்களே!

அன்பு வடிவம் ஐயா வந்தனம் வந்தனம்.

“சத்விசாரமும் பரோபகாரமும் இரண்டும் சுத்த சன்மார்க்கிக்கு இரு கண் போன்றது.”

சன்மார்க்கம் எனும் பாதையில் நடக்க இருகால் போன்றது.

“சத்விசாரம்” என்பது,

“சத்து+வி+சாரம்” ஆகும். அதாவது சத்துப் பொருள் ஆகிய இயற்கை உண்மைக் கடவுள், நம் சிரநடு விளங்கும் சிற்சபை(சிற்றம்பலம்) ஆகிய ஆன்ம அணுவுக்குள், “வி” ஆகிய “அருள் ஒளி விளக்காய்” சதா பிரகாசித்துக் கொண்டுள்ளார். அவரை ஆன்ம அறிவினால் “சார்ந்துக்கொண்டு” வாழ்தலே உண்மை சத்விசாரமாகும்.

எனவே, நாம் இடைவிடாது “சத்விசார வசத்தராய்” இருக்க வேண்டும் என்பதே வள்ளலார் ஆணை. சத்விசாரம் என்றால் நாலுபேர் சேர்ந்து திருவருட்பா - வள்ளலார் பற்றி பேசிக்கொண்டு இருப்பதல்ல. **“சத்விசாரம் என்பது உள்நோக்கிய பயணம்; அக ஆன்ம விசாரம்.”**

நாம் முதலில் இடைவிடாது நமது மனதை புருவமத்தியில், சிற்சபையில் செலுத்த வேண்டும் என்று கூறுகின்றார் வள்ளலார்.

**சத்விசாரம் என்பது தியானமே.** நாம் “தேகம் நான்” என்ற புறநிலை உணர்வைக் கடந்து, புருவநடுவுள் புகுந்து நமது உண்மை வடிவமாகிய “அருட்ஜோதி ஆன்ம அகவடிவில்” நிலைத்துவிட வேண்டும்.

இந்த நிலையைத்தான் வள்ளலார் முக்தி நிலை என்கின்றார். **சுத்த சன்மார்க்கத்தில் முக்தி நிலை சத்விசாரத் தியானத்தால் முதலிலேயே பெற்றுக்கொள்வது.** ஆனால் இந்த முக்திநிலை மற்ற சமய, மத, மார்க்கங்களில் முடிவில்தான் பெறுவதாக உள்ளது.

**"முக்தி என்பது நிலைமுன் உறு சாதனம்,"**
**அத்தகவு என்ற என் அருட்பெருஞ்ஜோதி**

என்று வள்ளற்பெருமான் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு புறத்துணைக் கருவியாகத்தான் நமக்கு வள்ளலார் திருவருட்பாவை வழங்கியுள்ளார்.

ஆத்ம விசாரம் இல்லாது, "தேகமே நான்" என்ற புன்புலால் அசுத்த உணர்வில் இருந்துக்கொண்டு திருவருட்பாவை வாசித்து வந்தால் உடனே, இந்தப் பிறவியிலேயே நாம் பெற வேண்டியதைப் பெற்றுக்கொள்ள முடியாது.

அதே போல் அன்னதானம் ஆகிய ஜீவகாருண்யப் பணியையும் "அக ஆன்ம அருட் ஜோதி வடிவத்தில் உள்ளே நிலைத்திருந்துக் கொண்டுதான்" புரிய வேண்டும். இல்லை எனில் அது பெரும் புண்ணியமாக சேர்ந்து பல பிறவிகட்கு நல்ல இகலோக, சுக போக இன்ப வாழ்வு கொடுத்துவிடும். எனவே பசியாற்றுவித்தல் அகநிலையில் தங்கி இருந்துக்கொண்டு தான் புரிய வேண்டும்.

"கையறவு இலாது நடுக்கண் புருவப் பூட்டு,
கண்டு களி கொண்டு திறந்துண்டு நடு நாட்டு!!"

-என்பது சுத்த சன்மார்க்க சாதனம்.

## A37 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### "பசித்திரு; தனித்திரு; விழித்திரு!!"

### "அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் சித்தி உபாயம்"

"நமது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், நம் புருவ மத்திக்கு நேர் உட்பாகத்தில், உச்சிக்குங் கீழே உண்ணாக்கும் மேலே, தனிப்பெருங் கருணையோடு திகழ்வதால்," நாம் சுத்த கரணத்தோடு புருவ மத்தியில் நின்று, "ஒருமையும் தயவும்" உண்டாக்கிக் கொண்டு,

பரோபகார சிந்தனையோடு தயை விளங்கும் செயல் புரிந்து கொண்டு இருத்தல் வேண்டும். இப்படி "புருவமத்திய நாட்டத்தைப் பெற்றுக் கொள்வதே நெற்றிக்கண்ணைத் திறந்து கொள்ளல்" என்றும், "உபநயனம்" செய்யப் பெறல் என்றும், "ஞானஸ்னானம்" கொடுக்கப்படல் என்றும், உண்மையாக அறியவேண்டும். அப்படி நெற்றிக்கண்ணைத் திறந்து கொண்டவர்கள், உபநயனத்தைப் பெற்றுக்கொண்டவர்கள், ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள், உண்மைக் கடவுள் நிலையை அடையும் மட்டும், சுத்த சன்மார்க்கத்தில், பிரம்மச்சரியத்தில் உண்மை மார்க்கத்தில் பயில வேண்டும். எப்படி எனில், அளவாக சுத்த சத்துவ ஆகாரத்தை ஏற்று, "சதா நம் அருட் பெரும் பதியை சிந்தித்து நின்று," நேர்ந்த மட்டில் அருட்பணியாற்றிக்கொண்டு இருத்தல் வேண்டும். இப்படி இருந்து "நம்மில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அனுபவம் ஓங்க," ஓங்க, ஊன் உறக்கம் குறைந்து கொண்டே வந்து, முடிவில் திருவருட் பூரணத்தால், அருட்பெருஞ்ஜோதி சக்தி நம் தேகத்திலும், ஜீவனிலும் நிறைந்து, என்றும் அழியாத சுகநிலை வழங்கும்.

மேற்படி சுத்த தேகம் பெறுவதற்கு உபாயம்;

### "பசித்திரு, தனித்திரு, விழித்திரு"

என்ற முப்பெரும் அனுபவ மகாவாக்கியங்களால், நம் சுத்த சன்மார்க்கம் வழங்கியுள்ளது.

இவற்றின் உண்மை அனுபவம், சுத்த சன்மார்க்கிகளுக்குத் தான் அருளப்பட்டுள்ளது. நெற்றிக்கண்ணைத் திறக்கப்பெற்ற மெய்ஞ்ஞானிகள், எல்லா உண்மைகளையும் அறிவர். "நம் அகத்தின் கண் மிளிரும் அருட்பெருஞ்ஜோதி பதியை இடைவிடாது புருவ மத்தியினின்று சிந்தித்து இருப்பர்." அதாவது, அவர்களின் நெற்றிக்கண் இமையாது "விழித்திருந்து" தெய்வ ஜோதியை பார்ப்பற பார்த்து நிற்கும். அவர்களை, அப்போது மாயா சக்திகள் ஒன்றும் தாக்க முடியாது. ஏனென்றால், "அவர்கள் அழிவற்ற அருளொளியில் நிலைத்திருக்கின்றனர்." ஆகையால் இவர்கள் எங்கிருப்பினும் எதனாலும் பற்றப்படாது "தனித்தே" இருப்பவர் ஆவர். அன்றியும், அவர்களுடைய தேகத்திற்கும் அருட்பெருஞ்ஜோதியே ஆதாரமாய் இருத்தலால், அத்தேகம் பிரபஞ்ச வஸ்துக்களின் ஆதாரமின்றி நிலைக்கும். ஆகையால் அவர்கள் தேகத்திற்கு உணவு தேவையில்லை.

அவர்கள் எப்பொழுதும் ஆகாரம் கொள்ளாது, நிராகாகாரமாய் நிலைத்திருப்பார்கள்.

ஆகவே சுத்த சன்மார்க்கிகள் மட்டும் பசித்திருப்பார்கள்; தனித்திருப்பார்கள்; விழித்திருப்பார்கள்.

நாமும், தயையும், ஒருமையும் உடையவர்களாகி, நெற்றிக் கண்ணைத் திறக்கப் பெற்றுக் கொண்டு, சுத்த சன்மார்க்கத்தில் நின்று பழகி வரும் போது, "அகத்து ஒளிர் அருட்பெருஞ்ஜோதி அனுபவப்படப்பட," ஆகாரமும், நித்திரையும், புறச் சார்புகளும் சிறிது சிறிதாக குறைந்து கொண்டு வந்து முடிவில் அவற்றை முற்றும் ஒழித்து, எப்பொழுதும் பசித்திருக்கவும், தனித்திருக்கவும், விழித்திருக்கவும் கூடும்.

இப்படி ஆகாரத்தையும், நித்திரையையும், புறச் சார்புகளையும் ஒழிக்க முயலுமுன், பிரபஞ்ச போகத்தினிடத்து, நிராசையும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் சக்தியில் பூரண நம்பிக்கையும், பற்றும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்படுத்திக் கொண்டிருந்தால் தான், நமக்கு பசியுணர்ச்சி ஏற்படுமாயின், உடனே அருட்சக்தியே அதை மாற்றிவிடும். பசியொழிய, தத்துவங்கள் எல்லாம் நம் வசப்பட்டுவிட, நாம் தனித்து இருக்கவும், அப்படி இருந்து அருட்பெருஞ்ஜோதியையே எப்போதும் தரிசித்திருக்கவும் கூடும். ஆகையினால், நம் அருட்பெருஞ்ஜோதி சக்தியை முழு நம்பிக்கையோடு பற்றிக் கொண்டுதான்,

**"பசித்திருத்தல் வேண்டும்"**

**"தனித்திருத்தல் வேண்டும்"**

**"விழித்திருத்தல் வேண்டும்"**

இப்படி இருந்தால் நமது தனிப்பெருங்கருணைத் தலைவர் நம்மில் வெளிப்பட்டு, பூரண திருவருட் சக்தியை வழங்கி, சுத்ததேகச் சுகவாழ்வைத் தந்து உலவாப் பேரின்பத்தில் விளங்கச் செய்வார்.

அப்படி அல்லாது தயவும் ஒருமையும் கொண்டு நெற்றிக்கண்ணைத் திறக்கப்பெறாமற் போனால் கடவுளுடைய திருவருள் விளக்கம் பெற முடியாது. அத் திருவருள் விளக்கத்தை உண்மையாகக் கண்டு கொள்ளாவிட்டால், இவண் திருவருட் சக்தியைப் பெற்றுக் கொள்ள முடியாது. அவருடைய திருவருட் சக்தியை பெற்றுக் கொள்ள முடியாது

போனால், நம்முடைய பசியை உண்மையாக, நித்தியமாக ஒழிக்க முடியாது, அப்போது அநித்திய பிரபஞ்சப் பொருள்களின் உதவியை நாட வேண்டிவரும். அதனால் நம் தேகத்திற்கு தீங்கு நேரும்.

அன்றியும், நமக்கு உண்டாகும் பசியையும், நித்திரையையும், பிற சாதனையாலும், தந்திரங்களாலும் தவிர்த்துக் கொண்டு, நிராகாரத்தோடு விழித்திருப்போமானால், நம்மைச் சூழ்ந்துள்ள மாயா சக்தியினால் நமது தேகம் பாழ்படுத்தப்படும். அன்றியும் நிராகாரத்தோடு, கான்களிலும், மலை முழைகளிலும் தனித்திருந்தும் விழித்திருந்தும் தவம் செய்யும் பெரியார்களும், அருட்பெரும் கடவுட் சக்தியை பெற்றுக் கொள்ளாததினால்தான், யோக சக்தியால் பல நூறு ஆண்டுகள் இருந்தாலும், கடைசியில் தங்கள் தேகத்தை விட்டு விடுகின்றார்கள். ஆகையினால், நாட்டைத் துறந்து காட்டிற்கு சென்று, கந்த மூலங்களையும், பண்டு பலாதிகளையும் உண்டு, தனித்திருந்து, தவஞ் செய்து கடவுளைக் கண்டு கொள்ளலாம் என்பது உண்மை அல்ல. அப்படிச் செய்வது திருவருட் சம்மதமும் அன்று.

நமது தனிப்பெருங்கருணைக் கடவுள் நம்மீது வைத்த பெருந்தயவு காரணமாய், நமக்கு இவ் உயர்வுடைய மனிதப் பிறப்பைத் தந்து, இதிலிருந்து ஒருமையால் அவரை அறிந்தும், தயவால் அருள் அடைந்தும், அவருடைய பூரணத் தன்மையையும் பெற்றுக் கொள்ளும்படி விதித்துள்ளார்.

இதனால் இம் மனித பிறப்பைப் பெற்றுக்கொண்ட நாம் மாயா பிரபஞ்ச அநித்திய சுகபோகங்களில் பற்று வைக்காது, திருவருளை அடைந்து, நித்திய வாழ்வு பெறவேண்டும். ஆனால், இந்த மாயா பிரபஞ்சத்தை முற்றிலும் வெறுத்துத் தள்ளி விடக் கூடாது. அப்படி வெறுத்து, துறவு கொண்டால், இந்த மாயா தேகத்திலும், பிரபஞ்சப் பொருள்களிலும் வெறுப்பு உண்டாகி விடும். இத் தேகத்திலும் பொருளிலும் வெறுப்பு உண்டாகி விட்டால், இவை கொண்டு பரோபகாரம் செய்து பெற்றுக் கொள்ள வேண்டிய தயா உணர்ச்சியும் அருள் உணர்ச்சியும் பெற்றுக் கொள்ளக் கூடாது போகும். ஆகையால் இவைகளைத் துறத்தல் கூடாது.

அன்றியும், நம்மை இம் மாயா தேகத்தில் வருவித்து, மாயா பூத பௌதிகப் பொருள்களால் வளரும்படி செய்துள்ள நமது ஆண்டவருடைய திருவுள்ளத்தை உண்மையாக அறிந்து கொண்டால், இத் தேகத்தையும், பொருள்களையும் வெறுக்கத் தான் நம் மனம்

துணியுமா? வெறுத்துத் தள்ளி, இத் தேகத்தை அலட்சியம் செய்து மண்ணாக்கிக் கொள்ளத்தான் நாம் இசைவோமா?

நம்பதி நம்மை இத் தேகத்தில் வருவித்து, மாயப் பிரபஞ்ச பொருள்களால் வளர்த்து, இத் தேகத்தின் உள்ளீடாய் மறைந்திருக்கும், அருட்பெருஞ்ஜோதி நித்தியப் பரம்பொருட் சக்தியைக் கண்டு கொண்டு, அதன் துணையால் இத் தேகத்தையே அருட்பெருஞ்ஜோதிப் பொன்னென நித்திய தேகமாக்கிக் கொள்ளும்படி திருவுளம் கொண்டு உள்ளார். ஆகையினால், இந்த தேகத்தை அலட்சியம் செய்யக்கூடாது. அருட்பெரும் ஜோதியைப் பெறும் மட்டும், இத் தேகம் நிலைத்திருக்க வேண்டும். ஆதலால் பிரபஞ்ச பொருள்களில் விருப்பும் வெறுப்பும் இல்லாது அவை, நம் கைக்கு வர வர தயையோடு பிறர் பசிக்கும், பிற அவத்தைக்குமாய் பரோபகரித்துக் கொண்டிருக்க வேண்டும். இப்படி செய்துக் கொண்டிருந்தால், தயா ஒழுக்கமும் திருவருள் விளக்கமும் அடைந்து, நாம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ள கூடும். ஆகவே, இத் தேகத்தை திருவருள் அடையும் வரை, அதி ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும், அத்தோடு நமக்கு எந்த மட்டும் பிரபஞ்சப் பொருட்கள் வழங்கப் படுகின்றனவோ, அந்த மட்டும், இத் தேகத்தை வைத்துத் திருவருள் பெறுவதற்கு, நேர்ந்த ஜீவர்களுக்குத் தயையோடு பரோபரித்துக் கொண்டு இருத்தல் வேண்டும். இதுவே திருவருட் சம்மதம் என்று உண்மையாக அறியவேண்டும். ஆகையால், மனித தேகத்தைப் பெற்றுள்ள என் உரிமைச் சகோதரர்களே இத் தேகத்தை வெறுக்க வேண்டாம்; பிரபஞ்சத்தைத் துறக்க வேண்டாம்; இதற்கு பிரமாணம்;

“ஓடாது, மாயையை நாடாது நன்னெறி ஊடாது இரு” என்றீர்-வாரீர்!!

“வாடாது இரு!!”- என்றீர் வாரீர்

என்ற திருவருட்பிரகாச வள்ளற் பாவால் தெளியப்படும். துறவு கொண்டு வீட்டை விட்டு ஓட வேண்டாம். ஆனால் மாயையில் விசேஷ பற்று வைக்க வேண்டாம். நன் முயற்சியோடு வாட்டமற்றிருந்து, இப்பிறவிப் பெரும் பயனைப் பெற்று, பேரின்ப சித்திப் பெருவாழ்வில் அருட்பெருஞ்ஜோதி மயமாய்த் திகழ்வோம்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

-சுவாமி சரவணானந்தா

# A72 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

"நடுநாடி நடுநாடி" "நடமாடும் பதியே"
நடராஜ நடராஜ நடராஜ நிதியே
நடுநாடி யொடுகூடி நடமாடும் உருவே
நடராஜ நடராஜ நடராஜ குருவே
நடுநாடி இடைநாடி நடமாடும் நலமே
நடராஜ நடராஜ நடராஜ நலமே!

- திருவருட் பிரகாச வள்ளலார்.

இப் பாடலுக்கு பொருள் தெரிந்தால் பகிர்தல் வேண்டும்.

"நடுநாடி நடுநாடி நடமாடும் பதியே";-

"நடு" என்ற சொல் மிக மிக முக்கியமான சொல் ஆகும்.

"நடு நீங்காதிரு!!" என்பார் பட்டிணத்து அடிகள்.

"கையறவு இலாது நடுக்கண் புருவப் பூட்டு, கண்டு களி கொண்டு திறந்துண்டு "நடு" நாட்டு!!"

என்பது வள்ளற் பெருமான் ஆணை.

நம் புருவமத்திக்கு உள்ளே, சிரநடு விளங்கும்

"ஆன்மாகாசத்திற்கு நடுவே இருப்பதுதான் கடவுள் திருவருள்."

இந்த திருவருளைத் தான், "அருள் உணர்வு அல்லது தனிப்பெருங் கருணை" என்கின்றார் வள்ளலார்.

அகண்டாகாச வான்பெருவெளி முற்றும் நிறைந்த இயற்கை உண்மை கடவுள், "அன்பு இருப்பாய்," அனாதி நித்தியமாய், சத்தியமாய், என்றென்றும் எங்கெங்கும் இருந்து வருபவர்.

அவரே, நம் சிரநடு விளங்கும் ஆன்ம அணுவுக்குள் "நடுவில்", அருள் உணர்வாய் இருந்துக்கொண்டு, ஐந்தொழில் திருநடனம் (ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும்) புரிந்து கொண்டு இருக்கின்றார்.

இதுவே "நடுநாடி நடுநாடி நடமாடும் பதியே" எனப் பெருமான் போற்றுகிறார்.

அடுத்து, "நடுநாடியொடு கூடி நடமாடும் உருவே";

ஆன்ம சிற்றம்பலம் எனப்படும் “சிற்சபையின் நடுவே உள்ளதுதான் கடவுள் இயற்கை விளக்கமாகிய திருவருட்சக்தி ஆகிய அருள் அன்னை”

இதற்கும் உள்ளே தான் அதீதத்தில் “சுத்த சிவம் ஆகிய இயற்கை உண்மையாகிய அன்புருவாம் (சத்துப் பொருள் எனும் மெய்ப்பொருள்) நம் சிற்றம்பலத் தந்தையார், அருள் அன்னையுடன் இயற்கையிலேயே பிரியாது கூடி ஒன்றென இருந்து ஐந்தொழில் திருநடனம் புரிகின்றார்.”

- மிக்க நன்றி அன்பு அம்மா

## A39 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

“அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி”

### கடவுளின் பார்வை யார் மீது படும் ?

1)யார் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் படைத்தவரோ அவர் மீது

2) சத்தியத்தின்படி நடப்பவர் மீது

3) உள்ளொன்று புறமொன்று இல்லாதவர் மீது

4) சுயநலமற்ற அன்புள்ளவர் மீது

5) யார் மனதையும் புண்படுத்தாதவர் மீது

6) நேர்மையானவர் மீது நிலை தவறாதவர் மீது

7) விருப்பு வெறுப்பின்றி பிறருக்கு உதவுபவர் மீது

8) எந்த சூழ்நிலையிலும் யாரையும் ஏமாற்றாதவர் மீது

9) அனைவரும் நம்மைப் போன்ற உயிர்கள் என்று உணர்பவர் மீது

10) எதற்கும் கவலைப்படாமல் நன்னெறியில் மகிழ்ச்சியாக நடப்பவர் மீது

11) கோபம், வெறுப்பு, ஆவேசம், பொறாமை இல்லாதவர் மீது

12) தீய உள்நோக்கம் கொண்ட பார்வை இல்லாதவர் மீது

13) பிறரை மதிப்பவர் மீது

14) பணிவுடன் நடந்து கொள்பவர் மீது

15) இனிமையான வார்த்தைகளை நெஞ்சில் நஞ்சில்லாமல் பேசுபவர் மீது

16) மரியாதையின் படி நடப்பவர்கள் மீது; மரியாதை கொடுப்பவர்கள் மீது

17) உழைப்பின் உண்மையை உணர்ந்து உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் மீது

18) பிறரை மனம், சொல், செயலால் துக்கப்படுத்தாதவர்கள் மீது

19) ஏழ்மையிலும் தர்மத்தை மீறாதவர்கள் மீது

20) பொய்யுரைக்காதவர்கள் மீது

21) பிறர் மீது பழி சுமத்தாதவர்கள் மீது

21) பிறரை மன்னிப்பவர்கள்மீது

22) நேரத்தை வீணடிக்காதவர்கள் மீது

23) சுறுசுறுப்பாக தன் கடமையை தர்மத்தின்படி செய்பவர்கள் மீது

24) எந்த நிலையிலும் பிறரை ஏளனம் செய்யாதவர்கள் மீது

25) கருணை மனம் கொண்டவர் மீது

26) சத்தியத்திற்காக அச்சப்படாமல் வாழ்பவர் மீது

27) நன்மை செய்வதற்காக சூழ்நிலைக்கு ஏற்றார் போல் நடந்து கொள்பவர் மீது

28) நடந்த முடிந்த தவறுக்கு வினாடியில் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஏன் எதற்கு என்ற குழப்பத்தில் வராமல் மீண்டும் நாணயமாக முன்னேறி செல்லக்கூடிய முயற்சி செய்பவர் மீது

29) எப்படிப்பட்டவரையும் உயர்ந்த கண்ணோட்டத்தில் பார்ப்பவர் மீது

30) எந்த சூழ்நிலையிலும் கடும் வார்த்தை பேசாதவர் மீது

31) மூடநம்பிக்கைகளை புறந்தள்ளி எப்பொழுதும் **"எனக்கு இறைவன் உதவுவார்"** என்று பரிபூரணமாக நம்புபவர் மீது

32) பாவம் செய்யாதவர் மீது; பிறரை பாவம் செய்ய தூண்டாதவர் மீது

33) எல்லாம் இறைவன் கொடுத்தது என்று வாழ்பவர் மீது

34) நான் எனது என்று சொல்லாதவர் மீது; யாவும் நன்மைக்கே நடக்கின்றது என நினைப்பவர் மீது

35) விரோதிகளையும் மன்னிக்கும் மனப்பக்குவம் உள்ளவர் மீது

36) வித்தியாசம் வேறுபாடு இல்லாத சமநோக்கு பார்வை உடையவர் மீது

37) சுயம், தொழில், குடும்பம்,சம்பந்தம் இவற்றில் தர்மத்தை மீறாதவர் மீது

38) நல்ல சகவாசத்துடன் இருப்பவர் மீது

39) பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழ்பவர் மீது

40)நல்லதை பேசி பிறரது மனதை அமைதிப்படுத்துபவர் மீது

41) நன்றி மறவாதவர்கள் மீது

42) மலர்முகம் மாறாதவர்கள் மீது

43) பசியாற்றுபவர் மீது

44) நம்பிக்கை துரோகம் செய்யாதவர் மீது

45) சந்தேக புத்தி இல்லாமல் இறைவன் தன்னை பரிபூரணமாக நம்புபவர்கள் மீது

46) மங்களமான எண்ணம், சுபமான வார்த்தைகள் உற்சாகம் கொடுக்கக் கூடிய செயல்கள் இம்மூன்றும் உள்ளவர் மீது

47) இறைவன் தன்னையே நினைத்து தன் நினைவை பிறருக்கும் ஏற்படுத்துபவர் மீது

48) பிறரது தவறுகளை தனது தவறுகளாக எண்ணி மறப்பவர் மன்னிப்பவர் மீது

49) சலிப்பின்றி உற்சாகத்துடன் பிறருக்கு உதவி செய்பவர் மீது

50) நிலையற்ற இந்த வாழ்க்கையில் நிலையானது அன்புதான் என்றெண்ணி வாழ்பவர் மீது

51) தினசரி இறைவனுக்கு செய்யும் கடமைகளில் தவறாதவர் மீது

52) மகிழ்ச்சியுடன் உணவு உபசரிப்பவர் மீது

53) உணவை பிரசாதம் என்றும், நீரை தீர்த்தம் என்றும், அருந்தி மகிழ்ந்து, தனது வாழ்வு இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டது என்று வாழ்பவர் மீது

54) இறை நெறியிலும் இறைவனிடத்திலும் மாறாத அன்புள்ளவர் மீது

55) இறைவனின் புகழையே சதாகாலமும் பாடிக்கொண்டே இருப்பவர் மீது

56) இறை போதனைகளின் வழிப்படி நடந்து பிறருக்கு அதை போதிப்பவர் மீது

57)இது இறைவனின் விருப்பம் என்றெண்ணி அமைதியாக அவரது நினைவில் இருப்பவர் மீது

58) மௌனத்தில் தியானமும் சப்தத்தில் ஞானமும் மட்டுமே வெளிப்படுபவர் மீது

59) தெய்வீக தேஜஸால் தனது தோற்றத்தின் மூலம் இறைவனை வெளிப்படுத்துபவர் மீது

60) இறைவன் கொடுத்த செல்வத்தை தவறான வழிகளில் செலவு செய்யாதவர் மீது

61) தகுதியறிந்து தானம் கொடுப்பவர் மீது

62) தனது அன்றாட கணக்கு வழக்குகளை இறைவனிடம் ஒப்படைப்பவர்மீது

63) ஒவ்வொரு விசயத்திற்கும் இறைவனுக்கு மனதார நன்றி செலுத்துபவர் மீது

64) அனைவரிடமும் ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒருவர் மீது

65) சமாதானம் செய்து மனதை ஆற்றுப்படுத்துபவர் மீது

66) எளிமையாகவும் உதாரணமாகவும் வாழ்பவர் மீது

67) அனைவரையும் உளமார வாழ்த்துபவர்கள் மீது

68) உணவு,உடல், உடை,இருப்பிடம்,செயல் யாவற்றையும் சுத்தமாக வைத்துக் கொள்பவர் மீது

69)நிதானமாக இருப்பவர் மீது; பிறருக்கு நிம்மதியை தருபவர் மீது

70)குணங்கள் நிறைந்த குணவான் மீது

71) அறியாமையில் இருப்பவர்களை வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்பவர் மீது

72) சர்வ சம்பந்தங்களையும் இறைவன் மீது வைத்துள்ளவர் மீது

73) இந்த உடலில் இருந்து ஆன்மா தான் அனைத்தும் செய்கின்றது என்று கவனம் வைத்திருப்பவர் மீது

74)அனைவரும் அழிவற்ற ஆத்மாக்கள் என்று உணர்ந்து நடப்பவர் மீது

75)சகித்துக்கொண்டு பொறுமை காப்பவர் மீது

76)மனதாலும் செயலாலும் யாருக்கும் ஹிம்சை கொடுக்காத அஹிம்சாவாதி மீது

77) எப்பொழுதும் திருப்தியாக இருப்பவர் மீது

78) மனிதாபிமானத்துடன் நடப்பவர் மீது

79) செயலின் விளைவை அறிந்து காரியம் செய்பவர் மீது

80) பாவம் செய்வதற்கு அஞ்சி நடப்பவர் மீது

81)ஆசிகள் கொடுப்பவர் ஆசிகள் அடையப் பெற்றவர் மீது

82) சொல்லும் செயலும் சமநிலையில் இருப்பவர் மீது

83)உலக நன்மைக்கான காரியத்தில் காரணம் சொல்லாதவர் மீது

84) வாயால் சொல்லாமல் அனுபவப்பூர்வமாக இறைவனை வெளிப்படுத்துபவர் மீது

85) ஒவ்வொரு நிமிடமும் இறைவன் தன்னை கண்காணித்துக் கொண்டிருக்கிறார் என்று வாழ்பவர் மீது

86) சம்பந்தம் தொடர்பில் வருபவருக்கு ஏதாவது ஒரு நற்குணம் என்ற பரிசை அளிப்பவர் மீது

87) இறை நியமத்தின் பூர்வமாக பிறருக்கு மகிழ்ச்சி அளிப்பவர் மீது

88)தான் வாழ்க்கையில் அடைந்த அனுபவங்களை பிறருக்கு கூறி நல்வழிப்படுத்துபவர் மீது

89)எப்பொழுதும் இறைவனின் தொடர்பில் இருந்து தன்னை இவ்வுலகில் பாதுகாத்துக் கொள்பவர் மீது

90) தீயதை பார்க்காமல், கேட்காமல், சொல்லாமல், நினைக்காமல் இருப்பவர் மீது

91) சோதனைகளில் எடுத்துக்காட்டாக வாழ்பவர் மீது

92) புண்ணிய காரியங்களை மட்டுமே செய்பவர் மீது

93) ஆன்மாவின் ஆனந்த நிலையில் நிலைத்து இருந்து பரமாத்மாவின் பேரானந்த நிலையில் மூழ்கி இருப்பவர் மீது

94) உடல் ஒரு ஆலயம் எனப் புரிந்து அதை ஆரோக்கியமாக வைத்திருப்பவர் மீது

95) தினசரி சுயமுன்னேற்ற பயிற்சியில் காலம் தவறாமல் ஈடுபடுபவர் மீது

96)தன்னை தாயாய் கவனிக்கும் பஞ்ச தத்துவங்களுக்கு இறைவனிடமிருந்து சக்தியை வாங்கி வழங்குபவர் மீது

97)அன்பாகவும் விலகியும் தாமரை மலர் போல் பற்றற்று வாழ்பவர் மீது

98)தவசீலராகவும் குணசீலராகவும் இருந்து பிறருக்கு நன்மை செய்பவர் மீது

99) மனமுடைந்து போனவருக்கும் நம்பிக்கையை வழங்கி அவரை வலிமை உடையவராக மாற்றுபவர் மீது

100) “செய்பவரும் செய்விப்பவரும் அவரே” என்றுணர்ந்து அவரே உலகம் என்று சிவனே என்றிருப்பவர் மீது

இப்படிப்பட்டவர்கள் மீது தந்தை ஈசனின்

அருள் கூர்ந்த பார்வையானது நிச்சயமாக ஏற்படுகின்றது. இது ஒவ்வொன்றும் ஒரு சதவிகிதம் என்று வைத்துக்கொண்டாலும்

நாம் எத்தனை சதவிகிதம் அவரது தயை நிறைந்த பார்வைக்கு பாத்திரமாகி இருக்கின்றோம் என சோதித்து கொள்வோம்.

- ஓர் சன்மார்க்க அன்பர்

திருச்சிற்றம்பலம்.

# A40 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “நித்திய ஆன்மாவும் அநித்திய உடம்பும்”

மனிதனுக்கு புற உடம்பு மிக இன்றியமையாத ஒன்றாகும். மெய்யறிவு நிரம்பப் பெறாதவர்கள், விசாரம் இல்லாதவர்கள், புறத்தோற்ற வடிவத்தையே மனிதனாக கருதிக் கொள்ளுகின்றனர். அது சரியல்ல.

உண்மை மனிதனுக்குத் தேகப் பிறவி உண்டாவதும் நீங்குவதும் அருள் நியதிப்படி உண்டாகின்றன. ஆகையால், **“இயற்கையான உண்மை மனிதன் நிலை, அநித்திய தேகத்திற்கு உள் மறைந்திருக்கும் நித்திய ஆன்ம சொரூபம் ஆகும்.”**

இந்த ஆன்மாவே மனிதனின் உண்மை உருவம் என்று கொண்டுவிட்டு, புற விளைவு கொண்டிருக்கும் அநித்திய வடிவத்தை அலட்சியப்படுத்தி விடுதலும் அறியாமையே ஆம்.

ஏனெனில், அந்த அக மெய்யுருவம் விளங்கற்கு இந்தப் புறத் தேகமும் அத்தியாவசியமாய் இருக்கின்றதால், இதுவும் இணைந்து இருக்க வேண்டியுள்ளதாம். ஆகவே, **“உண்மையான மனிதன் அக ஆன்மாவும், புறத் தேகமும் கொண்டு திகழலே நிறை நிலையாகும்.”**

அவ்வான்மா உண்மையில் கடவுள் அம்சமானது. அக் கடவுள் அருளே, அந்த ஆன்மாவிற்கு உயிர் உடம்பை ஆக்கி கொடுக்கின்றதும், வளர்த்துக் கொண்டிருக்கின்றதும், பின்னர் பிரித்து அழிக்கின்றதுமாம். இம் முச்செயலும் ஆன்மாவுக்கு அநாதி காலமாகத் தொடர்ந்து வருகின்றன. **ஏன் அப்படித் தொடர்ந்து பிறப்பும் இறப்பும் உண்டாகின்றன என்றால், “உள்ளிருக்கும் கடவுள் ஞானமும், முடிவற்ற கடவுள் இன்பவாழ்வும் வெளிப்படுதற்காகவே தான்”** என திருவருளாலே உணர்த்தப்படுகின்றோம்.

“அந்தக் கடவுள் உண்மை வெளிப்படுகின்றபோது, அருள் உண்மை மலர்ச்சி பெற்று, அனகமயமாகிப் புற வடிவையும் தன் வண்ணமாக மாற்றி அமைத்துக் கொள்ளுகின்றதாம்.

“அது முதலாக அந்த அழியா அருள் ஒளி வடிவில், மனிதன் அனக சொரூபியாய் வாழத் தொடங்கி விடுகின்றான். இறப்பும், மேல் பிறப்பும் அற்று நித்தியமாய் விளங்க வல்லவன் ஆகி விடுகின்றான்.”

இதனால், கடவுள்தானே மனிதனில் ஆன்மாவாய் அருகிக் கிடந்ததும், தன்னருளால் பலவாகிய பிறப்பு தேகங்களை ஏற்று விடுத்ததும், முடிவில் அருள் அனுபவம் கொண்டிலங்கும் அனக மனித வடிவு கொண்டு திகழ்வதும் சத்தியமாகும்.

**“பதி - பசு - பாச உண்மை”;-**

இவ் உண்மையை உள்ளவாறு அறிகின்ற போது பதி, பசு, பாசத்தின் இரகசியம் எல்லாம் வெள்ளிடை மலையாய் விளங்கும். “ஒன்றான பதியின் அருட் கூறும், பொருட் கூறும் உண்மை வெளிப்படும் வரை, பசு பாசமாகத் தோற்றிச் சூழ்ந்திருந்து, முடிவில், அருள் அனுபவம் உறுகின்றபோது, யாவும் அருளியல் வண்ணமாய் விளங்குதல் சுத்த சன்மார்க்கம் வழங்கிடும் உண்மையாம்.”

**“உண்மை மனிதன், மலபாச ரூபியுமல்ல;”**
**“சிற்றணுப் பசுவாம் ஆன்ம ரூபியும் அல்ல;”**
**“ஒன்றான பதியை அன்றி வேறு எதுவும் அல்லவாம்”**

மூடமான தேகபோகப் பற்றால் தன்னை தேகி ஆகக் கருதிக் கொண்டிருந்ததும், ஆன்ம அறிவு விளங்கிய போது, தான் “தேகி” அல்ல, தற்சுதந்திரமற்ற, சத சத்தாகிய ஆன்மப் பசு வடிவினனே எனத் தீர்மானித்துக் கொண்டு, பதி அருள் வேண்டி தவம் கிடந்த காலத்தும் மனிதன் பூரணம் பெறவில்லை.

**“அருள் ஒளியே - பதி பசு பாசம்”**

இன்று அப் பழைய நிலைகளை எல்லாம் கடந்து மேற்சென்று, **“ஒன்றான பதியைத் தவிர வேறு இல்லை என்ற உண்மையை அருளால் உணர்ந்து, உள்ளொன்றி, இரண்டற நின்று, அருளே தன் இயலாய், உருவாய், வாழ்வாய்க் கொண்டு விளங்கக் கூடியவன் ஆகின்றான் இந்த உண்மை மனிதன்.”**

உண்மையில், கடவுளே இந்த அனக மனிதனாகிச் சத்தால் சுத்த வடிவனாகியும், சித்தால் பலவாகிய வடிவு கொண்டவனாகியும், உலவா நிறை இன்பதோடும் விளங்குகின்றதாம். இம் முடிவு முன் மார்க்கத்தில் வெளிப்பட்டதில்லை. நம் வள்ளல் மூலமாகச் சுத்த சன்மார்க்கத்தின் பயனாக திருவருளே வெளிப்படுத்தி உள்ளதாகும்.

அருட்பெரும் பதியின் ஆற்றலை இனி, சீக்கிரத்தில் வெளிப்படக் காண்போம். அருட்பா அளித்த வள்ளல், அருள் ஒளியை வளர்த்துக் கொண்டு இருக்கின்ற வள்ளல், அருட்பிரகாசத்தை உலகம் கண்டு கொண்டு ஆனந்திக்கச் செய்ய சமீபகாலத்தில் வெளிப்பட்டு அருள்வார். இது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆணையாகும்.

மேற்குறித்த உண்மையைத் திருவருளால் உணர்த்தப்பட்டு அறிந்து கொண்டுள்ள நாம், **அந்த அருட்பெரும் பதி எழுந்தருளிக் கருணை பாலிப்பதற்குத் தகுதியான நிலையமாக நம்மை நாம் தூய்மைப்படுத்தி, தயவு நிரம்பியவர்களாய் வைத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.**

இப்படித் தயா வண்ணமாய்ச் சுத்தமுற்று இலங்குவதற்குத் தினசரி வாழ்வில், "திருஅருட்பா ஓதல், சத்விசாரம் செய்தல், பரோபகாரம் புரிதல், தனித்திருந்து ஒருமையும் தயவும் ஓங்கப் பழக்கப்படுத்திக் கொள்ளல் முறையாகும்.

-சுவாமி சரவணானந்தா.

**"அகமிருந்து வருக அருளுடன்!!**

**அனகமாக வாழ்க தயவுடன்!!!"**

"நித்திய நிலையான ஆன்ம அகம் பற்றி நில்!!
சத்திய பதியான அருட்ஜோதியோடு உறு!!
சுத்த தயவு செயலாக எதையுமே செய்!!!"

## A41 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### மலை உச்சியில் அமர்ந்திருந்தார் கடவுள்..

'வெறுங்கையோடு பார்க்கப் போகாதே... ஏதாவது கொண்டு போ' என்றார்கள்..

இருந்ததை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்..
மலைத்து நின்றேன் மலையடிவாரத்தில்..
ரொம்ப உயரம் போலவே...
ஏற முடியுமா என்னால்...
மலையைச் சுற்றிலும் பல வழிகள்..

மேலே போவதற்கு...

அமைதியான வழி..

ஆழ்ந்த தியானத்தின் வழி..

சாஸ்திர வழி...

சம்பிரதாய வழி..

மந்திர வழி..

தந்திர வழி..

கட்டண வழி..

கடின வழி...

சுலப வழி...

குறுக்கு வழி..

துரித வழி...

சிபாரிசு வழி...

பொது வழி..

பழைய வழி..

புதிய வழி..

இன்னும்...இன்னும்...கணக்கிலடங்கா...

அடேயப்பா....எத்தனை வழிகள்...

ஒவ்வொன்றிலும் ஒரு வழிகாட்டி..

கண்டுகொள்ளவில்லை சில வழிகாட்டிகள்..

'என் வழியில் ஏற உனக்குத் தகுதியில்லை...'

ஒதுக்கினர் சிலர்..

நான் கூட்டிப் போகிறேன் வா...

கட்டணம் தேவையில்லை..

என் வழியில் ஏறினால் போதும்..

எத்தனை பேர் என் வழியில் ஏறினர் என கணக்குக் காட்ட வேண்டும் எனக்கு...

என கை பிடித்து இழுத்தனர் சிலர்...

மேலே ஏறும் சிரமம் உனக்கு வேண்டாம்

உனக்குப்பதில் நான் போகிறேன்..

கட்டணம் மட்டும் செலுத்து...

என சிலர்..

பார்க்கணும் அவ்ளோதானே...

இங்கேயிருந்து காட்டுகிறேன் பார்..

அது போதும்.....

அதெல்லாம் நாங்க மட்டும்தான் ஏறமுடியும்...

ஆணவ அதிகாரத்துடன் சிலர்....

அங்கேயெல்லாம் உன்னால் போகமுடியாது..

உன்னால் ஏறமுடியாது...

தூரம் அதிகம்.. திரும்பிப்போ...

அவரை என்னத்துக்குப் பார்க்கணும்..

பார்த்து ஆகப்போறது என்ன..

அதைரியப்படுத்தினர் சிலர்...

உண்மையில் நீ பார்க்கும் தூரம் இல்லை..

ஏறினால் ஏறிக்கொண்டே இருக்கவேண்டும்

அது ஒரு வழிப்பாதை...

ஒரு முறை ஏற ஆரம்பித்தால் திரும்ப முடியாது...அப்படியே போகவேண்டியதுதான்...

பயமுறுத்தினர் சிலர்...

சாமியாவது...பூதமாவது..

அது வெறும் கல்..

அங்கே ஒன்றும் இல்லை..

வெட்டி வேலை...

போய் பிழைப்பைப் பார்...

பாதையை அடைத்து வைத்துப்

பகுத்தறிவு பேசினர் சிலர்...

என்ன செய்வது...

ஏறுவதா...

திருப்பிப் போவதா...

குழம்பி நின்ற என்னிடம்

கை நீட்டியது ஒரு பசித்த வயிறு

கடவுளுக்கென்று கொணர்ந்ததை

அந்தக் கையில் வைத்தேன்..
“மவராசியா இரு”
வாழ்த்திய முகத்தினைப் பார்த்தேன்..
நன்றியுடன் எனை நோக்கிய
அந்தப் பூஞ்சடைந்த கண்களிலிருந்து
புன்னகைத்தார் கடவுள்.!!!!
இங்கென்ன செய்கிறீர்..!!
**நான் இங்கே தானே இருக்கிறேன் !!**
அப்போ அங்கிருப்பது யார்..?
மலை உச்சியை நோக்கிக் கை நீட்டினேன்..
“ம்ம்ம்... அங்கேயும் இருக்கிறேன்
எங்கேயும் இருப்பவனல்லவா நான்
இங்கே எனைக் காண முடியாதவர்
அங்கே வருகிறார்...
சிரமப்பட்டு!!!!...”
‘ஆனால்’.. திணறினேன்...
‘இது உமது உருவமல்லவே...’
“அதுவும் எனது உருவமல்லவே...
எனக்கென்று தனி உருவமில்லை..
நீ என்னை எதில் காண்கிறாயோ
அது நானாவேன்...”
‘அப்படியென்றால்..??’
“வாழ்த்திய கண்களில் உனக்குத் தெரிபவனும் நானே....
பசித்த வயிற்றோடு கைநீட்டியவன்,
உணவளித்த உன் கண்களில்
காண்பதும் எனையே..
தருபவனும் நானே...
பெறுபவனும் நானே...
நான் எங்கும் எதிலும் இருக்கிறேன்...
என் தரிசனம் பெறக் கண் தேவையில்லை..
மனதுதான் வேண்டும்...”

‘அப்போ உனைப் பார்க்க
மலை ஏற வேண்டாம் என்கிறாயா??’.
குழப்பத்துடன் கேட்டேன்..
“தாராளமாக ஏறி வா...
அது உன் விருப்பம்...
அங்கும் நான் இருக்கிறேன் என்றேனே..
அங்கு வந்தாலும் எனைப் பார்க்கலாம்..”
கடவுளே.. விழித்தேன்...
‘எனக்குப் புரியவில்லை...’
“புரிந்து கொள்வது அவ்வளவு கடினமல்ல...
**உனக்காக மட்டுமே நீ வாழ்ந்தால்..**
**என்னைக் காண, நீ சிரமப்பட்டு**
**மலையேறி உச்சிக்கு வரவேண்டும்...**
**பிற உயிர்களுக்காகவும் வாழ்ந்தாய் என்றால்...**
**நீ இருக்குமிடத்திலேயே**
**எனைக் காண்பாய்.**

புன்னகைத்தார் கடவுள் அற்புதமான பதிவு. முழு அர்த்தம் தெரிந்து படித்து, உணர்ந்து, பகிர்ந்து மகிழ்வோம் நண்பர்களே:

மனிதம் காப்போம்

மனிதனாக வாழ்வோம்

வாழ்க வளத்துடன் நலத்துடன்

## A42 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

கேள்வி எண் 1.

### சுத்த சன்மார்க்கத்திற்கும் மற்ற சன்மார்க்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

சுத்த சன்மார்க்கம் என்பது சத்து மார்க்கமாகும். அதாவது நமது உண்மையும் கடவுள் உண்மையும் ஒன்றாகவே உள்ளது. அது “சத்து” என்னும் “சத்துப் பொருளாய்” உள்ளே மிக மிக ஆழ்ந்த நிலையில் உள்ளது. இதுவே “அகநிலை” என்றும் “மெய்யகம்” கூறப்படுகிறது.

“சுத்த சத்து” என்பது அகநிலையிலுள்ள “அருள் ஒளியையே” குறிக்கும். சத்விசாரத்தால் முதலில் இந்த அக ஆன்ம அருள் நிலையை உறுதியாக பற்றிக்கொள்ளுதல் முதற் சாதனம். இதுவே முத்திநிலையாகும். இந்த அகநிலையில் பிறழாது இருந்து கொண்டு புறத்தே பரோபகார வாழ்வால் நம்மைச் சூழ்ந்துள்ள உயிர்களுக்கு அன்புத் தொண்டு புரிந்து வருவதே சுத்த சன்மார்க்கம் ஆகும்.

பிற சமய, மத, மார்க்கங்கள் புறநிலையிலிருந்து அகம் நோக்கி உட்சென்று, அகநிலையை அறிந்து பின் அதிலே பெருஞ்சுகங் கண்டு, அதிலேயே ஆழ்ந்து போவது. உலகையும், உடலையும் வெறுத்து உள் ஒடுங்குகின்ற முறை. இதனால் வாழ்வின் அந்தியத்தில் தேகம் விட்டுவிட்டனர். உயிர்ச் சக்தியும் ஆன்மாவில் ஒடுங்க, அவர்கள் சச்சிதானந்த அனுபவ வாழ்வும் மறைந்து விட்டது.

புறமார்க்கமாகிய புலன் இன்ப உலகியல் ஆனாலும் சரி, ஆன்ம இன்ப அகவாழ்வானாலும் சரி இரு சாரார்க்கும் தேகம் அவசியம் வேண்டும். இந்த பௌதிக உடல் இருந்தால்தான் புறவுலக வாழ்வானாலும் சரி, அகநிலை ஆன்ம இன்ப வாழ்வானாலும் சரி அனுபவ வாழ்வு சாத்தியமாகிறது.

ஆக, சமய - மத மார்க்கங்கள் தேக நிலையிலிருந்து அகம் நோக்கிச் சென்று உள் ஒடுங்கும் முறையையே இதுவரை வழங்கியிருந்தது. அன்றைய ஆன்மீகப் பரிணாம வளர்ச்சி அப்படித்தான் இருந்தது.

ஆனால், வள்ளலார் மூலம் திருவருள் வழங்கியது சுத்த சன்மார்க்கம்.இது “அகமிருந்து அனகமாக விரிந்து” என்றும் மரணமிலாப் பெருவாழ்வைத் தருவது.

கேள்வி எண் 2.

## வள்ளலார் உருவ சிலைகளையோ, மற்றும் படங்களையோ வைத்து வழிபாடு செய்வது சுத்த சன்மார்க்கம் ஆகுமா ?

வள்ளற்பெருமானின் திருவுருவப் படங்களையோ, திருவுருவங்களையோ வழிபடுவது ஆரம்பத்தில் மனோகரண ஓர்மைக்கு ஓரளவு நன்மை தரும். ஆனால் உருவ வழிபாடு வள்ளலாருக்கு சம்மதமல்ல.

“இந்த ஜனங்கள் தெய்வத்தின் உண்மை தெரியாததினாலன்றோ என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள் அந்தோ!!”, என அன்று நம்மைப் பார்த்து பரிதாபப்பட்டார். எனவே, புறவழிபாட்டு நிலையைக் கடந்து விடவேண்டும் என்பதே வள்ளற்பெருமான் ஆணையாகும்.

## A43 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### “சரவணபவாய நம”

### “ஓம் நமச்சிவாய”

போன்ற மந்திரங்கள் கூறுவதன் பின்னணி என்ன..?

“அருட்பெருஞ்ஜோதி” மகாமந்திரம் சொல்லக்கூடிய முடிவான நிலை என்ன..?

“சன்மார்க்கத்தின்”

முக்கிய லட்சியம் என்ன..?”

“**நமசிவய**” என்பது தூல பஞ்சாட்சரம்.

இது இறைவனுடைய தூலத்தோற்றமாகிய மாபிரபஞ்சத்தை குறிக்கின்றது. இந்த பிரபஞ்சம் கடவுளுடைய தூலவடிவம்.

**ந** - நிலம்

**ம** - நீர்

**சி** - நெருப்பு

**வ** - காற்று

**ய** - ஆகாயம்

இந்த தூல பஞ்சாட்சரத்தை வாய்விட்டு ஜெபிக்க இக, பர இன்பமும் முடிவில் கடவுட் சார்பும் கிட்டும்.

“**சிவயநம**” என்பது சூக்கும பஞ்சாட்சரம்.

இதை நாவசையாமல் சிந்திக்க கடவுளுடன் ஐக்கியம் ஆகலாம்.

“**சி**”- எல்லாம் வல்ல இயற்கை உண்மையாகிய சத்துப் பொருள்.

“**வ**”- அதன் அநந்நியமாகிய அருள்,

“**ய**”- ஆன்மா

“**நம**”- இறைவா உன்னை நமஸ்கரிக்கின்றேன். “யான்,எனது” என்ற தற்போதம் ஒழிந்து இறைவனை சரணடைதல்.

முந்தைய நம் மெய்ஞ்ஞானிகள், உடல், புறவுலக வாழ்க்கை வெறுத்து “புறமிருந்து அகம் புகுந்து உள்ளொளியில் - சிவஜோதியில் ஒடுங்கினர்.” அதனால் அவர் சச்சிதானந்த அனுபவ வாழ்வும் தடைபட்டது.

நம் வள்ளற்பெருமான் “அகம் ஒடுங்குதல் - உள்ளொளியில் ஐக்கியமாதல் கூடாது” எனத் திருவருள் உணர்த்த உணர்ந்துக்கொண்டார். மேலும் அவர்கள் வேண்டியது “பிறவாமையே”!!

ஆனால், வள்ளலார் வேண்டியது “இறவாமை!!”

இது “அருள்நிலையிலிருந்து விரிந்து அனகமாக வாழ்கின்ற நெறிமுறை!!”

இதில் உயிர்ச்சக்தியும், உடலும் எக்காலும் அழியாது நித்தியமாய் உடன் கொண்டு வாழ்கின்ற நிலையாகும்.

அதனால்தான் “அருட்பெருஞ்ஜோதி” என வெளிப்பட்டது.

“அருள்” - அகம்,

“பெருஞ்ஜோதி” - புறம்.

“அருட்பெருஞ்ஜோதி” - என்பது ஆன்ம அகத்தையும், தேகமாகிய புறத்தையும் இணைக்கும் “**அனகப் பாலமாகும்!!**”

முன்பு பிறவாமையாகிய முக்திநிலையே முடிவானதாகக் கொள்ளப்பட்டது. ஆனால், சுத்த சன்மார்க்கத்தில் எல்லாம்வல்ல “சித்தி நிலையே” முடிவானது என கொள்ளப்படுகிறது.

சுத்த சன்மார்க்கத்தின் லட்சியம் தற்போதம் ஒழிந்து, “கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல்” ஆகும். இதில் திரிதேக சித்தியாகிய,

சுத்த தேகம்,

பிரணவ தேகம்,

ஞான தேகம்,

பெற்று “சச்சிதானந்த அனுபவத்தோடு, நித்தியானந்தமாய், யாவும் தானாய் ஒருமையில் நின்று” வாழும் பேரின்பப் பெருவாழ்வாகும்.

“அகமிருந்து வருக அருளுடன்!!
அனகமாக வாழ்க தயவுடன்!!”

## A44 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### “வாழு!; வாழ விடு!!”

பாழ் வாழ்வெனும் இப் படு மாயையிலே
வீழ்வாய்! என என்னை விதித்தனையே!!
தாழ்வானவை செய்தனதாம் உளவோ?!
“வாழ்வாய் இனி நீ!!” மயில் வாகனனே. -அருணகிரிநாதர்.

**“வாழு!!”**

பொய்யான சிறு புலன் இன்பத்தைத் தந்து, பின்னர் பெருந் துன்பத்தை தருகின்ற இந்த பிரபஞ்ச மாயா உலக வாழ்விலே “வீழ்வாய்!!” என என்னை விதி செய்திருக்கின்றனையே, இறைவா! இது தகுமோ! இது முறையோ!! இது நின் தருமந் தானோ!!!

கீழ்மையான, தாழ்ந்த மாயா பொய்யின்ப, நிலையற்ற, உலக போகங்களை அனுபவித்து அனுபவித்து, இப்பொழுது பெருந்துக்க சாகரத்தில் மூழ்கிக் கிடக்கும்படி விட்டு வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனையே!!

நான்தான் இப்படி கெட்டுப்போய் விட்டேன்.

“நீ வாழ்வாய்!!” (நீ நல்லாயிரு!!)

இப்படி ஒரு பொருள்.

மற்றொரு பொருள்;

"வாழ்வாய், இனி நீ!!"

இனியாவது, நீ என்னுள் வாழ்ந்து, ("வாழு!!") என்னை உய்யக்கொண்டருள், அப்பா!!-என்கின்றார் அருணகிரிநாதர்.

அதற்கு, இறைவன் என்ன பதில் சொல்கின்றார் என்றால்,

என்னை நீ, "**வாழ விடு!!**" என்கிறார்.

அதாவது, நான் உன்னுள் வாழ்வதற்கு, "**நீ வழி விடு!!**" என்கின்றார்.

அதற்கு அருணகிரிநாதர் கேட்கின்றார்;-

இறைவா, " நான் வாழ, நீ வழி விடு!!" என்கின்றீர்!! இதற்கு என்ன தடையாக இருக்கின்றது?! தெரிவித்தருள்க என்கின்றார்.

அதற்கு இறைவன், "யான், எனது என்கின்ற உனது தற்போத உணர்வே பெருந் தடையாக இருக்கின்றது." உனது ("நான், எனது") தற்போத உணர்வு நீங்கி அருளில் சரணடைந்தால் மட்டுமே,

"நான் உன்னுள் வாழ முடியும்" என்கின்றார்.

அப்படியே அருணகிரிநாதரும் "யான், எனது" நீங்கி நிற்கின்றார். அப்பொழுது தன் இறையனுபூதியை இவ்வாறு இசைக்கின்றார், "கந்தர் அனுபூதியில்":-

"**எல்லாம் அற என்னை இழந்த நலம் சொல்லாய்,**" முருகா! சுரபூபதியே!!

"**யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே!!**"

"நான் காணா இடத்து அதனைக் காண்பேம்!!" என்று நல்லோர்கள் நவில்கின்ற நலமே!!

- வள்ளற்பெருமான்

"தயவு"

# A45 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “எப்ப உள்ள வரப் போற?!”

இரண்டு வருடங்களுக்கு முன்னர், கோவை சன்மார்க்க மெய்யன்பர் (“குமார சிவத்தின்” ஓர் திருநாமம் கொண்டவர்) ஒருவருக்கு, இரவு தியானத்தின் போது, இப்படி ஓர் “அசரீரி வாக்கு” கேட்டது.

“எப்பொழுது உள்ளே வரப் போகின்றாய்?!”என்பதுதான் அந்த அசரீரி வாக்கு. உள்ளிருந்து வள்ளற்பெருமான் குரல் காதில் விழுந்தது.

ஆம். உண்மையான “சத்விசாரம்” வேண்டியிருக்கின்றது!!

அந்த உண்மை சத்விசாரத்திற்கான வழி, கீழே “சிவஞான சித்தியார்” எனும் நூலில் ஓர் பாடலைக் காண்போம்.

அறியாமை அறிவு அகற்றி,
அறிவினுள்ளே அறிவு தனை,
“அருளினால் அறியாதே அறிந்து”
குறியாதே குறித்து
அந்தகரணங்களொடும் கூடாதே வாடாதே குழைந்திருப்பையாயில்
பிரியாத சிவம் தானே பிரிந்து தோன்றி
பிரபஞ்ச பேதம் எலாம் தானாய்த் தோற்றி,
நெறியாக இவை எல்லாம் அல்லவாகி,
“நின்று, என்றும் தோன்றிடுவன் நிராதாரனாயே!!”

### “அறியாமை, அறிவு அகற்றி”

ஆன்மாவையும் உள்ளிருக்கும் அருளொளியையும் மறைத்துக் கொண்டிருப்பது, அறியாமையாகிய அஞ்ஞான இருள். இதையே பச்சைத் திரை என்கின்றார் வள்ளலார்.

“விசாரம்” என்கின்ற “அதியுஷ்ணத்தால்” அன்றி வேறுவகையால் இந்த திரை நீங்காது என்றும், “இடைவிடாது எப்போதும் (புருவ மத்தியில் மனதை நிறுத்தி) விசார வசத்தராய் இருக்க வேண்டியது” என்று ஆணையிட்டுள்ளார் வள்ளற்பெருமான்.

அறியாமையையை விசார அதி உஷ்ணத்தால் நீக்கிக் கொள்ள வேண்டும் என்பது சரி.

அடுத்து, அத்தோடு அறிவையும் அகற்றப்பட வேண்டும் என்று கூறுகின்றது ஏன்?!

“கற்ற பொய் நூல்கள் கணத்தே மறைந்தன!!” என்பார் வள்ளலார். நாம் புறத்தில் மன அறிவினால் கற்ற வேதாகம, புராண இதிகாச, சாத்திர தோத்திர நூல்கள் அனைத்தும் “உபாய ஞானமே!!”

“நான்” என்கின்ற “அகந்தை உணர்வோடு” கற்ற நூல்கள் “அனுபவ ஞானம்” பெற உதவா.

எனவே நூல்கள் வாயிலாக பெற்ற உபாயஞானத்தையும் விட்டு விட்டு மேலேறி வர வேண்டியுள்ளது.

இதைத்தான் “அறியாமை அறிவு அகற்றி” என்கின்றார்.

அடுத்து,

“**அறிவினுள்ளே அறிவு தனை அருளினால் அறியாதே அறிந்து**” என்கிறார்.

இங்கு அறிவு என்பது ஆன்ம அறிவைக் குறிக்கும்.

இதுவே அறிவு ஆகாயம் எனும் “சிதாகாசம்” ஆகும். இதுவே மனிதனின் “மெய்யறிவு” ஆகும்.

இந்த அறிவுக்குள் அறிவாக இருப்பதுதான் “அருட் சிவம்” ஆகும்.

இந்த அருட்சிவமாகிய “அருட்பெருஞ்ஜோதியை”, அவன் அருளைக் கொண்டே அறிய வேண்டும். வேறு வழியால் ஆகாது.

“அவன் அருளாலே அவன் தாள் வணங்கி” என்பார் மணிவாசகப் பெருமான்.

அடுத்து, “**அறியாதே அறிந்து**” என்பதன் பொருள் என்ன?!

ஆண்டவர் ஆன்மாவில் அநாதியே அத்துவிதமாய்த்தான் பொருந்தியுள்ளார். இயற்கையிலே ஆன்மாவும் கடவுளும் பிரிவற, ஒன்றென பொருந்தியுள்ளனர். எனவே, ஓர் ஆன்மா தன்னுள் உள்ளொளியாக உள்ள கடவுளை புதிதாக அறிய வேண்டியதோ, அடைய வேண்டியதோ இல்லை. மேலும், “ஆன்ம சிற்றணு கூட இறைவனே” ஆகும். ஆன்மா இறைவனுக்கு அந்நியமல்ல! தன்னைத்தானே அனுபவிக்கவே அவரே ஆன்மாவாக விளங்குகின்றார்.

எனவே, மெய்ப்பொருள் ஆகிய இறைவன் ஆன்மாவுக்கு முழு உரிமையானவர்.

ஓர் ஆன்மா தன்னுள் இருக்கும் இறைவனை அந்நியமாக நின்று அறியமுடியாது.

எனவே, புதிதாகப் போய் அறிய வேண்டியதில்லை.

எனவேதான், "அறியாதே அறிந்து" என்கின்றார்.

அடுத்து, "குறியாதே குறித்து" எனப்பட்டது.

"குறி" என்பது நோக்கம், இலட்சியம் ஆகும்.

இம் மனிதப் பிறப்பேற்றுள்ள ஆன்மாவுக்கு இலட்சியம் யாதோவென்னில்,

"கடவுளுடைய திருவருளை அடைந்து, பேரின்பம் அடைவதுதான்!!"

"அருளுற முயலுக!!" என்று அருட்சிவமாகிய அருட்பெருஞ்ஜோதியே நம் வள்ளற்பெருமானுக்கு உபதேசித்துள்ளார்.

என்றாலும், இம் முயற்சி தேக நிலையில் இருந்தோ, மனோ கரணநிலையிலிருந்தோ செய்யப்படுவதல்ல.

"அகநிலையில் அதனோடு அதுவாய்" நின்றுதான் அதன் திருவருளை "அடையாமல் அடையும்" வழிமுறையாக உள்ளதாம்.

அடுத்து,

"**அந்தகரணங்களொடும் கூடாதே வாடாதே குழைந்திருப்பையாயில்**" எனப்பட்டது.

அந்தகரணம் என்பது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அகக்கரணமும்,

மனம், வாக்கு, காயம் எனும் புறக்கரணமும் ஆகும்.

"தனு கரணாதிகள் தாம் கடந்து அறியும் ஓர் அனுபவம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி" என்பார் வள்ளலார்.

"சிரநடு சிற்சபையாம் சத்திய ஞான சபையிலே, அருட்பெருஞ்ஜோதியைக் கண்டும், அதுவே நாமாகி விளங்கு வதையும் அறிந்து நிற்றல் வேண்டும் முதலில்."

“மனம் நினைப்பு மறப்பற்று, உள்ளொளியில் ஒருமையினால் கூடி நிற்றல் வேண்டும்” என்பார் சுவாமி சரவணானந்தா.

“அந்த கரணங்களொடும் கூடாதே; வாடாதே!!”

“உள்ளம் எனும் ஆனந்த ஓங்கல்மிசை ஏறி,”

“வெள்ளவெளிக்குள்ளே விளையாடும் பிள்ளை,”

“உலகம் எனும் சேரிக்கு ஒருகாலும் வாரான்”

“கலகம் விளையும் எனக் கண்டு.”

-ஓர் மெய்ஞ்ஞானி.

மேனிலையில் உள்ளொளியோடு இரண்டறக் கலந்து குழைந்திருக்கும் சன்மார்க்க சாதகன்,

“தேகம் நான்” என்ற கீழ்நிலைக்கு ஒருபோதும் இறங்கிவிடான். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் பொய்யர்களுடன் கூடான். சாந்த நிறைவாகிய உள்ளம் எனும் ஆனந்தமாகிய உச்சியில் வெள்ளவெளியாகிய அருள் வெளியில் உறைந்திருப்பான் எப்போதும்!!

“அகமிருந்து வருக அருளுடன்!!

அனகமாக வாழ்க தயவுடன்!!”

“தயவு”

## A45 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

அருட்பெருஞ்ஜோதி வணக்கம்.

வள்ளல் பெருமான், அவரது கொள்கைகளில் கருமாதி,திதி முதலியன செய்ய வேண்டாம் என்று கூறுகிறார்.

இறந்த பின் நமது ஆன்மா என்ன ஆகிறது?

சொர்க்கம், நரகம் என்பதெல்லாம் உண்டா?

இறந்த ஆன்மா மறுபிறவி எடுக்க எவ்வளவு நாள் பிடிக்கும்?

இதுபற்றி எல்லாம் வள்ளல் பெருமான் கூறியிருக்கிறாரா?

அல்லதுதயவு சரவணானந்தா சாமிகள் கூறி இருக்கிறார்களா?

வள்ளல் பெருமான் கருமாதி, திதி முதலான சடங்குகள் வேண்டாம் என்று கூறியதற்குக் காரணம்;

“ஆன்மா என்பது அழிவற்ற நித்தியப் பரம்பொருளின் சிற்றணு வடிவம்”

இது ஒருகால் ஆக்கப்படுவதோ அழிந்து போவதோ இல்லை. இந்த ஆன்மா பூரண தெய்வீகத் தன்மை கொண்டது.

“ஆன்மா நித்தியமானது; சத்தியமானது; அனாதி காலமாக இருந்து வருவது.”

ஒருவன் இறந்துவிட்டான் என்று கூறுவது அறியாமை. உண்மையில் ஆன்மா பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை.

“தவறிவிட்டான்” என்று கூறுவதே பொருந்தும்.

புறஉலக மாயா வாழ்க்கையில் புலன் இன்பத்திற்காகவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது தவறான பாதை. இந்த தவறான பாதையில் சென்று, மனிதப் பிறப்பின் முக்கிய இலட்சியமான “மரணமிலாப் பெருவாழ்வு” பற்றி ஒன்றும் அறியாது வீண்போயினோம்; வீண்போகின்றோம். முடிவில் “தவறிப் போகின்றோம்!!”

ஆன்மாவுக்கு எடுத்துள்ள இத்தேகம் நீங்கிய அடுத்த விநாடியே (அண்ட கோடிகளில் விளங்குகின்ற ஆனந்தா அனந்தம் பிண்ட வடிவங்களில்) ஏதாவது ஒரு தந்தையின் சுக்கிலப் பையில் இரண்டு மாதம் தங்கும். பின் தேகப் புணர்ச்சியில் தாய் கருப்பையில் கரு முட்டையில் இணைந்து பிண்டம் வளரத் தொடங்கி 10 மாதத்தில் குழந்தையாய் வெளிவருகிறது.

**“உண்மையில் ஆன்மா பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை”.**

ஆன்மாவைச் சூழ்ந்து பஞ்ச பூத பௌதிக அணுக்கள் பிண்ட உருக்கொண்டு இணைவதும், சிலகாலம் உயிர் வாழ்க்கை அனுபவம் தந்துவிட்டு, நீக்குவதுமாய் இருக்கின்றது.

**“செம்மான் மகளைத் திருடும் திருடன், பெம்மான் முருகன் பிறவான் இறவான்”** என்பார் அருணகிரிநாதர். இது நம் பிறப்பிறப்பற்ற “ஆன்மக் கடவுள் நிலையையே” குறிக்கின்றது.

ஆனால், இப்பொழுது ஆன்மா செத்ததுபோல் (ஜடம் போல்) கிடக்கிறது. அதாவது இன்னும் “அக விழிப்பு அடையவில்லை!!”

ஆன்மா தன்னை உணரவேண்டும் என்பதற்காகவும், பேரின்ப சித்திப் பெருவாழ்வில் வாழ வேண்டும் என்பதற்காகவுமே, அனாதி தொட்டு கோடிக்கணக்கான பௌதிக பிண்ட தேகங்களை வழங்கி வழங்கி வாழ்வித்து வாழ்வித்து பின் அழிப்பதுவுமாய் உள்ளார் நம் “உள்ளொளியாகிய கடவுள்”!

இப்பொழுது நாம் ஆறாவது பகுத்தறிவு நிலைக்கு ஏற்றப்பட்டுள்ளோம் திருவருட் பெருங்கருணையினாலே. “சத்விசாரத்தால் ஆன்ம அருள் அகநிலை அனுபவம் பெறுவதற்கும், பரோபகாரச் செயலால் அனகமாக நித்தியமாய் வாழ்ந்துக் கொண்டே இருக்கவுமே”. இப்புவியில் திருவருளால் வரவழைக்கப்பட்டு உள்ளோம்.

அடுத்து, சுவர்க்கம்- நரகம் இருப்பது உண்மைதான் என்பதை வள்ளலார் கூறியுள்ளார். ஆனால், அவர்கள் சூக்கும தேகிகளாய்த்தான் இருப்பார்கள். நம் போன்ற பௌதிக பிண்ட தேகம் இருக்காது. இது குறித்து நம் வள்ளற்பெருமான், ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் விளக்கியுள்ளார்கள்.

## A46 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### 1) ஜீவன் என்றால் என்ன?

### 2) ஆத்மாவிற்கும் ஜீவனுக்கும் என்ன ஒற்றுமை?

பொதுவாக “ஜீவன்” என்ற சொல் “உயிர்” ஆகும்.

இந்த தேகத்தில் “நித்திய ஜீவன், அநித்திய ஜீவன்” எனும் இரண்டு வகை உண்டு.

“நித்திய ஜீவன்” என்பது “ஆன்மா” ஆகும். இதுவே “சாமான்ய ஜீவன்” எனப்படும். இது சிரநடுவில் நிராதாரநிலையில் சதா ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இது அனாதியானது; பிறப்பு இறப்பு அற்றது. என்றும் உள்ளது. அறிவே வடிவமானது. இதை “அக வானம்” என்பர் மெய்ஞ்ஞானிகள். இது “அறிவு ஆகாயமாய்” உள்ள சிற்சபை ஆகும்.

இந்த ஆன்மா ஆகிய நித்திய ஜீவனிடத்திருந்துதான் உயிர்ச்சக்தி வெளிப்படுகின்றது, தாயின் கருவறையிலே முதல் நாளிலே.

இந்த உயிர்ச்சக்திக்கு உணர்வும், ஆற்றலும், ஓர் வடிவும் உண்டு. அதாவது "உயிர் உணர்வு ஆற்றல் வடிவம்" கொண்டது. இந்த உயிர்ச்சக்தி, ஆண் - பெண் தேகப் புணர்ச்சியின் போது சுக்கில - சுரோணித சேர்க்கையான அந்த நொடியிலே (தாயின் கருப்பையில்) ஆன்மாவிலிருந்து வெளிப்படுகின்றது. இது வெளிப்படுகின்ற அதே கணத்தில், பௌதிக பிண்ட அணுக்கள் சூழ்ந்து உடல் உருவமாய் வளரத்தொடங்குகின்றது. 10 மாதம் பூர்த்தியாகி ஒரு குழந்தையாய் இவ்வுலகுக்கு வாழ்வனுபவம் ஏற்க வருகின்றது.

இந்த அநித்திய ஜீவன் பௌதிக உடலின் ஒவ்வொரு திசுக்களின் **(Body cells)** உள்ளும் புறமும் வியாபித்து இருக்கும். அகத்தே இருக்கும் "ஆன்மாவாகிய காரண சரீரத்தையும்" புறத்தே இருக்கும் "தூல சரீரத்தையும்" இணைப்பது இந்த "சூக்கும சரீரமாகிய" உயிர்ச் உணர்வு சக்தியே.

இந்த அநித்திய ஜீவனாகிய "உயிர் உணர்வு" மூலம்தான் இவ்வுலகில் "வாழ்வனுபவம்" பெறுகின்றோம். புற உலகில் இன்ப துன்ப அனுபவம் ஏற்கின்றோம்.

வாழ்வின் அந்தியத்தில் இந்த உயிர் உணர்வு சக்தி ஆன்மாவில் உள்ளொடுங்குகின்றபோது மரணம் நிகழ்கின்றது. உடல் தனித்து விடப்பட்டு, ஆன்மா வேறு தேகம் ஏற்க வெளியேறிவிடுகின்றது.

அநித்திய ஜீவனாகிய இந்த உயிர்ச்சக்தி இதயஸ்தானத்தையே இருப்பிடமாகக் கொண்டது எனினும்,

மூலாதாரம்,
சுவாதிட்டானம்,
மணிபூரகம்,
அனாகதம்,
விசுத்தி,
ஆக்ஞை,

ஆகிய அந்தந்த இடங்களிலும் வியாபித்து நின்று விளங்கும். முடிவாக, சுத்த சன்மார்க்கத்தில் இந்த "அநித்திய ஜீவனாம் உயிர்- ஆற்றல் - உணர்வு - வடிவத்தையே" (சூக்கும தேகம்) பிரணவ

தேகமாக மாற்றிக்கொண்டு, தூல தேகத்தை “சுத்த தேகமாகவும்”, காரண ஆன்மாவை “ஞானதேகமாகவும்” மாற்றி, என்றென்றும் அழியாது நித்தியானந்தத்தோடு வாழ்தல் வேண்டும் என்கிறார் வள்ளலார்.

## A47 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை “அருட்சுடர் துதி”

“நித்தியச் சுடரே! சத்தியச் சுடரே! அற்புதச் சுடரே! பொற்பதச் சுடரே! அன்பான சுடரே! அருளான சுடரே! முதலான சுடரே முடிவிலாச் சுடரே! இயலான சுடரே! இருப்பான சுடரே! இறையான சுடரே! இன்பான சுடரே! நிலையான சுடரே! நிறைவான சுடரே! ஒன்றான சுடரே! நன்றான சுடரே! தனியான சுடரே! தயவான சுடரே! சிவமான சுடரே! தவமான சுடரே! கருவான சுடரே! குருவான சுடரே! அருவான சுடரே! உருவான சுடரே! அகமான சுடரே! அமுதான சுடரே! அறிவான சுடரே! அழகான சுடரே! “உள்” ஆன சுடரே! “மெய்” ஆன சுடரே! பொருளான சுடரே! தெருளான சுடரே!திருவான சுடரே! தருவான சுடரே! பதியான சுடரே! பரமான சுடரே! நிதியான சுடரே! கதியான சுடரே! ஏகமான சுடரே! அனேகமான சுடரே! ஆதியான சுடரே! அனாதியான சுடரே! அணுவான சுடரே! அகண்டமான சுடரே! ஒளியான சுடரே! விளக்கான சுடரே! ஒலியான சுடரே! ஓங்காரச் சுடரே! வெளியான சுடரே! அனுபூதிச் சுடரே! தாயானச் சுடரே! தந்தையான சுடரே! வானானச் சுடரே! கோனானச் சுடரே! மூவாதச் சுடரே! மூலமான சுடரே! பூரணச் சுடரே! காரணச் சுடரே! அடியானச் சுடரே! முடியான சுடரே! மணியான சுடரே! மருந்தான சுடரே! கண்ணான சுடரே! கருத்தான சுடரே! நேயமான சுடரே! நாசமிலாச் சுடரே! தானான சுடரே! நானான சுடரே! சிவஜோதிச் சுடரே! பரஞ்ஜோதிச் சுடரே! சுயஞ்ஜோதிச் சுடரே! அருட்ஜோதி சுடரே! தற்பரஞ் சுடரே!சிற்பரஞ் சுடரே! தன்மயச் சுடரே! சின்மயச் சுடரே! நவமான சுடரே! நடராஜ சுடரே! சிரநடுச் சுடரே! சிற்சபைச் சுடரே! அம்பலச் சுடரே! ஐந்தொழிற் சுடரே! பஞ்சபூதச் சுடரே! பசும்பொற்சுடரே! எல்லாமான

சுடரே! எல்லாம் வல்ல சுடரே! எங்கும் ஆன சுடரே! என்றுமுள்ள சுடரே! சர்வசித்திச் சுடரே!சர்வ காருண்யச் சுடரே! அருட்சக்திச் சுடரே! ஐஞ்சக்திச் சுடரே!!

- ஓர் அன்பர்

## A48 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### "சுத்த சன்மார்க்க சுகநிலை பெற"

(முயற்சியும் பயிற்சியும்)

"1) அவன் நினைவு அறாதே!! 2) அகநிலை விட்டு அசையாதே!! 3) உடலொடும் ஒட்டாதே!! 4) உண்மை நிலை மறவாதே!! 5) "யான் றான்" என்றுறாதே!! 6) இன்ப துன்பம் ஏதும் காணாதே!! 7) தேக நிலைக்கு இறங்காதே!! 8) போக இச்சை கொள்ளாதே!! 9) ஒன்றிரண்டு என எண்ணாதே!! 10) ஒருமை உணர்விட்டு ஏகாதே!! 11) மெய் அருள் நிலை பிறழாதே!! 12) சத்தியம் தவ நிலை வழுவாதே!! 13) சத்தகம் கலையாதே!! 14) சந்தேகம் கொள்ளாதே!! 15) தத்துவங்களொடும் சேராதே!! 16) தனு கரணங்களொடுங் கூடாதே!! 17) தனைக் காட்டாதே!! 18) ஒன்றும் உனைப் பொருட்படுத்தாதே!! 19) தன்னை இன்னும் மதியாதே!! 20) எதிர் நில்லாதே!! 21) திரும்பிப் பாராதே!! 22) பதையாதே; பரபரக்காதே!! 23) திகையாதே; திட்டம் தீட்டாதே!! 24) முன்னிலை எங்கும் நீ காணாதே!! 25) முழுமுதற் பொருளை மறைக்காதே!! 26) ஒன்றை விட்டு என்றும் நீங்காதே!! 27) எவ்வுயிரையும் அந்நியமாய்ப் பாராதே!! 28) அன்புச் சிவந்தனைப் பிரியாதே!! 29) அகக்குகை விட்டு அகலாதே!! 30) ஆடாதே! அசையாதே!! 31) ஆதிமூல நிலை பிரியாதே!! 32) அஞ்சாதே; அலையாதே!! 33) அருள் நடு விட்டு அகலாதே!! 34) நெற்றிக்கண்ணை இமைக்காதே!! 35) பயங், கவலை, பிணியால் துன்புறாதே!! 36) ஒரு உயிரையும் துன்புறுத்தாதே!! 37) பஞ்ச பாதகம் ஏதும் செய்யாதே!! 38) கருணை நெறி என்றும் மறவாதே!! 39) பிறர் பசிப்பிணி போக்க தவறாதே!!

40) ஆன்ம இயற்கை தயவு தனை மறவாதே!! 41) சுத்த தயா அனகநெறி வழுவாதே!! தயவுடன் வாழ்க!!!

- ஓர் அன்பர்

## A49 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை.

ஆன்மநேயமுடைய சன்மார்க்க சான்றோர் பெருமக்களுக்கு பணிவான வணக்கம்.

“தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்கள் இயற்றியருளிய “மாயை” என்ற நூல்”

நம்நாட்டு முந்தைய மெய்ஞ்ஞானிகள் திருவருளால் விளக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த உலகை “மாயை என்றும் மித்தை என்றும் பொய் என்றும்” சொல்லி உலக வாழ்க்கையை வெறுத்து “உள்ளொளியில் - சிவஜோதியில் ஒடுங்கினர்”. அதனால் அவர்கள் உலகுக்கு வந்து உயிர்க்குலத்துக்கு தடைபடாமல் பரோபகாரப்பணியை ஆற்ற முடியாமல் போனது. “மீண்டும் பிறவி எடாமல் இருக்க வேண்டும்” என்பதற்காகவே அவர்கள் அகநிலையில் ஒடுங்கி விட்டனர்; நிருவிகற்ப சமாதியில் மூழ்கினர். அந்த முறை முடிவானது அல்ல எனக்கண்ட வள்ளலார், அகமிருந்து அனகமாக வாழும் “சுத்த சன்மார்க்க சத்விசாரப் பரோபகார நெறியைத்” திருவருள் ஆணையின் வண்ணம் உலக சமுதாயம் முழுமையும் பயனுற தோற்றுவித்தார்.

“ஓடாது, மாயையை நாடாது, நன்னெறி ஊடாது இரு - என்றீர் வாரீர்”.

என இறைவனே வள்ளலாருக்கு உபதேசிக்கின்றார். உலகையும், உயிரையும் மாயை எனக் கண்டு ஒதுக்காது, அதே நேரத்தில் மாயா உணர்ச்சிகளால் கவர்ந்து அதில் வீழ்ந்து விடாது அனக வாழ்வு வாழ வேண்டும் என்று இறைவன் வள்ளலாருக்கு உபதேசிக்கின்றார்.

நம் வள்ளற்பெருமான் சுத்த சன்மார்க்கத்தில், இயற்கை உண்மை சத்துப் பொருளாகிய "தகராகாசப்" பதியின் உறவால், "அநித்திய மாயா தேகத்தையே சுத்த "மாயாத" தேகமாக ஆக்கிக் கொண்டார்."

ஆன்மாவுக்கு ஆணவம், "மாயை", கன்மம் ஆகிய மும்மலம் உண்டென்பது நாம் அறிந்ததே. இதில் நடுவிருக்கும் மாயா மலம் ஆன்மாவைப் பக்குவப்படுத்துவதற்குமுக்கியப் பங்கு வகிக்கிறது.

ஆணவ மலம் இயற்கை;

மாயா மலம் இயற்கையில் செயற்கை;

கன்ம மலம் செயற்கை.

இதில் நடுவிருக்கும் மாயை, உயிர்வுணர்வில் வெளிப்பட்டு முதலில் உயிர்க்கு "அவா" வினைத் தூண்டுகிறது.

("அவா" "இன்பத்தை அனுபவிக்க வேண்டும்" என்ற தணிக்க முடியாத ஆசை)

உயிர் உணர்வில் தோன்றும் மாயையின் முதற்காரியப்பாடாகிய "அவாவின் வெளிப்பாடுதான்" ஆன்மாவுக்கு உலகமுகப்பட்ட பயணம் ஆரம்பமாகிறது. இது ஓரறிவுத் தாவரத்திலிருந்து ஆரம்பமாகி மனிதனில் இதன் வேகம் அத்துமீறிப் போகின்றது. இதனால் மனிதன் எந்தெந்த வகையில் எப்படியெப்படி எல்லாம் மாயா புலன் இன்பத்தை அனுபவிக்க முடியுமோ அப்படியப்படி எல்லாம் அனுபவிக்கின்றான். முடிவில் பெருந் துன்பத்தை அனுபவிக்கின்றான். பின்னர் தான் இவை எல்லாம் பொய்யான இன்பங்களே என்றும், உண்மை இன்பம் எது? எங்குள்ளது? எப்படி அதை அடைவது? என ஆராய்கிறான். முயற்சி செய்கிறான். இந்தளவுக்கு இவனை மேலேற்றியுள்ளது எது எனில் உலக இன்ப துன்ப அனுபவம் தான். இந்த புறவுலக மாயா இன்பதுன்ப அனுபவ வாழ்வு வழி செல்லாது ஒரு ஆன்மா பக்குவ நிலைக்கு வர முடியாது.

ஆன்மா அகவிழிப்பு அடைய இந்த பொய்யான தத்துவ இன்ப துன்ப இன்னல் "அனுபவ வாழ்வு" அவசியமாகிறது.

"ஓர் ஆன்மா, "இருள்" நிலையிலிருந்து "மருள்" நிலைக்கும், மருள் நிலையிலிருந்து "தெருள்" நிலைக்கும், முடிவில் தெருள் நிலையிலிருந்து "அருள்" நிலைக்கும் ஏற்றப்படுகின்றது."

**“அனுபவ வாழ்வு”**

“அனுபவம்” என்ற அற்புத தமிழ்ச் சொல்லில் பொதிந்துள்ள ஆழ்ந்த சன்மார்க்க உண்மையினைப் பார்ப்போம்.

“அ, (ன் + உ) + பவம் = அனுபவம்”

இதில் “உ” என்ற எழுத்து நடுவே அமைந்துள்ளது.

இதன் வலப்புறம் “அ, ன்” என்ற எழுத்துக்கள் உள்ளன. இதற்கு இடது புறமாக “பவம்” என்ற சொல் வந்துள்ளது.

“உ”- என்பது “ஆன்ம உணர்வைக்” குறிக்கின்றது. (“உ”= 2)

இது சிரநடுவில் நித்திய ஜீவனாகவும், உயிர்வுணர்வாக அநித்திய ஜீவனாகவும் இருநிலை கொண்டு விளங்குகின்றது.

இந்த “உகரமாகிய ஆன்ம உணர்வுக்கு” உள்ளே தான் (அகத்தே) கடவுளின் அடிமுடி கண்டு அனுபவிக்கக் கூடியதாய் உள்ளது. “அ, ன்” தமிழின் முதலும், ஈறுமான எழுத்துக்கள் கடவுளின் அடிமுடியை உணர்த்துகின்றன.

“அ”. என்ற எழுத்து உலகுயிர்ப் பொருள்களின் தோற்றத்திற்கு அடிநிலை ஆதாரமாய், ஆதி முதலாம், (அகண்டாகாச வான்பெருவெளி நிறை) இயற்கை உண்மை ஆகிய சத்துப் பொருளைக் குறிக்கிறது.

“ன்” என்ற எழுத்து, அந்த சத்துப் பொருளே தன் முழு உண்மையை வெளிப்படுத்தும் பொருட்டு, முடிநிலையாய், சிரநடு “உகரமாகிய ஆன்ம அணுவில்”. உள்ளொளியாய், அருள் ஒளி விளக்காய் எழுந்தருளியுள்ள நிலையைக் குறிக்கும்.

படிமுடி கடந்தனை பார் இது பார் என,

“அடிமுடி (“அ, ன்”) காட்டிய அருட்பெருஞ்ஜோதி!!

என்றும்,

“அடிமுடி” கண்டு எந்நாளும் “அனுபவித்தல்” வேண்டும்!

- என்கின்றார் வள்ளலார்.

அடுத்து, “பவம்” என்ற சொல் எதைக் குறிக்கின்றது?!

“பவம்” = பிறப்பு, “உலகம், உலக வாழ்க்கை”, உண்மை, பாவம், மன வைரம், அழிவு. ஆக, இங்கு பவம் என்பது உலகம் - உலக வாழ்க்கையைக் குறிக்கின்றது.

“அ, ன் + உ + பவம்”

உகரமாகிய ஆன்ம உணர்வுக்கு அகத்தே, “சத்விசாரத்தால் கடவுளின் அடிமுடி கண்டு” அனுபவித்துக் கொண்டே, பவமாகிய புறவுலக வாழ்க்கையை “மாயை” என்று ஒதுக்காது, பரோபகாரத்தால் என்றென்றும் உயிர்க்குலத்திற்கு அன்புத் தொண்டாற்றி மகிழ்தல் வேண்டும்.

இதுவே சுத்த சன்மார்க்க “அனுபவ” வாழ்வாகும்.

## A50 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

“ஓம்சிவயநம” என்று நாவசையாமல் ஜெபிக்கவேண்டுமென்று வள்ளலார் கூறுகின்றார்!

இது சமய சன்மார்க்கமா? சுத்த சன்மார்க்கமா?

பதில்;

“சி” என்பது “இயற்கை உண்மையாகிய” சத்துப் பொருள்.

“வ” என்பது அதன் அநந்நியமாகிய “இயற்கை விளக்கமாகிய” திருவருள்

“ய” என்பது ஆன்ம அணு.

இந்த யகரமாகிய ஆன்ம அணுவுக்குள் இறைவன்,

“சிவ” என “உள்ளொளியாய்” அனாதியே அத்துவிதமாய் திருப்பள்ளி கொண்டுள்ளார்.

இந்த நாமாகிய ஆன்ம அணு கூட இறைவனுடைய சிறுவடிவமே. “நாம்” என்று சொல்லிக் கொள்ள உரிமையில்லை!

இறைவன் தன்னைத்தானே அனுபவிக்கும் பொருட்டே இந்த “சிற்றம்பலமாகிய ஆன்மாவாக” தோற்றங் கொண்டுள்ளார்.

இதை அறிந்து “யான், எனது என்கின்ற தற்போத உணர்வு நீங்கி நிற்றலே” - இறைவனை சரணடைதல், நமஸ்கரித்தல் எனும் “நம” ஆகும்.

இதுவே "சிவாயநம" என்ற சூக்கும பஞ்சாட்சரத்தின் உண்மை.

உண்மையை அறிந்து கொண்டால், மத சன்மார்க்கமா? சுத்த சன்மார்க்கமா? என்ற கேள்வி எழாது.

சன்மார்க்கம் என்பது சத்து மார்க்கம். அருட்பெருஞ்ஜோதி சத்து உண்மையில் நம்மை கண்டுகொண்டு வாழ்வதே சத்து மார்க்கம்; சன்மார்க்கம்.

இது "அகநிலை" சம்பந்தப்பட்ட விஷயம்.

புற ஆராய்ச்சி தேவைப்படாது.

## A51 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

"**மணிமன்றம்,** மன்றம், மன்று" என நிறைய இடங்களில் திருஅருட்பாவில் வருகிறது, அதன் விளக்கம் என்ன?

அன்பு வடிவம் ஐயா வந்தனம்.

மன்று, மன்றம், மணி மன்றம் எல்லாம் ஒரே பொருளைத் தான் குறிக்கின்றது.

சிற்றம்பலம் அல்லது சிற்சபைதான் "மணி மன்றம்" என போற்றப்படும்.

நமது ஆன்மாவே சிற்சபையாக, மணிமன்றமாக உள்ளது.

**பொற்சபை, ஆன்மாகாசம், ஜீவாகாசம் என்றால் என்ன?**

அன்பு வடிவம் ஐயா வந்தனம்.

ஆன்மாகாசம், சிதாகாசம், சிற்சபை, சிற்பொது, சிற்றம்பலம்

எல்லாம் ஆன்மாவையே குறிக்கின்றது.

"பொற்சபை";-

மனிதனின் சிரநடுவே இருப்பது ஆன்ம சிற்சபை. இந்த ஆன்ம சிற்சபையில் இருந்து ஐந்தொழில் நடம் புரிபவர் அருட்பெருஞ்ஜோதி நடராஜப் பெருமான்.

**"ஆண்டவருடைய இரு திருவடிகள்;"-**

சிற்பையில் உள்ளது உள்ளொளி அல்லது அருள் ஒளி. இதுவே "ஊன்றிய திருவடி" எனப்படும். இந்த ஆன்ம அகத்திருக்கும் அருள்

ஒளியே அனகமாய் விரிந்து விரிந்து இந்த அகண்ட மாபிரபஞ்சமாய் புறத்தே சதா விளங்கிக்கொண்டுள்ளது. இந்த "அகண்ட மாபிரபஞ்சமே கடவுளுடைய பொற்சபை ஆகும்." கடவுளுடைய "தூக்கிய திருவடியே" பொற்சபையிலிருந்து ஐஞ்சக்தி ஐஞ்செயலால் இந்த பிரபஞ்சத்தை காரியப்படுத்திக் கொண்டே உள்ளது.

**"ஆன்ம அகம் சிற்சபையாகவும், அதைச் சூழ்ந்த அகண்ட பிரபஞ்சம் பொற்சபையாகவும் உள்ளது."**

ஆனால் இது சொல்லில் பிரிவுபட்டது போல் தோன்றினும், இது பிரிவுபடாத, பிரிக்க முடியாத கடவுளின் அனக நிலையாகும்.

**"ஜீவாகாசம்"** என்பது என்ன?

இது ஆன்மாவில் இருந்து விரிந்த "உயிர் உணர்வு நிலை" ஆகும். இந்த தேகத்தில் இது இதய ஸ்தானத்தே மையம் கொண்டுள்ளது.

**"அக ஆன்மாவிற்கும், புற தேகத்திற்கும் இடையில் உள்ளதுதான் இந்த ஜீவ ஆகாசம் எனும் உயிர் ஆற்றல் உணர்வு வடிவம்."**

## A52 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**"பரமாகாசம், ஆன்மாகாசம், ஜீவாகாசம் இம்மூன்றும் எப்படி இணைகிறது?"**

உண்மையில் பரமாகாச சொரூபியாய் (ஆன்மாகாசத்திற்கு உள்ளே) அனாதியே எழுந்தருளி உள்ளார் நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். இவருடைய உண்மை யாதோவெனில், அகண்டாகாச வான்பெருவெளி முற்றும் நிறைந்த இயற்கை உண்மையே!!!

அதாவது சத்துப் பொருள்!! (அன்பு இருப்பு)

"ஆன்ம சிற்றணுவே, ஆன்மாகாசமாய் உள்ளது. இந்த ஆன்மா காசம் என்பது யாதோவெனில், அகண்டவெளி முற்றும் நிறைந்த பரம்பொருளே, அருள் அனுபவ வாழ்வின் நிமித்தமாக தானே ஓர் கடவுள்-ஆன்ம சிற்றணு தோற்றம் கொண்டு இவ்வுலகிடை (அதுவே நாமாக)விளங்கிக்கொண்டிருக்கின்றது".

ஆன்மா அல்லது ஆன்மாகாசம் என்பது என்னையோவெனில்,

"அகண்டாகாச நிறைவிலே சிற்றணுவான ஆன்மா ஆகும்."

தானே தன்னை உணர்த்துவதும் உணர்வதுமான ஓர் அணு நிலை. அதாவது நானும் தானும் ஆனநிலை. இறைவனுக்கு அகண்டாகாச வான்பெருவெளி முற்றும் நிறைந்த பரமாகாச சொரூபம் ''பெருவடிவம்'' என்றால், ஆன்ம சிற்றணு நிலை அவருடைய ''சிறுவடிவம்''

''ஜீவாகாசம்'' என்பது என்னையோ எனில்,

ஆன்மாவிலிருந்து விரிந்த ''உயிர் ஆற்றல் உணர்வினாலான வடிவம்!!'' இது உடல் முற்றும் (அணுஅணு தோறும்) உள்ளும் புறமும் வியாபித்து இந்த புறதேகத்தை தாங்கிக்கொண்டுள்ளது.

இது மூன்றும் இணைந்தே விளங்குகிறது.

இதுவே ''த- ய- வு = தயவு'' ஆகும். இதைத்தான் வள்ளற்பெருமான் அன்றே ''என்னை ஏறாநிலை மிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு'' என்று முடிவுக்கும் முடிவான முடிந்த உண்மையாக மொழிந்துள்ளார்.

''**திருவடித் தியானம்**'' என்றால் என்ன?!

அகண்டாகாச வான்பெருவெளி முற்றும் நிறைந்த இயற்கை உண்மை ஆகிய சத்துப் பொருளே இறைவனுடைய திருமுடி ஆகும்.

''திருவடி'' என்பது என்ன?

அந்த அகண்டாகாச வான்பெருவெளி முற்றும் நிறைந்த ''அன்பு இருப்பு'' ஆகிய கடவுளே தன் முழு உண்மையை இந்த மனித தேகத்தில் தலைநடு ஸ்தானத்தில், ஆன்ம சிதாகாச நடுவில், ''அருள் ஒளி உணர்வாக'' எழுந்தருளி உள்ளார்.

**''கடவுள் அருள் ஒளி உணர்வே உண்மைத் திருவடியாகும்''**

அதாவது ''தனிப்பெருங் கருணையாய்'' எழுந்தருளி உள்ளார். இதுவே ''அருட்பெருவெளி'' எனப்படும். ஆன்மாவில் அனாதியே எழுந்தருளி உள்ள, ஆண்டவருடைய இந்த ''திருவருட் திருமேனியாம் திருவடி இருந்த வண்ணம்''. என்னையோ! என்னையோ!! என ஏங்கி ஏங்கி, வியந்து வியந்து, போற்றி, துதித்து, வாழ்த்தி, வணங்கி சதா அந்த திருவருட் திருமேனியை சிந்தித்திருத்தலே ''திருவடித் தியானம்'' ஆகும்.

# பகுதி - 3 முற்றிற்று.

**தயவு**

# “பகுதி -4”

## “தயா அமுத மொழிகள் - 100”

## P1

சுத்த சத்விசாரத்தால், சிரநடு சிற்சபையாம்- சத்திய ஞான சபையிலே, அருட்பெருஞ்ஜோதியைக் கண்டும், அதுவே நாமாயும் இருப்பதை அறிந்து நிற்றல் வேண்டும் முதலில்!!

அங்கிருந்துதான் தன் தனிப்பெருங்கருணையால், யாவையும் ஆண்டு கொண்டேயுள்ளார் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்! ஆதலின், உண்மையில் அவரேயாக உள்ள நாமும், ஜீவ கருணையால் நிரம்பிட, நினைவெல்லாம், சொல்லெல்லாம், செயலெல்லாம், கருணை மயமாகிட வாழ்ந்து வரல் வேண்டும்! இப்படி **“அருட்ஜோதி நிலை நின்று, தனிக்கருணை வாழ்வு வாழ்ந்து வந்தால், அதுவே நம்மை அதன் வண்ணமாக்கி வாழ்வித்தல் சத்தியம்!!”**

தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P2

ஒன்றான மெய்ப்பொருள், “நம் உள் நாமாய் சிர நடு ஒளி வடிவாய்” விளங்கிக் கொண்டு இருப்பதை அருளால் அறிந்து கொண்டுள்ளோம்; நாம் ஆகிய இந்த மெய்ப்பொருள் ஒன்றே எங்கெங்கும் நீக்கமற **“அகம் இருந்து யாவுமாய் உருவேற்றுள்ளது”** என்பது உண்மை!!

நாம் புறத்திருந்து “பிழைத்துக்” கொண்டிருக்கும் அவத்தை நிலையை விட்டு விட்டு, “நித்திய அக உள் ஒளி நிலை” இருந்து விளங்கும் உண்மையை உணர வேண்டும். “தேகம் நாம்” என்ற உணர்வை நீக்கிக் கொண்டு வாழ வேண்டும்; இவனுக்கு மாயா காரியப் பிணி உடம்பு இல்லை என்பது தெளிவு!

புலனை மயக்கும் சிறுநெறி சென்று, பொய்ப் போக வாழ்வில் புக்கழுந்தி சிதைவுறுதல் திருவருட் சம்மதம் அன்று! இங்கிதம் உறுவதற்கு, அருட் பொருள் சேர்க!!

தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## P3 - அக உலகம் சுக உலகம்

1.அக உலகில் தான் ஆண்டவருடைய சுத்த அருள் இன்ப வாழ்வு மட்டும் நிரம்பி இருக்கிறது.

2.எந்த விதமான துன்பமும் கேடும் அகவுலகை என்றும் எட்டுவதே இல்லை.

3.அங்கு ஆனந்தமே அன்றி, துக்கத்திற்கு இடமே இல்லையாம்.

4.அதற்கு முற்றிலும் மாறுபாடே புறவுலகில் காணலாகும். இங்கே இன்பமும் துன்பமும் கலந்து வந்து கொண்டே இருக்கும்.

5.அருள் ஒளி வளர் தலை நடு பூங்கோயிலே, நம்மையும் நம் தலைவரையும் பிரிவற்ற நிலையில் கண்டு,ஒன்றி,வாழும் இடமாக உள்ளது

6.**சுத்த அருள் விசாரத்துடன் இருந்து, ஒருமையுற்று, உள்ளொளியிற் கூடி நின்று, துரியானுபவம் பெற வேண்டியது நம் கடமையாம்.**

7.திருவருள் அனுபவம் உண்டாகும் போது, உணர்விலே சுத்த இன்பம், உயிரில் நித்திய ஆற்றல், தேகாதிப் பொருளில் அழியா நிலை விளங்கும்.

தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## P4 - தற்சுதந்தரமின்மை

"அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை"

நான் என்று எதை சொல்வேன்?! அது நீயே ஆனாய்!

ஞானம் சேர் ஆன்மாணு நானோ?! நீ தானே!

ஊன் என்னும் உடல் எனதோ?! அதுவும் உனதாமே!

உடல் பெற்ற உயிர் உணர்வும் உடமைகளும் எல்லாம்

தான் இன்று தயவாலே தருகின்றாய்!

இந்த தனித்த சுதந்தரம் உனக்கே உளதாலே

நீதான் மேல் நின்று மேதினி மேல் எனைக் கலந்து,

நானாய் விளங்கற்கு, தயவு செய்வாய்! வேறு புகல் இலனே!

தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P5 - தற்சுதந்தரமின்மை

"அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை"

உனை அறியும் அறிவெனக்கு உவந்தளித்தாய் அதனால்,
உரிமையொடு உனைக் கண்டேன் உண்மையிலே நீயே
எனை மருவி "இரண்டறவே நானாகி இருக்கும் இயற்கை நிலை"
உணர்த்திங்கே அதிசயித்து நின்றேன்
நினை அறிந்தும் நின்னுடைய நியாய சுதந்தரத்தை நினையாது நீள்
உலகில் நெஞ்சுடைந்தேன் பலகால்
வினை மருவா விமலமுறும் தயை மருவு மேனி விளங்கற்குத் தயவு
செய்வாய் வேறு புகல் இலனே!!

தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## P6 - சுத்த சன்மார்க்க சாதனை

சுத்த சன்மார்க்கத்தில், முத்திநிலை முடிவில் பெறுவதல்ல! முதலிலேயே, சுத்த சத் விசாரத்தால் கண்டு கொள்ளப்படுவதாம். கண்டு, தான் அந்நிலையில் தானே இருப்பதாகவும் அறிந்துக் கொள்ளப்படுவதாம். "தான் அதுவாம் அனுபவம்" பெற்றுக்கொண்டு விளங்கற்கே பயிலப்படுவது சாதனையாம். சாதனை ஏதுமின்றி சாத்தியமாகிய அனுபவம் பெறுவது முடியாததாம். மேலும் எத்தனையோ பிறவியில், எவ்வளவோ காலமாகத் "தன்னை உடல் வடிவினனாகவே கருதி" அவ்வுணர்வோடு உலகில் வாழ்ந்து வந்திருப்பவன், இப்போது "தன்னை அக் கடவுள் ஆன்ம வடிவிலிருந்து வாழ்கின்றவனாக" அறிந்து கொண்டு, உலகிடை விளங்கச்

செய்வதற்கு எவ்வளவோ தீவிர முயற்சியும், பயிற்சியும் வேண்டியிருக்கின்றது.இதற்கே, ‘‘உள்ளொளி நிலை’’ நிற்றற்குச் சாதனை இடையறாது செய்து பழக வேண்டும். சாதனையின் முடிவில் உறும் நிலையே விசார முடிவாம். ‘‘வி-ஆகிய அருள் ஒளியைச் சார்ந்து ஒன்றியதே விசாரம் என்பதின் மெய்ப்பொருளாக இன்று அறிகிறோம்’’.

தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P7 - ஒளி நடு இரு! அகநிலையை விடாதே!!

சுத்த சன்மார்க்க முறைப்படி தயா ஒழுக்கத்துடன் இருந்து, சத்விசாரம் செய்து வந்தால், ‘‘ஒன்றான கடவுள் ஜோதியே’’ நம்மில், நமது என்னும் உயிர், உணர்வு, உடல் எல்லாமாய் விரிந்து உள்ளது என அறிந்து, ‘‘**அந்த ஒளிநடு இருந்து கொண்டே அகநிலையை விடாது**’’, அனகமாக தயா நெறியில் சிந்தனையும், சொல்லும், செயலும் வெளிப்படப்பட உள்ளொளிப் பெருகிப் பெருகி உணர்வு, உயிர், உடல் எல்லாவற்றிலும் நிறைந்துக் கொள்ள, இறை அனுபவம் கெடாமலும் அழிவுபடாமலும் நித்தியானந்தத்தோடு வாழ்லாகும்.

**அகமாகிய ஆன்மப் பிரகாசமே சபையாகவும், அதன் உள்ளொளியே பதியாகவும் கண்டு நிற்றல் வேண்டும்.**

அகத்தே ஆன்ம தீபத்தில் நிலைத்து, அருள் உணர்வோடு சூழ் உலகில் அன்புச் செயலில் ஈடுபட வேண்டும்.

உள்ளொளியை உள்ளே கண்டு, நாமே அதுவாக இருந்து, புறத்தில் பரோபகாரப் பணியை புரிந்து வருவதுதான் சன்மார்க்கியின் வாழ்க்கை.

தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P8 - ‘‘கடவுளை ஆன்ம அறிவைக் கொண்டே அறிய வேண்டும்’’!!!

‘‘நீங்கள் ‘‘உண்மை அறிவாய்’’ விசாரம் செய்து வாருங்கள்! ‘‘

அவசியம் இதற்கு ‘‘காரணமான தயவு’’ இருக்க வேண்டியது.

ஆன்ம அறிவு=அறியும் அறிவு=காரியத்தில் உள்ளது.

அருள் அறிவு ஆகிய தயவு''=அறிவிக்கும் அறிவு= காரணத்தில் உள்ளது.

ஆன்ம அறிவே ''சிற்சபை எனும் சிற்றம்பலம்''

அதற்குள் வீற்றிருந்து அருள் ஞானத்திருநடம் புரிபவரே ''உள்ளொளி'' ஆகிய ''அருட்பெருஞ்ஜோதி நடராஜர்''!!!

## P9 -

இன்றைய திருவருட்பா சிந்தனை;-

மனதை எப்போதும் ''புருவமத்தியின்'' கண்ணே செலுத்த வேண்டும்.

புருவமத்தியாகிய ''சிற்சபா துவாரத்தின் வழியாக'' சிரநடு சிற்றம்பலம் அடைந்து நிற்க வேண்டும்.

மனதை ''சிற்சபை அறிவாக்கிருதி'' செய்ய வேண்டும்.

சிற்சபைக்குள் புகுந்து, அங்கு ''உள்ளொளியாக'' எழுந்தருளியுள்ள அருட்பெருஞ்ஜோதியை போற்றிப் பணிந்து, தொழுது ஏத்தி, வாழ்த்தி வணங்கி நிற்போமாக!!!

## P10 - நெற்றிக்கண்

''கையறவு இலாது நடுக்கண் புருவப் பூட்டு, கண்டு, களி கொண்டு, திறந்துண்டு, நடுநாட்டு!!''

(நடுநாட்டு;- ''அருள் வெளியின் வடிவாய் இருத்தல்'')

நாம் நெற்றியில் இருக்கும் நடு கண்ணை, கடவுள் அனுக்கிரகத்தால் திறக்க பெற்றுக் கொள்வது நலம். நெற்றிக் கண்ணைத் திறக்கப் பெற்றுக் கொண்டவனுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப்பகல் போல் தெரியும். அவன் தான் சுத்த ஞானி.

இந்த நெற்றிக் கண்ணைத் திறப்பதற்கு ஒரு கதவும் பூட்டும் உள்ளது. மேற்படி பூட்டை ''அருள்'' என்கிற திறவு கோலைக் கொண்டு திறக்க வேண்டும்.

**“அருள்” என்பது “ஆன்ம இயற்கையாகிய பெருந்தயவு”! நாம் தயா வடிவமானால் மேற்படி அனுபவம் நேரும்.**

“ஆன்ம வாசமாகிய இந்த தேகமாகிற கிருகத்தில் “அருட் பிரகாசமாம்” தீபத்தை ஏற்றி வைத்து, மருளாகிய அஞ்ஞான இருளைப் போக்கி, பிராண நஷ்டம் இல்லாது, என்றும் ஆனந்த மயமாய் இருக்க வேண்டும்!” - வள்ளலார்.

## P11 - “எது உண்மையான பிறந்த நாள்?!”

இந்த புலால் உடலையே நான் என மயக்கறிவால் எண்ணிக்கொண்டிருக்கின்றோம். இந்த அசுத்த மாமிசக் கூடு தாயின் கருப்பையை விட்டு வெளியே வந்த நாளையே பிறந்த நாள் எனக் கொண்டாடி மகிழ்கின்றோம்! கோடிக்கணக்கான ஆண்டுகளாக, கோடிக்கணக்கான உடல்கள் நம் ஆன்மாவை சூழ்வதும் நீக்குவதுமாக இருக்கின்றது. இதில் எது நமது பிறந்த நாள்?

பிறந்தது (உடல்) சாகும்; செத்தது பிறக்கும்! பிறந்தது நாமல்ல! அசத்தே (பஞ்ச பூதாணுக்களின் கூட்டுத் தொகுப்பு) பிறந்துள்ளது.

**“சத்தாகிய ஆன்மா” அகநிலையில் செத்ததுபோல் கிடக்கின்றது. அது இன்னும் “உள்ளே விழிப்படையவில்லை” “ஆன்மா அக விழிப்படைதலே உண்மைப் பிறப்பு!!”**

அருள் விழிப்புற்று அக வடிவம் பெற்றவர்களே புற பிறப்பிறப்பு சூழல் நீங்கப் பெறுவர்.

“அகநிலையில் அருட் ஜோதி இறை மனிதனாகப் பிறந்து நித்தியானந்தம் உறுவோமாக!!”

தயாநிதி சரவணானந்தர்.

## P12 - நெற்றிக்கண்-2

பிறவித் தொடரை நீக்கிக் கொண்டு, நிலையான வடிவில், நிலைத்து நின்று ஒளிர “தேகப் பற்றறவும், ஆன்மப் பற்று உண்டாகவும் வேண்டியுள்ளது”. இதற்கு முதலில் இந்த நெற்றிக்கண்ணை பெற்றுக்

கொள்ள வேண்டி இருக்கின்றது. நாம் பெற்றுள்ள புறக் கண் புலனால், புற உலக் காட்சியைக் காணலாம். இக் கண்ணால் காணும் காட்சிப் புலனின்பம், மனதில் பதிந்து நின்று நினைவில் வெளிப்படும் தோறும் மனோ வெளியிலும் தோன்றி மறையும். இக்கண்ணால் காண்டற்கரிய "ஆன்ம அக உண்மையும், அருட்செயல் உண்மையும் காணச் செய்வது புருவ மத்திய ஞான உணர்ச்சிக் கண் என்னும் உபநயனம்". இக் கண்ணே மனிதனுக்கு அபயம் அளித்து ஆனந்தம் அருள்வதாம்.

"தயாஞான சோதித் தீபம் சிரநடு சிற்றம்பலத்தே ஒளிவிட்டிலங்குகின்றது. இதனை, அறிந்து அடைய, இரு கண்ணுக்கு இடையில் உள்ள லலாடத்தில் ஒருமையுடன் இருந்து, உள்நோக்கிப் பாவித்து சிரநடு உணர்ந்து போற்றிப் பணிதல் வேண்டும். இப்படிப் பணிவதால், "தான்" என்ற போத நாசம் உண்டாம். அப்போது அவ் ஒளியே தானாகி நிற்கலாம். இப்படி அந்த ஞான தீப மயமாகி நின்று, தயானந்தம் வளர் செயல் புரிந்து கொண்டு வாழ்வதே இவ் உபநயனத்தால் பெறும் பெரும் பயனாகும்.

எல்லா மனிதரும் நெற்றிக்கண் பெற்று தயவுடன் வாழ்க!!!

-தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## P13 - "உன்னைப்பார்; உனக்குள்ளே என்னைப்பார்!!"

நம் திருவருட்பிரகாச வள்ளலார், "சத்விசாரத்தின் பயனாக ஒன்றான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை, தன் அக சிற்றம்பலத்தில் கண்டு கொண்டிருந்தார் ". அந்த ஜோதியிற் கலந்து தான் என்பது போய், அதுவாக விளங்கி கொண்டிருந்தார். அவர் தமது அன்பர்களுக்கு உபதேசித்ததாவது;

"என்னை அடுத்துப் பழகி வருகின்ற அன்பர்களே! எனது "உண்மை வடிவம்" அகத்தே விளங்குகின்ற "அருள் ஒளியாய்" இருக்கின்றது. அத்தத்துவத்தின் மீதே எனது பெயர் அமைக்கப்பட்டுள்ளதும் ஆண்டவரின் அருட் செயலே ஆகும். **நீங்கள் தனித்தனி ஒவ்வொருவரும் கூட இந்த "அருள் ஒளி உருவமாய், அகத்தில் விளங்கிக் கொண்டு இருக்கின்றீர்கள்".**

**நம் எல்லோருடைய உண்மை உருவமும் அருள் ஒளியாய் இருப்பதுதான் உண்மை.** ஆனால் அந்த அருள்ஒளி, பல அல்ல; ஒன்றே ஒன்றுதான்! இது ஒருமையே பன்மையாக தோற்றுவது, அந்த அருளின் மகிமையாகும். இதனை அறிந்து "அருள்ஒளியை மறவாமல் இருந்து வாருங்கள்!" - வள்ளலார்

## P14 - "யாவும் தானாய் நிற்றல்"

சிரநடு சிற்றம்பலத்தே நாம் நம் "ஒருமை உணர்வை நாட்டி நின்று", அதுவே நம் அக வடிவாய்க் கொண்டு, அனக வாழ்வு வாழ வேண்டும்.இதுவே ஒருமை வாழ்வாம்.

"திரு அம்பலவன் திரு நோக்கம் பெற்றார்க்கு, "உரு" அம்பலத்தே என்று உன்"

என்பதைத் தெளிந்து கொள்ள வேண்டும். புற வானிலே அந்தரத்திலே நின்று ஒளிர்கின்ற ஞாயிறே போன்று **சிதாகாசமாகிய அக வானியிலே அருட்ஜோதியாய் நிற்றல் வேண்டும்.** அக வடிவில் நிலைத்திருந்துக் கொண்டு, "தயவுக் காரியம்" உடலிடம் இடையறாது விளங்கிக் கொண்டிருத்தல் பொருந்தும். "அக வடிவில், அருள் ஒளியாய் இருக்கும் நாம் "ஒருமையாய்த் " தான் உள்ளோம்!" இந்த ஒருமை நிலையே உண்மை!! இதுவல்லாத தன்மையும், முன்னிலையும், படர்க்கையும் தயா அனுபவம் ஏற்படும் பொருட்டு தோற்றுவிக்கப்பட்ட தோற்றங்களே ஆகும். தயா ஒருமை உண்டாகிவிட்டால், பன்மைத் தோற்றம் பற்றற விலகி நின்று இயங்கிக் கொண்டிருக்க காண்போம்! (ஒருமை= ஒன்றேயான தன்மை) - தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P15 - "நான் யார்?!"

அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே தனிப்பெருங் கருணை வடிவாக, மனிதனில் ஆன்மாவிலிருந்து விளங்குகின்றார்.

ஆன்ம நிலையில் இருந்து உடல், உயிர் எல்லாம் விரிந்து விளங்குகின்றது. எனவே ஆன்மாவும், உடலும், உயிரும் அவரை தவிர

வேறு யாரும் அல்ல. "ஆண்டவரே எல்லாமாக உள்ளார்" என்ற உண்மையை இன்று சுத்த சன்மார்க்க நெறியால் உணர்கின்றோம். எல்லாமானவரும், ஒன்றும் அல்லாதவரும் அவரே!! அவர் என்றும் சச்சிதானந்தமாக விளங்குபவர்.

சுத்த சன்மார்க்கி "**தான் அதுவே அல்லாது, தான் தேகியோ, உயிரோ, உடலோ, மற்றெந்த தத்துவமுமோ அல்ல**" எனத் தெளிந்து அகத்தே பூரணப் புகல் அடைந்து நிற்கும்போது, அந்த அருட்பெருஞ் சக்தியே, இவனில் பெருகி நிறைந்து கொள்ளுகின்றது.

தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P16 - தயவுக்கண் மூலம் "ஓர் அணு" காணல்

"ஓர் அணு காண்குவர் தயவுக் கண்ணினர், தேறார், பூதக் காட்சியில் ஏனோர்" - தயவுக்குறள்

"கடவுள் உண்மையை அருள் அறிவால்தான் அறிய முடியும்". அந்த அருள் அறிவு, "ஜீவ தயா ஒழுக்கத்தோடு இருந்து, சத்விசாரம் செய்து உள்நெகிழும் போது தான் உணர முடியும்". இதில் "நம்முள் நாமாய் உள்ள சிரநடு ஆன்ம அணுவிலிருந்து," உணர்த்தப்படுகின்றதும், உணர்கின்றதும் அவ்வணுவே என்ற உண்மை வெளியாகின்றது. அந்த அணு தான், "எங்கும் நிறைந்த கடவுளின் சிற்றுரு (சிற்றம்பலம்) என்பதும், அதுவே நம் ஆன்ம சிற்றணு" என்பதும் தெளிவாகும். இதனால் கடவுள் இவ் அணுவில் விளங்குவதும், இதேபோல் ஒவ்வொரு அணுவிலும் விளங்குதலும் இயல்பே. ஆனால் எந்த ஒரு அணுவுக்கு இந்த "ஆன்ம அருள் ஞான உணர்வு" மனித வடிவில் ஏற்படுகின்றதோ, அந்த குறிப்பிட்ட அணு மட்டும் அனுபவபூர்வமாக அறிந்தும், கண்டும், அனுபவத்தில் கொண்டும் விளங்க வல்லதாகும். ஆகவே தான், அந்த கடவுளை, அதற்கு அயலாக எவரும், எதுவும் அறியலாகா என மொழியப்பட்டது. இந்நிலை உற்று உணராது, கடவுளைப் பற்றி விவகரிப்பது எல்லாம் வீணே!!

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

# P17 - வள்ளலார் அருளிய ஞான மூலிகைகள்.

## ''கரிசலாங்கண்ணியும் தூதுளையும்''

கரிசாலையை தினந்தோறும் பச்சையாகவாவது சமையல் செய்தல் முதலிய வகையாலாவது சாப்பிட்டு வரவேண்டும். பிரதம உள்ளுடம்பாகியதை நீடிக்கப் பண்ணும். மேற்குறித்த மூலிகையை அலக்ஷியம் செய்யாது ஆசாரியன் திருவடியின் கண்ணே இலக்ஷியம் வைத்து, எவ்வித தந்திரத்தினாலாவது தினம் தினம் உட்கொண்டால், ''தேகக் கெடுதியாகிய அசக்தம் நீங்கி, தேகம் வலுவுள்ளதாய் நெடுநாளைக்கு இருக்கும். முத்தியடைவதற்கு சகாயமாயுமிருக்கும்.'' மகான்களிடத்தில் அனந்த காலம் காத்தாலும் மேற்குறித்த மூலிகையின் பிரயோஜனத்தையும் உண்மையையும் அனுபவத்தையும் வெளியிடார்கள். ''பரம கருணாநிதியாகிய நம் தலைவனால் கிடைத்தது.'' அசட்டையின்றி உட்கொள்ளல் வேண்டும். மேற்குறித்த மூலிகை ஜலமில்லாத இடத்தில் இருக்கிறது விசேஷ நன்று. ஜலமுள்ள இடத்திலுள்ளதில் காரமிராது. தந்தசுத்தி செய்து அண்ணாக்கில் தர்ஜனி விரலால் தேய்க்க - மேற்குறித்த மூலிகையால் - ''பித்தநீர் கபநீர் வெளியாகி, கண்ணொளி விசேஷிக்கும்.'' நேராத பக்ஷத்தில் பொற்றலைக் கையாந்தக்கரை கூடும். மேற்குறித்த மூலிகை செந்தூரம் செய்வதற்குச் சிறந்தது. உலர்த்திக் குழித்தயிலம் வாங்கியும் செந்தூரஞ் செய்யலாம்.

அது போலவே, ''அறிவை விளக்குவதற்கும், கவனசத்தி உண்டுபண்ணுவதற்கும், கரணம் ஓய்வதற்கும், கபத்தை அரிப்பதற்கும் யோக்கிதையுடைய ஒஷதி தூதுளை''. அதை மேற்குறித்தபடி அனுஷ்டித்தால் விசேஷ நன்மை செய்யும்.

''கரிசாலை தந்த சுத்தியால் வசீகரமும் நேரிடும்''. உண்மை.

# P18 - சன்மார்க்க சாதனம்

1) எல்லாம் வல்ல கடவுள், சிரநடுத் தலத்தே ''அருள் ஒளி விளக்காய்- தயவுச் சுடராய்'' திகழ்கின்றதை சதா நினைவில் கொள்ள வேண்டும்.

2) அது தான், நமக்கும், பிற எவ்விடத்துள்ள எவர்க்கும், தன் மயமாக்கி, நிலைத்த இன்பொடு வாழ்விக்க உள்ளதாம். ஆகையால்;

3) நாம் தேகேந்திரிய புல போக இச்சை இல்லாது, அச் சுடர் வண்ணமாய் வாழப் பழகிக் கொள்ளவேண்டும்.

**4) சிந்தனையும், சொல்லும், செயலும் "அகநிலை நின்று அனகமாக வெளிப்படச் செய்வது நம் கடமையாகும்".**

5) நாம், நம்மை, மேல் நிலையில் தயவுச் சுடராய் விளங்கச் செய்ய வேண்டும்.

6) "இங்கித தயவு ஒளியாய் இருந்து கொண்டு", நம்மைச் சூழ உள்ளவர்களுக்கும், நம் போல் இங்கிதம் பெற்று வாழ இசைத்துக் கொண்டே இருப்போம். அருட்பொருள் கொண்டு உலகம் இங்கிதம் பெருக!!!

தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P19 - "அருட்பெருஞ்ஜோதியும் தயவும்"

ஏறாநிலைமிசை ஏற்றி என்றனக்கே ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி -அகவல்

என்னை ஏறாநிலைமிசை ஏற்றி விட்டது யாதெனில் "தயவு" - பேருபதேசம்.

அருட்பெருஞ்ஜோதி என்றாலும் தயவு என்றாலும் அது எல்லாம் வல்ல ஒன்றான கடவுளையே குறிக்கின்றது.

**"தயவு விளக்கம்"**

**"த"= "த்+அ"**

"த்" என்ற மெய்எழுத்து ஆறாவது மன அறிவுக்கு அப்பால், சிரநடு விளங்கும் ஏழாவது "அருள் மெய்ஞ்ஞானத்தைக்" குறிக்கின்றது. இந்த அருள் ஞானத்தால் அறியப்படுகின்ற உண்மை, அகண்ட வான் பெருவெளி முற்றும் நிறைந்த "அ" ஆகிய அனாதி நித்திய இயற்கை உண்மைக் கடவுளாகிய "பரமாகாச சொரூபி" ஆவார். இவரே "தகராகாசக் கடவுள்" ஆவார்.

**ய**

அந்த "பரமாகாச சொரூபியாகிய" இயற்கை உண்மைக் கடவுளே, தன் பூரண உண்மையை முற்றும் வெளிப்படுத்திக் கொண்டு வாழ, அவரே "ய" என்னும் "யகர" கடவுள் ஆன்மாவாய் ஒவ்வொருவரின் சிரநடு அனாதியே எழுந்தருளியுள்ளார்.

**"வு" = "வ் + உ"**

"வ்" என்னும் அருட்சக்தியைக் கொண்டு, "உ" என்னும் "உகர" (ஐந்தாவது வரும் உகர உயிரெழுத்து ஆண்டவருடைய ஐஞ்சக்தி-ஐந்தொழிலைக் குறிக்கின்றது) ஐந்தொழில் திருநடனத்தால், இம் மாபிரபஞ்சத்தை விரித்து இயக்கிக் கொண்டுள்ளார்.

எனவே "தயவு" என்ற மூன்றெழுத்து மகாமந்திரச் சொல்,

"கடவுள் - மனிதன் (ஆன்மா) - பிரபஞ்சம்" ஆகிய மூன்றையும் ("த-ய-வு") இணைத்து "தயவு" ஆக வந்து மனிதனுக்கு நித்தியானந்தம் ஆகிய மரணமிலாப் பெருவாழ்வை வழங்க உள்ளது.

"தயவே கடவுள்!! தயவுடன் வாழ்க!!!"

"தயவோடு உறு; தயவாய் இரு; தயவே செய்!!!"

"தயவே விழி! தயவே வழி!! தயவே வாழ்வு!!!"

- தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## P20 - "தயா விண்ணப்பம்"

அருட்பெருஞ்ஜோதியாய் எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளே! எங்கள் அகத்தும் புறத்தும் சிரநடு சின்மயபுரத் தயவு ஆலயத்தில், "தயவு ஒளி விளக்காய்" சதா விளங்கிக் கொண்டுள்ள "தனிப்பெரும் தயவுத் தெய்வமே!!"

எங்களையும் எங்களைச் சூழ்ந்து உள்ளவர்களையும் "சுத்த தயவு நெறியால்" ஆட்கொண்டு "தயா இன்ப நித்திய வாழ்வில்" தழைத்தோங்க செய்திடல் வேண்டும்.

எங்களில் என்றும் பிரிவற்று, தயவுச் சுடராய், எங்களில் தனித்தனி ஒவ்வொருவருமாய் திகழ்கின்ற ஒன்றான மெய்ப்பொருளே!!

நாங்கள் அகத்தே நின்மயமாய் இருந்து கொண்டு, புறத்தெங்கும் நீயே எவருமாய்ச் சூழ வந்து, தயாநெறி வாழ்வுக்கே உதவுகின்றதாக நன்கு கண்டுகொள்ளச் செய்வாய்! அப்படிக் காண்பதோடு, தயவுடன் ஒத்துழைத்து இன்பமே அடையச் செய்வாய்.

உண்மை நெறி ஒழுக்கத்தில், தயா நேயர்களை என்றும் முன்னேறச் செய்திடல் வேண்டும். புறத்தோற்ற இயல்களையும், செயல்களையும் கண்டு, பிறரை வீணில் போற்றிக் கொண்டோ, தூற்றிக் கொண்டோ, மனக்கலக்கம் உறாது, தயவோடும் பரிவோடும் கூடி அன்பு செய்யவே உதவிடுவாய், தயவுத் தெய்வமே!!

அகம் -புறம் இருந்து "தயவுசெய் -தயவு செய்!!" என வேண்டிக் கொண்டும், புறத்தே தயவு செய்து கொண்டும் இருப்போம்!!

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P21 -

### "எல்லாம் செயல் கூடும் என்னாணை",
### "அம்பலத்தே எல்லாம் வல்லான் தனையே ஏத்து"

எல்லாம் வல்ல ஆண்டவரின் அருள் நியதி, "மனிதனுக்கு மெய் இன்ப வாழ்வு வழங்குவதே"

மனிதன் தேக போக நிலையினையே அதிகம் விரும்புவதால், "அகநிலை வாழ்வுக்கு வர இயலாமல் விதி அவனை தடுக்கின்றது."

அருளுக்காகவே நன்முயற்சி செய்து, **"அகநிலைக்கு மனிதன் வரும் காலத்தை ஆண்டவர் எதிர்நோக்கி கொண்டிருக்கின்றார்"** என்பதனை நாம் அனைவரும் உணர வேண்டும்.

"அகம் அடையாத வரை, மனிதன் புற விதிகளுக்குள் சிக்கி கொண்டிருக்க வேண்டும்." சுத்த சன்மார்க்கிகளுக்கே அருள் நியதி வாழ்வு அனுபவமாய் கூடும்.

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P22 - "இதயமே! என்னோடு நேசமாய் இரு!!"

மனிதனின் கடின சித்தமாகிய மனோநிலை, கருங்கல் மலைக்கு ஒப்பாம். ஜடமூட மனத்தில், அமைதியும் ஆனந்தமும் விளங்காததால், பல வகையில் அவத்தைகளும், துன்பமும் ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கும். இந்த கடினமான மனக்குன்றை, "அவன் அருள்" கொண்டுதான், இதனைத் தாக்கி, நீராய் உருக்கி, உள்ளொளியைப் பெருக்கி, உயர் நலம் பெற செய்ய முடியும். மனத்தின் மாண்பு, கடின நிலை களைந்து, கனிவு நிலை காணும் போதுதான் அனுபவப்படும்.

"சுத்தமனம்"; மனம் ஒடுங்கி நிற்கும் இடம், புருவ மத்திய, ஆஞ்ஞை என்னும் லலாட பீடம் எனப்படும். இங்கு விளங்கும் "அலைவுறா மனம் மனோன்மணியாகக்" கூறப்படும். இதுவே "நிர்குண- சுத்தமன நிலையாகும்". இப்படி ஆறாதார முடிவில் நிற்கும்போது, புறவுலக நினைவு, உடல் நிலையோடு ஒடுங்கி நிற்கின்றது. வேறு எந்த விதமான எண்ணமும் உண்டாவது இல்லையாம். அந்த எண்ணம், இந்நிலை நின்று, தன்னை அறியாமலே, மெல்லென நழுவிச் சென்று "உள் வளர் இறையொளியில்" இரண்டறக் கலந்து, பூரணப் புகலடைந்து விடுகின்றதாம். அங்கு இருந்து கொண்டே உலகியலை அருளியலாக அனகமுற்று நடத்த வேண்டும்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P23 - "அன்புச் செயல்"

"அன்பு" ஆதாரமாய் இருக்க, அதிலிருந்து செயல்பட்டு பிறர்க்கு உதவும் போது சுகம் விளைகிறது.

இவ் "அன்பு மயமாய் அகத்தே பொருந்தி நின்று" கொண்டு, பிறர்க்கு இரங்கி, "உயிர் விளக்க -அறிவு விளக்கப் பணி" செய்வதே அன்பு செய்தல் ஆகும்.

இச்செயலால் நம் உள்ளத்தே, "திருவருள் உணர்விலே, இன்பம் தோன்றி அனுப்பப்படும்". அந்த இவ் இன்பானுபவமே "உண்மையான சுகமாகும்".

சுத்த சன்மார்க்க உயர்நிலை அனுபவத்தில், "சிரநடு சிற்ஜோதியில் கலவாது கலந்து இருந்துகொண்டு, சிந்தனை கடந்து அதுவாகி

நின்று,'' ஐந்தியற் பிரபஞ்சத்தில் அன்பின்பச் செயலோடு வாழ முடிகின்றதாம்.

மனிதர்கள், தயா உணர்வுடன் உயிர்களுக்குப் பரோபகாரப் பணி புரிந்து வரவேண்டும். இதற்காகத்தான் மனிதப் பிறவி நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

மனிதப்பிறவியின் குறிக்கோளே, எல்லா உயிர்களுக்கும் தொண்டு செய்து வாழ்வதும், இறைவனை கண்டு அனுபவிப்பதும் தான்!!

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P24 - ''எல்லாம் நாமேயாய் தெளிக!!''

இப்போது நிறையருள் வலத்தால், அவரே, நாம் ஒவ்வொருவருமாய் இருப்பதை, அவர் நிலை நின்றே (புறதேக நிலையில் இருந்தல்ல) அருட்பெருஞ் சக்தியால், உயிரும், உடலும் கொண்டு வாழ்ந்து வருவதை அறிகின்றோம்.

ஆகையால், உலகை, உடலை,உயிரை, விட்டு உள்ளொடுங்குவது சரியல்ல!!

ஆகவே, ''அந்த நித்திய சச்சிதானந்த அகநிலையில் இருந்து கொண்டே'', தேகபோக வாழ்வில், விருப்பு வெறுப்பு இன்றி, தயவு வாழ்வு வாழ்ந்து கொண்டு இருக்க வேண்டும் என்பதுதான் கடவுள் ஆணையாம்.

''ஒன்றான தயவுக் கடவுளே, உண்மையில் எவருமாய் உள்ளதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டால், அதுவாக விளங்க வரும் நாமும், அகநிலையில் ஒருவராகவும், காரண ஆன்ம நிலையிலும், சூக்கும ஆவி வடிவங்களிலும், தூல தேகத் தோற்றங்களிலும், பலப்பலவாக பல்வேறு இடங்களில்,பல்வேறு காலங்களில்,பலவாகிய நாம ரூபத்தோடு விளங்குவதாக அறியலாகும். அத் தோற்றங்களிடத்து சிறிதும் பற்றுக் கொள்ளாது, ''எல்லாம் நாமே ஆம் தெளிந்து'' தயவு வாழ்வை ஏற்போம்.

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P25 - “சிரநடு சிற்றம்பலத்தே அருள் உணர்வாய் நிலைத்திரு!!”

1) “தலைநடுத் தலத்தே அருள் உணர்வோடு நிலைத்திருந்து கொண்டு”, அந்த அருள் ஆற்றலை தேகேந்திரிய கருவி கரணங்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டு வாழ வேண்டும். இதுவே எல்லோருக்கும் “உண்மையான இன்ப வாழ்வை” வழங்குவது சத்தியம்.

2) ஒன்றாகிய அருள் ஒளிப் பரம்பொருளே, உள்ளிருந்து எவருமாய்த் தோற்றி, தன் உண்மையை ஏற்பிக்க விளங்கிக் கொண்டிருப்பதாலே, “அவர் மயமாய் அகம் நின்று, அனகமாய் வாழத் தொடங்கிவிட்டால், அவரே நாமாய்- நாமே அவராய்த்”, திரிந்து மாறி, உலகமெல்லாம் திருந்தத் தயவு தொண்டு புரிந்து கொண்டு வாழ்வோம்.

3) கடவுள் உண்மையைத் தன் ஆன்ம சிற்சபையில் கண்டு, திருமுன் நின்று, பலவாறு முறையிட்டும், பிரார்த்தித்தும், தியானித்தும், தன்னிலை மறந்து, பதி நிலையில் ஒன்றிய பின்னர், பதி தயவுச் செயல் விளக்க வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்.

4) “தான் அது” என்ற உணர்வு கெடாமல், சகஜ வாழ்வு நடத்திக் கொண்டிருக்க வேண்டும். இதில் சுகம், துக்கம், நன்மை, தீமை, நினைப்பு, மறப்பு, என்பது பாதிப்பது இல்லையாம்.

5) தயாபதியின் திருவடி ஒருவனின் உள்ளத்தில், எப்போது தரிசிக்கவும் பரிசிக்கவும் பெறுகின்றதோ, அப்போதே இறை வாழ்வு ஏற்பட உள்ளதாம். இந்த அனுபவ வெளியீட்டிற்கே, தயா ஆட்சி அகநின்று சதா அனகமாகப் புரியப்படுகின்றதாம்.

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P26 - “பிரார்த்தனை- தியானம்- சாதனம்”

**“பிராத்தனை;”-**

ஒருவன் கடவுளிடம் பிரார்த்தனை செய்கின்றபோது, தனக்காக மட்டும் வேண்டக் கூடாது; உலகத்தில் உள்ள எல்லா உயிர்களின் நன்மை குறித்தும் பிரார்த்திக்க வேண்டும்; அப்போது அதில் தனி ஒருவனுடைய நன்மையும் அடங்கி விடுகின்றது.

**“தியானம்”;**

இந்த தேகத்தில், புருவமத்தியில், “ஆன்ம அறிவு” என்கின்ற கற்பூரத்தில் “அருள்” என்கின்ற தீபம் விளங்குவதாக பாவித்து பார்த்து, அதில் பழகிப் பழகி, “கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும், ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருண்யத்தையும் இடைவிடாது வைக்க வேண்டியது”.

“சன்மார்க்க சாதனம்”; சாதனங்கள் ஒன்றும் வேண்டாம்; ஏதாவது ஓர் சாதனம் சொல்லக் கேட்டு, அதன்படி நடந்தால், சிறு ஒளி உண்டாம்! அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கிட நேரிடும். ஆதலால், “காலம் தாழ்த்தாது, எல்லா உயிரையும் தன்னுயிரைப் போல் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும்!!” இதுவே முதற் சாதனம். இந்த குணம் வந்தவன் எவனோ, அவன்தான் இறந்தவரை எழுப்புகின்றவன். “அவனே ஆண்டவனும் ஆவான்.”

- திருவருட்பிரகாச வள்ளலார்

## P27 - “திருவாசகத் தேன்”

### “ஒன்றும் நீ அல்லை!! அன்றி ஒன்று இல்லை!!”

இன்றெனக் கருளி, இருள் கடிந்து, “உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று”

நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்!! “நீ அலால் பிறிது மற்று இன்மை”

சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து, “ஒன்றாம்” திருப்பெருந்துறை உறை சிவனே

“ஒன்றும் நீ அல்லை!! அன்றி ஒன்று இல்லை!!” யார் உன்னை அறிய கிற்பாரே!!! - மாணிக்க வாசகப் பெருமான்

பொருள்;- இவ்வுலகத்தில் சூரியன் உதயமானதும் இருள் நீக்குவது போல், என் உள்ளத்தே “அருட் ஜோதி ஞானசூரியனாகிய இறைவன் எழுந்தருளுகின்றபோது,

நெடுங்கோடி காலமாக அகத்தில் இருந்த அறியாமையாகிய அஞ்ஞானம் எனும் பாசாந்தகார இருள் இன்று (இப்பிறவியில்) நீங்கியது. அது நீக்கவே, “நீ அலால் பிறிது மற்றின்மை” (இறைவனைத் தவிர, அவருக்கு அயலாய் “பிறிது” என்ற ஒன்று இல்லை) என்ற உண்மையைக் கண்டுகொண்டேன். மேலும், இப் புறவுலகத்தில் எந்த ஒரு அணுவையோ, பொருளையோ, உயிரின வடிவத்தையோ, விக்கிரகத்தையோ, சூரியன் போன்ற கோள்களையோ, பஞ்ச பூதங்களையோ சுட்டிக்காட்டி இவையெல்லாம் கடவுளா என்றால் இல்லை ஆகும். ஆனாலும், இவையெல்லாம் நீ இல்லாமல் இங்கு எதுவும் ஆகிடவில்லை!!

இறைவன் எல்லாம் ஆனவராகவும், ஒன்றும் அல்லாதவராகவும் இருக்கின்றார்.

## P28 - “அறிவு நிலை இரு!! “

தொலை தூரப் பேருந்தில் இருவர் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்; ஒரு 60 வயது பெரியவரிடம், பக்கத்தில் அமர்ந்திருந்த அந்த இளைஞன் அவரைப் பற்றி விசாரித்துக் கோண்டிருந்தான்;

ஐயா, உங்களுக்கு வீடு,வாசல் இருக்கிறதா?

இரண்டு பெரிய பங்களா இருக்கிறது.

ஐயா,உங்களுக்கு மனைவி, மக்கள் இருக்கின்றார்களா?

ஒரு மனைவி, 2 மகன், 2 பேரப் பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

ஐயா,சொத்து பத்து இருக்கின்றதா?

50 ஏக்கர் நிலம், 2-மாட்டுப்பண்ணை, 2 கார் இருக்கின்றது.

ஐயா, பணம் காசு சேர்த்து வைத்திருக்கின்றீர்களா?

10 கோடி ரூபாய் இருக்கின்றது.

-கடைசியாக அந்த இளைஞன் எதிர்பாராத விதமாக ஒரு கேள்வியை கேட்டுவிட்டார்.

“யோவ், “உங்களுக்கு அறிவு இருக்கிறதா?!” இப்படி முகத்தருகில் வந்து தும்புகிறீர்களே “.

அவ்வளவுதான்!! அந்த பெரியவருக்கு கடுங்கோபம் வந்துவிட்டது; அவனை "பளார்" என்று ஓங்கி அவன் கன்னத்தின் அறைந்து விட்டார்.

ஆம். "அறிவு இருக்கின்றதா?" என்று யாராவது, நம்மைப் பார்த்து கேட்டுவிட்டால், சட்டென்று கோபம் வந்துவிடுவது இயல்பு!! இது ஏன்? ஏன்?!

**"அறிவு தான் மனிதனுடைய அகவடிவமாக இருக்கின்றது; அறிவு தான் மனிதன் உண்மையாக, சுய சொரூபமாக, தனது ஆதிமூல நிலையாக இருக்கின்றது. அதுவே ஆன்மா எனப்படுகிறது. அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவே யாகும்".**

"தேகமே நான்" என்ற பொய்யான மாயா மனோ மயக்கில் இருக்கும் வரை இந்த **அறிவின் இருப்பு** உணரப்படமுடியாது கிடக்கின்றது.

புருவமத்தியில் மனதை நினைப்பு மறப்பற நிலை நிறுத்தி, ஓர்மையோடு, உள்முகமாக அகநோக்கிப் பார்த்தால் **இந்த அறிவு "அனாதி நித்திய இருப்புணர்வு ஆகாசமாக உணரப்படும்"**

உள்ளிருந்து உதவி; - திருவருட்பிரகாச வள்ளலார்.

## P29 - "இருப்பது ஒன்றே!!"

கடவுள் வேறு மனிதன் வேறு என "இருப்பு" ஒருபோதும் இரண்டாக இருந்ததில்லை!!

மனிதன் தன்னைக் கடவுளுக்கு அன்னியமாய் இருப்பதாகக் கருதுவது அஞ்ஞானமாகிய பாசாந்தகார இருள்.

"என்னையும் இருப்பதாக்கினன்" என்பார் மாணிக்க வாசகர்.

"நான் வேறெனாதிருக்க நீ வேறெனாதிருக்க" எனவும்,

"ஜீவன் சிவ சொரூபம் என தேறி" எனவும் திருப்புகழில் குறிப்பிடுகின்றார், அருணகிரிநாதர்.

"ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்று உறுமோ?!" எனவும்,

“நான் போய் அதுவாகப் பெறுவேனோ?!” எனவும் பாடுகின்றார் வள்ளலார்.

“ஒன்றென்றிரு; தெய்வம் உண்டென்றிரு” என்பார் பட்டினத்தார்.

அகத்தில் என்றும் இயற்கையாய், நித்தியமாய், ஆனந்தமாய் இருக்கும் “அன்பு இருப்பே” முடிவில்லாத “அருள் அனுபவத்தின்” பொருட்டு, தானே வெளிப்படையாக உடல், உயிர் தோற்றம் கொண்டு உலகில் இம் மனிதனாய், நித்திய அருள் அனுபவ வாழ்வேற்று, மரணமில்லாது வாழ வந்துள்ளது உண்மை.

தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## P30 - “திரு அம்பலவன் திரு நோக்கம் பெற்றார்க்கு “உரு” அம்பலத்தே என்று உன்”வள்ளலார்.

### திருவுருக்கொண்டு சிற்றம்பலம் வாழ்.

சிறு + அம்பலம், சிற்றம்பலம். கடவுள் விளங்கும் ஆன்ம அணு இது. இதிலிருந்து அருட்பிரகாச தயாவள்ளல் ஆண்டவர் திருவெல்லாம் வெளிப்பட அருள் ஆட்சி புரிகின்றார்.

அகத்திலே மறைந்தும் அனகத்தில் நிறைந்து கொண்டு ஆள்கின்றார்.

“அருள் இன்றி நாம் என்பது இல்லை” யென்று உணர்ந்து “அருளோடு பொருந்தி வாழ்வது திருச்சிற்றம்பல வாழ்வாகும்”

திருச்சிற்றம்பல வாழ்வால், “அகமிருந்து அருள் விரிந்து”, கடவுளின் திருவருள் ஒன்றே முழுமையாய் வெளிப்படுதல் நிலை அனுபவம் ஆதல்.

அனகத்தில் நிறைமதிவாழ்வாம்

இது. “அருள் ஆண்டவருடைய இயற்கை உண்மை விளக்கமும், மனிதனுடைய இயல் உண்மை வடிவமும் இந்த சிற்றம்பலமாக (பொதுவாக) உள்ளது கண்டு, அகநிலையில் பொருந்தி வாழ்வதே நம் தலையாய இலட்சியமாகும்”.

சுத்த சன்மார்க்க சத்திய ஞானி, திண்டுக்கல், தயாநிதி சுவாமி சரவணானந்தர் இயற்றியருளிய "நாளந்தாதி" என்ற நூலிலிருந்து;

## P31 - "உள்ளொளியே உண்மைக் குரு"

ஒரு முக்கியமான விஷயத்தை நாம் தெரிந்துக்கொள்ள வேண்டும்.

"தேகமே நான்" என்ற உணர்வில் நெடுங்காலம் நாம் வாழ்ந்து வந்துள்ளபடியால், "ஆன்மாவின் உண்மை" குறித்த செய்திகளை கிரகிப்பதற்கு சற்று கடினமான தோன்றலாம். போகப்போக நம் ஆர்வத்திற்கேற்ப "உள்ளொளி தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்." நாம் அறிகின்ற ஆன்ம உண்மைகள் புற மனத்திற்கு வேண்டுமானால் புரியாமல் இருக்கலாம். ஆனால், அகமிருக்கும் ஆன்மா. **Processing** ல் செலுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. கவலைப்பட வேண்டியதே இல்லை! ஆண்டவர் நம்முள் இருப்பதால் அவர் நம் ஆர்வத்தை, உரிமையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார். உரிமை வந்தவுடனே முழு உண்மையையும் உள்ளிருந்தபடியே ஆன்மாவுக்கு உணர்த்திவிடுவார். மனத்தெளிவு என்பது தற்காலிகமானதே. புற மனம் தெளிவு பெறுவதால் பெரிய பிரயோஜனம் இல்லை. **"உண்மை அறிவைக் கொண்டு, அகவிசாரத்தால் - உண்முகப் பார்வையால் ஆன்மா தன்னை உணரவேண்டும்."**

உள்ளொளியே, அஞ்ஞான இருள் நீக்கும் உண்மைக்குருவாய், உள்ளிருந்தபடியே அவரவர்கட்கும், தக்க நேரத்தில் உண்மையை உணர்த்திவிடும்.

## P32 - "சுத்த சன்மார்க்க பயிற்சி நான்கு";

1) "அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்தான், நமது உண்மையான அக வடிவம்" என்பதை தெளிவு செய்து கொள்ளல் வேண்டும்.

2) அந்த "அக உணர்வு கெடாமல், அருள் வண்ணமாகவே" சிந்தனையும், சொல்லும், செயலும் வெளிப்படுத்திக் கொண்டு இருத்தல் வேண்டும்.

3) “அருள் அனுபவ வாழ்வையே இலட்சியமாய்க் கொண்டு”, பொறி புலன் இச்சையை விலக்குதல் வேண்டும்.

4) **“நமது ஆதிமூல நிலை, நடுத்தலை உள்ளிருக்கும் அருட்ஜோதி ஆன்ம அணுவாய் இருக்கின்றது.”** அங்கிருந்து, இத் தேகத்தில் பூர்ணமாய் வியாபித்து உள்ளோம். ஆகையால், அவ் ஆன்ம அணுவை, மனதினால் உறுதியாய்ப் பற்றி அதுவாகி நிலைத்தல் வேண்டும்.

அங்கிருந்துதான் அருள் இன்ப வாழ்வு வாழ்தல் வேண்டும்.

இந்நான்கு பயிற்சியும் மேற்கொண்டு வாழ்ந்தால், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் சார்பு கொண்டவர்களாவோம். அதனால், சச்சிதானந்த வடிவில், மரணமில்லாப் பேரின்ப வாழ்வில் என்றும் வாழ்வோம். இது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆணை.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P33 - “துரிய வாழ்வு = சுக பூரண பெரிய வாழ்வு”

**ஒருவன் விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய முன்னிலை அனுபவத்தையும் கடந்து, “அகப்பெருவெளி நிலையுற்று, அங்கு அருள் உணர்வு கெடாது,” மறதி வந்துவிடாது, உலக விடயாதிகள்- வாசனைகள் ஏற்படாது, “அக விழிப்போடு இருத்தல் துரியானுபவ நிலையாம்”. அப்படி இருந்துகொண்டே அனக வாழ்வு வாழவேண்டும்.**

மனிதன் அகநிலை இன்ப நிறைவாழ்வு எய்தாதவரை, புற வாழ்வில் அவத்தையும், அழிவும் பட்டுக் கொண்டிருத்தல் நியதி முறை ஆயிற்றாம்.

உடற் பற்று ஒழிந்து, தன்னை ஆன்ம வடிவினனாக அறிந்து, அந்நிலையில் பிறழாது வாழும் ஒருவனுக்கு கிடைக்கப் பெறுவது ஆன்ம சுகமாம்.

அகம் வளர் அருள் ஒளியின் துணைகொண்டு, அருளே நினைந்து, அருளே புரிந்து, அருள் இன்பில் தழைக்க வேண்டியது நம் கடமையாம்.

நமது “இறையருள் ஒளியின் அனுபவம் நமக்கு ஏன் விளங்கவில்லை என்றால், “நாம் அருளால் அகநிலை நின்று வாழாது”,

உடற்பற்றால் மருள் உணர்வோடு, இருள் உலகில் இன்னலில் இன்பம் காண வீணில் உழன்று கொண்டிருப்பதால் தான், “நம் இயல் உண்மை இறை நிலையை” அறியாது கிடக்கின்றோம். அனக நெறியால் அகமிருந்து வாழ்வோம்!! ஆனந்தம் உறுவோம்!!

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P34 - “சுத்த சன்மார்க்க நெறி”

தண்ணீர் எவ்வாறு தாழ்வான இடத்தை நோக்கி செல்லுமோ அது போல மனம் எப்போதும் தாழ்ந்த விஷயங்களில் தான் கவனம் கொள்கிறது.

அதனை “புறத்திலிருந்து அகம் நோக்கி திருப்பி அருள் அடையும்படியான” செயல்களை புரியவைக்க அருட்குருவின் துணை அவசியம்.

இறவாமை கொண்டு விளங்கும் திருவருட்பிரகாசர் சுத்த சன் மார்க்கிகளின் தினசரி நடவடிக்கைகளில் பங்கு கொண்டு சிறப்பாக வழி நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரக்கச் செயல்களுடன் தீவிரமாக சத்விசாரம் செய்தல் வேண்டும்.

நாம் எந்த வகையில் பொருள் சேர்க்கிறோமோ அந்த வகையில் தான் அருளும் சேரும். எனவே நேர்மையான சம்பாத்தியம் மிகவும் அவசியம்.

சில சமயங்களில் குருவின் உதவி தேவைப்படும். ஞானிகள் எழுதிய நூல்கள் துணை கொண்டு உண்மையை அறிய முற்பட வேண்டும்.

நாம் சரியான முறையில் சத்விசாரம் செய்கின்றோம் என்பதற்கு அடையாளம், நமக்கு இதுவரை புரியாமல் இருந்த விஷயங்கள் தற்போது எளிதாக இருக்கும்.

மேலும் சிறிய அளவிலான தவறுகளை கூட நம்மால் செய்ய இயலாதபடி உடனடியாக எச்சரிக்கை வரும்.

சிறந்த செயல்களை சிறிய முயற்சி கொண்டு செய்து விடுவோம். எது நடந்தாலும் அது அருளால் தான் நடக்கிறது என்ற உணர்வு நம்மை வருத்தப்படாமல் இருக்கச்செய்யும்.

தயவு.

### சன்மார்க்க வாழ்வு தனில் முக்கிய அம்சங்கள்;-

தீதின்றி வந்த பொருள்.

தினசரி வருகின்ற தெய்வ அருள்.

எதுவும் நடக்கட்டும் அதுவே திருவருட்பிரகாசர் தந்தது எனும் நம்பிக்கை.

தொடர்ந்து செய்து கொண்டு வரும் சத்விசாரம்.

சரியான நேரத்தில் கிடைக்கும் அறிவு.

தேவைக்கு மிகாத வருமானம். தடைபடாத உற்சாகம். மற்றும் பல.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்ந்திட கொல்லாவிரதம் குவலயம் எல்லாம் ஓங்கிட வள்ளற்பெருமானாரை வணங்கி தாங்களும் தங்களது சுற்றமும் நீடுழி வாழ வேண்டுகிறேன்.

இடைவிடாது கடவுளை ஊன்றி எண்ணுவதற்கு ஆழ்ந்த அறிவு, சிறு வயதிலேயே ஒழுக்கம் முதலிய நற்செய்கைகள், தன்னலம் கருதாமல் பணி ஆற்றல். குறைவாக உணவு. சான்றோர் வாக்கு படித்தல் எவ்வுயிரையும் தம்முயிர் போல எண்ணி பார்க்க வேண்டும்.

விளக்கம் கேட்கிறேன் என்று நேரத்தை வீணடிக்கும் யாருடனும் பேச வேண்டாம். இரக்கம் மேம்பட செயல் புரிந்து வந்தால் போதும், தெய்வ சிந்தனை தாமாகவே நமது உள்ளத்தில் குடி கொள்ளும்.

தயவு அன்பர், மதுரை.

## P35 - "அருட்ஜோதி வாழ்வு"

அருளாலே அகங்கார ஒழிவில், தன்னை அருட்ஜோதி இறையோடு ஒன்றியிருக்கக் கண்டு, அருளின் வாழ்வும் பெற்றுக் கொண்டு விட்ட வள்ளலார், அத்தோடு அவண் உறுவோர்க்கெல்லாம் கூட, அருள் இன்ப அழியா வாழ்வு சேர வழி செய்து விட்டுள்ளார் என்பது உண்மை. ஆகவே திருவருள் வலத்தால் "உண்மை நிலை" கண்டு, "உள்ளிருந்து" உலகியலை அருள் இயலாக ஆக்கிட வாழ்வதுதான் இன்றைய மனிதன் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறை ஆகும். இதுதான் கடவுளின் இயல் உண்மை நிலையாம். இதில் கண்ட முடிவு "ஒன்றே கடவுள்!" என்பதும், அது அருட்பெருஞ்ஜோதியாய்

தனிப்பெருங்கருணையோடு அகம் இருந்து யாவருமாய் திகழ்கின்றது என்பதும் அறியத் தக்கனவாம். இந்த அருள் இறைநிலையை உள்ளபடி ஒவ்வொருவரும் தன் அகத்தே கண்டு, ஒன்றி நின்று மக்களினம் முற்றும் ஒன்றான அருட்பெருஞ் சமுதாயமாய்த் தனிப்பெருங்கருணை வாழ்வில் திகழ்ந்திட வேண்டும் என்பது திருவருள் ஆணையாகும்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P36 - "சுத்த சன்மார்க்கம்"

இப்பொழுது உண்மையை உள்ளவாறு கண்டு கொண்டதால், நாம் கடவுளை இயல்பாகவே, "அத்துவிதமாகக்" கொண்டு விளங்குவதாய் உணர்கின்றோம். இவ்வுணர்வு விளங்குவதற்கு என்றே, நம் அகமுடையானின் அருட்சித்துச் செயலால், நம் இந்த மனித உடல் விளங்குகின்றதையும் அறிகின்றோம். இதனால் **இதுவரை நாம் அழிபடும் தேக போக வாழ்வில் உழன்று கொண்டிருந்ததை விட்டுவிட்டு, "அழிவற்ற கடவுள் -ஆன்ம நிலையில்" இருந்துகொண்டு, கடவுளரின் அருளால், அருட்சித்துச் செயலோடு வாழவேண்டி இருக்கின்றதாம்.** இந்த "அகமிருந்து வாழும் அருட்பெரும் வாழ்வுதான்" சுத்த சன்மார்க்கத்தில் வழங்கப்பெறுகின்றோம்

சன்மார்க்கத்திற்கு பொருள் இதுதான்; சத்து சித்து ஆனந்தமான கடவுள் தான் நமது உண்மையாகவும் இருக்கின்றதால், இதனை நன்கு உணர்ந்து கொண்டு, இதுவாக நிலைத்திருந்து கொண்டு,இதுவான நிறை இன்ப வாழ்வில் என்றும் திகழ்வதே பொருந்தும். சுத்தம் என்பது யாதொரு கலப்புமற்ற, சச்சிதானந்த அருட்பெருஞ்ஜோதிபதியின் வண்ணமாய்க் காட்டி கூட்டி வாழ்விக்கின்ற நெறி முறையை இங்கு சுத்த சன்மார்க்கமாக மொழியப்படுகின்றது.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P37 - "அருள் விசாரம்"

மன அறிவுக்கு மேல், மற்ற எதனாலும் அறியப்படாது விளங்கும் "எல்லாம் வல்ல கடவுட் சக்தியே திருவருள் ஆகும்". இந்த அருட்

சக்தியைக் கொண்டு தான் கடவுளை அறிந்து அடைய முடியும். “உள்ளுணர்வில் இவ் அருளைப் பற்றி நின்று அன்புப் பணி புரிவதே உண்மை விசாரமாகும்”. உலகில் இந்த விசாரம் இடைவிடாது செய்து கொண்டே இருந்தால், தக்க காலத்தில் நம் பதியின் உண்மையை எல்லாம் கண்டு பெற்றுக் கொள்ளச் செய்யும் இந்தத் திருவருள் விசாரம்.

கடவுள் அருள் சக்தியே எல்லாப் பொருள்களின் சாரமாக அறியவேண்டும்; “அறிந்து அதனையே சாரவேண்டும்; சார்ந்து அதுவே ஆகவேண்டும்.” இவ்வண்ணம் ஆவதே அருள் விசாரமாக நம் சுத்த சன்மார்க்கம் ஓதுகின்றது.

இந்த அருள் விசாரித்தால் விளைவது யாதெனில், “அருள் ஞானம் விளங்கும் சன்மார்க்கமாம்.” இம்மார்க்கத்தில் தான் மனிதன் மனக் கவலைகள் யாவும் ஒழிக்க வல்லவனாவான். அதற்கும் மேலாக இவ் விசார மார்க்கத்தினால் திருவருள் வெளிப்பட்டு வினைத்தொடரையே அறுத்திடலால், பிறப்பு இறப்பு அற்ற பேரின்ப நிலையும் சித்திப்பதாம். இதனால் மனக்கவலையோடு மரண பயக்கவலையும் ஒழிந்து, அருளானந்த நித்திய வாழ்வு விளைவு கொள்கின்றதாம்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P38 - “அருளே நாம் அறிவாய்!!”

### அந்த அருட்பெருஞ்ஜோதி இறைவனை எப்படி சார்வது?!

தயவோடு இருந்து சத்விசாரம் செய்தால், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் உண்மை விளங்கும். ஒன்றான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தானே, நம் ஒவ்வொரு ஆன்மாவாயும் தனித்தனி உருக் கொண்டு விளங்குவதை அறிகின்றோம்! அவரே நம்மின் தனியொரு ஆன்மாவாய் இருந்து, உயிர் உணர்வோடு கூடிய இத்தேகத்தையும் ஏற்றுள்ளாராம்.

அந்த அருட்ஜோதி பதியின் அருட்சக்தியே நம்மின் அருள் உணர்வாகி, இவ் அருள் அறிவினால் அவ் அருட் ஜோதி பதியையும் அறிகின்றதாம். ஆகவே, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரும் அவரது அருட் பெரும் சக்தியும் தவிர நாம் என்று தனியாக ஒன்று இல்லை எனத் தெளிகின்றோம்!!

“நாம், நாம்” என்று கூறிக் கொண்டிருக்கின்றது ஆண்டவர் தன்மையாகிய அருட் சக்தியேயாம். “அவருடைய தன்மையாகவே நாம் ஒவ்வொருவரும் இருக்கின்றோம்” என்பதைத்தான் இதுவரை அறியாது இருந்தோம்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P39 - “தான் கடவுளான்ம சொரூபி”;-

“உவமேயம் இல்லாத ஒருநிலை தன்னில் ஒன்றிரண்டு என்னாத உண்மையில் நின்றேன்” - வள்ளலார்.

சுத்த சத்விசாரத்தாலே “தான் கடவுளான்ம சொரூபி” என்பதைத் தெளிவாக புரிந்து கொண்டு, தன்னை அந்த கடவுள் ஜோதி அணுவிலே, சிரநடு சிற்றம்பலத்திலே இருந்து கொண்டு, அருள் அனக வாழ்வு நடத்துகின்றவனாக் காண்பவனே “நான் பிரம்மம்” என்று சொல்லாமற் சொல்லிக்கொண்டு உள்ளவனாக அறியப்படும். இவன் கூறுகின்ற நானுக்குப் பொருள் கடவுளே அன்றி வேறு அல்லவாம். இவன், “புலை அகப்பற்றை” ஒழித்து விட்டு, அதாவது “தேகம் நான்” என முன்பு கொண்டிருந்த பற்றினை நீக்கி விட்டு, “சிற்றம்பலத்தே அருட்ஜோதி வடிவினனாக இருந்து கொண்டு விளங்குகின்றான்”. இது எண்ணத்தளவில் இருந்து ஒழிந்து விடாமல், உயிர் உடம்பின் செயலில் எல்லாம் வெளிப்பட்டு, உலகியல் வாழ்வாய் விளங்க வேண்டி இருத்தலின், உலகத்தினிடத்து வெறுப்பு உண்டாகி விடாமலும், பற்று நீங்கி விடாமலும், தயா கடமைச் செயலாக அனக வாழ்வை நடத்துகின்றவனாவான் இவன். கடவுளும் இப்படித்தான் “அகத்தில் அருள் வண்ணமாய் நிலவி இருந்துகொண்டே” புறத்தில் ஆருயிர்களிடத்து எல்லாம் அன்பு பூண்டு, தயவுசெய்து வேண்டத்தக்கன எல்லாம் வழங்கி வாழ்வித்துக்கொண்டே உள்ளாராம். ஆதலின், “நான் கடவுள்” என்று கூறிக் கொள்ளும் தகுதி, இப்படியாக தயவோடு எவருக்கும் இன்பு செய்து கொண்டு வாழ்பவனாய்தான் இருக்க வேண்டும்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

# P40 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

“பொற் பொதுவில் நடம்புரி________வான் திருவடி நிலையே”

பொற்பொது என்றால் பொன்னம்பலம். சிற்பொது என்றால் சிற்றம்பலம்.

சிற்றம்பலம் நமது தலைநடுவே உள்ளது.இதுவே ஆன்மா எனப்படும்.

இந்த ஆன்மாவில் ஆண்டவருடைய திருவருளாகிய திருவடி நித்தியமாய் பதிந்துள்ளது. புறத்தே நாம் காணும் பிரபஞ்சமே கடவுளுக்கு மற்றொரு திருவடியாகும்.இந்த பிரபஞ்சத்திற்கு உள்ளீடாய் இருப்பது ஆகாச பூத நிலை. இதிலிருந்துதான் இப்பிரபஞ்சம் உருவாகி விளங்கிக்கொண்டிருக்கின்றது எத்தனையோ கோடி கோடி ஆண்டுகளாக!!

இதைத்தான், “உலகு பல் கோடி கோடிகள் இடங்கொள்”______என்கின்றார்.

அருள் ஆண்டவருடைய இருதிருவடிகள்;

ஒன்று “அகத்தே” நம் ஆன்ம சிற்பொதுவில் “அருள் உணர்வாய்” விளங்குகின்றது.

மற்றொன்று, “சகத்தே” (ஜகம்-புறத்தே)

“பொருள் உலகமாய்” அதாவது மாபிரபஞ்சமாய் விளங்கிக்கொண்டுள்ளது.

இதைத்தான், “அகத்திலே ஒருகால்; செகத்திலே ஒருகால்”

என்றனர் மெய்ஞ்ஞானிகள்.

இப்பழமொழி காலப்போக்கில் திரிந்து,

“ஆத்துல ஒருகால்; சேத்துல ஒருகால்” என மாறிவிட்டது.

- -தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P41 - "நீ அது ஆயினை"

**"மேயினை; மெய்ப்பொருள் விளங்கினை; நீயது ஆயினை என்றருள் அருட்பெருஞ்ஜோதி!!"** - வள்ளலார்.

கடவுள் அனுபவ சித்தி அடையும் வழிமுறை இதில் கூறப்படுகின்றது.

முதற்படி;(மேயினை) முதலில் சத் விசாரத்தால், கடவுள் உண்மையை உள்ளபடி அறிய வேண்டும். அதாவது அக் கடவுள் உண்மை, எப்படி எங்கு விளங்குகின்றது என்பதை விசாரித்து, அது நம் உள் விளங்குதலை அறிந்து கொள்ளல் முதற்படி.

இரண்டாம் படி; (மெய்ப்பொருள் விளங்கினை); அடுத்து, **அம் மெய்ப்பொருளை இடையறாது நினைந்து நினைந்து, முடிவில் நம்மை மறந்து, அதில் கலந்து நிற்றல் இரண்டாம் நிலையாம்.**

மூன்றாம் படி; (நீ அது ஆயினை);-

பின்பு, அதுவே நாமாகி விளங்கு நிலையே முடிந்த நிலையாம்.

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P42 - "நாமாகி விளங்கும் கடவுள்";

உண்மையில் ஒன்றான, கடவுள் தானே, நமது உயிராய், உணர்வாய், உடலாய், உலகாய் மலர்வதும் குவிவதுமாய் உள்ளதென்று தெளிவுறுகின்றோம். இதனால், நாம் என்பது, அந்த ஒன்றாம் பரம்பொருள் அல்லாது பிறிது எதுவும் அல்லவாம். ஆனால், சாதாரணமாக இந்த உண்மை விளங்குகின்றதில்லை. ஜீவதேகப் பொறி புலன் பற்றால், இத் தேகத்தையும், போகப் பொருட்களையும், யான் எனது என்று கொண்டு வாழ்கின்றோம். இவற்றிலிருந்து, அவா, வெகுளி, மயக்கம் முதலியன தோன்றி, வாழ்க்கையில் பொய்யான இன்ப துன்பங்களை வளர்கின்றன. இவை ஒழிந்து மெய்யின்ப வாழ்வு தோன்ற உண்ணின்று அறிவு மலர்கின்றது. கடவுள் தம் திருவருளால் உலகை ஆளுகின்றதால், **"அந்தக் கடவுள் அல்லாது நாம் என்ற ஒன்று உண்மையில் இல்லாததால்"**, அவர் தம் அருளே நமது ஆகவும் விளங்க வேண்டியுள்ளது. இவ்வருள் வெளிப்படுகின்றபோது அவா, வெகுளி, மயக்கம் முற்றிலும் ஒழிந்து போக வேண்டியுள்ளன.

சுத்த அன்பினாலே இத் தீக் குணங்களை முற்றும் நீக்கிக் கொள்ளுவது தான் நாம் அவராக ஆவது.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P43 - "சுத்த சிவநிலை"

சுத்த சிவநிலை எப்படித் திகழ்வதெனில், அகண்டாகார வெளி முற்றும் நிறைந்து, இயற்கை உண்மையாய், இயற்கை விளக்கத்தோடு இருந்து எவ்வுலகத்து எவ்வுயிர்க்கும் இனிது நலம் பயப்பதாம். இப் "பதி நிலையை நம் மெய்யறிவின் கண் கண்டு கொள்ளும்படி" திருவருளாட்சி நமக்கு வழங்கப்பட்டுள்ளது. அம் மெய்யறிவு பீடம் நம் உச்சிக்குங் கீழே உண்ணாவுக்கும் மேலே அமைந்துள்ளது. இப் பீடத்தின் மீது நம் சுத்த சிவம், "பரமாகாச அருளொளி வண்ணமாய் மிளிர்கின்றது". இப்பதியே அகம் புறம் எங்கும் நிறைந்ததாய் தன் தனிப்பெருங்கருணைச் சக்தியால் ஐந்தொழில் புரிந்து ஆருயிர்கட்கெல்லாம் அருளானந்தம் அளித்துக் கொண்டிருப்பதாகும். ஆகவே, பரமாகாச அருளொளி வண்ணச் "சுத்த சிவபதி" அருட்பெரும்ஜோதியர் என்றும், தனிப்பெருங்கருணையர் என்றும், சுத்த சன்மார்க்கத்தில் குறிக்கப்படுகின்றனர். இவ் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைக் கண்டு அவர்தம் தனிப்பெருங் கருணையால் பேரின்ப வாழ்வு எய்தலே நம் சுத்த சிவ சன்மார்க்கக் குறிக்கோள் என்று உண்மையாக அறியவேண்டும். இது திருவுளக் குறிப்பு.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P44 - "தெய்வ சக்தியாகிய அன்பு"

இப்பொழுது, இம் மனித தேகம் வழங்கப்பட்டு கடவுளை அறியும் மெய்யறிவும் அளிக்கப்பட்டுள்ளோம். இதனால் கடவுள் உண்மையை நாம் அறியக் கூடியதாய் இருக்கின்றது, கடவுளுடைய அருட்பெருஞ் சக்தி, நம்மில் அன்பு சக்தியாய்த் தோன்றி, ஜீவ தயவாக வெளிப்படுகின்றதாம். தயவு நம்மில் ஓங்க ஓங்க, தெய்வ சக்தியும் நமக்கு மேன்மேலும் அனுபவப்படுகின்றதாம். ஆகையால் இம் மனித

தேகத்தில் தான் மேற்படி தெய்வ விளக்க சக்தி வெளிப்படுவதாய் உள்ளது, அந்த தெய்வ சக்தியே, நம் ஆத்ம இயற்கைத் தன்மையாகிய ஜீவ தயவாய் அறியப்படும். இந்த ஜீவ தயவு வளரவளர, ஆத்ம விளக்கமும் தெய்வ அருட்சக்தியும் பெறப்படுகின்றன. இது பூரணம் அடைவதற்கு, ஆத்ம விளக்கம் பூரணம் அடைந்து, தேகத்தையும், ஜீவனையும், போகப் பொருளையும் திருவருட்கே சர்வ சுதந்திரமாகக் கொடுத்து தயா வண்ணமாய்த் திகழ வேண்டி இருக்கின்றது. இப் பூரண தெய்வநிலை எய்திவிட்டால் நாம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டதாகும். ஆகையால், இம் மனித தேகத்தில், “தெய்வ சக்தி ஆகிய அன்பு” பூரண வளர்ச்சி பெற்று, அத் தெய்வ நிலையோடு நம்மைச் சேர்த்து பேரின்பம் அடையச் செய்வதே திருவருள் நோக்கம்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P45 - “ஓங்கார அருட் ஜோதி மனிதன்.”

நாம் அடுத்துள்ள சுத்த சன்மார்க்க காலம், உலகத்திற்கும் மற்ற எல்லா அண்ட பிண்டங்கட்கும் ஓர் அற்புத தெய்வ சக்தியை வழங்கி, அருட் ஜோதி வண்ணமாய்த் திகழ்விக்கும் தூய காலமாகும். இது நம்மை அடுத்துள்ளது இக்காலமே. இனிவரும் தினங்கள் எல்லாம் இன்பமுறும் தினங்களே. வருகின்ற சுத்த சன்மார்க்கத்தில், “மனிதன் தன் உண்மை வடிவாகிய, பிரணவ ஜோதி ஆத்ம வடிவில் இருந்து வெளிப்பட்டு, அருட்ஜோதியாலே, தன் ஊன் உடலை, சுத்த ஞான ஒளி வடிவாய் மாற்றிக்கொண்டு, திருவொடு என்றென்றும் வாழ்வான்.” இவ் உண்மை மனிதன்தான் மகாத்மா, பரமாத்மா, தெய்வ மனிதன், சுத்த சன்மார்க்கி ஆவான். இவன் ஆத்ம வடிவிலிருந்து அருட்பெருஞ்ஜோதி சக்தி பெற்று வாழ்பவன். இப் பரமாத்ம நிலை, நம் ஜீவ தேகத்தில், சிரோமத்திய (தலைநடு- முகுள மூளை மேல்) “ப”கர வடிவ பீடத்தில் **(“U” shape- Cerebro spinal cavity)** திகழ்கின்றது. இப் பகர பீடமே, நவ நிலைபெற்று, பிரணவ ஜோதி கொண்டுள்ளது.

- சுவாமி சரவணானந்தா

## P46 - “சத்விசார தியானம்”

### அருள் அம்பலமாம் ஆன்ம சிற்சபையில் பொருந்துக

எங்கும் பரிபூரணமாய் என்றும் திகழ்ந்து கொண்டு அருட்பெருஞ்ஜோதியாய் விளங்குகின்ற ஆண்டவரை, “மெய்யருள் அறிவாலே நமது ஆன்ம சிற்சபையில் தான் காணவேண்டியிருக்கிறது.” பிற எவ்விடத்தும், எக்காலத்தும், எதனாலும் எல்லாம் வல்லபதியைக் கண்டு கொள்ளவே முடியாது!

**“தயவோடு, சத்விசார வசத்தராய், ஒருமை மனத்தால், புருவ நடுவுட் புகுந்து, சிற்சபையை அடைந்து அதுவாகி நிற்கப் பழகுதல் வேண்டும்.”**

புல நெறியில் மயங்கி புறத்துழலும் மக்களுக்கு இது கடினமாக இருக்கலாம்.

என்றாலும், தயாநன்முயற்சி செய்யின் திருவருளே முன் நின்று கூட்டி வைக்கும்.

“அருள் அம்பலத்தே பொருந்தி நின்று” புற வாழ்வில் விருப்பு வெறுப்பின்றி, சூழ் உலகில் “ஜீவ விளக்க, ஞான விளக்கப்பணி” புரிந்து கொண்டு சுத்த இன்பானுபவத்தில் திகழ்வதே இந்நெறியின் குறிக்கோளாம். இதுதான் சுத்த சன்மார்க்க இயல் என்றும், “அனக நெறி முறை” என்றும் தெளிதல் வேண்டும்.

-சுவாமி சரவணானந்தா

## P47 - “அக வானிலே அருட் ஜோதியாய் நில்!!”

**புற வானிலே, அந்தரத்திலே நின்று ஒளிர்கின்ற ஞாயிறே போன்று, “சிதாகாசமாகிய அக வானிலே அருட்ஜோதியாய் நிற்றல் வேண்டும்.”** ஞாயிற்றின் காரியப்பாடு உலக இயக்கங்களுக்குக் காரணமாய் இருத்தலே போல், நம் அருட்ஜோதியின் காரியப்பாடு உடலியக்கச் செயல்கட்குக் காரணமாய் இருத்தல் இயல்பாம். “அக வடிவிலே நிலைத்திருந்து” கொண்டு தயவுக் காரிய உடல் இடம் இடையறாது விளங்கி கொண்டிருத்தல் பொருந்தும். “அக வடிவில் அருள் ஒளியாய் இருக்கும் நாம் ஒருமையாய்த் தான் உள்ளோம்.” இந்த ஒருமை நிலையே உண்மை. இதுவல்லாத தன்மையும், முன்னிலையும், படர்க்கையும் தயா அனுபவம்

ஏற்படும் பொருட்டு தோற்றுவிக்கப்பட்ட தோற்றங்களேயாம். தயா ஒருமை உண்டாகி விட்டால், பன்மைத் தோற்றம் பற்றற விலகி நின்று இயங்கிக் கொண்டிருக்க காண்போம்.

- சுவாமி சரவணானந்தா

## P48 - "அருள் ஒளியே நமது உண்மை வடிவம்!!"

என்னை அடுத்துப் பழகி வருகின்ற அன்பர்களே, "எனது உண்மை வடிவம் அகத்தே விளங்குகின்ற அருள் ஒளியாய் இருக்கின்றது!!" அத் தத்துவத்தின் மீதே எனது பெயர் அமைக்கப் பட்டுள்ளதும் ஆண்டவரின் அருட் செயலேயாம். "நீங்கள் தனித்தனி ஒவ்வொருவரும் கூட இந்த அருளொளி உருவாய் அகத்தில் விளங்கிக் கொண்டு இருக்கின்றீர்கள்!!" நம் எல்லோருடைய உண்மை உருவமும் அருள்ஒளியாய் இருப்பது தான் உண்மை. ஆனால் அந்த அருள் ஒளி, பல அல்ல; ஒன்றே ஒன்றுதான்!! ஒன்றாகிய அருள் ஒளியே தன்னை ஒவ்வொருவர் உள்ளும் தனித்தனி விளங்குவதாகத் தோற்றிக் கொண்டுள்ளது. இது, ஒருமையே பன்மையாய்த் தோற்றுவது, அந்த அருளின் மகிமை ஆகும். இதனை அறிந்து மறவாமல் இருந்து வாருங்கள்.

- திருவருட் பிரகாச வள்ளலார்

## P49 - "நாம் ஒருவரே!!"

ஒருமையில் விளங்குகின்ற நமது அருட்பெருஞ்ஜோதியே, நமது ஒவ்வொருவரின் அக உண்மை வடிவம் கொண்டுள்ளதாம். ஆகையால், நாம் அவ் வொரு தன்மையான அருள் ஒளி வடிவினர் என்பதோடு, "நாம் ஒருவரே" என்பது உண்மையாம். இந்த அனுபவ நிலையில் நாம் பன்மையினராய் இருக்கின்றோம் இல்லை; ஒருமையினர் ஆகவே உள்ளோம். இது சுத்த சன்மார்க்கத்தில் விளங்குகின்ற தெய்வீக அல்லது தயா ஜோதி மய ஒருமையாகும். இதே போல "நான்" என்ற ஒருமைச் சொல்லும் கூட சுத்த நிலையில் அருட் ஜோதி வடிவைக் குறிப்பதாயும், அசுத்த மாயாகாரிகளின் நிலையில் உயிர் உடம்பைக் குறிப்பதாயும் அறியப்படும்.

- சுவாமி சரவணானந்தா

## P50 - "ஆன்ம அகம் அறிதல் எங்ஙனம்?!"

சத்துப் பொருள் எது? அசத்துப் பொருள் எது? ஜடம் எது? சித்து (அறிவு) எது?

உண்மையில் நான் எதுவாக இருக்கின்றேன்?;-

நான் என்பது;-

இந்த ஜடமான தேகமா? மனமா? உயிரா?

இதற்கு அப்பாலாய் சிரநடு விளங்கும் அறிவே வடிவான ஆன்மாவா?

-என்ற இடைவிடாத விசார வசத்தால் "ஆன்ம அகநிலை" சிறிது சிறிதாக அனுபவமாகும்.

நமது மனதை எப்போதும் புருவ மத்தியில் நிறுத்திப் பழகி வந்தால் ஆன்ம அகநிலை கொஞ்சம் கொஞ்சமாக அறிவனுபவத்தில் தெரியவரும்.

நினைப்பு மறப்பற்று மனதை அகமுகமாக செலுத்திப் பழகவேண்டும். இதையே,

"உண்முகப் பார்வை கொள்" என்பர் மெய்ஞ்ஞானிகள்.

"நீங்கள் இடைவிடாத விசார வசத்தராய் இருக்க வேண்டியது!!" என்பார் நம்பெருமான்.

மனிதன் "அகம், புறம் எனும் இருநிலைகளால் ஆன ஒருவன்".

"தேகமே நான்" என்னும் மாயா மயக்க மருள் நிலை உணர்வைக் கடந்து, புருவநடுவுள் புகுந்து "உண்மையை" தெளிவு செய்துக்கொண்டு, "வாழ்வு" பெற வேண்டியது நம் தலையாய கடமை.

இடைவிடாத விசார வசத்தராய் இருந்து "ஆன்ம இன்ப லாபம்" பெற முயற்சி செய்துக் கொண்டே இருப்போம். தக்க காலத்தில் திருவருள் துணையால் "ஆன்ம அகநிலையை அறிந்து அழியா இன்ப வாழ்வு பெறுவோம்!!"

## P51 - "முதலிலிருந்து வா!! முடிவிலாது வாழ்!!!"

இந்த தேகம் ஆன்மாவின் கடைநிலைத் தோற்றம்.

உண்மையில் நாம் சிரநடு சிற்ஜோதி ஆன்ம அணுவாய் மெய்யகத்தே விளங்கிக் கொண்டிருக்கின்றோம். இதுவே, முதல் அணுவாகிய கடவுள் சிற்றுருவம்; இது ஆதி அருவ நிலை (அகம்- காரண சரீரம்) கொண்டது. இந்த தலைநடு முதல் அணுவாகிய அருள் நிலையே விரிந்து, அகப்புற- அருவுருவ உயிராற்றல் உணர்வு வடிவம் (சூக்கும தேகம்) கொண்டும், புறத்தே உடல் உருவத் தோற்றம் (தூல தேகம்) கொண்டும், முத்திறல் வடிவு கொண்டு விளங்குகின்றது. இப்படி அருவ, அருவுருவ, உருவம் என (ஆன்மா- உயிர் - உடல்) முத்தேகம் கொண்டு விளங்குவது கடவுளே. இதில் எதையும் நான், எனது என்று சொல்லற்கில்லை!! கொள்ளற்கில்லை!!!

**நான், எனது எனும் தற்போதம் ஒழிந்து, சுத்த சத்து நிலையில் அகம் பொருந்தி நிற்றலே சுத்த சன்மார்க்கியின் முதல் கடமையாகும்.** பின்னர் பரோபகார வாழ்வால் முத்தேகத்தையும் நித்தியமாக்கிக் கொள்வதே மரணமிலாப் பெருவாழ்வு எனும் முத்தேக சித்திப் பேறு. **இப்படி முத்திறல் வடிவேற்று வாழ வருவது எதுவெனில் அந்த எல்லாம் வல்ல பரம் பொருளே!!**

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P52 - "கடவுள் என்றால் என்ன?"

### கட + உள் = கடவுள்

"க,ங,ச,ஞ,ட இதன் சுருக்கமே "கட" ஆகும்.

இது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதத்தாலான பேருலகப் பெரும் பிரபஞ்சத்தைக் குறிக்கின்றது.

மேலும் பொருட்- கிரியா- ஞான- யோக- அருட் சக்தியைக் கொண்டு, கடவுள் தன் ஐந்தொழிலால் இந்த "கட" ஆகிய புறநிலை பிரபஞ்சத்தை விளக்கம் செய்துக் கொண்டே இருக்கின்றார். இந்த புறநிலைத் தோற்ற பிரபஞ்சத்திற்கு ஆதாரமாய் இருப்பது அகண்டாகார சூன்யப் பெருவெளியில் நிறைந்துள்ள சத்துப் பொருள்" ஆகிய இறைவன். இதுவே "உள்" அல்லது "உள்நிலை" ஆகும். இந்த

அகமாகிய "உள் நிலையும்", புறமாகிய (பிரபஞ்சம்) "கட நிலையும்" இணைந்தே "கடவுள்" எனப்பட்டது. இது அண்டத்தில்.

பிண்டத்தில்;-

"கடம்" என்பது தேகத்தைக் குறிக்கின்றது. "உள்" என்பது "கடவுளான்மா" ஆகிய அகநிலைக் குறிக்கின்றது. "உள் எனும் உள்ளொளியே" தன் அருட் சித்துச் செயலால் "கடம்" ஆகிய தேகச் சூழலை வருவித்துக்கொண்டு "கடவுள் மனிதனாக" "இறைமனிதனாக" இவ்வுலகில் நித்தியானந்த அருள் அனுபவ வாழ்வில் (மரணமிலாப் பெருவாழ்வு) வாழ வந்துள்ளது.

- சுவாமி சரவணானந்தா

## P53 - "தயவது தானே தனுவை மாற்றிடும்!!"

தனு-உடம்பைக்குறிக்கும். மேலும் மேலும் தொடர்ந்து பிறந்து வந்து கொண்டிருக்கின்ற வினை தேகத்தை நித்திய சுத்த தேகமாக மாற்றி விளங்கச்செய்வதற்கு சுத்த தயவு வேண்டியுள்ளது.அத்தயவு அகமாகிய கடவுளிடத்திலிருந்து அனகமாகி விரிந்து சூழ்ந்து கொள்கின்றது.

எல்லாம் வல்ல கடவுள் தயவு தான் சூழ்கின்ற வினை உடம்பை நிறைவாய் சூழ்ந்து கொண்டு அனக ஆனந்த வடிவமாக (அழியாத தனி வடிவம்) மாற்றுகின்றது.

எவருக்கும் உள்ள அக ஆன்மாவே நித்திய மெய் தேகமாய் விளங்க இந்த ஆன்மா வாழ்வடைய மனித சூழ்தேகம் வேண்டியுள்ளது.

மனித தேகத்தில் வந்துள்ள ஆன்மா ஜீவகாருண்யத்தையே கைக்கொண்டு எல்லாம் வல்ல கடவுள் தயவினால் நிலைத்த வாழ்வடையும் போது அந்த ஆன்மாவினை சூழ வந்த மனிதனின் உயிர் உடம்பும் அழியாத தனிவடிவம் பெறுகின்றது.

ஜீவகாருண்யம் என்பது சத்விசாரம் மற்றும் பரோபகாரம் இரண்டையும் ஒருங்கே கொண்டது.

ஆண்டவரிடத்தில் இடைவிடாத அன்பும் (இடைவிடாத நினைவால் ஆண்டவரை மறவாதிருத்தல்) உயிர்களிடத்தில் மாறாத தயவும் கொண்டு ஆன்ம உருக்கத்தினால் ஜீவதயவு செய்து வாழ்வது.

இவைகளே மனிதனை கடவுள் தயவுக்கு மேல் ஏற்றி சுக ஆனந்த வாழ்வளிக்கும். அழியாத தனி வடிவமே சுக ஆனந்த வாழ்வே இங்கு தயா அனக வடிவம்.

- சுவாமி சரவணானந்தா

## P54 - "நான் பத்து பதினைந்து தினம் உள்ளே இருக்கப் போகிறேன்!!" - வள்ளலார்.

இதன் கருத்து என்ன?

"பத்து தினங்களாகிய கொஞ்ச காலம் வரையில் நீங்கள் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள்" என்று மகாவுபதேசத்திலும் ஆரம்பத்திலேயே சொல்கிறார். "பத்து தினங்கள்" என்பது "ஆன்மானுபவத்தைக்" (உயிரனுபவம்) குறிக்கின்றது. "ய-" என்ற எழுத்து ஆன்மாவைக் குறிக்கும்.

(அ + உ = ய = 10). அடுத்து, "பதினைந்து தினம்" என்பது "அருள் அனுபவத்தைக்" குறிக்கும். (15 = கரு) ஆன்மாவுக்கு "உட்கருவாக"(15) இருப்பது "திருவருள்".

"உயிரனுபவம் உற்றிடில் அதனிடத்தே ஓங்கும் அருளனுபவம் உற்றிடும்!!"என்பார் வள்ளற்பெருமான்.

இந்த உயிரனுபவமும்(10), அருளனுபவமும் (15) சேர்ந்ததே (10+ 15 = 25 உரு) "அருட்ஜோதி கடவுளான்ம சொரூபம்." இதைத்தான்,

"திரு அம்பலவன் திருநோக்கம் பெற்றார்க்கு, "உரு"(25) அம்பலத்தே என்றுன்" - என்பார்

## P55 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### "பசித்திரு; தனித்திரு; விழித்திரு!!"

**"பசித்திரு";-**

உயிர் இரக்கமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் பழகி, உயிர்க்குலத்திற்கு உயிர் விளக்கமும்- அறிவு விளக்கமும் செய்துகொண்டிருத்தல்; சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கமாகிய

இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம ஒழுக்கங்களைக் கடைபிடித்து இப்பிறப்பிலேயே எப்படியாவது "திருவருளை அடைந்துவிட வேண்டும்" என்ற அதிதீவிர முயற்சியோடு இருத்தல்.இந்த இலட்சியத்திற்காக சத்தான சுத்த சைவ உணவை அளவோடு புசித்தல்.

**"தனித்திரு";**

அக உண்மையை உணர, இடந் தனித்திருந்து, சத்விசாரம் செய்தல்; உடல், மனம், உயிர் ஆகிய தத்துவக் கூட்டத்திலிருந்து விலகி, தன்னை அகநிலையில் தனித்து "அருட் ஜோதி கடவுளான்ம சொரூபியாய்" கண்டு நிற்றல். தனக்கு அயலாக எங்கும் காணாது, எப்பொருளிலும், எவ்வுயிரிலும் தனித்து தன்னையே கண்டிருத்தல். தனித்து, "யாவும் தானாய் நிற்றல்"

**"விழித்திரு";-**

அகநிலையில் "அருள் உணர்வு கெடாது, அருள் நிலை பிறழாது", சுத்தசிவ சாக்கிராதீத்தில் அருள் அக விழிப்போடு இருத்தல். அகமிருந்து விரிந்து ஐந்தொழிற் செயலோடு அனகமாக பிரபஞ்ச முழுதும் வியாபித்து நிற்றல்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P56 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

அனாதி நித்திய அருட்பெருஞ்ஜோதிக் கடவுள், மெய்ஞ்ஞானத்தில் "அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை" யாக எழுந்தருளி ஆட்கொண்டு உள்ளார். அந்த அக நிலை நின்றே நம் உணர்வும், உயிரும், உடலும் தோற்றி நாம் ஒவ்வொருவருமாக விளங்கிக் கொண்டுள்ளோம்.

அந்த அருட்ஜோதிக் கடவுளே அன்றே "நாம்" என்று சொல்லிக் கொள்ளுவதற்கு தனியாக ஒன்றும் இல்லை!! "அவரே நாமாய் இருக்கின்றது!!" உண்மை.

இதனை அறியாது ஜட பூத உயிர் உடம்பு நிலையை நாம் என எண்ணி, கடவுளுக்கு அயலாய் நாம் இருப்பதாகக் கருதுவதே ஆணவ அகங்கார மறைப்பு. இதனால் தேகபோக வாழ்வில் பிழைத்துக்

கொண்டே இருப்பதும், இதனை விடுத்து உட்கலந்து (உள்ளொளியில் ஒடுங்கி) ஒழிவதும் தவறே!!

- சுவாமி சரவணானந்தா

## P57 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**“தயவு ஒளியான கடவுள் உண்மை வடிவை,” நாம் நம் சிரநடு கொண்டுள்ளோம். அதுவே நம் உண்மையாய் உள்ளதை உணர்ந்து கொள்ளாமல், “உடல் வடிவை நாம் என மயக்கறிவால் கொண்டு வீண் அவத்தை படுகின்றோம்.” உடற் பற்றற்று, அக வடிவினின்று தயா இன்பவாழ்வு வாழ வேண்டியுள்ளது.**

“அக வடிவம் அறிவுச் சொரூபமே; அது ஒன்றே ஒன்றுதான்!!” அந்த ஒன்றே தான் விளங்க, விசேட காரணத்தால், பல்வேறு உயிரின வடிவினின்று பிரகாசிக்கின்றதாம். “மனிதனில் இவ் அக வடிவம் அவனது ஆன்ம சொரூபமாக கண்டு கொள்ளப் படுகின்றது!!”

**“சுத்த ஆன்ம சொரூபம்”;**

அருள் ஞான விசாரத்தில் ஆழ்ந்து எழும்போது, நாம் சுத்த ஆன்ம சொரூபியாய் இருப்பதை அறிகின்றோம். “திருவருளே உண்மையில் நாமாக இருக்கிறது.” நம்மிடம் இருக்கும் ஆணவத்தை ஒழித்து விடுவதன் மூலமாக தான் இந்த உண்மையை அறிந்து கொள்ளுகின்றோம்.

-சுவாமி சரவணானந்தா.

## P58 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

### “உள் நின்று ஒளிர்க!!”

நம் கடவுள் உண்மை “தயவு” ஆகவே இருக்கின்றது. சத்விசாரத்தால் நாமே “தயாஒளி விளக்காய்” விளங்கிக் கொண்டுள்ளதை உணர்ந்து “உள் நின்று ஒளிர்கின்றோம்.”

**“சூழ்நர்க்கு சுகம்!!”;-**

நம்மிலிருந்து சதா பரவிக்கொண்டிருக்கும் தயா ஒளிக்கதிர்கள் தாமே, நமது எண்ணமாய், சொல்லாய், செயலாய் வெளிவந்து சூழ்நர்க்கும் சுகம் அளித்துக் கொண்டேயுள்ளன.

**“ஜீவதயவுப் பணியும் சர்வசித்தியும்”;**

எது வேண்டினும் அதனை வழங்கி நல் வாழ்வளிக்கும் வள்ளல் தன்மை கொண்டது நமது அருட்பெருஞ்ஜோதி தெய்வம். ஜீவதயவுப் பணியால் எல்லாச் சித்தியும் கிடைக்கப் பெறுதல் நிச்சயம் என்றுள்ள அருட் ஜோதி வள்ளலின் ஆணை எக்காலும் மெய்யே ஆகும்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P59 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## “சுத்த அன்பு”

பூட்டி வைத்த சுத்த அன்பு பொன்மணி சேர் பெட்டியினைக்
காட்டி வைத்தாய் என் உளத்தே!! கண்டதை நாட்டமுடன்
நான் திறந்து கொள்ளற்கு நற்றயவு (நல் தயவு) என்ற ஒரு
வான் திறவுக்கோல் அருளி வாழ்த்து.

அகத்தே இருக்கின்ற அன்பாம் ஒளியே,
சகத்தே விரிந்து தயவாம்- பகத்தே நீ
காட்சி அளிக்கின்றாய்!! கண்டொன்றி நிற்றற்குச்
சூட்சி புரிக எனைச் சூழ்ந்து!!

அச்சு ஈது அழியா அருள் உருவாய் ஓங்கற்கு,
நச்சிச் சிரநடுவே நண்ணி நின்று இச்சையற
எல்லாந் தானாகி எதையும் விரும்பாது
செல்லாத் தயா பணியே செய்.

- சுவாமி சரவணானந்தா

## P60 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

இந்த சத்தாம் அருட்பெருஞ்ஜோதியை, அதுவே தானாகி நின்று அறிந்து அனுபவிப்பதன்றி, பிறிது எவராலும் எவ்விதத்தும் அறிந்து கொள்ள முடியாதாம்.

திருவருள் வலத்தால் "அகமிருந்த வண்ணம் அனகமாக வாழும் முறையைக்" கண்டு கொண்டு இன்புறுகின்றான் இத்தருணம் மனிதன்.

"தயவுடன் அகத்தில் நிலை பெற்று விட்டால்," புறத்தில் பலப்பல வேறுபாட்டுத் தோற்றம், வேறுபாட்டுச் செயல், மாறுபாடான குணம் எல்லாவற்றையும் நீக்கி விட்டு "அகத்தில் நிலை கொள்ளலாம்."

நமக்கு புறத்தே இருப்பனவாக தோன்றுபவை எல்லாம் அகத்தின் பிரதிபலிப்பே யாகும்; அவை தனித்து இருந்து விளங்குவன அல்ல.

புற வேறுபாட்டுத் தோற்றத்திற்குள்ளே, "அக ஒருமைத் தயவாய் நின்று," அனக நிறை தயவு ஆக ஒளிர்கின்றதைக் கண்டு தயவு வாழ்வில் சிறக்க ஆணை செய்யப்படுகின்றோம்.

- சுவாமி சரவணானந்தா

## P61 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

வள்ளல் பெருமான் தம் அகத்தில் பள்ளி கொண்டிருந்த அருள் ஒளியை எழுப்பிக் கொண்டார். அந்த அருள் ஒளியுடன் ஒன்றி அதுவாகவே ஆகி விட்டார். தாமே அருள் ஒளியாகி அழியாமல் இருந்து வருகிறார்.

இதுதான் வள்ளல் பெருமான் பெற்ற அனக அனுபவம். இந்த அனக அனுபவத்தில் கிடைத்த ஆனந்த வாழ்க்கையுடன் நிலைத்து இருப்பவர் வள்ளல் பெருமான்.

அனக வாழ்வைப் பெற்ற வள்ளல் பெருமானைக் காண முடியுமா? முடியும்!! அதற்கு **"ஒவ்வொருவரும், அருள் விசாரத்தின் மூலமாக தங்கள் உள்ளத்தின் உள்ளே ஆழ்ந்து பார்க்கும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்."**

அப்போது தங்கள் உள்ளத்தில் அருட்பெருஞ்ஜோதி எழுந்தருளிக் கொண்டிருப்பதைக் காணலாம். “அதுதான் திரு அருட்பிரகாசரின் வடிவமும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் வடிவமும் ஆகும்; நம்முடைய ஒவ்வொருவரின் உண்மை வடிவமும் ஆகும்!!”

- சுவாமி சரவணானந்தா

## P62 - “தயவும் தியானமும்”

“தயா....நாம்”., “தயா.....நாம்”., என திரும்பத் திரும்ப சொல்லும்போது “தியானம்” என்றாகிவிடும்.

ஆன்மாவின் இயற்கைக் குணம் தயவு. ஆன்ம இயற்கையாகிய தயவோடு இருந்தால் சிவம் ஆகலாம்.

நாம் “தயா வடிவமானால் திருவருள் அனுபவம் நேரும்”

- வள்ளலார்

### “தயாநிலை”

**“த”**;-அகண்டாகாச வான்பெருவெளி முற்றும் நிறைந்த இயற்கை உண்மை ஆகிய சத்துப் பொருள்.இதையே “தகர மெய்ஞ்ஞான தனிப்பெருவெளி எனும் அகர நிலைப் பதி அருட்பெருஞ்ஜோதி” என்பது அருட்பெருஞ்ஜோதி அகவல்.இதுவே “தகராகாசக் கடவுள்” நிலை ஆகும்.

**“ய”**;-அந்த சத்துப் பொருளே அருள் அனுபவத்தின் பொருட்டு “யகர” ஆன்ம சிற்ஜோதியாய் சதா நம் சிரநடு ஒளிர்கின்றது.

“த - வும்”, “ய - வும்” ஒன்று கூடிய நம் நிலையே **“தயா நிலை”** ஆக நம் தலை நடு “அருட்ஜோதி கடவுளான்ம சொரூபமாய்” விளங்குகிறது. இதுவே அழியா நித்தியானந்த வாழ்வைத் தருகிறது.

- சுவாமி சரவணானந்தா

## P63 -தயவு ஒளி தெய்வீக சிந்தனை

“நானென” நிற்பது, நந்தயா ஜோதி நாதன் என்றறிந்து இங்கே - நான் “அவர் ஆதல்” வேண்டும்!! “தேனென” மாயையைச் சேராதே மனமே!! தேகப் பற்றற்றான் வடிவாவாய் மனமே!!

புருவநடு நின்று நினைந்து நினைந்து, புகலரு தயவினைப் புணர்ந்திடல் வேண்டும்!! “உருவ உணர்வற்று ஒளி சேர்வாய்” மனமே!! உறு மதன் உண்ணின்று தயை செய்வாய் மனமே!!

மின்னிடு தயாஜோதி என்நடு இருந்து, மெய்ஞ்ஞான நடஞ் செய்யக் கண்டிடல் வேண்டும்!! “நின்னடு நிள்கின்ற நேயரை மனமே, நீ கூடி என்நடு நிலைத்திடு மனமே!!”

- சுவாமி சரவணானந்தா (தயவுப் பாக்கள்)

## P64- “திருவருட் திருமேனி இருந்த வண்ணம் இயம்புகவே!!”

சதா “ஆண்டவனாரது அருள் அற்புத ஞான சித்தத் திருமேனியின்” மங்கலத் திருக்கோலத்தைக் கண்காட்சியாக, உடல் குழைய, உள்ளங் குளிர, ஆனந்தக் கண்ணீர் கொண்டு, பரவசத்துடன் தரிசிக்கப் பெறும் பெரும் புண்ணியம் உடையவர்களாய் எதிர்ப்பட வாய்க்கப் பெறவும் நின்றோமேயானால்,;

நாம் எல்லவரும் சுத்த சன்மார்க்கத்தினுக்கு உரிமையுடையவர்களாகி, அறிவு வந்த காலமுதல் கண்டறியாத அற்புதக் காட்சிகளையும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும், அறிந்தறியாத அற்புத அறிவுகளையும், அடைந்தறியாத அற்புத குணங்களையும், செய்தறியாத அற்புத செயல்களையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும் வெளிப்படத் தரிசிக்கும் அந்த கணத்தினுள்ளே பெற்றுப் பெரும் களிப்புடன் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாத “சத்திய சுக பூரணப் பெருவாழ்வு என்னும் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் வாழப் பெறுவோம்.”

இது சத்தியம். இது சத்தியம். இது சத்தியம்.

- திருவருட்பிரகாச வள்ளலார்

## P65 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "அருட்பெருவெளி நிலை!!"

உணர்ந்து கொள்ள முடியாத பெருவெளியின் நிலையை ஆய்வதை விட்டு, "அருள் பெறற்கான "ஒருமையும் தயவும்" கொண்டு உளமுருகி நின்றால், அகத்தில் அருள் வெளியில் கடவுள் மயமாய் இருக்க முடியும்."

அப்படி இருந்துகொண்டு அக்கடவுள் வெளியின் உண்மையை அனுபவிக்கும்போது அதன் ரகசியம் முற்றும் அறியப்படுவதாம்; அனுபவப்படுவதாம்.

அதாவது அக்கடவுள் வெளியின், 1) வடிவின், 2) இயலின், 3) செயலின் உண்மையெல்லாம் அனுபவமாம்.

1) அது எல்லையற்ற, முடிவற்ற "வடிவினதாய்" (உண்மை), 2) அது எல்லையற்ற, முடிவற்ற "இயலினதாய்" (விளக்கம்), 3) அது எல்லையற்ற, முடிவற்ற "செயலினதாய்" (இன்பம்), உள்ளது எனவும்

அதனால் அவ் அனுபவ நிலை உறுவோறும், அப்படியே நிறைவுற்று, எஞ்ஞான்றும் திகழ வல்லவன் ஆகின்றான் ஆம். இதுதான், "அருளாலே கடவுள் பெருவெளியைச் சார்ந்து நின்று அனுபவிக்கப்படும் நிலையாக விளங்குகின்றது."

- சுவாமி சரவணானந்தா

## P66 -"அசைவற்ற ஒளி!!"

## "அசைவு அற்று இருத்தல்" என்றால் என்ன?!

அதாவது கடவுள் நிலை என்பது "அக நிலை" எனப்படும். இந்த அருள் நிலையிலிருந்து ஒருபோதும் இறைவன் புறவுலகுக்கு வருவதில்லை!! இந்த மாபிரபஞ்சத்து எல்லா உயிர்களும், பொருள்களுமாக ஆண்டவன் வியாபித்து உள்ளான்.

" ஓடும் உலகு, உயிர் ஆகி நின்றானே!!"என்பார் திருமூல நாயனார். புறநிலையில் எல்லா உயிராகவும், அதனதன் அனுபவங்களாகவும் இறைவன் இருந்தாலும், அகநிலையை விட்டு அவர் அசைவதில்லை! அந்நிலையை விட்டு கீழிறங்குவதில்லை!!

புறநிலையில் அவரே அனேகராய் இருந்து இன்பதுன்பம் நுகர்ந்தாலும், அகநிலையில் அவர் ஒருவராக - "அருட்பெருவெளியில்" - சுத்த சாக்கிராதீத சுகநிலையில் இருந்துகொண்டு, ஆனந்தத் ஐந்தொழில் திருநடனம் என்றும் புரிந்து வருகிறார்.

இந்த உண்மையை அறிந்து கொள்ளும் ஒரு பக்குவ ஆன்மாவும், (மனிதனும்) அந்த அகநிலையே தனக்கும் உரிமையாகக் கண்டு கொள்கிறான். தானும் இறைவனோடு கூடி அத்துவிதமாய் நின்று அங்கு அகநிலையில் அசைவற நிலவுகின்றான்.

இதைத்தான் வள்ளற்பெருமான்,

"ஆடாதீர்!! அசையாதீர்!!" என்கிறார்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P67 - அருட்பெருஞ்ஜோதியின் பொது உண்மைகள்

1) எங்குமாய் எல்லாமாய் இருக்கும் அருட்பெருஞ்ஜோதியை நாம் உணர்ந்து அனுபவிப்பதற்காக, அருட்பெருஞ்ஜோதியே நம் உள் "ஆன்ம சிற்றுருவாய்" இருக்கிறது; "நம்முள் நாமாக" நம்முடனேயே இருக்கிறது.

2) நம்முள் இருக்கும் "கடவுள் ஆன்ம சிற்றுருவே", கடவுளும் நாமும் (ய) ஒன்றியிருக்கும் பொதுநிலை!! எங்கும் நிரம்பி இருக்கும் ஆண்டவர், நம் சிர நடுவில் இருக்கும் "மெஞ்ஞான பீடத்தின் -ஆன்ம சிற்றுருவில்" தம் முழுத் தன்மையுடன் இருக்கிறார். அவரை நமது சிர நடுவில் இருக்கும் சிற்றம்பலத்தில் தான் காணமுடியும்; அவரை நம்முள் கண்டு, அவருடன் ஒன்றித்தான் அவரை அனுபவிக்க முடியும்.

3) இந்த அக அனுபவ நிலையைப் பெற்றவர்கள் தங்கள் "அருள் ஞான உணர்வால்," உலகம் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைக் காண்பார்கள்.

4) அருட்பெருஞ்ஜோதி நிரம்பியிருக்கும் அகன்ற வானவெளியே "கனகசபை". நம் அகவெளியில் அதை "அருள் அறிவால்"

காணலாம். நம் அக வெளியில் நமக்குள் இருப்பது "சிற்சபை". சிரநடுவில் இருப்பது ஆன்ம ஆலயம்; இந்த மெய்ஞ்ஞான பீடத்தில் தான் அருட்பெருஞ்ஜோதி இருக்கிறார்; இங்குதான் ஜோதியைக் காணவும், துய்க்கவும் முடியும்.

5) அருட்பெருஞ் ஜோதியை ஒவ்வொருவரும் தங்கள் அக ஞானசபையில் காண்பது முக்கியம். அதற்கு, அமைதியும் தயா ஒருமையும் அவசியம்.

- சுவாமி சரவணானந்தா

## P68 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

1) நம் அருட்பெருஞ்ஜோதி ஒன்றே ஒன்று தான் உண்மையில் இருக்கின்றது. அது ஒன்றாகவே இருந்து கொண்டு, தானே பரிபூரணமாய் பிற எவ் ஆன்மாக்களிலும் மறைந்து கிடக்கின்றதாக திருவருளாலே உணர்த்தப்படுகின்றோம்.

2) நம் அருட்ஜோதி பதியின் பெருமை யாதெனில், தான் ஒரு ஆன்ம சிற்றணுவில் நிலைத்து இருந்து கொண்டு, தன்னைச் சூழ ஜீவதேகத்தையும் போக பொருள்களையும் தன் அருள் துணையால் வருவித்துக் கொண்டு விளங்குகின்றதாம். தனது அருள் உண்மை வெளிப்படற்கென்றே வேண்டுவன எல்லாம் தருவித்துக் கொண்டிருக்கிறதாம்.

3) தன்னைத் தான் வெளிப்படுத்திக் கொள்ளற்காகவே, உள்ளிருந்து ஆளுகின்ற ஆன்மபதி இத் தேகத்தை தன் சுதந்திரத்தாலேயே (திருவருட் சுதந்திரம்) வருவித்துக் கொண்டு உள்ளார்.

4) இறைவனே அகம் நின்று, அனகம் உற்று நித்தியானந்த வாழ்வு கொண்டு நிலவ இம் மனிதனாய் வந்து விட்டுள்ளார் என்பது உண்மை.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P69 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

“நான், நான்”- எனக் கூறும் போது எதை குறித்துச் சொல்கிறோம்? தேகம், உயிர் இவைகளைக் குறிக்கிறதா? இவற்றுக்குக் காரணமான ஆன்மாவையே குறிக்கிறது.

“ஆன்மா நான்” என்ற உணர்வே “தற்போதம்” ஆகும். “நான்” என்ற ஆன்மாவை கூட “என்னுடையது” என்று கூற நமக்கு உரிமை இல்லை.

“ஆன்மா” என்பது என்ன? அகண்ட வெளி நிறை பரம்பொருள் தன் முழு இயல்போடு ஒரு சிற்றணுவில் விளங்குகின்றார். அனுபவத்தின் பொருட்டு அதுவே ஆன்மா எனப்படும். அது கடவுளே!!

ஆன்மாவுக்கு இயற்கையாக தோற்றும் உணர்வு “ஆணவமலம் என்ற தற்போதம்” ஆகும். அருள் ஞான பக்குவத்தே, ஆணவ மலம் நீங்க, இறை உண்மையே “தான்” என்று உணரப்படுகின்றது.

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P70 - அருட்பெருங் கடவுள் விளங்கும் ஆன்ம நிலையம்.

புறத்தில் காணும் எந்த உயிரிலும், எந்தப் பொருளிலும், எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும் நம்பதியைக் காண முடியாது.

ஆகையால், நாம் பிறர் வடிவில், விக்கிரகத்தில், தந்திர - மந்திர- இயந்திரங்களில், பிறிதொரு உலகத்தில், பிற பொருள்களில், சக்திகளில், மற்றொன்றில் நமது பதி இருப்பதாக கருத வேண்டாம்; பாவிக்க வேண்டாம். உண்மையில் அவைகளில் எங்கும் இருப்பினும், அங்கு காண்டற்கு இல்லை!!

உண்மையில் வெளிப்பட்டு விளங்குகின்ற இடம், சுத்த தயாஞானம் விளங்குகின்ற நம் சிரநடு ஆன்மத்தளி ஒன்றே ஆகும். இந்த இடத்தில்தான் தயாஞானக் கண்ணுக்குத் தோற்றி என்றும் விளங்குகின்றார். இங்கே எழுந்தருளியிருக்கின்ற ஒன்றான பதியே எங்கும், என்றும், யாவுமாய் விளங்குவதாய் அறிந்துகொள்ள உள்ளது.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P71 - சத்திய ஞான சபை

இந்த "ஞானாலயம்", உலகில் இதுவரை எவராலும், எக்காலத்தும் அமைக்கப்பட்ட அற்புத சிற்பக் கோயில்கள், பீடங்கள், மந்திரங்கள் எல்லாவற்றையும் விட கோடி கோடி பங்கு அதிக சிறப்புடையதாகும்.

ஏனென்றால், அவைகள் யாவும், கடவுள் உண்மையைக் கற்பனைக் கண்ணால் நோக்கி, உலகியற் சிறு சித்திகளின் பொருட்டே ஆக்கப்பட்டவையாம். ஆதலின், அவற்றால் அடைகின்ற பயன் சிறுமை உடைத்தேயாம்.

ஆனால், இவ் அருட்பெருஞ்ஜோதி ஒளிர் ஞானசபையில், எல்லாம் வல்ல உண்மைக் கடவுளையே கண்டு அடையக் கூடியதாய் உள்ளதால் இதன் பெருமை எங்ஙனம் கருதி, எங்ஙனம் உரைப்பதோ!!

இந்த ஆலயத்தில் காண்பது கற்பனா அதீதத்தில், அருளால் உணரப்படுகின்ற மெய்ப் பொருளே ஆகும். இப்பொருளை இரண்டற கலந்திருக்கும் உண்மை அனுபவத்தில் விளங்குவதே சுத்த சன்மார்க்க சாத்திய நன்னிலையாம். இதனை வழங்கவே இவ் ஆலயம் வடலூரில் நம் வள்ளலாரால் உருவாக்கி கொடுக்கப்பட்டதாகும்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P72 - "அகப்பரிணாமம்"

மண்ணோடு மண்ணாய்க், கல்லோடு கல்லாய்ப் புதைவுற்றுக் கிடந்த, "நாம் ஆகிய ஆன்ம சிற்றணுவைச்" சுட்டி அறிதற்கும் கூடாது இருந்திருந்தோம். அதிலிருந்து இந்த "அருள் இன்ப பெரிய இன்பானுபவத்தை" வழங்கும் பொருட்டு, முதலில் ஓரறிவு முதலாம் புலனறிவைத் தழைக்கச் செய்ய, ஒரு புல்லின் கருவில் சேர்த்தார் நம்பதி. அதற்குமேல் எத்தனையோ கோடி பிறவியில் சேர்க்கப்பட்டு, புலன் அறிவு வளர்ந்தது; மன அறிவு தழைத்தது; அது நிரம்பிய இஞ்ஞான்று இந்த "ஆன்ம ஞானமும்" வந்து விளங்குகின்றது. இவ்வளவு நெடுங்காலமாக அணுத்துவமாய் அருகிக் கிடந்தார் நம் அருட்பெருஞ்ஜோதி பெரும்பதி. "அது நாமாய்" இருந்த உண்மையும் இன்னே அறிகின்றனம்." இங்ஙனம் அளவறிய நெடுங்காலம் அணுத்துவமாய் இருந்த "நாம் என்பது, அந்த அருட்பெருஞ்ஜோதியாய் வெளிப்படுகின்றார்." நித்திய அகம் இருந்து உடல், உயிர், உணர்வு

கொண்டு இம்மனிதனாய் இன்று விளங்குகின்றார். இந்த வெளிப்படல் அனக நிறைவே அன்றி வேறல்ல. இனி அருட்பெருஞ்ஜோதி நடனத்தை அனைத்து உலக மக்களும் கண்டுகொள்ள செய்வார் நம் பதி.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P73

"உண்மையில் உள்ளது ஒருபொருள் அதுவே உள்ளிருந்து ஓங்குவது அறிமின்!! எண்மையில் இலங்கு எழில் உரு யாவும் இந்திர ஜாலம் என்று அவற்றில் பெண்மையாம் இச்சை பெரிது கொண்டு உழலேல்!! பேசிய உண்மையில் நின்றே தன்மையொடு இங்கே தயவினில் வாழ்வீர்!! சாவையும் ஒழித்திடலாமே!!"

**முக்கிய குறிப்பு:** அகண்டமானது: கடவுள் பேருருவம். அவ் அகண்டத்தில் ஒரு சிற்றணுவைத் 'தன்' சிற்றுருவாய்க் கொண்டு அதில் தன் சச்சிதானந்த அனுபவத்தை ஏற்றுள்ளது கடவுள் மனிதனின் அல்லது சுத்தசன்மார்க்கியின் நிலையாம். அணுத்துவமாகிய கடவுள் சித்துரு அல்லது சிற்றுருதான் சிற்றம்பலம், சிற்சபை, ஆன்ம அணு எனப்படுகின்றதாம். இந்தச் சிற்றுருவைச் சூழ உள்ள இறைபேருருவம் தான் பேரம்பலம். பொன்னம்பலம் எனவும் கூறப்படும்

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P74 "அறிவு நிலை இரு!!"

## "அலை மனம் அசைவு அறு!!"

## "அருளின் ஒளி பெறு!!"

## "ஒருமையில் விளைவுறு!!"

- சுவாமி சரவணானந்தா

"ஒருமை" = அறிவும் ஒழுக்கமும் ஒத்த இடத்தில், "தானே கூடும்!!" "அறிவு" -என்பது "அருள் அறிவு" ஆகும். "ஒழுக்கம்"என்பது கற்பு நிலை வழுவாது இருத்தல். தனது அக உண்மையாகிய "அருள் அகநிலையிலிருந்து" வழுவாது, நிலை

பிறழாது, "தேகம் நான்" என்ற கீழ்நிலைக்கு இறங்காது, மேல் நிலையில் "அருளொடு பொருந்தி நிற்றல்!!"

இந்த நிலையில் "தானே கூடும்!!". அதாவது ஒருமை நிலையாகிய "யாவும் தானாய் நிற்றல்" ஆம்.

## P75 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**அக ஆன்ம சொரூபத்தில் நிலைத்திருங்கள்!**

**உங்கள் எதிர்காலத்தை கடவுள் தீர்மானித்து வேலையை முடிப்பார்! நடக்க வேண்டியது உரிய நேரத்தில் நிகழும்! கவலைப்படாதீர்கள்!**

**தொடர்ந்து "உள்ளே" செல்லுங்கள்!**

**மற்றவற்றை அகச்சக்திப் பார்த்துக் கொள்ளும்!!!**

- ஓர் சத்திய ஞானி

## P76 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக் கண்டாராய் மனமே - ஒருவருக்கும்
தீங்கு செய்யாதே செய்நன்றி மறவாதே
ஏங்கி இளையாதிரு

- ஓர் மெய்ஞ்ஞானி

தயவினொடு வாழ்க

## P77 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

நீங்கள் எவராய் இருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் சரி, "ஒன்றான அருட்பெருஞ்ஜோதி மயமாய்த்தான் இருந்து வருகின்றீர்கள்" என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இந்த அருட்பெருஞ்ஜோதியே இறைவனின் நிறை வடிவம் : "இதுவே நம் ஒவ்வொருவரின் இயல் உண்மை வடிவம்". இந்த உண்மையை

உறுதியாக மனத்திற் பதித்துக் கொள்ளுங்கள். இதற்குத்தக அருள் இயல் வாழ்வையே நம் உலகியல் வாழ்வாக ஆக்கிக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

- சுவாமி சரவணானந்தா

## P78 - "எல்லாம் திருவருட் சுதந்திரமே!!"

வேண்டத் தக்கது அறிவோய் நீ!!
வேண்ட முழுதும் தருவோய் நீ!!
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ!!
வேண்டி என்னைப் பணி கொண்டாய்!!
வேண்டி நீ யாது அருள் செய்தாய்?!
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டெனில்
அதுவும் உன்றன் விருப்பன்றே!!

- மாணிக்க வாசகப்பெருமான்

## P79 - " நானாகித் தானாகி நண்ணுகின்ற தெய்வம்!!"

அகமிருக்கும் ஒன்றான அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் நிலையிலிருந்து தான் வெளிப்பட்டு நாம் ஒவ்வொருவருமாய் உடல், உயிர், உணர்வு கொண்டு இவ்வுலகிடை விளங்கிக்கொண்டிருக்கின்றோம். ஆக, அகண்டாகாச வான்பெருவெளி நிறை ஒன்றான கடவுளே தான் (த), சச்சிதானந்த அருள் அனுபவத்தின் பொருட்டு, இம் மனிதனாய் (ய) இங்கு விளங்கிக்கொண்டிருக்கின்றார். ஆனால், நாமோ அவர் திருவுள்ளம் அறியாது "நான்" என்றும் "எனது" என்றும் கொண்டு அநித்திய உலக வாழ்வில் புலனின்பத்தையே மிக விழைந்து கழிந்தொழிந்து போகின்றோம். இனி அகமிருந்து அனக வாழ்வு வாழ முயலுவோம்!!

-தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P80 - சத்விசாரம், பரோபகாரம் என்றால் என்ன?

சத்விசாரம் = சத்து + வி + சாரம்

நம் தலை நடு விளங்கும் ஆன்ம சிற்சபையில் எழுந்தருளியிருக்கும் சத்துப் பொருள் ஆகிய “வி” என்கின்ற அருள் ஒளியைச் சார்ந்து வாழ்தல் சத்விசாரம் ஆகும். நாம் நமது ஒருமை மன உணர்வை சிரநடு சிற்றம்பலத்தே விளங்கும் அருள் ஒளியில் நாட்டி நிற்றலே கடவுட் சார்பு பெறுதலாம்.

சத்விசாரத்தால் அந்த “பர” நிலையில் பொருந்தி இருந்துக்கொண்டே அனகமாக விரிந்து மனோ, வாக்கு, காயத்தால் பிறர்க்கு, பிற உயிர்களுக்கு ஜீவகாருண்ய அன்புத் தொண்டு புரிந்து வருவதே “பரோபகாரம்” ஆவது.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P81 - அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளலாருக்கு உபதேசித்தது;-

“தயவினொடு வாழ்க!!” எனத் தனித் திருவாய் மலர்ந்தாய்.

-47 ஆம் பாடல், அருட் பிரகாச மாலை, திருவருட்பா, நான்காம் திருமுறை

“என்னை ஏறாநிலை மிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு.” “தயவு” என்னும் கருணை தான் என்னைத் தூக்கி விட்டது.

-திருவருட்பிரகாச வள்ளலார்.

“தயவு அனுபவம் (சிரநடு) கடவுளான்மப் புள்ளியிலிருந்து விரிந்து, நிறைந்து, சூழ்ந்து அகண்ட பேரொளியாய், அருட்பெருஞ்ஜோதியாய், என்றும் விளங்கிக் கொண்டிருப்பதாக!!”

- தயாநிதி சுவாமி சரவணானந்தா.

## P82 - "சத்விசாரம்+ பரோபகாரம்"

### "உண்மை காண உள்ளே செல்கின்றேன்!!"
### "உலகை வாழ்விக்க வெளியே வருகின்றேன்!!"
### "உள்ளே செல்கின்றேன்";

சத்விசாரத்தால் தேகநிலை, கரணநிலை, ஜீவ நிலை கடந்து, உள் நிலையில் "அருட்ஜோதி கடவுளான்ம சொரூபத்தில்" நிலைத்து நிற்றல்.

### "வெளியே வருகின்றேன்";-

பரோபகாரத்தால் உள் நிலையிலிருந்து (அகநிலை) விரிந்து "அனகமாக" சிந்தனை, சொல், செயல் மூலமாக உயிர்க்குலத்திற்கு அன்புத் தொண்டாற்றி மகிழ்தல்.

-சுய தரிசனம்.

## P83 - "இரவு உறங்குவதற்கு முன்பும் & அதிகாலை விழித்த உடனும்";-

இந்த இரு நேரத்திலும் நமது கரணத்தை (மனதை) புருவமத்தியில் செலுத்த வேண்டும். இரவு உறக்கம் வரும் முன்பு உலக விஷயாதிகளிலிருந்து கரணம் ஓய ஆரம்பிக்கும். இந்த நேரத்தில் கடவுட் சிந்தனையோடு இருக்க வேண்டும். அதேபோல் அதிகாலை தூங்கி எழுந்தவுடன் (உறக்கத்திலிருந்து விழிப்புநிலைக்கு வரும்போது) மனம் இயல்பாகவே ஓய்வில் இருக்கும். இந்த நேரத்தில் மனதை (நினைப்பு மறப்பற்று இருக்கும் போது) புருவமத்தியில் நிலைக்கச் செய்து, உள்ளொளியை நினைத்து வந்தால் மெய்ப்பொருளை சிறிது சிறிதாக உணரலாம். சுழுத்தி எனும் உறக்கம் கலைந்தவுடன் அப்படியே உட்கார்ந்து கொண்டு சிறிது நேரம் ஆழ்ந்து சிற்சபை தியானம் செய்ய வேண்டும்.வேறு எந்த காரியத்திலும் ஈடுபடக்கூடாது.

- ஓர் சன்மார்க்க அன்பர்.

## P84

அருட்பெருஞ்ஜோதி, மனிதனின் தலை நடுவுள் அணுத்துவமாய் அருகிக் கிடப்பது. உண்மையில் அதுவே உயிரை, உணர்வை, உடலை ஆக்கிக்கொண்டு மனிதனாய் உலகில் வாழ்விக்கிறது. இதுதான், கடவுளே தான், உண்மை மனிதனாய் இருக்கின்றதாம். இவ் உண்மையை உள்ளபடி அறிந்து வாழ்கிறான் சன்மார்க்கி.

பதி அனுபவம் கொண்டிலங்க வேண்டின் "திருவருள் விசேடத்தினைச் சத்விசாரம் செய்து "அகநிலை சிற்றம்பலத்தே" உற்று அருள் வாழ்வு வாழ வேண்டி உள்ளதாம்."

சிற்சபையைக் கண்டு, அடைந்து, அருள் விளக்கம் பெற்று நிற்கும் போது, வேதாகம உண்மையெல்லாம் உள்ளவாறு தெளியலாகும்.

- சுவாமி சரவணானந்தா

## P85

சிரநடுவில் இருக்கும் அருட்பெருஞ்ஜோதியை நம் உள்ளத்தில் நிறுத்தி, அதைத் திருப்பள்ளியில் இருந்து முதலில் எழுந்தருளச் செய்து கொள்ள வேண்டும். பின்னர் "அந்த அருட்பெருஞ்ஜோதிக்கு நம்மையே அடைக்கலப் பொருளாக்கிவிட வேண்டும்." இவ்வாறு பற்றற்ற நிலையில் இருக்கும்போது திருவருள் அனகமுற்று நம் வழியாக செயல்படும்.

"தேகப்பற்று சிறிதும் இல்லாமல், நாமும் அருட்பெருஞ்ஜோதியும் ஒன்றி நிற்க வேண்டும்." அப்போது அருட்பெருஞ்ஜோதியின் திருப்பள்ளி நிலை கலைந்து அதன் அருள் வெளிப்படும்; "நாமும் அருட்பெருஞ்ஜோதியின் கருணையும் வேறல்ல, ஒன்றுதான்!!" என்ற உண்மையும் நமக்கு விளங்கும். அருட்பெருஞ்ஜோதியின் திருப்பள்ளி எழுச்சியினால் ஏற்படும் சன்மார்க்க பயனையும் அடைந்து மகிழமுடியும்.

- சுவாமி சரவணானந்தா

## P86 “சுத்த நிலை”

“நினைப்பு மறப்பு அற்ற சுத்த நிலையே பொன் மணி மேடையாகச் சொல்லுவர்.”

பொய் கொடுத்த மனமாயைச் சேற்றில் விழாது எனக்கே பொன்மணி மேடையிலேறி புந்தி மகிழ்ந்திருக்கக் கை கொடுத்தீர்-

-வள்ளற்பெருமான்.

உடற் பற்றற்று, தலைநடுக் கலைப் பீடத்திருந்தால், தேக உணர்வும், ஜீவசக்தியும், ஆன்ம ஞானமும், அருள் அனுபவமும் ஒன்றில் ஒன்று அடங்கியும் விரிந்தும் விளங்கும் உண்மை எல்லாம் கண்டு உயர் இங்கித வாழ்வு பெறலாம். அது பெற, “புற ஆய்வை விட்டு “உள்” பொருந்தி தயவோடு உலகில் வாழ்வது வழியாம்.”

- சுவாமி சரவணானந்தா

## A44 “ஆன்ம வடிவமும் கடவுளுடையதே!!”

உண்மையில், “அகண்ட ஜோதி நிலையும், அதில் ஒரு தனி அணு நிலையும், கடவுள் கொண்டுள்ள பெரு வடிவும் சிறு வடிவுமேயாம்.” சிறிய வடிவில்தான் அப்பதி உண்மையை அறிந்து அனுபவிக்கக் கூடியதாய் உள்ளதாம். இந்தச் சிறு வடிவம் தான் “நம்முடைய ஆன்மா” என்று நாம் சொல்லிக் கொள்கின்றோம். இரண்டும் கடவுளுடையனவேயாம்.

“எனக்கே ஈருடம்பு என்கின்றார் (உன்னை இணைத்து)”

- வள்ளலார்

நாமாய் இருக்கின்றதும், அவராய் உள்ளதும், ஆன்ம சிற்றணுவாய் உணர்ந்து கொள்கின்ற போது சூழுயிர்கட்குத் தயவு செய்து, உயிர் விளக்கம் செய்வது நமது கடமையும், கடவுள் ஆணையும் ஆக தெளிவோம்.

- சுவாமி சரவணானந்தா

## P88 - ‘‘விதி’’

எப்போதும் அருள் வழங்கத் தயாராக இருக்கின்ற பதி, அது பெறும்படி முயற்சி செய்விக்கவும் அகத் துணையாய் இருந்து உதவுகின்றார். விதிமுறையின் இரகசியமே இங்குதான் மறைந்து கிடக்கின்றது. ஆன்மாவுக்கு எல்லாவிதமான சூழ்நிலையும் உதவி, அகப்பெரும் பதியை அடைவிக்கவே வந்துள்ளது இவ்விதி முறை.

**ஆகையால் அவ் அகநிலை பெறாத வரையில், இந்த விதிமுறை விட்டொழியவே ஒழியாது!! எந்த நொடியில் அந்த அகநிலைப் பேறு கிட்டுகின்றதோ, அதே நொடியில் தானே வினைச் சூழல் - விதிமுறை எல்லாம் விலகி ஒழிந்து போகின்றனவாம்.** உண்மை அறியும் அறிவு பெற்று அதனை கொண்டும் உள்ள நல்ல ஒரு தருணம் இதுவாகும். இத்தருணம் வேறு ஒன்றையும் மதித்து மயங்கிக் கிடக்காது, அருள் விசாரம் செய்து, ‘‘அக அம்பலத்தை அடைந்து’’ அனக ஆனந்த வாழ்வில் ஓங்குவீர்களாக!!

-சுவாமி சரவணானந்தா

## P89

ஒன்றாகிய அருளொளிப் பரம்பொருளே உள்ளிருந்து எவருமாய்த் தோற்றி தன் உண்மையை ஏற்பிக்க விளங்கிக் கொண்டிருப்பதாலே, அவர் மயமாய் அக நின்று அனகமாய் வாழத் தொடங்கிவிட்டால், ‘‘அவரே நாமாய்- நாமே அவராய்’’ திரிந்து மாறி உலகம் எல்லாம் திருந்த தயவுத் தொண்டு புரிந்து கொண்டு வாழ்வோம்.

கடவுள் உண்மையைத் தன் ஆன்ம சிற்சபையில் கண்டு, திருமுன் நின்று, பலவாறு முறையிட்டும், பிரார்த்தித்தும், தியானித்தும் **தன்னிலை மறந்து பதி நிலையில் ஒன்றிய பின்னர், பதி தயவு செயல் விளங்க வாழ்ந்துக் கொண்டிருக்க வேண்டும்.**

- சுவாமி சரவணானந்தா

## P90 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**“கட + வுள் = கடவுள்”.**

கடம் என்கிற தேகத்திற்கு உள்ளே ஒளிர்கின்றவன் இறைவன்.

உடம்பினால் ஆய பயன் உள்ளிருக்கும் உத்தமனை காணவே ஆகும்.

வேண்டத்தக்க அறிவான் அவன்; வீண் கவலை வேண்டாம். உள்ள உருக்கத்தால் உள்ளே அன்போடு இறைவனைப் பாடிப் பணிதல் வேண்டும். வெளியே மலை, காடு, குன்று, குளம், ஆறு என வீணில் அலைய வேண்டாம். அங்கெல்லாம் எவ்வளவு காலம் இறைவனை தேடினாலும் காண முடியாது முடியாது. பொது அன்றி தங்கும் இடம் போச்சு. உன்னைப் பார்;உனக்குள்ளே என்னை பார்.

உடல், மனம் ஆகிய தத்துவங்கள் நாம் அல்ல; இவற்றை கடந்து உயிரை உற்று நோக்கு! உன்னில் உள்ளொளியாக இறைவனைக் காண்பாய்!!

- திருவருட்பா சாரம்.

## P91 - தயவு ஒளி தெய்வீக சிந்தனை

**தான் அருட்பெருஞ்ஜோதியாய் இருப்பது உண்மை.** உள்ளினது தன்மையே உண்மை (உள் + மை) எனப்படுவது. அது அருட்பெருஞ்ஜோதி ஆகிய ஒன்றாய் உள்ளது. “அகத்து இலங்கும் மெய்யருள் உணர்விலேதான்” விளங்குவதாய் உள்ளது, இந்த உண்மையான அருட்பெருஞ்ஜோதி.

**உள் விளங்கும் “அருள் ஒளி நிலையத்தில்” வாழும் பேறு பெற்றுவிட்டால்,** புறத்தில் எவ்விடமும், எச் சூழலும் நன்னலம் செய்வதாகவே திகழும் அல்லது அமைந்து இலங்கும். பிற இடத்து எங்கும் கிடைக்காத பெரும் சுகம் எல்லாம் இந்த அருளொளி உளத்திருந்தே பெறலாம் என்று அறியலாகும்.

உண்மை அனுபவம் பெறத் தயா ஒருமையோடு தலைநடு கடவுள் ஒளி வளர் தலத்தை ஓர்ந்துகொண்டு வாழலால் பெருநலம் ஓங்கும்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P92 - “அனுபவ நிலை”

நம்பதி ஒருவராகவே அனுபவிக்கப்படுவதால் நம்மோடு ஒன்றிய, பிரிவு இல்லாத நிலையில் கண்டுகொள்ளலன்றி, சாயையான பிறவற்றில் அப்பதியைக் கண்டடைய செல்வது அறியாமையே!! அப்படி பிற இடங்களில் நாட்டம் வைத்து செல்லும்போது உண்மை நிலையில் பிறழ நேர்ந்து விடும்; அந்த பிறழ்ச்சியால் ஒருவனது நிலையும், வாழ்வும் தாழ்ச்சி பெற்று அழியும். ஆகையால்,

**“அக அருள் அம்பல நிலையிலிருந்து அணுவளவும் நீங்க கூடாது.”**

“உண்மையில், நித்திய நிறைவான அருட்பெருஞ்ஜோதியே நாமாக அக அம்பலத்தே எழுந்தருளி விளங்குகின்றார்.” அப்படி விளங்குகின்றவரே, தமது முழுத் தன்மையை அனுபவத்தில் வெளிப்படுத்திக் கொள்ளவே, தமது ஏகதேசத்தைப் பலவாகிய மகான்களின் ஆறாக பல காலத்தும் காட்டிக்கொடுத்து கொண்டுள்ளார். புறத்தில் அங்கங்கே காணப்படுகின்றவர்கள் எல்லாம், அப்பதி ஏகதேசத்தின் கூறுகளாகிய மாயா தோற்றங்களே அன்றி, அவர்களில் எவரும் அந்த பூரணருக்கு எந்த விதத்தும் ஒப்பாகார்கள்.

- சுவாமி சரவணானந்தா

## P93 - “உண்மைப் பிறப்பு”

ஒரு ஆன்ம அணுவில் இறை உண்மை வெளிப்பட்டு விளங்காத வரை அது “செத்த நிலையில்” கிடக்கிறது. ஆன்மாவானது “பத்தாக” பிறப்பு உண்டாக தயாரான நிலையில் உள்ளது. ஆனால், அவ்வான்மா பிறப்பதற்கு சர்வ சுதந்தரரின் தயவு வேண்டும். தேக நிலையில் இருந்து கொண்டுள்ள நாம், ஆன்ம நிலையினின்று இன்னும் பிறக்கவில்லை. அந்த ஆன்மா பிறப்பதற்கு எல்லாம் வல்ல பரம்பொருளின் தயா சுதந்திரம் வேண்டும். **“ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால், தேவனுடைய இராஜ்ஜியத்தை அடைய மாட்டான்”** என்கிறது பைபிள் வாக்கியம். இதில் சொல்லப்படுவது எல்லாம் **“அகப்பிறப்பு”** ஆகும். தலைநடு “பகர” வடிவக் குழியிடத்தே ஒளி வண்ணமாக

பிறந்து, உண்மை உணர்ந்து நிற்கும்போது, புதிதாய் புற பிறப்பும் இறப்பும் இல்லை!!

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P94 - தனு கரணாதிகள் தாம் கடந்து அறியும் ஓர் "அனுபவம்" ஆகிய அருட்பெருஞ்ஜோதி

( தனு=உடல், கரணம்=மனம் )

தேக நிலையிலிருந்து கடவுள் உண்மையை உணர முற்படுவது தவறு. உடல்நிலை, உயிர் நிலை, உணர்வு நிலை கடந்து "உள்ளொளி நிலை" நின்று, ஏகமான பரம்பொருளைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற உண்மையை உணர்தல் வேண்டும். தேகப் பற்றால் தேக உணர்வு கெடாதவரை, "தேகம் தான்" என்றே எண்ணுகிறான் மனிதன். உள் ஒளி "தான்" என்ற உண்மையை உணர்வதில்லை. மனிதனுக்கு தேகப்பற்று உள்ளவரை நினைப்பும், மறப்பும் உண்டு. நினைப்பும் மறப்பும் இன்றி அதுவாகி நின்றபோது நாமே எல்லாமாகி விளங்கி கொண்டுள்ளோம்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P95 - "இங்கே வம்மின்!! இங்கே வம்மின்!!"

மெய் அகத்தே விரைந்து வம்மின் "இங்கே!!" நித்திய மெய் வாழ்வு பெற்றிடலாம் கண்டீர்!!

ஆசை உண்டேல் வம்மின் "இங்கே!!" அடைந்திடுமின் உலகீர் "இங்கு" இது தருணம்!!

உண்மை உரைக்கின்றேன் "இங்கு" உவந்து அடைமின் உலகீர்!!

வள்ளற்பெருமான் சொல்லும் "இங்கு" என்பது "எங்கு" உள்ளது?! இந்த "இங்கு" என்பது "சிரநடு சிற்சபை ஆகிய ஆன்ம நிலையமே!!"

இது உச்சிக்குக் கீழே, உண்ணாவுக்கு மேலே, புருவ மத்திக்கு நேரே தலைநடு இடத்தில் நிராதாரத்தில் திகழ்கின்ற "சிற்றம்பல

அருட்பெருவெளி" ஆகும். இதுவே "அகநிலை" எனப்படும். இந்த "நித்திய அகநிலையே நமது உண்மை வடிவமாகும்."

- சுவாமி சரவணானந்தா

## P96 - "நான், எனது எனும் தற்போதம் ஒழிய வேண்டும்"

சத்விசாரத்தால், "நாம் யார்?" என சிந்திக்கும் போது, உடலும், உயிரும், உணர்வும் இறைவனின் தன்மையே!! எனவே, "நாம்" என்பது சூனியமாகும். "நான் என்பதே ஒன்றும் இல்லாததாக இருக்கும் போது," "எனது" என்பதற்கு என்ன இருக்கின்றது?!. "ஆண்டவர் உண்மை எப்போதும் ஒன்றாகவே உள்ளது!!" அதன் "தன்மை வெளியீடே" பலவாக விரிந்து விளங்குகின்றது. "நான், எனது என்பது இல்லாத போது, எல்லாம் அவர் மயமாகிறது!!" அகம் விளங்கும் ஆண்டவர் உண்மையை புருவநடு இடத்தே காண்கின்றோம். புருவநடு விளங்கும் உண்மை நாம் என எண்ணுகின்றோம். உண்மையில் அதற்கு காரணமான ஒன்று "அக நிலையில்" சிரநடுவில் விளங்கிக் கொண்டு உள்ளது.

- சுவாமி சரவணானந்தா

## P97- "நமது இயற்கை நிலை"

நமது இயற்கை நிலை, உண்மை நிலை எது? கடவுள் நிலையே நமது உண்மை நிலையாகும். அகம் விளங்கும் ஒளி தயவின் அம்சமாகும். அஃது, என்றும் நித்தியமாக விளங்குவது. கடவுள் நித்தியமானவர்; சத்தியமானவர். **நமது உண்மை, கடவுள் உண்மை என உணரும் போது வியப்பாக - அதிசயமாக உள்ளது.** நமது எண்ணம், சொல், செயல் எல்லாம் அகநிலையிலிருந்து வெளிப்படுகின்றன. ஆண்டவரின் ஆணைப்படி எல்லா செயல்களும் நடைபெறுகின்றன. இந்த உண்மையை உணர்ந்து, அகம் விளங்கும் பதியைச் சார்ந்து, அவர்

மயமாகி வாழும் போதுதான் பிறவித்தளை நீங்குகிறது. கிடைத்துள்ள மனித தேகமும், உயிரும் அழியாத் தன்மை பெற வேண்டும்.

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

## P98 - "உள்முகப் பயணம்"

இந்த உடலும், உயிரும், உணர்வும் எங்கிருந்து வெளிப்பட்டு விளங்கிக் கொண்டிருக்கின்றது?!

ஒன்றான சத்துப் பொருள் ஆகிய பரம்பொருளினிடத்திருந்து புறப்பட்டு இங்கு இப்படி **"அக் கடவுளே இம் மனிதனாய் வந்து விட்டுள்ளார்."**

அகநிலையிலிருந்தே அருள் ஒளியே (அருள் அனுபவத்தின் பொருட்டு) அனகமாக விரிந்து உடல்- உயிர்- உணர்வு கொண்டு இவ்வுலகிடை இந்த மனிதனாக விளங்குகிறது. இவ் உண்மையை உணர்கின்ற இடம் புருவமத்திய லலாட பீடம் ஆகும். **"புறத்தே திரிகின்ற மன உணர்வை அகத்தே திருப்பி ஆன்மாவில் பொருந்தச் செய்து அகம் நோக்கி பார்க்கும் "சத்விசாரத்தால்" அழியாத நித்திய நிலையான வாழ்வு பெறலாம்."**

- தயாநிதி சுவாமி சரவணானந்தா

# பகுதி - 4 முற்றிற்று.

## தயவு



# “ தயவுக் கடிதங்கள்”

## D1-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## “ தயவுக் கடிதங்கள்”

13- 03- 1989, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்.

தயவு விழை ________ க்கு (தங்கள் பெயரை குறிப்பிடவும்). அத்தயவே அனைத்து நலனும் அருளி, அமைதியும் ஆனந்தமும் வழங்க வேண்டுகின்றனன்.

**“எல்லாமான அருட்பெருஞ்ஜோதி ஒன்றே அகத்தே இருந்து கொண்டுள்ளது. அப்படி அகம் இருக்கும் ஒன்றே தான், நாம் ஒவ்வொருவருமாய், உள்ளிருந்து விளங்குகின்றோம்.”** அப்படி அகம் ஒன்றியபடி, ஐஞ்சக்திச் செயலால் எப்பொருளாயும், எவ்வியக்கமாயும், எவ் உணர்வாயும், எந்த யோகானுபவ சித்தி பெற்றும், முடிவில் அருட்பெருஞ்சக்தியிலே அடைந்து, அடங்கி, மறைந்து போய்க் கொண்டே இருக்கின்றோம். இவ்வளவும் புறத்தோற்ற மாற்ற மறைவுமேயாம். இவை எதனாலும் பாதிக்கப்படாது, ஆனால், தயவு விளைவின் பொருட்டே அகமேல் விரிதலும் அடங்கலும் ஏற்பட்டுக் கொண்டே வந்துள்ளது.

இச்சமயம் தான், அத் தயவு முழு விளைவு பெற்றுள்ள காரணத்தால், ஆன்மாவின் மீது விரிந்த பொருளாதி ஐஞ்சக்தி தோற்றமும், “**வுகர**” வண்ணமாகி, “**தனிப்பெருந்தயவுச்**” சுத்த முத்தியுருவாகி நித்தமும் நிலவுக் கூடியதாய் இருக்கின்றதாம்.

ஆகவே, சுத்த சத்விசாரத்தால், முதலில் தலைநடுவே “**தய**” வாகி நிற்க வேண்டும் நாம். அப்படி “**சுத்த தயா நிலையில்**” இருந்து கொண்டே எல்லாவற்றையும் தயவின் விரிவாகக் காண்பதன்றி, “**தயா நிலை**” மறந்து, புற வண்ணம் மட்டும் நோக்கி, பலவாகக் கண்டு, விருப்பு வெறுப்போடு பிழைத்தல்

சகல கேவல பிறப்பு இறப்பு நிலையாம். அது மாற வேண்டும் ; மாறித்தான் ஆக வேண்டும் ; எனவே, "**தயாநிலை**" நின்றபடி "**அனக தயவு வாழ்வு**" மேற்கொள்ளுதலே வழி.

**"நாம் தயா அணு வடிவாய்ச் சிரநடு உள்ளோம்".**

"**யா**" வே, ஆன்மா அணு. என்றால், "**தா**" வே "**அவ் ஆன்மாவின் அக அனக நிறைவுடைய கடவுள் உண்மை கொண்டதாம்.**"

இந்த "**அக அனக உண்மையை**" உணராத போது, நாம் ஆன்ம நிலையும் அறிந்து அடைந்து நிற்காத போது, நம் உலகியல் வாழ்வு, பொறி புலன் புறப் பிழைப்பே ஆகும். "**அக ஆன்ம நிலை நின்று வாழும் போதுதான்**" சுத்தமான அனகத் தயவு வாழ்வாக வாழக் கூடியவர்களாவோம் நாம் !!

ஆகவே, "**அணுத்துவமாய் இருந்து கொண்டு**" சதா பதியினிடத்து வேண்டிக் கொண்டும், சூழ வரும் யாவையும் தயவின் விரிவாகக் கண்டு கண்டு, ஜீவ தயா பணிக்கே ( உயிர் விளக்கம், அறிவு விளக்கம் ) உதவிக் கொண்டே இருத்தல் வேண்டும். மற்றபடி, தயவுச் செயலில் ஈடுபடாது, புலன் இன்பச் செயலில் களித்திருத்தலோ, வெறுத்துச் சோம்பி இருந்தலோ, தயவு இல்லாதன செய்துக் கொண்டிருத்தலோ திருவுளச் சம்மதம் அல்லவாம்.

புறப் பொருளிடத்தும், உயிரிடத்தும், செயல் திறனிடத்தும், சித்தி வல்லப சத்தியிலும், அருள் அனுபவ இன்பத்திலும் கூட பற்று வைக்காது, தயவு செய்தலையே கடமையாகக் கொண்டு வாழப் பழகுதல் அமையும்.

**"சூழ்க அனக தயவு!!"**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

........................................................................................................................................

# D2-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# " தயவுக் கடிதங்கள்"

09-12-1987, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்.

**____________!** ( தங்கள் பெயரை குறிப்பிட்டு வாசிக்கவும்) சர்வ சுதந்திரராகிய அருட்பெருஞ்ஜோதி பதிக்கே ஆட்பட்டுள்ள சேயாம் தயவு ஆன்மாவுக்கு, அவர் தயவால் தயா இன்ப நலமே சூழும் ; கவலற்க, கலங்கற்க.

உண்மையிலே, அக நிலையிலே, அவரை விட்டுப் பிரியாது, உட்கூடாமல் கூடி இருந்து கொண்டும், அபக்குவ வசத்தால், **"நம் இறையியல் உண்மை நிலையை"** அறியாது, அயலாய் இருந்து அவலமும், அச்சமும், அவத்தையும் உற்று அழிந்து கொண்டிருத்தல் ஏனோ !

**"புறஞ்சூழ் உலகிலே, புலை உடலிலே, அலை யுணர்விலே"** எத்தனையோ குறை கண்டு, இன்னலுற்றுத் தாளாது, இறை ஒளி முன் விண்ணப்பித்து கொண்டுள்ளோம். இந்த விண்ணப்பம் இரு கண்ணுக்கு இடைநின்று, அகமுடையானுக்கே ஆகட்டும். அவன் தயவையே கருதிக் கருதி இறுதியில், **"அதனோடு அதுவாய் நிற்போம்"**. அவன் தயவே நம் செயலாகச் சூழ்ந்து பரவட்டும். நேர்வன எவை பற்றியும் அதி விருப்போ வெறுப்போ கொள்ளாது நடந்துகொள்ளவேண்டும்.

**"அக நிலையை மறந்து, அருள் ஆணையை அறியாது"**, அங்குண்டு இங்கில்லை, அது நன்று இது தீது, இதனை நீக்கி அதனைச் சார்ந்து நலங்கண்டு விடலாம் என்றெல்லாம் எண்ணி, அங்கும், இங்கும், எங்கும் அல்லலிற் சுழல வேண்டாம்.

உள்ளவனோடு உள்ளிருந்தபடியே, தயா நலம் பெறத் தயை புரிந்து கொண்டே இருத்தல் வேண்டும். தயா நன் முயற்சிக்கு உதவி, நல்வாழ்வு சேர்ப்பது நம் பதியின் ஆணையாகும். ஆகவே, தயவோடும் பொறுமையோடும் அது கூட்டி வைக்கும் வண்ணம், வேண்டும் வேண்டாம் என்னாது, கடமை எனக் கொண்டு, புரிவன புரிந்து வருக. பிற யாண்டும், பெறல் அரிய நலமெல்லாம் பெறப்படும்.

இடம் ;........ **"நம் உள் வளர் தயா ஒளி நிலையே"** ஆகும்.

**சூழ்க தயவு**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

.......................................................................................................................................................

# D3-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## " தயவுக் கடிதங்கள்"

11. 03. 1988, தயவு சத்திய ஞான கோட்டம்

**"தயவு"**_____________( தங்கள் பெயரை குறிப்பிடவும்) க்கு

**"உயவருளும் தயவு"**!!!

**"ஆன்மாவே மெய் ; அதன் உள்ளும் புறமும் சூழ்ந்திருப்பது தயவே",** அதுதான் மெய்ப்பொருள், அந்தத் தயவு மெய்ப்பொருள், அகத்தும் புறத்தும் இருக்கும் ஒன்றே ; இரண்டல்ல !! **"அகத்தின் விரிவான அனக உண்மை"** அறியார்க்குப் புறமாகத் தோற்றியும், மறைந்தும் பக்குவப் படுத்திக் கொண்டு உள்ளதாம்.

மனிதன் புற வாழ்வில் அல்லிடை பிழைத்துக் கொண்டுள்ளான். இவனை கவசித்துக் கொண்டுள்ளது மண்ணான தேகமே. இத் தேகத்தினிடத்து விருப்பும் வெறுப்பும், வாழ்வில் களிப்பும் சலிப்பும் இருக்கும் வரை **"அக நின்றொளிர் உண்மை மனிதனாக"** ஆவதில்லை. தயவு அனக அனுபவம் உறவே, அவ் **"அக நிலையிற் பிறழாது இருக்கவும்",** **"வு"**கரத்தால் சூழ வரும் யாவையும் பற்றற்ற தயவு பணிக்கே தந்து கொண்டிருத்தல் வேண்டும்.

புறத்தே, என் போன்றோரைக் கண்டு சாராதே !! **"அகத்தே விளங்கும் தயவையே சார்"** ; புணர்ந்து, சார்ந்து நின்று வேண்டு; வேண்டு; வேண்டி, **"அதுவாகி இருந்துகொண்டு"** தயவு செய். அத் தயவு செய்யச் செய்யத்தான், புற நிலையும் அனகமாக மாறும்; கனகமாக நேரும்!! இதுதான் வள்ளலாருக்கு மண்ணான உடம்பு பொன்னாக ஆன இரகசியம்.

நிறை இன்ப மயமான தயாபரனை, அறியாமலே உளம் கொண்டுள்ளோம் நாம். இது சமயம் நம் அறிவும் அனுபவமும்,

துன்பாவத்தையில் பின்னிக் கிடந்து நலிவுறச் செய்து கொண்டுள்ளன. நாம், பதி அருகிலிருந்தும், மாய மறைப்பால் அயலில் இருப்பதாக எண்ணி எண்ணி வருந்திக் கொண்டே உள்ளோம். **“இந்த மாயா மறைப்பை,அயலிருக்கும் உணர்வைப் போக்கி, தயவு மயமாக்கு; தயவாக விளங்கச் செய்; தயவாக வாழவை”** என்றே சதா வேண்டிக் கொண்டும், மற்ற போதெல்லாம் **“உள்ளிருக்கும் தயவுடன் தியானத்தால் ஒன்றி நிற்கப் பழகுவோம்”**. இதனால் நன்மை எல்லாம் சூழும்.

அகத்தயா ஆணைப்படித்தான், நம்மை தயவு மயமாக்க வேண்டித்தான் எல்லாச் சூழலும் வருவிக்கப்படுகின்றன. ஆகையால், பொறுமையோடும் நம்பிக்கையோடும், **“அகத்தும் புறத்தும் உண்மையைப் புரிந்து கொண்டும்”,** செயலைப் புரிந்து கொண்டும் இருப்போம். தயாபதியும் நம் பரிபாக நிலையைப் புரிந்து கொண்டும், நமக்கு தக்க தயவைப் புரிந்து கொண்டும் இருக்கின்றார் என்பது சத்தியம்.

**“வருந்த வேண்டாம்; திருந்த வேண்டும்; பொருந்துக தயவு !!!”**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D4-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “ தயவுக் கடிதங்கள்”

16 - 11 - 1988, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்.

தயவு விழை____________(தங்கள் பெயரை குறிப்பிடவும்)க்கு, அது விரைய !!

**“ஆன்மா, இரட்டை வாழ்வுக்கு உட்படுத்தப் பெற்று, இவண் வருவிக்கப்பட்டுள்ளது”**. ஏன் ? பக்குவானுபவம் உண்டாவதற்கே இவ் வேற்பாடு. **“முதலில் புற இயல் வாழ்வும், பின்னர் அக இயல் வாழ்வு விளைவுறவும், முடிவில் அகம் புறம் அல்லாத அனக நிறை வாழ்வால் இறை மயமாகி நீடு நிலவலாகும்”.**

உண்மை அறிவும் அன்பும் இன்பமும் விளங்காத காலம், புலன் இச்சை வழிபடர்ந்து துன்பிலே அழிவுறுகின்றான் மனிதன். சற்று

மெய்யுணர்வும் விழைவும் ஏற்பட்டபோது, புறத்தை வெறுத்து அகத்தை விரும்பி அடைய முயல்கின்றான். அம்முயற்சி அவ்வளவு எளிதில் கைகூடுவதில்லை. எவ்வளவோ வேதனை, சோதனை, போதனைகளுக்குப் பின்னரே கிட்டுவதாய் உள்ளது. இந்நிலை தான் நின்னொப்பார் இன்றைய நிலையுமாம்.

உள்ளத்தில் உண்மை தயவு உதயமாகி, வாழ்விக்க வெளிப்படாத வரை, தெளிவும், அமைதியும், ஒருமையும், தியானமும் ஏற்படா. அறியாமை இருள் கப்பிய உள்ளத்தின் உண்மை, உள் மை, காரிருட் கருமையே!! அதனையே மெய் எனக் கொண்டு அரற்றுகின்றான் அபக்குவி. அப்போதெல்லாம் உள்ளுறை இறையும் பாராமுகமாய் இருப்பது போல் தோன்றுகின்றது ; நொந்து கொள்ள நேருகின்றது. மெய்யுணர்வு பெற்று, தயவு தழைத்து ஓங்கும் தருணம், புற விருப்பு வெறுப்புகளால், கவரப்படாது, அக அமைதியோடு அவனியில் முன்னேறலாகும். ஆகவே, **"புறச் சார்பில் அழுந்தி அவத்தையும், அவலமும் உறாது, அகச்சார்பு கொண்டு, அனக தயவுச் செயலுக்கே வாழ்வை அர்ப்பணித்து முன்னேறவும். தயவே தயவு செய்யும்".**

அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை மொழிபெயர்ப்பு நூல் இன்னும் அச்சில் இருப்பதாக அறிவிக்கப் பெற்றோம் . அது விரைவில் தைப்பூசம் வாக்கில் வெளிவரக் கூடும் என கருதுகின்றேன். அதன் மூலம் வள்ளலாரைப் பற்றிய செய்தி அறிமுகமாகும் உலகுக்கு. அதற்குமேல் பக்குவ ஆன்மாக்கள் உண்மை காண விரைவார்கள். திருவருளால் காலத்தே கண்டும் கொள்வார்கள்.

அருளீன்ற வள்ளல் சன்மார்க்கம், மக்களின் அருவ உள்ளத்தில் அரும்பிடவும், அது அருவுருவாய் அறிந்து கொள்ளப்படவும், உருவாய் நிறை தயவுடன் மலர்ந்து, மணம் பரப்பி உலகுக்கு நல நிறை வாழ்வு தர உள்ளதாகும்.

**"சிற்றான்ம அணுவகமிருந்து, சுத்த தயவு அனக வாழ்வு உலகெல்லாம் நிரப்புவதாக !!"**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

.................................................................................................................................

# D5-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# " தயவுக் கடிதங்கள்"

01 - 08 - 1989, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்.

**"நிலையான, அமைதி மிக்க அகத்திருந்து அனகமாகவே நிறைவுற்றுத் திகழ்கின்றது அருட்பெருஞ்ஜோதி உலகம்".**

இப்படியான உலகில் வாழ வரவழைத்து விட்டுள்ளார் நம் பதி நம் ஒவ்வொருவரையும்.

______________யார் ?**!** ( தங்கள் பெயரைக் குறிப்பிடவும் )

**"தாரக மந்திர ஓங்கார வடிவினனே அன்றி வேறு யாருமல்ல!!"**

இந்த ஓங்காரத்து உள்ளொளியான **"மகர"** மெய்ந்நிலைதான், நிலைத்த இறையியல் கொண்டது; அதிலிருந்து விரிந்து விளைந்துள்ளதே **"உயிர் உடம்பு** ஆம். **"உகர, அகரம்"** நிலையா நிலை கொண்டதாம். இந்தப் புறநிலையில் விருப்பு வெறுப்பு கொண்டு பிழைத்து வரும் வரை அமைதி ஏது?**!** அவத்தையும் அழிவுமே சூழும் ! ஆகையால், **"ஓங்கார ஆன்மாவுக்குள் ஒளிர், மகர மெய்ச் சோதியில் புகலடைந்து தயா நன் முயற்சி செய்து கொண்டிருந்தால், அனகம் உறுவன எல்லாம்"** நம்மை நன்னிலைக்கு, தன் இன்னிலைக்கு ஏற்றுவனவாகக் கண்டு கொண்டு, மகிழ்ந்து ஏற்று முன்னேறுவோம்.

அகமுடையான் தானே, யாவையும் அனகமாக விதிக்கின்றார் ; சூழ வரும் உற்றார் உறவினரும் மற்றாரும், நிகழுறு செயல்களும் நம்மைத் தயா நிலைக்கு ஏற்றவே வருவனவாம். ஆகையால் **"அகத்தே புகலடைந்து"** யாவையும் புரிந்து கொண்டு வாழ்ந்து வரவும்.

"வான் தோய் பொழில் சூழ் ஒற்றியுளீர் ! வருந்தாது அணைவேனோ ?**!**", என்றேன்

"ஊன் தோய் உடற்கு என்றார்!!", "தெரிய உரைப்பீர்!", என்றேன் ஓவதுதான்

"சான்றோர் உனது மரபோர்ந்து தரித்த பேர்க்குத் தகாது" என்றே

ஏன்றோர் மொழி தந்து அருள்கின்றார் இதுதான் சேடி என்னேடீ!!

என்ற இங்கிதமாலைப் பாசுரத்தால் உண்மை ஓர்ந்து கொள்க. உரம் பெறலாம்.

ஜீவான்மாவும் ஓமின் உண்மை அனுபவப்படவே,

**"ம் ........-> உ........-> அ"** , விரிந்து விளங்குகின்றது ;

**"ம்"**........-நித்திய ஜோதி இறைநிலை. அந்நிலை நின்றே மன்நிதன் **"உகர அகர"** உயிர் உடம்பு ஏற்றுள்ளான். இந்த அழிவுறு புறநிலைக் கண்ணின்று, அழுதும் தொழுதும், ஞான பக்தி கர்ம மகா யோகம் புரிந்து கொண்டு இருந்தால், மன்னி இதனாக வாழ முடியுமா ? தயாபதியின் திருவடி பற்றி நின்று தயா அனக வாழ்வு மேற்கொண்டால்தான் ஆனந்த வாழ்வு பெற்று அமைதியுறலாம்.

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D6-தயவு ஒளி தெய்வீக சிந்தனை "தயவுக் கடிதங்கள்"

11- 09- 1989, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவுத்திரு__________க்கு.( தங்கள் பெயரைக் குறிப்பிடவும் ) உள்ளும் புறமும் உறுதுணையாக இருந்து உதவுகின்ற, அருட்பெருஞ்ஜோதியையே வேண்டி, வரைந்து விடுக்கும் வாசகம் இதுவாகும்.

**"அகத்தும் புறத்தும் இருந்து அருள் பாலிக்கின்ற ஒன்று, இரண்டாய் இல்லை!!".** ஆனால் அப்படி இரண்டாக இருப்பதாய் எண்ணுகிறோம் ; தோன்றுகின்றது !! **"அந்த ஒன்றே அகம் இருந்தவாறு, அனகமாக விரிந்து நிறைந்து ஏகமாய் நிரம்பியுள்ளதே உண்மை !!"**

**"அகப்பெரும்பதி, அருவ அருள் நலத்தோடே அமைதியாய் இருந்து கொண்டு",** அதனையே நம் அனுபவத்தும் செயல்படுத்தத்தான், சூழ வந்து சூழ்ச்சி செய்கின்றார், **"நாமோ, அருள்அகம் நின்று காணது, மருட்புற நின்று மயக்கறிவால் மருண்டு மாய்ந்து கொண்டுள்ளோம்."** புறச்சூழல் எல்லாம்

துன்பமும் பயங்கரமும், வேண்டாதன பலவாகவும் கண்டு கண்டு கலக்கமும் அவத்தையும் அடைந்து கொண்டுள்ளோம். **"ஆண்டவன் தயவாளன், தயவே செய்கின்றவன்",** துன்புறுத்தி அழித்து ஒழிக்கச் சிறிதும் உளம் கொள்ளாதவன் நம் அகமுடையான். ஆகையால், **"நாம் தயாநிலை பிறழாது உள்நின்று தயவோடு நோக்கித் தயவு செய்து கொண்டு வாழப் பழகிட வேண்டும்",** நாளடைவில் இறை தயா ஒளி உள்ளிருந்து பெருகி உலகியல் வாழ்வில் உலைவுறாதிருக்க, உவகையோடிருக்கச் செய்துவிடும்.

புறத்திருந்து **"தயவுசெய்!!"** என்று வேண்டுகின்றோம். உண்மையில் இதுவே நம் அகமுடையானின் ஆணையாகவும்( **"நீ தயவு செய் !!"** ) இருக்கின்றது ; நமக்கு அறிவுறுத்தும் உத்தரவாகவே இருக்கிறது. ஆகையால், சூழ்வனவற்றில் தயாபதியைத் தயவுக் கண்ணால் கண்டு தயவே செய்வோம் ; நன்மையே விளையும்.

இருப்பது **"தயவு"** ஒன்றே ; **"அது உள்ளிருந்து நாமாயும், மற்ற யாவுமாயும் தோற்றிக்கொண்டுள்ளது".** இதனை அறிந்து அனக தயவு கொண்டு வாழ்வதே வாழ்வு ; தயவாகா புறவாழ்வு எதுவும், வாழ்வல்ல, பிழைப்பே !! வாழ்க தயவால் !!

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D7-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "தயவுக் கடிதங்கள்"

07- 12- 1989, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவுத்திரு_______________க்கு (தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) தயா ஒளி சூழ ; அருட்பெருஞ்ஜோதி கற்பனை அல்ல, கடவுள் உண்மைப் பேருருவேயாகும். அது ஒவ்வொரு அணுவிலும் தன் பூர்ண இயல்போடு இருந்துகொண்டு, அனுபவம் வெளிப்படவே செயல் புரிந்து கொண்டும் உள்ளது. இதனையே உணர்த்துகின்றது **"அதன் ஓர் அணு நம் சிரநடு நின்று".**

**“உண்மையில் அதுவே நாமாயிருந்துதான் உணர்கின்றோம்”**

இது மெய்ப்பட உணர்ந்து, வாழ்வில் ஏற்கப்படாதவரை, ஒருவன் அபக்குவத்தில்தான் பிழைத்துக் கொண்டிருக்கின்றான்!!

**“தான் தயவு வண்ணமாக, உள்ளிருந்து உயிர், அறிவு, உடல் கொண்டு விளங்குவது உண்மை!!”** இவற்றால் தயவுச் செயல் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றதாம். இதுதான் வாழ்வின் தத்துவம். உண்மையை அறியாது, மனோ மயக்கில், பொறிபுலன் வாழ்வில் அவஸ்தைப்பட்டு, உழன்று கொண்டிருப்பது சரியல்ல.

ஆகவே, விருப்பு வெறுப்பின்றி சூழ வரு உலகில், தயை புரிந்து வரப் பழகுதல் வேண்டும். அப்படிச் செய்யாது, எங்கு போய், எப்படி இருந்துகொண்டு எதைச் செய்தாலும், அமைதியும் ஆனந்தமும் உண்டாகாது.

**“நாமும், நம்மைச் சூழ்ந்துள்ள எதுவும், உள்ளிருந்து நோக்கும் போது தயவு ஆக இருப்பதை அறிவோம்”** ; அப்படி அகம் இருந்து அறியாத போது, தேகாதி பிரபஞ்சம் முற்றும் மாயையின் அட்டகாச கூத்தாகக் கண்டு, அச்சமும், அவலமும், அவத்தையும் பட்டு அழிந்து கொண்டிருக்கவே நேரும்.

எனவே, **“முதலில் சிரநடுத் தயவு ஒளியில் பூர்ணப் புகல் அடைந்து நிற்க** !!” நின்றுகொண்டு, **“அது செலுத்தும் வழியில்”** தயவோடு சென்று கொண்டே இருக்கவும். மற்ற எந்தப் பற்றும், வெறுப்பும் கொண்டு மயங்கி, கலங்கிக் கிடத்தல் கூடாது !!

அகமிருக்கும் தயவு தான் உணர்வும், உயிரும், உடலும் ஆகி, புறஞ் சூழ்வன எதுவும் ஆகி இருப்பதை நிதானித்து, உளம் கொண்டு, கடமை யாற்றி வரல் வேண்டும்.

எல்லாவற்றையும் படித்து கிரகித்துக்கொண்டும், மறுபடி, **“இந்த அல்லல் நிறைந்த தொல்லை உலகில் நான் என்ன செய்வேன் !! ஏ தயவே என்னை விடுவிக்க மாட்டாயா ?! எப்போது தயவு செய்வாயோ !! இன்னும் பொறுத்திருக்க முடியாது !! என்னை ஏற்று வாழ்வி ; அல்லது அழித்து ஒழித்து விடு !!”** என்று கசந்து அலறல் முறையன்று. திருவுள்ளம் நம்மைக் காத்து தயை பாலிக்கவே இவண் வருவித்துள்ளது என்ற திட

நம்பிக்கையில் முன்னேறிக் கொண்டே இருத்தல் ஒன்றே கடமையாகும். **“சூழ்க தயவு.”**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D8-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## “தயவுக் கடிதங்கள்”

24- 01- 1990, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவுத்திரு______க்கு ( தங்கள் பெயரைக் குறிப்பிடவும் ), சகல நன்மையும் சேர.

**“உண்மையில், என்றும் உள்ளாய் இருந்துகொண்டு இருக்கின்றது ஒன்றேயாகும்”**. அதுவே இன்று **“தயவு”** ஆகப் **“பக்குவ மனிதனின் தலை நடுவுள்ளிருந்து உணர்த்துவதும், உணர்வதுமாய் உள்ளது”**. உணர்த்துவது அது என்றும் உணர்கின்றது இவன் என்றும் காண்கின்றான் ஒன்றாமல் ஒன்றியுள்ள நிலை நின்றே.

**“அதன் தனிப்பெருந் தயவுச் செயலால், அறிவு விளக்கமும், உயிர் ஆற்றலும், உடல் வாழ்வும் கொண்டு இயல்பாகத் திகழ்ந்து கொண்டிருக்க, இவ் உண்மை அறியா அபக்குவ மனிதனாய்ப் பிழைத்துக் கொண்டே யுள்ளான் இவன்”.**

முக்குற்றம் உடைய தேக போக ஆவற்பெருக்கால்தான், உலக அவத்தையில் அவலப்பட்டுப் பட்டு, அழிந்து ஒழிந்தும் மேனிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றப்படுகின்றான் இவன்.

சூழுலகை, தயா ஞானத்தால் விருப்பு வெறுப்பு இல்லாது, பயன்படுத்திக் கொண்டு வாழப்பழகாது, விட்டு ஒதுங்கலும், தொட்டு அழுந்தலும் முறை அன்றாம்.

முக்காலத்தும், மூவிடத்தும், **“நம்மை விட்டு ஒழியாதும், இரண்டுபடாதும், பிரியாதும் உள்ள ஒன்று இறை தயவு தான் !!”** அகமிருந்து நமக்கு உண்மைத் தேவையை உதவுகின்றதும், புறம் சூழ வந்து வந்து பக்குவப்படுத்துகின்றதும் தயவின் செயலேயன்றி

வேறல்லவாம் ! காமாதிகளும் ஒருவனின் பக்குவ நிமித்தமே ஆணை செய்யப்பட்டு, வந்து சூழ்ந்து சுட்டு விட்டு ஒழிகின்றன !! எனவே, எவ்விதத்தும் வெறுப்பும் சலனமும் அடையாது, பொறுமையோடும், ஒருமையோடும் முன்னேறிக் கொண்டே இருத்தல் நம் கடமையாகும்.

அக உண்மை நிலையைப் புரிந்து கொண்டு, அவ்வகம் இருந்தே, எங்கும் செல்லாமற் சென்று தயை புரிகின்றார் அருள்வள்ளல். அவரே தான், ஒவ்வொருவரின் உள் அகத்தே இருந்து கொண்டு, **"தன்னையே நமக்கு வழங்கி வாழ்விக்கின்றார்."**

எனவே, புறத்திருந்து கொண்டு, "அவர்" எனவும், "இவர்" எனவும், "நான்" எனவும், "நீ" எனவும் கருதிக் கொண்டு அங்கும் இங்கும் உழன்று கொண்டும் சலித்துக் கொண்டும் அலையுறுதல் கூடாது.

இவ்விஷயத்தை தான் எத்தனையோ முறை, எத்தனையோ விதமாக விளக்கிக் கூறினும், பிறர் புரிந்து கொள்ளுதல் கடினமாய் இருக்கின்றது. ஓரளவு புரிந்து கொண்டவர்களும், சந்தர்ப்ப சூழ்நிலையால் மறந்தும் பழையபடியே புலம்புகின்றனர். என்செய்வது !! இடைவிடாது மறுபடியும் மறுபடியும் சொல்லிக்கொண்டே இருந்தால் புரிந்துகொள்ளுவர் திருவருளாலே.

ஆகவே, தயவுக்கே முதலிடம் கொடுத்துப் பூர்ணப் புகலடைந்து, அது கூட்டி வைக்கும்படி வாழ்வை முடுக்கி விடவும். எல்லாம் நாளாவட்டத்தில் நம்மை நிறை வாழ்வில் நிலவச் செய்யும்.

**"சூழ்க தயவு"**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

........................................................................................................................................

# D9-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# “தயவுக் கடிதங்கள்”

01- 04- 1990, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

## ( D9- பாகம் - 1 )

தயவுத்திரு____________( தங்கள் பெயரைக் குறிப்பிடவும் )

ஏ, ஆன்ம உண்மையை அகத்தில் கொண்ட மனிதா, நீ மண்ணான தேகத்துள் மூடுண்டு கிடக்கிறதுதான் உண்மை போலும் !! மாயைக் கனவிலேதான் எல்லாவற்றையும் கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றறிந்தும் கொண்டுள்ளனை !! எத்தனை அல்லலும், தொல்லையும், பாடும் ?! அவற்றை அற விட்டு விழித்து எழ முயன்றும் முயன்றும் முடியவில்லையோ ?!தீவிர முயற்சி செய், “**திருவருளே அக விழிப்பை வழங்குவார்** ;” தயா ஜோதிப் பிரகாசம் சதா விளங்கும் “**அக ஆன்ம உலகில் நிலை கொள்ளலாம்.**” அந்நிலை நின்றே தயவை நீட்டு உலகியல் வாழ்விலே !!

தயா அகமிருந்துதான், நாமும் நம்மை உருவாக்கி, பக்குவப்படுத்தி வாழ்விக்கும் எல்லாப் பொருள்களும், ஆற்றல்களும், விளைவுகளும் ஏற்பட்டுக் கொண்டே உள்ளன. நாமோ உண்மையின், உறு செயலை அறியாமல், நல்லது கெட்டது எல்லாம் செய்து செய்து மாயா இன்ப துன்பங்களில் பிழைத்துக்கொண்டே, அறியாமலே முன்னேறிக்கொண்டும் உள்ளோம். தீயனவும் நல்லனவும் தயவாணைப்படி சூழ வந்து சுட்டுப் புடமிட்டுக் கொண்டுள்ளனவே.

“**இது முதல், தயவுடன் அகத்தே இருந்துகொண்டு எப்படியும் வாழ்வாயாக** !!” எது நிகழ்ந்தாலும் கவலைப்பட வேண்டாம். தயவுடைய புண்ணியச் செயலின் விளைவாக நலம் சூழும் ; அதுபோல் தயவில்லாப் பாவச் செயல் புரிந்தால், அதற்கான துன்பங்கள் விளைவதும் இயல்பே. அப்படிப்பட்ட தீய வழியினின்று விடுபட மெய்யாக விரும்பி வேண்டிக் கொண்டால் தயாபரி உதவுவார் நிச்சயம் !!

தயா பரிபூரணி தான் அகத்தில் இருந்து கொண்டு, பக்குவத்திற்குத் தக சூழ வருவதும், வாழ்வுக்குத் துணையாக

வருவதும் உண்மையே. அப்படி வருவதை ஏற்று, தயவு வாழ்வில் தழைத்திட முயன்றால், அது அத் தயாபரியின் உதவியினால் நிறைவேறும். புலனிச்சையில் வழுக்கி விழுந்திடாமல் தயா நல வாழ்வுக்குத் துணையாகவே மனையற மாண்பு பெறலாம். தயவுத் திருவுள்ளம் எதுவோ, அது சேர்க்கும் வழியிற் சென்று தயாநிதியைத் திரட்டிக்கொண்டு மெய் இன்ப வாழ்வில் நிலை கொள்ளலாம்.

பின்வரும் விரிவுரையைப் பலகாற் பயின்று உளம் கொண்டு உய்க. எதற்கும் ஐயமும் அச்சமும் அடைய வேண்டாம்.

ஐயங்கட் கெல்லாம் அருள் விடை காண எனில்
உய்யக்கொண் டோங்கும் ஒரு தயவு ........ மையத்(து)
இருப்பீர், இருந்தால் இனிது மகிழ்ந்திங்(கு)
உருப் பெறலாகும் உவந்து.

**“தயவால் சூழப்பெற்று, முத்திறல் வடிவேற்று விளங்குக.”**

சரவணானந்தா.

தயவு ஒன்றே எல்லாமானது ; எல்லாமாய்த் தோற்றுகின்றது ; எல்லோருமாய் உள்ளது !! ஆம், **தயாநிலை அகத்தே, ஒரு படித்தாய் இருந்து கொண்டிருக்க, மேல் விரிந்த வுகர( உகர ) ஐந்தியற் சக்திச் செயலால் எல்லாமாய்த் தோற்றியும், சிதைந்து மறைந்தும் கொண்டேயுள்ளன.** இதை உணர்ந்த ஓர் அணுதான், இரண்டுபடாக் **“கடவுள் மனிதன்.”** இவன் உள் அகத்தே, ஆன்ம சிற்றணுவாய் இல்லாது இருந்து **“தயவு”** என விரிந்து, **“அனகமாய்”** நிறைந்து விளங்கியும், அறியாது அல்லலில் அவஸ்தைப்பட்டுக் கொண்டே யுள்ளான்!! இதுதான் ஒருவனின் இன்றைய நிலை !! அந்த ஒருவனை நீயாகக் கண்டு தெளி !!

அருட்பெருஞ்ஜோதி ஒன்றே உள்ளது. இதுவே அகம் இருந்து அனகம் நிறைந்தும் உள்ளது !! இந்த அகமும் அனகமும் ஆன ஒன்றை அறியாது, கரண இந்திரியக் காட்சியிலே, புற மாயாத் தோற்றங்களில் மயங்கி, மலங்கி (கலங்கி), மடிந்து கொண்டிருப்பது திருவருட் சம்பந்தமோ ? இல்லை, இல்லை. உனது சம்மதமும் அல்ல !! அபக்குவ அறியாமையின் வசப்பட்டு உழல்கின்ற நின் அவல நிலையே ஆகும். இது ஏன் நீங்குகின்றதில்லை ? புரிந்து

கொண்ட பின்னரும், மறுபடியும் மறுபடியும் தொல்லைப்படுத்திக் கொண்டிருக்கக் காரணம் ?!

**“புறச்சூழலைப் பற்றாது அகமிருந்து தயவோடு வாழப் பழகாததே காரணமாகும்.”**

அகத்திருக்கும் தயாபதியின் ஆணைப்படியே, ஒவ்வொரு பொருளும், சூழ்நிலையும், உயிர்களும், மக்களும் கூட தயா வாழ்வுக்கு என்றே வரவழைக்க படுகின்றனவாம். அவற்றைப் புரிந்து கொள்ளாத காரணத்தால், ஒருவன் மயக்க அறிவால், தயவு செய்ய மறந்து மாறுபாடாக நடந்து கொண்டு பொய்யான இன்பமும் துன்பமும், வாழ்க்கையில் வெறுப்பும் சலிப்பும் அடைகின்றான். சூழ் தயா ஒளியையே எல்லாமாக (நல்லதும், கெட்டதும், வேண்டுவனவும், வேண்டாதனவும் ஆக) வருவித்துக் கொடுத்துக் கொண்டுள்ளார்.

அவற்றைத் தெரிந்து கொள்ளாமல், ஒருவன் எவ்வளவு வேண்டினாலும், அழுதாலும், தொழுதாலும், மறுத்தாலும், துன்பமும் தொல்லையும் பட்டாலும், கொஞ்சமும் இரக்கமும் அன்பும் இல்லாதவர் போல் சும்மா இருப்பதாகக் கருதத் தோன்றுகின்றது !! எவ்வளவு தீயவழியில் தகாதன செய்து கெட்டுப் போவதையும் தடுத்து ஆட்கொள்ளாதவராகவே தோன்றுகின்றார். எல்லாமும் ஒருவனைப் பக்குவப்படுத்தவே செய்கின்றார். எவ்வளவு குற்றம் குறைகளையும் பொறுத்து அருளுபவராகத் தோன்றுகின்றார். ஏன்? **“எல்லாம் அவருடைய செயல் தானே ; அவரை அன்றி பிற எவரும் இல்லை ; எதுவும் இல்லை அன்றோ !!”**

ஆகவே, யாவையும் பலகாலும் பட்டுப்பட்டுத் தெளிந்து வழிக்கு வர வேண்டியுள்ளது உண்மை. இத் தெளிவு உண்டாகு முன், முன் பழக்க வசத்தாலும், மறதியாலும், சுற்றுச் சூழலின் மயக்கறிவாலும் தவறவே நேரும் பலகாலும். அதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தயா வாழ்வு ஒன்றையே லட்சியமாகக் கொண்டு எதுவரினும், எது போயினும் சலியாது செயல் புரிந்து கொண்டே இருக்க வேண்டும். **“தீயனவும் நல்ல முடிவுக்கே இட்டுச் செல்லுகின்றது என்பது அருள் நியதி !!”**

இதுவரை இவ்வுலக வாழ்க்கையில் எவ்வளவு அரிய பெரிய வல்லவர்களையும், நல்லவர்களையும் நேரில் கண்டும், கேள்விப்பட்டும், அறிந்தும் இருக்கின்றோம். அவர்கள் எல்லாம் எப்படி எல்லாமோ புகழ்பட வாழ்ந்தும், மறைந்து போய் உள்ளனர்.

அதுபோல் தீயவர்களையும், கொடியவர்களையும், அவர்களின் முடிவையும் அறிவோம். நம்மை விட எவ்வளவோ மேலானவர்களும், எவ்வளவோ கீழானவர்களும், எப்படி எல்லாமோ இருந்து வருகின்றனர் என்பதை எல்லாம் கூட அறிகின்றோம். இவ்வளவும் எதற்கு, நம் வாழ்விடை உணர்த்தப்படுகின்றன?! இன்றைய நமது குறிக்கோள், பிற எவரையும் போல் முடிவுறுவதற்கு அல்ல ; வள்ளல் தயாநெறி, தயா இன்ப வாழ்வு வழங்க இருப்பதை உள்ளபடி உணர்ந்து, சத்விசார பரோபகாரத்தால் ஏற்பதுவே ஆகும்.

ஆகையால், எப்படியாயினும் தயாநலம் பெற முயலுவோம்.

மிக மிகச் சிறிய, புலன் அறிவுக்குத் தோற்றாத, ஆன்ம சிற்றணு வடிவினராகிய நாம், இப் பெரிய பிரபஞ்சத்தில் என்னதான் செய்துவிட முடியும் ?! ஜடத்துவமாய்க் கிடக்கின்ற இதற்கு, என்ன ஆற்றல் இருக்கின்றது ?! ஏதுமில்லை ; அற்ப சுதந்திரமும் இல்லை, என எண்ணுகின்றோம். உண்மை அப்படி இல்லை. வேறு விதமாய் இருக்கின்றது.

எல்லாம் வல்ல ஒன்றான பரம்பொருள், எங்கும் என்றும் பூரணமாய் நிரம்பியே உள்ளார். அவர் தானே இம்மகா பிரபஞ்சத்தில் யாவுமாய்த் தோற்றிட அகமிருந்து விளங்கிக் கொண்டுள்ளார் என்பது மெய்யாம். ஆகையால், "**ஆன்மச் சிற்றணு என்பதும் அவருடைய ஒரு தோற்றமே அன்றி வேறல்ல** !!" அவ் அணுவின் உள்ளிருந்து அதுவாகத் தோற்றரிதாய் விளங்கினாலும், அதன் அகத்தேயும் தன் பூர்ண உண்மையோடு அருவமாய் இருந்துகொண்டு, காலத்தே வெளிப்பட செயல்புரிந்து வருவது உண்மை ஆகும். எனவே "**ஆன்ம அணு கூட உண்மையில் அவரே அன்றி, "நாம்" எனச் சொல்லுவதற்கு உரிமை இல்லை.**"

ஆகையால், கடவுளே ஆன்ம அணுவாய்த் திகழ்ந்து நின்று, தன் உண்மையை முழுமையாக இம் மனிதப் பிறப்பில் இன்று "**தயவு**" ஆக வெளிப்படுத்திக்கொண்டு, என்றும் இவ் அனுபவம் கெடாது, அழிவுறாது வாழ்ந்து கொண்டிருக்க வருகின்றது, சத்தியம். "**அவர் ஒருவரே உண்மையில் மன்னி நிதமும் வாழ்கின்ற மனிதன் ஆவார்.**"

இதுகாறும் மனிதன், நிறை மனிதனாகி, தன் பெயருக்கேற்ப நித்திய வாழ்வு கொண்டு நிலவ வரவில்லை !! அந்தக் கடவுளும் தன் பூர்ண இயலோடு எங்கும் நிறைந்து, ஆனால் மறைந்து

இருந்து, பிரபஞ்சக் காரியத்தை புரிந்து வந்துள்ளார். ஒரு குறிப்பிட்ட ஆன்மாவினின்று மனிதப் பிறப்புருவையே அனக நிறை அனுபவத்தோடு நிலவச் செய்து கொண்டு விளங்க வரவில்லை அந்த மன்னி நிதமும் விளங்கும் இறைவர். இப்போதுதான் **"இறை"** என்பதற்கும், **"மன்"** என்பதற்கும் உரிய நிலையான தன்மையோடு, நித்தியமாக விளங்கி கொண்டும் வாழ்ந்து கொண்டும் இருக்க வந்து விட்டுள்ளார், இறைவனும் மனிதனும் இரண்டற்ற ஒருவனாகிய இறை மனிதன் !! அருட்பெருஞ்ஜோதி இறைவர், அருட்பிரகாச வள்ளல் ஆகி விளங்கத் தொடங்கி விட்டுள்ளது மெய்யாம்.

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D10-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "தயவுக் கடிதங்கள்"
## (D9- தொடர்ச்சி........)

01- 04- 1990, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

வாழையடி வாழையாக, அருவ நிலை நின்று வந்து, புகழ்பட வாழ்ந்துவிட்டு, உருக் கரந்து, பழைய அருவ நிலைக்கு ஏகி, மறைந்து போய்க் கொண்டே இருந்தனர் அன்றைய திருக் கூட்டத்தினர். அப்படித் தோன்றி வாழ்ந்து மறையுறுவதுவே, அவர்களின் மரபு ஆகி விட்டிருந்தது உண்மைதான். அதில் ஒரு குறைவும் கண்டு கொள்ளப்படவுமில்லை அந்நாள். இந்நாளோ அவ் அருவ இறைவரே, உருவ மனிதனாய் உலகில் உலைவற விளங்கிக் கொண்டிருக்க வந்து விட்டதினால், மனிதனுக்கும், அவ் இறை அனுபவத்தோடு வாழும் பேறும் ஏற்பட்டுவிட்டுள்ளது மெய்யே. இனிவரும் சுத்த சன்மார்க்க அதி மனிதத் திருக்கூட்டம், அழியாமை கொண்டு விளங்கலே மரபாகக் கொண்டு விளங்கலும் சாத்தியமே !! ஏக இறைவனே, அனேக மனிதராய் விளங்கி நிலைத்தல் உண்மையாய் இருப்பது போல், ஒவ்வொரு சுத்த சன்மார்க்கியும் தனித்தனியாக விளங்கிக்கொண்டும், பலராகத் தோற்றிக் கொண்டும் வாழ்தல் சாத்தியமேயாம்.

ஆகவே, தயை சாரா அறியாமை இருளில் கிடந்து புலம்பிக் கொண்டே இருக்க வேண்டாம். **“இனி புதிய தயா ஒளி - நிறை வாழ்வு மேற்கொண்டு சதா நன் முயற்சியோடு இருந்து முன்னேறி வரவும்.”** அறியாமையிற் சென்றனவும், செய்தனவும், நினைந்து துன்புறுதலும், சூழ வந்து வந்து மயக்குவனவும், குழப்புவனவும், துன்புறுத்துவனவும் கண்டு வருந்தி நலிந்து கொண்டிருக்கவும் வேண்டாம். சதா தயா உணர்வோடு, லட்சியத்தோடு, திருவருள் வருவிக்கும் சூழ்நிலையில், பிற யாவையும் கருதாது செயலில் விரைந்து சென்று கொண்டே இருக்கவும்.

அகமிருக்கும் ஆண்டவர், அருள் மயமாய் அருவமாய் இருந்து கொண்டு, புறத்தே யாவையும் ஆணைப்படி வருவித்துக் கொண்டே உள்ளார். நல்லதும், தீயதும், விரும்புவதும், விரும்பாததும் தோற்றுவித்து சூழச் செய்து சில சில அனுபவங்களைத் தந்து மேல் ஏற்றுகின்றார்.

**“செய்தாலும் தீமை யெலாம் பொறுத்தருள்வான், பொதுவில் திருநடம் செய் பெருங்கருணைத் திறந்தான்,”** நம் உள்ளமுடையான். தவறுகள் அறிந்தும் அறியாமலும் செய்தாலும், அதிலே சூழ்ந்தாலும், ஆழ்ந்தாலும் அதினின்று மீளச் செய்து உய்விப்பது அவருடைய கருணைப் பெருஞ் செயலே!! ஒருவன் எவ்வளவு கெட்டவனாய் இருந்தாலும், அவனுடைய மனம், உண்மையாக வருந்தி வேண்டிக் கொண்டால், உதவி, கருணை பாலிப்பது திருவருளுக்கே இயல்பாகும்.

**“பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்**
**வரவரக் கண்டாராய் மனமே ........ ஒருவருக்கும்**
**தீங்கு செய்யாதே செய்நன்றி மறவாதே**
**ஏங்கி இளையாதிரு.”**

**“அகண்டமான அருட்பெருஞ்ஜோதி இறை, எக்காலும் ஒன்றே ஒன்றுதான், முழு நிறைவோடு இருந்து கொண்டு உள்ளது உண்மை,”** அப்படி இருந்தாலும், இம் மா பிரபஞ்சத்தில் எதிலும், எவராலும் கண்டு கொள்ளப் படுவதாய் இல்லை !! ஆனால், அதுவே ஒரு குறிப்பிட்ட சிற்றணு வடிவிலிருந்து, **“பக்குவ மனிதனின் தலை நடு தயவுச் சுடர் விளக்காய் விளங்கிடுகின்றது.”** இந்தத் தயா ஒளிவிளக்கு, பொய் மாயை

அல்ல எனினும், தயவுச் சன்மார்க்க ஞானியர்க்கு வெளிப்பட்டு, அனுபவமாவதாம்.

இந்த தயவுச் சுடர் தான், உண்மைக் கடவுளின் சொரூப, ரூப, சுபாவம் கொண்டதாம். **"இதுவே, மனிதனின் உள்ளொளியாம் ஆன்மா, உயிர் உணர்வாம் ஆற்றல், உருவ தோற்றமாகிய தேகம் எல்லாம்,"** இத் தயவுதான் கடவுள் உண்மையும், மனிதன் உண்மையும் என்பதைப் பாமரர் கொஞ்சமும் அறியார். வேதாந்த சித்தாந்த வித்தகர் எல்லாம் அந்த அகக் கடவுள் உண்மையைப் பற்றி ஓரளவு உணர்ந்தும், தேக நிலையிலிருந்து மனோ கற்பனையால், பிரம்மம் என்றும், சிவம் என்றும் பாவித்துப் பற்றி நின்று, புறத்தை விடுத்து, அகத்தில் ஒடுங்கி, வாழ்வற்றுப் போயினர்.

இன்று தயவுத் தீபமாய் அத்துவித நிலை நின்று, அதுவே தன் ஆன்மாவும், ஜீவனும், தேகமுமாய் விளங்கலைக் காண்கின்றான் இச் சன்மார்க்கி. இத் தயா தீப உண்மையை உணர்வதும், நினைப்பதும், பாவிப்பதும் போதாது. **"உணர்ந்து, நினைந்து, பாவித்து, அதுவாகி நின்று, நினைத்தலும் மறத்தலும் போய் அதுவாகவே ஆகி நிலை கொள்ளுதல் வேண்டும்."**

அப்படி நின்று அதிலே இருந்து நமக்குத் தேவையான யாவும் கிடைக்கப் பெறுகின்றோம் என்பதை வாழ்வில் அனுபவ பூர்வமாகக் காண வேண்டும். **"தயா வாழ்வுக்காகவே எல்லாம் உள்நின்று ஆணை செய்யப்படுகின்றதை அறிய வேண்டும்."**

**"யான், எனது என்ற தற்போதம் போய்,"** தயவின் செயலாக உணர்ந்து ஏற்று, தக நடந்து வரல் வேண்டும்.

இந்த தயவாணையை உணராததால், எதையும், நம் மனம் போல் நிகழாதது கண்டுதான் வாழ்க்கையில் சகல, சிறிய, பெரிய துன்பங்களையும் சந்தித்து அவத்தை யுறுகின்றோம். எவ்வளவு தவறும் மாறுபாடும் காணினும், நிதானித்து நம்மை நாம் சமாதானப் படுத்திக்கொண்டு தயவுக் காரியத்தில் இறங்க வேண்டும். இது நாளடைவில் பழக்கம் ஆகி விட்டால் எல்லாம் சரியாகி விடும்.

### "அருள் நியதி"

அருவமாக, உருவமே இருப்பறியாத நிலையில், சூனியமாய்த் தோற்றும். அந்நிலை நின்று, அருள் வெளிப்படும் போது, அகண்ட நிறை ஜோதியாய் விளங்கி, ஐஞ்சக்திகளாய் விளைவுற்று மனிதனில் அனுபவப்படுவதாம். அப்போது அகநிலையில் **"கடவுளும்,**

**அவரைப் பிரியாத அவர்தம் அருட்பெருஞ் சக்தியுமாய்"** அருவிலிருந்து,

"**த**"........ வும், ( கடவுள் )

"**ய**"........ வும், ( ஆன்மா ) கூடிய

"**தய**" ஆக ( கடவுளான்மா )

வெளிப்பட தொடங்குகின்றது. அவ் வெளியீடுதான்,

"**வு**"........ ஆகிய, ( வ் + உ )

"**வ்**" என்னும் அருள் வடிவும், "**உ**" என்னும் அருள் ஐஞ்சக்தியுமாய் விளங்கி பிரபஞ்சக் காரியத்தில், நிறை மனித நிலையில் "**தயவு**" ஆக அனுபவப்பட்டு இலங்குகின்றது.

மனிதனில், உயிர் இரக்கம் ஜீவ தயவு ஆகத் தோற்றி, முழு விளைவின் போது தான், "**முதலில் உண்மையை அறிவால் அறிந்து கொள்ள முடிகின்றது**". அதுதான் வேதாகம கால விளைவு ஆம். அம் முடிவின் மேல், "**அகமிருந்து கனிந்திட "தயவின் அனக விளைவு"ப் பயன் கிடைக்கின்றது,**" சுத்த சன்மார்க்கியின் மரணமில்லா முத்தேக சித்தியின் பெரும் பயனாக !!

பழமைக்கும், புதுமைக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கின்ற இன்றைய மனிதன், பழமையினின்று விடுபடவும், புதுமையினைப் பற்றி நிற்கவும் முடியாதவனாய் பேரவத்தை பட்டுக் கொண்டுள்ளான். இரண்டும் கெட்ட நிலையில் சிக்கிக் கொண்டுள்ள இவன் முயற்சிகள் லேசிலே வெற்றி பெற்றிட உதவாதிருக்கின்றன. இவனது சூழ்நிலை அதிகம் புலனிச்சை வழியில் ஈர்த்துக் கொண்டு போகின்றது. இவன் எதிர்நீச்சல் பெரும்பாடாய் இருக்கின்றது. இவனது புறமனம் எவ்வளவுதான் விரைந்து முன்னேற முயன்றாலும், மயக்க நிலையில் அக மனச் செயலால், எல்லாம் மறந்து தன் நிலை கெட்டு, அதல பாதாலத்தில் விழுந்து விடுகின்றான். பின் விழிப்புற்ற போது தன்னிலைக்கு வந்து, தன் மாட்டாமையை நினைத்து வருந்துகிறான். ஏன் ?

"**இவனது அடிமனம் சுத்தமாகவில்லை.**" ஆகையால், அடிநிலை தூய்மையுற, உண்மையான அனுபவம் உண்டாக, மேனிலையுறும் லட்சியத்தோடு முறையான உலகியல் இல்வாழ்வு ஏற்றிருந்து பக்குவப்பட்டு வந்தாக வேண்டும். லட்சியம் மட்டும் விட்டு விட கூடாது. "**திருவருளே மேல்நிலை கண்**

**ஏற்றிவிடும்.**" தயவில் பிறழாதிருக்க அப்போது ஆண்டவர் உதவுவார்.

இந்நாளைய சூழ்நிலையும், உணவுப் பழக்க வழக்கமும் ஒருவனைக் கெடுப்பதாக இருக்கின்றது ! அதில் எவ்வளவு தாழ்வு ஏற்படினும், அதுவும் திருவருட் சம்மத நிகழ்ச்சியே என உணர்ந்து தீவிர லட்சியத்தோடு முயன்று வந்தால், அத்தீமையும், மேனிலையுற உதவினதாய் முடிவில் கண்டு அமைந்திட நேரும். எனவே, புறநிலையினும், புறத்தார் மீதும் குற்றமும் பழியும் சுமத்தாமலும் எல்லாம் நன்மைக்கே எனக் கொண்டு, திருந்தி "தயா நிறைவோடு, செயலோடு, வாழ்வோடு விளங்க முயலுக ; திருவருள் நிறைவிக்கும் ; வாழ்விக்கும் !!"

**"தயவு"**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D11-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "தயவுக் கடிதங்கள்"

22- 04- 1985, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

அருட்பெருஞ்ஜோதியின் தனிப்பெருங்கருணையால், அருளை நாடுகின்ற ஓர் ஆன்மாவுக்கு (அல்லலில் தொல்லை பட்டு கொண்டிருக்கும்) தற்சுதந்தரம் அற்ற ஒருவர்க்கு, அவத்தை எல்லாம் போக்கி அருள் நலம் பாலிக்க திருமுன் வேண்டுகின்றனன்.

"செய்தாலும் தீமை எலாம் பொறுத்தருள்வான் பொதுவில் திருநடஞ் செய் திருக்கருணை (பெருங்கருணை)த் திறத்தான் அங்கு அவனை மெய்தாவ நினைத்திடுக !! சமரச சன்மார்க்கம் மேவுக !! என்று உரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான் வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக் கொண்டிடுவேன் மனங் கோனேன் மானமெலாம் போனவழி விடுத்தேன் பொய்தான் ஓர் சிறிதெனினும் புகலேன் சத்தியமே புகல்கின்றேன் நீவிர் எலாம் புனிதமுறும் பொருட்டே!!

................- இது வள்ளல் வழங்கிய சத்திய வாசகம். இதனால் நன்மை விளைவது சத்தியமே !! ஐயமும் அச்சமும் வேண்டாம்.

அருள் ஆண்டவர், எவரையும் திருத்தி, பக்குவப்படுத்தி நல்வாழ்வு வழங்கவே யாவும் புரிந்து கொண்டு உள்ளார். மிக மிகத் தாழ்ந்த

நிலையில் உள்ளவனையும், தீய நெறியிலே விரைகின்றவனையும், சுத்த தயா நெறிக்குத் திருப்ப, திருத்தி, நலம் தந்து வாழ்க்கவே உள்ளார். ஆதலின் கவலை வேண்டாம். அறியாமையில் செய்த தவறுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டினால், நிச்சயம் உதவுவார். இந்த நன்முயற்சி உண்மையானதாக இருக்கவேண்டும். அப்படியும், ஓரிரு வேளை மேலும் தவற நேரினும் மன்னித்து அருள் வள்ளல் பெருமான் !!

தெரிந்தும் தெரியாமலும் செய்த பிழை கூட, திரு உள்ளம் அறியாது நிகழ்ந்து விடவில்லை. அவரே, மறக்கருணையால் பக்குவப்படுத்தவே மேற்கொண்ட உபாயம் அதுவாகும். எந்த வகையிலும், **"ஒருவன் திருந்தி நிறை தயவு வடிவினனாக ஆகவேண்டும்"** என்பதே ஆண்டவர் திருவுள்ளம். தயவு ஓங்கட்டும்.

மேற்கொள்ள வேண்டிய சில விதிமுறை;................

1) பழைய பழக்க வழக்கங்களை முயன்று மாற்றிக் கொள்ளுதல்.

2) **"நமது உண்மை தயவு ஆக இருக்கின்றது."** ஆகையால் தயவு செய்து கொண்டு வாழ்வதே நம் இயல்பு ஆகும். மாறுபாடாக நடந்து கொள்ளக் கூடாது. எண்ணம், பார்வை, செயல் தயவில்லா வழியில் செலுத்தக் கூடாது. தடுத்து, சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3) தீயோர் நட்பு, சபலக் காட்சிகள், அதிகக் கார சார உண்டி, பானம் தவிர்த்தல் வேண்டும்.

4) தினமும் அதிகாலையில், தனித்து சிறிது நேரம் "**தயவுத் தியானம்**" செய்து மனதைத் திடப்படுத்திக் கொள்ளல். முதலில் மனமும், உடலும் திடம் இன்மையால் ஒத்துழைக்க மறுக்கும். இடைவிடாது முயன்று வந்தால் சரியாகி விடும்.

5) வேலையில், சோம்பல் இல்லாது, சுறுசுறுப்பாக, ஆனால் பிறர் மேல் கோபித்துக் கொள்ளாமல் அமைதியாகவே தயவோடு எக்காரியமும் புரிந்து வரல் வேண்டும்.

**"தயவுப் பழக்கமே உயர்ந்த உபதேச முறை ஆகும். அஃதில்லாது, ஏதோ சில மந்திர தந்திர உபாய முறைகளை மேற்கொண்டு பயின்று வந்தால், ஓரளவு நன்மை ஏற்படுவதே போல் தோன்றி மறையும்."**

எனவே, **“தைர்யமாக, மெய்ப்பொருளை நம்பி, தயவு நெறியில் நடந்து வருக.”**

**“எங்கும் ஆண்டவரின் சான்னித்தியம் பரிபூரணமாகவே இருக்கின்றதால், இருந்த இடத்தில் இருந்தே தயை பெற முயன்றால் அது சாத்தியமே.”**

இங்கோ, பிற எங்கோ சென்று அடையத் தக்கது என்ன ? திருவருள் கூட்டி வைப்பின், நல்லோர் உறவால் உளத்தூய்மை பெறுதல் கூடும். மற்றபடி **“தயா அனுபவம் சுய முயற்சியால் தான் உண்டாம்.”**

குறிப்பு ;........

இச்சையைத் தூண்டும் ஓவியங்களையோ, சித்திரங்களையோ, இவற்றிற்கு மேல், ஜீவ வடிவிகளையோ கெட்ட எண்ணத்தோடு நெருங்கப் படாது. புறத்தோற்றம் எல்லாம் அழிவுறுவன ; தயவின்மையால் யாவும் கெடுவன ; கேடு விளைவிப்பனவுமாம். எனவே, எதையும் எவரையும் இரக்கத்தோடு பார்த்து, தயவு (கடவுள்) தான், உண்மையில், எனக்கு வேண்டத்தக்கது ; அழகும் அழியா வாழ்வும் வழங்குவது ; ஆகையால், “**புற மயக்கில் செல்லவிடாதே ! தயவுசெய் ! தயவுசெய்** !!” என வேண்டிக் கொண்டும், இயன்ற சூழ்நிலையில் தயவுச் செயல் புரிந்து கொண்டும் இருப்பதே நல்லது.

**“சூழ்க தயவு”**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

................................................................................................................................................

## D12-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## “தயவுக் கடிதங்கள்”

18- 12- 1985, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயா________( தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) தனக்கு ;...............

**“அகண்ட வான்வெளி நிறை ஒளிப் பரம்பொருளே ஏகமாம் அருட்பெருஞ்ஜோதி.”**

**“அது என்றும், எங்கும் பூரணமாய் இருந்து கொண்டுள்ள ஒன்றேயாகும்.”**

**“அப்படியுள்ள அது, ஒரு சிற்றணு அளவில் மனிதக் கருவில் வெளியாகி, உயிர் உடல் வளர்ச்சி பெற்று உலகிடை தோற்றி, ஆண் என, பெண் என திகழ்கின்றது.”**

ஆனால், அகமாகிய ஏக நிலை நின்று உணராது, புறம் ஆகிய தேகநிலை நின்று மாயா வாழ்வில் திளைக்கும் வரை அவத்தையும் அழிவும், இறப்பும் பிறப்பும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்.

**“இந்த தேக போக வாழ்வே மெய் என்று கருதி நீண்ட நெடுங்காலம் வந்துள்ளவனுக்கு, அகத் தயவு வாழ்வு மேற்கொள்ளுவது மிகக் கடினபாடாக இருக்கிறது.”** எதிர்த்துத் தீவிரமாக முயன்றால் திருவருள் தயவு செய்யும். சத்தியம்.

**“அகம் பழுக்கப் பழுக்க புறத்தும் தயா அனுபவம் ஓங்கும்.”**

தயாஜோதியின் சிறுசிறு கூறுதான், பெரிய பெரிய மகான்களையும், முத்தர்களையும், சித்தர்களையும், தேவர்களையும், உண்ணின்று உருவாக்குவதும் அழிப்பதுமாயுள்ளதாம். ஆதலின், தயா நிலை நின்று நோக்கின், எவரிடத்தும், தயவு செய்தல் அன்றி, வேறு எந்த வகையிலும் விருப்பு வெறுப்பு கொள்ளவே மாட்டோம்.

ஒதுங்கி நின்று தயவோடு பழகுதல் வேண்டும். “**தொட்டாலும் தோடமுறும், விட்டாலும் வேறு கதி இல்லை!!**” ஆதலில், தயவுப் பணி புரியத் தான் ஆணை பெறப்பட்டுள்ளோம் .

மனம் கீழ் நிலையையே நாடுவது, நெடுநாளைய பழக்க வசமே அல்லாது அது அதன் இயற்கை அல்ல. “**தன் அகத்தே உள்ள மெய்ப்பொருளை உணர்ந்து நின்றால், நிற்க முயன்றால் நாளடைவில் இறை உண்மை விளங்கும்.**”

**“மனம்” = “ம்+அ ; + ன் + அ ; ம்”**

இவை:........

**“உடம்பு உயிர், உண் மெய், உயிர் உடம்பு”**

**“சத்விசாரத்தால், உடம்பு நிலை, உயிர் நிலை, தாண்டி உள்ளொளி நிலையில் கூடி நிற்பது முற்கூறு.”**

அப்படி இருந்து, மேல் தயா அனுபவம் உண்டாக, உயிர் - உடம்பு செயல்படுவதே வாழ்வு ஆம். **“இதனை முன் இரண்டரை, பின் இரண்டரைக் கடிகை என்பர் வள்ளல் பெருமான்.”**

அகநிலை பொருந்தி தயா வாழ்வு நடத்தி வந்தால், நாளும் அறியாதன எல்லாம் அறியலாகும் ; காணாதன எல்லாம் காணலாம் ; அடையாதன எல்லாம் அடையலாம். வீணில் மனதையும், வாக்கையும். காயத்தையும் அலைய விடக் கூடாது.

**“இதுவரை அறிந்தும் அறியாமலும் செய்த தவற்றினை எல்லாம் நம் தயாபதி தவறாகக் கொள்ள மாட்டார். தவம் ஆகவே கொண்டு நல்வாழ்வு பெற உதவுவார். இது திண்ணம்.”** பின் நோக்காது தயவுடன் முன்னேறுக!!

**“இருப்பது தயவு ஒன்று. அது அகத்தே இருந்து சத்தாய்த் திகழ்ந்து கொண்டுள்ளது. அதுதான் நம் உண்மையுமாம்.”** இடையறா அனுபவ வாழ்வு நிமித்தம் பலராக, பலவாக நம்மைச் சூழ வந்து வந்து போய்க் கொண்டே உள்ளது. இது சித்து நிலை. சத்சித் இயல்பறிந்து தயவுச் செயல் புரிந்து கொண்டு நயவாது, கயவாது, வியவாது, நிரதிசயானந்தமாய் நிலவுதல்தான் ஆனந்தம் ஆகும். சுத்த சன்மார்க்கர் இந்தச் சச்சிதானந்தம் ஏற்று, நித்தியானந்தமாய் வாழ்வர். இது வள்ளலார் அனுபவம். **“அவர் தானே தயவு ஆக நம்மில் நாமாகி இருந்து கொண்டு வாழ்விக்க உள்ளார்.** கவலை வேண்டாம். கருணை வள்ளல் தயவு காக்கும். **“தயவில் ஓங்குக”**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

.............................................................................................................................................

# D13-தயவு ஒளி தெய்வீக சிந்தனை

## "தயவுக் கடிதங்கள்"

13- 02- 1986, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

**"அருட்பெருஞ்ஜோதி"**

**"அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை"**

**"அருட்பெருஞ்ஜோதி"**

**"ஆன்மாலயத்து அகமிருந்து, அருட்பெருஞ்ஜோதியே "சுத்த தயவு" ஆகி, அதுவே நம் ஒவ்வொருவரின் உண்ணின்று உயிராய், உணர்வாய், உடற் கருவி கரணங்களாய் விரிந்து விளங்குகின்றது உண்மை,"** என்பதை அறிந்து கொண்டுள்ளோம்.

இப்போது நான், நீ, பிறர் என்பதெல்லாம் "**தயவு**" என அறிந்து, அயல் அறியாது விளங்குதல் உண்மைதானே !! இப்படி, அகமிருந்தபடி, நாம் அனகமாக, எங்கும் இருந்தும், புறத்தே கால தேச சூழ்நிலையால் வேறு வேறான தோற்றம் கொண்டு விளங்குகின்றோம். "**இந்த புறநிலையில் அழுந்திப் புழுங்கி கெடாது, அக -அனக வாழ்வு ஏற்று வாழும் பழக்கம் மேற்கொள்ள வேண்டுவது நம் கடமை.**"

எனவே, இனியும் புறநிலையில் மனம் அலைய விட்டு, வருந்திட வேண்டாம்.

**"அகத் தயவு ஒளியாய் நின்று, தயவையே நினைவிற் கொண்டு,"** அதற்குத் தக எச்செயலும் புரிந்து வருக. அச்சமும் ஐயமும் கொள்ளாது, திருவருள் கூட்டி வைக்கும் சூழ்நிலைக்கு ஒப்ப வாழ்ந்து வருக.

யாரையும், எவரையும் தயவின் ஏகதேசமாகக் கண்டு, வேறு உணர்வு வசப்படாமல், செயல்புரிந்து வரின், எந்தவிதத்தும் தீமை உண்டாகாது, தீமை போல் தோன்றிடும் ஒன்றும் முடிவில் நல்லதாகவே முடியும்.

விழிப்பு நிலையில் தயா ஒழுக்கம் தவறாது பழகி வந்தால், முதலில் வேற்றுத் தோற்றமும் காட்சியும், மனத்தை சலனபடுத்தா. பின்னர், அடிமனம் அல்லது அகமனத்தில் தயா உணர்வு சாரும்போது, தீயவை கனவில் தோன்றா ! ஆரம்ப கட்டத்தில்,

தொல்லைப்படுத்தும், வெறுக்கத் தக்கனவும், தோற்றாது மறைந்திடச் செய்வார் தயா பெரும்பதி.

எவ்வளவு மோசமான சூழலும், திருவுளப்படி வருவிக்கப்படுகின்றன எனில், எல்லாம் ஒருவனைத் தயவு நெறியில் செலுத்துவதற்கே அன்றி, அவனை முற்றிலும் கெட்டழிந்து ஒழிந்திடச் செய்தற்கு அல்லவாம். **"எல்லாம் தயவின் செயலே !!"** தயவு அல்லாதனவற்றுள்ளும், தயவே மறைந்து இருந்து உதவுதல் மெய்யாம். **"தயவு, அதயவு"** என்று கொண்டு பார்த்தால், தயவு அல்லாததில் ( **"அதயவில்"** )தயவு இருத்தலைக் காண்போம்.

ஆகவே, அறிந்தும் அறியாமலும் ஏதேதோ நிகழ்ந்து, இன்றைய நிலையில் உளம் உருகி, நெகிழ்ந்து **"அனக நிறைவு பெற"** முயலுவோமேயானால், அத் தயாநிதி தயவு செய்வார். தயவு ஆணை.

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

.....................................................................................................................................................

## D14 -தயவு ஒளி தெய்வீக சிந்தனை "தயவுக் கடிதங்கள்"

22- 03- 1986, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தனிப்பெருந்தயவு அன்னை ஈன்ற தயா செல்வ !! கவலற்க, கலங்கற்க, **"அஞ்சேல்!"** என்று ஆட்கொண்டருளும், அன்னை பரிபூரணியின் தண் கருணை ஆட்சியில் சூழ்வது எல்லாம் தயா நலமே செய்யும், ஐயுறேல், அலைவுறேல் !! **"அசைவிலா அகநிலையுற்று அமைதி பெறுக !!"**

**"அவனன்றி அணுவுமிலையே !! அது வன்றி ஏதுமிலையே !! உண்மையில் உள்ள தயவு தானே எதுவுமாய் எவருமாய் இருக்கின்றதை உள்ளபடி உணர்ந்து நிற்பாயாகில், "நீ" என்பதும், "நினது" இன்ப துன்ப அனுபவம் என்பதும் காண்டற்கில்லையே !!"**

நல்லன செய்து மகிழ்கின்ற போதும், தீயன புரிந்து களித்திருக்கும் போதும் உண்ணின்று புன்முறுவல் பூத்திருக்கின்றது

தயாபரியே !! ஏன், நல்லனவே செய்யவும், அல்லன தவிர்க்கவும் செய்யாள் அந்த செய்யாள் !! பக்குவம் உறவும், அனுபவம் பெறவும் எதையும் ஆணை செய்து கொண்டுள்ளாள் அருள் அன்னை.

ஆகவே, நல்ல அனுபவம் உண்டாகவும், கேடான எதிலும் கொஞ்சமும் நாட்டம் கொள்ளாது இருக்கவும் செய்கின்ற உபாயமே தயாநிதியின் நியதியாகும். அருளாளன் திருவுள்ளம் ஓரளவு அறிந்து கொண்ட பின்னும் கூட, பழைய பழக்க வாசனையாலும், மறதியாலும், சந்தர்ப்ப சூழ்நிலையாலும், தவறான செயலில் செல்லவும் கூடும் ; பின் அத் தவற்றினை நினைந்து, நம்மை நாமே கடிந்து கொள்ளவும் நேரும். அதுவும் நம் உள்ளத்தை உறுதிப்படுத்துவதற்கேயாம்.

எனவே, எது நேரினும், தீவிர முயற்சி மேற்கொண்டு, முன்னேறிவரின், பரிபாக காலத்தே, நல்லன ஒன்றே சூழ்ந்து காப்பதே சத்தியம்.

நாம் படுகின்ற அவத்தையும், துன்பமும் பொறுக்க முடியாதது என்று எண்ணி எவரினும் மிகத் தாழ்ந்த நிலையில் நம்மை வைத்து, நம் மீதே வெறுப்படையத் தேவையில்லை !! ஏனெனில், நாம் அறிந்தும் அறியாமலும் எத்தனையோ பேர் கடும் சோதனையிலும் அல்லலிலும் பட்டு துன்புறுகின்றதை அறிகின்றபோது நம் நிலை அவ்வளவு மோசமில்லை என்றே தெரிந்து, தெளிவுறுவோம்.

துன்மார்க்கத்தினின்று மீள, உண்மையாக வேண்டுகின்ற நமக்கே இன்னும் அருள் கிட்டவில்லையே !! எவ்வளவு வருந்துகின்றோம் !! ஒரு சிலர், அறியாமையால் தீயவற்றையே நல்லனவாகக் கருதியும், துன்பமே இன்பமென எண்ணியும், அதினின்று மீளுவதற்குக் கூட விரும்பாது அழிகின்றதைக் கண்டு பரிதாபப்படுகிறோம் நாம் !! அவர்களுக்கு நல்லறிவு கொடுத்து, நல்வழியில் திருப்பி, விரைவிலே நன்மை அடையச் செய்வித்தல் வேண்டும் என நம் தயாநிதியையே வேண்டிக்கொள்வோம்.

சென்றனவற்றையே நினைக்க வேண்டாம் !! வேண்டாம் என்றாலும், மன மாயையின் செயலால், தயா பக்குவம் இன்மையால், வேண்டாதன மீண்டும் மீண்டும் வந்து தொல்லை தரக் கூடும். உண்மையான உள்ள எழுச்சியுடன், மேலும் மேலும் மேல்நிலைக் கண் நின்று, தயவு தழைக்க உடன் ஒன்றி வாழவும். தயவே உதவும்.

தயாபதியினுடைய விதிமுறைச் சட்டம், எந்த ஒருவனையும், பக்குவப்படுத்தி மேனிலைக்கு ஏற்றி, வாழ்விக்கவே ஏற்பட்டனவாம். அதுவன்றி எவனையும், துன்புறுத்தி, அழித்து ஒழிக்க வேண்டும் என்ற கருத்துடையது அல்ல, தயாநிதி முறை.

அற்ப சக்தியால், அற்புத சிக்தி கொண்டு ஆடுவது அவர் ஆணை அன்று !! நிறை தயவால், நித்திய சுகவாழ்வு ஏற்று, சூழ்நரையும், அந்நிலைக்கேற்றி, எல்லோரையும் வாழ வைப்பதே, அவர் திரு உள்ளமும் நம் கடமையுமாம். இவை யாவும் உணர்ந்து, இறை தயவு சார்ந்து, இயன்ற தயா செயல் புரிந்து கொண்டே இருப்போம். நம் போல் உலக முழுவதும் இத் தயா சுத்த சன்மார்க்கத்தால் நலமெல்லாம் பெற்று நனி மகிழ்ந்து திகழ்க !!

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D15-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "தயவுக் கடிதங்கள்"

05- 07- 1986, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

**"உள்ளொளி கொண்டு"** உயர் நலம் பெறுதற்கு, மிக விழையும் ஓர் ஆன்மா தான்________( தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) நாமம் கொண்டது. அதனைச் சூழ்ந்து விளங்கும் உயிர் உடம்பு கவசமே ஆம். இதுதான் நான் அறிந்த_______(தங்கள் பெயரைக் குறிப்பிடவும்).

**"திருவருளாலே, தேகப்பற்று அற்று, சிரநடு சிற்ஜோதி ஆன்ம நிலை நின்று,"** மனமும் வாக்கும் காயமும் **"த ய வு"** ஆகச் செயல்படுவது உண்மையாகும்.

இதுவரை புற தேக, கரண மருள் வாழ்வில் பட்ட, படுகின்ற அவத்தைகளைக் கருத்திற் கொள்ளாது, **"தயவு வாழ்வு"** வாழப் பழகிக் கொள்ள வேண்டும். வாழ்வில் தயவு ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, அதற்குத் தக வாழ்வை சரிசெய்து கொள்ளவேண்டும்.

**“அகத்தே சச்சிதானந்தமாய், “தயவு” ஆக இருக்கும் ஒன்றே, இந்த நம், உயிரும் உடம்பும் கொண்டுள்ளது உண்மை.”** உண்மை அப்படி இருக்க, அறியாமையால் குற்றமும் குறையும், அல்லலும் தொல்லையும் நிரம்பிய புற நிலையே நம்மதாகக் கொண்டு அவத்தையுற்று அழிதல் சரியன்றே !! இப் புறநிலையைத் தவிர்ப்பது எந்தவித தந்திரத்தாலும் கூடாது. அகம் இருந்து கடவுள் தயவு தான் நம்மை திருத்தவே இவற்றை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. ஆகையால் விருப்பு வெறுப்பு கொண்டு அலையாமல், ஜீவ தயவைப் பெருக்கிக்கொண்டு, நம்மை அடுப்பவர்களுக்கு **“உயிர் விளக்க- அறிவு விளக்க தயவுப் பணியை”** புரிந்து கொண்டு இருத்தலே முறையாகும்.

எவ்வளவுக்கு எவ்வளவு சோதனை வருகின்றதோ, அவ்வளவும் நம்மைத் தடுத்தாட் கொள்ளும் கடவுட் தயவுச் செயலே ஆகும். கடவுள் தயவு, ஜீவ தயவு போன்ற ஒன்றல்ல ; அது சில சமயம் நேர்முகத் தயவாகவே தோன்றும் ; பல வேளையில் முறை அற்ற, மறைமுக மறத் தயவாகவும் இருக்கும். அது **“அதயவு”** என்றே அறியலாகும். அகச் சந்நிதியில் குணமும், குற்றமும் தயவேயாகும். ஆகவே, எதற்கும், கவலையுற்று வருந்திக் கொண்டே இருக்காது துன்பமும் சோதனையும் கடவுள் தயவே எனத் தெளிந்து, தயவோடு ஏற்று தயவே செய்ய முற்பட்டால் விரைவிலே எல்லாம் நன்மையாகச் சூழ்ந்து உதவும்.

புறத் தோற்றத்தையும், செயலையும் கொண்டு யாரையும் அதிகம் மதித்திடவோ, அவமதித்திடவோ செய்யாது, நம் அகத் தயாபதியே, புறத்தே நம்மைத் திருத்த வந்ததும் போனதும் ஆகக் கொண்டு, தயவு வண்ணமாக அகம் இருந்து நோக்கி வாழ்வு நடத்த வேண்டும். தயவு நிலை பெறுவோருக்கு கேடு வராது !! அப்படிக் கேடு போல் தோன்றினும் அதனால் முடிவில் பெரு நன்மையே விளையும்.

**“தனிப்பெருந்தயவு ஒன்றே சத்தாய் உள்ளது.”**

**“சித்தால் நான் என, நீ என, பிறர் என, பிற எனத் தோற்றி விளங்குவது.”**

இந் நிலை யோர்ந்து தயவு வாழ்வு வாழ்வதே ஆனந்தம். அதாவது, **“தலைநடு தயவு ஒளி என விளங்கிக் கொண்டு, திரி**

**கரணத்தில் தயவு வெளிப்பட வாழ்வதே தயா இன்பவாழ்வு ஆகும்."**

**"தயவு நிறைய !!"**

இவண்
தயாநேயன், சரவணானந்தா.

.................................................................................................................................................

## D16-தயவு ஒளி தெய்வீக சிந்தனை "தயவுக் கடிதங்கள்"

28- 09- 1986, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவு ____________(தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) க்கு, **"அகமிருந்து ஓங்கும் அனக, சுகவாழ்வு சேர,"** அங்ஙனமிருந்து வேண்டுகின்றனன்.

**"தயவே, அருட்பெருஞ்ஜோதியாக, உள்ளிருந்து பூரண நிறைவாய், புறத்தில் அறியப்படாதே, அனகமாய்த் திகழ்ந்துக் கொண்டுள்ளது."** இதுதான் எவர் உண்மையும் ஆம்.

**"த"**............... எங்கும் நிறை இறை பெருஞ்ஜோதி உருவமாகும்.

அதுவே என்னும் **"ய"** கரமாகிய ஆன்ம சிற்றணுவில், பக்குவத்தே வெளிப்பட்டுத் **"தயவு"** ஆகி மனிதப் பிறப்பில் உலவாது நிலைத்து விளங்க வருவதாம். ஆகவே, **"தயவு"** தான் பரம்பொருளின் உண்மையும், பக்குவியின் உண்மையும் கூட.

எனவே, உடல் நிலையில் பற்றோடு இருந்து கொண்டு, எண்ணாதனவெல்லாம் எண்ணி, படாத பாடு பட்டுக் கொண்டிருப்பது அறியாமை !!

**"தயா இயலோடு அகமிருக்கும் அதுவே, தயவு ஆக, உயிராய், உணர்வாய், உள்ளொளியாய், அவ் உள்ளொளிக்கு உள்ளிருக்கும் ஒன்றாய், தயவு அனுபவத்தில் நிலைத்து வாழ வெளிப்படுகின்றது."**

ஆகையால், அப்படி **"அகம் இருந்து வெளிப்படுகின்ற ஒன்றோடு இருந்துகொண்டு வாழப் பழகுதல் உய்யும் நெறி முறையாம்."**

எனவே, "**தயாநிலை பொருந்தி, அவ் உணர்வு கெடாது வாழ முயலுக** ;" அம்முயற்சி திருவருளால் நிறைவுறும், கவலற்க !!

தயவே யாவுமாய், எவருமாய்த் தோற்றியுள்ளது ; அத் தோற்றம் கெட்டழியும் முன், "**அனக நெறி**" ஏற்றுக் கொண்டால்தான், பின் எக்காலும் கெடாது, ஒருவன் இறப்பும், பிறப்பும் தொடரப் பெறாது "**அனகனாய்**" வாழ்ந்துக் கொண்டிருப்பது சாத்தியமாம்.

சிவ தீட்சை பெற்றவன் தான் சைவனாகக் கூடும், ஞானஸ்நானம் பெற்றவன் கிறிஸ்தவனாவான், குரு உபதேசம் பெற்றவனே ஞானானந்த நிலை எய்துவான் என்பதெல்லாம் "**புற உடற்பற்று நீக்கிவிட்டு அகநிலை உறுவதையே**" குறிப்பதாய் ஏற்கப்பட்டது இதுகாறும். பயன்:- "**அக மறைந்து வாழ்வற்றுப் போவதே** !!"

ஆனால், நம் சுத்த நெறியில், "**அகத் தயாநிலை உறுவது முதற் கூறே.**" மேல் சுத்த தயவு வாழ்வு ஏற்றுத் திகழ்ந்து கொண்டு, என்றும் அழியாது விளங்குவதுதான் முடிவில்லா முடிவாகும்.

எனவே, "**அகம் உற்று, சலனமின்றி, கவலையின்றி, திருவருள் கூட்டி வைக்கும் வண்ணம் தயா இயல் வாழ்வு ஏற்று, முன்னோக்கி சென்று கொண்டே இருக்கவும்.**" தயவுப் பதியும் தயவு செய்வார்.

**நலம்**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

..........................................................................................................................................

## D17-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "தயவுக் கடிதங்கள்"

01- 07- 1987, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயா நலம் வேண்டும்______ (தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) க்கு , அது வெளியாகிச் சூழ்ந்து, வேண்டுவ தந்து இன்பருளுவதாக.

நம்மை ஆளுடையான், நம் உடனாய் இருந்தும், நமக்கு ஏன் சோதனையும் வேதனையும் நிறைந்த தொல்லை சூழ் அல்லல் வாழ்வு ஏற்படுகின்றது, என அங்கலாய்க்கின்றோம் !! அவர் நம் உண்மை அறியாதவராய் இருக்க முடியாது ; அறிந்தும் அறியார் போல சிறிதும் தயை காட்டாதிருத்தல் ஏனோ ?! என எண்ணி வருந்துகின்றோம்.

அவரைக் கேட்டால், பதில் என்ன சொல்லுகிறார் தெரியுமா? நான், உன்னைப் பற்றி, உன் உண்மையைப் பற்றி, உன்னை விட நன்றாகத் தெரிந்து கொண்டுதான் "அகல" (விலகி) நிற்கின்றேன் என்கின்றார் !!

இது என்ன ?!

என் நிலையை நன்றாக அறிந்து கொண்டுமா, இப்படி அகல விலகி நிற்பது !! இவருக்கு உண்மைத் தயவு இருந்தால், நான் படும் பாடு அறிந்தும் இப்படியா இருப்பார் ?! எனத் திகைக்கிறேன்.

இவருடைய தயவு, என்றும் பொய்யாகாது ; இவரது விடையும் மெய்யாகத்தான் இருக்க வேண்டும் !!

அப்படியானால் எனக்குத்தான் அவரது மெய்ம்மொழி சரியாகப் புரியவில்லை போலும் !!

ஆம். என் "**உண்மை**" யை நன்கு அறிந்தும் அகல நிற்கின்றார் என்றால், எனது உள்ளிருக்கின்ற "**மை**" ஆகிய இருளாம் அறியாமை , அது மனோ மயக்க கடின சித்த நிலையாக இருக்க வேண்டும். அதனால்தான், அவர், இந்த கீழ் இதயம் ஆகிய ( அகலம் = புலன் மயக்க மார்பிடம் ) நிலையுற்று இருப்பதாகவும், பக்குவப்பட்டால், சுத்த மனம், தயவு மயமானால், மேலிடத்தே, தலை நடுவிடத்தே பிரியாதே, இன்பமாய்த் திகழலாம் என்கின்றார் ; எனத் தெரிவிக்கின்றார்.

இயற்கை உண்மையாகிய, சத்து இயல்போடு, சுத்த ஆன்மாவின் கண், "**தய**"வாகி இருக்கும் நம் இறை உண்மை உணர்ந்து, மனம் கரைந்து நிற்கும் நிலை வர வேண்டும். அப்போது தான் புறப் பொறி புலன் வழி சென்று சென்று துன்புறும் மனம், வேண்டுதல் வேண்டாமை அற்று, விருப்பு வெறுப்பு அடையாது, மேல்நிலையில் தயவு மயமாகித் தங்கும். அப்போது நம் தயாபதியும், துன்பிலா இன்பமே சூழ வாழ்விப்பார்!!

நாம் தயாஜோதி பதியோடு என்றும் பிரிவற இருந்தும், **"நம் இயல் உண்மையை"** உண்மையாக அறிந்து கொள்ளாது, புலன் மயக்கப் பொய் மாயா வாழ்விலே அழுந்திக் கிடத்தலின், மிகு சலிப்பும், துன்பமும் வெறுப்பும் அடைகின்றோம். தயா ஒழுக்கத்தோடு, அது கூட்டி வைக்கும் இடம்- பொருள் - ஏவல்களை தயா வாழ்வுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப் பழக வேண்டும். நம் தயா வாழ்வுக்காகவே யாவையும் நம்பதி நம்மைச் சூழ எல்லாவற்றையும் வரவழைக்கிறார். நாமும் அதனைச் சரியாகப் புரிந்து கொண்டு அதற்குத் தகவே வாழல் வேண்டும்.

எது வரினும், எது போகினும், உள்ளிருந்து ஆளும் உடையவனின் தயவாக கண்டு உவந்து ஏற்று பணிபுரிதல் கடமையாகும்.

**"பிணிக்கு மருந்து ( பல ) பிற, மன் அணி இழை தன்நோய்க்குத் தானே மருந்து"** ( திருக்குறள் ) ........- என்பது உண்மை. **"ஆன்ம உண்மை நிலையே தன்னிலை"** ; அதனை நொய்மையாய், நுண்ணியதாய்க் கிடத்தியுள்ளது **"ஆணவ மலமாம் நோயே"** . அதனை, **"தன் இயல் தயவால் தான்"** ஒழித்து, ஒளியுறச் செய்தல் கூடும். மற்றபடி தேகேந்திரிய கரணங்களுக்கு உண்டாம் அனைத்துப் பிணிகளையும் தீர்க்க பலவாகிய மருந்துகள் உள்ளனவாம்.

**"ஆன்ம இயற்கை தயவு தான்"** ; ஆகையால் தயவு வாழ்வு மேற்கொள்ள வேண்டுவது நம் கடமை. பக்குவம் உறாதவரை எல்லாவித சோதனைகளும், இடையூறுகளும் வந்து வந்து அச்சுறுத்தும் ; துன்புறுத்தும் ; அவற்றிற்கெல்லாம், அஞ்சாது கலங்காது தயா லட்சியத்தோடே முன்னேறிக் கொண்டிருத்தல் வேண்டும். எப்படியும், எல்லாத் தடைகளையும் விரைவிலே நீக்கி தயை பாலிப்பார் நம் தயாஜோதி பதி.

**"புறத்திலே நாம் காணும் - அறியும், எவர்க்கும் உள்ளாக இருப்பது தயவு ஒன்றே."**

**"அத் தயவு, நம் ஒருவர் அகத்தே தான், பூரண நிறைவாய், அகமிருந்து அனகமாய் விளங்குவதாயும்,"** ஏனைய எதிலும், எவரினும் ஏகதேசமாய்ப் புறத்தே தோன்றாதே தோன்றியும் மறைந்தும் கொண்டிருப்பதுவேயாம். ஆகையால், நம் உள்ளத்தே இருந்து அருட்பெருஞ்ஜோதி பதியே, தன் தனிப்பெருங்கருணையால் ஆள்கின்றார் என்பதை அறிந்து, அவர் மயமாய் ஒன்றி, தயவு

வாழ்வு கொண்டு விளங்குவதே நம் கடமையும் ஆண்டவர் ஆணையும் ஆம்.

ஆகவே, தயா பொறுமையோடு, சூழ் பணியில் ஈடுபட்டு முன்னேறிக் கொண்டிருக்கவும்.

**வருந்தற்க; கலங்கற்க; நன்னலம்**

**தயவு**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D18-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "தயவுக் கடிதங்கள்"

17- 06- 1988, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவுத் திரு __________ ( தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) க்கு தயா நலம் சேர !!

**"நமது ஒன்றான மெய்ப்பொருள், கற்பனைக் கடந்த ஒன்றாக எங்கும் நிறைந்திருப்பதோடு, நித்தியானந்த அனுபவத்தில் வெளிப்பட்டு விளங்கற்கே, இம் மனித வடிவில், சிரநடு இடத்தே "தனிப்பெருந் தயவு" ஆக எழுந்தருளி உள்ளார்."**

இத்தலை நடுக் கடவுள் உண்மை ;...............-

"**த**"........எங்கும் நிறை தகராகாச அகண்ட பேருருவமாம்.

"**ய**"........அதன் ஓர் அணு தான் நமது ஆன்மாவாய் "**யகர**" எழுத்தால் சுட்டப்படுவது.

"**த........வும், ய........-வும்**" இரண்டெனத் தோற்றினும், அனுபவத்தில் இரண்டுபடா ஒன்றாய், "**அத்துவிதமாய்**" இருந்து கொண்டுள்ளதாம்.

இக் கடவுளான்ம உண்மை, மனிதனிலே, "**தயா ஞான பக்குவ வசத்தால்**" அறியலாகி, அந்நிலை நின்றே "**வுகர**" பரோபகாரச் செயலாய், இந்திரிய கரணத்தின் வழியே வெளிப்படுவதை உணர்வது, தயவு அனுபவத்தின் முதற்படியாகும்.

இத் தயா வுணர்வு விளைவு கொண்டு நிரம்புதல் வேண்டும். இது மனித பிறப்பிலே தான் அனுபவ சாத்தியமாகின்றது. மற்ற எந்த உயிரிலும், பொருளிலும் தயா அனுபவம் சாத்தியமில்லை. எனவே மனிதனில் இந்தத் தயா ஞானம் விளைந்து நிறைவுறவே, கடவுளும் தன் ஐந்தொழிற் செயலால், பிற யாவையும் ஆக்கி ஆக்கி, அழித்து அழித்துக் கொண்டுள்ளார். இப்போது உண்மையில் கடவுளும் மனிதனும் இரண்டுபடா ஒன்றாய் இருத்தலின், "**அகத் தயா நிலை**" நின்று தயவே பெருகப் பெருகப் புறப் பொறி புலன் இச்சையின்றி வாழ்வதால், அவ் உள்ளொளி பெருகி இவனது உணர்வும், உயிரும், உடலும் தயவு மயமாகக் கூடியதாய் உள்ளது.

மேற்படி தயவு அனுபவ விளைவின் பொருட்டே, தம் இன, மக்கள் ஜீவனிடத்தே, உயிர் விளக்கமும், அறிவு விளக்கமும் உண்டாம் பணி புரிதல் வேண்டும். சத்விசாரத்தால் தயா ஞான விளக்கம் உண்டாம். ஆனால் பரோபகாரச் செயலால்தான் கடவுள் அனுபவம் கைவரப்பெறும். கடவுளே, தன் அழித்தல் செயலால், கீழின படைப்பை எல்லாம், அழித்து வந்து, இந்த மானிடப் பிறப்பில், "**அக அழியா நிலையையே, தயவால் அனக நிறை அனுபவத்தால், அழியா வடிவோடு என்றென்றும் விளங்க இசைக்கின்றார் இம் மனிதனை** !!"

தயவு இல்லா அசுர குணச் செயலாலும், புலால் இச்சைக் காரணமாகவும், வேட்டை வேட்கையாலும், அறியாமையாலும் தயவில்லாச் செயலில் ஈடுபடக் கூடாது.

பொதுவாக, ஜீவ தயவு இருந்தால் பிற எவ்வுயிரும், அத் தயவுடையாரைக் கொஞ்சமும் தீங்கு செய்யா. கடவுள் நியதிப்படியும் கொடிய ஜீவர்கள், சன்மார்க்க உலகில் தோற்றுவிக்கப்பட மாட்டா!!

எல்லா ஜீவர்களிடத்தும் தயவு காட்ட வேண்டும் என்பது உண்மைதான் ; கடவுள் சர்வ ஜீவ தயாபரர் என்பது மெய்யே !! அத் தயவினால்தான், வேண்டாதவற்றை அழித்து ஒழித்து வந்து மனிதனில், அவ்வழிவுச் செயலை மறக்கருணை என உணர்த்தி, தயவால் அறக்கருணை ஆக மாற்றி அழியாது இலங்க இசைக்கின்றார்.

ஆகவே, "**சத்விசாரத்தால், ஒருவன் தன்னைக் "கடவுள் தயவு ஒளி" வண்ணமாகக் கண்டு,**" அந்நிலை நின்று, தயவு வாழ்வு வாழும் போது நேருகின்ற வேண்டாதன அழிபடும் செயல் கூட தயவுச் செயலே ஆம். தயா மயமாகாத, ஒருவன் எது

செய்யினும், ஏதும் செய்யாது இருப்பினும், பிறவிச் சூழலை விட்டு நீங்கவே முடியாது ; விதியை வென்றவன் ஆகான்.

**“காற்றாலே புவியாலே .......................எந்தை அருட்பெருஞ்ஜோதி இறைவனை சார்வீரே !!!”**

அப்படி அருட்பெருஞ்ஜோதி இறைவனைச் சார்ந்து கொண்டுவிட்டால், எதனாலும், எக்காலும் அழிவுறாத தயவு அனுபவமான, ஞான, சுத்த, பிரணவ தேகமாக விளங்கலாகும் என்பது வள்ளலார் அனுபவம்.

**“மறக்கருணையும் தனி அறக்கருணையும் தந்து வாழ்விக்கும் ஒண்மைப் பதம்.”**

அறக்கருணை, ஆக்கல், காத்தல், மறைத்தல், அருளல் எனும் நான்கும் நேரடித் தயவாகச் செயல்படுகின்றன. அழித்தல் ஒன்றேதான் தயவில்லாத செயலாக, மறக்கருணை ஆக விளங்குகின்றது. மறக் கருணையிலும், கருணை மறைந்து இருக்கிறதே !! எனவே, தயவோடு வாழ்வதால் அழிக்கும் செயலும் கூடத் தயவாகவே விளங்குதல் உண்மை. இது கொண்டு தயா நலம் சேர வாழ்க !

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

**பிற்சேர்க்கை:-**

ஜீவ தயவும் கடவுள் தயவும், உண்மையின் இரு கூறாக உள்ளதாம். ஒன்று புறத்தே செயல்படுகின்றது, **“கட மை”** ஆகவும், மற்றது அகமிருந்து செயல்படுத்துகின்றது **“உண் மை”** ஆகவும் உள்ளது. இரண்டும் ஒன்றன் இருநிலையே அன்றி இயல்பில் இரண்டாக இல்லை.

கடவுள் தயவு, எவ்வுயிரும் முடிவிலே, இன்ப நிலை பெற்று விளங்கச் செய்வதே பெரும் இலட்சியமாய்க் கொண்டு, அறக்கருணையும் மறக்கருணையுமாக செயல்படுத்தப்படுகின்றது. மறக்கருணையால் உயிர்கள் எத்தனையோ அவத்தைப் பட்டு அழிந்து, மேல்நிலைக்குப் புதிய பிறப்பு வழங்கி வாழ்வு அனுபவ விளைவு ஏற்பட உதவுகின்றது. இந்த இறை உண்மையை சத்விசாரத்தால் உணரும் மனிதன் கடவுள் தயவு பெற, ஜீவ தயவு மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. ஆகையால், எவ்வுயிரையும்

தயா உணர்வோடு மேலான இன்ப வாழ்வுக்கு உதவ வேண்டும். கீழ்நிலையில் உள்ள அபக்குவ ஜீவர்களுக்கு இரக்கத்தோடு, உதவி மனப்பான்மையோடு தயை புரிதல் வேண்டும். அந்நிலையில் அவ்வுயிர்களை சிலசமயம் துன்புறுத்துவதாயும், அழிவுறச் செய்வதாயும் காரியம் நிகழும்போது அது கருணைக்கு மாறாகத் தோற்றும் !! உண்மையில் அது கருணைச் செயலேயாம்.

ஜீவ ஹிம்சையாகத் தோற்றும் செயல், அஹிம்சை அடிப்படையானதே என்று அறியவேண்டும். உதாரணமாய், ஒரு மருத்துவன், கடுமையான நோய்க்குக் கசப்பான மருந்து கொடுத்து கஷ்டப்படுத்துகிறான் ! அல்லது, அறுவைச் சிகிச்சையால் அதிக அவஸ்தையுறச் செய்கின்றான். அது, அம் மருத்துவனின் கருணையில்லாக் கடின சித்தத்தால் புரியப்படுவதன்று எனவும், எவ்வகையிலும் பிணி நீக்கி இன்ப வாழ்வு வழங்கவே புரியும் தயவுச் செயலே என்றும் அறிய வேண்டும்.

தயவு இல்லாத, உளம் நெகிழாத, புலன்வழி பொய் இன்பத்தையே மெய் என எண்ணி, அதனைப் பெறவே முயன்று, அது கிடைக்காதபோது, கடவுளை எவ்வளவு வேண்டியும், அழுதும் தொழுதும் அல்லலில் அழிவுறும் போது, அக் கடவுள் கருணையே இல்லாத கடின சித்தர் போல் கண்டும் காணாதவராய் இருப்பதாக எண்ணி வருந்துகின்றோம். அவர் கருணை தனிப்பெரும்கருணை........ மனிதனுக்கு உண்மையான பேரின்ப வாழ்வைத் தருவது. அது மனித மனத்தில் ஜீவ தயவாக அரும்பி மலர்ந்து நிறை நிலை பெறும் போது தான், கடவுள் தயவாக மாறி மெய் இன்ப வாழ்வுக்கு உதவுகின்றது. இந்த முறையில் தான், மனிதனுக்கு எல்லா விதமான இன்ப, துன்ப சூழலில் செலுத்தி மேலேற்றிக் கொண்டுள்ளார் ஆண்டவர். ஆகையால் மனிதன் உலக வாழ்வில் தயவு அனுபவம் ஏற்கும் வரை பிழைத்து தழைத்து வாழ்வு பெற வரவேண்டியுள்ளது. மற்ற எது பெறினும், எப்படி வாழினும் முடிவில் அழிவுற்றொழியவே நேரும். எனவே உண்மைத் தயவு மனிதனில் அரும்பி, பக்குவத்தில் மலர்ந்து, தெய்வ நலத்தோடு என்றென்றும் விளங்கச் செய்வதாம்.

**“நிறைக தயவு”**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

........................................................................................................................................

## D19-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## “தயவுக் கடிதங்கள்”

02- 06- 1990, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயா நலம் சேர,................(தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) க்கு :...............

நம்மை ஆளுடைய தயாஜோதிபதி நமக்கு மேலான இன்ப வாழ்வு தரவே எல்லா வகையிலும் சூழ்ந்து பக்குவப்படுத்திக் கொண்டே உள்ளார்.

மேலும், அவர் தானே உண்மையில் நமது அகம், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகி விளங்குகின்றார். இந்த உண்மையை அகம் இருந்தே தயவோடு நோக்கினால், அதுவே “நாம்” என்ற பற்று அறும் ;

**“நாம் என்பதே (தயவு அல்லால் வேறு ஒன்று) இல்லை என அறிந்து அடங்கி “அது மயமாகி” நிற்க முடியும்.”** ஆகவே, **“தயவே உள்ளிருந்து வளர்ந்து நாமாகிவிட வேண்டும்.”**

“தயாபதி சோதிக்கின்றார், நாம் படும் துன்பங்களைக் காணாராய், கண்டும் அவற்றினின்று விடுவிக்காராய், வேடிக்கை பார்த்துக் கொண்டே இருப்பவராய்த் தோன்றுகின்றது”, என எண்ணிக் கலக்கம் அடைகின்றோம், கதறுகின்றோம். நாம் மீள்கின்றதற்குரிய அறிவையும், ஆற்றலையும் கொடுத்து உதவக் கூடாதா என்று பெருந்துயர் அடைகின்றோம்.

அவரும்தான் தயவோடு அனுதாபப் படுகின்றார் !!

**“நாம் அவர் பக்கம் திரும்ப வேண்டும், தயவு வழிக்கு வர வேண்டும் என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டுள்ளார்.”**

நாம் உண்மையை ஓரளவு உணர்ந்தும், “புலன்களை அடக்கி வசப்படுத்தி முன்னேற முடியவில்லையே !!” என எண்ணி, **“அவ் ஆற்றலைத் தா”** என வேண்டுகின்றோம். ஆனால், அவர் நமக்குத் தேவையான யாவும் கொடுத்துத் தான் இருக்கின்றார் ; அறியாமல் குறைபட்டு கிடக்கின்றோம். தீவிரமாக, உறுதியாக முயலட்டும் !! எல்லாம் பெறலாம் !!

.................................................................................................................................................

**“சிரநடு “தயா ஒளி நாம்” என்பதைப் பற்றி நிற்க !! அதன் பேராற்றலே நம்மில் பெருகி, உணர்விலும், உயிரிலும், உடலிலும் பாய்ந்து கொண்டே இருக்கின்றது. அது நிரம்பி, நம்மை அதுவாக்கித் தயானந்த வண்ணமாக வாழ்விக்க உள்ளது.”**

---

சூழ்நிலையை, தயா நிலை நின்று காண வேண்டும். மனோகரண- பொறி புலன் நிலையிலிருந்து, விருப்பு வெறுப்பு ஆகிய கண்ணாடி வழி பார்த்தால் மாறுபாடான காட்சியே தோன்றும். கையில் உள்ளதை எறிந்து விட்டு, இல்லாததைப் பெற முயன்று அவத்தைப்படுதல் அறிவு அனுபவம் ஏற்படவே ஆகும். ஆகவே, சிறு உதவியே ஆயினும் மறுக்காது ஏற்றுப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற முயலக. திருவருளும் துணை நின்று வென்றிட உதவுவார்.

எவ்வளவு கீழ் நிலையிலும், மாட்டாமையிலும், மீளாத் துயர்ச் சூழலில் இருந்தாலும், திட மனத்தோடு, தயா லட்சியத்துடன் செயல்படுக !! நலம் பெறுவது திண்ணம். இன்னும் இழிவு உண்டானாலும், நம்மைத் திருத்துவதற்கே தயவு செயப்படுகின்றதாகக் கொண்டு உய்க ; உய்வு கிடைக்கும்.

**“தயவு”**

இவண்
தயாநேயன், சரவணானந்தா

---

## D20-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## “தயவுக் கடிதங்கள்”

24- 09- 1990, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவுத்திரு..............................( தங்கள் பெயரைக் குறிப்பிடவும்)க்கு,

தயவு அனுபவம் சேர !!

**“எல்லாமானது, “தயவு ஒன்றே” அன்றி வேறில்லை !! அத் தயவின் வெளியீடே யாவுமாம்.”**

**“அருட்பெருஞ்ஜோதியாய் எங்கும் நிறைந்திருந்து கொண்டு, ஒரு குறிப்பிட்ட அணுவில் தனிப்பெருங்கருணை ஆக எழுந்தருளித் தானே தன்னை உணர்த்திட, தானே ஒரு**

**மனிதனாய் இருந்து அறிந்து கொண்டு உள்ளது. இது தான் இன்றைய "தயவுக் கடவுள் மனிதனின்" உண்மையாகும்."**

வேறுவிதமாகக் கூறுவதாயின், **"தனிப்பெருந்தயவுக் கடவுள் நம் சிரநடு "தயவு" ஆக எழுந்தருளி "அதுவே நாமாயும் ........ நமது மெய்யறிவாவும், உயிராயும், உடலாயும் உருக்கொண்டு திகழ்கின்றதாம்."**

மேற்படி தயவு உண்மையை அதுவாகவே இருந்து, உணர்ந்து, தெளிந்து கொள்ள வேண்டுவது முதற்கடமை.

அத் தயவு நிலை நின்றே, தயவுச் செயலாகவே யாவையும் ஆக்கியும், காத்தும், அழித்தும், மறைத்தும், அருள் பாலித்துக் கொண்டும் உள்ளார் ஆண்டவர். ஆகையால், **"அவரோடு அவராய் உள்ள நாமும்,"** தயவினால் வாழ்ந்தும், தயவின்மையால் பிழைத்து கொண்டும் உள்ளோம்.

அபக்குவ அறியாமைக் காரணத்தால்தான், **"உட் கூடி வாழ தெரியாது,"** புறத்திருந்து கொண்டு என்னதான் வேண்டியும், அழுதும், தொழுதும் கொண்டிருந்தால் என்ன நன்மை உண்டாகும்!

நாம் அத் தயாபதிக்குப் பூரண அடைக்கலம் ஆகிச் செயல்படும் போது, "நாம் ஆகிய கலத்தின் உட்பொருளாய் உள்ள அவரே உலக வாழ்க்கைக் கடலில், எப்படியும் குறிக்கோளை அடைவித்து, ஆனந்த வாழ்வில் விளங்கச் செய்வது சத்தியம்; ஐயமும், அச்சமும், கவலையும் படவேண்டாம்!! நாம் தெரிந்தும் தெரியாமலும் என்ன தவறு செய்யினும், தயவால் "**தவமாகவே**" கொண்டு, தயாநலம் சேர்ப்பார்.

நான், நீ, மற்ற எவரும் ஒன்றாகிய தயவு தான் ; அதுவே, இப்படிப் பலவாய், பலராய்த் தோற்றித் தயா வாழ்வில் என்றும் தழைத்திடச் செய்துள்ளதும் தயவுச் செயலே !!

**"தயவு நிலை நின்று பிறழாது,"** சூழ வருபவர்களை, விருப்பு வெறுப்பின்றி தயவுச் செயலுக்கே ஏற்றுப் பணிபுரிந்து வரவேண்டும். வீண் காரியத்தில் ஈடுபடக் கூடாது. இம்முறை பழக்கப்படுத்திக் கொண்டால் வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் நிரம்பும்.

**சூழ்க தயவு**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

# D21-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
# "தயவுக் கடிதங்கள்"

09- 03- 1991, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவு ...................... (தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) க்கு, **"தயவே, எல்லாமாய், எவருமாய் இருக்கின்றதை உள்ளபடி அறிந்து கொள்ளுக !!"**

இந்த பகுத்தறிவுதான், பிற உயிர் இனத்திற்கு இல்லாச் சிறப்பளித்து, இறப்பொழித்து, என்றும் இனிது வாழச் செய்யச் உள்ளது மனிதனை. மற்ற எவ் உயிரும், பொருளும் தோற்றமும், மாற்றமும், மறைவும் அடைந்து கொண்டேயுள்ளது, விதிமுறையே !! ஆனால் **"மனிதன் பெற்றுள்ள மெய்யறிவு கொண்டு தன் இறை இயல் நித்திய நிலை உண்மையை அறிகின்றான்."** எப்படி ?

எல்லாமான தயவுப் பரம்பொருளே, அகத்தில், "**தய**" என்ற கடவுள் ஆன்ம தத்துவமாயும், "**இயல் அறிவு இன்ப**" வண்ணமாய் இருந்து கொண்டும், புறத்தில் இருந்து தன் உண்மையைப் பகுத்தறியும்படி தயவு மயமாய் விளங்குகின்றார்.

இத் தயவு உண்மையை அகம் இருந்து கண்டு வாழாது, அழிவுறும் பொறிபுலன் இச்சை வழியில் உழன்று கெட்டு ஒழிகின்றான். எவ்வளவுதான் சொன்னாலும், "**அகநிலை நின்று தயாபதியின் ஆணைப்படி வாழாது,**" தன்னிச்சைப்படி வாழ முனைந்து, சிறிது இன்பமும், பெருந் துன்பமுமே அடைந்து அழிகின்றான்.

ஏன் இந்த அவல வாழ்வு !! பிழைப்பு !! அழுது புலம்பிக் கொண்டும், உருக்கமான விண்ணப்பங்கள் செய்து கொண்டும், குறையிரந்து துதித்துக் கொண்டும், பாடிக் கொண்டும் இருந்தால் இறை இயல் இன்ப வாழ்வு கிடைத்துவிடுமா ?**!**

புறநிலை நின்று பிழைத்து வந்ததெல்லாம் போதும் !!

**"அகத்தே தயாஒளியாய் நிற்கப் பழகட்டும் முதலில் !!"**

அத் தயவின் பூர்ண சக்தியே அறிவு உணர்வாய், உயிர் ஆற்றலாய், உடற்செயலாய், விளங்குவதாகக் கண்டு கொண்டு வாழத் தொடங்குக !!

அப்படி வாழ முற்படும் போது, பழைய பழக்க வசத்தாலும், மறதியாலும் பலகால் தவற நேரலாம் ; அவற்றை நிதானித்துச் சரி செய்து கொண்டு முன்னேறுக !! அருள் ஆண்டவரும் அகமும் புறமும் இருந்து உதவுவார் !!

மனிதன் உண்மை, தயா நிலை நின்றே பரிணமித்து உலகில் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இதனை அறியாது ஜடமூட தேக கரண நிலையினின்று எவ்வளவு பாடுபட்டாலும், யோக ஞான சக்தியால், தியானாதிகளால் என்ன அற்புத சித்திகள் பெற்றாலும், மனிதன் இறை இன்ப நிறை வாழ்வு, அனக தயவு ஏற்காதவரை அடைதல் கூடாது.

சதா சிந்தனையைப் படரவிட்டும், பல விஷயங்களில் செலுத்தியும் புறத்தே அலைதல் கூடாது. ஒவ்வொருவரும் அகத்தயாநிலை பெறாது, தேக வாழ்வை பாழ்படுத்திக் கொண்டுள்ளனர்.

**“தயவு வாழ்வே தழைத்துப் படரட்டும் !!”**

**“தயவு”**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

.................................................................................................................................................

## D22-தயவு ஒளி தெய்வீக சிந்தனை “தயவுக் கடிதங்கள்”

27- 05- 1991, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவுத்திரு........................(தங்கள் பெயரைக் குறிப்பிடவும்)க்கு, திருமண வாழ்வு நறுமண வாழ்வாக, அக நின்று அனகத்தே நிரம்ப வேண்டுகின்றேன்.

**“ஆன்மாவாம் அக இல்லத்தில் அருள்ஒளித் திருவை மணந்து வாழ்வதே உண்மைத் திருமண வாழ்வாம். இது ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஆணை செய்யப்பட்டுள்ளது.”**

ஆனால், அருட் பக்குவத்தால், அக விளைவு ஏற்படாதபோது, ஆன்மாவைச் சூழ் உலகில் **“மாயா மண வாழ்வு”** எத்தனையோ வந்து வந்து மறைகின்றன.

**“சுத்த சத்விசாரத்தால் அகம் பற்றி இருந்துகொண்டு,”** புறத்துணை நலத்தை உடன் கொண்டு, தயவோடு வாழ்ந்து வர, திருவருளே அகம் புறம் சூழ்ந்து நின்று உதவும். அவ் வழி நடந்து முன்னேறவும்.

**“ஆன்ம அணுவகம் இருந்து தயவு பொங்கிட வாழ்க !!”**

இவண்

தயாநேயன், சரவணானந்தா.

---

## D23-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## “தயவுக் கடிதங்கள்”

21- 04- 1992, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவே விழை................................-(தங்கள் பெயரைக் குறிப்பிடவும்)க்கு, அத்தயவால் அனைத்து நன்மைகளும், அமைதியும், விளக்கமும் உண்டாக தயாஜோதிப் பெரும் பதியையே வேண்டுகின்றேன்.

**“த ய வு”**................ இம்மூன்றும் தனித்தனி இல்லை ; மூன்றும் ஒன்றிய ஒன்றே, கடவுள், மெய்ப்பொருள் எல்லாம். ஆகையால் அத் தயவு தானே நாம் ஒவ்வொருவரும். இதனைப் புரிந்து கொள்ளாது, புரிந்துகொண்டு ஏற்று வாழப் பழகாத வரை, தொல்லையே !! இன்பம் இல்லையே !!

அகத்தில், தயா நிலையில், தகராகாசப்பதியும் ஆன்மாவும், கடவுளும் நாமும் என்றும் பிரிவற இருந்தும், ஓரளவு (சொல்லளவில்) தெரிந்து கொண்டும், அப்படி இருந்து வாழாது அவத்தைபட்டுக் கொண்டிருத்தல், யார் மேல் குறை, குற்றம் ? **“அகம் உணர்ந்தும் வாழ முடியவில்லையே !!”** என்று வீணில் வருந்திக் கொண்டே இருத்தல் சரி அன்று.

தயாபதியின் ஆணைப்படிதான் யாவும் நம்மைச் சூழ வந்து சேருகின்றன. ஏன் ? நமது தயா வாழ்வுக்குத் தான் !! ஆகையால் சூழ வருகின்ற எதனாலும், மன அமைதியோடு தயவுப் பணிக்கே திருவருள் வழங்குவனவாய் ஏற்று, அதற்கான தயா செயலைப் புரிந்து இருத்தல் வேண்டும் ; ஆனால், அச் செயலின் விளைவு திருவுளச் சம்மதமாக கொண்டு அமைதல் பொருந்தும்.

அப்படி தயா வாழ்வில் முன்னேறவும், மற்றபடி சூழ்வன பற்றி மயக்கமுற வேண்டாம். தயவினால் முடிவில் தயவே எல்லா நன்மைகளையும் பெறுவிக்கும். அகப்புற நிறைவு பெறுக !!

**தயவு**

இவண்,

தயாநேயன், சரவணானந்தா

.................................................................................................................................................

## D24-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "தயவுக் கடிதங்கள்"

24- 05- 1992, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

................................(தங்கள் பெயரைக் குறிப்பிடவும்) "**தயவு,**"........- அகமிருந்து விரிவது ; ஆன்மாவின் உள்ளிருந்து, தயாபரன் தன் உண்மையை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டு, மன் இதனாக விளங்கவே, மனிதனாகத் திகழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கத் திருவுளம் கொண்டு எல்லாச் செயலும் புரிந்து வருகின்றார்.

இன்றைய மனிதன் இந்த உண்மையை அகமிருந்தே அறிந்து, அந்தத் தயவின் செயலுக்கே தன்னை முழுமையாகத் தந்து, அது செலுத்தும் வண்ணம் முன்னேற வேண்டும் ; அப்படித்தான் முன்னேறிக் கொண்டிருக்கின்றான் தன்னை அறியாமலே !!

தேகபோகப் புலனெறியில் இருந்து பிழைத்துக் கொண்டுள்ளவன் என்ன பாடுபடுகிறான் !! வினை என்றும் விதி என்றும், அதிர்ஷ்டம் என்றும், பாக்கியம் என்றும் சொல்லிக்கொண்டு பிழைத்து வருகிறான் !! இந்தப் பிழைப்பு தான் கால எல்லையில் பல பிறவிகளின் முடிவில் அகத் திருவடிக்குக் கொண்டு வந்து சேர்கின்றது !!

**"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு, யாண்டும் இடும்பை இல"** ............................... திருக்குறள்

அந்தத் திருவடி தான் நம் ஆன்மா வுள்ளிருந்து ஆட்டிவைக்கிறது. அத் திருவடி நிலை நின்று தயவு பெருக வாழப் பழகுதல் வேண்டும். முதலில், அந்த அக நிலையை உணர்வதும், நினைப்பதும், பாவிப்பதும், கஷ்டமாய் இருக்கும் ; தவற நேரும் ;

தவறிப் படுகுழியில் விழக்கூடும் ; செய்யத் தகாதன எனத் தெரிந்தும், மதிமயங்கி செய்யவும் கூடும் ; பின் தெளிந்து, "என்ன காரியம் செய்துவிட்டோம் !!"என எண்ணி வருந்தித் திருவருளை மன்றாடி வேண்டுவோம். எனினும், ஆண்டவர் உடனே ஆட்கொண்டு, அருள் பாலித்து விடமாட்டார் ! ஏன் ? பழைய பழக்கத்திலிருந்தும், பிழைத்தலிலிருந்தும் மீள, தவறான பாதையில் மேலும் மேலும் சென்று கொண்டிருக்க முனையும் மாயா மனோ மயக்கம் !! ஆனால், **"நமது லட்சியம், கடவுள் தயவு நிலை அடைவது ஒன்றே",** என்ற திடமான முடிவில் இருக்க வேண்டும். "தயாபதி நம்மைத் தயா இன்ப வாழ்வில் நிலைக்க வைப்பார்", என்ற உறுதியான நம்பிக்கை மட்டும் தளரக்கூடாது !! அவசியம் அருள் ஆண்டவர் காப்பார் ; இது உறுதி ! திண்ணம் ! சத்தியம் !!

**"செய்தாலும் தீமையெலாம் பொறுத்தருள்வான், பொதுவில் திருநடஞ் செய் பெருங் கருணைத் திறத்தான்",**........ நம் பதி என்ற திட நம்பிக்கையோடு முன்னேறிக் கொண்டே இருக்கவும் ; ஐயமும் அச்சமும் வேண்டாம் !! இப்போது எவ்வளவு மோசமான சூழலில்........ அல்லற் பிழைப்பில் இருந்தாலும், யாவையும் போக்கி, தயை புரிந்து நிச்சயம் வாழ்விப்பார் !!

மாயா மயக்கம் கூட அவன் அருள் செயலே ; அதன்மூலம் மறக்கருணையால் பலவகையில் சோதனையில் வேதனையில் அலைத்து தான் பக்குவம் வருவிக்க உள்ளார். முடிவில்தான் உண்மை வெளியாகிட, அறக்கருணையும் வெளியாகி, சுத்த தயவு கொண்டு சுகானந்த வாழ்வில் கூட்டி வைப்பார் நம் தனிப்பெருங்கருணையுடைய அருட்பெரும்ஜோதி பதி.

**"தயவு"**

இவண்,
தயாநேயன், சரவணானந்தா

---

## D25-தயவு ஒளி தெய்வீக சிந்தனை
## "தயவுக் கடிதங்கள்"

21- 07- 1992, தயவு சத்திய ஞான கோட்டம், திண்டுக்கல்

தயவுத் திரு. ........................................................................-(தங்கள் பெயரைக் குறிப்பிடவும்)க்கு, **"அருட்பெருஞ்ஜோதியாய் எங்கும் நிறை பரம்**

**பொருள் ஒன்றே ஒன்றுதான் நித்தியமானது சத்தியமானது.**" அதுவே, ஒரு தயவு ஆன்மச் சிற்றுருவாய்ப், பக்குவ மனிதனின் சிரநடுவுள் வெளிப்பட்டுத் தயவு செய்கின்றது. அதாவது, **"இவனது மெய்யறிவாய், உயிர் ஆற்றலாய், உடல் தோற்றமாய், மொத்தத்தில் தயவே இவனாகி உள்ளது"** மெய்யாம். இப்படி தயவே இவன் ஆகி உள்ளதை உணராது, மனோகரண பொறிபுலன் நிலைகளில் அவா, வெகுளி, மயக்கத்தில் அவத்தைப்பட்டு அழிந்து கொண்டிருத்தல் என்ன பரிதாபம் !!

உண்மையை ஓரளவு அறிந்தும், "அதினின்று விடுபட முடியவில்லையே" என சிறிது நேரம் கவலைப்பட்டுவிட்டு, மறந்து, மறுபடியும், மாயா மனோ பழக்கத்தால் தன்னை அறியாது மயங்கி இழிவுறுதல் யார் குற்றம் ?! **"விதி சதி செய்யவில்லை !! மதிதான் சரி செய்யப்பட வேண்டும் !!"**

எவ்வளவுதான் கெட்டுக் குலைந்து விட்டவனில் கூட , **"தயா ஒளி அவிந்து ஒழிந்து போய் விடுகின்றதில்லை.** உண்மையாக ஒருவன், எப்போது, **"உய்வு பெறவேண்டும் !!;"** என்று உள்ளூற உறுதி கொள்ளுகின்றானோ, "மாயையில் பட்டது போதும் ! போதும் !!"- என்று திடசித்தம் கொண்டு முயன்றால், தயவே தயவு செய்யும் ; உறுதி !!

**"தலைநடுத் தயா ஒளியை, அடிக்கடி நினைந்து நினைந்து நின்று, தயா செயலைக் கடமையாய்க் கொண்டு புரிந்து வரல் வேண்டும்."** ஆண்டவரும் ஆட்கொண்டு அருள் புரிவார் !! மனத்திலும் செயலிலும் தயவு இடம் கொண்டு விட்டால், வாழ்வில் அமைதியும் நன்மையும் நிரம்பும்.

"தயவுக் கடவுள் தன்னையே மனிதனில் வெளிப்படுத்திக் கொண்டு, மன்னிதனாய் என்றென்றும் வாழ்ந்து வரத் திருவுள்ளம் கொண்டுள்ளார். இவனது தலை நடு நின்று, **"தயவுசெய்........ செய் தயவு"** என்று சதா சொல்லாமற் சொல்லிக்கொண்டு, தயவு செய்து கொண்டும் இருக்கின்றார் !! இவனும் அறியாமையில் பிழைத்த காலமெல்லாம் போக, சற்று அறிவு வந்து தேறி, உய்வு பெறக் கருதி நிற்கும் தருணம், அந்த இறை ஒலியே, **"தயவு செய்........ செய் தயவு"**........- என்பதையே இவனது விண்ணப்பமாகவும் உணர்கின்றான். இது போதாது. ஆண்டவர் தயவு செய்து கொண்டே, இவனுக்கு ஆணையிடுகின்றார் ; ஆனால், இவனோ, தயவு மயமாகி தயவு செய்யாமல், வெற்று வாய்ச்

சொல்லாக விளம்பிக்கொண்டும், மாறுபாடாக செய்து கொண்டும் இருக்கின்றான். இதனால்தான் இவனது வேண்டுதல் பயனளிக்கின்றதில்லை.

எனவே, இனியும் வீணில் புலம்பிக் கொண்டும், குறை பட்டுக் கொண்டும் கிடக்க வேண்டாம். **“தயவு” ஒளி நிலையை அறிவாற் புரிந்து, அதுவாய் இருந்துகொண்டு, தயவுச் செயலைப் புரிந்து கொண்டு வாழ்க !! நலம் எல்லாம் தழைக்கும் !!”**

**இவண்,**

**தயா முன்னேற்றமே காண விழையும்,**

**தயாநேயன், சரவணானந்தா**

........................................................................................................................................

## தயவு ஒளி தெய்வீக சிந்தனை மன்றம்

# முடிவுரை

"சும்மா இருக்கும் சுகம்"
இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது
மற்று என்று வருமோ அறியேன் எங்கோவே
துன்று மல வெம் மாயையற்று வெளிக்குள் வெளி கடந்து
சும்மா இருக்கும் சுகம். - வள்ளலார்

### "சும்மா இரு சொல்லற!!"

இந்தத் திருவருள் மகாவாக்கியம் இறைவனே ஸ்ரீமத் அருணகிரிநாதருக்கு உபதேசித்த அருண் மொழி ஆகும். ஸ்ரீமத் அருணகிரிநாதப் பெருமான் தன் இளம் வயதில் நெறியல்லா நெறி சென்று பெண்டிர்பால் தகாத உறவுகொண்டு தனது தேக ஆரோக்கியத்தை இழந்தார்; அவருக்கு குஷ்டம் முதலான பல பிணிகள் பற்றிக்கொண்டு மிகவும் வருத்தின. இந்த நிலையிலும் அவர் விலை மாதர்பால் கொண்ட மோகம் தணிந்த பாடில்லை ; உயிர்விடத் துணிந்தார். எனவே அவர் திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயில் சென்று வல்லாளன் கோபுரத்தின் மீது ஏறி, அங்கிருந்து கீழே விழுந்து உயிர்விட முடிவு செய்தார்; அப்பொழுது அவர் ஆண்டவரிடம் கடைசியாக வேண்டிக் கொண்டது;................

**"இறைவா எனது இந்த அடங்காத பெண்ணாசையிலிருந்து என்னை மீட்டு எடுப்பாய்; உன்னுடைய திருவடி தியானத்தை அருள்வாய்!! இல்லையெனில் எனது உயிரை விட்டு விடுகிறேன்"**........................ என்று கோபுரத்தில் இருந்து கீழே விழுந்தார். அப்பொழுது இறைவனே குரு வடிவில் வந்து அவரது தேகம் மண்ணில் விழாத வண்ணம் தனது திருக்கரங்களால் தாங்கி பிடித்துக் கொண்டார். இறைவனுடைய தனிப்பெருங்கருணைத் திருக்கரங்கள் அருணகிரிநாதப் பெருமானுடைய மேனியில் பட்ட உடனே அந்த பிணியுண்ட உடல்

வச்சிர தேகம் போல் ஆகிவிட்டது. அவரை பீடித்திருந்த எல்லாப் பிணியும் மறைந்துவிட்டது ; சுத்த தேகமாக மாறிவிட்டது. இறைவன் அருணகிரிநாதரை நோக்கி ஓர் அருண்மொழி திருவாய் மலர்ந்தருளினார் அதுதான்,

**"சும்மா இரு சொல் அற!!"**

என்பதாகும். அந்த மகா வாக்கியத்தை கேட்ட அந்த ஷணத்திலே அருணகிரிநாதப் பெருமான் பூரண அருள் மெய்ஞ்ஞானம் எய்தினார். அப்படியே அவர் அங்கேயே நிர்விகல்ப சமாதியில் மூழ்கினார். 16 வருடங்கள் நிர்விகல்ப சமாதி நிலையிலேயே திளைத்திருந்தார்.

பின்பு ஒருநாள், இறைவனே நேரில் வந்து அருணகிரிநாதப் பெருமானை சமாதி நிலையிலிருந்து எழுப்பி, **"அன்ப!! உலகமறிய நீ நம் திருப்புகழை பாடுவாயாக!!"**........ என்று திருவாய் மலர்ந்தருளி பாடப் பணித்தார். இறைவனே இரு பாடலுக்கு அடியெடுத்துக் கொடுத்தார்.

1) "கைத்தல நிறைகனி" என்பதாகும்,

2) "முத்தைத்தரு பத்தித் திருநகை" என்பதாகும்.

பின்பு அருணகிரிநாதப் பெருமான் அகமகிழ்ந்து தமிழகமெங்கும் உள்ள எல்லா முருகன் திருத்தலங்களுக்கும் சென்று இறைவனுடைய திருப்புகழைப் பாட ஆரம்பித்தார். மொத்தம் 16 ஆயிரம் பாடல்களை பாடினார்; தமிழகம் செய்த தவ குறைவினால் 1500 க்கும் குறைவான திருப்புகழ் பாடல்களே பின்னர் கிடைத்தன. முடிவில் அருணகிரிநாதப் பெருமான் தான் பெற்ற இறை அனுபூதியை **"கந்தரனுபூதி"** என்ற 51 பாடல்களில் தன் இறை அனுபூதியை விளக்கிப் பாடினார். அதில் இறைவன் தனக்கு உபதேசித்த மகாவாக்கியமான **"சும்மா இரு சொல் அற"** என்ற மந்திரத்தை வைத்து ஒரு பாடலும் பாடியுள்ளார்.

அப்பாடல்;........-

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"

என்பதாகும். இனி அந்த இறைவன் திருவாய் மலர்ந்த மகாவாக்கிய பேருபதேசம் ஆகிய **"சும்மா இரு சொல்லற"** என்பதின் பொருளை பார்ப்போம்;........

இந்த மகா வாக்கியத்திற்கு பல பொருள் உண்டு. அதில் முக்கியமாக மூன்று பொருள் உண்டு. அதில் முதலாவது பொருளை பார்ப்போம்.

**"சும்மா இரு சொல்லற"**

**"சொல்"** என்பது என்ன ?

"சொல்" என்றால் "பேசு" என்பது பொருள். இங்கு பேசுதல் என்பது மனம் சிந்தித்தலைக் குறிக்கும். மனிதன் மாத்திரமே மனம் படைத்தவன். மனிதனுடைய மனம் சதா எதையாவது உலக விஷயங்களை குறித்து சிந்தித்த வண்ணம் இருக்கின்றது. நாளும் பல ஆயிரம் ஆயிரம் எண்ணங்களால் மனிதனை இந்த மனம் பல்வேறு எண்ணங்களால் அலைக்கழிக்கிறது. ஆக, இங்கு **"சொல்"** என்பது மனம் சதா எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டு இருக்கின்ற நிலையை குறிக்கிறது. **"அற"**........ என்றால் நினைப்பு மறப்பு அற்ற நிலையில் இருத்தல் ஆகும். மனம் நினைப்பு மறப்பு அற்ற சுத்த நிலையில் இருக்கும்போதுதான் அக ஆன்ம உண்மையையும் இறை உண்மையையும் உணர முடிகின்றது.

**"சினம் இறக்க கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே!!"**........ என்பார் தாயுமானவர்.

இறை இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் மனம் (சொல்) நினைப்பு மறப்பு அற்ற நிலைக்கு வரவேண்டும்.

இந்த புறத்தே திரிகின்ற மனத்தை அகநோக்கித் திருப்பி ஆன்மாவின் கண் நிலைக்கச் செய்கின்ற பொழுது மனம் உள்ளொளியை உணர்ந்து அதில் கலந்து இறைவனோடு அத்துவித நிலை கொள்ளுகின்றது; இறை இன்பம் ஆகிய சச்சிதானந்தம் அனுபவமாகின்றது.

ஆக மனிதன் அக இறை உண்மையை உணர்ந்து சச்சிதானந்தத்தில் தழைக்க வேண்டுமென்றால் மனம் நினைப்பு மறப்பு அற்ற நிலையில் நிறுத்த வேண்டும்; பிற உலக விஷய

சிந்தனைகள் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுது தான் அது உண்மையை உணர்ந்து அக ஒளியில் இரண்டறக் கலந்து பேரின்பத்தை அனுபவிக்க முடியும். இதைத்தான் **"சும்மா இரு சொல்லற!!"** என்று இறைவன் அருணகிரிநாதருக்கு பேருபதேசம் செய்தருளினார்.

அடுத்து இரண்டாவது, மற்றும் ஒரு பொருள்;................

**"சும்மா இரு சொல்லற"**

அருணகிரிநாதப் பெருமான் கந்தர் அலங்காரம் என்ற பதிகத்தில் ஒரு பாடலில் குறிப்பிடுகின்றார், அது;................

**"யான், தான் எனும் "சொல்" இரண்டும் கெட்டால் அன்றி யாவருக்கும் தோன்றாது சத்தியம்"** ........................-என்கின்றார். ஆன்மாவின் இயற்கை மலம் ஆணவம் என்கின்ற அஞ்ஞான இருள். இதைத்தான் **"நான் எனும் சொல்"** என்கின்றார். இங்கே அந்த **"சொல்"** எனப்படுவது **"நான் என்கின்ற ஆணவமாகிய அஞ்ஞான இருளை குறிக்கின்றது."** நான் என்கின்ற அகங்காரமும் எனது என்கின்ற மமகாரமும் தற்போதம் ஆகும்.

**"நான், எனது என்கின்ற தற்போதும் ஒழிந்தால் ஒழிய இறைவனை உணர்ந்து, இயற்கை இன்பமாம் ஆன்ம அருட் சுகத்தை அனுபவிக்க முடியாது."**

இந்த யான் தான் எனும் சொல் கெடும்படி தற்போதம் ஒழிந்து நிற்க வேண்டும். நமது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றினையும் இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். தற்சுதந்தரம் போய் அங்கு திருவருட் சுதந்திரமே இடம் கொள்ள வழிவிட வேண்டும்.

இதுதான், **"சும்மா இரு சொல்லற"** என்பதாகும்.

அதாவது நான் எனது என்கின்ற தற்போதம் ஆகிய சொல் அற்றுப் போகும்படி நாம் ஆத்ம சாதனம் செய்ய வேண்டும் என்பதாகும்.

அடுத்து, மூன்றாவது பொருள்தான் மிகவும் முக்கியமானது.

**"சும்மா இரு சொல்லற!!"**

அன்றைய காலகட்டத்தில், சுத்த சன்மார்க்கம் வெளிப்படுவதற்கு முன், ஆன்மீக பரிணாம வளர்ச்சி அகநிலையை அடைவதும், அதில் ஒடுங்கிவிடுவதுமாக மட்டுமே இருந்தது. அதனால் உலக வாழ்வை புறக்கணித்தனர்.

**"ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"**...............-என்றே முடிவு செய்தனர்.

ஆனால், சுத்த சன்மார்க்கத்தில் உலக வாழ்க்கையை வெறுக்காது, அதே நேரத்தில் மாயையில் விழுந்து விடாது , அகம் கலையாது, அனகமாகவே உள்ளிருந்து விரிந்து அருள் ஒளியை மனோ வாக்கு காயத்தில் தயவோடு வெளிப்படுத்திக் கொண்டு உயிர்க்குலத்திற்கு **"அறிவு விளக்கப் பணியும், உயிர் விளக்கப் பணியும்"** புரிந்துவர வேண்டும் என்பதே ஆண்டவருடைய அருளாணையாக இருக்கிறது.

எனவே, முன்புள்ள மகாவுபதேசத்தில் ஒரே எழுத்து மட்டும் மாறி வந்து **"அனக வாழ்வைத்"** தருகிறது.

அதாவது, **"சும்மா இரு சொல்லற"** என்பது, **"சும்மா இரு சொல் உற"** என வந்து அனகானந்த அருளின்ப வாழ்வைத் தருகின்றது.

**"சொல்"** என்றால் என்ன ?

**"ஈறு அற்ற ஒரு சொல்"**

துகளில் சாயுச்சியக் கதியை **"ஈறற்ற சொல் சுக சொரூபத்தை"** உற்று அடைவேனோ?! ........ஸ்ரீமத் அருணகிரிநாதர்.

**"ஒரு சொல்"**........ என்பது **"ஓம்"** என்கின்ற மந்திர மொழியை குறிக்கும்.

இந்த ஓம் என்கின்ற பிரணவ மந்திர மொழியே ஒரு சொல் எனப்படுகின்றது. இதுவே இறைவனாக இருக்கின்றது.

இதைத்தான் பைபிளில்;...............

**"ஆதியில் வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனோடு இருந்தது; அது தேவனாய் இருந்தது; அதிலிருந்து சகலமும் (உலகு, உயிர், பொருள்கள்) உண்டாயிற்று; அதுவே மாமிசமும் (மனிதன் மற்றும் பிற உயிரினங்களின் புற உடல் உருவத் தோற்றம்) ஆயிற்று."**........ ........ என்று சொல்லப்படுகின்றது.

இந்த **"ஓம் எனும் ஒரு சொல்லே"** இந்த உலகு உயிர் தோற்றங்களுக்கு காரணமாய் உள்ளது. இந்த ஓங்கார பிரணவ மந்திரமே **தந்தை சொல்** எனப்படுகிறது. இதைத்தான் நம்

தமிழகத்தில் சான்றோர்கள், **"தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"**........என்றனர். இந்த சொல்லே ஆங்கிலத்தில்

**SOUL** என (சோல் =ஓங்கார வடிவமாகிய ஆன்மா) திரிந்து வந்துள்ளது. சொல் என்பது ஓங்காரம் ஆகிய ஆன்மாவை குறிக்கின்றது.

இங்கு **"சும்மா இரு சொல் உற"** என்பது அகமாகிய அருட்ஜோதி ஓங்கார ஆன்மாவில், அற பொருந்தி (பின்னமின்றி பூரணமாய் பொருந்தி) திகழ்வாயாக என்பதாகும்.

**"ஓம் எனும் ஓங்கார பிரணவ கடவுளான்ம நிலை"**

(குறிப்பு விளக்கம்)

ஓம் என்பது அகரம்-உகரம்-மகரம் ஆகியவற்றின் முக்கூட்டு ஒலியாகும்.

**ஓம் = அ + உ + ம்**

இவைகளில்,

**அ** = எண்சாண் கொண்ட புற உடல் (உருவம்) ஆகிய தூல தேகம்.

**உ** = நித்திய, அநித்திய உயிர் உணர்வு வடிவமாகிய (அருவுருவம்) சூக்கும தேகத்தைக் குறிக்கும்.

**ம்** = இந்த மகர மெய், தலைநடுவில் சுடர் விடும் நித்திய அருட் ஜோதி கடவுளான்மா ஆகிய காரண சரீரத்தைக் குறிக்கின்றது.

அகண்டவெளி நிறை இயற்கை உண்மை ஆகிய கடவுளே இந்த ஆன்ம அணுவில் ஓங்கார பிரணவமாக வெளிப்பட்டு அருவ, அருவுருவ, உருவம் ஆகிய முத்திறல் வடிவேற்று இம் மாமனித ஆன்மாவாய் திகழ்கின்றார். எதற்காக என்றால் இடையறா அருளனுபவ வாழ்வின் நிமித்தமாக!! சச்சிதானந்த அனுபவத்தை நித்தியானந்த வாழ்வில் கொண்டு என்றென்றும் விளக்குவதற்காக!!

**"சுத்த சன்மார்க்கமும் சமய சன்மார்க்கமும்"**

சமய சன்மார்க்கத்தில் பிறவாமையே வேண்டப்படுகின்றது. அன்று இந் நிலையே முடிவான கொள்ளப்பட்டது.

ஆனால் சுத்த சன்மார்க்கத்தில் இறவாமையே வேண்டப்படுகின்றது ; "முத்தி நிலை" முடிவானது அல்ல!! "சித்தி

நிலையே" முடிவானது என்கின்றது வள்ளலார் வழங்கிய சுத்த சன்மார்க்கம்.

முத்தி என்பது நிலை முன் உறு சாதனம் அத்தகவு என்ற என் அருட்பெருஞ்ஜோதி!!

சித்தி என்பது **"நிலை சேர்ந்த அனுபவம்"** அத்திறல் என்ற என் அருட்பெருஞ்ஜோதி!! ................-என்பார் திரு அருட்பிரகாச வள்ளலார், அருட்பெருஞ்ஜோதி அகவலில்.

**"சும்மா இரு சொல்லற"**........- என்பது சமய சன்மார்க்கத்தின் முடிவான சாதனமாகும்.

சுத்த சன்மார்க்கத்தில் **"இரண்டரை நாழிகை கடத்தல்"**........ ........ என்பதே முடிவான சாதனமாகும்.

இந்த "இரண்டரை நாழிகை கடத்தல்"........- என்பது சுத்த சன்மார்க்கத்தில் இரு கூறாக உள்ளது ;

முதல் கூறு, **"முன் இரண்டரை நாழிகை"** என்றும்,

இரண்டாவது கூறு, **"பின் இரண்டரை நாழிகை"** என்றும்,

வள்ளல் பெருமான் சொல்கின்றார்.

முன் இரண்டரை நாழிகையில், தேகம், மனம்- உயிர் ஆகிய தத்துவங்களை கடந்து அக ஆன்மாவில் பொருந்தி நிற்றல்.

பின் இரண்டரை நாழிகை என்பது அந்த அருள் ஆன்ம அக நிலையிலிருந்து அனகமாக விரிந்து அறிவு, உயிர், உடல் கொண்டு நிலைத்து இவ்வுலகில் மரணமில்லாத வாழ்வு அடைதலைக் குறிக்கும்.

**"இரண்டரை நாழிகை கடத்தல்"** என்பது என்ன?

முந்தைய சைவசித்தாந்தத்து அகமுணர்ந்த நம் மெய்ஞ்ஞானியர், ஆன்மாவுக்கு மும்மலம் உண்டெனக் கொண்டனர். அதாவது ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்கள்.

கன்ம மலம் தூலதேகத்தில் காரியப்படுது. மாயா மலம் உயிருணர்வு ஆகிய சூக்கும சரீரத்தில் காரியப்படுவது. ஆணவமலம் ஆன்மாவாகிய காரண சரீரத்தில் காரியப்படுவது.

வள்ளலார் கண்ட உண்மை;................-

ஆன்மாவில் உள்ள ஆணவ மலம் முழுமையானது அல்ல. ஆணவம் ஆன்மாவில் அரை நிலையாகக்தான் (பாதி நிலை) உள்ளது என்ற பேருண்மையை திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்துக்கொண்டார்.

சமய சன்மார்க்கத்தில் முடிவானதாக சொல்லும் முக்திநிலையை சுத்த சன்மார்க்கத்தில் சத்விசார வசத்தால் முதலிலேயே பெற்றுக்கொண்டு ஆன்ம அகநிலையில் உள்ளொளியில் பொருந்தி நிற்க வேண்டும் என்கின்றார். இதற்காக பயிலப்படும் சாதனமே **"முன் இரண்டரை நாழிகை கடத்தல்"** ஆகும்.

அதாவது, தேக உணர்வு (கன்ம மலம் ........1) கடந்து, உயிர் உணர்வு (மாயா மலம் ........1) கடந்து, ஆன்மாவின் தற்போதம் ஒழித்து (நான் எனும் ஆணவம் ........ 1/2) உள்ளொளியில் அசையாது நிலையாக பொருந்தி நிற்றல் ஆகும்.

பின் இரண்டரை நாழிகை என்பது;................-

அகநிலையிலேயே அப்படியே அடங்கிப்போகாது , ஆனால் அகம் கலையாது, அனகமாகவே உள்ளிருந்து விரிந்து, அருள் ஒளியை அறிவு, உயிர், உடல் ஆகிய மூவிடங்களிலும் நிறைத்துக்கொண்டு அதன் தொடர்ச்சியாக பிரபஞ்சம் முழுவதும் விரிந்து **"யாவும் தானாய் விளங்கிக்கொண்டிருத்தல்"** ஆகும். இதுவே பின் இரண்டரை நாழிகையின் அருட் பெருமையாகும்.

முந்தைய சமய சன்மார்க்கத்தில் அகம் அடங்கி அதிலேயே மூழ்கி சுகம் கண்டனர் என்றாலும் அக ஒடுக்கத்தால் தேக வாழ்வின் அந்தியத்தில் உடல் கழன்றுபோக, உயிர்ச்சக்தி ஆன்மாவில் ஒடுங்க, அந்த மெய்ஞ்ஞானிகளில் சச்சிதானந்த அனுபவம் நித்தியானந்தமாய் விளங்கமுடியாமல் தடை ஏற்பட்டு இறை அனுபவமும் சூன்யமானது ; ஏனென்றால் உடலும் உயிரும் நீங்கியவிடத்து எந்த அனுபவமும் இல்லாமல் இருப்பே சூன்யமானது. ஆகவே சுத்த சன்மார்க்கத்தில்தான் **"இரண்டற்ற இன்ப வாழ்வு நித்தியமாய் விளங்கக்கூடியதாய் உள்ளதாம்"**

"சூழ்க அனக தயவு வாழ்வு"

**உள்ளிருந்து உதவி :**

**திருவருட்பிரகாச வள்ளலார்,**

**தயாநிதி சுவாமி சரவணானந்தா!**

# தயவு



# வள்ளலார் தயவு ஒளி தெய்வீக சிந்தனை மன்றம்

சகல துன்பங்களிலிருந்தும் விடுதலை அடைய, வள்ளலார் காட்டிய **"உள்ளொளி தியானப் பயிற்சி"** பற்றிய குறிப்புகள் பெறலாம்.

( பயம், கவலை, வறுமை, தீராத நோய், பிரச்சினைகள், விபத்து ஆபத்துக்கள், சோதனை - வேதனைகள் நீங்கி உண்மையும் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த நல்வாழ்வு பெறலாம் )

**தொடர்புக்கு : -**

வள்ளலார் தயவு ஒளி தெய்வீக சிந்தனை மன்றம்,
பிளாட் நெ : 6, தயவு இல்லம், நேரு தெரு,
89- வேப்பம்பட்டு,
திருவள்ளூர் மாவட்டம்,
Pin - 602024
செல் : 9043961544

வள்ளலாரைப் பற்றியும், அவர் காட்டிய சுத்த சன்மார்க்கத்தைப் பற்றியும் அறிந்து சகல துன்பங்களும் நீங்கி பேரின்ப வாழ்வு பெற, **"அன்பு ஒளி எனும் இறைமனிதன்"**- என்ற வள்ளலார் ஆன்மீக வாட்ஸ்அப் குழுவில் இணைவீர் !!

**தொடர்புக்கு : 9043961544**

**Join Our Telegram group :-**

“**அன்பு ஒளி எனும் இறைமனிதன்**” என்ற வள்ளலார் ஆன்மீக டெலகிராம் குழுவில் இணைந்து, சன்மார்க்கம் சார்ந்து, நித்திய ஆன்ம இன்ப லாபம் பெற வேண்டுகின்றோம்

**https://t.me/joinchat/DJCYzPYknrtiYTk1**

“கடவுள் - ஆன்மா - பிரபஞ்சம்”- இவற்றின் உண்மை அறிந்து, எல்லா துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற, YouTube channel ஐ subscribe செய்வீர் : “**Vallalar Anbu Oli enum Iraimanithan**”

இந்த சேனலில் தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்கள் இயற்றியருளிய “**அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை விளக்கம்**” ஒலி வடிவில் கேட்கலாம்.

உண்மையும் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த அழியா நல்வாழ்வு தர வல்லது வள்ளலார் காட்டிய சுத்த சன்மார்க்கம். இம் மார்க்கத்தைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ள தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்கள் இயற்றியருளிய நூல்களை YouTube சேனலில் ஒலி வடிவில் கேட்கலாம்.

Subscribe YouTube channel :-

“**Dhayavu Saravanananda Books**”

இந்த சேனலில் சத்திய ஞான சபை, வள்ளலார் வாழ்க்கையும் தத்துவமும், ஞானசரியை(மூலமும் உரையும்), அருள் விளக்க மாலை (மூலமும் உரையும்) கேட்கலாம்.

**தயவு**

# அடிகளாரின் வரலாற்றுக் குறிப்புகள்

| | |
|---|---|
| இயற்பெயர் | : இராமலிங்கம் |
| **சிறப்புப்பெயர்** | **: திரு அருட்பிரகாச வள்ளலார்** |
| **பிறப்பு** | **: 5-10-1823**<br>**சுபானு - புரட்டாசி 21 - ஞாயிறு** |
| பிறந்த ஊர் | : மருதூர், வடலூரிலிருந்து 7 மைல் |
| தந்தையார் | : இராமையா பிள்ளை |
| தாயார் | : சின்னம்மையார் - ஆறாவது மனைவி |
| உடன் பிறந்தோர் | : சபாபதி பிள்ளை, பரசுராம் பிள்ளை,<br>சுந்தரம் அம்மையார்,<br>உண்ணாமுலை அம்மையார் |
| திருமணம் | : தம் சகோதரி உண்ணாமுலைஅம்மையாரின்<br>திருமகளார் தனம்மாளை மணந்தார் |
| வாழ்ந்த காலம் | :1823 - 1874 |
| **சித்தி பெற்றமை** | **: 30-1-1874 ஸ்ரீமுக - தை 19 - வெள்ளி** |

வாழ்ந்த இடங்கள் :

| | |
|---|---|
| சென்னை | 1825 - 1858 |
| கருங்குழி | 1858 - 1867 |
| வடலூர் | 1867 - 1870 |
| மேட்டுக்குப்பம் | 1870 - 1874 |

நிறுவிய நிறுவனங்கள் :

| | |
|---|---|
| சன்மார்க்க சங்கம் | 1865 |
| சத்திய தருமச் சாலை | 1867 |
| சித்தி வளாகம் | 1870 |
| சத்திய ஞானசபை | 1872 |

யாத்த நூல் : **திரு அருட்பா**

பெற்ற பேறு : **மரணமிலாப் பெருவாழ்வு**

# தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்களின் வரலாற்றுக் குறிப்பு

இயற்பெயர் : சுப்பையா

சிறப்புப்பெயர் : **தயாநிதி சுவாமி சரவணானந்தா**

தோற்றம் : 19.11.1910 சாதாரண வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள் சனிக்கிழமை, திருவாதிரை நட்சத்திரம்.

பிறந்த ஊர் : திண்டுக்கல்.

தந்தை : ரெங்கசாமி ஐயர்

தாயார் : கஸ்தூரி அம்மாள்

உடன் பிறந்தோர் : சகோதரி - பத்மாவதி அம்மாள்

கல்வி : இண்டர்மீடியட் புனித வளனார் கல்லூரி, திருச்சி.

குருவைச் சந்தித்தது : **1929ல் திண்டுக்கல்லில் சத்திய ஞான சபாபதி சுவாமிகளை திருஞானசம்பந்தர் குரு பூஜைஅன்று**

## வள்ளலார் காட்சி பெற்றமை

**மேட்டுக் குப்பத்தில்** : **1938 ம் வருடம்**

**சத்திய ஞானகோட்டத்தில்** : **சுபானு வருடம், ஆடி மாதம் 17ந் தேதி, அமாவாசை பூசம் (1.8.1943) அன்று**

நிறுவியவை : தயவு சத்திய ஞான கோட்டம்
திண்டுக்கல்,

தயவு ஆலயம், சின்னாளப்பட்டி,

தயவு நூல் வெளியீட்டு அறக்கட்டளை,
திண்டுக்கல்,

தயவு ஆலயம், திண்டுக்கல்,

அருட்பெருஞ்ஜோதி தயவு ஆலயம்,
இராமநாதபுரம்.

அருட்பெருஞ்ஜோதி தயவு இல்லம்,
பொன்னகரம், திண்டுக்கல்.

இயற்றிய நூல்கள் : அருட்பெருஞ்ஜோதி அகவல்
உரைவிளக்கம்

தயவுப் பாக்கள்

தயவுக் குறள்

அருட்பா விளக்க விரிவுரை நூல்கள்

தயவு மெய்ப்பொருள் விளக்க விரிவுரை
நூல்கள்

**சித்தி பெற்றது : 6.4.2006 பார்த்திப வருடம் பங்குனி மாதம் 23ம் நாள் வியாழக்கிழமை, பூச நட்சத்திரம்.**